VR11, 31:N70
31N71.26.
61474

# Index to Tamil Nadu Legislative Council Debates

SEVENTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

4th March to 9th March, 1970.

(*Volume XXVI—Nos.* 1 *to* 5)

Table of Contents.

*Wednesday, 4th March* 1970.


| | *Pages* |
|---|---|
| (i) Personnel of the Government of Tamil Nadu | i-iv |
| (ii) Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... | v |
| (iii) List of Members of Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... | vi-xi |
| 1. Questions and Answers ... ... ... | 1-30 |
| 2. Privilege Matter— | |
| Mistakes in the Brief Record of producings | 31-33 |
| 3. Aldjournment Motions— | |
| (i) Unrest in Kulamankalam village in Madurai North due to the promulgation of Section 144 ... ... ... ... ... | 34 |
| (ii) Restrictions imposed by the Ceylon Government on the visit of Catholics in Tamil Nadu to the Festival in St. Anthony's Church in Katcha Theevu ... ... | 34-36 |
| (iii) Attack by Shiv Sena volunteers on the shops and hotels of Tamilians and other South Indians in Bombay and the consequent of Tamilians ... ... ... ... | 36-39 |

*Wednesday, 4th March 1970*—cont.


PAGES.

4. Calling Attention—
   Protection to Harijan agriculturists of Kottur in Thirumayam Constituency ... ... 39-40
5. General discussion on the Budget for 1970-71 (cont.) ... ... ... ... ... 41-99
6. Papers Laid on the Table ... ... ... 99

*Thursday, 5th March 1970.*

1. Questions and Answers ... ... ... 107-133
2. Point of Order—
   Non-inclusion of a Member's questions in the list ... ... ... ... 133-134
3. Adjournment Motions
   (i) Removal of huts of petty workers in the Mettur Municipal limits and fast by the vctims ... ... ... ... 134
   (ii) Behaviour of the Police in Maniyapattu village, Gudiyatham taluk ... ... 134-137
4. General Discussion on the Budget for 1970-71 cont. ... ... ... ... 137-204
5. Papers laid on the Table ... ... ... 204

*Friday, 6th March, 1970.*

1. Questions and Answers ... ... ... 205-225
2. Point of clarification—
   Statement of the Maharashtra Chief Minister on the views expressed by the Chief Minister of Tamil Nadu on the Tamilians, position in Maharashtra ... ... ... 225-227
3. Adjournment Motion—
   Mysore Chief Minister's reported statement about the construction of Hemavathi and other Cauvery projects and ts consequences 227-232
4. Calling Attention—
   Scarcity of rice in Kalkulam and Vilavancode taluks of Kanyakumari district and the need to arrest soaring prices ... ... ... 232-234
5. General Disctission on the Budget for 1970-71 (cont.) 237-242
6. Papers laid on the Table ... ... ... 302


ii


*Pages*

*Saturday, 7th March 1970.*

1. Questions and Answers ... ... ... ... 305-333
2. Statement by Chief Minister regarding alleged assignment of poramboke land near Cooum to his driver ... ... ... ... ... ... 333-337
3. Charge levelled against the Minister for Co-operation ... ... ... ... ... ... ... 337-343
4. Point of Order...
   Non-inclusion of interruptions in the copy of speeches of Members sent to them ... ... 343-344
5. General Discussion on the Budget for 1970-71 (cont.) ... ... ... ... ... ... ... 344-396
6. Voting on Demands for Advance Grants for 1970-71 (Vote on Account) ... ... ... 396-398
7. Announcement—
   The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970 ... ... ... ... ... ... 398
8. Government Bill—
   The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970 ... ... ... ... ... ... 398
9. Papers laid on the Table ... ... ... ... 398

*Monday, 9th March 1970.*

1. Questions and Answers ... ... ... ... 399-425
2. Point of Order—
   Guillotining of Demands without giving an opportunity for Members to seek clarification from the Minister after his reply to the Debate 425-431
3. Calling Attention—
   Dispute between the Management and the Labourers of Dhrangadhara Chemicals Limited, Arumuganeri ... ... ... ... 431-434
4. Government Motions—
   (i) Election to the Committee of Privileges 434
   (ii) Election to House Committee ... ... 434
5. Announcements—
   (i) Election to the Committee of Privileges ... 434
   (ii) Election to House Committee ... ... ... 435

வெளியீடு—26—5—1971]
Issued—26—5—1971]

3877

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

புதன்கிழமை 1970 மார்ச் 4

**Wednesday, 4th March 1970**

தொகுதி XXVI—எண் 1

**Volume XXVI—No. 1**

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

*Monday, 9th March* 1970—cont.

PAGES.

6. Government Bills—
   (i) The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970 (L.A. Bill 4 of 1970) ... 435-476
   (ii) The Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... 476-497

7. Papers laid on the Table ... ... ... ... 498



*How to use the index.*

The index is arranged alphabetically. The Main Headngs are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g. (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main heading, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other board subjects are shown in alphabetical order under these very main headings.

All the papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair"

A list of abbreviations used in the index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... | Announcement. |
| B.O.H. ... ... | Business of the House. |
| C.A. ... ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... | Consideration stage of a Bill, This stage includes—<br>(i) Motion to refer to Select/ Joint Select Committee. |

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் ( Waqfs ), போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சிரணி.

10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். கூட்டுறவு, வேளாண்மை, மறுநிதி உதவி, துறைமுகங்கள்

11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் சின் கோனா.

13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர். எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள், இரவலர்கள், அனாதை இல்லங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH.

---

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister): Minister in-charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, Disrict Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act; Food Production. Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Health): Minister in-charge of Education including Technical Education, Official Language, Public Health and Medicine and Legislature.

3. THE HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance): Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Agriculture and Harijan Welfare): Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries and Tourism

5. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6. THE HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes): Minister in-charge of Food, Commercial Taxes, Animal Husbandry and Milk.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries): Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works): Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration): Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramadan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex-servicemen and Prosperity Brigade.

10. The HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Agricultural Refinance and Ports.

11. The HON. THIRU K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. The HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU K. VEZHAVENDAN (Minister for Labour): Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. ந. தருமலிங்கம்.
திரு. ஆர். என். அரங்கநாதன்.
திரு. என். எஸ். வி. சித்தன்.
திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்.
திரு. எம். சுரேந்திரன்.
திரு. வி. டி. அண்ணாமலை.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as re-Committee. ported by Select/Joint Select

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. ... ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| G.D ... ... ... | General Discussion. |
| H.A.H Dis./H.H.D. | Half-nour Discussion. |
| Int. ... | Introduction stage of a Bill. |
| L.A. ... ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| M. ... ... ... | Motion. |
| P.M. ... .. | Privilege Motion. |
| R./Res. ... ... ... | Resolution. |
| St ... ... ... | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

2. **மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் . தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர் :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

**4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மை அரிசன நல அமைச்சர்) .** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசனநலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா.

5. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்).** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பிற்பட்டோர் நலன், பத்திரப் பதிவு, எழுது பொருள்-அச்சுத்துறை, அரசாங்க அச்சகம்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு வணிக வரித் துறை அமைச்சர்) .** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்) .** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து.ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி. (செ.வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், எ. கோ. | வானூர் (செ.வ.) |
| 21 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல. |
| 23 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர். |
| 24 | பாரதிமோகன், கோ. | குத்தாலம். |
| 25 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 26 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 27 | போஜன், கெ. | உதகமண்டலம். |
| 28 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 29 | சின்னராஜி, ஆ. கே. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 31 | சின்னச்சாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வா.) |
| 32 | சித்தன், என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ.வ.) |
| 34 | தருமலிங்கம் ந. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜு, க.ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குநேரி. |
| 37 | துரைராஜ். பி. | சங்கரன்கோவில் (செ.வ.) |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 43 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 49 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை |
| 59 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு |
| 62 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 63 | ஜயராமன், இ. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ. |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ. |
| 66 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 68 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் மாநகரம்). |
| 71 | கணணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை மாநகரம்). |
| 74 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 75 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 76 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 77 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 78 | கதிரவன், க. மு. | தென்காசி. |
| 79 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 80 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 81 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 82 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 83 | கோதண்டராமையா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 84 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 87 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.) |
| 88 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 89 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 90 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவினாசி. |
| 91 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மணி, வி. எஸ். எஸ். | ஆத்தூர். |
| 100 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 101 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 102 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 103 | மாரிமுத்து, எ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 104 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 105 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 106 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 107 | மதியழகன், கே. எ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 108 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 109 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 110 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 111 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |
| 112 | முனுசாமி, ரா.ரா. | மேலமலையனூர். |
| 113 | முனியாண்டி, எ. | நிலக்கோட்டை [செ.வ.] |
| 114 | முனு. ஆதி | திருப்போரூர். |
| 115 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 116 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 117 | முருகேசன், க. | பாலக்கோடு. |
| 118 | செஞ்சி முனுசாமி, வெ. | செஞ்சி. |
| 119 | முத்தையா, கே. கே. | கடலூர். |
| 120 | முத்தையா, மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 121 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.). |
| 122 | முத்துசாமி, பா. கசி. | பெண்ணாகரம். |
| 123 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 124 | முத்துச்செல்வன், பு.செ. | முசிறி. |
| 125 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம். |
| 126 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 127 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 128 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 129 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 130 | நஞ்சன், சி. | கடலூர் (செ.வ.). |
| 131 | நரசிம்மன், எ. சி. | ஆரணி. |
| 132 | நாராயணன், இரா. | வரகூர். |
| 133 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 134 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 135 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 136 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 137 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 138 | பத்மாவதி, திருமதி ஜி. | முசையூர். |
| 139 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.). |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.). |
| 141 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 142 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 143 | பரமசிவம் பி. என். | பொங்களூர். |
| 144 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 145 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 146 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம். |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 148 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 149 | பெருமாள், எ. ஆர். | சரியாப்பட்டி. |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 152 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 153 | இராஜா, எ. எம். | பவானி. |
| 154 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 155 | ராஜமன்னார், எஸ். எ. | வாணியம்பாடி. |
| 156 | இரசரங்கம், மா. | கம்பம். |
| 157 | ராஜரங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 158 | ராஜவேலு, டி. எ. | திருச்செங்கோடு. |
| 159 | ராமச்சந்திர துரை, ஏ. | கந்தர்வக்கோட்டை. |
| 160 | இராமச்சந்திரன், க. ரா. | ஆண்டிமடம். |
| 161 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 162 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 163 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 164 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 165 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 166 | இராமன், ஓ. பி. (அமைச்சர்) | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 167 | இராமதாசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 168 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 169 | ராமசாமி கவுண்டர், கே. எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 170 | ராமசாமி, எஸ். ஜே. | அரக்கோணம். |
| 171 | இராசு, ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 172 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 173 | ரெத்தினத்தேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 174 | சாதிக் பாட்சா, எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 175 | சகாதேவக் கவுண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 176 | சாமிநாதன், கே. எஸ். | வெள்ளக்கோவில். |
| 177 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 178 | சந்தானம், பி. எஸ். | செங்கம் (செ.வ.) |
| 179 | சாரதி, மா. பா. | வேலூர். |
| 180 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 181 | சீனிவாச நாயக்கர், ஆர். | சாத்தூர். |
| 182 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 183 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வ.) |
| 184 | சேனாபதி, அ. | காங்கேயம். |
| 185 | சேதுராமன், கி. | சிவகங்கை. |
| 186 | சண்முகம், எம். | விழுப்புரம். |
| 187 | சண்முகசுந்தரம், அ. ப. | பொள்ளாச்சி. |
| 188 | சிறுவீட்டான், தொ. க. | பரமக்குடி (செ.வ.). |
| 189 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 190 | சிவபெருமான், க. நா. | ஆத்தூர். |
| 191 | சிவசாமி, மூ. ச. | தூத்துக்குடி. |
| 192 | சிவசுப்பிரமணியன், எம். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 193 | சோமசுந்தரம், நா. | வலங்கைமான் (செ.வ.) |
| 194 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |
| 195 | சௌந்தரபாண்டியன், பெ. | திருக்கண்ணபுரம் (செ.வ.) |
| 196 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 197 | சுந்தர பாரதி, [illegible] என். | அருப்புக்கோட்டை. |
| 198 | [illegible] | போடிநாயக்கனூர். |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 199 | சுவாரெஸ், திருமதி எ. | நியமன உறுப்பினர். |
| 200 | சுப்பராஜா, எ. அ. | இராஜபாளையம். |
| 201 | சுப்பையா, ஆ. கு. | கோட்டூர் (செ.வ.) |
| 202 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) | ஆலங்குடி. |
| 203 | சுப்பையா முதலியார், எ. ஆர். | கடையநல்லூர். |
| 204 | சுப்பிரமணியம், அ. லெ. | திருநெல்வேலி. |
| 205 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 206 | சுப்பிரமணியம், இ. எம். | திருக்கோவிலூர். |
| 207 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 208 | சுவாமிநாத உடையார், த. கி. | மன்னார்குடி. |
| 209 | சுவாமிநாதன், வை. | வடமதுரை. |
| 210 | தம்பி நாயக்கர், பா. | இராமநாதபுரம். |
| 211 | தங்கப்பன், டி. | சேடப்பட்டி. |
| 212 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 213 | தீர்த்தகிரி, ந. | ஊரூர் (செ.வ.) |
| 214 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 215 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 216 | திப்பையா, டி. டி. எஸ். | மேட்டுப்பாளையம். |
| 217 | வடிவேலு, எஸ். கே. | தொட்டியம். |
| 218 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 219 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்) |
| 220 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 221 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 222 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 223 | வெள்ளத்துரை, வ. | வாசுதேவநல்லூர். |
| 224 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 225 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 226 | வெங்கடசாமி, பி. | ஓசூர். |
| 227 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) | கும்மிடிப்பூண்டி. |
| 228 | விஜய ரகுநாத தொண்டைமான், மா. ஆர். | புதுக்கோட்டை. |
| 229 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 230 | விநாயகம், கே. | திருத்தணி. |
| 231 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 232 | வில்லியம், எம். | கிள்ளியூர். |
| 233 | வெற்றிடம் | பெருந்துறை |
| 234 | வெற்றிடம் | கொளச்சல் |
| 235 | வெற்றிடம் | சோழமாதேவி. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| தொடர் எண். | பெயர். | |
|---|---|---|
| (1) | (2) | |
| 1 | திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 | திரு. ப. உ. சண்முகம் | அமைச்சர் |
| 3 | திரு. என். கோவிந்த சாமிநாதன் | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 மார்ச் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 189, 190, 191 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் பிறகு எடுத்துக் கொள்ளப்படும். வினா எண் 192 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### பள்ளிகளுக்கு வானொலிப்பெட்டி வழங்கல்

*192 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ரேடியோ வைக்கும் செயல்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இம் மாநிலத்திலுள்ள 2,498 உயர்நிலைப் பள்ளிகளில் 1,318 பள்ளிகள் தங்களது சொந்தச் செலவிலேயே வானொலிப் பெட்டி வாங்கி யுள்ளன. எஞ்சியுள்ள 1,180 பள்ளிகளுக்காக அரசுச் செலவில் வானொலிப்பெட்டி வழங்குவது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், மாநிலத்தில் இன்னும் சில உயர்நிலைப்பள்ளிகளில் இந்தவிதமாக வானொலிப் பெட்டிகள் வைக் கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாநிலத்திலுள்ள எல்லா ஆரம்பப் பாடசாலைகளிலும் இதுபோன்று வானொலிப் பெட்டிகளை வைத்து அந்தப் பள்ளிகளிலுள்ள படிப்புத் திறனை அதிகப்படுத்தும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா? அத்தகைய திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறதா? இருந்தால், அது எப்பொழுது செயல்முறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலில் எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் வானொலிப்பெட்டிகளை வைத்துவிட்டு அதற்குப் பிறகு வாய்ப்பும் வசதியும் பொருளும் கிடைக்குமானால், துவக்கப்பள்ளிகளைப்பற்றி நாம் யோசிக்கலாம்.

திரு. கே. விநாயகம் : வானொலிப் பெட்டிகள் வைத்திருக்கிற உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்குக் கல்விபற்றிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. கல்வி ஒலிபரப்பு நேரங்களில் எல்லாப் பள்ளிகளும் வேலை செய்கின்றன. அதனால் மாணவர்கள் வானொலிப்பெட்டியருகில் வந்து நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கோ, அல்லது நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதற்கோ வாய்ப்பு இல்லை. வெறும் வானொலிப் பெட்டி இருக்கிறதே தவிர, அது எந்தக் காரணத்திற்காக உயர்நிலைப்பள்ளிகளில் வைக்கப்பட்டதோ அதற்காக அது பயன்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த வானொலிப் பெட்டியைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆணைதான் எல்லாப் பள்ளிகளுக்கும் இடப்பட்டிருக்கின்றது. இப்பொழுது வானொலிக்கூடத்தாரின் ஒத்துழைப்பின் பேரில், கணக்கு, வரலாறு போன்ற பாடங்கள்கூட குறிப்பிட்ட நேரத்தில் ஒலிபரப்பப்படுகின்றன. அந்தச் செய்தி எல்லாப் பள்ளிகளுக்கும் அறிவிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குரிய பாடங்கள் வானொலியில் ஒலிபரப்பப்படும்போது அந்தந்தப் பள்ளிக்கூட மாணவர்கள் அங்குள்ள வானொலிப் பெட்டியின்மூலம் அந்நிகழ்ச்சியைக் கேட்பதற்கேற்ற வகையில் 'பீரியட்' ஒதுக்கித் தரவேண்டும் என்றுகூட ஒரு யோசனை கல்வி நிலையங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது பயன்படுத்தப்படாமலிருக்குமானால், பயன் படுத்திக் கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : உயர்நிலைப்பள்ளிகளில் வானொலிப் பெட்டியை எந்த எந்த நேரத்தில் பயன்படுத்த வேண்டும், எந்த எந்த நேரத்தில் பயன்படுத்தக்கூடாது என்பதற்கான விதிமுறை ஏதாவது இதுவரை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், இனிமேலாவது ஏற்பாடு செய்யப்படுமா? அப்படிச் செய்வதாக இருந்தால், பாடங்கள் போதிக்கின்ற நேரத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடைஞ்சல் இல்லாத முறையில் வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்தெந்த நேரத்தில் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் வைக்கப்படுகின்றன என்பதற்கான குறிப்பு வானொலி நிலையத்தாருடைய ஒத்துழைப்புடன் அந்தந்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஆறு முதல் 11 வகுப்புகளுக்குரிய பாடங்கள் மாநிலத்தில் இருக்கும். தக்க திறமை வாய்ந்த ஆசிரியர்கள் மூலமாக வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. வகுப்புக்குரிய பாடங்கள் பள்ளி நேரத்திலேயே மாணவர்கள் கேட்கத்தக்க அளவிற்கு வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. பொதுவான நிகழ்ச்சிகள் இடைவேளையின்போது கேட்கத்தக்க அளவிற்கு ஒலிபரப்பப்படுகின்றன. காலை 9 மணிக்கு முன்போ அல்லது மாலை 4½ மணிக்கு



அப்பாலோ மாணவர்களுக்குரிய கல்வி ஒலிபரப்புகள் வைக்கப்படுவதற்கில்லை. ஆக, இடை வேளையின்போது பொதுவாக வைக்கப்படுகிற வானொலி நிகழ்ச்சிகளும், குறிப்பிட்ட வகுப்புகளுக்குரிய பாடங்களும் எந்தெந்த நேரத்தில் ஒலிபரப்பப் படவேண்டும் என்று குறித்துக் கொடுக்கப்பட்டு, அந்த நேரத்தில் வைக்கப்படுகின்றன.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, வானொலியின் மூலம் கல்வி போதிப்பது உலகத்தில் சிறந்த முறை என்று ஏற்றுக்கொண்டு வளர்ந்து வருகிறது. ஆனால், இன்று தமிழகத்தில் மதியம் 12 அல்லது இரண்டு மணிக்கு அது ஒலிபரப்பப்படுவதால் அவ்வளவு பயனுள்ளதாகத் தெரியவில்லை. ஆகவே, அதைக் காலை 11 மணியிலிருந்து 12 மணி வரைக்குமோ அல்லது மாலை 3 மணியிலிருந்து 4 மணி வரைக்குமோ வைக்கலாமா என்பதைக்குறித்து வானொலி நிலையத்தாரோடு அரசு தொடர்பு கொண்டு, வகுப்புகளுக்குரிய கல்வி ஒலிபரப்பு நேரத்தை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ? மற்றும், கல்வி போதனை நடைபெறுகிறபோது பிற வகுப்புகளைப் பாதிக்காமல், தனிக் கூடத்தில் வானொலி நிகழ்ச்சிகளை வைக்கும் முறையில் அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். பொதுவான நிகழ்ச்சிகள்தான் இடைவேளையில் வைக்கப்படுகின்றன. வகுப்பு நேரங்களின் போதுதான் சில குறிப்பிட்ட வகுப்புகளுக்குரிய பாடங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அந்த வகுப்பு மாணவர்கள் மட்டும் கேட்டுப் பயன் பெறுவதற்கேற்ற முறையில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விடை அளிக்கும்போது, இன்னும் 1,130 பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் வைக்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். நம்முடைய கல்வித்துறை இயக்குநர் மூலமாக அந்தப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கெல்லாம் தாக்கீது அனுப்பி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள், வானொலிப்பெட்டி வைக்கப்படவேண்டும் என்று கெடு நிர்ணயிப்பதற்கு அரசு ஒரு முன் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1,318 பள்ளிகளிலேகூட, அந்த வானொலிப்பெட்டிகள் சொந்தச் செலவில்தான் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆடியோ-விஷுவல் ஃபீஸ் என்று பள்ளிகளில் திரட்டப்பட்டு, 300-லிருந்து 700 ரூபாய் விலைக்குள் இருக்கிற பல்வேறு தரப்பட்ட வானொலிப்பெட்டிகள் அந்தந்தப் பள்ளிகளுக்கேற்றபடி வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்த முறையில் மற்ற பள்ளிகளிலும் வைக்கபட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்துவதன்மூலமாகப் பல நன்கொடைகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் வானொலிப்பெட்டிகளும் பல பள்ளி

களுக்கு வழங்கி வருகிறார்கள். அந்த முறையிலும் வானொலிப் பெட்டிகள் வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எந்த வசதியும் இல்லாதிருக்கிற உயர்நிலைப்பள்ளிகளுக்கு அரசாங்கமே ஏதாவது செய்யலாமா என்பதும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. இல. பலராமன் :** தற்போது வானொலியின் மூலமாக ஆபாச சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றனவே அந்தப் பாடல்களைப் பள்ளிகளில் ஒலிபரப்பாமலிருக்கவும், மாணவர்கள் அதைக் கேட்காமலிருக்கவும் அரசாங்கம் ஏதாவது உத்தரவிட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பள்ளிகளில் கல்விபற்றிய ஒலிபரப்புகள்தான் மாணவர்கள் கேட்பதற்கென்று வைக்கப்படுகின்றன. மாணவர்களுக்குப் பயன்படுகிற ப்ரோக்ராம்தான் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அங்கு வைக்கப்படுகின்றன. மாணவர்கள் வீட்டில் சென்று திரைப்படப் பாடல் முதலியவற்றைக் கேட்பார்களானால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கில்லை.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, பள்ளி வகுப்பு நேரங்களில் வானொலிப் பெட்டி பயன்படுத்தப்படுவதில்லை. பள்ளிக்கூடம் விட்டதற்குப் பிறகு மாணவர்கள் வீட்டுக்குச் சென்றுவிடுகிறார்கள். அந்த இடைநேரத்தில்தான் நல்ல கலை நிகழ்ச்சிகள், அரசியல் தலைவர்களின் பேச்சுகள் முதலியவையெல்லாம் வருகின்றன. எனவே, வானொலிப் பெட்டி வைப்பதோடுகூட, டேப் ரிகார்டர் வைத்து, அதையெல்லாம் பதிவுசெய்து மாணவர்களுக்குப் போட்டு காட்டினால் நலமாக இருக்கும். ஆகவே டேப் ரிகார்டு வைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சில பள்ளிக்கூடங்களில் டேப் ரிகார்டர்கள் இருக்கின்றன. முக்கியமான சொற்பொழிவுகள் முக்கியமான நிகழ்ச்சிகள் டேப் ரிகார்டு செய்யப்பட்டு, மாணவர்களுக்கு அதைப் பயன்படுத்தும் முயற்சியும் சில பள்ளிகளில் எடுக்கப்பட்டு வருகின்றன. வானொலிப் பெட்டி வைக்கவேண்டும் என்ற முயற்சிதான் இன்னும் சில பள்ளிகளில் இல்லாமல் இருக்கிறது. அந்த முயற்சியைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. டி. மார்ட்டின் :** ஸ்பீக்கர் சார், சென்னையில் அநேக தொழிலாளர்களும், சிறு சிறு வியாபாரம் செய்கின்றவர்களும் ட்ரான்ஸிஸ்டர் ரேடியோ கையில் வைத்திருக்கிறார்கள். ஆனால் பள்ளி ஆசிரியர்கள் ட்ரான்ஸிஸ்டர்கள் வைத்துக்கொள்ள முடியாமலிருக்கிறார்கள். அவர்கள் ட்ரான்ஸிஸ்டர் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கத்திடம் முன்பணம், கடன் கோரினால், அது வழங்கப்படுமா ? ஆசிரியர்கள் ட்ரான்ஸிஸ்டர் வாங்கிக்கொள்வதற்கு அரசாங்கம் முன்பணம் கொடுத்து உதவும் திட்டத்தை அரசு அமலுக்குக் கொண்டுவருமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ஆசிரியர்கள் தங்களுக்கு ட்ரான்ஸிஸ்டர் வேண்டும் என்பதற்காகக் கடன் கோரினால் அது கொடுக்கப்பட வேண்டுமா என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஏனென்றால், மற்ற பிரச்சினைகளுக்கே கடன் கொடுக்க முடியாதிருக்கும்போது, ட்ரான்ஸிஸ்டர் வாங்கக் கடன் கொடுக்கும் அத்தகைய சூழ்நிலை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏற்படாது. ஆனால், பள்ளிகளுக்கு வானொலிப்பெட்டி வாங்கிக் தருவதுதான் இப்பொழுது பிரச்சினையாக இருக்கிறது. அதில்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

**திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான் :** தலைவர் அவர்களே, மின்சாரம் இல்லாத பள்ளிக்கூடங்கள் அநேகம் இருக்கின்றன. அங்கெல்லாம் வானொலிப்பெட்டி வைத்துக்கொள்ள என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மின்சார வசதி இல்லாத பள்ளிக்கூடங்களில் பாட்டரி செட் வைத்துக்கொண்டு, அதனைப் பயன்படுத்தி வானொலிப் பெட்டியை இயக்குகிறார்கள்.

### *Separate Director for Elementary Education*

* 193 *Q*.—THIRU T. MARTIN : Will the Hon. Minister for Education and Health be pleased to state :

(*a*) whether there is any proposal under consideration of the Government to appoint a separate Director to be incharge of Elementary Education in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், டைரக்டர் ஆப் செகண்டரி எஜுகேஷன் என்ற ஒரு அலுவலர் எல்லா வேலைகளையும் கவனிக்கவேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால், சாதாரணமாக பள்ளிகளில் டீச்சர்ஸ் போஸ்டு சாங்ஷன் பண்ணுவதுகூட காலாகாலத்தில் நடைபெறாமல் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, வேலையில் தேக்கம் ஏற்படுகிறது. ஆகவே, அதைக் கருத்திற்கொண்டு, ஏராளமான ஆரம்பப் பாடசாலைகள் இருக்கிற காரணத்தினால், அவற்றிற்கென்று தனியாக ஒரு டைரக்டர் போடுகிற செயற்குறிப்பு பற்றி இனிமேலாவது அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய ஆசிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எல்லா கல்வித் துறைகளும் ஒரு காலத்தில் ஒரே இயக்குநர் கீழ் இருந்தன. அதற்குப் பிறகு தொழில் நுட்பக் கல்விக்கென்று ஒரு தனி இயக்குநர் ஏற்பட்டது. 1965-ம் ஆண்டில் கல்லூரிக் கல்வி ஒரு தனி

நிதியை அனுமதித்து, முன்போல பல பத்திரிகைகளையும், வார ஏடுகளையும் இந்த நூலகங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, நிதிநிலைப் பற்றாக்குறை பல மாவட்ட நூலக ஆணைக் குழுக்களிடம் இருந்து வருகிறது. அதற்குக் காரணம், அங்கே செஸ் சரியாக வசூல் ஆவதில்லை. வசூல் ஆனதை சரியாகத் தருவதில்லை. ஆணைக் குழுவும் முயற்சி செய்து வாங்குவதில்லை. இதனால்தான் நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. மூன்று காசாக இருக்கிற செஸ்ஸை ஆறு காசாக உயர்த்தவேண்டும் என்று கூறுகிறார்கள். எவ்வளவு செஸ் வசூல் ஆகிறதோ அதற்கு ஈடாக அரசாங்கமும் மானியம் தரவேண்டும். இதனால் ஆங்காங்கு நிதித் தட்டுப்பாடு இருந்து வருகிறது. ஆகவே, கூடுமானவரையில் சிக்கனமான முறையைக் கையாளவேண்டும், புத்தகங்கள், ஏடுகள் வாங்குவதிலே சிக்கனம் காட்டாமல், வேறு வகையில் நிர்வாகத்தில் சிக்கனம் காட்ட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் செலுத்தவேண்டிய அத்தகைய செஸ்ஸை செலுத்தவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது. எவ்வளவு செஸ் தொகை வசூலாகிறதோ அவ்வளவுக்கு ஈடாக அரசாங்கம் மானியம் வழங்கவேண்டும். இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையிலே பிக்ஸட் டெபாசிட்டில் ரூ. 3 லட்சம் சில்லரையை முடக்கி வைத்துவிட்டு, நிர்வாகச் செலவிற்கே கஷ்டப் படுகிறார்கள். விரைவிலே பிக்சட் டெபாசிட்டிலிருந்து பணத்தை எடுத்துப் பயன்படுத்த முயற்சி செய்யவேண்டும் என்று அவர்களுக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in many libraries run by Local Library Authorities, books and newspapers are not supplied properly; especially books in minority languages are not at all supplied, even when we request the concerned officers. They say that they have no funds. Libaries are very important to educate the people. May I request the Hon. Minister to bestow his special attention about the supply of adequate number of books in minority languages?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத் தேவைப்படுகிற நூல்கள் அத்தனையும் வாங்குவதற்கு வாய்ப்பு, வசதி ஏற்படவில்லை என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மையோருக்குப் பயன்படும் புத்தகங்களை வாங்கக்கூடாது என்ற உத்தரவு ஒன்றுமில்லை. எந்தெந்தப் பகுதிகளில் தேவைப்படுகின்றனவோ அங்கே அத்தகைய புத்தகங்களை வாங்கிவைப்பதற்கு ஆணைக் குழுவினர் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஆணைக் குழுவினரிடம் இதைப்பற்றி விண்ணப்பித்தால், தேவையை அறிந்து, ஆங்காங்கு அதற்கேற்ற நூல்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்வார்கள்.



*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இராமநாதபுரம் கிளை நூலகங்களைப் பற்றிய கேள்வி இது. அதையொட்டித் துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

*திரு. ந. தருமலிங்கம் :* மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு இப்பொழுது கிடைத்துவருகிற, உள்ளாட்சி மன்றங்களின் மூலம் வசூலாகிற செஸ் வருவாயைத் தவிர, வேறு எந்த வருவாயும் இல்லாத காரணத்தினால் பல இடங்களில் செம்மையாக இயங்க முடியவில்லை. அரசாங்கம் தருகிற தொகையை, ஒரு பங்கு மானியமாகத் தருகிற தொகையை, இரண்டு பங்காகக் கூட்டித் தருவதற்கு உத்தேசம் எதுவும் உண்டா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* நிதிப்பற்றாக்குறை இருக்கிறது என்பதை அரசு உணர்கிறது. ஆகவே, நடைமுறையில் நிதி வசதியை எப்படிப் பெருக்கலாம் என்பது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதைப் பெருக்குவதற்கு செஸ்ஸை உயர்த்தவேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட சட்டத்தையே மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவைகளெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பின்னால் அது பற்றி முடிவு எடுத்து, நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

*திரு. கே. பி. எஸ். மணி :* நூலகங்களில் பற்றாக்குறை இருக்கிறது உண்மையானால், தேசீய நன்மையை உத்தேசித்து, தேசத்தின் தலைவர்கள் எழுதிய புத்தகங்களையும், இந்திய ஆராய்ச்சியாளர்கள் எழுதிய புத்தகங்களையும் அதிகமாக இந்த நூலகங்களில் வைப்பதற்கு வழிவகை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழுவினர் சிறந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தந்த நூலகங்களுக்கு அனுப்புகின்ற அத்தகைய புத்தகங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதிலே பலரும் ஈடுபட்டிருக்கிற காரணத்தினாலே, அரசாங்க அதிகாரிகள், உத்தியோகப் பற்றற்றவர்கள் ஆகியோர் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால், அதிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்களைப் பல பேரும் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே ஆங்காங்கு புத்தகங்கள் வாங்கி வைக்கப்படுகின்றன.

*திரு. க. மு. ராசகோபால் :* தற்பொழுது 5,000 மக்கள் தொகை கொண்ட ஊர்களில்தான் நூலகம் இருப்பதாக சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் பெரும்பாலும் செஸ் வசூல் செய்வதால், சட்ட விதிமுறைகளை மாற்றி ஊராட்சி மன்றம் இருக்கிற ஒவ்வொரு ஊரிலும் ஒரு நூலகம் திறப்பதற்கு அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற நூலகங்களிலேயே புத்தகங்கள் வாங்கிப் பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சி

மன்றத்திலும் வைக்கவேண்டும் என்கிற யோசனை இப்பொழுது முடியாது. பின்னால் வசதிகள் வந்த பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

### Post of Director of Information

* 189 *Q.*—Dr. H. V. HANDE, Thiru K. VINAYAKAM and Thiru N. S. V. CHITHAN : Will the Hon. Chief Minister be pleased to state whether this Government has any proposal to revive the post of Director of Information ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Dr. H. V. HANDE : Sir, what are the reasons for the abolition of this post and when was it abolished? Also, are the Government aware of the fact that the public relationship vis-a-vis the State Government are suffering due to want of a proper publicity officer? Whenever the Government take a policy decision, that must be made known to the public by the issue of a Press hand-out. So, will not this Government revive this post or at least set up a machinery by which the Press will be issued with a hand-out and the public also will know what exactly is in the minds of the Government?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* மாவட்ட அளவில் மாவட்ட விளம்பர அதிகாரிகள் வைத்து இருந்ததை அப்படிப்பட்ட நிலையில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், தலைமை அதிகாரி என்ற அளவில் மட்டும் வைத்து சீரமைப்புச் செய்யலாம் என்றும்தான் ஆரம்பத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் விஷயங்களையும் கவனித்து சீரமைப்புச் செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறது.

*திரு. கே. விநாயகம் :* சார், இந்த டைரக்டர் ஆப் பப்ளிசிடி என்கிற ஒரு போஸ்ட், முன்பு இருந்ததே அதை அரசாங்கக் கட்சிக் காரர்களுக்கு விளம்பரம் செய்கிறார்கள், அரசாங்கத்திற்கு இல்லை, என்கிற அடிப்படையில் அந்த போஸ்ட் அபாலிஷ் செய்யப் பட்டதாகச் சொல்லப்பட்டதே. அதையே திரும்பவும் வைத்தால் இப்பொழுது இருக்கிற கட்சிக் காரர்களுக்கு விளம்பரம் . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு சொல்லக் கூடாது. [redacted]

*திரு. கே. விநாயகம் :* நான் காரணத்தைத்தான் கேட்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அப்படிக் கேளுங்கள்.

Thiru K. VINAYAKAM: Sir, there was a feeling that this post was abolished because it was used by the then Party in power for propaganda purposes. Now, this Government can revive it and give publicity to their own party. It is in their own interest to do so. Why not they revive it?



*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* யார் அந்த இடத்தில் அமர்த்தப் பட்டாலும், அது மாண்புமிகு திரு. விநாயகம் சொன்னதுபோல், முன்பு அது கட்சிப்பிரசாரத்திற்கு என்று அவரே கருதினாலும், அப்படிப்பட்ட கட்சிப் பிரசாரத்திற்கு அல்ல, அரசுப் பிரசாரத்திற்குத்தான் இடம் தரப்படும்.

*திரு. என். எஸ். வி. சித்தன் :* சார், ரெயில்வேயில் இருந்த கருணாநந்தம் என்பவர் பிரசார அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறாரா? ஆம் எனில், அவருக்கு அந்தப் பதவிக்குத் தகுதி என்னென்ன என்று அறியலாமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* பிரசாரம் செய்கிறவர் என்கிற தகுதி தான்.

Thiru T. MARTIN : Sir, Press Correspondents in Delhi are being given accredition and they are treated as Government servants by the Central Government. So, may I request the Hon. Minister to state whether there is any proposal pending before the Government to give such accredition to the Press Correspondents here and treat them as Government servants with regard to matters pertaining to the allotment of houses, etc.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* அது பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கப்படுகிறது.

### ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்

* 190 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் பணியாற்றுகின்ற ஐ. ஏ. எஸ். அதிகாரிகளில் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எத்தனை பேர் ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* ஒருவருமில்லை.

*திரு. ஏ. எம். இராஜா :* தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கும் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அறியலாமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* தனிக் கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கலாம்.

*திரு. பெ. மலைச்சாமி :* தலைவர் அவர்களே, தமிழ் மொழி தெரியாத வேற்று மாநில அதிகாரிகளை தமிழகத்தில் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாக நியமிக்க வேண்டாமென்று ஒரு கோரிக்கையை மத்திய சர்க்காருக்கு இந்த அரசு விடுக்குமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* எப்படி வேறு மாநிலத்திலுள்ளவர்கள் இங்கே இருக்கிறார்களோ, அதே போலத் தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் வேறு இடங்களுக்குச் சென்று அந்த மாநிலங்களில் பதவியில் இருக்கிறார்கள்.

இயக்குநரின் கீழ் கொண்டுவரப்பட்டது. இப்பொழுது துவக்கப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப்பள்ளிக் கல்வி இரண்டுமே ஒரே இயக்குநரின் கீழே இருந்து வருகிறது. அவர்களுக்குக் கீழே தனித் தனி துணை இயக்குநர்கள் இருந்துகொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு துறைக்கும் தனியாக ஒரு இயக்குநர் இருந்தால், நிர்வாகத்தில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. மேலும் இந்தப் பள்ளிகளைக் கவனிப்பதற்காக ஆங்காங்கு மாவட்டக் கல்வி அதிகாரி ஒருவர் தான் இருந்து வருகிறார். அப்படிப்பட்ட ஒரு கல்வி அதிகாரி இரண்டு இயக்குநர்களின் கீழே இருந்து வேலை செய்வது இயலாது. ஆகவேதான், ஒரே இயக்குநர் இருந்து, துணை இயக்குநர் தனித்தனியாகப் பிரித்துப் போடப்பட்டிருக்கிறது. மேலும், துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளின் பணிகள் பெரும்பாலும், உள்ளாட்சித் துறையினால் கவனிக்கப்படுகின்றன. அதோடு சேர்ந்து பணியாற்றும் பள்ளிகள் ஒரே கல்வி இயக்குநரின் கீழ் இருந்தால்தான் நிர்வாகம் செம்மையாக நடைபெறும். துவக்கப் பள்ளிகளுக்கு என்று தனியாக ஒரு இயக்குநர் இருந்தால் சிரமம் ஏற்படும் என்று கருதித்தான், அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : துவக்கப்பள்ளிகளில் படிக்கக் கூடிய அவ்வளவு பேர்களும் குழந்தைகள். குழந்தை உள்ளம் படைத்தவர்கள் தாய்மார்கள். ஆகவே, இந்தத் துவக்கப் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்புகள் வரையில் ஆசிரியைகளையே நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடக்கக் கல்விக்காகத் தனி இயக்குநர் நியமிப்பது பற்றிய கேள்வி இது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. நேற்று இதைப்பற்றிக் கேட்ட கேள்விக்கு விடையிறுத்தேன். இப்பொழுதே இதற்காக ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்றவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் பல பேர்கள் வெளியிலே இருக்கிறார்கள். ஆகவே, வேறு துறையில் ஆண்களான அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வரையில், வேலை வாய்ப்பு இல்லாத தன்மையில், மகளிர்க்கு என்று தனியாக இந்தத் துறையை ஒதுக்குவது முழுவதும் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. பெரும்பாலான பெண்கள்-துவக்கப் பள்ளிகளில் பெண்கள்தான் ஆசிரியைகளாக இருந்து வருகிறார்கள். ஆண்கள்-துவக்கப் பள்ளிகளிலும் சில இடங்களில் பெண்கள் பணிபுரிகிறார்கள். மொத்தத்தில் பார்க்கும்பொழுது பெண்கள் அதிகமாகத்தான் இருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தற்பொழுது இந்த ஒரே இயக்குநருக்கு 'அட்வைசர் டு தி செக்ரடரி' என்ற பதவியைக் கொடுத்து வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது . . . .



மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி, மூலக் கேள்வியை ஒட்டி வரட்டும். இது தொடக்கக் கல்வியைக் கவனிக்கத் தனி இயக்குநர் நியமிப்பதுபற்றிய கேள்வி.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதோடு இதுவும் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனி இயக்குநர் நியமிப்பது பற்றித் துணைக் கேள்வி போடுங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, was there a representation from the department concerned that the workload as a result of clubbing together the posts of Director of High School Education and the Director of Elementary Education was too much for one individual, was there a proposal to that effect and was it considered by the Government at the Secretariat level and then rejected?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றி குறிப்பு எதுவும் வந்ததாக இங்கே தகவல் இல்லை. ஆனால், ஒரு இயக்குநர் மேற்பார்வையிடுகிறார். தனித் தனியாக இணை இயக்குநர் இருக்கிறார். அவருக்குக் கீழே துணை இயக்குநர் இருக்கிறார். துவக்கப் பள்ளிகளைக் கவனிப்பதற்கு ஒரு துணை இயக்குநர், ஒரு இணை இயக்குநர் பணி புரிகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளைப்பற்றிக் கவனிப்பதற்கும் தனியாகப் பிரித்து ஒரு இணை இயக்குநர், துணை இயக்குநர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளைப்பற்றி முழுவதும் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதற்குத் தனித் தனியாகத் துணை இயக்குநர், இணை இயக்குநர் இருக்கிறார்கள். முக்கியமான பணிகள் பற்றியும், முக்கியமான செயல்கள் பற்றியும் தான் இயக்குநரின் கவனத்திற்கு வருவதால், ஒரே இயக்குநர் இருந்து முழுவதையும் கவனித்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைகிறது.

### இராமநாதபுரம் நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகங்கள்

*194 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுர நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகங்கள் பல, பணமில்லாமையால் மூடப்பட இருக்கின்றனவா ?

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமல்லாமல், மதுரை மாவட்டத்திலும் பல நூலகங்களிலே இப்பொழுதெல்லாம் பத்திரிகைகள், வார ஏடுகள் எல்லாம் சரியாக வருவதில்லை. நிதிநிலைப் பற்றாக்குறையினால் இந்த நிலை ஏற்படுகிறது. ஆகவே, இதற்கு அதிகப்படியாக

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்; துறையில் தமிழகத்திலிருந்து செல்கிறவர்கள் தேர்வில் குறைந்து வருகிறார்கள் என்று சொல்லப் படுகிறதே, அதுபற்றி இந்த அரசு ஆலோசித்து மத்திய சர்க்காருக்குப் பரிந்துரைகள் கொடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபோன்ற புகார்கள் வந்தால் கவனிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** சார், தமிழைத் தாய் மொழியாகப் பெறாதவர்கள், ஐ. ஏ. எஸ். ஆபிசர்களாக தமிழகத்திற்கு வந்தால், தமிழில் எந்தத் தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று ஏதாவது இருக்கிறதா ? What is the standard ? பத்திரிகை படிக்கத் தெரிந்தால், பேசினால் மாத்திரம் போதுமா? ஸ்டாண்டர்ட், தகுதி என்ன வைத்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஐ.ஏ.எஸ்; அதிகாரிகள், இன்னென்ன மாநிலங்களில் தங்களை நியமித்திருக்கிறார்கள் என்று தெரிந்தவுடன், தங்கள் பயிற்சிக் காலத்திலேயே, முஸ்ஸோரியில் லாங்க்வேஜ் டெஸ்ட் எழுதுகிறார்கள். பின்னால், மாநிலத்திற்கு வந்த பிறகும் லாங்க்வேஜ் டெஸ்ட் எழுதுகிறார்கள். வந்த பிறகு எஸ்.எஸ்.எல்.ஸி. தரம் அவர்களுக்கு வேண்டுமென்பவர்களுக்கு, அந்தத் தேர்ச்சியில் வெற்றிபெற்றவர்களுக்கு ரூ. 1000 தேர்ச்சிப் பரிசும் அளிக்கப்படுகிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் நியமிக்கப் படும்போது, மாநில சர்வீஸ்களிலிருந்து நியமிக்கும் விகிதாசாரம் அதிகப்படுத்தப் பட்டால், தமிழ் தெரிந்த அதிகாரிகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதால், டெல்லி அரசை, விகிதாசாரத்தை அதிகப்படுத்த நம் அரசு கேட்டுக் கொள்ளுமா ? மற்ற மாநில அமைச்சர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதால், இது தேசிய அபிவிருத்திக் கவுன்சிலிலோ அல்லது பிரதம மந்திரி கூட்டும் முதல் அமைச்சர் மாநாட்டிலோ வற்புறுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** இப்பொழுது மத்திய சர்க்காருடைய இலாகாக்களிலே பணியாற்றுகின்ற சீனியர் ஐ.ஏ.எஸ் என்கிற அதிகாரிகள் 40 சதவிகிதம் அனுப்பவேண்டும் என்கிற நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த விஷயத்தையும் கவனத்தில் வைத்துப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. ஆர். கோவிந்தன் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் எவ்வளவு வெளி மாநிலத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள், வெளி மாநிலங்களில் தமிழ் மாநிலத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று அறியலாமா ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தனியாகக் கேள்வி போட்டால் தான் அந்த விளக்கம் கொடுக்க முடியும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எண்ணிக்கை குறைந்து விட்டது என்று சொல்லப்படுகிறதே. அதை அதிகரிக்க என்ன என்ன முயற்சிகள் அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப் பற்றித்தான் பரிசீலனை செய்யப்படுகிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, தாய் மொழி தமிழ் இல்லாத அதிகாரிகள் தமிழ் நாட்டில் நியமிக்கப் படுகிறார்கள். தமிழை எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ள அவர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் பண ரூபத்தில் கொடுக்கப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைத்தான் நான் முன்பே சொன்னேன். எஸ்.எஸ்.எல்.ஸி. தரத்திற்கு வருகிற தேர்வு எழுதி வெற்றி பெறுகிறவர்களுக்குத் தேர்ச்சிப் பரிசு ரூ. 1,000 அளிக்கப் படுகிறது.

### *Secretaries to Government.*

*191 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR and THIRU N. S. V. CHITHAN : Will the Hon. Chief Minister be pleased to state :

(a) whether the Secretaries to Government are to meet the Chief Secretary to the Government on the first working day of every month ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) அலுவலக அலுவல்களைத் திறம்பட விரைந்து செயலாற்றுவதற்கும், நிர்வாகத்தை முனைப்பாக்கும் நோக்கத்திலும் அதன் திறனை மேம்படுத்துவதற்கும், பொதுவான விவாதத்திற்காக ஒவ்வொரு மாதமும் முதல் வேலை நாளன்று தலைமைச் செயலாளரைச் சந்திக்குமாறு அரசுச் செயலாளர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இது குறித்து முதற் கூட்டம், 2-1-70ல் நடந்தது.

**திரு. க. கோமதிசங்கர திட்சிதர் :** தலைவர் அவர்களே, இம் மாதிரி ஒவ்வொரு மாதத்திலும் முதல் வேலை நாளில் சந்திப்பதால், ஆட்சி நல்ல முறையில் நடக்க, பேப்பர்கள் எல்லாம் தாமதம் இல்லாமல் உடனுக்குடனே அனுப்பப் பட்டு முன்னேறிவருகிறதா ? அதைப் பற்றி முதல் செக்ரடரி கவனித்துச் செய்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[1970 மார்ச் 4

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவைகளையெல்லாம் கவனிக்கத்தான் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினர் கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு மட்டும், ஏனைய பிரச்சினைகளைத் தள்ளி வைத்துவிட்டு, முதல் இடம் கொடுக்க வேண்டாம் என்று அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினருடைய அனுபவத்தில் அப்படி நடக்கவில்லை என்று உணர்ந்திருப்பார்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இம்மாதிரிக் கூட்டப் படும் கூட்டங்களில் பெண்டிங்கில் இருக்கும் பேப்பர்கள் சம்பந்தமாக ஆராய்ச்சி விவாதம், டிஸ்போஸல் செய்ய ஏற்பாடுகள் செய்யப் படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நிர்வாகத்தை மேலும் முனைப்பாக, விரைவாகச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த விஷயங்களும் அதிலே, அடிக்கடி எடுத்துக் கூறப்பட்டு, விரைவாக்கப் படவேண்டிய அவசியம் சொல்லப் படுகிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் சம்பந்தப்பட்ட தாசில்தார்களையும் மற்ற அதிகாரிகளையும் ஒவ்வொரு திங்கள் முதல் வேலைநாளன்று சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர்களும் இதுபோல் செய்வதற்கு முயற்சிக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Whereas it is highly conducive for the proper working of the departments of the Secretariat that the Secretaries should meet the Chief Secretary on the first working day of the month and whereas we also agree with that, is the Hon. Chief Minister aware of the fact that whenever we go into the rooms of the Secretaries of different departments during the interview hours (11-00 a.m. — 12-00 noon) we are always confronted with the reply that the Secretary has gone to the Chief Secretary's room, etc. We are always confronted with such a reply. They are not found in their rooms during interview hours. I do not mind other hours. But at least during interview hours they should be there. Will the Hon. Chief Minister take steps to prevent the Secretaries going about the Chief Secretary's room every often more than what is necessary ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல, அவர்கள் எப்போதுமே தலைமைச் செயலாளர் அறையில் இருப்பதாகத் தகவல் வரவில்லை.



1970 மார்ச் 4]

எந்தச் செயலாளர்களை அணுகிச் செல்கிறார்களோ அவர்களை கனம் உறுப்பினர் அவர்கள் அணுகிப் பேசுவதாக நான் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன்.

**மண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 156, 157, 195, 196 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**அரிசன மாணவ விடுதிகளுக்கு பகுதிநேர சிற்றாசிரியர்கள்**

***197 வினா.—திருமதி வி. ப. பழனியம்மாள்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்பட்டு வரும் மாணவர் இல்லங்களில் அமர்த்தப்பட்டு இருக்கும் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் எந்த அடிப்படையிலே நியமிக்கப்படுவார்கள் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஹரிஜனங்களுக்காக அரசு விடுதிகளில் பகுதி நேரச் சிற்றாசிரியர்களை நியமிப்பது குறித்து கீழ்க்கண்ட நடைமுறை பின்பற்றப் படுகிறது:—

(1) பகுதி நேரச் சிற்றாசிரியர்கள், கீழ்க்கண்ட முறை வைப்பின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

| | உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகள். | கல்லூரி மாணவர் விடுதிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| முதல் முறைவைப்பு | அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. டி. ஆசிரியர்கள். | அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள். |
| இரண்டாவது முறை வைப்பு. | வாரிய உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. டி. ஆசிரியர்கள். | அரசுக் கல்லூரி விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள். |
| மூன்றாவது முறை வைப்பு. | மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. டி. ஆசிரியர்கள். | ஏனைய கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர்கள். |
| நான்காவது முறை வைப்பு. | ஏனையோர். | ஏனைய கல்லூரிகளில் பணிபுரியும் விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள். |
| ஐந்தாவது முறை வைப்பு. | .. | ஏனையோர். |

(2) மாணவர் விடுதிகளைப் பொறுத்தவரையில், அனுபவமும், திறமையும் வாய்ந்த பி.டி., எல்.டி. ஆசிரியர்களை மாவட்ட நல்ல அதிகாரிகள் மாவட்டக் கல்வி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துத் தெரிந்தெடுக்க வேண்டும். மாணவியர் விடுதிகளைப் பொறுத்தவரையில், அந்த ஆசிரியர்களை, பெண்கள் பள்ளி தேடுநருடன் (மகளிர்) (Inspectress) கலந்தாலோசித்துத் தெரிந்தெடுக்க வேண்டும். கல்லூரி மாணவர்களின் விடுதிகளைப்

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அந்த அரிசி எந்தெந்த இடங்களில் வினியோகிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மழையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ்மக்கள் பகுதிகளில் இந்த அரிசி வினியோகிக்கப்பட்டது. மற்றும் தீவிபத்து நடந்த பகுதிகளிலும் இந்த அரிசி வினியோகிக்கப்பட்டது. எங்கெங்கு தீவிபத்துக்கள் ஏற்பட்டனவோ அந்தப் பகுதிகளில் எல்லாம் இந்த அரிசி வினியோகிக்கப்பட்டது. தனியாகக் கேள்வி கேட்டால், எந்தெந்த இடங்களில் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பது பற்றிய புள்ளி விவரம் கொடுக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநில அரசுக்கும், தமிழக அரசுக்கும் நேச உறவு இருப்பதன் காரணமாக நம்முடைய பஞ்சநிலைக்கு பஞ்சாப் அரசு அரிசி கொடுத்ததைப் பாராட்டுகிறேன். இந்த நேச உறவை அடிப்படையாகக் கொண்டு, பஞ்சாப் மாநிலத்தில் சிறுதொழில்களும் கைத்தொழில்களும். . .

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இந்தக் கேள்வி அரிசி நன்கொடை கொடுத்ததைப்பற்றியது. அதையொட்டித்தான் கேள்வி கேட்கவேண்டும்.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநிலம் அரிசி கொடுத்ததை நன்றியுடன் ஏற்றுக்கொண்டோம். அவர்கள் விவசாயத் துறையிலும், கைத்தொழில் துறையிலும் அபிவிருத்தி அடைந்திருப்பதைப் பரிசீலத்து நம் மாநிலத்திலும் அத்தகைய முயற்சிகளை. . .

(மணியடிக்கப்பட்டது)

(விடை இல்லை).

### Salem Steel Plant

* 200 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR and THIRU V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any high level meeting of representatives of the Union Government and this Government took place about the 22nd October, 1969 on Salem iron ore exploitation ?

THE HON. THIRU S. MADHAVAN : **The proposed Salem Steel Plant was discussed in detail with the officials of the Ministry of Steel and Heavy Engineering (Department of Steel) on 20th October 1969.** The adequacy of iron ore resources to support **the steel plant and the availability of lignite char in required quantities from the Neyveli Lignite Corporation without waiting**





for the second mine cut came up for special mention. Government of India officials were satisfied about these. This was followed by a meeting on 21st October 1969 with the then Union Minister for Steel and Heavy Engineering.

* 201. வினா **திரு. கே. போஜன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், இத்தொழிற்சாலை அமைக்கும் வேலை எப்பொழுதிலிருந்து ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான இரும்பு தாதுக்களை உடனடியாக வெட்டியெடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். கஞ்சமலை போன்ற பகுதிகளில் இரும்புத் தாதுக்களை வெட்டி எடுக்கக்கூடிய வேலைகளைத் தொடங்கியிருக்கிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசு அதிகாரிகள் இதுவிஷயமாக என்ன கருத்து கூறியிருக்கிறார்கள்? இப்போது ஆரம்பிக்கப்படுவதற்கான சிபாரிசு செய்யக்கூடிய தன்மையிலே கூறினார்களா? அல்லது இப்போது ஆரம்பிக்கக்கூடாது, இப்போது சூழ்நிலை சரியில்லை, இப்போது நிதி நிலைமை சரியில்லை என்று கூறினார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு அதிகாரிகள் சேலம் உருக்காலைபற்றி விவாதித்தார்கள். பல பிரச்சினைகளை எழுப்பினார்கள். நம்முடைய அரசின் சார்பிலே இந்தத் திட்டம் ஏற்பட வேண்டியதன் அவசியத்தைச் சொன்னோம். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இருப்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தைக் குறித்து அத்தனை புள்ளி விவரங்களையும் சேகரித்து அறிக்கைகள் தயாராக வைத்திருக்கிறோம். இதை உடனடியாக நிறைவேற்றுவதில் எந்தவிதமான தடையும் இல்லையென்பதை நிரூபித்திருக்கிறோம். டெல்லியில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் சந்தித்திருக்கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்து, நம்முடைய அரசிடத்திலே கலந்துபேசுகிற சமயத்தில் எழுப்பப்பட்ட சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு அதற்கான

[1970 மார்ச் 4

பொறுத்தவரையில், அனுபவம், திறமை, விருப்பம் கொண்டவர்களை, சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களுடனும், கல்லூரிக் கல்வி இயக்குநருடனும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்தாலோசித்துத் தெரிந்தெடுக்க வேண்டும்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளில் மாலை நேரத்தில் கல்வி புகட்டுவதற்காக ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களைத்தான் அமர்த்துகிறார்கள். படித்த ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அப்பேர்ப்பட்டவர்களை இந்தப் பணியில் அமர்த்த முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இவர்கள் முழுநேர ஆசிரியர்கள் அல்ல. பகுதி நேர ஆசிரியர்கள்தான். பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தரப்படும் சம்பளம் மிகவும் குறைவு. ஆகவே, இந்தக் குறைந்த சம்பளத்தில் அவர்கள் வேலை செய்ய வருவது அரிதாக இருக்கும். அதற்காகத்தான் ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்குப் பகுதி நேர ஊழியம் தரப்படுகிறது.

திரு. பி. துரைராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது எத்தனை மாணவர்கள் தங்கிப் படிக்கும் ஹாஸ்டல்களில் இம்மாதிரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது 84 உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுதிகளிலும், 3 கல்லூரி மாணவர்கள் விடுதிகளிலும் பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வேலை செய்பவர்களுக்கு பகுதிநேர வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கலாமே தவிர, அவருடைய கருத்தைச் சொல்லக் கூடாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் இருக்கிற, தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு இந்த வேலையாவது கொடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நான் வேறொரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னேன். இது பகுதிநேர ஊழியம், குறைந்த சம்பளம். உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுதிகளில் பணியாற்றுபவர்களுக்கு 75 ரூபாய் என்றும், கல்லூரி மாணவர்கள் விடுதியில் பணியாற்றுபவர்களுக்கு 100 ரூபாய் என்றும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்கள் இந்தக் குறைந்த சம்பளத்திற்கு வரமாட்டார்கள். ஆகவேதான் உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகளில் பணியாற்றுபவர்களுக்கு பகுதிநேர ஊழியம் தரப்படுகிறது.



1970 மார்ச் 4]

*Stock of sugar in Government godowns*

* 198 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) the total quantity of sugar lying in Government godowns of Tamil Nadu as on 1—12—1969;

(b) whether the Government have any proposal to lift the control on sugar in view of the fact that large quantity of sugar is lying in Government godown; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1—12—1969 அன்று அரசு கிடங்குகளில் இருந்த சர்க்கரையின் மொத்த அளவு 12,948 டன்.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

Dr. H. V. HANDE : Is it not a fact that large quantities of sugar are lying idle in the godowns? (I brought it to the notice of Government in my call attention notice and the Hon. Minister also gave some such answer.) In view of the fact that the position is much worse at present, may I know what is the concrete proposal which the Government has at its disposal to see that these stocks are cleared as early as possible and to see that the stocks are not spoiled?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1—12—1969 அன்று அரசுக் கிடங்குகளில் இருந்த சர்க்கரையின் மொத்த அளவு 12,948 டன் என்று சொன்னேன். இப்போது நம்மிடத்தில் இருப்பது ஏறக்குறைய 3 ஆயிரம் டன்தான்.

*Gift rice from the Punjab Government.*

* 199 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether the Government has received gift rice from the Punjab Government;

(b) if so, the details thereof; and

(c) the manner of its disposal?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) பஞ்சாப் அரசு ரூ. 50, 000 மதிப்புள்ள 51 டன் அரிசியை தமிழ்நாட்டின் பஞ்ச நிவாரணப் பகுதிகளில் வினியோகிப்பதற்காக இலவச வெகுமதியாக அளித்தது.

(உ) சென்னை நகரில் அக்டோபர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அந்த அரிசி இலவசமாக வினியோகிக்கப்பட்டது.

நம்மிடம் இருந்து வெல்லம், சர்க்கரை வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதனால் இவற்றை ஏற்றுமதி செய்ய மத்திய சர்க்காரிடம் இருந்து அனுமதியைப் பெறுவார்களா?

(விடை இல்லை)

### கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமனம்.

* 203. வினா.—திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவரமான விடை * சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அப்படிப்பட்ட உத்தரவுதான் போடப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** கௌரவ நீதிபதிகளுக்குக் கூடுதலான அதிகாரம் தந்து மதுவிலக்கு போன்ற வழக்குகளை எல்லாம் அவர்களிடம் ஒப்படைக்க அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாடு முழுவதும் கிராம நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்ற கொள்கை 1950 பஞ்சாயத்துச் சட்டத்தில் இருந்தது. 1958 சட்டத்தில் அது எடுக்கப்பட்டிருக்கிறது. பழைய வில்லேஜ் கோர்ட் ஆக்ட் இருக்கிறது. இப்போது கிராம நீதி மன்றங்கள் பணியாற்றவில்லை. ஆகவே இதற்கு கௌரவ நீதிபதிகளை நியமித்து தனிச் சட்டமே செய்வதா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### நீர்ப்பாசனத்துறையிலிருந்து காணாமற்போன நிலப் படங்கள்

* 204. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனத் தலைமை அலுவலகத்திலிருந்து Restricted Maps காணாமல் போனது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

---

* 101-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இதற்கு இடமில்லை.

### *Mercury lamps along Mount Road*

205 Q.—Thiru K. Vinayakam : Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(a) whether the entire Mount Road and upto the Parry's Corner would be lit up by powerful mercury vapour lamps; and

(b) if so, at what cost?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) ரூ. 19.5 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கப்படும்.

Thiru K. Vinayakam : Whereas mercury vapour bulbs are found to be very satisfactory, will the Government take steps to light all the main streets in the City of Madras at the expense of the Government instead of depending upon the Corporation of Madras?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, சென்னை நகரின் எல்லையில் இருந்து மவுண்ட் சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, ஈவினிங் பஜார், நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் நெடுஞ்சாலை ஆகிய சாலைகளின் வழியாகப் பாரி முனை வரை ரூ. 19.5 லட்சம் செலவில் தெருவிளக்கை, மேம்படுத்த செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்கள். ஏற்கெனவே ரூ. 13.5 லட்சம் தரப்பட்டு மர்மலாங் பாலத்தில் இருந்து மவுண்ட் சாலை மேம்படுத்தப் படுத்தப்பட்டுள்ளது. அதைப்பாரி முனை வரை நீட்டிக்க மேற்கொண்டு ரூ. 6 லட்சம் கேட்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

### புதுக்கோட்டையில் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி.

*206 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையில் கூட்டுறவுத் துறைக்கான பணிகளைப் புரிவதற்குரிய பயிற்சிப் பள்ளியை அமைத்துத் தரும் கருத்து அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** கூட்டுறவு முறையின் வளர்ச்சி குறித்து மாவட்டந்தோறும் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை அமைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டையில் இனிமேலாவது அத்தகைய ஒரு பள்ளியை அமைக்க யோசிப்பார்களா?

புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முன்பு இரயில்வே துறையை ஏற்றிருந்த திரு. பூனாச்சா அவர்கள் நம்முடைய அமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினர். அவர்கள் இறுதியாக பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் 'பச்சைக்கொடி' காட்டிவிட்டேன் சேலம் இரும்பாலைக்கு' என்று கூறினார்கள். இரயில்வே அமைச்சராக இருந்த அவர் 'பச்சைக்கொடி' காட்டிவிட்டேன் என்று சொன்னதால், கட்டாயம் சேலம் உருக்காலை வரும் என்று நாங்கள் தெரிந்துகொண்டோம்.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் தொழிற்சாலையை அமைப்பதுபற்றி இப்போது யோசித்து வருவதாகச் சொன்னார்கள். அது மிக அதிக நாட்களாக தாமதமாகிக் கொண்டே வருகிறதே. அதை உடனடியாக அமைக்க மத்திய சர்க்காரிடம் இந்த அரசு வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதனால் இந்தத் திட்டத்தைக் கொடுக்கலாம் என்று மத்திய அரசு நினைத்திருக்கலாம்.

**திரு. ஆலடி அருணா :** நாட்டில் இரும்புப் பற்றுக்குறை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது—அப்படி இருக்கிறபோது சேலம் இரும்பாலைத் திட்டத்திற்குக் காலதாமதம் காட்டப்பட்டு வருகிறது. இந்தக் காலதாமதத்திற்கு ஏதாவது குறிப்பிட்ட வேறு காரணங்கள் இருக்கக்கூடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** நம்முடைய மாநில அரசின் வாதமும் இதுதான். நாட்டில் இரும்புப் பற்றுக்குறை இருக்கும்போது புதிதாக இரும்பாலையைத் துவக்குவதில் தயக்கம் காட்டுவது தவறு என்று வற்புறுத்தி வருகிறோம். அடுத்து, மத்திய சர்க்கார் வடமாநிலங்களில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் முதலில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார்கள். நாம் பரவலாக சிறு சிறு தொழிற்சாலைகளைப் பல மாநிலங்களில் அமைக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி வருகிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய சர்க்கார் சேலம் இரும்பு-உருக்குத் தொழிற்சாலை சம்பந்தமாகக் காலதாமதம் செய்துவருவது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒன்றாகும். நானும், தொழில் அமைச்சரும் இந்தியப் பிரதமரைச் சந்தித்து இதுபற்றி வலியுறுத்தினோம். விரைவில் நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே அறிவிப்பு வரக்கூடும். இல்லையென்றால் அதற்குப் பிறகு எவ்வாறு நடந்துகொள்வது என்பது பற்றி அனைவரும் கலந்து ஆலோசிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** சேலம் இரும்பு உருக்காலை பற்றிய சர்ச்சை நீண்டநாளாக இருந்து வருகிறது. இங்கே ஏற்படுத்துவது என்றால் ஆந்திராவிலும் ஏற்படுத்தியாகவேண்டுமே என்கிற



அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசு தயக்கம் காட்டுகிறதா ? அப்படித் தயக்கம் காட்டினால் இந்த அரசு அதை எடுத்தே ஆகவேண்டும் என்பதை வற்புறுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் எந்தக் காரணங்களைக்கொண்டு தயக்கம் காட்டினாலும் நாம் கவலைப்படப்போவதில்லை. நம்முடைய உரிமையை நாம் அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்திக்கொண்டே இருப்போம்.

## ஏற்றுமதிப் பொருள்களை அதிகரிக்க திட்ட வாரியம்.

* 202. வினா.—**திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதிப் பொருளை அதிகரிப்பதற்காகத் திட்டவாரியம் (Planning Board ) அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. எஸ். அக்னிராஜு :** தலைவர் அவர்களே, நமது தமிழ் நாட்டில் ஏற்றுமதி செய்கின்ற பொருள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இருக்கிற தொடர்பு முறைகள் சரியாக இல்லாததே காரணம். ஆகவே இதை நல்லமுறையில் சீர்படுத்த இத்தகைய ஒரு போர்டு அமைப்பது பற்றி அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதுபற்றி கவனிக்க—ஸ்டேட் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் அட்வைசரி போர்டு ஒன்று ஏற்கனவே முதல் அமைச்சர் தலைமையில் இயங்கி வருகிறது.

**திரு. பி. வேலுசாமி :** புதியதாக டிசைன்களைப் புகுத்தி—ஏற்றுமதி உறுதியாக—அதிகமாக இருக்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைத்தறியைப் பொறுத்தவரையில் பயிற்சி நிலையங்கள் வைத்திருக்கிறோம். வெளிநாடுகளில் தேவைப்படுகிற டிசைன்களை அறிந்து அந்த டிசைன் பயிற்சியை இவர்களுக்கு அளித்து—உற்பத்தியாகிறவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இருந்து கரும்பு, சர்க்கரை ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துவிட்டது. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜாவா போன்ற இடங்களில் உள்ளவர்கள்

(இ) அப்படியானால் அதன் விபரங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மன்றப் பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கைகளில் ஐந்தாவதாக போதிய சம்பளம், அகவிலைப் படி உயர்வு சம்பந்தமாக ரெவின்யு போர்டுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது எந்த நிலையில் இருக்கிறது? அடுத்து நான்காவது இரண்டாவது கோரிக்கைகளாக ஊராட்சியைப் பொறுத்தவரையிலும் பஞ்சாயத்து, ரெவின்யூ என்ற இரட்டை ஆட்சியாக இருப்பதை மாற்றி இரண்டையும் ஒருங்கிணைத்து வில்லேஜ் கர்ணத்தைப் பஞ்சாயத்து செகரட்டரியாகப் போட்டு கிராமக் கர்ணம் பொறுப்பில் உள்ள ரிக்கார்டுகளை பஞ்சாயத்தினுடைய பொறுப்பிலே ஒப்படைக்கும்படியான திட்டத்தை ஏன் ரெவின்யூ போர்டு நிராகரித்தது என்பதை நிதியமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கிராம அலுவலர்களைப் பஞ்சாயத்துக்களுடைய காரியதரிசியாகப் போட்டு ஓட்டுக் கொடுக்க முடியாத மெம்பராக ஏற்படுத்துவது அவசியமல்ல. அதற்கான காரணங்கள் தேவையில்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள். முன்பு வெளி நாட்டிலிருந்து வந்த சிலர் சில குறிப்பிட்ட காரியங்களுக்காக இந்த ஏற்பாட்டை அமைத்தார்கள். ஆனால் இன்றைக்கும் அது தேவையாக இருக்கிறது. இருந்தாலும் மக்களுடைய உணர்வுகளுக்கும் அவர்களுடைய எண்ணங்களுக்கும் பிரதிபலிப்பாக இருக்கிற முறை ஊராட்சி முறையாகும். இன்னும் அந்த முறை தேவையாக இருக்கிறது என்ற காரணத்தினால்தான் அது நிராகரிக்கப்பட்டது. ஊதியம் முதலியவற்றைப் பொறுத்தவரையில் முதன்முறையாக அது சம்பளக் குழுவுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே அதுவும் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru K. VINAYAKAM : Sir, with regard to item No. 10 in the Paper placed on the table of the House, namely 'in the matter of appointment priority to be given to the legal heirs it is stated that the matter is under the consideration of the Government. Other things being equal if the heirs of the village officers satisfy the standards required for the post of a Village Officer, will the Government consider their case also?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The Government entirely agree with the suggestion of the hon. Member. Other things being equal, the heirs of the village officers would be given due consideration.

---

102-108-ம் பக்கங்களின் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





### பொன்னமராவதிப் பகுதியைக் கூற்றமாக்கல்

* 157. வினா.—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதிப் பகுதியைத் தனிக் கூற்றமாகவோ, (Taluk) துணைக் கூற்றமாகவோ, (sub-taluk) ஆக்கும் உத்தேசம் அரசுக்கு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப்பட்ட உத்தேசம் ஒன்றும் இல்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நிர்வாக நலனை முன்னிட்டும், மக்களுடைய நலத்தைக் கருத்திலே கொண்டும் பொன்னமராவதியைத் தனிக் கூற்றமாகவோ அல்லது துணைக் கூற்றமாகவோ ஆக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொன்னமராவதியை அப்படி வைப்பதுதான் நிர்வாகத்திற்கு இடைஞ்சலானது என்றும், இப்பொழுது இருக்கக்கூடிய முறை சௌகரியமாக இருக்கிறது என்றும் அங்குள்ள கலெக்டர் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

### தொழில் அபிவிருத்திக்கு மத்திய நிதி உதவி

* 195. வினா.—**திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் தேதியிலிருந்து 5-ந் தேதிவரை டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற நிதி அமைச்சர் திட்டக்குழு துணைத் தலைவர், நிதிக்குழுத் தலைவர் இவர்களைச் சந்தித்தாரா?

(இ) ஆம் எனில், தமிழகத்திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலுக்காக (Industries) அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) நமது மாநிலத்திற்கான மத்திய உதவியை அதிகப்படுத்துமாறும், மாநிலத்திலுள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கும்படி நிதி நிறுவனங்களுக்குக் கட்டளையிடுமாறும், திட்ட ஆணைக்குழுவிடம் குறிப்பாக வேண்டப்பட்டது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிலே சென்ட்ரல் செக்டாரிலே எந்த விதமான தொழிற்சாலையும் இல்லை. ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் திட்டக்குழுத் துணைத் தலைவர், நிதிக்குழுத்

தலைவர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியபொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்ட்ரல் செக்டாரில் தமிழ்நாட்டிலே குறைந்தது 100 கோடி ரூபாய் அளவுக்காவது தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்தினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு துணைக் கேள்விக்குப் பதில் சொல்லும் பொழுது கொஞ்ச நேரத்திற்கு முன்பாகக் குறிப்பிட்டார்கள். நெடு நாட்களாக நாம் வற்புறுத்தி வருவதும், நம்முடைய உணர்வுகளை மையமாகக் கொண்டதுமான சேலம் உருக்காலை அமைந்தே ஆகவேண்டும் என்ற முறையிலே போர்க் குரலிலே இந்த அரசாங்கம் பேசுகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சிலிருந்து உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, while answering the first part of the question the Hon. Minister has stated 'Yes'. So, may I know what was the amount requested by this Government, what was the amount allotted for industries by the Central Government and how much was provided for the private sector and how much for the public sector? Will the Hon. Minister be pleased to give such details?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இவைபற்றியெல்லாம் அடிக்கடி மத்திய அரசாங்கத்தைச் சந்தித்துக் கூறிக்கொண்டு வருகிறோம். இது காலங் கடந்த கேள்வி. ஏப்ரல் மூன்றாம் தேதியிலிருந்து 5-ம் தேதி வரையில் நிதியமைச்சரைச் சந்தித்ததைப் பற்றிய கேள்விதான் இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவாதங்கள் நடக்கிற நேரத்திலே இதைப்பற்றியெல்லாம் அவர்களுடைய கருத்தை விளக்கிச் சொல்லலாம். தொழில் மானியத்திலே விவாதிக்கலாம். அப்பொழுது உணவு நெருக்கடி இருந்தது. அது பற்றி அப்பொழுது அங்கே விவாதிக்கப்பட்டது. இதைத் தவிர வறட்சி நிவாரணத்திற்காகவென்று 17 கோடி. பெற்றதின் ஆரம்பமே அங்கேயிருந்துதான் தொடர்கிறது. அதுபற்றி விவாதிக்கப்பட்டது. தொழிற் துறையினைப் பொறுத்தவரையில் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன், இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பேங்க்ஸ் போன்றவையெல்லாம் நம்முடைய பொதுத் துறையிலே இருக்கிற தொழில்களைக் கலந்துகொள்ளவேண்டுமென்றும், சென்னை நகர மெட்ரோபாலிட்டன் ப்ராப்ளம்களுக்கு அதாவது கூவம் நதித் திருத்தியமைப்பு, சேரி ஒழிப்பு போன்ற பிரச்னைகளுக்கு பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் எந்த அளவிலே இன்ஷூரன்ஸ் நிறுவனம் பணம் கொடுக்கிறதோ, அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

THIRU K. VINAYAKAM : Whereas the Finance Minister has said that the Planning and Finance Commission have not given us what is due for us, will the Hon. Minister tell us where



exactly they made a mistake, what is the wrong arithmetic formula which they have adopted so that we got less than what is due for us and also how exactly are the Government going to tackle this problem with the Centre, to get the share that is due to us?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நாம் 575 கோடி ரூபாய் கேட்கிறோம். அவர்கள் இன்னும் 502 கோடிக்கு மேல் போக மறுக்கிறார்கள். நம்முடைய சில பிரத்தியேக நிலைமைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நிதி ஆணைக் குழுவிடம் சொன்னோம். அவர்கள் ஏதோ இலக்கணமாகக் கொண்டு, இத்தனை மைல் ரோடு இருக்கிறது, இத்தனை தொழிற்சாலைகள் இருக்கின்றன, இத்தனை பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் கணக்கிட்டு 'பாக்வார்டுநெஸ்ஸை' நிர்ணயிக்கிறார்கள். அந்த நிர்ணயத்தின் விளைவாக நமக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்று நாம் திருப்பித் திருப்பி வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு வருகிறோம். தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருவோம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியப் பேரரசு தனக்கு என்று இந்தியா முழுவதும் தொழில்களைத் துவக்குவதற்காக 3,190 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் நம் தமிழகத்திற்கு ரூ. 200 கோடியில் இருந்து ரூ. 250 கோடி வரை தொழில்களைத் துவக்குவதற்கு எல்லா வகையான நியாயமும் இருக்கிறது. சேலம் எஃகு இரும்புத் தொழிற்சாலை, சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவது ஆகிய அத்தனையையும் சேர்த்தால் கூட ரூ. 140 கோடிக்கு மேல் போகாது. ஆகவே, அத்தனை திட்டங்களையும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இணைக்க வேண்டுமென்று இந்திய சர்க்காரை நம்முடைய சர்க்கார் வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். சேலம் திட்டத்தையும், நெய்வேலி இரண்டாவது திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாக வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. எம். சுரேந்திரன் :** குறிப்பிட்ட மகாநாட்டிலே நமது ராஜ்ய தொழில் கொள்கை சம்பந்தமாக விவாதிக்கும்போது முதலாளிகளும் அரசாங்கமும் சேர்ந்து தொழில்களை அமைக்கலாம் என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களா? அது போன்ற திட்டம் விவாதிக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்போது உணவு நிலை பற்றித்தான் விவாதிக்கப்பட்டது. அரசாங்கமே பூராவும் ஏற்று நடத்தக்கூடிய பப்ளிக் செக்டார் என்று இருக்கிறது. தனியார்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாவட்டத்திற்கு ஒரு பயிற்சிப் பள்ளி என்கிற கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்போது கோவை, சேலம், வேலூர், காஞ்சி; தஞ்சை; மதுரை; நெல்லை; ஆகிய 7 இடங்களில் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. சென்னையில் ஒரு பயிற்சிப் பள்ளியும், ஒரு கல்லூரியும் இருக்கின்றன. புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள், தஞ்சைப் பயிற்சிப் பள்ளியில் படிக்க வாய்ப்பு இருக்கிறது.

*Lands owned by Srirangam Devasthanam*

* 207 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether Srirangam Temple Devasthanam in Tiruchirappalli owns about 67 acres of wet lands in Vengadathan Thuraiyur in Tiruchirappalli district;

(*b*) whether these lands are leased out to cultivating tenants in that village on agreement to measure out paddy yearly for temple use; and

(*c*) whether this year the aforesaid tenants gave paddy as per the lease agreement?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) ஆம்.

(இ) ஆம். இக்கோவிலின் பயனுக்காக 467 குவிண்டால், 91 கிலோ நெல் ஆண்டுக் குத்தகை ஏற்பாட்டின்கீழ் பயிரிடும் குத்தகைக்காரர்கள் 16 பேருக்கு மேற்சொன்ன நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(உ) இல்லை. குத்தகைக்காரர்கள் குத்தகையின் ஒரு பகுதியை மட்டுமே கொடுத்துள்ளனர்.

Dr. H. V. HANDE: Sir, in view of the fact that several temples are suffering due to the non-supply of paddy in required quantities, will the Government take stringent steps to see that whatever paddy that is due to the temples is supplied properly and what are the concrete steps that the Government are going to take to ensure that the paddy is supplied to these temples regularly?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, அப்படிக் குத்தகை நெல் அளக்காமல் இருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து நெல்லைப் பெறுவதற்கு அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியும் வசூலாகாமல் போனால் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதற்குச் சட்டம் இருக்கிறது. அதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே சட்டப்படி அதற்கு ஏற்பாடு இருக்கிற காரணத்தினாலே புதிதாக ஒன்றும் செய்வதற்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



கடல் நீரைக் குடிநீராக்கல்

* 208. வினா.—திரு. என் கிட்டப்பா

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து வெளிநாட்டு நிபுணர்கள் யாருடனாவது மாநில அரசு கலந்தாலோசித்துள்ளதா?

(இ) ஆமெனில், இத்திட்டம் செயல்படுத்தப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) கடல் நீரைக் குடிநீராக மாற்றுவது குறித்து நமது அழைப்பின்பேரில் 1964-ல் சென்னைமாநகருக்கு வந்த ஐக்கிய நாடுகள் வல்லுநர் குழுவைக் கலந்து அரசாங்கம் ஆய்வு செய்தது. நகரத்திற்குக் குடிநீர் வழங்குவதைப் பெருக்குவதற்காக இதைவிடக் குறைந்த செலவுள்ள பிற திட்டங்கள் நிறைவேற்றப்படும் வரையில் இத்திட்டத்தைத் தள்ளி வைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1964-ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த முயற்சியின்படி கடல் நீரைக் குடிநீராக ஆக்குவதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்று சொன்னார்களா? அது ஏன் ஒத்திவைக்கப்பட்டது? அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, 1964-ஆம் ஆண்டு யு.என். எக்ஸ்பர்ட் டீம் வந்து பரிசீலனை செய்தார்கள். அதற்காக வேண்டிய செலவு அதிகமாக இருக்கும் என்று புள்ளி விவரம் கொடுத்தார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தின்படி ஆயிரம் காலன்களுக்கு சராசரி 1.30 பைசா ஆகும். ஆனால் மின்சாரத்தைப் பயன் படுத்தி கடல் நீரைக் குடிநீராக்கினால், ஆயிரம் காலன்களுக்கு 2 ரூபாய் முதல் 4 ரூபாய்வரை செலவாகும் என்று சொல்லப்படுகிறது. எனவே செலவு இரண்டு பங்கு மூன்று பங்கு அதிகமாகும் என்ற காரணத்தினாலே தற்சமயத்தில் அந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு கிராம அலுவலர் சங்கம்

* 156. வினா.—திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாண்புமிகு முன்னாள் உணவு அமைச்சர் அவர்களைத் தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கப் பிரதிநிதிகள் 1967 டிசம்பர் திங்களில் சந்தித்து கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பத்தை கொடுத்தனரா?

துறையிலே தொழில்கள் இருக்கின்றன. இவை இரண்டுக்கும் மையமாக ஏன் ஜாயின்ட் செக்டார் என்று விடக்கூடாது என்பது தான் இந்த அரசாங்கத்தின் அழுத்தமான கருத்து. கொள்கைகளைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் இந்த வாதங்கள் கிளம்பியிருக்கின்றன. ஐம்பது கோடி ரூபாயில் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை நடக்கிறது என்றால், அதை அரசாங்கமே ஏன் ஏற்று நடத்தக் கூடாது என்று கேட்கிறார்கள். அதைக் காட்டிலும் குறிப்பிட்ட தொழில்களைத் தனியார் துறையும் நாமும் நிர்வாகத்திலே பங்கு பெறுகிற அடிப்படையிலே செய்யவேண்டியது இப்போது இருக்கிற குழப்பமான மிக்சட் எகானமியில் பொருளாதார அடிப்படையாக அமைந்திருக்கிறது. அதை அரசாங்கம் நழுவ விடுவதாக இல்லை.

### சேலம், தருமபுரி மாவட்டங்களுக்கிடையே வருவாய்த் துறை அலுவலர்கள் பிரிவினை

* 196. வினா.—திரு. க. முருகேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டம் பிரிந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் வருவாய்த்துறைப் பணியாளர்களை மட்டும் இவ்விரண்டு மாவட்டங்களுக்கிடையே பிரிவினை செய்ய அரசாங்கம் இன்னும் ஆணையிடாதது ஏன் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சேலம், தர்மபுரி மாவட்டங்களிடையே வருவாய்த் துறை அலுவலர்களை நிரந்தரமாகப் பிரித்துக் கொடுக்கும் கருத்துருவின் மீது அரசாணை எண் 417, வருவாய்த் துறை, தேதி 10—2—1970-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**திரு. க. முருகேசன் :** தலைவர் அவர்களே, இதனால் தர்மபுரியில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதைப்பற்றி அரசாங்கம் கவனித்ததா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு முடிவு வருகிற நேரத்திலே சில பேர் பாதிக்கப்பட்டதாகச் சொல்லுவார்கள், சில பேர் அனுகூலப்பட்டதாகச் சொல்லுவார்கள். தர்மபுரி மாவட்ட கலெக்டர், சேலம் மாவட்ட கலெக்டர், ரெவின்யூ இலாகா செயலாளர் தலைமையில் கூடி, இரண்டு பேரும் மன நிறைவு பெறும்படியான ஒப்பந்த அடிப்படையில்தான் இம்முடிவு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)**



### (2) அவையுரிமைக் கேள்வி.

நடவடிக்கைச் சுருக்க வெளியீட்டில் இருப்பதாகச் சொல்லப் படும் பிழைகள் குறித்து.

THIRU J. JAMES : Sir, I wish to raise a matter of privilege Rule 234 of our Assembly Rules says that an official report of the proceedings of the Assembly shall be published . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'பிரிவிலெஜ் பாட்டரை' இந்த அவையில் கிளப்புவதற்கு முன்னாலேயே பேரவைத் தலைவருக்கு அறிவிக்கவேண்டும்.

THIRU J. JAMES : It has been brought to my notice just now and I am bringing it to the notice of the Hon. Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவருக்கு முன் அறிவிப்பு கொடுக்காமல் நீங்கள் பிரச்சினையைக் கிளப்ப முடியாது. நீங்கள் முன் அறிவிப்பு கொடுத்து அது பிரிவிலெஜ் என்பதன்கீழ் வருகிறதா இல்லையா என்று நான் முடிவு கூறிய பிறகுதான் நீங்கள் கொண்டு வர முடியும்.

THIRU J. JAMES : I shall raise it and the Hon. Speaker may allow it and admit it for discussion the next day. Under our rules, privilege matter can be raised at any moment.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த நிகழ்ச்சி எதையொட்டியது என்ற விதியை மட்டும் படியுங்கள்.

THIRU J. JAMES : I can bring it to the notice of the Hon. Speaker. The Hon. Speaker may allow it or may not allow it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எந்த விதியின்கீழ் நோட்டீஸ் கொடுக்காமலே கேட்கலாம் என்று கூறுகிறீர்களோ,) அப்படி இருக்கிற அந்த விதியை மட்டும் படியுங்கள்.

THIRU J. JAMES : Proviso to Rule 184.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் புத்தகம் எந்தத் தேதி வரை திருத்தப்பட்டது என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

THIRU J. JAMES : Rules corrected up to 31—1—1968.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னிடம் மார்ச் 1969 வரை திருத்தப்பட்ட புத்தகம் இருக்கிறது.

THIRU J. JAMES : This rule has not been amended so far. This rule is in force now. It says :—

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice ".

I request.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House" இருக்கிறது. இந்த அவை நடைபெறுகிற நேரத்திலே உரிமை மீறப்பட்டிருந்தால் பேரவைத் தலைவருக்கு அறிவிப்பு கொடுக்காமலே எழுப்பலாம்.

THIRU J. JAMES: Proceedings of this House are recorded and published under rule 234 of our Rules. But the proceedings are incorrectly reported on 28-2-1970 and it has been brought to my notice only just now.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கூறுவதை பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வராமல் இந்த அவையிலே எழுப்ப முடியாது. இந்த அவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் மீறப்படுகின்ற உரிமைகளைத்தான், இன்று காலை 9 மணிக்குத் தொடங்கி 1½ மணிக்கு முடிகின்ற வரை நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலே ஏதாவது உரிமை மீறப்படுகின்ற நிலை இருந்தால் அதைச் சுட்டிக் காட்டும்போதுதான் பேரவைத் தலைவருக்கு முன் அறிவிக்கை கொடுக்காமல் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அதுதான் விதி. நேற்று நடந்த நிகழ்ச்சியை அறிவிக்கும் முறையில் தவறு நடந்திருந்தால் அதைப் பற்றி முன் கூட்டியே பேரவைத் தலைவருக்கு அறிவித்து விட்டுத்தான் இங்கே சொல்ல வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நான் சொல்வதை கொஞ்சம் கேட்க வேண்டும்.

The proviso says as follows :—

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice".

The matter has arisen during this sitting. The fact that it was recorded might be before this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு நான் மீண்டும் சொல்லுகிறேன். இன்று 4-ம் தேதி. இன்று காலை 9 மணிக்குத் தொடங்கி 1½ மணி வரை நடைபெறுகின்ற அவை நிகழ்ச்சியில் உரிமை மீறப்படுகின்ற நிலை ஏற்பட்டால் அதைச் சுட்டிக் காட்டுவதற்கு மட்டுந்தான் பேரவைத் தலைவருக்கு முன் அறிவிக்கையின்றி, 'ஸ்பான்டேனியஸ்' ஆக உறுப்பினர்கள் எழுந்து உரிமைப் பிரச்சினையை எழுப்பலாம். அதுதான் கிளை விதி. தாங்கள் கூறுவது அந்த விதமான நிகழ்ச்சி அல்ல. ஆகவே தங்களுக்கு நான் அனுமதி தர முடியாது.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதில் உள்ளது உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல. சபையில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை அறிவிப்பதில் கூட இனிஷியல்ஸ் மாறிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெயர்கள் மாற்றிக் கொடுககப்பட்டிருக்கிறது. அதனால் பெரிய தவறுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. மகாதேவன் பிள்ளை என்ற பெயர் ஜேம்ஸ் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இவ்வளவு சிரமப்பட்டு வந்து கலந்துக்கொண்டிருக்கும்போது பெயர்களை மாற்றுவது, இனிஷியல்லை மாற்றுவது போன்ற தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. தயவு செய்து இதைக் கவனித்து இனிமேல் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த ப்ரொவைஸோ எப்படித் திருத்தப்பட்டது என்பது தங்களுக்கு நினைவிருக்குமென்று நான் நம்புகிறேன். இதுபோன்று உரிமைப் பிரச்னை கொண்டுவரும்போது முன்கூட்டி எழுத்துமூலம் கொடுக்காமல் எடுக்கப்படக் கூடாது என்று முன்னால் இருந்த அமைச்சர் அவர்கள் எழுப்பி, அந்தத் தரப்பிலிருந்த நாங்கள் அப்படிக் கொண்டுவரக்கூடாது என்று எழுப்பி பின்னால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தத்திற்கு நீங்கள் கொடுத்த விளக்கம் நிற்கவேண்டுமென்பதற்காக இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அப்போது கூட நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவரும்போது கூட உங்கள் அனுமதி இல்லாமல் கொண்டுவர முடியாது.

The Speaker has got to waive notice. Suppose he says 'I am not prepared to waive notice', then no member can raise the matter.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியதை, நண்பர் அவர்கள் முன்பே சுட்டிக்காட்டியிருந்தால், இவ்வளவு நீண்ட விவாதம் ஏற்பட்டிருக்காது. மகாதேவன் பிள்ளையை ஜேம்ஸ் என்றும், 'எல்' என்ற இன்ஷியல்ஸ் 'என்' என்றும் அச்சடிக்கப்பட்டு விட்டது என்ற தவறுக்காகவும் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து இவ்வளவு நீண்ட நேரம் செலவழித்திருக்கவேண்டியதில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் தவறு சுட்டிக்காட்டப்பட்டிருந்தால், அலுவலகத்தில் உள்ளவர்கள் அதைத் திருத்திக்கொள்ள ஏதுவாக இருந்திருக்கும்.

### (8) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

**(அ) மதுரை வடக்கு தாலூகா குளமங்கலம் கிராமத்தில் போடப்பட்ட தடையுத்தரவால் ஏற்பட்டுள்ள பீதியும் பரபரப்பும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திருமதி கே. பி. ஜானகியம்மாள் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"மதுரை வடக்குத் தாலூகா குளமங்கலம் கிராமத்தில் ஊராட்சி மன்றத் தலைவருக்கும், ஒருசில விவசாயிகளுக்கும் நடந்த வாய்த் தகராறைக் காரணமாகக் கொண்டு 15-2-1970 அன்று அக்கிராமத்தில் 144 தடை உத்தரவு போட்டும், லாரியில் போலீஸ் கொண்டு இறக்கி முகாமிட்டுள்ளது. இதனால் கிராமத்தில் பொது மக்கள் நடமாடவும், அறுவடைக்குச் செல்லவும் முடியாது பீதியும், பரபரப்பும் அடைந்துள்ளார்கள். ஆகையால் இந்தப் பரபரப்பான பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டும்" என்று கோரியுள்ளார்கள்.

இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது, மேலும் நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து கூற வாய்ப்பிருப்பதால், இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

**(ஆ) கச்சத் தீவிலுள்ள புனித அந்தோனியார் கோவில் திருவிழாவிற்கு தமிழகக் கத்தோலிக்கர் செல்ல இலங்கை அரசு விதித்துள்ள கட்டுப்பாடு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத்தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத் தீவில் உள்ள புனித அந்தோனியார் கோவிலில் நடக்கும் திருவிழா வைபவத்திற்கு தமிழக கத்தோலிக்க மக்கள் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடு தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்தும் அவர்கள் புனித அந்தோணியார் கோவிலுக்கு வழக்கம்போல் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது." ஆகவே சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, இந்தியாவிற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்தக் கச்சத் தீவில் வருடா வருடம் மார்ச் மாதம் அங்குள்ள புனித அந்தோனியர் கோவிலில் திருவிழா நடப்பதும், தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான கத்தோலிக்கப் பெருமக்களும் மற்றவர்களும் அங்கு சென்று திருவிழாவில் பங்கு



கொள்வதும் வழக்கமாக நடந்து கொண்டு வருகிற ஒரு விஷயமாகும். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கச்சத் தீவில் உள்ள அந்தக் கோவிலுக்கு தமிழகத்தில் உள்ளவர்கள் செல்வதற்கு சிற்சில சங்கடங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. குறிப்பாக, அங்கு கள்ளக்கடத்தலைக் கண்டுபிடிக்க இலங்கை போலீஸார் சோர்ந்து வருகிறார்கள் என்ற முறையை வைத்துக்கொண்டு இங்கிருந்து எந்தத் தமிழரும் சுயமாக அங்கு போய் அந்தக் கோவிலில் பிரார்த்தனையில் கலந்து கொள்ளக் கூடாது என்ற நிலையை ஏற்படுத்தி இங்குள்ளவர்கள் அங்கு செல்லும்போது அநியாயமாகவும், அக்கிரமமாகவும் தடுக்கப்படுகிறார்கள் என்று மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. நேற்று பத்திரிக்கைகளில் பார்த்தோம். இங்குள்ள குருமார்கள் எல்லாம் அங்கு சென்று விட்டார்கள் என்றும் ஆனால் கோவிலிற்குச் சென்று வணங்கக் கூடிய மக்கள் செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும் பத்திரிக்கைகளில் பார்க்கிறோம். அந்தத் திருவிழா மார்ச் மாதம் அங்கு நடக்கும் போது பெருவாரியான மக்கள் செல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படிச் செல்லுகிறவர்கள் திருவிழாவைப் பயன்படுத்தி கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்றால், அது குறித்து அரசாங்கம் கண்காணிப்பு செய்யவேண்டியது நிச்சயம் அவசியமாகும். ஆனால் சாதாரணமாக கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை நடத்தி வருகிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் ஒரு கடமையாகும்.

இந்த கச்சத் தீவு மத்ய அரசுக்குச் சொந்தமாகயிருந்தாலும்சரி அல்லது கச்சத் தீவு யாருக்குத்தான் சொந்தம் என்ற உரிமை இன்னும் முடியாமல் இருந்தாலும்சரி கோவிலுக்குச் சென்று வணங்கிவிட்டு வருகிற உரிமையை தமிழக மக்களுக்கு இந்த அரசு வாங்கித் தரவேண்டும். இதுபற்றி முன்பு ஒரு முறை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த அவையில் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு அதை விரிவாக விவாதிக்காமல் நாம் விட்டு விட்டோம். அப்படி விரிவாக விவாதிக்காமல் விட்டுவிட்ட காரணத்தினால், மத்திய அரசு இதில் அதிகக் கவனம் எடுத்துக்கொள்ளவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, மத்திய அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதற்கு, கள்ளக்கடத்தல் போன்ற விஷயங்களை மட்டும் வெறும் காரணமாகச் சொல்லி கோவிலுக்குச் செல்வோரை தடுக்காமலிருக்க தமிழக அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவேதான் அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த கச்சத் தீவு பிரச்சினை உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் அது யாருக்குச் சொந்தம் என்பது நம்மைப் பொறுத்த வரையில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. அது நிச்சயமாக

[திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 4

நமக்குத்தான் சொந்தம் என்ற வகையில் நாம் வாதாடிக் கொண்டு வருகிறோம். அந்த உரிமையை நாம் வலியுறுத்திக் கூறிக் கொண்டு வருகிறோம். இது ஏதோ நமக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு தகராறான சூழ்நிலையை உருவாக்கும் என்ற அளவில் அல்ல. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே நல்ல நட்புறவு இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில்தான், அதே நேரத்தில் நம் உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை என்ற அளவில் கச்சத் தீவு நமக்குத்தான் சொந்தம் என்பதை வலியுறுத்தி வருகிறோம். இந்த அவையில் அதுபற்றி நாம் ஒருமுறை விவாதித்திருக்கிறோம். அதற்குப் பிறகும் மத்திய அரசிடம் அதை. வலியுறுத்தி நாம் எடுத்துக்கூறியும் எழுதியும் வந்திருக்கிறோம். இப்போது அங்கு அந்தோனியார் கோவில் திருவிழா வைபவத்திற்கு தமிழக கத்தோலிக்க மக்கள் செல்ல முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டு அரசாங்கம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து அந்த நிலை பற்றிய விளக்கங்களை அவர்களிடத்தில் கேட்டுக் கொண்டு இதுபற்றி மத்திய அரசுக்கு உடனடியாக எழுதி உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்ற நிலையை மட்டும் இங்கே நான் விளக்கி, ஆகவே அவையை ஒத்திவைத்து இதை விவாதிப்பதற்கு தேவை இல்லை என்ற கருத்தினைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து இதை விவாதிக்கவேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுகிற காரணத்தினால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### (இ) சிவாஜி சேனை தொண்டர்கள், பம்பாயில் தமிழர், தென் இந்தியர் கடைகளை, சிற்றுண்டிசாலைகளை இவற்றை தாக்கியதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. மார்டின் அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"2—3—1970-ல் பம்பாயில் முழு அடைப்பு நடத்திய சிவாஜி சேனைத் தொண்டர்கள் பம்பாயில் உள்ள தமிழர்கள் கடைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள். சங்கிலிப் பகுதியில் தமிழர்கள் மற்றும் தென் இந்தியர்கள் நடத்தும் ஹோட்டல் மீது சிவாஜி சேனைத் தொண்டர்கள் கல்வீச்சு நடத்தியுள்ளனர். ஹோட்டல்களின் பூட்டுகளை உடைத்து கொள்ளை அடித்துள்ளார்கள். தமிழ்ப் பெருமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பம்பாயில் பெரும் நெருக்கடியும் பதட்ட நிலைமையும் ஏற்பட்டுள்ளது" ஆகவே சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டுமென்று கோரியுள்ளார்கள்.



1970 மார்ச் 4] [பேரவைத் தலைவர்]

இது எப்படி அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, தமிழகம் நீண்ட பாரம்பரியங்களைக் கொண்ட தமிழகமாகயிருந்தாலும், தமிழகம் நல்ல வளம் கொழிக்கும் தமிழகமாகயிருந்தாலும், தமிழகம் வற்றாத ஜீவ நதிகளைக் கொண்ட தமிழகமாகயிருந்தாலும் (குறுக்கீடு)— இது முக்கியமான பிரச்சினை, எல்லாயிடத்திலும் தமிழர்களை அடிக்கிறான்—வற்றாத வளம் உள்ள வயல்களைக் கொண்டதாக தமிழகமாயிருந்தாலும், கடலுக்கடியில் நல்ல முத்துக்கள் வளமிருந்தாலும், பூமிக்கடியில் தங்கமும் பொன்னும் உடையதாக தமிழகமிருந்தாலும், சொந்த நாட்டுக்காரர்கள் இங்கு வாழமுடியாத நிலையில் வெளி மாநிலங்களுக்குச் செல்லவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். சொந்த நாட்டுக்காரர்கள் சுரண்டப்படுகிறார்களோ இல்லையோ ஆனால் தமிழக மக்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று பிழைப்பு நடத்தவேண்டிய நிலையில் இருப்பதை யாரும் மறுக்கமுடியாது. குறிப்பாக இதை இந்த அரசு நன்றாக அறிந்திருக்கும் என்று கருதுகிறேன். இவ்வாறு சென்றவர்களில் சிலர் இன்று மராட்டியத்தில், குறிப்பாக பம்பாயில் வேலை செய்து வருகிறார்கள். அங்கு சாதாரணமான வேலை செய்து கொண்டுவரும் அந்த மக்கள், இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், அங்கு தோல் பதனிடுதல், தோலைப்பதனிட்டு செருப்பு செய்தல் இவைகள் போன்ற சாதாரண வேலைகளைச் செய்துகொண்டு அங்கு குடியிருக்கிறார்கள். அவ்வாறு பம்பாயில் குடியிருக்கும் அந்த மக்களுக்கு அடிக்கடி, தொடர்ந்து ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, பம்பாயில் வாழும் சிவசேனைத் தொண்டர்கள் தீங்கிழைப்பது இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. மராட்டிய, மைசூர் எல்லைத் தகராறில் தமிழர்கள் தாக்கப்படுவதைப் பார்க்கும்பொழுது உண்மையில் எல்லாத் தமிழர்களும் கவலை கொள்ள வேண்டியதாகயிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதமே தொடங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே.

**திரு. டி. மார்டின் :** ஒரு மாநிலத்திலுள்ளவர்கள் மற்றொரு மாநிலத்தில் சென்று, பிழைப்புக்காகச் சென்று தொழில் நடத்துவதற்கு அரசியல் சட்டத்தில் பூரண உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பிற மாநிலத்திற்கு செல்லும் தமிழர்கள், மக்களாகவே மதிக்கப்படாத நிலைமை, சாதாரணமாக 'சாட்ல்ஸ்' என்று சொல்வார்களே அந்தப் பொருளில் மதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக அந்த மாநிலத்தில் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று தெரிந்திருந்தும், சிவசேனைத் தொண்டர்கள் இந்தவிதமாகத் தொல்லை கொடுப்பார்கள் என்று தெரிந்திருந்தும், அங்கு

சரியான போலீஸ் பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லை என்ற கருத்து தமிழகத்தில் இருக்கிறது. இது சாதாரண பிரச்சினை அல்ல. தமிழகத்திலே எல்லோருக்கும் வாழ்வளிக்க முடியவில்லை, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையிருப்பதால், வேலை தேடிச் செல்லும் மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டிய பொறுப்பு இந்த ஆட்சிக்கு உண்டு. இதுபற்றி சபையை ஒத்தி வைத்து விவாதிப்பதால், அது மராட்டிய அமைச்சரவைக்கு எட்டும், தமிழர்களை எடுத்ததற்கெலோம் அடிக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ள அந்த இடத்தில், எடுத்ததற்கெல்லாம் அடிக்க வேண்டாமென்ற எண்ணம் ஏற்படும். ஆகவே, இந்த நடவடிக்கைகளைப்பற்றி விவாதிக்க, சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, வளமான தமிழகத்திலேயிருந்து வெளிநாடுகளுக்கு வேலைத்தேடிச் சென்று வருகின்ற நிலைமை 1967-க்குப் பிறகு ஏற்பட்டது அல்ல, அதற்கு முன்பே இந்தப் புனிதமான அத்தியாயம் ஆரம்பமாகிவிட்டது, பல ஆண்டுகளுக்கு முன்பே, சுமார் 100, 150 ஆண்டுகளுக்கு முன்பே அது ஏற்பட்டு விட்டது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். ஆனால் அப்படி வேலைத் தேடிச் சென்று கொடுமைக்கு ஆளாகின்றவர்கள் நம்முடைய தமிழர்கள், மற்றும் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்கின்ற கருத்தினையும் திரு. மார்டின் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

நம்முடைய மாநிலத்திலேயிருக்கின்ற வேறு மாநிலத்தைச் சேர்ந்த சிறுபான்மையினரையும், அதேபோல் வேறு மாநிலத்திலிருக்கின்ற நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த சிறுபான்மையினரையும், முறையே நாமும் நேச மனப் பான்மையோடு நடத்த வேண்டும், அதுபோன்று மற்ற மாநிலத்திலுள்ள மக்களும் நேச மனப்பான்மையுடன் நடத்த வேண்டுமென்ற கொள்கையில் நாம் கிஞ்சித்தும் பின்னேக்கிச் செல்லவில்லை. அந்த அடிப்படையிலே தான் அண்மையில், மைசூர் மாநிலத்திலே, நம்முடைய தமிழர்களுக்கு இடையூறு ஏற்பட்ட நேரத்திலே உடனடியாக இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது. அதைப்போலவே நாங்கள் எதிர்கட்சியாக இருந்த நேரத்திலே, பம்பாயிலே சிவசேனையின் சார்பாக தமிழர்கள் அல்லது தென்னாட்டு மக்கள் துன்புறுத்தப்பட்ட நேரத்தில் இங்கிருந்து ஒரு தூதுக்குழுபோல, விசாரித்து அறிவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அங்கே சென்றிருக்கிறார்கள். ஆளுங்கட்சியாக ஆனதும், அதுபற்றி விசாரிப்பதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த



பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கே அனுப்பப்பட்டார்கள். இவைகளெல்லாம் இந்த அவையிலேயுள்ளவர்களுக்கு நன்கு தெரியும். ஆனாலும் தொடர்ந்து, அடிக்கடி இந்த நிலைமை மராட்டிய மாநிலத்திலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏற்பட்டு வருகிறது. அந்த நிலைமைகள் இனியும் ஏற்படாதவண்ணம் அங்கிருக்கின்ற தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மராட்டியத்தினுடைய முதலமைச்சரவர்களுக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்கின்ற முறையில் நான் எழுதுவேன். அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன். எனவே அந்த அளவில் கூறி, அவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்கத் தேவையில்லை என்று கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப்பிறகு, இப்பொருள்குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டிய முக்கியத்துவம் இல்லை என்று கருதி, அனுமதி தர மறுக்கிறேன்.

## (4) கவன ஈர்ப்பு

**திருமயம் தொகுதி கோட்டூர் பகுதியில் ஏழை அரிசன விவசாயிகளுக்கு சாகுபடி செய்ய பாதுகாப்பு அளித்தல் குறித்து.**

அடுத்து, 41-வது விதியின்கீழ் புலவர் பொன்னம்பலம் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"திருமயம் தொகுதி, கோட்டூர்ப்பகுதியில் ஏழை அரிசனங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுச் சாகுபடி செய்துவந்த புன்செய் தரிசு நிலங்களையும், சீர்திருத்தம் செய்யமுயன்ற புன்செய் தரிசு நிலங்களையும் செம்மைப் படுத்த விடாமலும், மீண்டும் உழவிடாமலும் ஒரு சிலர் தடுத்துத் தொல்லை கொடுத்து வருகின்றமை குறித்தும், அவ்வேழைமக்கள் உழுது சாகுபடி செய்யத்தக்க வகையில் பாதுகாப்பளிக்க வேண்டியது குறித்தும்".

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கோட்டூர்க் கிராமத்தில் சர்வே எண்கள். 63/2, 261/5, 6 ஆகியவற்றிலுள்ள 20.43 ஏக்கர் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலத்தை 'தர்க்காஸ்து' (ஒப்படை மனு) விதிகளின் கீழ் 1965-ல் திருமயம் தாசில்தார் 7 அரிசனங்களுக்கு ஒப்படை செய்தார். அதேபோன்று, சர்வே எண். 63/1-ல் உள்ள தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலம் 5.72 ஏக்கர். 1969-ல் 4 அரிசனங்களுக்கு ஒப்படை செய்யப்பட்டு அவர்களுக்குத்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1970 மார்ச் 4

அடுத்தபடியாக, நமது நிதி அமைச்சர் அவர்கள் 1966-67-வது ஆண்டையும் 1969-70வது ஆண்டையும் ஒப்பிட்டு, மறைமுகமாக காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத பல திட்டங்களையும் நிறைவேற்றி இந்த நாட்டில் பல முன்னேற்றங்களை திராவிட முன்னேற்றக் கழகம் செய்துவிட்டது என்ற கருத்துப்படக் கூறியிருக்கிறார்கள். அதனை அவர்கள் எடுத்துக்காட்டுவதன் மூலம் விவசாயத் துறையை முதன் முதலில் அவர்கள் உதாரணமாகக் கொடுத்திருக்கிறார்கள். 1966-67-ம ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 57.9 லட்சம் டன் மாத்திரம் தான், ஆனால் 1969-70வது ஆண்டில் 63 லட்சம் டன் தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆக 5 லட்சம் உபரியாக உற்பத்தியை இந்த அரசு பெருக்கியிருக்கிறது என்பதனை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கு அன்னார் அவர்கள் கூறுகிற காரணத்தைப் பார்ப்போமானால், பயிரிட்ட நிலம் 1966-67ம் ஆண்டில் 5.27 லட்சம் ஏக்கர், 1969-70ம் ஆண்டில் 17.08 லட்சம் ஏக்கர். ஐ.ஆர். 8 விதை 1966-67-ல் பயன்படுத்தவேயில்லை. ஆனால் 1969-70-ல் 7 லட்சம் ஏக்கரா நிலத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதோடு நைட்ரஜன் உரம் 1966-67ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டதைவிட 4½ மடங்கு அதிகமாக 1969-70ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதோடு பூச்சி மருந்து உபயோகத்திலும் அம்மாதிரியாக ஏறத்தாழ 7 மடங்கு அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டதன் காரணமாக 5 லட்சம் டன் உணவு தானியம் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு, வாய்ப்பு ஏற்பட்டது என்றெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் அத்தனையும் உண்மையானவை என்று சொன்னால், அதிக உணவு தாவுய உற்பத்தி 5 லட்சம் டன் அல்ல, 1966–67-ம் ஆண்டு உற்பத்தியானதைவிட மூன்று மடங்கு உற்பத்தியாவதற்கு உள்ள வகை இருக்கிறது. ஆக, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்கள் அத்தனையும் உண்மைக்கு மாறாகத்தான் இருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1966-67ம் ஆண்டில் செலவு செய்திருக்கிற தொகை ஏறத்தாழ ரூ. 12 கோடியானால், 1969–70-ல் ரூ. 15 கோடி செலவு செய்திருக்கிறார்கள். அதாவது, ஏகதேசம் 25 சதவிகிதம் அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், உற்பத்தியை எடுத்துக்கொண்டால் 10 சதவிகிதம் தான் உற்பத்தி அதிகமாக செய்யப்பட்டிருக்கிறது. ஆக, இந்த நிலையில் 1966-67ம் ஆண்டைவிட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எந்தவிதமான மாறுதலையும், உற்பத்திப் பெருக்கத்தையும் செய்ய முடியவில்லை என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், இந்த அரசாங்கத்தில் ஒரு பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. 1966-67ல் காங்கிரஸ் ஆட்சியில் இந்த மாநிலத்தை ஆளுவதற்காக 8 அமைச்சர்கள்தான் இருந்தார்கள். இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 13 அமைச்சர்களாக அது உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்தப் பெருக்கத்தை நாம் ஒப்புக்கொள்கிறோம். அதையெல்லாம் விட



1970 மார்ச் 4] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இன்னொரு மாறுதலும் தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் பல கல்லூரிகள் திறக்கப்பட்டன. கல்லூரிகளெல்லாம் மாணவர்கள் படிப்பதற்காக திறக்கப்பட்டன. ஆனால், இன்று தி.மு.க. ஆட்சியில், பத்திரிகைகளில் பார்க்கிறோம், கல்லூரிகள் மாணவர்கள் படிப்பதற்காக மூடப்பட்டு வருகின்றன என்ற செய்தியை நாம் பார்க்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லப்போனால், சென்னை கலைக் கல்லூரி கடந்த சில மாதங்களாக அடைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று கூறிகிறார்கள் என்று சொன்னால், மாணவர்கள் படிப்பதற்காக கல்லூரி அடைக்கப்பட்டிருக்கிறது. இந்த முன்னேற்றம் தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர உருப்படியான முன்னேற்றம், மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான முன்னேற்றம், சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கான முன்னேற்றம் தி.மு.க. ஆட்சியில் இதுவரையில் ஏற்படவில்லை என்பதனை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த வரவு-செலவு அறிக்கையில் 1966–67-ம் ஆண்டில் ரூ. 200 கோடி வருவாய் என்றும், 1970-71ம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 300 கோடி வருவாய் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே 1966-67-ம் ஆண்டைவிட 50 சதவிகிதம் வருவாய் கூடியிருக்கிறது. ஆனால் 50 சதவிகிதம் கூடியிருக்கிற வருவாய்க்கேற்ப, மக்களுக்கு வசதிகள் கூடியிருக்கின்றனவா என்றால், நிச்சயமாக இல்லை. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், மக்கள் வசதிகள் கூடுவதற்குத் தேவையான திட்டங்களில் இப்பொழுது 50 சதவிகிதம் தொகை செலவு செய்யப்படவில்லை. அதுமட்டுமல்ல. உருப்படியான திட்டங்களுக்காக இந்தப் பணம் செலவு செய்யப்படவில்லை என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் 1966-67ல் ரூ. 640 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மதிப்பீட்டில் ரூ. 604 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்தத் துறைக்கு. ஆக, 1966-67ம் ஆண்டைவிட இந்த ஆண்டில் ஏகதேசம் 36 லட்ச ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. 50 சதவிகிதம் கூடுதலாகக் காட்டுவதற்குப் பதிலாக, மொத்தத்தில் ரூ. 36 லட்சம் குறைத்துத்தான் இந்த ஆண்டில் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபோன்று, மருத்துவம், மீன்வளம், பாசனத் திட்டங்கள் போன்ற திட்டங்களுக்கு 1966-67ம் ஆண்டைவிட இந்த ஆண்டில் குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற சித்தாறு-பட்டணங்கால் திட்டத்திற்கு, கடந்த ஆண்டில் ரூ. 87 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 35 லட்சம் மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் இந்த ஆண்டு இந்தத் திட்டம் முடிவடையும் என்று கூறியிருக்கிறார்கள். இந்தக் குறைந்த தொகையில் இந்த ஆண்டு எப்படி இந்தத் திட்டம் முடியும் என்ற சந்தேகம் இல்லாமல் இல்லை. ஒரு வேளை

தற்காலிகப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. நிலங்கள் ஒப்படை செய்யப் பெற்ற 11 அரிசனங்களும் 1969 ஆகஸ்டு திங்களில் நிலத்தில் பயிரிடத் தொடங்கினர். ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் அரசாங்கத் தரிசு நிலங்களாகும்; இதற்கு முன்னர் பயிரிடப்படாத நிலங்களாகும்.

கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவரின் தலைமையில் கோட்டூர்க் கிராமத்தின் ஆயக்கட்டுதாரர்கள், இந்த நிலங்கள் கோட்டிக் கண்மாய் ஏரி எதிர்வாயில் அமைந்துள்ள நிலங்களென்றும், அவை கோட்டிக் கண்மாய்க் குளத்தில் நீரை வடிப்பதற்கு வாரியாகப் பயன்பட்டு வருகின்றனவென்பதாலும் அவர்கள் மேற்படி ஒப்படையை எதிர்த்தார்கள். ஊராட்சியிடம் நிலை பெற்றுள்ள சர்வே எண் 63/1-ல் உள்ள தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலம், ஊராட்சியினரிடம் கலந்து பேசாமலும் ஊராட்சிக்குள்ள உரிமையைத் திரும்பப் பெறாமலும் ஒப்படை செய்யப்பட்டுள்ளதாகக் கோட்டூர் ஊராட்சித் தலைவர் மேலும் மறுப்புத் தெரிவித்தார்.

அந்தக் கிராமத்து மக்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையே ஏற்பட்ட மனக் கசப்பின் காரணமாக அக்கிராமத்தின் அமைதி நிலைமை பாதிக்கப்படுமென்பதால், இந்த ஒப்படை குறித்து விரிவான முறையில் விசாரணை செய்யப்பட்டு இறுதியாக முடிவு செய்யப்படும் வரையில் எவரும் அந்த நிலத்திலே நுழையக்கூடாதென்று இருதரப்பினரையும் புதுக்கோட்டை, மாவட்ட உதவி ஆட்சித் தலைவர் எச்சரித்தார். ஊராட்சியிடம் உரிமை நிலை பெற்றுள்ள நிலமாகிய சர்வே எண். 63/1ல் உள்ள நிலம் (தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலம்), ஊராட்சிமன்றத்தினரைக் கலந்து பேசாமல் திருமயம், தாசில்தாரால் வாரிய நிலை ஆணை 15. A -ன் கீழ் தற்காலிக அடிப்படையில் நான்கு அரிஜனங்களுக்குக் கவனப் பிசகாக ஒப்படை செய்யப்பட்டமையால் உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் 17—9—69-ம் நாளிட்ட தனது நடைமுறைக் கோப்பு 4. 22054/69-ல் எல்லாத் தற்காலிக ஒப்படைகளையும் ரத்து செய்தார். மற்ற ஒப்படைகள் சரியாக உள்ளனவா என்றும் அவர் ஆராய்ந்து வருகிறார்.

அக்கிராமத்தில் இப்போது அமைதி நிலவுகிறது. தற்போது தொல்லை ஏதும் இல்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக இந்தக் கோட்டூர்ப்பகுதியில் 1965-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட நிலங்களை 1967-ஆம் ஆண்டிலிருந்து சாகுபடி செய்து வந்திருக்கிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் தலைமையில் நல்ல விசாரணை நடத்த ஆவன செய்ய அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



### (5) 1970-71-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அங்கே, இப்பொழுது ஏற்பட்ட குழப்பத்தையும், சச்சரவையும் தீர்த்து, அமைதி உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதுபற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது 20 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். 3 மணி நேரம்தான் இருக்கிறது. ஒன்பது நிமிடங்கள்தான் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வரும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இம்மன்றத்தின் முன்னால் வைத்திருக்கின்ற 1970-71வது ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதல் 13 பக்கங்களிலும் மத்திய அரசு மாநில அரசுக்கு இழைத்து வருகின்ற அநீதிகளைப் பற்றி ஒரு நீண்ட பட்டியல் தொகுத்துக் காட்டியுள்ளார்கள். இத்தனை அநீதிகளையும் மத்திய அரசு மாநில அரசுக்கு விளைக்கின்றது என்று சொன்னால், அதற்கு நமது மாநில அரசும் கூட்டு நிற்கிறது என்பதை நாம் மறக்க இயலாது. மத்திய அரசோடு நமது மாநில அரசு கழிந்த சில மாதங்களாகக் கொண்டிருக்கின்ற உடன்பாடு, அது தூய்மையான உடன்பாடு என்று கூறுவதற்கில்லை. ஆக, இப்படிப்பட்ட உடன்பாட்டின் காரணமாகத்தான் தமிழக மக்களுக்கு மத்திய அரசு எண்ணொணாத துயரை அளித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, நிதியமைச்சரவர்கள் தனது அறிக்கையிலே கூறுகின்றார்கள். 1969 முதல் 1974 வரையிலான ஐந்தாண்டுக் காலத்திற்கான பற்றாக்குறை மானியமாக வழங்குகின்ற நிலையில், வடமாநிலங்களான பிஹார், உத்தரப் பிரதேசம், குஜராத், பஞ்சாப், ஹரியானா; மத்தியப்பிரதேசம்; மகாராட்டிரம் போன்ற மாநிலங்களுக்கு, சுமார் 1,300 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது, ஆனால் நம்முடைய தமிழகத்திற்கு வெறும் 33 கோடி ரூபாய் மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக மத்திய அரசு மாநிலத்தை ஒரு மாற்றாந்தாய் கொள்கையில் நடத்தி வருகின்றது என்ற அறிகுறியை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. நாம் இன்று ஒத்துக்கொள்கிறோம். இதுவரையிலும் நமது மாநிலத்தில் இந்த நாட்டு மொழிப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இந்த நாட்டில் தமிழகத்தில் மறைமுகமாக மத்திய அரசு இந்தியை திணித்துக்கொண்டு வருவதை நாம் உணர்கிறோம். இத்தனை அநீதிக்கும் நமது மாநில அரசுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் ஏற்பட்டிருக்கிற 'அன்ஹோலி அலையன்ஸ்' தான் காரணம் என்பதனை நான் தைரியமாக இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆகவே, எத்தனையோ தீமைகளையும், அநீதிகளையும் மத்திய அரசு தமிழக மக்களுக்குச் செய்திருந்தாலும் கூட, அத்தனைக்கும் தமிழக அரசு தான் பொறுப்பு என்பதனை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

[திரு. எம். எஸ். மணி] [1970 மார்ச் 4

அப்படிப்பட்ட காரியம் எதுவும் செய்யவில்லையே. திறமையாக, மணலிலே, கொஞ்சம் அறிவை உபயோகித்துச் செய்யலாம் என்பதைக் காட்டியிருக்கிறோம்.

நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசும்போது, மத்திய சர்க்காரோடு ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள் என்றார்கள். ஆனால் வரவு செலவுக் கணக்கில் நிதி அமைச்சர் மத்திய சர்க்காரை தாக்கிப் பேசியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். அணைக்கிற போது அணைக்கவேண்டும், அடிக்கிறபோது அடிக்க வேண்டும். நம் முதல் அமைச்சர் அதைத் திறமையாகச் செய்வார் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு பாட்டுக்கூட உண்டு. அடிக்கிற கைதான் அணைக்கும் என்று. சினிமாக்களிலெல்லாம் பார்ப்பீர்கள். இது சாதாரண உண்மை. இதைக்கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை. நாங்களும் ஐந்து வருஷமாகச் சொல்லியிருக்கிறோம். அப்படி உங்களால் வாங்க முடிந்ததா? இப்பொழுது வாங்கியிருக்கிறார், வேண்டிய பணத்தை. ஒரு வார்த்தை பாராட்டிச் சொன்னீர்களா? அதுதான் அண்ணாவிடம் இருந்த தன்மை. எதிர்க் கட்சிக்கு நல்ல மதிப்புக் கொடுப்பது. மாற்றான்தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்னவர் அண்ணாதான். திறமையாகப் பணம் பெற்றார்கள். அதைப் பார்த்தாவது, பயிற்சி பெற்று, எதிர்காலத்தில் தப்பித் தவறி ஆட்சிக்கு வந்தால், நீங்களும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் (சிரிப்பு).

இன்னொன்று சொல்லுகிறார்கள். 25 எம். பி.க்கள் இருக்கிறார்களே என்னோடு வரட்டும் என்று. எதற்காக உங்களோடு வரவேண்டும். நாங்கள் 25 பேர்கள் வெற்றி அடைந்திருக்கிறோம். எங்களுக்கு ஒரு கட்சி இருக்கிறது. அது ஆணையிடுகிறது. செய்கிறோம். எங்களோடு வரட்டும் என்றால், எதற்காக? ஏன்? எதற்காக வருவது? எதற்காக உங்களோடு வருவது? உங்கள் ஆட்கள் இருக்கிறார்கள், தீர்மானம் கொண்டு வரட்டும். நாங்கள் 25 பேர்கள் அந்தக் காரியத்தை, நல்ல காரியம் என்றால் ஆதரிப்போம்.

திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். 1962-ல் இந்த மன்றத்திலே பேசும்போது, சேலத்தில் இரும்பு இருக்கிறது. இரும்புத் தொழிற்சாலை வைக்க வேண்டும் என்று சொன்னோம். அப்பொழுது தொழில் அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் சொன்னார், எந்த சேலத்தைச் சொல்லுகிறீர்கள்? அமெரிக்காவில் இருக்கும் சேலத்தையா என்று அப்பொழுதெல்லாம் கேலி செய்தார்கள். சேலத்திற்கு நாங்கள் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவாக இருக்கவேண்டும்.

எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். [illegible]சன் சிறுவனாக இருந்தபோது உங்கள் தலைவர்கள் மேடைகளில் பேசும்போது, தேனாறு, பாலாறு ஓடும், காங்கிரஸ் ஆட்சிக்கு



1970 மார்ச் 4] [திரு. எம். எஸ். மணி]

வந்தால் என்றார்கள். அப்பொழுது இந்த வெள்ளைக்காரர்கள் போகட்டும் என்றோம், தேனாறு, பாலாறு ஓடும் என்கிறார்களே என்று. ஓட வேண்டாம், நின்றதா? நல்ல பாலையாவது கொடுத்தார்களா? இந்த 'டோண்ட் மில்க்' என்பதையே நீங்கள்தானே கண்டுபிடித்தது. ஆகவே, சட்ட மன்றத்திலே நீங்கள் செய்கிற காரியம் ஒன்றாகவும் வெளியிலே செய்கிற காரியம் வேறாகவும் இருக்கிறது. தங்கக் கட்டுப்பாடு கொண்டுவந்தார்கள். இங்கே பல்லாயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டார்கள். அதை எதிர்க்க வேண்டும் என்று சொன்னோம். எதிர்த்தார்களா? இல்லை. அதற்கு மாறாகக் கடன்களை நம் பேரில் பற்றுவைத்துவிட்டு, இங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கி, வசூல் செய்ய நமக்குப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலும், நம்முடைய முதல் அமைச்சருடைய சாமர்த்தியத்தால் அதையும் வஜா செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) இரண்டு, மூன்று நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன்.

ஜனநாயக சோஷலிஸம் என்று ஆவடி மாநாட்டிற்குப் பிறகு பேசினார்கள். நானும் நான்கு நாட்களாகப் பார்க்கிறேன். யாராவது சொல்லுவார்களா என்று, யாரும் இல்லை. அதையே மறந்துவிட்டார்கள். அதைப்பற்றி ஒருவர்கூடக் குறிப்பிடவில்லை.

தமிழ்நாடு என்ற பெயரை பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் வைத்துக்காட்டினார்கள். மற்றும் கல்லக்குடி பெயர் மாற்ற வெற்றி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கப் பார்க்க உங்களுக்குப் பொறாமையாக இருக்கிறது. எதற்கெடுத்தாலும் "சோறு கிடைக்குமா, சோறு கிடைக்குமா?" என்று கேட்கிறீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, அந்தச் சோற்றுக்குத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டீர்கள்.

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, எந்த நேரத்தில் எதைப் பேசவேண்டும் என்று உங்களுக்குத் தெரியவில்லை. எதையெடுத்தாலும் சோறு சோறு என்றுதான் சொல்கிறீர்கள்.

அடுத்தபடியாக, தஞ்சாவூரில் பெரியாருடைய சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையின்கீழே சில வாசகங்கள் இருக்கின்றன. நீங்கள்தானே அந்தச் சிலையைத் திறந்து வைத்தீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். நாங்கள் பெரியார் அவர்களை 'தந்தை' என்றுதான் சொன்னோம். ஆனால் நீங்கள், "எங்கள் தந்தை, எங்கள் தந்தை" என்று நீங்கள் ஒன்றாக உங்களோடு இருக்கும்போது சொல்லிக்கொண்டீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அன்று அவர் உங்களைத் திட்டியதையும் உங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. எம். எஸ். மணி:** பெரியார் அவர்கள் எங்களை உற்சாகப்படுத்தத்தான் அப்படிப் பேசியிருப்பார்கள்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1970 மார்ச் 4

தேர்தலுக்கு முன்னால் அதை முடிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு குறைந்த தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதோடுகூட 1968-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சித்தாறு—பட்டணங்கால் திட்டத்தோடு நிப்பரப்பு—வலதுகரை திட்டம் இணைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று அறிக்கையிலே காணவில்லை. அதன் விவரங்கள் தெரியவில்லை.

அதோடு, அடுத்தபடியாக படி அரிசி திட்டம், கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதை போலத்தான் இருக்கிறது. முதலில் 3 படி என்று சொன்னார்கள், பிறகு ஒரு படி என்று சொன்னார்கள், மறுபடியும், கோவைக்கும், சென்னைக்கும் என்று சொன்னார்கள். தேர்தல் விளம்பரத்திற்காக மட்டுமல்ல, இந்த அவையில் முன்னாள் உணவு அமைச்சரும், இன்னாள் நிதி அமைச்சரும் நிச்சயம் கூறினார்கள். ஆனால், இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. தங்களால் இயலவில்லை என்று ஒரு வேளை அதற்காக வருத்தம் தெரிவித்தால் கூட, அதை நாங்கள் ஏற்போம் ஆனால், இந்த அறிக்கையில் கூட அதைப் பற்றி ஒரு வரி கூறியிருக்கிறார்கள். "அதே சமயத்தில் சமுதாயத்தின் எளிய பிரிவினருக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளிக்கும் சீர் நல்கும் திட்டத்தையும் நாங்கள் தொடர்ந்து நீடித்துள்ளோம்" என்று சொல்லியிருக்கிறார். அது எங்கே இருக்கிறது? எத்தனை பேருக்குக் கொடுக்கப்படுகிறது. விவரம் ஒன்றும் இல்லை. ஆகவே, இந்த நிதி நிலை அறிக்கை ஏமாற்றத்தை அளிக்கும் ஒரு திட்டமாக இருக்கிறது என்று சொல்லி முடிக்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். நல்லது செய்வது அனைத்தையும் பாராட்டவேண்டும். அந்தப் பண்பைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவராக இருந்த அறிஞர் அண்ணா எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் மாற்றாரைப் பாராட்டினார். அவர்கள் மறைந்த பிறகு இன்றைய தினம் மாற்றார்கூட அவரைப் பாராட்டுகிறார்கள். அண்ணா எதிர்க் கட்சியினரை மதித்தார்கள். நாட்டிலுள்ள எதிர்க் கட்சியினரெல்லாம் அண்ணாவை இன்றைக்கு மதிக்கிறார்கள். அதே போல் ஏழை எளியவர்கள், பாட்டாளிகளின்மீது பரிவோடு அன்போடு நடந்து கொண்டார்கள். இன்றைக்கு அவர்களுடைய மறைவுகுறித்து இவர்கள் அழுதுகொண்டிருக்கிறார்கள். ஆகவே, யார் எதைச் சொன்னாலும், நல்ல கருத்துக்களைப் பாராட்ட வேண்டும். இங்கே பேசிய எதிர்க் கட்சித் தலைவர்கள், பட்ஜட்டில் ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னார்கள். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது 200 கோடி ரூபாய்தான் வருமானம். ஆனால் இன்றைய தினம் 300 கோடி ரூபாய் வருகிறதே, ஆகவே வரி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். போன ஆண்டு 47 வயதாக இருந்த



1970 மார்ச் 4] [திரு. எம். எஸ். மணி]

வருக்கு இந்த ஆண்டு 48 வயதுதான்; அடுத்த ஆண்டு 49 ஆகத் தான ஆகும். ஆக இருக்க இருக்க உயர்ந்துகொண்டே வருகிறது. வளரும் சமுதாயம் அதிகமாக ஆக, வியாபாரம் பெருகப் பெருக, வரி உயர்ந்து கொண்டே போகிறது. வருமானம் அதிகம் வரும். இந்தச் சாதாரண உண்மையைக்கூட நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றால் வருத்தப்படுகிறேன். அது மட்டுமல்லாமல், எவ்வளவு வரி அதிகமாகிறது என்று நண்பர் காசிராமன் குறிப்பிட்டார்கள். இன்றைய தினம், விளையாத பகுதிகளை விளைவிக்க, நஞ்சை நிலமாக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே, நிலங்களிலிருந்து கூடுதலாக வருமானம் கிடைக்கிறது. நிலங்கள் அதிகம் ஆக ஆக வருமானங்களும் அரசாங்கத்திற்கு அதிகமாகக் கிடைக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நிலத்திற்கு நிதி அமைச்சர் உச்சவரம்பு கொண்டுவந்தார்கள். ஆனால் அந்த உச்சவரம்பைப்பற்றிப் பேசும்போது, எதிர்க் கட்சித் தலைவர், 'எங்கள் தலையிலேயே போடுகிறீர்களே, நகரத்திலுள்ளவர்கள் தலையிலும் போடுங்களேன்" என்றார். நல்ல கேள்வி வரவேற்கிறோம். 15 ஏக்கர் என்பதுபோல, நகரத்திலும் ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும், ஒரு ஆளுக்கு ஒரு வீட்டிற்குமேல் கிடையாது என்று. திடீரென்று சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அதையும் விரைவில் செய்வார் என்று நினைக்கிறேன். (திரு. கருத்திருமன்: ஹியர், ஹியர்) அதை நாங்கள் வரவேற்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சி கொறடா பேசும்போது குறிப்பிட்டார்கள். வீராணம் ஏரி, கூவம் நதிக் திட்டம் இவையெல்லாம் சாதாரணத் திட்டங்கள் என்றார். இந்தச் சாதாரணத் திட்டங்களை 20 ஆண்டுகளாக உங்களால் செய்ய முடியவில்லையே. ஏன் செய்யவில்லை? சாதாரணத் திட்டங்கள் என்று சொல்லுகிறார்கள். 20 ஆண்டுகளாகச் செய்ய முடியாத திட்டங்கள். வீராணத்தின் மண்ணை எங்கே போடுவது என்கிறார். கூவத்தின் மண்ணை எங்கே போடுகிறது? எடுத்து, பக்கத்தில் அண்ணா சமாதிக்குப் பக்கத்தில் மணலிலே ஒரு பெரிய தோட்டம் வளர்த்திருக்கிறோம். போய்ப் பாருங்கள். எவ்வளவு அழகாக இருக்கிறது. திருச்சியிலிருந்து வந்த ஒரு காங்கிரஸ் நண்பர், "போன மாதம் இல்லை; இப்பொழுது குன்று, பெரிய மலைகளெல்லாம் இருக்கிறதே" என்றார். குன்றுகள் வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குன்றுகள் வளர்ந்திருக்கின்றன.... .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தானாகவா? பணத்தைப் போட்டு முளைத்ததா?

**திரு. எம். எஸ். மணி:** அதுதான் எங்கள் செயல். (குறுக்கீடு) சொற்றுக்கு வருகிறேன். ஆட்சி உங்கள் கையில் இருந்தபோது,

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ. க்களுக்கு பத்து ரூபாய் உயர்வு கொடுத்ததை எல்லோரும் பாராட்டுகிறார்கள். நான் அன்றைக்கு இந்தச் சபையைவிட்டு வெளியே போனதும், பலர் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி எனக்குக் கைகொடுத்தார்கள். ஆனால் நீங்கள் இந்த உயர்வைப்பற்றி என்ன சொன்னீர்கள் ?" ஆ, இந்தப் பணமா, பிச்சைக்காரக் காசு" என்றெல்லாம் சொன்னீர்கள். நீங்கள் பணக்காரர்கள் அப்படிச் சொல்லலாம். ஆனால் நீங்கள் அதை செய்தீர்களா என்பதுதான் கேள்வி. என். ஜி. ஓ.-க்களுக்காக இப்போது 6 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் எல்லாம் 'எப்பொழுதும் இந்த ஆட்சி இருக்க வேண்டும்' என்று சொல்கிறார்கள், வாழ்த்துகிறார்கள். (சிரிப்பு)

உங்களுடைய பதவி பறிபோனதற்குப் பிறகுதான், "ஆஹா, பார்த்தீர்களா, தலைக்கு எண்ணெய்கூட இல்லை" என்றெல்லாம் சொல்கிறீர்கள். (சிரிப்பு) அதை நாங்கள் அப்போதே சொன்னோம். நீங்கள் அதைக் கவனிக்கவில்லை. இன்றைய தினம் மாணவர்களுக்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தர வேண்டுமென்று சொல்கிறீர்கள்.

அடுத்தபடியாக, சமீபத்திலே சென்னையில் ஒரு குழாயில் பாம்பு வந்தது, பாம்பு வந்தது என்று சொல்லி வருகிறீர்கள். யார் அதைப் பார்த்தார்கள்? ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களை அழைத்து வந்து காட்டினீர்களா ? ஏதோ ஒரு செத்த பாம்பை எடுத்து வைத்துக்கொண்டு சேலத்திற்கு ஓடினீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குழாயில் பாம்பு வரவில்லையா ?

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, அது என்னுடைய தொகுதியாகும். அதைப்பற்றி . . . .

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. One hon. Member is in possession of the House and the hon. the Leader of the Opposition has got a right to contradict him and there ends the matter and the Chair is watching the delierations. How can a third person, without the permission of the Chair, butt in and speak? Is it in order?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பைப்பிலே பாம்பு வந்தது என்று சொன்னார்கள். பாம்பு பைப்பிலே வரவில்லை. பாம்பு உங்கள் பத்திரிகையிலேதான் வந்தது.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். பாம்பு வந்ததாகச் சொல்லப்படும் இடம் போரிங் பைப் உள்ள இடம். அதன் அடியில் செக் வால்வு இருக்கிறது. பாம்பை அடித்து, அதை எடுத்துக்கொண்டு சேலம் மகாநாட்டிலே





காண்பித்து இன்றைக்கு பாம்புப் படம் காண்பிக்கும் அளவிற்கு உங்கள் நிலை இறங்கிவிட்டது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாங்கள் வளருகிறோம், மேலும் மேலும் வளருகிறோம் என்பதைப் பார்த்து உங்களுக்குப் பொறாமையாக இருக்கிறது. நீங்கள் இந்த மன்றத்தில் 50 பேராக இருந்தீர்கள். அதிலே 7 கூட போய் விட்டது. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நண்பர் பூவராகன் அவர்கள் முன்னடி வந்து விடுவார்கள். இப்பொழுதே பாருங்கள், அவர் சிரித்த முகத்தோடு இருக்கிறார்கள், பாருங்கள் (அவையில் பெரும் சிரிப்பு) சாதாரணக் காரியத்தைக்கூட நீங்கள் பொறுப்பில் இருந்தபோது உங்களால் செய்யமுடியவில்லை. நாட்டு மக்களுக்கு நல்லதைச் செய்யும் வகையில் நமது நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொண்டுவந்ததற்காக அவரைப் பாராட்டி, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பி.எஸ். எல்லப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்தை எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறோம், அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்கும் எனக்கும் ரொம்ப தூரம். உச்ச வரம்பு என்று சொன்னார்களே அதைப்பற்றிமட்டும் இரண்டொரு விஷயங்களைப் பேச நான் ஆசைப்படுகிறேன். முன்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று காங்கிரஸ் ஆட்சியிலே சொன்னார்கள். அதற்கு என்ன அர்த்தம் ! 'நீங்கள் எல்லாம் சர்வ ஜாக்கிரதையாக இருங்கள். என்ன என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அதை உடனே செய்து கொள்ளுங்கள்' என்றுதான் அர்த்தம். அப்படியே அதற்கு வேண்டிய காரியங்கள் அத்தனையும் உடனடியாகச் செய்யப்பட்டுவிட்டன. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு வந்த பிறகு இதுவரை யாராகிலும் 5 சென்ட் நிலமாகிலும் பரம ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்ததாகத் தெரியவில்லை. சர்க்காருடைய நிலத்தில் வீடு கட்டிக்கொண்டிருக்கக் கூடியவர்கள் இப்பொழுது கோர்ட்டும் கையுமாகத்தான் இருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், 'கைவிளக்கைப் பிடித்துக்கொண்டு பாழும் கிணற்றில் இறங்குகிறோம்' என்று வள்ளலார் அவர்கள் கூறினார்களே, அதைப்போலத்தான் இருக்கிறது.

எந்த நிலத்தை எடுத்து, யாருக்குக் கொடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. யாரிடத்திலும் நிலம் இருப்பதாகத் தெரியவில்லை. இதுவரை அப்படி ஏழைகளுக்குக் கொடுத்ததாகத் தெரியவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியில் 'சூளைமேடு எஸ்டேட் ஜமீன்' என்று இருக்கிறது. இதுவரை அந்த எஸ்டேட்டிலிருந்து கால் காணி, அரை காணி என்ற அளவிலாவது கொடுத்ததாகத் தெரியவில்லை. அந்த எஸ்டேட் நிலங்கள் எல்லாம் யார் மேல் இருக்கிறது ? யார் பயிரிடுகிறார்கள் ? அதன் சொந்தக்காரர் யார் என்பது எல்லாம் தெரிய

வில்லை. நிலம் இருக்கிறது. சொந்தக்காரர் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. இந்த மாதிரியான நிலைமையில் ஜனங்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி உண்டு பண்ணிவிட்டீர்கள். "ஆஹா, பாருங்கள், இனி யாருக்கும் கஷ்டமில்லை. எல்லா மக்களுக்கும் ஏக காலத்தில் நன்மை கிடைக்கும். உச்சவரம்பு கொண்டுவந்துவிட்டோம்". என்று சொல்லிவிட்டீர்கள். நீங்கள் இந்த உச்சவரம்புத் திட்டத்தை எப்படிக் கொண்டுவரப் போகிறீர்கள் என்பது பயங்கரமாக இருக்கிறது. எல்லோரும் இதைப்பற்றிப் பேசுகிறார்கள், புள்ளிவிவரம் எல்லாம் காண்பிக்கிறார்கள். எனக்கு அப்படிப்பட்ட புள்ளிவிவரம் எல்லாம் தேவையில்லை. எனக்குத்தான் நேரடியாக எல்லாம் தெரிகிறதே. இப்போது இருக்கப்பட்ட ஏழைகளுடைய விஷயத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. மிகவும் பின்னடைந்துள்ள வன்னியர்களுக்கோ, ஹரிஜனங்களுக்கோ நிலம் கிடைக்கவில்லை. நீங்கள் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்பு கொண்டுவருவதில் மகிழ்ச்சிதான். ஆனால் சொன்னால் போதுமா, செய்தால் தீருமா என்று சொல்வார்களே, அப்படி இது உடனடியாக நடக்கக்கூடிய காரியமா என்று கேட்க விரும்புகிறேன். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் என்று போட்டால் போக வேண்டிய இடத்திற்கு நிலச் சொந்தக்காரர்கள் போவார்கள். அது வருவதற்குள் இந்தச் சர்க்கார் போய் வேறு சர்க்கார்தான் வரவேண்டும். காங்கிரஸ் இருபது ஆண்டுகளாகச் சொல்லிவந்தும் ஒன்றையும் காணோம். ஏழைகளுடைய நிலைமை அப்படியேதான் இருக்கிறது. உடனடியாக இதைச் செய்யலாம் என்ற திட்டம் இருக்கிறது. ஆனால் இந்தத் திட்டம் நிறைவேறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, கூடுமானவரையில் இருக்கப்பட்ட சர்க்கார் நிலங்களை யாவது உடனடியாக அந்தந்தப் பகுதிகளிலுள்ள அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து, அந்தந்தப் பகுதியிலுள்ள நிலங்களை அந்தப் பகுதிகளிலுள்ள நிலமில்லாத மக்களுக்குப் பிரித்துக் கொடுக்க சிறந்த நடவடிக்கைக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எல்லோரும் சொல்கிறார்கள், கம்யூனிஸ்டு வந்தாலும் கூட செல்வந்தர்களுடைய நிலையை யாராலும் அசைக்க முடியாது என்று சொல்கிறார்கள். எல்லோரும் தமிழர்கள்தான். இங்கே இருக்கிறவர்கள் ஜப்பான் நாட்டில் இருந்து வந்தார்களா? சீனா, அமெரிக்கா நாட்டில் இருந்து வந்தார்களா? இந்த நாட்டிலேயே உள்ளவர்கள்தான். இந்த நாட்டின் பண்பாட்டைத் தெரிந்தவர்கள்தான்.

கூடுமானவரையில் என் காலத்தில்—எனக்குத் தெரிந்து—நல்லது நடக்கவேண்டும் என்பதுதான். எனக்கு 2 வருஷம்தான் பீரியட். அதற்குள் ஏதாவது நல்லது நடக்காதா, மக்கள் எல்லப்ப பாகவதர் காலத்தில் நடந்தது என்று சொல்லிக்கொள்ள மாட்டார்களா என்றுதான் நான் பார்க்கிறேன்.





இப்போதே என் தொகுதியை எடுத்துக்கொண்டால் யாரும் என்னைக் கூப்பிடுவதாக இல்லை. ஆனால் நான் தான் அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால் ஓட்டோடிக் கொண்டிருக்கிறேன். ஒரு வண்டியிலே இரண்டு மாடு என்றால் இரண்டு மாடும் சேர்ந்து போனால் தான் வண்டி ஒழுங்காக ஓடும். என் தொகுதியை எடுத்துக் கொண்டால் இரண்டு எம்.எல்.ஏ. அந்த மாடு ஒரேயடியாக ரேஸ் குதிரை கணக்கா இழுத்துக்கொண்டு ஓடுகிறது. என்னைக் கீழே தள்ளி இழுத்து ஓடுகிறது— (சிரிப்பு) அந்தச் சேங்கன்றைவிட்டு விடக் கூடாது என்று நானும் அதன் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறேன். (ஒரு குரல் : அந்த மாட்டின் பெயர் என்ன ?) அதை நான் சொல்ல வேண்டும் என்பது இல்லை. காரணம் எல்லோருக்கும் என் தொகுதி தெரியும்.

நவம்பர் மாதத்தில் அடித்த மழை காரணமாக என்னுடைய தொகுதியில் 9 கிராமங்கள் மண் மேடிட்டுப்போய்விட்டன. விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைச் செப்பனிட 50 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என்பது எல்லாம் எழுதிப்போட்டு 4 மாதங்களாகின்றன. யாரும் அங்கே வந்து பார்த்ததாகவே தெரியவில்லை. விவசாயத்தைப்பற்றிப் பேசுகின்றார்கள். அடா, அடா, அடா அந்தப் பேச்சை அப்படியே நாள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம்போல் இருக்கிறது. பேசிப் பயன் என்ன? எந்தவிதமான உதவியும் கிடைப்பதாகக் காணோம் இதில் இருந்தாவது சூடு பிறக்குமா என்று பார்க்கிறேன். அந்தக் கிராமங்களுக்கு உடனடியாக நன்மை செய்யவேண்டும்.

மற்றபடி பட்ஜெட்டைப்பற்றிப் பலர் பேசுகிறார்கள். நான் அதற்குள்ளே போகவே இல்லை. எப்படி இருந்தால் என்ன? "நல்லதைக் கண்டால் அதை நாயகனுக்கு நல்குவேன்" என்கிறபடி, நல்லது இருக்குமானால் மக்கள் பயன் அடையப்போகிறார்கள். அவர்கள் பயன் அடையவேண்டும் என்பதுதானே நம் லட்சியம். நானும் பார்க்கிறேன்—இந்தக் கட்சியிலும் சரி, அந்தக் கட்சியிலும் சரி—செய்த காரியங்களையேபற்றிப் பேசுகின்றார்களே தவிர இனி செய்யவேண்டிய காரியங்கள் என்ன? அவற்றைப்பற்றிப் பேச வேண்டாமா? இனி செய்யவேண்டியவைகளைப்பற்றி யோசிக்காது பழையவற்றைப் பேசுவது எல்லாம் கதையாகப் போய்விட்டது. (சிரிப்பு)—(மணி அடிக்கப்பட்டது).

பார்த்தீர்களா? மணி அடித்தாகிவிட்டது. ஒன்பது நிமிஷத்திலே ஒரு தாலுக்கா சம்பந்தப்பட்டது எல்லாவற்றையும் பேச முடியுமா? பதினைந்து நிமிஷம் கொடுங்களேன். என்ன குறைந்து விடப்போகிறது? மற்றவற்றை அரிசன மானியத்தின்மீது நான் பேசிக் கொள்கிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் பதினைந்து நிமிஷமாவது இனிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

13,500 குழாய்க் கிணறுகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் மறுக்க முடியுமா? 25,000 கிணறுகள் வெட்டி முடித்திருக்கிறோம் மறுக்க முடியுமா? 15,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தியிருக்கிறோம் மறுக்க முடியுமா? 1 லட்சத்து 70 ஆயிரம் பம்ப் செட்டுகள் ஏற்படுத்தியிருக்கிறோம் மறுக்க முடியுமா? நாங்கள் ஒன்றும் செய்யவில்லை, நீங்கள் செய்து வைத்ததைத்தான் நாங்கள் நடத்திக்கொண்டிருக்கிறோம் என்று பிரசாரம் செய்கிறீர்கள். அவர்களைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன் நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். இந்த ஆண்டு மின்சார அபிவிருத்திக்காக 21 கோடி ரூபாய் அளவிலே திட்டம் தீட்டியிருக்கிறோமே, மறுக்க முடியுமா? உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையிலே ஏற்கனவே இருந்ததைவிட 6 லட்சம் டன் உயர்த்தியிருக்கிறோமே அதை மறுக்க முடியுமா? விவசாயத்திற்கு வருடமொன்றுக்கு 85 ஆயிரம் டன் ஆக இருந்ததை 1 லட்சத்து 30 ஆயிரம் டன்னாக உயர்த்தியிருக்கிறோம். உங்கள் காலத்திலே இருந்த நிலைமை என்ன? உரத்திற்காக விவசாயிகள் தோளிலே சாக்கைப் போட்டுக்கொண்டு கடைவீதி கடைவீதியாக அலைந்தார்களே, அதை மறந்து விட்டீர்களா? நீங்கள் கேட்க வேண்டிய இடத்திலே கேட்டு வாங்கிக் கொடுக்கவில்லை அதனால் அவர்கள் தொல்லைப்பட்டார்கள், அந்த விவசாயிகள் இன்னும் உங்களை மறந்துவிடவில்லை.

உங்கள் காலத்திலே பட்டா மாறுதலுக்காக மனுப்போட்டால் எத்தனை வருடங்கள் ஆகும். 10 வருடங்கள், 20 வருடங்கள் ஆகும். ஆனால் இப்பொழுது இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு மனு நீதி நாள் என்று சொல்லி நல்ல திட்டங்களை வகுத்து அதிகாரிகள் கிராமங்களுக்கு வந்திருந்து விவசாயிகளுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று கேட்டு ஆவன செய்துகொடுக்கிறார்கள். உங்கள் காலத்தில் கிராம மக்கள் தாலுகா அலுவலகத்திற்கு வந்தார்கள். ஆனால் இப்பொழுது அதிகாரிகள் கிராமங்களுக்குச் செல்கிறார்கள். உடனடியாகக் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்கிறார்கள். இருபது ஆண்டுகளாகப் பட்டா மாறுதல் செய்யாததை ஒரே நாளில் செய்தோம். இதையெல்லாம் பாராட்டவில்லை.

விலைவாசி உயர்வு உயர்வு என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான்கூட எதிர்பார்த்தேன். பிரதான எதிர்கட்சியாக உள்ளவர்கள் இப்பொழுது சட்டமன்றக் கூட்டத்தில் இங்கு இருக்கமாட்டார்கள், மறியல் செய்து சிறையிலே இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. காரணம் அவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்திருப்பார்கள். விலைவாசிகள் உயர்ந்ததற்குக் காரணம் சென்ற ஆண்டு மொரார்ஜி தேசாய் மத்திய அரசிலே 90 கோடி ரூபாய் அளவில் நோட்டு அச்சடித்தார்களே, அதன் காரணமகாத்தான் இப்பொழுது விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்று நம்மையே பார்த்து மக்கள் கேட்பார்களே நீங்கள்தானே நோட்டு அச்சடித்தீர்கள் அதனால்தானே விலைவாசிகள் உயர்ந்துவிட்டன என்று கேட்பார்களே என்று நினைத்துத்தான் அவர்கள் அப்படிச் செய்ய





வில்லை என்று நினைக்கிறேன். 138 பேர்களாக இருந்து 50 பேர்களாக ஆகிவிட்டோம், அடுத்த ஆண்டிலே 5 ஆகக் குறைந்துவிடுமோ என்ற பயத்தால் நீங்கள் விலைவாசிப் போராட்டத்தை நடத்தவில்லை என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய நீண்ட நெடு நாளையக் குறைகளை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று உங்களிடம் பல முறைகள் சொல்லிப் பார்த்தார்கள். நீங்கள் செய்யவில்லை. ஆனால் இந்த அரசு விழாக்கடன், மருத்துவசெதி, திருமணக்கடன், ஆய்வூதியக்கடன் எல்லாவற்றையும் ஆசிரியகளுக்கு அளித்திருக்கிறது. அதற்காக நீங்கள் பாராட்டவில்லை.

சேலம் உருக்காலையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. அப்படி ஆரம்பிக்கும்பொழுது செங்கம், திருவண்ணாமலை, போளூர், திருப்பத்தூர் இந்த இடங்களில் நிறைய இரும்புக் கனிவளங்கள் இருக்கின்றன. அதையும் ஆராய்ந்து பார்த்து வெட்டியெடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* **திரு. கோ. பாரதிமோகன்:** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாக இந்த பட்ஜெட் மீது என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். மொத்தமாக இந்த பட்ஜெட்டினுடைய அம்சத்தைப் பார்க்கிறபொழுது மொத்த வருமானத்தில் 80% கிராமப்புறங்களிலிருந்து வருகிறது. மீதம் இருக்கக்கூடிய 20% தான் இதரத் துறைகளிலிருந்து கிடைத்துக்கொண்டிருக்கிறது. அப்படியானல் தமிழகத்தினுடைய அஸ்திவாரமான பொருளாதாரம் கிராமப் பொருளாதாரம் ஆகும் இந்த 80% என்பதை அடிப்படையாக வைத்துப் பார்க்கிற காலத்தில் கிராமங்களிலே வேலையில்லாமல் இருப்பவர்கள், தினசரிக் கூலிக்காரர்களாக இருக்கிறவர்கள் 40%. இதைத் தவிர சிறு நிலக்காரர்கள், சாகுபடியாளர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் நீக்கிப் பார்த்தால் பெரிய நிலச்சுவான்தார்கள் சிறுபகுதியினர் இருக்கிறார்கள் என்பது தெரியவரும். இந்த உச்சவரம்புச் சட்டத்தைக் காங்கிரஸ்காரர்கள் பிரகடனப்படுத்திய காலத்திலேயே சில விதி விலக்குகள் அளித்துவிட்டார்கள். அந்த விதிவிலக்குகளினாலேயே இன்றைய தினம் நீலகிரி மாவட்டம், ஏர்க்காடு சப் தாலுகா போன்ற இடங்கள், ஏறத்தாழ 20 ஆயிரம் பொது டிரஸ்டுகள் வைத்திருக்கக்கூடிய சுமார் 2½ லட்சம் ஏக்கர் நிலங்கள் இவையெல்லாம் அதிலே சேராது. இதைத்தவிர கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமாக இருக்கிற லட்சக்கணக்கான ஏக்கர்கள் அந்தக் கணக்கிலே சேராது என்ற முறையிலே அவர்கள் செய்துவிட்டுப் போனார்கள். இப்பொழுது 15 ஏக்கர் என்று குறைத்திருந்தாலுங்கூட அந்த நிலங்கள் கிடைக்காது. உண்மையாகவே இந்த 15 ஸ்டாண்டர்டு

[திரு. கோ. பாரதிமோகன்] [1970 மார்ச் 4

ஏக்கர் என்ற கொள்கை நிறைவேற்றப்படவேண்டுமானால் 1959-ம் ஆண்டிலேயே காங்கிரஸ் அரசாங்கம் பிரகடனம் செய்திருக்கக் கூடிய காலத்திற்கு முன்னாலேயே இருக்கக் கூடிய பினாமி ஏற்பாடுகளை, நியாயமற்ற மாற்றங்களை எல்லாம் செல்லுபடியாகாது என்று அறிவிக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நிலங்கள் மிச்சம் இருக்கும். 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் இன்றைய தினம் சாகுபடியில் இருக்கிறது. உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் 23 ஆயிரம் ஏக்கர் நிலங்கள்தான் வந்தன. ஆனால் அந்த 23 ஆயிரம் ஏக்கரிலே 10 ஆயிரம் ஏக்கர்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியிருக்கிற 13 ஆயிரம் ஏக்கரும் கோர்ட்டிலே தாவாவிலே வழக்கிலே இருக்கிறது. 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் இருக்கக்கூடிய நிலத்திலே 23 ஆயிரம்தான் கிடைத்தது என்று சொன்னார்கள், அதிலே கூட பத்து ஆயிரம் ஏக்கர்தான் வந்திருக்கிறது, பாக்கி 13 ஆயிரம் கோர்ட்டிலே தாவாவிலே இருக்கிறது. இந்த நிலையில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்ச வரம்பு கொண்டுவருவதால் ஜீவநாடியாக, இதிலே கவனிக்க வேண்டியது என்னவென்றால் எல்லாவிதமான விதி விலக்குகளையும் ரத்து செய்யவேண்டுமென்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். இதிலே மிகவும் அழுத்தமாக நாம் இருந்தாக வேண்டும். அப்படிச் செய்யாமல் 15 ஏக்கர் என்று குறைத்துவிடுவதாலே பயன் கிடைக்காது. கோயில், மடங்கள், கரும்புத்தோட்டங்கள், பழத்தோட்டங்கள் போன்ற இவைதவிர பொது டிரஸ்டுகள் 20 ஆயிரம் இருக்கின்றன, அவற்றிற்குச் சொந்தமான நிலங்கள், நீலகிரி மாவட்டத்திலும், ஏர்க்காட்டிலும் இருக்கக்கூடிய நிலங்கள் இவையெல்லாவற்றையும் இந்தச் சட்டத்தின்கீழ்க் கொண்டுவருவதற்கு இந்தச் சட்டத்திலேயே வகைசெய்யவேண்டும். தனி நபர் என்பதைக் குடும்பத்திற்கு என்று வகைசெய்யாவிட்டால் எந்தவிதமான பயனும் இருக்காது என்பதை என்னுடைய கட்சியின் சார்பிலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட மன்றத் தொடர்கூட்டத்திலே 1959-ஆம் ஆண்டிற்குப் பிறகு செய்திருக்கக் கூடிய எல்லாவிதமான பாகப்பிரிவினைகளும் செல்லுபடியாகாது என்று இந்த அமைச்சரவை அறிவிக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசக்கூடிய நேரத்திலே இந்தச் சரியான அறிவிப்பு வெளியிடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அந்த முறையில் செய்வதன் மூலம்தான் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமல் படுத்த முடியுமே தவிர, அதற்கு வேறு வழி இல்லை என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, கிராமப் புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் நீடிக்கிறது. அதற்காக 10 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டுமென்பது எங்கள் கட்சியின் கருத்தாகும். இந்த பட்ஜெட்டில் ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பத்து கோடி ரூபாய் ஒதுக்கினால் அதைக் கொண்டு பல தொழில்களை ஏற்படுத்தி ஏராளமான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். இந்த முறையில் ஏற்பாடு செய்வது நல்லது.



1970 மார்ச் 4] [திரு. கோ. பாரதிமோகன்]

நகரப் புறங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறம் இருக்க, தொடர்ச்சியாக குழந்தைகள் படித்து வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகப் படிப்பு, சட்டக் கல்லூரி, உயர் நிலைப் பள்ளிப் படிப்பு என்று படித்துவிட்டு ஏராளமானவர்கள் வெளி வந்து கொண்டிருக்கும் நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. இந்தப் பிரச்சினை சாதாரணமான பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினையைத் தமிழக அரசு மட்டும் தீர்க்கமுடியாது. தமிழக அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக ஒரு கமிஷன் நியமித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான வழிவகைகளை ஆராயும் நிலையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய மூலப் பொருள்கள், கனிவளம் போன்றவற்றை எல்லாம் கணக்கிட்டு, சரியான திட்டத்தை ஏற்படுத்தி திட்டமிட்டு அமல் படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது எங்கள் கட்சியின் கருத்து. தமிழக அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கிழக்குத் தஞ்சைக்கு மட்டும் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. திரு. ராஜகோபாலாச்சாரி அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த காலத்தில் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். அது தவறு என்று கூறினோம். இப்போது கீழ்த் தஞ்சைக்கு மட்டும் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வந்திருப்பது முறையல்ல. தமிழகம் பூராவுக்கும் அதை விஸ்தரிக்க வேண்டும். இந்த அமைச்சரவை அந்த முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். அதனால் கிராமங்களில் இருக்கக்கூடிய சாதாரண மக்களுடைய வாழ்க்கை வசதியில் நல்ல நிலை ஏற்பட உதவிகரமாக இருக்கும்.

இப்போது வழங்கப்படுகின்ற குடியிருப்பு மனைகளின் அளவு கொஞ்சமாக இருக்கிறது. குறைந்தது 8 சென்டாவது கொடுக்க முயற்சிக்க வேண்டும். அந்த முறையில் நம்முடைய அணுகும் முறை இருக்க வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும் காலத்திலே ரெவின்யூ கோர்ட்டைத் திறந்து நிலத்தை விட்டு சாகுபடிதாரர்கள் வெளியேற்றப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பயிர் தீய்ந்து போன நிலையிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையிலும் கூட குத்தகை அளக்க முடியவில்லை என்ற காரணத்தைக் காட்டி குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. எஸ். முருகையன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்பாக வைத்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையை வரவேற்று, அதை ஆதரித்துக் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலிலே இந்த நிதிநிலை அறிக்கையில் திருவண்ணாமலை மருத்துவ மனை விஸ்தரிப்புக்கும், அரசினர் கலைக் கல்லூரிக்கும் நிதி ஒதுக்கம் செய்திருப்பதற்காக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு திருவண்ணாமலைப் பகுதி மக்கள் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய திரு. எல்லப்ப பாகவதர் அவர்கள் நல்ல ஹாஸ்யமாக பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் சொன்னவற்றுள் ஒன்று இந்த அரசு செய்ததைச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே, செய்யவேண்டியதைச் சொல்லவில்லையே என்றார்கள். செய்ததை எடுத்துச் சொல்வதற்குக் காரணம்—செய்த நன்றியை மறந்தவர்கள் அல்ல—என்பதை நினைவுபடுத்திக் கொள்வதற்குத்தான். ஆட்சியினர் என்ன என்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, அவற்றை வரவேற்று, மேற்கொண்டு செய்ய வேண்டிய நல்ல பணிகளை எடுத்துச் சுட்டிக்காட்டுவது பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடியவர்களைச் சார்ந்தது. அந்த வேலையை அவர்கள் ஒழுங்காகச் செய்யாத காரணத்தினால், மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய காரியங்கள் என்ன என்னவற்றைச் செய்திருக்கிறோம் என்று நாங்கள் எடுத்துக் காட்ட வேண்டியதாக இருக்கிறது. நாங்கள் எங்களுடைய பெருமையைப் பறைசாற்றிக் கொள்வதற்காகச் சொல்லவில்லை—எல்லா மக்களுக்கும் அவை தெரிந்திருக்கவேண்டும் என்பதற்காகவே சொல்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இருநூறு கோடி வருமானம் முந்நூறு கோடியாக உயர்ந்திருக்கிறது, நாங்கள் 100 கோடிக்கு வரியைப் போட்டிருக்கிறோம் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னார்கள். அது தவறு. அவர்கள் காலத்திலே போடப்பட்ட வரிகள்தான். அவர்கள் பணக்காரர்களுக்குத் தனிச்சலுகை காட்டிச் சரியான முறையில் அந்த வரிகளை வசூலிக்கத் தவறியிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன்—இருக்கக்கூடிய வரிகளை—யாருக்கும் தனிச் சலுகை என்று காட்டாது வசூலிக்கவேண்டும் என்று எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் 100 கோடிக்கு வருமானம் அதிகரித்திருக்கிறதேதவிர நாங்கள் 100 கோடிக்கு வரி போடவில்லை. போட்டிருக்கிற வரி பத்துப் பதினைந்து கோடிகளுக்குத்தான் இருக்கும். அதுவும் பணக்காரர்கள்மீதுதான்—தாங்கக்கூடிய சக்தி படைத்தவர்கள் மீதுதான் போடப்பட்டிருக்கின்றன. பணக்காரர்களுக்குத் தனிச் சலுகை காட்டி அவர்களிடம் பலவகையிலும் உதவி பெற்றுவந்த—எதிர்க்



கட்சிக்காரர்கள் இன்றைக்கு எதிர்க்கிறார்கள் என்றால் அவர்களுக்கு வேண்டியவர்கள் பாதிக்கப்படுகிறார்களே என்கிற ஒரே காரணத்தினால்தான் எதிர்க்கிறார்கள். அதைவிட்டு ஒட்டு மொத்தமாக நாங்கள் 100 கோடிக்கு வரி போட்டோம் என்று சொல்வதில் பயன் இல்லை. நீண்ட நெடுங்காலமாக அவர்கள் பணக்காரர்களை ஆதரித்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வரி போடுகிறோம் என்கிறபோது இவர்களுக்குக் கோபம் வருகிறது.

இந்த அரசு என்ன சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதனையாவது பாராட்டினார்களா என்றால் அதைப் பாராட்டவில்லை. வேளாண்மைத்துறையில் செய்திருக்கிற சாதனைகள் எத்தகையது என்பதை அவர்கள் தங்கள் நெஞ்சில் கைவைத்துப் பார்த்து சிந்திப் பார்களேயானால் 20 ஆண்டுக் கால ஆட்சியில் அவர்கள் அதனைச் செய்தார்களா? வறட்சி நிவாரணத்தின்போது என்ன என்ன காரியங்களை இந்த அரசு செய்தது என்பதனையாவது பாராட்டினார்களா என்றால் இல்லை. எவ்வளவு கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார்கள். 13,400 சிறுபாசனத் திட்டங்களை மேம்படுத்தினோம். இல்லை என்று மறுக்க முடியுமா? இவர்கள் பாராட்டவில்லை. ஆனால் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். 5, 600 சாலைப்பணிகளை நிறைவேற்றியிருக்கிறோம். நல்ல முறையிலே சாலைகள் எல்லாம் செப்பனிடப்பட்டிருக்கின்றன, மொத்தத்திலே 40, 600 பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. நீங்கள் இதையெல்லாம் பாராட்டவில்லை. பாராட்டவிட்டாலும் நீங்கள் குறை கூறாமலாவது இருக்கலாம். அதுவும் உங்களால் முடியவில்லை, நீங்கள் என்ன செய்யப்படவேண்டுமென்றும் சொல்வதில்லை. காரணம் என்னவென்றால் இப்பொழுது உங்களுக்கு ஒரு திகைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 138 பேர்களாக இருந்தோம் இப்பொழுது 50 பேர்களாக ஆனோம். இப்பொழுது ஒவ்வொன்றாகக் குறைந்துகொண்டேவந்து 41 அல்லது 42-லே இருக்கிறோமே என்ற திகைப்பு பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. எங்களுக்குக்கூட இதிலே கவலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் பிரதான எதிர்க்கட்சி குறைந்துகொண்டே போவது ஆளுங்கட்சிக்கு ஊனமாக இருக்கும். நல்ல கருத்துக்களை நீங்கள் எடுத்துச் சொல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். 'இந்த ஆண்டு 42 பேர்களாக இருக்கிறோம், இன்னும் குறைந்துகொண்டே போய் 10 ஆகலாம் அல்லது 8 ஆகலாம் என்று பயந்துகொண்டிருக்கிறார்கள். உங்கள் தலைவர் 1967-க்கு முன்னால் சொன்னாரே அதைப்போன்று அதாவது அடுத்த முறை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் ஒருவர் கூடச் சட்டமன்றத்தில் காலடி எடுத்துவைக்க முடியாது என்று சொன்னாரே அந்த நிலைமை உங்களுக்கு ஏற்படுமோ என்று எண்ணத்தக்க வகையில் மிகவும் பரிதாபப்படத்தக்க நிலையில் நீங்கள் இருக்கிறீர்களே என்று நான் உண்மையிலேயே பரிதாபப்படுகிறேன். சிறந்த முறையிலே செய்ததை எடுத்துச் சொல்லுங்கள்; செய்யவேண்டியவற்றை நல்ல முறையிலே எடுத்துக் காட்டுங்கள். [illegible] ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த மூன்று ஆண்டுகளில்

[திரு. எல். கணேசன்] [1970 மார்ச் 4

ஆலோசனையைச் சொல்லுகிறது. அப்படிச் சொல்லுகின்ற நிலையில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காகப் பல யோசனைகளை நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் கூறியிருக்கின்ற யோசனைகளை வரவேற்று அவ்வளவு பேரும் ஒப்புக் கொள்ளக் கூடிய அமைப்பை உருவாக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், எதிர்க்கட்சி நண்பர்கள் உள்ளேயும், வெளியேயும் ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கோஷத்தை எழுப்புகிறபோது பழைய நாட்டுப் பிரிவினையை மறுபடியும் எழுப்புகிறது என்று கூறுகிறார்கள். நாட்டுப் பிரிவினையை விட்டு விட்டோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை அழுத்தந்திருத்தமாகச் சொல்லி இருக்கிறது. ஆனால், அப்படி ஒரு நிலை உருவானால் If it is a historical inevitability it will be due to the erroneous policy of the Centre and not of the Tamil Nadu Government. என்பதை நான் வற்புறுத்திச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி பலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஒரு கதைதான் நினைவிற்கு வருகிறது. புலி வருகிறது, புலி வருகிறது என்று சொன்னவன் நிலை உண்மையாகவே புலி வந்த நேரத்தில் என்ன வாயிற்று என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இருதயபூர்வமாக நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியக் கூட்டமைப்பை ஏற்றுக் கொள்கிற நேரத்தில் அதன் இதயசுத்தியைச் சந்தேகித்தால் நாட்டுப் பிரிவினை வரக் கூடும், அப்போது நீங்கள் ஏமாந்து போகக்கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது நமக்குத் தெரிகிற உண்மை எல்லாம்—வரி போட்டிருக்கிறார்கள். ஆனால் யார் மீது வரி போடப்பட்டிருக்கிறது? வரிக்கு மேல் வரி போட்டிருப்பதாக இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். வரி போடவில்லை என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் யார் மீது வரி போடப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். தாங்குகிறவர்கள் மீது தான் வரி போடப்பட்டிருக்கிறது என்பதை நடுநிலையாளர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். தேவைகளை மூன்றாகப் பிரித்து அத்தியாவசியத் தேவை, வசதித் தேவை, ஆடம்பரத் தேவை என்று பிரித்து, போடப்பட்டுள்ள வரிகளில் அத்தியாவசியப் பொருள்கள் மீது வரி போடப்படவில்லை என்பதை பொருளாதாரம் உணர்ந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள். (மணியடிக்கப்பட்டது.) ஆனால் வரி போட்டிருப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள் இதைத் திறனாய்வு செய்யும்போது இந்த நிதிநிலை அறிக்கையை விட்டு விட்டு வேறு எங்கே எங்கேயோ போகிறார்கள்.



1970 மார்ச் 4] [திரு. எல். கணேசன்]

மாண்புமிகு உறுப்பினர், பெரியவர்—உருவத்தால் மட்டும் சொல்லவில்லை—திரு. விநாயகம் அவர்கள் கூறுகிறபோது, மத்திய மாநில அரசுகளின் உறவுமுறையைச் சுட்டிக்காட்டுகிறபோது இந்திரா அம்மையாரிடம் போராடிப் பெறவேண்டியதுதானே என்றார்கள். எப்போது, யாருவரை வாதாடுவது என்பதும் எங்களுக்குத் தெரியும், அப்படி வாதாடியும் முடியாதபோது போராட்டம் எப்போது என்பதும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்குத் தெரியும். கிளர்ச்சி தேவை என்றால் அதை எப்போது, எப்படி முடிவு செய்வது என்பதும் எங்களுக்குத் தெரியும். தேவை புரட்சிதான் என்றால் அதற்கும் தயாராயிருக்கிறோம். அவர்களது ஆத்திரத்திற்குக் காரணம், எப்படியாவது இந்திரா அம்மையாரைப் பழிவாங்கவேண்டும் என்றால் அதில் நமக்கு மறுப்பு இல்லை. சக்தியிருந்தால் அவர்கள் செய்யலாம். ஆனால் அதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பகடையாகப் பயன்படுத்தி விட முடியும் என்று நான்காம்தர ராஜதந்திரத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கு இப்போது திடீரென்று ஞானோதயம் வந்திருக்கிறது. சில சமயங்களில் அது வரும். வேண்டிய ஒருவர் இறந்து இடுகாட்டில் அந்தப் பிணத்தை வைத்துவிட்டு வரும்போது காயமே இது பொய்யடா என்று தோன்றும். அப்போது அந்த ஞானோதயம் ஏற்படும். ஆனால் பின்னால் அதை மறந்துவிடுவார்கள். அப்படித்தான் திரு. காமராஜ் அவர்களுக்கு இப்போது ஞானோதயம் வந்திருக்கிறது. பதவியைப் பறி கொடுத்து விட்டதற்குப் பின்னால், தன் அதிகாரம், அந்தஸ்து எல்லாவற்றையும் இழந்துவிட்டதற்குப் பின்னால், சவக்குழியில் ஒன்றை அனுப்பிவைத்ததற்குப் பின்னால் அவர்களுக்கு ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்குமா என்று கேட்கிறார்கள். இந்தியை எதிர்த்து வந்தவர்கள் யார்? அவர்கள் ஆட்சியில் இருந்த போது, அதிகாரப் பொறுப்பில் இருந்தபோது இந்திதான் ஆட்சி மொழி என்று செய்தார்கள். 1965-ல் இந்தியை எதிர்த்து மாணவர்கள் போராடியபோது, துப்பாக்கிக் குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்தபோது காமராஜ் அவர்கள் கேரளாவில் உலாவிக் கொண்டிருந்தார்கள். இங்கு இந்தியில் தாக்கீது வருமானால் அதைக் கிழித்துக் குப்பைக்கூடையில் போடுங்கள் என்று சொல்லி விட்டு வட புலத்திற்குச் சென்றபோது நான் அப்படிப் பேசவில்லை என்று சொல்லியிருக்கிறார் காமராஜ் அவர்கள். (திரு. கபூர் சாகிப் அவர்கள் அழைக்கப்பட்டார்.)

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நான் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே ஒரு புதுமையும், புரட்சியும் கொண்டுள்ள அறிக்கையாக அமைந்துள்ளது. இதில் மிக முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ள விஷயம், மத்திய அரசாங்கத்தினிடம்

[திரு. கோ. பாரதிமோகன்] [1970 மார்ச் 4

ஏராளமான கிராமப் புற விவசாயிகள்—சாதாரண சிறு நிலச் சுவான்தார்கள் உட்பட என்று கணக்கில் சொல்லுகிறேன்—வாரக் குத்தகைதாரர்கள் போன்றவர்கள் ஏராளமான பேர் கடனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காக கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அது நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்திருக்கின்ற ஒன்று. அதைக் கொண்டுவர தமிழக அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்நியர் மூலதனமிட்டுள்ள தோட்டங்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறிய நேரத்தில் காங்கிரஸ் நண்பர்கள் சீறி விழுந்தார்கள். அந்நிய முதலாளிகள் என்று சொன்னவுடன் அவர்கள் பாச பந்தத்துடன் கிளம்புகின்ற நிலைமையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வங்காளத்தில் நாங்கள் என்ன செய்தோம்? என்று கேட்கிறார். அந்நியர் வசம் இருந்த டிராம்வே கம்பெனியை, செல்வாக்கு மிகுந்த கம்பெனியை, ஏராளமான மூலதனம் கொண்ட அந்தக் கம்பெனியை வங்க அரசாங்கம் நாட்டுடைமையாக்கி விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கமே தலையிட்டு பிரதிநிதியை அனுப்பி அங்கு இருக்கக் கூடிய அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தியது. நாங்கள் அதை நிராகரித்தோம். கேரளாவில் கூட பல்வேறு சட்டங்கள் திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாட் இருந்த காலத்தில் பிரேரேபிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் இன்றையதினம் அமலாகி வருகின்றன. ஆகவே, அந்நியர் வசம் இருக்கும் தோட்டங்களையும் மூலதனங்களையும் தமிழக அரசாங்கம் எடுத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அதனால் நமக்கு இருக்கக்கூடிய பற்றாக் குறை நிலை, தேக்க நிலை நீங்கும். திட்டங்களை மேலும் மேலும் அமுல் செய்யப் பணம் இல்லையென்று கூறக்கூடிய குறையைப் போக்கும். அந்நியத் தோட்டங்களையும், மற்ற நிறுவனங்களையும் எடுத்துக் கொள்ள எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்கக் கூடாது. அவற்றைத் தைரியமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. எல். கணேசன்** : மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல வாய்ப்பு நல்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நிதிநிலை அறிக்கை என்பது அரசாங்கத்தினுடைய வரவு செலவுப் பட்டியல் மட்டும் அல்ல. மாறாக அது அரசாங்கத்தின் லட்சிய வரைபடமும் ஆகும். நிதிநிலை அறிக்கை என்பது அரசினுடைய வருவாய்களை, நிதி ஒதுக்கங்களைக் குறிப்பிட்டுக் காட்டுகின்ற சுருக்கம் மட்டும் அல்ல; மாறாக அது அரசின் கோட்பாடுகளின் பிரகடனமும் ஆகும். இந்தப் பின்னணியில்தான் இந்த



1970 மார்ச் 4] [திரு. எல். கணேசன்]

நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக்கழக அரசினுடைய கொள்கைகள், லட்சியங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகம் திட்டவட்டமாக ஒன்றைச் சொல்லி வருகிறது. இந்திய அரசியல் அமைப்பை ஆய்கின்ற அத்தனை பேரும் இன்று அதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். இது ஒரு கூட்டாட்சி நாடாகத் தோன்றவில்லை. It is more like a Unitary State than a Federal State. என்ற கருத்தைத் தெளிவாகச் சொல்லி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு மாநிலங்களில் சுய ஆட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் என்ற நிலை இருந்தால்தான் அது உண்மையான கூட்டாட்சியாக இருக்கும் என்று வற்புறுத்தி வருகிறது. மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே நல்லிணக்கமான, சுமுகமான உறவுடைய நிலை உருவாக வேண்டுமென்றால் இந்த அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லி வருகிறோம். அதே போன்று பொருளாதாரத்தில் ஆதிக்கம் இல்லாத சுரண்டல் இல்லாத சோஷலிச நிலையை உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. அதே போல் சமுதாயத்துறையில் திட்டவட்டமாகச் சொல்லுகிறது—ஜாதி பேத சமயமற்ற சமத்துவ சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று. சுருக்கமாகச் சொல்லப் போனால், அரசினுடைய அரசியல், பொருளாதார, சமுதாயக் கோட்பாடுகள், சிறந்ததொரு சீர்திருத்த சமுதாய ஜனநாயக சோஷலிசக் கூட்டாட்சி என்பதைத் திட்டவட்டமாக வற்புறுத்தி வருகிறது.

இதைச் சொல்லுகிறபோது பலர் ஆத்திரப்பட்டு சில கணிப்புகளுக்கு வருகிறார்கள். மாநில மத்திய அரசு உறவு முறைகளைப் பற்றி நம்முடைய நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவாக, ஆதாரத்தோடு சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். மாநில அரசுக்கு அதிகாரங்கள் மிகக் குறைவாகவும், மத்திய அரசுக்கு எல்லா அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருக்கும் நிலையைச் சுட்டிக் காட்டுகிறது. பொருளாதாரக் கொள்கையை நிர்ணயிக்கின்ற உரிமை மத்திய அரசினுடையதாக இருக்கிறது. பொருளாதாரக் கொள்கையை நிர்ணயிக்கின்ற முறையில் அடிப்படையாக இருக்கின்ற பாங்குகளை நிர்வகிக்கின்ற பொறுப்பு, நாணயச் செலாவணி மதிப்பைப் பற்றி அறிவிக்கின்ற, மாற்றுகின்ற உரிமை அனைத்தும் அவர்களிடம் இருக்கிறது. நிதிவாயில்கள் எல்லாம் அவர்களுக்கு அதிகமாக இருக்கின்றன. நமக்கு நிதி வாயில்கள் மிகக்குறைவாக இருக்கின்றன. நிதி ஒதுக்கங்கள் செய்கிற அதிகாரம் கூட தனி உடைமையாக அவர்களிடம் இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு உண்மையான கூட்டாட்சியை உருவாக்க வேண்டுமென்பதற்கான

[திரு. ஆ. கு. சுப்பையா] [1970 மார்ச் 4

அறிவித்திருப்பதைப் பாராட்டி, நான் இது சம்பந்தமாக சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த உச்சவரம்புச் சட்டம் 1961-ஆம் வருஷம் தமிழக காங்கிரஸ் ஆட்சியால் நிறைவேற்றப் பட்டது. அதை நிறைவேற்றுகின்ற காலத்தில், இப்பொழுது ஆளுங்கட்சியாக இருந்தவர்கள், அப்பொழுது எதிர்க்கட்சியிலே யிருந்தார்கள், அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக யிருந்தார்கள். இந்தச் சட்டம் எந்த அளவுக்கு மோசடி நிறைந்த சட்டமாகக் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது என்ற விவரத்தை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தாமல், இந்தச் சட்டத்தை, மோசடி நிறைந்த சட்டத்தை நிறைவேற்றுவதற்கு, நிலப் பிரபுக்களுக்கு, நிறைய விதிவிலக்குகள் அளித்து நிறைவேற்றினார்கள். 1959-ஆம் வருஷத்திலேயே, நாங்கள் 30 எக்கர் என்று நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லி, அதை அனுசரணையாக வைத்துக்கொண்டு, 30 எக்கர், 30 ஏக்கராகப் பிரித்து எழுதி வைத்தபிறகு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றப் பட்டதால், உபரியாக நிலம் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. யதார்த்தமாக நிலத்தை வைத்துக்கொண்டு எவ்வாறு ஏமாற்றி யிருக்கிறார்கள். விதிவிலக்குகள் என்ற பெயரால் மாட்டுப் பண்ணை, தர்மத்திற்கு, கோயிலுக்கு எழுதி வைப்பது, பழத் தோட்டங்கள் வைப்பது, தென்னந் தோப்புகள் வைப்பது, கரும்பு சாகுபடி செய்வது என்று இம்மாதிரியாக உபயோகப்படுத்துவதன் மூலமாக பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள், விதிவிலக்கு அளிக்கப்பட்டு, இன்றையத் தினம் மறுக்கப்பட்டிருக்கிறது. அது அனைத்தையும் ரத்து செய்தாக வேண்டும். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் காலத்திலே, குடும்பம் ஒன்றுக்கு 15 ஏக்கரா என்று நாம் சட்டத்திலே கொண்டு வர வேண்டும். நபர் ஒன்றுக்கு 30 ஏக்கரா என்பது கூடாது. ஒரு குடும்பத்திற்கு 120 ஏக்கரா வரை வைத்துக் கொள்ளும் அளவுக்கு முன்பு சட்டத்திலே கூறப் பட்டிருக்கிறது. அதை ரத்து செய்ய வேண்டும். குடும்பம் என்று சொல்லும்பொழுது, புருஷன், மனைவி, 3 மைனர் குழந்தைகள் என்று கணக்கு வைத்து, 15 ஏக்கர் நிலம்தான் வைத்துக் கொள்ளலாம் என்ற வகையில் இதை நிறைவேற்றுவதன் மூலமாகத் தான் நாம் உபரியாக நிலத்தைப் பெற முடியும். முதலமைச்சரவர்கள் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் சொன்னதைப்போல, குறைந்தபட்சம் இரண்டு லட்சம் ஏக்கராவது எடுக்க முடியும், இரண்டு லட்சம் ஏழைகளுக்கு விநியோகிக்க முடியும். இதுபற்றி நேற்று மேல்சபையிலே, முன்பு கொண்டுவந்த சட்டமே அமல் படுத்தப்படவில்லை, இப்பொழுது எதற்காகக் கொண்டு வந்தார்கள் என்று சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பேசியதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள், இந்த பட்ஜெட் என்றையத்தினம் சமர்ப்பிக்கப்பட்டதோ அன்றைய தினத்திலிருந்து அமலுக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இது எப்படித் தெரிந்ததோ தெரியவில்லை, தஞ்சாவூர்



1970 மார்ச் 4] [திரு. ஆ. கு. சுப்பையா]

மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சென்ற வருஷம், இந்த வருஷம் ஜனவரி மாதத்திற்கு முன்பிருந்தே 15 ஏக்கர், 15 ஏக்கர், 10 ஏக்கர் என்று பிரித்து வைத்து விட்டார்கள். ஆகவே, தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து நீங்கள் நிலம் எடுப்பதாக நினைத்தால் . . .

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பொதுவாகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலேயே, 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் வரை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பலர், அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரக்கூடும் என்ற ஊகத்தின் அடிப்படையிலே செயல்பட்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினரவர்கள், இதை எப்படியோ தெரிந்துகொண்டு செய்தார்கள், வரப் போகின்ற சட்டத்தை முன்கூட்டியே தெரிந்திருப்பதைப் போன்ற கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தகவல்களைச் சொல்லி, அதன்மூலம் தெரிந்துகொண்டு செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை. கொண்டு வரப்போகிறார்கள் என்ற அடிப்படையிலே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, திரு. சுப்பையா அவர்கள் சொல்லும்பொழுது, பிரித்துக் கொண்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படிப் பிரித்துக் கொண்டவர்களின் பட்டியலை இங்கு தர முடியுமா?

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, அந்தப் பட்டியல் இன்றையத்தினம் சப்-ரிஜிஸ்தார் ஆபீசிலே இருக்கும். அவர்களிடம் கேட்டால், இத்தனை குடும்பங்களில் பிரித்து எழுதியிருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தெரிந்துகொள்ளலாம். அந்த முறையிலே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. சுப்பையா அவர்களுக்குத் தெரிந்த பத்து பேர்களுடைய பெயர்களையாவது இங்கு அறிவிப்பார்களா?

**திரு. ஆ. கு. சுப்பையா :** நான் விவரம் தெரிந்துதான் அறிவிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆகவே, விவரம் தெரிந்து பேசுவது நல்லது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இம்மாதிரியாக ஒரு நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 39-ஆம் வருஷமே பிரித்து எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சட்டம் கொண்டுவரும்பொழுது, இதிலிருந்து தப்பித்தவர்களையும் கட்டுப்படுத்தும் முறையிலே, 59-ஆம் வருஷத்திலிருந்து அமலுக்குவரும் என்ற நிலையிலே இருக்க

[திரு. எம். அப்துல் கபூர் சாகிப்] [1970 மார்ச் 4

அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன, அவற்றை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதே கருத்தைத்தான் எங்கள் கட்சித் தலைவர் திரு. காய்தே மில்லத் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் வற்புறுத்தினார்கள். அக்கருத்தை வலியுறுத்தியிருப்பதற்காக நான் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறேன். அப்படி அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படுமானால்தான் உண்மையான ஜனநாயகம், ஒருமைப்பாடு இவை நீடித்திருக்கும் என்பதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை.

இந்த அறிக்கையில் பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களின் நலனுக்காக என்று ஒரு அமைச்சர் அவர்களும் இங்கு அமர்ந்திருப்பதைக் காண்கிறோம். பின்தங்கிய வகுப்பினருக்கு இந்தக் கமிட்டி எந்தளவிற்கு அவசியம் என்பதை நான் இங்கு சொல்லி மக்கள் தெரிந்துகொள்ளுகிற அளவிற்கு இல்லை. பின்தங்கியவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள், இவர்கள் எந்தளவிற்கு முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதை இந்தத் தமிழக அரசு உள்ளபடியே உணர்ந்து ஒப்புகொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை இங்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்படி பின்தங்கிய வகுப்பினர்களில் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். முஸ்லிம்களில் இரண்டு பிரிவினர் இருப்பதைக் காண்கிறோம். நாங்கள் பலதடவை எடுத்துக்கூறியிருக்கிறோம். எங்கள் கட்சி சார்பில் பல கூட்டங்களில் தீர்மானங்கள் போட்டு அனுப்பியிருக்கிறோம். உருது பேசும் முஸ்லிம்கள், தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்று தனித் தனியாகப் பிரித்து லப்பை கம்யூனிட்டியைச் சேர்ந்த மக்கள் பின்தங்கியவர்கள் என்று கூறியிருப்பது வருந்தத்தக்கது. முஸ்லிம்கள் அனைவருமே உழைப்பாளி மக்கள் அவர்களில் பீடித் தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே முஸ்லிம்கள் அனைவருமே பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று பிரகடனம் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, வரி சம்பந்தமாக சில திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். 1970-71ம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையில் சேல்ஸ் டாக்ஸ்க்கு சர்சார்ஜ் போட்டிருக்கிறார்கள். அது 1970-71க்கு மட்டுமல்ல. அது 1969-70க்கும் ஆகும் என்று ஒரு குறிப்பு காட்டுகிறது. முந்திய வருடத்திற்கு வரி போடுவது வியாபாரிகளை எந்தளவிற்குக் கஷ்டத்திற்குள்ளாக்கும் என்பதை உணரவேண்டும். அதனால் பொருள்களின் விலைகள் உயரும், அது சாதாரண மக்களையே பாதிக்கும் என்பதை இந்த அரசு உணரும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்த சர்சார்ஜை நீக்கவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, தோல் வியாபாரிகள் சில நாட்களுக்கு முன்னர் கோர்ட்டில் ஒரு தாவா போட்டு, விற்பனை மீதுதான் வரி போடவேண்டும் என்று கை



1970 மார்ச் 4] [திரு. எம். அப்துல் கபூர் சாகிப்]

தீர்ப்பு வந்த பிறகும், இந்த ஆண்டு அமெண்மென்டில் கொள்முதல் பேரிலும் வரி போட்டு வருவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே அதில் கவனம் செலுத்தி கோர்ட் தீர்ப்புப் பிரகாரம் செய்யவேண்டுமென்று அரசு ஆணையிடும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 30 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்பது 15 ஸ்டேன்டேர்ட் ஏக்கர் என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டிலும், மேடைகளிலும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், இந்த உபரி நிலங்கள் ஏழை எளிய மக்களுக்கு பங்கு போட்டுக் கொடுக்கப்படும் என்று. இந்த பட்ஜெட்டில் அகதிகளுக்கு என்று எந்தவிதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. ஆகவே இந்த நிலங்களைக் குறிப்பாக அகதிகளுக்கு அரசாங்கம் கொடுக்குமானால் அவர்கள் உள்ளபடியே திருப்திபடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஓரிரு வார்த்தைகள் சொல்லி பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

சர்க்கரை ஆலைகள் வடார்க்காடு மாவட்டத்தில் இரண்டு வைக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. 67-ஆம் ஆண்டு வடார்க்காடு மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் இதற்காக விவாதம் நடந்தது. அந்த விவரப்புள்ளிகள் இன்னும் இருக்கலாம் என்று கருதுகிறேன். 1964-ஆம் வருஷத்தின் விவரப்புள்ளிப்படி, காட்பாடி வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ வேண்டுமென்று முடிவெடுத்திருந்தார்கள். 1968-இல் இந்த ஆலை வாலாஜா வட்டத்தில் இருக்க வேண்டுமென்று முடிவெடுக்கப் பட்டிருந்தது. எனவே, அந்த முடிவைப் புனராலோசனை செய்து, அதை வடார்க்காடு மாவட்டத்தில் வாலாஜா வட்டத்திற்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இராணிப்பேட்டையில் தொழிற்சாலைக்காக நிலம் வாங்கி வைத்திருந்தார்கள். அது கிட்டத்தட்ட ஏழெட்டு வருஷங்களாகச் சும்மாயிருக்கிறது. அதை உடனடியாக அமல் நடத்தினால் ஏழைகளுக்கு, வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இப்பொழுது சில சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். புதுப்பாடி ஒரு சென்டர். அது வடார்க்காடு மாவட்டத்தில் முக்கியமான ஹெல்த் சென்டர். அங்கே கட்டிடம் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதையெல்லாம் கவனித்து, உடனடியாகப் பூர்த்தி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மன்ற உதவித் தலைவரவர்களே, இந்த பட்ஜெட்டில் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், நிலத்திற்கான உச்சவரம்பை, மசோதாவில் 15 ஏக்கராவாகக் கட்டப்போவதாக

வேண்டும். காங்கிரஸ் சர்க்காரிலே, சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி அதை அனுசரித்து முன்கூட்டியே எழுதி வைத்துவிட்டார்கள். 61-ஆம் வருஷம் சட்டம் வந்தது. அதனால் உபரியாக நிலம் எடுக்கமுடியாத நிலை இருந்தது. அப்படி ஏமாற்றியவர்களிடமிருந்தும் நிலத்தை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

கோவில், மடங்களை எடுத்துக்கொண்டால் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கோவில், மடங்கள் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சொந்தமாக வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் உள்ள அந்த நிலங்களை அரசுடைமையாக்கி, விவசாயிகளுக்கு கொடுத்து, கோவில், மடங்களின் நிர்வாகத்தை நடத்த அரசாங்கமே பொறுப்பு ஏற்று நடத்துவது உசிதமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில், 'காணுத பாக்கி' என்று சொல்லும் ஒரு முறையில், விவசாயிகளிடமிருந்து குத்தகை பாக்கி இருப்பதால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் மீது, அவர்களை வெளியேற்ற வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. அம்மாதிரி வெளியேற்றப்பட்டால், சுமார் 50,000 பேர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள். அது அரசாங்கத்திற்குப் பெரிதும் பாதகத்தை விளைவிக்கும். எனவே, அவர்களை வெளியேற்றாமல் இருக்க அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிலச்சீர்திருத்தத்தில் அரசாங்கம் புதிய கொள்கையை உருவாக்கியிருப்பதை வரவேற்கிறேன். முறையாக, விதிவிலக்குகளை ரத்து செய்து அமல் நடத்தி நடவடிக்கை எடுக்கும் நேரத்தில், எங்கள் கட்சி அரசாங்கத்திற்குப் பூரண ஒத்துழைப்பு அளிக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது.) இன்னும் இரண்டு நிமிஷங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி ஒவ்வொருவரும் இரண்டு நிமிடங்கள் கேட்டால் என்ன செய்வது ? தலைவரவர்கள், 10 நிமிடத்திற்கு மேல் யாரும் பேசக்கூடாது என்று சொல்லிவிட்டு, லிஸ்டையும் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்னும் ஏறத்தாழ 10 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** எதிர்க்கட்சி என்ற பெயர் இருக்கிறது, அந்த அடிப்படையிலே கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. எல்லோருக்கும் சராசரியாக 10 நிமிஷம் என்று சொன்னால், பேசுவதில் பிரயோசனமில்லை.

அரசாங்கம் இந்த உணவுக் கொள்கை சம்பந்தமாக மறுபரிசீலனை செய்வது நலமாகயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இன்றையதினம் தஞ்சாவூர் மாவட்டத்திலே, பெரிய நிலப்பிரபுக்கள் தானியத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள்.



மார்க்கெட்டுக்குக் கொண்டு வருவது கிடையாது. சாதாரண விவசாயிகள்தான் தங்களுடைய தானியத்தை மார்க்கெட்டிலே குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. பதுக்கிவைத்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இதைப் போக்க அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடந்த மூன்றாண்டு காலமாக நம்முடைய தமிழகத்திலே வறட்சி ஏற்பட்டு, அதன்மூலமாக இன்றையதினம் வேலையில்லாமை, பஞ்சம் போன்ற நிலைமைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. வேலை வேண்டுமென்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான படித்தவர்கள், வாலிபர்கள் கிளர்ச்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே, அவர்களுக்கு வேலை கொடுக்கும் ஒரு நிலையிலே, இன்றையதினம் அரசாங்கம் அந்த வேலைவாய்ப்பை அளிப்பதற்கான திட்டங்களைத் தயாரிக்கவேண்டும்.

அதைப்போல் அரசாங்க சிப்பந்திகளுக்கு ரூ. 10 இடைக்கால நிவாரணம் அளித்திருப்பதும், ஆசிரியர்களுக்கு பல சலுகைகள் அளித்திருப்பதும் வரவேற்கத்தக்கவையாகும். விரைவிலே அவர்களுடைய குறைகள் அத்தனையையும் பரிசீலனை செய்து, அவைகளைக் களைவதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். பே கமிஷன் அக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்காமல், பே கமிஷன் விரைவிலே தனது அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டும். சர்க்கார் சிப்பந்திகள், ஆசிரியர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறு சொல்கிற காலத்தில், தொழிலாளர்களுக்கு இந்த மூன்று ஆண்டுகளில் சம்பள உயர்வு போன்ற விஷயங்களில் அரசாங்கம் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகவே, தொழிலாளர்களுக்கு, தொழிற்சாலைகளில் அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஊதிய உயர்வு போன்ற காரியங்களைச் செய்துகொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசும் வரி விதித்திருக்கிறார்கள், மாநில அரசும் வரி விதித்திருக்கிறார்கள். இரண்டும் சேர்ந்து, பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. பொது மக்கள், ஏழை மக்கள், பாதிக்கப்

படாத அளவுக்கு நமது அரசு பரிசீலனை செய்து, அந்த வரிகளில் மாற்றங்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. 8¼ காசாக இருந்தது 10 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளிடையே அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதனால் பெரிய அளவுக்கு வருவாய் வந்து, அரசாங்கம் அதனால் பெரிய செலவுகளை நிறைவேற்ற முடியும் என்று நம்பவேண்டிய அவசியமில்லை. ஆகவே, அதைக் கைவிடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரண வேலைகள் செய்வதிலே குறைபாடுகள் இருப்பதாக புகார்கள் சொல்லப்படுகின்றன. அம்மாதிரியான புகார்கள் இல்லாத அளவுக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும். அதுபோலவே பொருட்காட்சி சம்பந்தமாகவும் புகார்கள் சொல்கிறார்கள். அது முறையாக நடத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அவையெல்லாம் முறையாக நடத்தப்படுகின்றனவா என்பதை அறிந்து ஆராய்வதற்கு அரசு ஒரு விசாரணை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் புதியதாக 6 கோடி ரூபாய் அளவுக்கு வரி விதித்திருக்கிறார்கள். ஆனால், இது நடைமுறைக்கு வரும்பொழுது கிட்டத்தட்ட 25 கோடி ரூபாயாக உயரும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. மேலும், இந்த ஆட்சி பதவிக்கு வரும்பொழுது 'வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்' என்ற தத்துவத்தை மக்களிடையே சொல்லி, ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால், வரிகளை மட்டும் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு வசதிகள் செய்து தருகின்றார்களா என்றால், இல்லவே இல்லை. மேலும், இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது 1966-67-ம் ஆண்டில் இருந்ததைவிட இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ. 100 கோடிக்கு அதிகமாக வரவு இனங்களிலிருந்து வருவாய் வந்திருக்கிறது. இவர்கள் பதவிக்கு வந்தவுடன் விற்பனை வரியைக் கூட்டியது, மோட்டார் வாகனங்களுக்கு வரியைக் கூட்டியது, மேல் வரியை கூட்டியது இதன் மூலம் ரூ. 100 கோடி வந்திருக்கிறது என்பதை இந்த அமைச்சரவை நன்றாக உணரவேண்டும். இங்குப் புதிய வரிகள், குறிப்பாக வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பெரிய வேதனைப் பளுவாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





அடுத்தபடியாக, வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு ஏதாவது நன்மைகள் பயக்கும் வகையில் திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்ப்போமானால், ஒன்றும் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபொழுது வேளாண்மை உற்பத்தியில் 1968-69-ல் இருந்ததைவிட ரூ. 98 லட்சம் குறைவாகவும், சிறிய பாசனத்திற்காக 1968-69-ஐ விட ரூ. 91 லட்சம் குறைவாகவும், மண் வளப் பாதுகாப்புக்காக 1968-69-ஐவிட ரூ. 38 லட்சம் குறைவாகவும் கால்நடை வளர்ப்பில் 1968-69-ஐ விட ரூ. 48 லட்சம் குறைவாகவும் குறைத்துத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இது மக்களுக்குத் தேவையான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயப் பெருமக்களின் வாழ்க்கையை பெரிதும் பாதிக்கும் என்று இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக விவசாய மக்களுக்கு முக்கியமான திட்டங்கள் பயிர் பாதுகாப்புத் திட்டம், கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களில் இந்த அரசு மேற்கொள்வதற்கு ஏதாவது திட்டங்கள் தங்களிடம் இருக்கிறதா என்றால், ஒன்றும் இல்லை. இவைகளெல்லாம் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு மிக முக்கியமான திட்டங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும் மின்சாரக் கட்டணத்தை 8.25 பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தியதன் மூலம் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் விவசாயப் பெருமக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். இம்மாதிரி கட்டணத்தை உயர்த்தியதை உடனே ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில், புதிய பாசனத் திட்டம் ஏதாவது இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் சொல்லப்படவில்லை. பெரிய பாசனத் திட்டங்களையெல்லாம் முன்பிருந்த காங்கிரஸ் சர்க்கார் நல்ல முறையில் செய்து முடித்துவிட்டது. சிறிய பாசனத் திட்டங்களைத்தான் இந்த அரசாங்கம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையிலிருந்து தவறி, சிறிய பாசனத் திட்டங்களை அவ்வாறு நல்ல முறையில் செய்யவில்லை என்பதைத்தான் இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் எனது தொகுதியிலுள்ள அலுத்துரையாறு திட்டம், வடமலையான் கால்வாய், செப்பனிடும் திட்டம், கூடமாட அணைக் திட்டம், நம்பியாற்றை செம்மைப்படுத்தும் திட்டம், மற்றும் பல திட்டங்கள் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. அந்தத் திட்டங்களை நிறைவேற்றினால், அப்பகுதி எப்பொழுதும் வறண்ட பிரதேசமாக காட்சி அளிக்கும் நிலைமாறும். அங்கே நிலைமை சீராகக்கூடும் என்பதை இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [1970 மார்ச் 4

செய்கிறார்கள். அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு குடிக்கத் தண்ணீர் கொடுக்கவும், கடன்கள் வசூல் செய்வதைத் தள்ளிவைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். நிதிநிலை அறிக்கையில் வேறு ஒன்றும் இல்லை, இது வரிப் பளுவான அறிக்கை என்று தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. எம். மேத்தா : துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து என்து கருத்தினைக் கூற விழைகிறேன். இன்றையதினம், நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தமிழகத்திற்கும், டெல்லிக்கும் உள்ள தொடர்பையும் தொய்வையும் எடுத்து இயம்பிக் கொண்டுவருகிறது. இந்த நிலையில் இந்த நாட்டில் நான்காவது பொதுத் தேர்தல் நடந்தது. நாங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழகத்தை ஆளுகிறோம். அப்படி நடந்த தேர்தலும் நான்காவது தேர்தல். நாங்கள் கொடுத்திருக்கும் இந்த பட்ஜெட்டும் நான்காவது பட்ஜெட். இந்த பட்ஜட்டைப் பற்றிப் பேசும் இந்த நாளும் நான்காம் நாள். இன்று தேதியும் நாலாக இருக்கிறது. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து ஏழை, எளியவர்களுக்கு வசதிகளையெல்லாம் பெருக்கிக்கொடுக்க திட்டங்களெல்லாம் போட்டிருக்கிறது. இந்த நல்ல திட்டங்கள் நிறைந்த பட்ஜெட்டை வழக்கம்போல் கர்ங்கிரஸ் நண்பர்கள் எப்படி எப்படி விமர்சனம் செய்யலாமோ அப்படியெல்லாம் விமர்சனம் செய்திருக்கிறார்கள். அப்படி விமர்சனம் செய்யும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் தயாரித்திருக்கும் இந்த நான்காவது பட்ஜெட்டை, சென்ற மூன்று பட்ஜெட் வரைக்கும் ஒரு விதமாகவும் இதை வேறுவிதமாகவும் விமர்சனம் செய்திருக்கிறார்கள். குறிப்பாக நண்பர் விநாயகம் இந்த பட்ஜட் திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சியைக் காட்டுகிறது என்றாலும், 1966-67-ன் தொடர்பாக, 1970-71 வரை இது காங்கிரஸ் போட்ட அடித்தளத்தில்தான் முன்னேற்றக் கழக பட்ஜட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன், 1966-67-ன் தொடர்பாக எங்கள் வளர்ச்சி, எங்கள் சாதனைகள் வளர்ந்தது என்று வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும், இந்த ஆண்டில் மழை பெய்யாததும் உங்கள் அடித்தளத்தில்தானா என்று கேட்கவிரும்புகிறேன். இங்கே ஒரு முறை எதிர்க் கட்சித் தலைவர் ஒப்பாரி என்று குறிப்பிட்டார்கள். ஆனால் ஒப்பாரி டெல்லி மட்டத்தில் வந்தது. அந்த ஒப்பாரிகூட உங்களுடைய அடித்தளமா என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னால் நாங்கள் படியரிசித் திட்டம் என்றபோது, அதையெல்லாம் கேலிசெய்தீர்கள். இப்பொழுது கூட ஒன்றைச் சொல்லுகிறார்கள். வசதியைப் பெருக்குவோம் வரியைக் குறைப்போம் என்றீர்களே, எங்கே என்று கேட்டார்கள். வரியைக் குறைத்ததை, வசதியைப் பெருக்கியதை எனக்கு முன்னால் பேசிய திரு. மணி அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். வசதிகளைப் பெருக்கியிருக்கிறோம்.



1970 மார்ச் 4] [திரு. எம். மேத்தா]

முதல் அமைச்சர் குளிர் சாதனம் வைத்த காரைப் பற்றியும், பொதுப்பணித் துறை அமைச்சர் ஈமக்காரியத்திற்கு இடம் அளித்ததில் கலந்து கொண்டதற்கு அவர் கல்லையும் வைப்பார்களே என்றும் குத்தலாகப் பேசினார்கள். அப்படியெல்லாம் பேசுவது காங்கிரஸ்காரர்களுடைய வழக்கம் என்று கூறிவிடலாம். பேரறிஞர் அண்ணா 1967–68-ல் பட்ஜெட்டைத் தயாரித்து படிக்கும்போது, வயதின் காரணமாக, வறட்சியின் காரணமாக தண்ணீர் அருந்தியதைக் கூட கேலி செய்தவர்கள் நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள். அதே போல, உடல் நலம் இல்லமை காரணமாக குளிர் சாதன வண்டி வைத்திருக்கிறேன் என்றால் விட்டு விடுகிறேன் என்று பேசிக்கொண்டார்கள். தொட்டிலை ஆட்டுவதும், தொடையைக் கிள்ளுவதும் என்பதுபோல் இருக்கிறது. இவர்கள் குத்தல் பேச்செல்லாம் எங்களுக்குப் புரியாமல் இல்லை. ஈமக்காரியத்திற்கு என்று வைத்தால், இவருக்குக் கல் வைப்பார்களே என்றார்கள். யார் இறக்க மாட்டார், கல் வைக்கமாட்டார்கள் ? என்ன தெரிகிறது. இருபது ஆண்டு காலத்தில் சுடுகாட்டைக் கூட சரியாக நீங்கள் வைக்கவில்லை என்றுதானே பொருள் ?

ஆகவே, பட்ஜெட்டைப்பற்றி, திட்டங்கள்பற்றி, இப்படி இழிவாகப் பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியை 1967-லே கைப்பற்றினோம். அதற்கும் முன்னால், இவர்கள் சட்டமன்றத்தில் இருந்தபோது, 1959-ல் சென்னை மாநகராட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியது. டெல்லிப் பேரரசை நீங்கள் கைப்பற்றியபோது, திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அரசைக் கைப்பற்றியிருக்கிறது. நகரசபைகளையெல்லாம் கைப்பற்றியிருக்கிறது. அந்த முறையில் வெற்றி பெற்றிருக்கிறது. பாக்கியிருப்பதெல்லாம் ஊராட்சி ஒன்றியங்கள்தான். அவற்றிற்கும் ஜூலை மாதத்தில் தேர்தல்கள் வருகின்றன. அப்பொழுது என்ன கதி ஆகுமோ தெரியாது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஏழை எளியவர்களுக்கு என்று அவர்களுடைய நன்மைக்காக கடுமையாக உழைக்க வேண்டும் என்று உழைத்ததால், பேரறிஞர் அண்ணா அவர்களும், விவசாய அமைச்சராகவிருந்த கோவிந்தசாமி அவர்களும் உள்ளபடியே கடுமையான உழைப்பால்தான் இறந்தார்கள் என்பதை இந்த மன்றம் ஒத்துக் கொள்ளும். இந்த அமைச்சரவை கடுமையாக உழைக்கிறது என்பதைக் காட்ட ஒன்று இரண்டைச் சொல்ல வேண்டும். என்னுடைய தொகுதிக்கு வந்த பொதுப் பணித் துறை அமைச்சர், கொடைக்கானல் தொகுதியில் ஓட்டுக்காக வந்து சென்ற பிறகு நன்றி செலுத்த ரோடு வசதி இல்லாததால் செல்லாத அளவில் நான் இருக்கும்போது, 7, 7½ மைல்கள் நடந்து செல்ல வேண்டிய பகுதிகளுக்குச் சென்றார்கள். பொதுப்பணித்துறை அமைச்சரை குப்பம்மாபட்டி என்ற ஒரு ஊருக்கு அழைத்துச் சென்றேன். ஏறத்தாழ 4 மைலுக்கு அப்பாலேயே காரை விட்டு

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [1970 மார்ச் 4

மேலும், தொழில்களைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே புதிய தொழில்கள் அமைவதற்கான வாய்ப்புகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் பழைய தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமில்லை. தொழில்களில் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்து வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்பதை அமைச்சரவை நன்றாக உணர்ந்து, அந்த வகையிலே வேலைவாய்ப்புகள் ஏற்படும் வகையில் திட்டங்கள் ஒன்றும் தீட்டப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலைகள் பராமரிப்புக்காக அரசு கொடுக்கும் மானியம் மிகக் குறைவு. இந்த மானியத்தை வைத்து கிராமப்புற சாலைகளை சரியான முறையில் பராமரிக்க முடியவில்லை. கிராமப்புறங்களில் சாலைகள் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலைகளைப் பராமரிக்க மேலும் கூடுதல் நிதி உதவி அளித்தல் அவசியம் என்பதை இந்த சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, கிராம மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்தச் சாலைகள் மிகவும் அவசியம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கல்வியின் தரம் வரவர மிகவும் குறைந்து கொண்டே வருகிறது. தரத்தை உயர்த்தவேண்டும் என்பதற்காக இந்த அரசு ஏதாவது தீவிரத் திட்டங்கள் தயாரித்திருக்கிறதா என்றால், ஒன்றுமில்லை. பள்ளிகளில், ஆரம்பப்பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்குரிய காலம் ஜூன், ஜூலை மாதமாக இருந்தாலும் கூட, இந்த அரசாங்கத்தினால் நியமிக்கக்கூடிய காலம், இப்பொழுது பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் உத்தரவு போடப்படுகிறது. இதனால் பள்ளி மாணவர்களுக்கு படிப்பு மிகவும் தடைப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இதுகுறித்து உடனே நல்ல முறையில் தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பின்தங்கிய பிரதேசமான ராதாபுரம் உப வட்டத்தில் ஒரு அரசாங்கக் கல்லூரி ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் சுகாதார அமைப்பு மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு கிராமப்புறங்களில் சுகாதார அபிவிருத்திக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? ஒன்றும் செய்யவில்லை. நாட்டில் பெரும் பகுதி மக்கள் கிராமப்புறத்தில் இருக்கிறார்கள். கிராமப்புறத்தில் இருக்கிற மக்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க முடியவில்லை. குறிப்பாக, ஊராட்சி ஒன்றியங்கள் நடத்திவரும் மருத்துவ



1970 மார்ச் 4] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

மனைகளை அரசு படிப்படியாக ஏற்று நடத்துவதற்குரிய தீவிரத் திட்டம் ஒன்றைத் தீட்டவேண்டும். அப்பொழுதுதான் கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைக்கு நாம் ஏதாவது வசதி செய்தவர்களாவோம். குறிப்பாக, வள்ளியூர், ராதாபுரம் ஊராட்சி மன்ற மருத்துவ மனைகளை இந்த அரசு உடனடியாக ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஊர்களெல்லாம் மிகப் பெரிய ஊர்களாக பெருகிக்கொண்டு வருகின்றன. கிட்டத்தட்ட 20,000 மக்கள் வசிக்கக்கூடிய இடமாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் நடத்திவரும் மருத்துவ மனைகளை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு வசதி அளிப்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 20,000 கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் சராசரி ரூ. 500 கூட எட்டவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு ஒரு கோடி ரூபாய் போதாது. கிட்டத்தட்ட ரூபாய் 10 கோடியாவது ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இணைப்புச் சாலைகள், மாதர் மகப்பேறு இல்லங்கள் இவற்றை வழங்குவதில் விரைவாகச் செயல்பட்டு, குறைந்தது 10 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு ந.ப. 12-00
கிறேன்.

சென்னையிலுள்ள குடிசை வாழ் மக்களின் நலன் கருதி குடிசைகளை ஏழு ஆண்டுகளுக்குள்ளாக ஒழிக்க திட்டம் தயாரிக்க முடிவு செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் புதிய குடிசைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கிராமப்புறங்களில் மக்கள் குடியிருக்க இடம்கூட இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அந்த ஏழை எளிய மக்களுக்கு குடிசை போட்டுக் கொடுக்கவும், வீட்டு மனை கொடுக்கவும், அரசு ஒரு நீண்ட காலத் திட்டத்தை உடனடியாகத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பல பாகங்களில் பருவமழை தவறிவிட்டது. குறிப்பாக ராதாபுரம் துணைவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மழை தவறிவிட்டிருக்கிறது. அங்குள்ள வடக்கன்குளம், காவல்கிணறு, ஆவணகுளம் போன்ற கிராமங்களில் மக்கள் குடிக்கக்கூட தண்ணீர் இன்றி அவதிப்படுகிறார்கள். இதனை மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டும் இன்னும் அங்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுக்க நான் இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் மக்கள் கட்டவேண்டிய கடன்கள், தீர்வைகள், கூட்டுறவுக் கடன்கள் இவற்றைக் கட்டவேண்டும் என்றும் நிர்ப்பந்தம்

ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டு, நில உச்சவரம்பிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். அப்படி தப்பித்துக்கொள்ளாத வகையில் அதற்கான ஏற்பாடுகள் இந்தச் சட்டத்தில் இல்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய காலத்தில் எல்லாம் நகர்ப்புறத்தில் இருப்பவர்கள்தான் நன்மை அடைந்திருக்கிறார்கள். இவ்வாறாக நன்மை அடைந்திருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய வருவாய்க்கு உச்ச வரம்பு ஏதாகிலும் கட்டப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சாதாரணமாக கிராமத்தில் இருக்கும் விவசாயிக்கு நில உச்சவரம்பு என்று இருக்கும்போது, அதிக வருவாயைப் பெற்றுக்கொண்டு நகரத்தில் இருப்பவர்களுக்கு ஏன் வருவாய் உச்சவரம்பு வைக்கக்கூடாது? இப்படி நகரத்தில் இருப்பவர்களுக்கு உச்சவரம்பு இல்லாததினால், கிராமத்து விவசாயிக்கு மாறுபட்ட உணர்வுதான் ஏற்படும். ஆகவே, கிராமப் புறத்தில் நில உச்சவரம்பு என்றிருப்பதைப்போல, நகர்ப்புறத்தில் இருப்பவர்களின் வருவாய்க்கு உச்சவரம்புத் திட்டத்தை இனி அடுத்த ஆண்டு வருகிற பட்ஜெட்டிலாகிலும் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேவ.

இந்தப் பட்ஜெட்டிலே குறிப்பிட்டுள்ள உணவு உற்பத்தியைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். பசுமைப் புரட்சி, பசுமைப் புரட்சி என்று சொல்லப்படுகிற நேரத்திலே, ஒரு முக்கியமான. பகுதி எந்தக் காரணத்தாலோ முழுவதும் விடப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே சுமார் 32,300 குளம், குட்டைகள் இருக்கின்றன. இவைகள் மராமத்து செய்யப்படுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையின் அளவைப் பார்த்தால், மிகவும் குறைவாகவே இருக்கிறது. இவைகளுக்கு 9 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நமக்கு ஆச்சரியத்தைத்தான் ஏற்படுத்துகிறது. நமது மாநிலத்தில் குளம், குட்டைகள் ஆகியவற்றின் பாசனத்தின்மூலம் 22½ லட்சம் ஏக்கரா சாகுபடிக்கு வருகிறது. கிணற்றுப் பாசனத்தின் மூலம் 12½ லட்சம் ஏக்கரா அளவு சாகுபடிக்குக் கொண்டுவரப்படுகிறது. கிணறுகளை மேலும் நன்றாக ஆழப்படுத்தினால்தான் உணவு உற்பத்தி மேலும் பெருகும். ஆகவே, குளம், குட்டை மராமத்து வேலைகளுக்கான நிதியை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'காட்கில் கமிட்டி ரிப்போர்ட்' வந்ததிலே குளம், குட்டைகளை ஆழப்படுத்துவதற்காக ஒரு டிபார்ட்மெண்ட் அமைக்கப்பட்டு, அது செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டத்தோடு நின்றுபோய்விட்டிருக்கிறது. இன்னும் ஏராளமான குளங்கள், குட்டைகள் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. இவைகளைச் சீர்படுத்தினால் இன்னும் நிறைய நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். இராமநாதபுரம் மாவட்டத்தில் 4,800





சதுர மைல் பரப்பளவுள்ள குளம் குட்டைகள் இருக்கின்றன. 6,018 குளம், குட்டைகள் இருக்கின்றன. அவை தூர் எடுக்காமல் அப்படியே இருக்கிறது. இவையெல்லாம் எப்படி விடப்பட்டிருக்கின்றன என்று புரியவில்லை. ஆகவே, சர்க்கார் இன்னும் அதிகக் கவனம் செலுத்தி, இவைகளையெல்லாம் மராமத்து செய்து, இன்னும் பெரிய அளவில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ரிப்போர்ட்டிலே இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்த அரசை மட்டும் குறிப்பிடவில்லை. ஏதோ ஒரு காரணத்தாலே தொடர்ந்து 30, 40, 50 வருஷகாலமாக குளம் குட்டைகள் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. கோயம்புத்தூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் இரண்டு குளங்கள் மண் மேடிட்டு, தண்ணீர் தேங்கி நிற்காமல் போய்க்கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி அந்தக் குளங்களை ஆழப்படுத்தி, தூர் எடுக்கவேண்டும் என்கிற குறிப்பு 1959-லேயே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. பல சர்க்கார்கள் வந்துவிட்டன. இன்னும் கவனிக்கப்படவில்லை. அதில் கவனம் செலுத்தி அந்த இரண்டு குளங்களையும் மராமத்து செய்து தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் ஜில்லாவின் மொத்த நிலப்பரப்பு 6,018 சதுர மைல். அதில் 127 குளங்கள் இருக்கின்றன. பெரும்பகுதி கிணற்றுப் பாசனத்தையே நம்பி இருக்கின்றன. கிணற்றுப் பாசனம் என்கிறபோது மின்சாரம் தான் அடிப்படையாக இருக்கிறது. ஏற்கனவே கோயம்புத்தூர் விவசாயிகள் தாங்க முடியாத நிலையில் இருக்கிறபோது மின்சாரக் கட்டணத்தை 1½ மடங்கு அதிகப்படுத்துவது அந்த ஜில்லா விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும். தயவுசெய்து அந்தப் பகுதி விவசாயிகளுக்குக் கொஞ்சம் சலுகை காட்டவேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் பலவகையில் உற்பத்தி செய்யப்படுகிறது. அணுவில் இருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறது. நெய்வேலியில் நிலக்கரியில் இருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறது. இன்னும் எண்ணெயில் இருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இப்படி வேறுபல வகைகளிலும் உற்பத்தி செய்ய வாய்ப்புக்கள் இருப்பதனால் பாண்டியாறு-புள்ளம்புழா திட்டத்தின் கீழ் தண்ணீரைக் கோவைப் பகுதிக்குத் திருப்பி விட்டால் கோவை மாவட்டப் பகுதியில் 1½ லட்சம் ஏக்கரா பாசனம் பெறும். இன்னும் சோலையாறு என்று ஒன்று இருக்கிறது. அதையும் இவற்றுடன் இணைத்துவிட்டால் இந்த மூன்று ஆறுகளும் கோவை மாவட்டத்தை வளமிக்க பகுதியாக ஆக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இறங்கி நடந்து சென்று திரும்பியிருக்கிறார்கள். நடந்து சென்ற போது அவர்களுடைய இயல்புப்படி, பல்லைமட்டும் கடித்துக் கொண்டு பொறுத்துக்கொண்டு, 'பரவாயில்லை, பரவாயில்லை' என்று சொல்லிக்கொண்டு நடந்து வந்தார்கள். அப்படிக் கடுமையாக உழைத்ததன் காரணமாக, காரிலே ஏறும்போது, காலணியை மாட்டமுடியாமல், கால் சுரந்துவிட்டது. மறுமாதம் நிதி அமைச்சர் கோடைக்கானலுக்கு வந்தபோது, "சாதிக்கை நடக்க வைத்துவிட்டாய், என்னுடைய நிலை என்ன" என்றார்கள். அவர்களை இன்னொரு கிராமத்திற்குக் கூட்டிச் சென்றேன். மாலை ஐந்து மணிக்குத்தான் சாப்பாடு போட்டேன். அவர்கள் சொன்னார்கள், 'எனக்குத் தெரியும் நீ எந்த அளவிற்கு சிக்கல் கொடுப்பாய் என்று' என்று சொன்னார்கள். பிறகு 15 நாள் கழித்து மதுரையில் சந்தித்தபோது, ஆலடி அருணா கூப்பிட்டு செய்து சக்கையாகப் பிழிந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் 4 மைல் நடந்தபிறகு, 20 ஆண்டு காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்த கொடைக்கானல்-பழனி ரோட்டை ரூ. 75 லட்சத்தில் உடனடியாக வேலை தொடங்கச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் காரியத்தைப் பாராட்டி, பழைய எம்.எல்.ஏ. லக்ஷ்மிபதி ராஜ் என் கையைக் குலுக்கி 20 ஆண்டு காலமாக பரிசீலனையில் கூட இல்லாமல் இருந்த திட்டத்தை நீங்கள் 100 மைல் போகவேண்டியதிருந்ததை 26 மைல்களாகக் குறைக்கும் ரோட்டு வேலையைச் செயல்படுத்தியிருக்கிறீர்கள் என்று பாராட்டிப் பேசினார்கள். அதே மாதிரி பல திட்டங்கள் இருக்கின்றன. நிதி அமைச்சர் கொடைக்கானல் வந்தபோது செய்தார்கள். வெள்ளையன் காலம் முதல் பட்டா வழங்கப்படாத இடத்தில் 45,000 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். வெள்ளையர் பட்டா வழங்க ஒரு அசைன்மெண்ட் ஆபீஸ் வைத்திருந்தார்கள். அதை காங்கிரஸ் ஆட்சியில் மூடிவிட்டார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் வந்து பார்த்துவிட்டு, பட்டா வழங்க அசைன்மெண்ட் ஆபீஸ் ஒன்றையும் திறந்து அதோடு ஒரு சப்-கலெக்டரையும் உடனடியாக நியமித்து, ஏழை எளியவர்களுக்கு பட்டா வழங்கவேண்டும் என்று உத்தரவு போட்டார்கள்.

நாவலர் வந்தபோது மூன்று மணிக்குத்தான் மதிய உணவு கொள்ள முடிந்தது. அவர்கள் வந்தபிறகு பரிசீலனை செய்து பழைய மருத்துவ மனையை போடியில் பள்ளிக்கூடம் வைக்க வேண்டும் என்றும் ஒரு ஆலோசனை கூறினார்கள். ஆக, இந்த வகையில் முன்னேற்றக் கழக அமைச்சர்கள் ஆங்காங்கே கடுமையாக உழைத்து, காரியங்களைச் செய்கிறார்கள்.

என்னுடைய தொகுதியான பெரிய குளம் தொகுதியில் சோத்துப்பாறை, குப்பான்பாறை அணைக்கட்டு விடயம் இருக்கிறது. நான் நகர மன்றத் தலைவராக இருந்து வருகிறேன். சோத்துப்



பாறை, குப்பான் பாறை அணை கட்ட வேண்டுமென்று நகரசபை மூலமாக 40, 50 ஆண்டுகளாகக் கேட்டும் கட்டவில்லை. இதை உடனடியாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கொடைக்கானலிலுள்ள தடியன் குடிசையிலிருந்து ஒட்டன்சத்திரம் வரைக்கும் நல்ல ரோடு வசதி கிடையாது. நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி எடுத்துக்கூறி இருக்கிறோம். இந்த ரோடு வசதியை உடனடியாகச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அங்கு அசைன்மென்ட் ஆபீஸ் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 40 ரூபாய் என்றுதான் கொடுக்கிறார்கள். அந்த அளவை உயர்த்தி 80 ரூபாய்க்கு மேல் போகாத நிலையில் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

**திரு. பி. வேலுசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழக அரசானது இந்தப் பட்ஜெட்டில் 30 ஸ்டாண்டர்டு ஏக்காராக இருந்ததைக் குறைத்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கொண்டுவந்ததற்கு என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இந்தப் பட்ஜெட்டிலே போடப்பட்டிருக்கிற வரிகளைப் பார்த்தால் வரி தாங்கக்கூடியவர்களுக்கும், வசதிபடைத்தவர்களுக்கும், சௌகரியப்பட்டவர்களுக்கும்தான் போடப்பட்டிருக்கிறது என்பது நன்கு விளங்கும். மோட்டார் வண்டிகள், குளிர்ச்சாதனப் பெட்டிகள், கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், ரேடியோக்கள், புகைப்படக் கருவிகள், மின்சாரப் பொருள்கள், விலையுயர்ந்த கற்கள், நுரை ரப்பர் விரிப்புகள், நறுமணப் பொருள்கள் போன்ற பொருள்களின்மீது வரி போடப்பட்டிருக்கிறது. கொடுப்பதற்கு வாய்ப்பும் சக்தியும் படைத்தவர்களுக்குத்தான் வரி போடப்பட்டிருக்கிறது. இந்தப் பொருள்களுக்கு வரி விதித்திருப்பது நியாயம்தான் என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்திருக்கும் நேரத்தில் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வழியிருக்கிறதா என்று கவனம் செலுத்தப்படுகிறது. நல்ல கவனம் செலுத்தப்பட்டு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்கும்போது, அதில் சில குறைகள் இருப்பதாகத் தென்படுகிறது. பொதுவாக எடுத்துக்கொண்டால் தஞ்சாவூர் மாவட்டத்தில் கோவில், மடங்களுக்கு ஏராளமான நிலம் இருக்கிறது. பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட்டுகள் எல்லாம் டிரஸ்ட் என்று வைத்துக் கொண்டு, தங்கள் வாழ்க்கை சௌகரியமாக நடப்பதற்கு வேண்டிய

[திரு. பி. வேலுசாமி] [1970 மார்ச் 4

கடைசியாக நில உச்சவரம்புச் சட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. இது ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிப்பதாக இருக்கிறது, இதன் மூலம் இரண்டு லட்சம் ஏக்கரா ஏழைகளுக்குக் கிடைக்கக்கூடும் என்கிறபோது இதுபோலவே இன்னும் டிரஸ்ட், மடங்கள் முதலியவற்றில் இருக்கும் லட்சக்கணக்கான ஏக்கரா நிலங்களையும் எடுத்துக்கொள்ள வழிசெய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சோ. கருணைநாதன் : வணக்கத்திற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுக் கணக்கு நல்லதொரு அம்சமாகும். ஏழை எளியவர்களுக்கு வரி போடாமல், தாங்கக்கூடியவர்களுக்கு இருக்கக்கூடிய வரியைக் கொஞ்சம் உயர்த்தியிருப்பதைப் பல கோடி மக்கள் பாராட்டுகிறார்கள்.

கெஜட் பதிவு இல்லாத ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் இன்றைக்கு சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு முன்பாக இடைக்கால நிவாரணமாக 10 ரூபாய் உயர்த்திக் கொடுத்திருப்பதைப் பாராட்டவேண்டும். அதுவும் நம்முடைய பட்ஜெட் பற்றுக்குறையாக இருந்தும் கூட அரசு ஊழியர்களுடைய நிலையைக் கருத்தில் கொண்டு இப்படி இடைக்கால நிவாரணம் அளிக்க முன் வந்திருப்பதை அவர்கள் பாராட்ட வேண்டும்.

மேலும் ஆசிரியர்களுக்குத் தரப்பட்டிருக்கிற சலுகைகளினால் பல்லாயிரக்கணக்கானவர்கள் பயன் அடைவார்கள். அவர்களுடைய உள்ளம் எல்லாம் பூரிப்பு அடையும். இந்தத் தமிழக அரசைப் பாராட்டுவார்கள்.

மலைவாசஸ்தலங்களில் பணி புரிகிற ஆசிரியர்களுக்கு குளிர் காலப் படி அளித்திருப்பதற்கு அவர்களுடைய சார்பாக நான் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குளிர் காலப் படி வேண்டுமென்று அவர்கள் பல நாட்களாகக் கோரி வந்தார்கள். அவர்களுடைய கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தான் ஆதரித்ததோடு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகவும், அண்ணா அவர்களுடைய பாரம்பரியத்தில் வந்திருக்கிற தமிழக அரசு இன்றைக்கு அதைச் செயல்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்க மாபெரும் அம்சமாகும்.

தேயிலை வரியை உயர்த்தாமல் இருந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.. சிறு தேயிலைத் தோட்டக்காரர்களுக்கு இன்னும் அதிக உதவி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது தேயிலை போர்டினுடைய உதவியினால் எட்டு கூட்டுறவுத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 8 தேயிலைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1970 மார்ச் 4] [திரு. சோ. கருணைநாதன்]

நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் ஓவாலி தோட்டம் இருக்கிறது. நான்கு ஆயிரம் ஏக்கரா தேயிலை பயிரிட்டிருக்கிறார்கள். வெள்ளைக்காரர் காலத்தில் குத்தகைக்கு விட்டது. 99 ஆண்டுகள் முடிந்து விட்டன. இப்போது அதை எடுத்தால் இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்குக் கொடுக்கலாம் அல்லது கூட்டுறவு முறையில் அந்தத் தேயிலைத் தோட்டத்தில் வாழ்வளிக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரிய தேயிலைத் தோட்டங்களைப் பலர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சர்க்கார் நிலங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை அவர்களிடம் இருந்து எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் நீலகிரியில் ஆடுதுறை என்னும் இடத்தில் தங்கம் இருப்பதாகப் பல ஆண்டுகளாகவே கேள்விப்பட்டு வருகிறோம். ஏற்கனவே சோதனை நடந்தது. மீண்டும் முயற்சி எடுத்து அதைத் தோண்டி எடுப்பதற்கான காரியங்களை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு கொண்டு வந்திருக்கிற பட்ஜெட்டில் நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்றாலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் பேசுகின்றபோது அரசு செய்திருக்கிற பணிகளைப் பாராட்டாமல் குறைகளையே சொல்லிவந்தார்கள்.

கடந்த இருபதாண்டு காலமாக அவர்கள் ஆட்சி செய்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்து 3 ஆண்டுகள் தான் ஆகியிருக்கின்றன. அதற்குள் எத்தனையோ நல்ல காரியங்களை செய்திருக்கின்றன. என்றாலும் தங்களால் 20 ஆண்டுகளில் சாதிக்க முடியாதவற்றை வந்து 3 ஆண்டுகள் ஆகவில்லை—வேலையில்லாத் திண்டாட்டம் போயிற்றா? தொழில் வளர்ந்ததா என்றெல்லாம் பேசுகிறார்கள். நாட்டில் செய்யவேண்டிய காரியங்கள் என்ன என்ன இருக்கின்றன, பணத்திற்கு இன்ன இன்ன வழிகளில் வரி போடுங்கள் என்றெல்லாம் யோசனை சொல்லாமல்—நீங்கள் அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை, வரிக்கு மேல் வரி போடுகிறீர்கள் என்கிற பழைய பல்லவியையே பாடுகிறார்கள்.

என்னுடைய மாவட்ட மக்கள்மட்டும் அல்ல, இந்த மாநில மக்கள் அத்தனை பேர்களும் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். அந்த நிலைக்கு இந்த அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. அதற்காக இந்த அரசை யாரும் வாழ்த்தாமல் இருக்க முடியாது. யார் எப்படிப்பட்ட குறைகளைச் சொன்னாலும் நம்முடைய அமைச்சர்கள் தீவிரத்துடன் செயல்படவேண்டும், நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய உறுதியான காரியங்களைச் செய்யவேண்டும் என்று கூறி அரசை வாழ்த்தி, நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1970 மார்ச் 4

**திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர் :** துணை சபாநாயகர் அவர்களே, 1970-71 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இந்த வரவுசெலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கும், உள்ளாட்சித்துறை ஊழியர்களுக்கும், ஆசிரியர் பெருமக்களுக்கும் பத்து ரூபாய் இடைக்கால நிவாரணமாக ஈட்டுப்படியை உயர்த்திக் கொடுக்க முன் வந்திருப்பதை நாம் எல்லோரும் வரவேற்கின்றோம். வெளியிலே உள்ள ஆசிரியர் பெருமக்களும் பாராட்டுகின்றனர், வரவேற்கின்றனர்.

இந்த நேரத்தில் நில உச்சவரம்பை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைத்திருப்பதை வரவேற்கிறேன். விவசாயப் பெரு
பி.ப. 12-30 மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் குறுகிய காலக் கடன் என்ற முறையிலே 1970-71ஆம் ஆண்டுக்கு என்று 62 கோடியே 50 லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதை வரவேற்றுப் பாராட்டி அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், விவசாயப் பெருமக்கள் கடன் என்ற முறையிலே வெளியிலே அதிக வட்டிக்குக் கூட பணம் பெறமுடியாத காலத்திலே அரசு குறுகிய காலக் கடன் என்ற முறையிலே ஒதுக்கி விவசாயப் பெருமக்கள் வாழ்வதற்கு உதவி செய்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்டகாலக் கடன் உதவி என்ற முறையிலே நில அடைமான வங்கிகள் 105 வங்கிகள் மூலமாக சென்ற ஆண்டு 14 கோடி ரூபாய் கொடுத்தது, இந்த ஆண்டு மேலும் 60 நில அடைமான வங்கிகளை ஏற்படுத்தி, ஆகமொத்தம் 165 வங்கிகளில் 16 கோடி ரூபாய்வரை அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. இது விவசாயப் பெருமக்களுக்கு மிகவும் பயன்படும். உணவு உற்பத்தியும் ஏராளமாக ஏற்படும். அதன் காரணமாகப் படி அரிசித் திட்டமும் இந்த ஆண்டு நிறைவேறும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே உள்ள சில குறைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் திருப்பத்தூர் நகரத்திற்கு அடுத்து இருக்கிற ஏலகிரி மலையில் 20க்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அங்கே ரோடு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அரசுக்குத் தீர்மானங்களும், மகஜர்களும் அனுப்பியிருக்கிறோம். இதைத்தவிர மலை மீது பல விவசாயிகள் வாழ்கிறார்கள், அவர்களுக்குத் தண்ணீர் வசதியில்லாமல் இருக்கிறது. மலைமீது பல குன்றுகளில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் தேங்காமல் வெளியிலே சென்று விடுகிறது. எனவே அதைத் தடுத்துப் பயன்படுத்தக்கூடிய முறையிலே சிறு நீர்த்தேக்கங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 மார்ச் 4] [திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர்]

அரசு பின்தங்கிய வகுப்பினருக்காக அவர்கள் இந்த மாநிலத்திலே நல்ல முன்னேற்றம் அடைவதற்காக ஒரு குழுவை நியமித்து இருக்கிறது. பின்தங்கிய வகுப்பினருக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை மேலும் அதிகமாக ஆக்கி நகர்ப்புறங்களில் அவர்களுக்கு வீடுகட்டிக்கொள்ளக்கூடிய வகையிலே காலி மனைகளை ஒதுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர் நகரத்திற்கு ஒரு கல்லூரி ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அதிலும் குறிப்பாக பெண்கள் கல்லூரி ஒன்று ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். கல்வியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நான்கு புதிய கல்லூரிகள் திறப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் நகரத்திலே ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது பெரிய நகரமாக இருப்பதால் அரசாங்கத்தின் மூலமாக அரசுக் கல்லூரியாக அதை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடஆற்காடு மாவட்டத்திலே செங்கம் தொகுதியில் செங்கம் நகரத்திலே செய்யாறு ஒன்று போய்க்கொண்டிருக்கிறது. அந்தச் செய்யாற்றுக்கு மேம்பாலம் கட்டவேண்டுமென்று நீண்டநெடு நாட்களாக அந்தத் தொகுதி மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1962ஆம் ஆண்டிலே செய்யாறு மேம்பாலம் சேர்க்கப்பட்டது. ஆனால் எமர்ஜன்சி என்ற முறையிலே அதை விட்டுவிட்டார்கள். நான் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு மேம்பாலத்தை உடனடியாக கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழை காலங்களிலே செய்யாற்றில் போகின்ற பஸ்கள் எல்லாம் நின்றுவிடுகின்றன. அரசாங்க பஸ்களே மூன்று பஸ்கள் அந்த வழியாகப் போய்க்கொண்டிருக்கின்றன. அமைச்சர்கள் எல்லாம் நேரிலே காண்கின்ற ஒன்றுதான் இது. நான் 1962-ஆம் ஆண்டிலே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து இந்தக் குறை இருக்கிறது. ஆகையினால் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து செய்யாறு மேம்பாலத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தவிர அரசாங்க மருத்துவ மனை, அரசாங்கக் கல்லூரி இவற்றிற்கெல்லாம் நல்ல கட்டடங்களைக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கம் தொகுதியில் உள்ள தூதுகோஷ்டி ஒன்று முதலமைச்சர் அவர்களை வந்து சந்தித்து இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்.**

* **திரு. கே. ஆர். கோவிந்தன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை சமதர்ம சமுதாய அடிப்படையில் கொண்டு வரப் பட்டிருப்பதைப் பாராட்டி, ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எதிர்த் தரப்பில் உட்கார்ந்திருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் இதிலே ஒன்றும் இல்லை ஒன்றும் இல்லை என்று சொல்லி விட்டு, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் சிலவற்றைச் செய்யத் தவறிவிட்டது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். வாதத்திற்காக அதை உண்மை என்றே ஒத்துக் கொள்ளுகிறேன்.

அன்றைக்கு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தமிழகத்தில் நடந்த நேரத்தில் நாயைச் சுட்டுத் தள்ளுவது போல் நீங்கள் சுட்டுத் தள்ளினீர்கள். அதை இந்தத் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செய்யவில்லை. எங்களுடைய அருமைத் தலைவர்களையும், தொண்டர்களையும் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தீர்கள். அதைத் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செய்யவில்லை. ரவுடிகளையும், சந்தேகத்திற்கு உள்ளானவர்களையும் பிடிக்கின்ற 54-வது செக்ஷன்படி எங்களுடைய அருமை நண்பர்களையும், சட்ட மன்ற உறுப்பினர்களையும் கைது செய்து துன்புறுத்தினீர்கள்; அதை திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செய்யவில்லை என்பது உண்மைதான். டிஃபென்ஸ் ஆப் இந்தியா ரூலைப் பயன்படுத்தி தலைவர்களை எல்லாம் பிடித்து வெளியே வரமுடியாதபடி அபார வேலை செய்தீர்கள். அதைச் செய்யவில்லை இந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார். வெள்ளைக்காரன் எழுதிய சட்டம், கண்டுபிடித்த துப்பாக்கி, கட்டிய சிறைச்சாலை இவைகளை மட்டும் நம்பி காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி நடத்தி வந்தது. அந்த மட்டுமே இந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் நம்பவில்லை என்பது உண்மைதான். காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது அப்படி எல்லாம் சித்திரவதை செய்தும் எங்களுக்கு அண்ணா அவர்கள் கற்றுத் தந்த பாடத்தை என்றைக்கும் நிறைவேற்றியே தீருவோம் என்ற முறையில் அமைதியாக இருந்தோம். சில நேரங்களில் நம்முடைய முதல்வர் அவர்கள் ஏன் இவ்வளவு பொறுமையாக இருக்கிறார் என்றுகூட நாங்கள் ஆயாசப்படுவதுண்டு. அந்த அள வுக்கு அண்ணா அவர்கள் கற்றுத் தந்த பாடம் அவரிடம் முதலிடம் பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நில வரியைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். 1966-ம் ஆண்டு நவம்பர் திங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலே ஒரு தனி நபர் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு நிலவரி நீக்கம் செய்யப்பட வேண்டுமென்று அந்தத் தனி நபர் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இன்றைக்கு எதிர்க் கட்சியில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் அன்றைக்கு அதை எதிர்த்து வாக்களித்து விட்டு இன்று நிலவரியைப் பற்றிப்



பேசுகிறார்கள். நண்பர் விநாயகம் அவர்களுக்குக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன்—இரட்டை வேடம் யார் போடுகிறார்கள் என்பதைத் தெளிவாகச் சிந்தித்துப் பாருங்கள். இரட்டை வேடம் போட்டே பழக்கப்பட்டவர்கள் நீங்கள். சிண்டிகேட், இண்டிகேட் இரட்டை வேடம்; காளைமாடு யாருக்குச் சொந்தம் என்பதிலே இரட்டை வேடம். ராஜாவும் ராணியும் சேர்ந்து மாடுகளைத் துரத்தி விட்டார்கள். அவை ஓடிக்கொண்டே இருக்கின்றன. அவை எங்கே போய் நிற்குமோ தெரியவில்லை.

தேர்தல் பிரகடனத்திலே கூறியதை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் நிறைவேற்றவில்லை என்று கூறுகிறார்கள். இது தவறான வாதம், அப்பட்டமான பொய். இப்படி பொய்யைப் பேசிப் பேசித்தான் அங்கே போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். ஏன் இவ்வாறு உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைப் பேச வேண்டும்? நாங்கள் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறோம் என்று சொன்னோம். அதற்காக அண்ணா அவர்கள் சட்ட மன்றத்தையே கூட்டி தீர்மானித்தார்களே, இதை மறந்து விட்டீர்களா? சேலம் இரும்பாலைத் திட்டத்தைப் பற்றித் தேர்தல் பிரகடனத்திலே சொன்னோம்; அதைச் செய்யவில்லையா? இன்றைக்கு அதிலே வெற்றி பெற்றுக்கொண்டு வருகிறோமே. காவிரி-வீராணம் திட்டம் பற்றிச் சொன்னோம். அந்தத் திட்டம் செயல்படத் தொடங்கவில்லையா? பஸ்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று சொன்னோம். இன்றைக்கு அதிலே வெற்றி காண வில்லையா? ஆசிரியர்கள், மற்றுமுள்ளவர்களுடைய குறை போக்கப் படவேண்டுமென்று சொன்னோம். இன்று இடைக்கால நிவாரணம் தரப்படவில்லையா? சம்பளக் குழு ஏற்படுத்தவில்லையா? இதை யெல்லாம் உணர வேண்டாமா? குடிசை வாழ்வோருக்கு நிரந்தர இடம் தரப்பட வேண்டுமென்று சொன்னோம். இன்று எரியாத வீடுகள் கட்டித் தரப்படவில்லையா? பின்தங்கிய மக்களுக்காக அரசாங்கம் தனிப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னோம். இன்றைக்கு அது செயல்படவில்லையா? ஏழைகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். இன்று 1,50,000 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறதா இல்லையா? கிராமங்களில் மின் வசதி, குடிநீர், மருத்துவம், கல்வி போன்ற வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று சொன்னோம்; இன்றைக்கு அதிலே வேகமாக வெற்றி நடைபோட்டுக் கொண்டு வருகிறோம். இதற்கெல்லாம் மேலாக உணவுக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று சொன்னோம்; அதை நீக்கிப் பல நாட்கள் ஆகின்றன. இப்படிப் பல்வேறு காரியங்களைச் செய்து வருகிற நேரத்தில் மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் விதண்டா வாதம் பேசாமல் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல் நீங்கள் இப்படி வேடம் போட்டுப் பேசிக் கொண்டிருப்பதை 1967-க்குப் பின்னும் மக்கள் நம்புவார்களா? இனியாவது உண்மையைப்

பேசுங்கள். இல்லாவிட்டால் 1972-ல் மிச்சம் மீதி இருக்கும் வேடத்தையும் கலைத்து, அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்ப மக்கள் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியிலுள்ள சில பிரச்சினைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, மின்சார வசதியைப் பெருக்க வேண்டுமென்ற நல்ல ஆர்வம் உள்ள நேரத்தில் அமரகுந்தி, பள்ளிப்பட்டி, கருக்கல்வாடி, கொப்பம்பட்டி, வெள்ளார் போன்ற பகுதிகளுக்கு மின்சார வசதியை விரைவில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. க. முருகேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மீது பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

1970-71-ல் தெரிவிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் பெரிதும் ஏமாற்றத்தை அளிக்கும் வகையில் உள்ளது. போடப்பட்டுள்ள வரிகள் பாமர மக்களைத்தான் மேலும் பாதிக்கும். தருமபுரி மாவட்டத்தில் தொழில் முறையிலும், விவசாய முன்னேற்றத்திற்கான அணைத் திட்டங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஏழை நெசவாளர்கள் புனர் வாழ்வு பற்றியும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு முதலியவை பற்றியும் தெரிவிக்கப்படவில்லை. நெசவாளர்கள் விசைத்தறி புகுத்துவதனால் பெரிதும் பாதிப்பு அடைவார்கள் எனத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நெசவாளர்கள் வாழும் பகுதிகளில் கட்டாயம் ரேஷன் கடைகள் நடைபெற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்திலிருந்து தனியாக இயங்க பிரிக்கப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகியும் அரசு மாவட்ட அபிவிருத்திக்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. பஞ்ச நிவாரண நிதிக்காக கொடுக்கப்பட்ட தொகை அடிப்படைத் தேவைகளுக்கு செலவிடப்படவில்லை. பல ஏரிகளும் கால்வாய்களும் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்திற்கு ஒதுக்கிய நிதி பற்றாக்குறை என்றே சொல்லலாம். சென்ற ஆண்டு போதிய மழை பல இடங்களில் குறைவே. பஞ்ச நிவாரணப் பணி இன்னும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே என்னுடைய கருத்து. பெண்ணாகரம் வட்டாரத்திலும் பாலக்கோடு தொகுதியில் சில பகுதிகளிலும் போதிய அளவு மழை இல்லை. இப்போதே தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே தர்மபுரி மாவட்டத்தை ஒர் பிற்பட்ட மாவட்டமாகப் பிரகடனப்படுத்த வேண்டும். தர்மபுரி





தனியாகப் பிரிக்கப்பட்டதிலிருந்து ஒரு பெரிய தொழிற்சாலையோ அல்லது அணைக்கட்டுகளோ அதன் அபிவிருத்திக்காக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்றத்தில் பேசுகிற பழக்கம்தான் உண்டு. எழுதிப் படிக்கிற பழக்கம் இல்லை. உறுப்பினர் அவர்கள் படிக்கிறாரா அல்லது பேசுகிறாரா ?

**திரு. க. முருகேசன் :** நேற்று குறிப்பைப் பார்த்து சிலர் பேசியிருக்கிறார்கள். நானும் அப்படித்தான் செய்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அபிவிருத்திக்காக தர்மபுரி மாவட்டத்திற்கு என ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவேண்டும். அதன் மூலம் அணைத்திட்டங்களும் அதாவது, சின்னாறு அணைத்திட்டம் சுமார் 108 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு போடப்பட்டு அரசு நிர்வாக அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இந்த நிதி ஆண்டு பாசன மானியக் கோரிக்கையில் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நிதி, பொதுப்பணித்துறை அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த அணைத் திட்டத்தினால் பல ஆயிரம் எக்கர் நிலங்கள் பாசன வசதி அடைவதுடன் பாலக்கோடு நேர்தலாவ் ஏரியிலிருந்து வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு போனால் தர்மபுரி, கடகத்தூர், சோகத்தூர், பாப்பாரப்பட்டி முதலிய பெரிய ஏரிகளில் வருடம் முழுவதற்கும் பாசன வசதிக்கான முறையில் நீர் வளம் பெருகும். இந்த ஒரு நல்ல காரியத்தைச் செய்ய நானும் என் தொகுதி மக்களும் கேட்டுக்கொள்கிறோம். அதன் மூலம் தர்மபுரி மாவட்டமே செழிப்பு உள்ள ஓர் பிரதேசமாக ஆகுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் தொப்பையாறு அணைத் திட்டம் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுகிறேன். ஹொகனிக்கல் மின்விசைத் திட்டத்தையும் மைசூர் மாநில அரசுடன் பேசி நமது மாநிலத்திற்கே தன்னிகரற்ற இந்தத் திட்டத்தை அரசு முக்கியத்துவம் கொடுத்து எடுத்து நடத்த வேண்டுகிறேன்.

இதேபோன்று இன்னும் தொட்டஹலா அணைத் திட்டத்தையும், சிறிய சிறிய அணைக்கட்டுகள் அதாவது நீர்பாசன தலைமைப் பொறியாளரிடம் கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றினால் எங்கள் மாவட்டம் ஒரு செழிப்புள்ள மாவட்டமாகத் திகழும்.

எங்கள் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் ஏற்பட வழி செய்து தரவேண்டும். ஹொகனக்கல் அணைக்கட்டுத் திட்டம் ஏற்பட்டால் நிறைய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். அதோடு எங்கள் மாவட்டம் அதனால் பொருளாதாரத்திலும் உயர்ந்து நிற்கும். ஆகையால்தான் தர்மபுரி மாவட்டத்திற்கென தனித் திட்டம் போட்டு தொகையை இந்த ஐந்தாண்டு காலத்தில் செலவு செய்து தர்மபுரி மாவட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு சரிநிகரில் வைக்கலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திற்கென தனியாக இயங்கும் மாவட்ட நூலக ஆணைக்குழு ஏற்படுத்தப்படவில்லை. தர்மபுரி மாவட்டத்தில் நடுவண் நூல் நிலையக் கிளைகள் 37 மட்டுமே உள்ளன. சேலத்தில் சுமார் 90 கிளை நடுவண் நூல் நிலையங்கள் உள்ளன. சேலத்திலிருந்து உடனடியாகப் பிரித்துத் தர வேண்டுகிறேன்.

பாலக்கோடு வட்டாரம் 55 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. இதை பாலக்கோடு வட்டாரம், காரியமங்கலம் வட்டாரம் என இரண்டாகப் பிரித்துத் தர வேண்டுகிறேன். பாலக்கோடு துணை தாலுகாவை தாலுக்கா அந்தஸ்திற்கு உயர்த்தி அறிவிக்க வேண்டுகிறேன்.

பாலக்கோடு வட்டத்திற்கு ஒரு சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும், நிலவள வங்கியும் உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் நிலவள வங்கிகளே ஏற்படுத்தப்படவில்லை. மற்ற மாவட்டங்களைப் போல் விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைய, நிலவள வங்கிகளை பாலக்கோடு, பெண்ணாகரம் வட்டாரத்திற்கு ஏற்படுத்தித் தரக் கோருகிறேன்.

பாப்பாரப்பட்டி, கரியமங்கலம் லோக்கல் பண்டு ஆஸ்பத்திரிகளை அரசு மருத்துவ மனைகளாக மாற்றவேண்டும் என நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டுவருகிறோம். இந்த இரு மருத்துவ மனைகளை அரசு எடுத்து நடத்தக் கோருகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் கூட்டுறவு மத்திய வங்கி செயல்படாமல் இருக்கிறது. இதனால் விவசாயிகள் கடன் வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கடன் நிலுவைகளை ஓரிரு ஆண்டுகளில் தவணைகளில் கட்ட அனுமதி வழங்கவேண்டும். சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் மழையின்மையே காரணம். மேலும் தர்மபுரி மாவட்ட மொத்த கூட்டுறவு விற்பனை பண்டகசாலை பெரிதும் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் எட்டு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்தை சங்கம் ஈடுசெய்யாத நிலையில் இருப்பதால், சங்கத் தலைவர் தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். இந்த நஷ்டத்திற்குப் பொறுப்பு அவர்தான். மேலும் இவரையே புதிதாக நிர்மாணிக்கப் போகும் சர்க்கரை ஆலைக்கு உப தலைவராக நியமித்திருக்கிறார்கள்.





அதுவும் எந்த நிலையில் போகுமோ தெரியவில்லை. கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தேர்தல் முறையைக் கொண்டு வாருங்கள். கட்சிக் கண்ணோட்டத்துடன் செல்வதால்தான் தர்மபுரி மாவட்டத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் எல்லாம் செயல்படாது இருக்கின்றன. இவைகள் சரிவர இயங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. பி. எஸ். மணி: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று அந்த அறிக்கையில கண்டுள்ள முக்கிய அம்சமாகவுள்ள நிலச்சீர்திருத்தத் திட்டத்தை ஆதரிக்கிறேன். 1961-ல் நிலச்சீர்திருத்தச் சட்டம் காங்கிரஸ் மகாசபை ஆட்சியில் இருந்தபோது கொண்டுவரப்பட்டது. அந்தக் காலத்தில் கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டம் முறையாக அமையப் பெறவில்லை. அதற்குக் காரணம், நிலச்சுவாந்தார்கள் இடையில் புகுந்துகொண்டு அரசாங்கத்தை ஏமாற்ற வழிவகைகள் நிறைய இருந்தன. அது மாற்றியமைக்கப்பட வேண்டும். கோவில்கள், மடங்கள், கல்லூரிகள், ஹைஸ்கூல்கள் இவற்றின் பெயரால் உள்ள நிலங்கள், டிரஸ்டுகள், ராமர், கிருஷ்ணர் படங்களை வைத்துக் கொண்டு அவற்றிற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும், இல்லையென்றால் இச்சட்டம் கொண்டு வருவதினால் ஒரு பலனும் இல்லை என்று அன்று பேசியிருந்தேன். அப்போது எதிர்க்கட்சியில் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை எடுத்துக்காட்டி காஞ்சியில் எழுதியிருந்தார்கள். நான் சொல்வதை நீங்கள் செய்யவில்லை என்றாலும் உங்களோடு இருந்துகொண்டிருக்கும் மணி அவர்கள் சொன்னதை யாவது செய்யத் தயாராயிருக்கிறீர்களா என்று கேட்டு எழுதியிருந்தார்கள். அதை நான் இப்போது இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட தலைவரின் கீழ் பணியாற்றி வந்திருக்கும் ஆட்சியாளர்கள் நிச்சயமாக வரப்போகும் சட்டத்தில் கல்லூரிகளின் பெயரால் உள்ள நிலங்களை, மடம், கோயில் பெயர்களில் உள்ள நிலங்களை, ட்ரஸ்டில் வைத்துள்ள நிலங்களை, ராமர், கிருஷ்ணன் படங்களின் பெயரால் வைக்கப்பட்டுள்ள நிலங்களை நாம் எடுத்தாலொழிய நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரத் தேவையேயில்லை. அப்படி அந்நிலங்களை எடுக்காவிட்டால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை என்பது என் தாழ்மையான கருத்து. அப்படியல்லாது, இதைக் கொண்டு வருவதால் தமிழ்நாட்டில் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்திவிட்டோம் என்று நினைத்தால் அது கூற்றாக முடியும். எப்படி வடிகட்டி எடுத்தாலும் அப்பாவி மிராசுதார்கள் தலையில் கை வைத்து எடுத்தாலும் இரண்டு இலட்சம் ஏக்கர்களுக்கு மேல் எடுக்க முடியாது. பொதுமக்களுக்கு எவ்வித பிரயோஜனமும் இல்லாமல், யாரோ எப்படியோ சாப்பிட்டுக் கொண்டிருக்கின்ற சொத்தை விட்டு விட்டு

[1970 மார்ச் 4

**திரு. கே. பி. எஸ். மணி :** நான் ஒருவன்தான் பேசுகிறேன், அந்த பார்ட்டியிலே. கட்சித் தலைவன் என்று என்னை ஊத்துக்கொண்டிருக்கிறீர்கள். விரைவில் முடித்துவிடுகிறேன்.

நம்முடைய அமைச்சரவர்களே கேட்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்களே, மத்தியிலே பார்லிமெண்டிலே சீட் குறைகிறது என்று சொல்கிறார்கள். ஆம், குறைகிறது. இங்கே கருத்தடையைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று சொல்லி, நாம் தீவிரப்படுத்துகிறோம். அங்கே எண்ணிக்கை குறைகிறது. இதைக் கவனிக்கும் பொழுது நாம் கருத்தடையை நிறுத்த வேண்டும், இல்லையென்றால், பார்லிமெண்டில் உள்ள சீட் குறையக்கூடாது என்ற நிலையில் முதலமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் அடிப்படையான திட்டப்படி, பாராளுமன்றத்தை நம் கீழ்க் கொண்டுவந்து, அதற்கான முறையைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லையென்றால் நமக்குப் பலவீனமான முறை ஏற்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மத்திய சர்க்காரிலிருந்து நம்முடைய சர்க்கார் அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைப்போலவே நான் கேட்கிறேன், பஞ்சாயத்து யூனியன்களுக்கு நம்முடைய சர்க்கார் அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும். கண்டிப்பு இல்லாத ஒரு சேனை முறையாக செயல்பட முடியாது. ஆகவே, கண்டிப்பு இல்லாத ஆட்சியும் முறையாகச் செயல்பட முடியாது. யார் எந்தத் தவறைச் செய்தாலும் நிச்சயமாகத் தண்டிக்கும் முறையில் அவர்களை ஏன் என்று கேட்கக்கூடிய அதிகாரம் அரசுக்கு எப்படியிருக்கிறதோ, அதேபோல் பஞ்சாயத்து யூனியன்களுக்கு இல்லையென்றால் ஒழுங்காக, முறையாக, நிர்வாகத்தை யூனியன் நடத்த முடியாது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

குடியிருப்பு மனைக்கட்டுகள் சர்க்கார் வழங்கி வருகிறார்கள். 61-இலேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். பாரம்பரியமாக ஹரிஜனங்கள், கள்ளர்கள், தேவர்கள் போன்றோர்கள் பாரம்பரியமாக எத்தனையோ தலைமுறைகளாக அந்தக் கிராமத்தில் குடியிருக்கிறோம். அப்படி நாங்கள் இருந்தும் எங்களுக்கு அவை சொந்தமாக இல்லை. அவைகளைச் சொந்தமென்று சொல்லி, சீலிங் எடுக்கச் சட்டத்தை உபயோகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் [illegible] கோடி பட்டா வழங்கவேண்டிய அவசியமில்லை. [illegible] கோடி மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட [illegible]ருக்கும் போதுமானதாகச் செய்ய, சீலிங் எடுக்கும்பொழுது [illegible] சேர்த்துச் செய்தால் நல்லதாக இருக்கும் என்று கூறி, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி இந்தப் பேச்சை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1970 மார்ச் 4]

* **திரு. ஏ. கே. மூர்த்தி :** தலைவரவர்களே, 1970-71-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியங்களில் ஒன்றான நில உச்ச வரம்பு மகுடமாகச் சூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இது கலைஞர் ஆட்சியிலே உழைப்பாளிகளுக்கு வழங்கக்கூடிய பட்டயமாகவும், உயிலாகவும் உள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் நில உச்சவரம்பு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைப்பார்த்து, இதனால் பாதிக்கப்படுகின்ற பணக்காரர்கள், இது சதித் திட்டம் என்றும், நாட்டிற்கு ஒரு கேடு என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது நாட்டிற்குக் கேடா? ஏழை விவசாயிகளுக்கு, உழைக்கின்ற உழைப்பாளிகளுக்கு வதைபடுகின்ற பாட்டாளிகளுக்கு, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற முறையில் முதலாளிகளிடமிருந்து அதிகமான நிலத்தை வாங்கித் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது சதித் திட்டமா? அல்லது பெரிய பெரிய பணக்காரர்கள் மீது, ஆடம்பரப் பொருள்கள் மீது வரிகளைச் சுமத்தி அதனால் ஏழை மக்கள் பாதிக்காத அளவுக்கு வரிகளைச் சுமத்தி இருப்பது தவறா? அல்லது அதிகமாக வரி விதிக்கப்பட்டிருப்பதாக எண்ணமா? இங்கே காங்கிரஸ்காரர்கள், இதற்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் கே. விநாயகம் அவர்கள் மிக நன்றாக நடித்துக் காட்டினார்கள். எங்களைப் பார்த்து நாடகம் நடிக்கிறீர்கள் என்றும், நாடகக்காரர்கள் என்றும் சொன்னவர்கள், அவர்கள் பேசும் நேரத்தில் அவரை நாங்கள் எல்லாம் நன்றாக ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். அவர்களுடைய பேச்சானது நடிப்பாகத்தான் இருந்ததே தவிர எங்களுக்குச் சொல்லுகின்ற நல்ல பல திட்டங்களாக இல்லை. இதற்கு முன்னாலே பேசிய திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் சொன்னார்கள் . . .

**திரு. கே. விநாயகம் :** நான் சொன்னதைப் புரிந்துகொண்டு பேசவேண்டும்.

**திரு. ஏ. கே. மூர்த்தி :** புரிந்துகொண்டுதான் பேசுகிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசக்கூடியதை எடுத்து இங்கு சொல்லும்பொழுது அதைப் புரிந்துகொண்டுதான், தெரிந்து கொண்ட பிறகுதான் அதைச் சொல்லுகிறோம். அதைப் புரிந்து கொண்டு பேசுகிறீர்களா என்று சொல்வது, ஒரு உறுப்பினர் ஏதோ தெரியாத்தனத்தில் பேசுவதாகக் கூறுவது முறையாகுமா? இப்படிச் சொல்லலாமா என்பதற்கு 'ரூலிங்' கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு வகையிலும் இருக்கலாம். அதில் சொல்லக்கூடிய நிலையிலே தெளிவாகச் சொல்லவில்லை என்ற நிலையிலேயும் இருக்கலாம். அல்லது புரிந்துகொண்டு பேசவில்லையோ என்ற நிலையிலும் இருக்கலாம். எந்த வகையிலும் இருக்கலாம். எனவே, இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

தனிப்பட்ட மனிதர்கள் தங்கள் வாழ்க்கை வசதிக்காக வைத்திருக்கிற நிலங்களை எடுப்பதென்றால்—அதை விட யார் கணக்கிலும் இல்லாத நிலங்களை எடுப்பதுதான் மேலான சீர்திருத்தமாகும். முன்னால் எடுக்கப்பட்ட நிலங்களைப் பிரித்துக் கொடுக்கிற முறையைப் பார்த்தால் உண்மையில் அவை விவசாயம் செய்பவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. என் தாலுகாவில் ஆரூர் கிராமத்தில் கொடுக்கப்பட்டது, யார் யாரோ சென்னையில் உத்தியோகம் செய்து கொண்டிருப்பவர்கள், பெரிய பெரிய அதிகாரிகளின் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர உழவுத் தொழிலைப் பாரம்பரையாகச் செய்து வருபவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அந்த முறையில் இந்த அரசு கண்டிப்பாக இருக்கவேண்டும். யார் யார் உழவுத் தொழிலை நேரிடையாகச் செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கப்படவேண்டும். அது தவிர வேறு யாருக்கும் அந்நிலங்கள் கொடுக்கப்படக் கூடாது என்று சட்டத்தில் கண்டிப்பாக ஒரு க்ளாஸைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் நேரத்தில், விவசாயிகளுக்கு மின்சார இலாகாவினால் விதிக்கப்படுகிற கட்டணம் 7½ பைசாவிலிருந்து 10 பைசா என்ற அளவில் இருக்கிறது. முன்பே நான் அதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களும் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். பார்க்கக் கூடாது, தயவு செய்து எங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். ட்ராக்டருக்கு வரி போட்டு விட்டார்கள், டீசலுக்கு வரி போட்டு விட்டார்கள், இதிலும் உயர்த்திவிட்டால் விவசாயிகள் எப்படி வாழ முடியும்? ஆகவே அது மாற்றியமைக்கப்பட வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், சீலிங் எடுக்கக்கூடிய நேரத்தில், நிலச்சுவான்தாரர்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு தொழில் தெரியாது, அதனால்
பி.ப. 1-00 அவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, அவர்களைத் தொழில் துறையிலே ஈடுபடுத்த வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களது மூலதனத்தை வேறு உபதொழிலிலே போட்டுச் செய்து கொள்வதற்கான வசதியைத் தஞ்சை ஜில்லாவிலே செய்து கொடுத்தே தீரவேண்டும். இல்லையென்றால், விவசாயத்திலேயே பாரம்பரையாக இருந்து, ஏக போகமாக நிலங்களை வைத்துக்கொண்டிருந்தால், அவர்களும் சௌகரியமாக வாழ்வதற்காக, நாம் நிலத்தை எடுத்துக்கொள்ளும்பொழுது அவர்கள் 'ஸ்டாண்டர்ட் ஆஃப் லைஃப்', அதாவது சுமுகமாக ஜீவிக்க ஏற்பாடு செய்யவேண்டும். நிலத்தை எடுத்துக்கொண்டால் மட்டும் போதாது. நம்முடைய திட்டமே, தேசத்திலே இருக்கின்ற எல்லோருமே சுபிட்சமாக, சௌகரியமாக இருக்க வேண்டுமென்பதுதான். வாழ்க்கையின் மேல் மட்டத்திலே இருப்பவனைக் கீழே தள்ளிவிட்டு, கீழ்மட்டத்திலே இருப்பவனையும் நசுக்கி இரண்டுங்கெட்டான் நிலையாக ஆக்குவதில் பிரயோசனம் இல்லை. 'ரெமிடி'யாக்க கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



காவிரி நீர்ப்பாசனத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும்பொழுது, அதன்மேல் இப்பொழுது வந்த ஆபத்தை உத்தேசித்து, அதை மேலும் பரவலாகச் செய்தால், பணத்தைச் செலவு செய்து செய்தால், வழங்குவதற்கான தண்ணீர் போதுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உபகாரச்சம்பளம் போதுமான அளவு கொடுக்கவில்லை. ஆனால் பிற்பட்ட மக்களுக்கு கொடுக்கப்படவில்லையா? இதற்குமாத்திரம் எப்படிப் பற்றாக்குறையானது என்று தெரியவில்லை. நிதிநிலை அறிக்கையிலே, 5 லட்சம் ரூபாய் தான் மத்திய சர்க்கார் கொடுக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அது வாஸ்தவம்தான், ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் அதேபோல் மற்றவைகளுக்காக நாம் மத்திய சர்க்காரிடத்தில் சண்டை போடுகிறோம், மற்றவர்களுக்காகப் போராடுவோம் என்று சொல்லுகிறோம். ஆனால் இதற்காக 5 லட்சம் அல்ல 10 லட்சம் மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று ஏன் கேட்கக் கூடாது? ஏன் அவ்வாறு கேட்டு வாங்கவில்லை என்று நினைக்கும் பொழுது சற்று வருத்தமாகத்தான் இருக்கிறது. நாங்கள் கேட்பது, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கிறதே, அந்த நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றுதான் கேட்கிறோமே தவிர, இவர்களுக்குக் குறைத்து விட்டார்களே, எனவே அவர்களுக்கும் குறைத்துவிடுங்கள் என்று சொல்லவில்லை. ஏனென்றால், அவர்களுக்கும் வசதியிருந்தால்தான் படிக்க முடியும்.

இந்த பட்ஜெட்டிலே தீண்டாமை பற்றி சொல்லவேயில்லை. ஒருவேளை, தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று கருதிக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. தீண்டாமைத்தொல்லை நாடெங்கும் பரவிக் கொண்டிருக்கிறது. எப்படி அது இந்தப் பகுத்தறிவாதிகளின் ஆட்சியில் இன்னமும் இருக்கிறது என்று தெரியவில்லை. சர்க்கார் காரியாலயங்களிலும், கிராமங்களிலும் பட்டி தொட்டிகளிலும் அது எப்படிப் பரவியிருக்கிறது? அதைத் தடுக்க நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக் கவனிக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்குப் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. நேற்று எங்கள் ஊரில், பெருந்தோட்டம் என்ற கிராமத்தில், ஒரு சிறு நிகழ்ச்சி. சண்டையே இல்லை, முன் சண்டை காரணமாக நடந்த ஒரு நிகழ்ச்சியில், போலீஸ் அதிகாரி பெட்டிஷனை வாங்கிக்கொண்டு, உடனடியாக எட்டு பேரைக் கைது செய்து, விலங்கு போட்டு, தெருவோடு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். சண்டை நடந்ததா, அடிதடி நடந்ததா, ரிபோர்ட் ஆகிவிட்டதா இல்லையா, இதைக் கவனிக்கவில்லை, போலீசுக்கு ரிப்போர்ட் எழுதிக் கொடுத்தார்கள், அவ்வளவுதான். எனவே, இப்படிப்பட்ட சமூகப் பிரச்சினைகள் வருகின்றன. அடுத்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகிவிட்டதே.

**திரு. ஏ. கே. மூர்த்தி :** மதிப்பிற்குரிய திரு. விநாயகம், அவர்கள் பேசியது அவர்களுக்கே புரியாமல் அவர்கள் நாடகம் போல் ஆடினார்கள். நாங்கள் புரியாமல் எதையும் சொல்லவில்லை. அதற்குப் பின்னாலே திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். இந்த உச்சவரம்புச் சட்டம் என்பது நாட்டுக்கு கேடு என்றும் சதித் திட்டம் என்றும் மக்களை ஏமாற்றுகின்ற திட்டம் என்றும் சொன்னார்கள். பணக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். நில உச்சவரம்புச் சட்டம் எதற்காகக் கொண்டுவந்தது? அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்து உழைத்து உருக்குலைந்த உழைப்பாள நண்பர்களுக்கு, பணக்காரர்களிடத்தில் அளவுக்கு அதிகமாக இருக்கும் நிலத்தை எடுத்து ஏழை நண்பனுக்குத் தருவதற்குத்தான் 30-லிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கின்ற பணக்காரர்கள், நாங்கள் கஷ்டப்படவில்லையா என்று சொல்லுகிறார்கள். இவர்கள் வயல்களிலே ஏர் பிடித்து, எரு போட்டு, நாற்று நட்டு, நீர்ப்பாய்ச்சி அறுவடை செய்தார்களா? உழைப்பாளிக்கு நில உச்சவரம்பு, இது தி. மு. கழகத்தின் லட்சியங்களில் ஒன்று என்று கூறுகிறேன்.

வரியைப் பற்றி சொன்னார்கள். வரி எதற்கு விதிக்கப்பட்டிருக்கிறது? காங்கிரஸ்காரர்கள் காலத்திலே வரியை எப்படிப் போட்டு வைத்தார்கள்? பொதுமக்கள் மீது வரிமேல் வரி போட்டுக் கொண்டு போனார்கள். நாங்கள் கூட உதாரணத்திற்குச் சொன்னோம். ஜனவரி, பிப்ரவரி என்று சொன்னோம். ஆனால் இங்கே போடப்பட்டிருக்கும் வரி எதற்காக என்பதை இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால் நன்றாகத் தெரியும். ரேடியோ, குளிர்சாதனப்பெட்டி, கடிகாரம், மோட்டார், திரைப்படக்காட்சி, வாசனைப் பொருட்கள், புகைப்படம் போன்ற ஆடம்பரப் பொருள்கள் மீது, பணக்காரர்கள் மீது வரியைப் போட்டிருக்கிறது. அதை விட்டு விட்டு, வரி போட்டு விட்டார்களே, வரி போட்டு விட்டார்களே என்று சொன்னால் உங்களை விட நாங்கள் எப்போதுமே வரி போடவில்லை. இதுவும் கூட, வரி போடவில்லை, வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாற்று கட்சி நண்பர்கள் இன்றைக்கு இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இவ்வளவு திறம்படச் செயலாற்றுகிறதே, இவர்களை எப்படிக் குறை சொல்லலாம், இவர்களை எப்படிக் கவிழ்க்கலாம் என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு மக்களைத் தூண்டிவிடுகிறார்கள். என்.ஜி.ஓ-க்கள், ஆசிரியர்கள், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகிய நண்பர்களைத் தூண்டிவிடுகிறார்கள். நான் இவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். இந்த நாட்டை ஆண்டு கொண்டிருப்பது முத்தமிழ் ஆட்சி. என்.ஜி.ஓ-க்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய பெரு மக்களைக் கொண்டது தான் தி.மு.க. அரசு. அதே நேரத்தில் முத்தமிழை எப்படிப் பாதுகாக்கிறோமோ அப்படி, அவர்கள் நலனும் பாதுகாக்கப்பட்டு வரும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



அரிசன நலத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் ஆட்சியில் அரிசனங்கள் எப்படி வாட்டி வதைக்கப்பட்டார்கள், அவர்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகள் என்ன என்பதைப் பார்த்தால் தெரியும். இன்றைய ஆட்சியில் அரிசனங்களுக்கு முன்பிருந்ததை விட மிக அதிகமான சலுகைகள் வழங்கப்படுகின்றன. கல்விச் சலுகை, குடியிருப்பு மனை, வீட்டுவசதி, ரோடு வசதி முதலிய வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னால் இருந்த அமைச்சர் கூட சொன்னார்கள். நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். உங்கள் வீட்டுக்கு வீடு விளக்குப் போடுகிறோம், தெருவுக்குத் தெரு விளக்குப் போடுகிறோம், ரோடுகளுக்கு விளக்குப் போடுகிறோம் என்று வாயளவில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு இருக்கிற அரசாங்கம் போட்டிருக்கிற மின்சாரத் திட்டங்களைப் பார்த்தால் வீதிக்கு வீதி விளக்கு, வீட்டிற்கு வீடு விளக்கு போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1971-க்குள் இந்த நாட்டில் மின்சார ஒளி வீசாத கிராமமே இருக்கக்கூடாது, 1971-72க்குள் இந்த நாட்டில் குடி தண்ணீர் பிரச்னையே இருக்கக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மிகத் திறம்பட செயலாற்றி வருகிறது இந்த அரசாங்கம்.

அடுத்தபடியாக ஒரு புதுமை. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரையில் இருந்த அரசாங்கம் எந்த சலுகையும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு ஓய்வு ஊதியத்தைப் பெருக்கி ரூ. 20 முதல் ரூ. 30 வரை கொடுத்திருக்கிறது. அவர்களுக்கு விழாக் கடன்கள் வழங்க முன் வந்திருக்கிறது இந்த அரசாங்கம். எந்த அரசாங்கமும் இது வரையில் செய்யாத ஒரு புதுமையாக செய்யப்பட்டிருக்கிறது. இது குறித்துக்கூட அவர்கள் பாராட்டத் தவறிவிட்டார்கள். இதற்குப் பதிலாகச் சொல்கிறார்கள். தி.மு.க. அமைச்சர்கள் குளு குளு வண்டியில் போகிறார்களே என்று சொல்கிறார்கள். இவர்கள் ஊட்டியில் உல்லாசமாக இருக்கவில்லையா, கொடைக்கானலில் கொம்மாளம் போடவில்லையா, திருக்குற்றாலத்தில் திருவிளையாடல்கள் நடத்தவில்லையா? உடல் நலக் குறைவு காரணமாக தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் காரில் குளிர் பெட்டி பொருத்திக்கொள்வதுகூட தவறு என்று வாதாடுகிறார்களே? இப்படியெல்லாம் வாதாடுகிறார்களே தவிர, பயன் உள்ள நல்ல யோசனைகளைச் சொல்கிறார்களா என்றால் இல்லை. பயனுள்ள திட்டம் ஏதாவது சொல்கிறார்களா, என்றால் இல்லை. குறை கூற வேண்டும் ஏதாவது என்ற எண்ணத்தோடுதான் வாதாடுகிறார்களே தவிர, தி.மு.க.-வுக்கு நல்ல ஆக்க பூர்வமான கருத்துக்களை வழங்குவதற்கான ஒரு நல்ல எதிர்க்கட்சியாக அமையவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1970 மார்ச் 4

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வாசிக்கும்பொழுது எனக்கு என்ன ஞாபகம் வருகிறது என்றால், மருமகள், மாமியார் மீது குற்றம் சாட்டும் கதைதான் என்று தோன்றுகிறது. ஆனாலும், போகப் போக சில புரட்சிகரமான திட்டங்களும் அதிலே காணப்படுகின்றன. முதலாவதாக நில உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்கப்பட்டுள்ளது. மற்றொன்று சுமார் ரூ. 6 கோடிக்கு மேல் வரி விதிக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன் ‘40% வரியைக் குறைப்போம், 60% வசதியைப் பெருக்குவோம்’ என்று சொல்லிவந்தீர்கள். ஆனால், இந்த ஆண்டில் 6 கோடி ரூபாய்க்கு வரி உயர்த்தப்பட்டுள்ளது. மற்றொன்று கால்நடைப் பிரிவைப் பற்றியது. இந்த மூன்று விஷயங்களைப் பற்றியும் எனக்குத் தெரிந்த வரையில் ஒன்று, இரண்டு கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ரூ. 6 கோடிக்குப் புதிய வரிகள் போடப்பட்டுள்ளன. அதுவும் குறிப்பாக விவசாயிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. வருவாய் விவசாய வருமானத்தின் மூலம் 1966-67-ம் ஆண்டைவிட 1970-71-ம் ஆண்டுக்கு சுமார் 29 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது; நீர்ப்பாசனத் துறையிலே, விவசாயிகள் செலுத்தும் பாசனத் தீர்வையின் மூலம் 1966-67-ம் ஆண்டைவிட சுமார் ரூ. 64 லட்சம் உயர்த்தப்பட்டுள்ளது. 1966–67-ம் ஆண்டில் 12½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிக்கு விவசாய வருமான வரியே கிடையாது காங்கிரஸ் ஆட்சியில். இந்த ஆண்டில் 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருக்கும் விவசாயி ரூ. 56 கட்டவேண்டியிருக்கிறது. மேலும் இந்த ஆண்டு புதியதாக ஒரு பெரிய பரிசும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இதுவரையில் அளித்துவந்த உரங்களின் மீது கொடுக்கப்பட்டு வந்த 30 சதவிகித மான்யத் தொகை இந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் வேதனைக்குரிய செயலாகும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், விவசாயிகள் வாங்கும் உரக்கடன்களின் தவணை ஒரு நாள் தவறினாலும் ஒரு வருஷ வட்டி வசூலிக்கப்படுகிறது. இது மிகவும் வேதனைப்படக்கூடிய சம்பவம். இவைகளையெல்லாம் நன்றாக சீர்தூக்கிப் பார்த்து விவசாயிகள் மீது விதிக்கப்படும் விவசாய வருமான வரி, உரக்கடன் தவணை ஒரு நாள் தவறினால் கூட அதற்காக வசூலிக்கப்படும் ஒரு வருஷ வட்டி ஆகியவைகள் நீக்கப்படவேண்டும். உர மானியத் தொகையை மீண்டும் கொடுக்கவேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த சமயத்தில் 1966-ம்



1970 மார்ச் 4] [திரு. கே. சகாதேவக் கண்டர்]

ஆண்டு நவம்பரில் ஒரு அறிவுரை வழங்கினார்கள், அதை மீண்டும் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். “எந்தத் தொகுதியிலும் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் அந்த நிகழ்ச்சிக்கு எதிர்க்கட்சிக்காரர்களைக் கூப்பிடக்கூடாது, எதிர்க்கட்சிக்காரர்களை அழைக்கக்கூடாது, அமைச்சர்களை மட்டும்தான் அழைக்கவேண்டும்; ஆளும் கட்சியினரை அழைக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்க அலுவலர்கள் மத்தியில் இருந்து வருகிறது. ஏன் அவர்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருந்து வருகிறது என்றால், தாங்கள் அப்படி அழைத்தால், தங்களுடைய பதவிக்கு ஏதாவது இடைஞ்சல் செய்வார்கள் ஆளும் கட்சியினர் என்பதுதான். அந்த எண்ணத்தில்தான் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களை அழைக்கமாட்டேன் என்கிறார்கள். இது ஜனநாயகத்திற்குத் தகுதி வாய்ந்ததா?’ என்று கேட்டார்கள். அதே அறிவுரையை இன்று அவர்கள் தங்களுடைய கட்சிக்காரர்களுக்குச் செல்வார்களா? அப்பொழுது அதிகாரிகளிடத்தில் அப்படிப்பட்ட எண்ணம் இருந்தது. இப்பொழுது கட்சிக்காரர்களிடத்தில் அப்படிப்பட்ட எண்ணம் உண்டாகியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்பொழுது சர்க்கார் அதிகாரிகளுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. ஆனால் சர்க்கார் அதிகாரிகளிடம் கட்சிக்காரர்கள் சென்று “எதிர்க்கட்சிக்காரர்களை அழைத்தால் எங்களுடைய அமைச்சர் நிகழ்ச்சிக்கு வராமல் செய்துவிடுவோம்” என்று பயமுறுத்திச் சொல்லக்கூடிய நிலை இப்பொழுது இருக்கிறது. தயவு கூர்ந்து உங்களுடைய கட்சிக்காரர்களுக்கு சொல்லுங்கள். ஜனநாயக ஆட்சியில் அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. ஜனநாயக ஆட்சி நடைபெறும்பொழுது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்துகொள்ளவேண்டும், எல்லாக் கட்சிக்காரர்களையும் அழைக்கவேண்டும், அதுதான் நியாயம். அந்த நிலையை உங்கள் கட்சிக்காரர்களுக்கு எடுத்துச் சொல்லும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருவண்ணாமலையில் உள்ள கீழ்நாத்தூர் அரிசனக் காலனியில் 63 நபர்களுக்கு 1967-ம் ஆண்டில் நிலம் பட்டா போட்டு வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் இந்த இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு எல்லோரும் காங்கிரஸ்காரர்களாக இருக்கிறார்கள், அந்த அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்கக்கூடாது, எப்படியாவது தடங்கல் செய்யவேண்டும் என்று அந்தக் கட்சிக்காரர்கள் அதிகாரிகளைக் கூப்பிட்டு, மிரட்டி சர்வே கற்கள் போடப்படுவது கூட நிறுத்தப்பட்டிருக்கிறது. இது வேதனை தரக்கூடிய சம்பவம். அப்படிப்பட்ட சம்பவங்கள் கட்சிக்காரர்களின் தூண்டுதலால் நடைபெறுகின்றன. கூடுமானவரையில் எந்த அதிகாரியும், எந்த கட்சிக்காரர் குறை சொன்னாலும், எது நியாயம், எது நியாயமற்றது என்று சீர்தூக்கிப் பார்த்து, கட்சிப் பாகுபாடு இல்லாமல் நியாயம் வழங்கவேண்டும் . . . .

[மாண்புமிகு திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 4

'இண்டிகேட்' என்று கருதிக்கொண்டு சொன்னார் போலும். வேறு யாரும் இல்லை. 'சிண்டிகேட்' கக்கன் அவர்கள்தான் குழித்தலையில் என் பெயர் போட்டதற்காக வர மறுத்தவர். விஷக் கிருமி பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது கருத்திருமன் ஆத்திரமாகச் சொல்கிறார்கள். அப்பொழுதே அதற்கு மறுப்பு அறிக்கை கொடுத்திருந்தால் அவர்களுடைய ஜனநாயகப் பண்பைப் பாராட்டியிருப்பேன். மறுப்பு பக்தவத்சலம் அவர்களே அப்பொழுதே விட்டு விட்டார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தப்பிக்கொண்டு, விஷக்கிருமி ஓடி, அமிர்த கிருமியாகி விட்டார்கள். கர்நாடக சங்கீதம் கேட்கப்போகிறேன் என்று.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், ஒரு தன்னிலை விளக்கம். முதல் அமைச்சரவர்கள் கன்னியாகுமரி ஜில்லாவில், அமைச்சர் வரும் போது, காங்கிரஸ் எம்.எல்.ஏ. க்கள் பார்ப்பதில்லை என்றார்கள். எல். ஏ. மினிஸ்டர் இருக்கிறார்கள். விவசாய அமைச்சர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும், அமைச்சர்கள் வரும்போது, வாய்ப்புக் கிடைக்கும் இடங்களில், வைபவங்களில் கலந்து கொள்ளுகிறோம். அதில் இருக்கின்ற சிரமம் எல்லாம், அமைச்சர் வரும் போது, அமைச்சர்களைச் சுற்றி, கட்சிக்காரர்கள் எப்பொழுதும் இருக்கிறார்கள். தனியாகச் சந்தித்துப் பேச வேண்டுமென்றால் வாய்ப்பே இல்லாததால் தான் சந்திக்க இயலவில்லை. அமைச்சர் கன்னியாகுமரி எம்.எல்.ஏ. க்கள் பார்க்கவில்லை என்று கூறியது அவ்வளவு சரியில்லை. பார்க்கிறோம். கூட்டங்களில் கலந்து கொள்ளுகிறோம். என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. சகாதேவக் கண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக இரண்டொன்றைச் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். மின்சாரக் கட்டணம் விவசாயத்திற்கு யூனிட்டுக்கு 8.25 பைசா என்று இருந்ததை 10 பைசாவாக உயர்த்தி[illegible] கிறார்கள். இதனால் விவசாயிகள் பாதிக்கப் ப[illegible]கள். குறைந்தது 100,150,200 அடியில் இரண்டு மூன்று ப[illegible]டு செட்டுகள் வைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மின்சார[illegible]க் கட்டணம் அதிகமாகி விடும். ஆகவே, மீண்டும் பழைய[illegible]டியே 8¼ பைசாவாகக் குறைத்துவி[illegible] வேண்டும் என்று கேட்டு[illegible]க் கொள்ளுகிறேன்.

[illegible] என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுத்திரு[illegible]க்கும் பத்து ரூபாயை இடைக்கால நிவாரணமாகக் கருதாமல், அடிப்படைச் சம்பளத்தோடு இணைக்க வேண்டும் என்று கேட்டு[illegible]க் கொள்ளுகிறேன்.

தம்முடைய தமிழ் நாட்டில், [illegible]ம [illegible]ஸ்ரீயர்களிலேயே [illegible] சம்பளம் வாங்குகிறவர்கள் [illegible] அதைப் பற்றிப் பல ஆண்டுகளாக [illegible] எந்த விதமான [illegible]



1970 மார்ச் 4]

அமைத்து, அதைப் பரிசீலனை செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கமிட்டி மூலம், இவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

பொதுவாக என்னுடைய தொகுதியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, பழைய ஏரிகள் பழுது அடைந்துபோயிருக்கின்றன. அவற்றை சர்வே செய்து, நிறைவேற்றிக் கொடுத்தால், உணவு உற்பத்தி பெருக வாய்ப்பாக இருக்கும்.

சட்ட மன்றத்திலே 1967-லிருந்து 1970 வரையில் ஒரு குற்றச் சாட்டை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். எந்தக் காரணத் தைக் கொண்டோ, அமைச்சரோ அல்லது அதிகாரிகளோ, அதைக் கவனிக்கவில்லை. குறிப்பாக 1966-ம் ஆண்டில் புயலால் பாதிக்கப் பட்ட ஒரு கட்டடத்தைப் பழுது பார்க்க ரூ. 10,000-க்கு எஸ்டிமேட் தயார் செய்து, டெண்டர் கூப்பிட்டு, மூன்று ஆண்டுகளாகியும், கட்டடம் பூர்த்தி செய்ய அனுமதி வழங்கவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. அதைப்பற்றி 1967-ல் சொல்லியிருக்கிறேன். 1968-ல் சொல்லியிருக்கிறேன். 1969-ல் சொன்னேன். மறுபடியும் 1970-லும் சொல்லுகிறேன். அதேபோல, ஹைவேசில் போடப்பட்ட ரோடு பாதியில் நிற்கிறது. குட்டக்குளம் தொண்டாமுத்தூர் ரோடு கோவிந்தபட்டுவரை போகும் ரோடு பாதி வேலை செய்து பிறகு எடுத்தவர் இறந்துவிட்டார். இன்னும் 1970-வரையில் அதை ஆரம்பிக்கவில்லை. இந்த வேலை பற்றி நான்கு ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். எந்தவிதமான பதிலையும் கொடுக்க வில்லை. அக்கறையும் காட்டவில்லை. குறிப்பாக இன்னொரு விஷ யத்தைச் சொல்ல வேண்டும். பல இடங்களில் பல கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் நீர்ப்பாசன வசதிகள், குடிநீர் வசதிகள் எதுவும் கிடையாது. இவற்றையெல்லாம் கவனிக்கத் தனியாக ஒரு குழு அமைத்து, ஆங்காங்கே உள்ள குறைகளை நிவர்த்திக்க ஏற் பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, பேரவை நாளைக் காலை மீண்டும் 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

159. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1968-69 and Audit Report 1970. (*Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India*).

160. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1968-69. [*Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India*].

### B. Reports, Notifications and other papers.

'NIL'

## இணைப்பு 1.

[22-ம் பக்கத்தில் 203-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க].

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளின் நியமனங்கள், சென்னை மாநகரில் மாநிலத் தலைமை மாஜிஸ்ட்ரேட் பரிவுரைகளின்பேரிலும், வெளியூரில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிவுரைகளின் பேரிலும் கருதிப் பார்த்து அரசாங்கத்தால் செய்யப்படுகின்றன. கௌரவ முதல் வகுப்பு சிறப்பு மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பட வேண்டியவர் 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், 65 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும். இந்தக் குறைந்த வயது வரம்பு வெளியூரிலுள்ள முதல் வகுப்புக் குற்ற விசாரணை நீதிமன்றக் குழுக்களுக்கும் ' (Bench Courts) பொருந்தும். இரண்டாம் வகுப்பு குற்ற விசாரணை நீதிமன்றக் குழுக்களில் அமருவதற்கென கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், இந்தக் குறைந்த வயது வரம்பு 40 வயதுக்குப்பதிலாக, 30 வயதாக இருக்க வேண்டும். சென்னை மாநகரில் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் பதவிக்கான நியமனத்துக்கு குறைந்த வயது வரம்பு 35 ஆக இருக்கவேண்டும். கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்படுபவர் எவரும், சட்டங்களுக்குப் பொருள் காண்பதில் வல்லவராக இருக்கும் வகையில் ஆட்சி மொழியில் போதிய அறிவுடையவராக இருக்கவேண்டும். அவர் அரசாங்க சார்பற்றவராக இருப்பின், மக்களின் நம்பிக்கைக்குரியவராய் சிறந்த தகுதிபெற்றவராக இருக்க வேண்டும். அவர் ஓய்வு பெற்ற அரசாங்கப் பணியாளராயிருந்தால், இருதரப்பினரிடையே முடிவு எடுப்பதில் அனுபவமுடையவராகவும் இருக்க வேண்டும். மற்றும் அவர் காவல் துறையில் பணியாற்றியவராகவும் இருக்கக்கூடாது.

Appointments to the posts of Honorary Magistrates are made by the Government on consideration of the recommendations of the Chief Presidency Magistrate, Madras, in the City of Madras and the Collectors of the Districts concerned in the mufassal. Any person to be appointed as an Honorary Special First Class Magistrate shall be over 40 years of age but below 65 years of age. This minimum age-limit will also apply to the First Class Bench Courts in the mufassal. But the minimum age limit in respect of persons appointed as Honorary Magistrates to sit on Benches of the Second Class shall be 30 years instead of 40 years. For appointment to the posts of Honorary Magistrates in Madras City the minimum age-limit is 35 years. Any person to be appointed as an Honorary Magistrate should be sufficiently conversant with the official language to be able to interpret the statutes. If he is a non-official, he should be of outstanding merit commanding the confidence of the people and, if he is a retired Government servant, he should have experience in deciding between parties and he should not have served in the Police Department.



61474

## இணைப்பு-2.

[26-ம் பக்கத்தில் 156-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக்காண்க.]

On 21st December 1967 a meeting was held at the Committee room by the Minister for Finance with the representatives of the Tamil Nadu Village Officer's Association. The following requests were examined during the discussion :—

1. Giving up of ad-interim suspension of village officers.
2. Punishment of village officers for non-attendance.
3. Enhancement of Travelling Allowance and Dearness Allowance to village officers.
4. Panchayat Administration.
5. Retrenchment of village menials.
6. Periodical meeting of the representatives of village officers by Revenue Divisional Officers/Collectors.
7. Representation in the Legislative Council.
8. Commission to the village officers on the collection of loan.
9. Remuneration to the village officers for preparation of Levy registers for procurement.
10. In the matter of appointment priority to be given to the Legal heirs.
11. Allotment of lands in Government Estate for constructing a building for Village Officers' Association at Madras.
12. M (F) to attend the District Conference of the village officers.

(1) *Giving up of ad-interim suspension.*—The Board of Revenue had been instructed to see that no village officer is kept under ad-interim suspension for more than three months and that explanation of officers should be called for, if it is exceeded. That Government have prescribed a half yearly periodical from the Board of Revenue for cases of this type. As the Board of Revenue is carefully watching and reviewing similar cases wherein the village officers are kept under suspension for more than three months it was decided that no action is necessary on this request.

(2) *Punishment of Village Officers for non-attendance.*—It was put forth by the Association that on 1st October 1967 the Revenue Divisional Officer, Chidambaram, launched a prosecution under section 174 of the Indian Penal Code for non-attendance of enquiry by a Village Officer though the Village Officer had been summoned by two authorities to appear on one and the same day and that Village Officer had been imposed a heavy fine by the Court. The Secretary of the Association suggested that in such cases, departmental action should be taken instead of resorting to prosecution under section 174 of the Indian Penal Code. The Revenue Divisional Officer, Chidambaram who was addressed in the matter, reported that prosecution was launched only after all the other efforts had failed.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திருவண்ணாமலையில் கீழ்நாத்தூர் தாழ்த்தப் பட்டோர் காலனியில் ஒரே நபருக்கு 5 மனைகள் வீதம் பிரித்துக் கொடுத்து விட்டார்கள். அப்படி ஒரே நபருக்கு 5, 6 மனைகள் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினுல்தான், அது நிறுத்திவைக்கப்பட்டு, விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சர்க்கார் இதையெல்லாம் தடுத்து நிறுத்தவேண்டும், இப்படிக் கொடுத்தது தப்பு. இவர்களெல்லாம் காங்கிரஸ்காரர்களாக இருக்கிறார்கள், வேறு தி.மு.க. வினருக்குப் பிரித்துக் கொடுங்கள் என்று அப்படி ஒன்றும் உத்தரவு போடவில்லை தாழ்த்தப்பட்டவர்கள் நிறைய மனுப் போட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் அரிசன கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி விசாரணை செய்யச் சொல்லியிருக்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை.

இன்னென்று, மாண்புமிகு அமைச்சர்கள் வரும்பொழுது, எதிர்க் கட்சிக்காரர்களைக் கூப்பிடுவதில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் அவருடைய தொகுதிக்குச் சென்றிருந்தபொழுது, ஒரு சில விழாக்களில் கலந்துகொண்டேன். எங்கே சட்டமன்ற உறுப்பினர் என்று ஆணையாளர்களிடமும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரையும் கேட்டபொழுது, 'அழைத்தோம், வரமாட்டேன் என்று மறுத்து விட்டார்கள், எனவே அவர்கள் மறுத்துவிட்டதால், நாங்கள் அவர்கள் பெயரைப் போடவில்லை' என்று குறிப்பிட்டார்கள். அதையும் இந்த நேரத்தில் கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் எப்பொழுதும் மறுத்ததே கிடையாது. அழைத்தபோதெல்லாம் வந்து கலந்து கொண்டிருக்கிறேன் என்று நிரூபிக்க முடியும். நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அமைச்சர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் என்னுடைய தொகுதியில் என்னுடைய பெயர் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல ஏதாவது ஓரிரு தொகுதிகளில் தவறுகள் நடந்திருக்கலாம். நடக்காமல் இருக்கவேண்டும் என்று கருதுகிறோம். நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில், பரவலாக, அமைச்சர்கள் கலந்துகொள்ளும் விழாக்களுக்கு எங்களை அழைப்பது இல்லை. குளித்தலைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக நான் இருந்த போது, ஒரு நிகழ்ச்சியில் என் பெயரைப் போட்டதற்காக ஒரு அமைச்சர், நிகழ்ச்சிக்கு வர மறுத்துவிட்டார். அதன் பிறகு என்னுடைய பெயரை நீக்கிவிட்டு, நிகழ்ச்சியை அமைச்சர் வந்து நிறைவேற்றியிருக்கிறார். தஞ்சையிலே நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது, எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள





என்னை அழைத்தது கிடையாது. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு, பல்வேறு நிகழ்ச்சிகளிலும் எதிர்க் கட்சிக்காரர்களும், எதிர்க் கட்சித் தலைவரும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கூட, எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகர் தொகுதியில் ஒரு கல்லூரி விழாவில் கலந்துகொண்டு, பேசியிருக்கிறார்கள் அண்ணா அவர்கள் திருத்தணியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது, நம்முடைய விநாயகமும் பேசியிருக்கிறார்கள். திரு. ராமலிங்கம்—வெளியிலே போய்விட்டார்கள்—அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு, அவர் பெயரையும் போட்டு, ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார்கள். உணவு அமைச்சர் குறிப்பிட்டதுபோல், காங்கிரஸ் எம். எல். ஏ. கள் அமைச்சர்கள் வந்தால்கூட, அவர்களைப் பார்ப்பது, பேசுவது தங்களுக்குக் கவுரவக் குறைவு என்று கருதுகிறார்கள். குறிப்பாக, கன்யாகுமரி மாவட்டத்திற்கு நான் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போதும், இப்போது முதல் அமைச்சர் ஆன பிறகும், பல முறைகள் போய் வந்திருக்கிறேன். ஆனால் எந்த காங்கிரஸ் உறுப்பினரும்—எங்கள் உறுப்பினர் ஒரே ஒருவர் தான், பாக்கியுள்ளவர்கள் யாவரும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள்—என்னைப் பார்த்தது இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். அவர்கள் என்னைச் சந்திக்கவில்லை என்பதால் என்னுடைய கவுரவம் குறைந்து விட்டது என்று கருதவில்லை. ஆனால், ஒரு ஜனநாயக நாட்டில் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஓரிரு இடங்களில் தவறுகள் நடந்திருக்கலாம். தவறுகளைச் சொன்னால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். கல்வி அமைச்சர் நாவலர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போது சொன்ன அந்த அடிப்படையில்தான் இந்த அரசு இயங்குகிறது, இயங்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் எங்களை அழைத்திருக்கிறார்கள். அவருடைய கட்சிக்காரர்களோடு நாங்களும் கலந்துகொண்டிருக்கிறோம். அதாவது, 'ம்யூசுவல் அட்ஜஸ்ட்மெண்ட்' என்கிற வகையில் பல இடங்களில், பல நிகழ்ச்சிகளுக்கு அவர்களும் அழைத்திருக்கிறார்கள். நாங்களும் கலந்து கொண்டிருக்கிறோம். இதற்கு முன்னால் சில பேர்கள், ஏதாவது செய்தார்கள் என்றால் அதற்கு நாங்கள் ஜவாப்தாரியல்ல (பலத்த சிரிப்பு). அப்படிப் பண்ணியதால்தான் வெளியிலே போயிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியாது. எப்பொழுது நிலவரம் தெரியும். 'விஷக் கிருமி' என்று சொல்லிப் போட்டுக் கூட மாபெரும் தலைவர்கள் இருந்தார்கள். (குறுக்கீடு) யாராக இருந்தாலும், எல்லோரும் நாணயமாக இருக்கவேண்டும். நாணயம் இரண்டு பக்கமும் சரியாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் செல்லும். இவ்வளவு தாரம் முன்னேறியிருப்பதற்காக முதல் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க் கட்சித் தலைவர் பிரச்சினையை வேறு திசைக்கு இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

The Association was also informed accordingly.

(3) *Enhancement of Travelling Allowance and Dearness Allowance to Village Officers.*—The matter is under the consideration of the Government.

(4) *Panchayat Administration.*—(i) The Secretary of the Association said that the vettis in Chingleput District except Kancheepuram Taluk were not paid the Panchayat Development Allowance of Rs. 3 per month inspite of the orders of the Government.

The Panchayat allowance due to the Last Grade Village Officers has been paid to the vettis of all the taluks except Saidapet. The arrears of Panchayat Development Allowance due to the Last Grade Village Officers of Saidapet taluk were sanctioned by the District Revenue Officer, Chingleput. The District Revenue Officer, Chingleput has instructed the Tahsildar, Saidapet to draw and disburse the amount.

(ii) The representatives of the Association put forth the difficulties in the maintenance of the Panchayat accounts and were unanimous in their request to be relieved of the work relating to the Panchayat administration. Thereon, it was suggested that the matter of appointing the Karnams as Secretaries and ex-officio Members of the Panchayats without voting powers, might be taken up for consideration by the Government. The matter was considered in consultation with the Board of Revenue (Land Revenue) and it was decided that the existing arrangements may be allowed to continue.

(5) *Retrenchment of Village Officers.*—The Government while examining the question of increasing the pay and dearness allowance of the village establishment in 1964 considered it desirable to take up the question of re-grouping the villages, which would result in reduction in the additional commitment. The Board of Revenue was accordingly requested to take up a review of village establishment district by district and suggest re-grouping of villages and reduction of establishment, wherever justified. according to some sound principles to be settled for the purpose. It was also suggested that wherever more than three vettis and talayaris existed in a vattam or village headman's charge, the excess might be retrenched and orders have been issued accordingly. As this is the policy of the Government to retrench village menials, where there are more than three, the request was not complied with.

(6) *Periodical meeting of the representatives of Village Officers by District Revenue Officers/Collectors.*—The request was considered favourably and instructions have been issued to all District Revenue Officers and Collectors to convene quarterly meetings regularly with the representatives of the District Village Officers' Association.





(7) *Representation in the Legislative Council.*—As there is no provision in the Constitution for reserving seats in the Legislative Council to any particular community or class of employees, the request for representation in the Legislative Council was negatived.

(8) *Commission to Village Officers in Collection of Loan.*—The matter is under the consideration of the Government.

(9) *Remuneration to the Village Officers for preparation of Levy registers for procurement.*—In G.O. Ms. No. 671, Food, dated 24th July 1969, orders have been issued by the Government in the Food Department in the matter.

(10) *In the matter of appointment priority to be given to the Legal heirs.*—The matter is under the consideration of the Government.

(11) *Allotment of Lands in Government Estate for constructing a building for Village Officers' Association at Madras.*—The matter is under the consideration of the Government.

(12) M. (F) *to attend the District Conference of the Village Officers.*—The Association requested the Honourable Minister for Finance to send his tour programmes to the Village Officers' Association so that the local representatives would have an opportunity of meeting him and representing their grievances and this was agreed to by the Honourable Minister for Finance.

*21—12—1967 அன்று குழு அறையில் மாண்புமிகு நிதி அமைச்சர் தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் கூட்டம் ஒன்றை நடத்தினார். விவாதத்தின்போது கீழ்க்காணும் வேண்டுகோள்கள் பரிசீலிக்கப்பட்டன :—*

*(1) கிராம அதிகாரிகளைத் தற்காலிகமாய் வேலையிலிருந்து தள்ளி வைப்பதைக் கைவிடுதல்.*

*(2) விசாரணைக்காக வருமாறு அழைப்பாணை விடுத்தும் வராமைக்காகக் கிராம அதிகாரிகளுக்குத் தண்டனை அளித்தல்.*

*(3) கிராம அதிகாரிகளுக்குப் பயணப்படியும், அகவிலைப் படியும் உயர்த்துதல்.*

*(4) ஊராட்சி நிர்வாகம்.*

*(5) கிராம குற்றேவலர்களை வேலையிலிருந்து எடுத்து விடுதல்.*

*(6) வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கிராம அதிகாரிகளின் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கூடிப் பேசுதல்.*

*(7) சட்ட மன்ற மேலவையில் பிரதிநிதித்துவம் அளித்தல்.*

*(8) கடன் வசூலிப்பதில் கிராம அதிகாரிகளுக்குத் தரகு அளித்தல்.*

(9) கொள்முதல் காரியமாக லெவி முறைக் கொள்முதல் பதிவேடுகள் தயாரிப்பதற்குக் கிராம அதிகாரிகளுக்கு ஊதியம் அளித்தல்.

(10) வேலை நியமனத்தில், சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

(11) சென்னையில், அரசினர் மாளிகைப் பகுதியில் கிராம அதிகாரிகள் சங்கத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக நிலம் ஒதுக்குதல்.

(12) கிராம அதிகாரிகள் மாவட்ட மாநாட்டில் நிதி அமைச்சர் கலந்துகொள்ள வேண்டுதல்.

**(1) கிராம அதிகாரிகளைத் தற்காலிகமாய் வேலையிலிருந்து தள்ளி வைத்தல்.**—கிராம அதிகாரி எவரும் மூன்று திங்களுக்கு மேல் இடைக்காலத்தில் வேலையிலிருந்து தள்ளிவைக்கப்படாதவாறு கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும், அதற்கு மேற்பட்டால் அதற்கான விளக்கம் அதிகாரிகளிடமிருந்து பெறப்படவேண்டுமென்றும் வருவாய்த்துறை வாரியத்திற்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இவ்வகையான நேர்வுகளைப்பற்றி அரை ஆண்டு அறிக்கை வருவாய்த்துறை வாரியத்திடமிருந்து வரவேண்டுமென்று அரசு குறிப்பிட்டுள்ளது. மூன்று திங்களுக்கு மேல் வேலையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டிருக்கிற கிராம அதிகாரிகளைப் பற்றிய நேர்வுகளை வருவாய்த்துறை வாரியம் உன்னிப்பாக கவனித்து ஆய்ந்து வருவதால், இந்த வேண்டுகோளின் மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

**(2) விசாரணைக்காக வருமாறு அழைப்பாணை விடுத்தும் வராமைக்காகக் கிராம அதிகாரிகளுக்குத் தண்டனை அளித்தல்.**—கிராம அதிகாரி ஒருவர், ஒரே நாளில் விசாரணைக்கு வருமாறு இரு அதிகாரிகளால் அழைப்பாணை அனுப்பப்பட்டிருக்கையில், அவர் அந்த விசாரணையின்போது வராமைக்காக சிதம்பரம் வருவாய்க் கோட்ட அதிகாரி, இந்தியத் தண்டனைச் சட்டக் கோவை 174-வது பிரிவின் கீழ் 1—10—1967 அன்று அந்த கிராம அதிகாரிமீது வழக்கு தொடர்ந்ததாகவும் அந்த கிராம அதிகாரி மீது நீதி மன்றத்தார் கடுமையான அபராதம் விதித்ததாகவும் மேற்படி சங்கத்தாரால் எடுத்துச் சொல்லப்பட்டது. இத்தகைய நேர்வுகளில் இந்தியத் தண்டனைச் சட்டக் கோவை 174-வது பிரிவின்கீழ் வழக்குத் தொடருவதற்குப் பதிலாக, துறையினரே நடவடிக்கை எடுக்கலாம் என்று சங்கச் செயலாளர் கருத்து தெரிவித்தார். இதுபற்றி எழுதிக் கேட்டதற்குச் சிதம்பரம் வருவாய்க் கோட்ட அதிகாரி, கிராம அதிகாரியை வரவழைப்பதற்கு எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியுற்ற பின்னரே அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது என்று அறிவித்தார். அவ்வண்ணமே சங்கத்தாருக்கும் தெரிவிக்கப்பட்டது.



**(3) கிராம அதிகாரிகளுக்குப் பயணப்படியும் அகவிலைப்படியும் உயர்த்துதல்.**—இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(4) ஊராட்சி நிர்வாகம்.**—(i) காஞ்சிபுரம் வட்டம் நீங்கலாக செங்கற்பட்டு மாவட்டத்தில் வெட்டியான்களுக்கு திங்களுக்கு ரூ. 3 ஊராட்சி வளர்ச்சிப் படி கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தும்கூட இன்னும் அத்தொகை கொடுக்கப்படவில்லை என்று சங்கச் செயலாளர் கூறினர்.

சைதாப்பேட்டை நீங்கலாக எல்லா வட்டங்களிலுமுள்ள வெட்டியான்களுக்குச் சேரவேண்டிய ஊராட்சிப் படி கொடுக்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை வட்டக் கடைநிலைப் பணியாட்களுக்குச் சேரவேண்டிய ஊராட்சிப் படி நிலுவைத் தொகை வழங்கப்பட செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரியால் ஒப்பளிக்கப்பட்டது. மேற்படி தொகையைப் பெற்றுப் பிரித்துக் கொடுக்குமாறு செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரி சைதாப்பேட்டை தாசில்தாருக்குக் கட்டளையிட்டுள்ளார்.

(ii) ஊராட்சிக் கணக்குகளை வைத்து வருவதில் உள்ள இடர்பாடுகளை சங்கப் பிரதிநிதிகள் எடுத்துச் சொன்னார்கள். ஊராட்சி நிர்வாகம் குறித்த வேலையினின்றும் தங்களை விடுவிக்குமாறு வேண்டுவதில் அவர்கள் ஒருமித்த கருத்தைத் தெரிவித்தனர். ஊராட்சி வாரியத்தின் செயலாளராகவும், அலுவல் முறை உறுப்பினராகவும் கர்ணங்களை நியமிப்பதும், வாக்களிக்கும் உரிமையில்லாமல் கிராமத் தலைவர்களை அலுவல் முறையில் ஊராட்சி உறுப்பினர்களாக நியமிப்பதும் பற்றிய கருத்துரை அரசு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. (நில வருவாய்) வருவாய்த்துறை வாரியத்தைக் கலந்து இதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டது. இப்போதுள்ள ஏற்பாடுகளே தொடர்ந்து நீடிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**(5) கிராம குற்றேவலர்களை வேலையிலிருந்து நீக்குதல்.**—கிராமப் பணியாளர்களின் சம்பளம், அகவிலைப்படி உயர்த்துவதுபற்றி அரசு 1964-ல் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கையில், கூடுதல் செலவு குறையும் என்பது காரணமாக கிராமங்களை மீண்டும் தொகுதி வாரியாகத் தொகுப்பது விரும்பத் தக்கது என்று கருதியது. இதன்படி, மாவட்டந்தோறும் கிராமப் பணியாளர்களைப் பற்றிய ஆய்வு நடத்தி, இதுகாரியத்துக்காகத் தகுந்த கொள்கை உருவாக்கி அதன் அடிப்படையில் கிராமங்களை மீண்டும் தொகுத்து நியாயமான இடங்களில் எல்லாம் பணியாளர்களைக் குறைத்துச் சீர்படுத்துவதற்கான ஆலோசனை நல்குமாறு வருவாய்த்துறை வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், தற்போது ஒரு வட்டம் அல்லது கிராமத் தலைவரின் பொறுப்பில் வெட்டியான்களும், தலையாரிகளும் மூன்று பேருக்கு மேற்பட்ட இடங்களில் எல்லாம் மிகையானவர்களை வேலையிலிருந்து எடுத்து விடலாம்

அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? இனிமேலாவது அம்மாதிரி நடக்காமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவரை எச்சரிக்கும் வகையில் அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர் செய்த செயலும் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, காவல் துறையில் இருக்கும்படியான இப்படிப்பட்ட அதிகாரிகள் பஸ்ஸிலே தங்களுக்கு டிக்கட் கொடுக்கவில்லை என்பதற்காகக்கூட தொழிலாளர்களை அச்சுறுத்துவதாகப் பல செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இது சம்பந்தமாக ஏதாவது உறுதியான உத்தரவைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி ஏதாவதொரு தெளிவான விஷயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுதி யனுப்புவாரானால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

திரு. கே. விநாயகம்: அங்கு வாயிலில் இருந்த சிம்ப்லன் கம்பெனி உத்தியோகஸ்தருக்கும் நம்முடைய காவல்துறையில் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஏற்கெனவே ஏதாவது விரோதம் இருந்ததா? அந்தச் சம்பவம் எப்படி நடந்தது? கைகலப்பிற்கு என்ன காரணம்? அந்த சப்-இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுவது அவ்வளவு போதிய அளவுக்குக் கொடுக்கப் படுகிற தண்டனை அல்ல என்று யான் கருதுகிறேன். இதுமாதிரி யான ஒரு நிகழ்ச்சி ஏதோ ஒரு நாள் உங்கள் கவனத்திற்கும் எங்கள் கவனத்திற்கும் வருகிறது. ஆனால், இதுபோல் எங்கு பார்த்தாலும் நடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர் மீது சென்ஷூரே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தண்டனை போதுமானதல்ல என்று 'யான்' கருதுவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது போதுமானது என்று யாம் கருதுகிறோம். (சிரிப்பு)

### ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பணியாளர்கள் ஊதியம்

*210 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநில அரசைச் சேர்ந்த பெரிய மருத்துவமனைகளிலுள்ள லேபாரட்டரி டெக்னிஷியன்களுக்கும் (Laboratory Technicians) மத்திய அரசைச் சேர்ந்த மருத்துவமனைகளிலுள்ள லேபாரட்டரி டெக்னிஷியன்களுக்கும் ஊதியத்தில் வேறுபாடு இருப்பது அரசினருக்குத் தெரியுமா?

(இ) இந்த ஊதிய வேறுபாட்டைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மாநில அரசைச் சேர்ந்த மருத்துவமனைகளில் பணிபுரியக்கூடிய இந்த லாபரடரி டெக்னிஷியன்களுக்கு எந்தவிதமான ப்ரமோஷனும் கிடையாது; சம்பள உயர்வும் கிடையாது. மத்திய அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியக்கூடியவர்களுடைய சம்பளத்திற்கும் இவர்களுடைய சம்பளத்திற்கும் 50 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. உத்தியோகத்திலே உயர்வும் கிடையாது. இந்த நிலைமையில் மத்திய அரசு லாபரடரி டெக்னிஷியன்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தின் அடிப்படையில் மாநில அரசு ஊழியர்களுக்கும் அந்த அளவுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த ஒரு துறையில் மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளில் மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் வேறுபட்டிருக்கின்றன. எல்லா சம்பள விகிதங்களையும் ஒரே அளவுக்குக் கொண்டுவரும் அத்தகைய முயற்சியும் இப்பொழுது எடுக்கப்படவில்லை. லாபரடரி டெக்னிஷியன்களுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்க சம்பளக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சம்பளக் குழு ஆராய்ந்து எந்த அளவு இவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் என்று கண்டறிந்து அவர்கள் சிபார்சின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: மாநில அரசில் வேலை செய்கிற லாபாடரி டெனிஷியன்களுக்கும் மத்திய அரசில் வேலை செய்பவர்களுக்கும் இருக்கின்ற சம்பள விகிதாசாரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இவர்களில் கிரேடு-1, கிரேடு-2 என்று இரு பிரிவுகள் இருக்கின்றன. மாநில அரசில் வேலை செய்பவர்களுக்கு—முதல் கிரேடில் உள்ளவர்களுக்கு ரூ. 100—5—200 என்ற அளவுக்கும், மத்திய அரசில் வேலை செய்பவர்களுக்கு ரூ. 150—5—160—8—240 என்ற அளவுக்கும் சம்பள விகிதம் இருக்கிறது. இரண்டாம் கிரேடில் உள்ளவர்களுக்கு மாநில அரசைச் சார்ந்தவர்களுக்கு ரூ. 80—2—100 என்ற அளவுக்கும், மத்திய அரசைச் சார்ந்தவர்களுக்கு ரூ. 130—5—160—200 என்ற அளவுக்கும் சம்பள விகிதம் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், பல்வேறு துறைகளில் இருக்கிறார்கள் என்றாலும், இந்தத் துறையில் பணிபுரியக்கூடியவர்களைப்போல் ப்ரொமோஷன் இல்லாதவர்கள் வேறு துறைகளில் கிடையாது. மற்றவர்களுக்கெல்லாம் அப்போதைக்கப்போது ப்ரொமோஷன் இருக்கிறது. இவர்களுக்கு ப்ரொமோஷன் என்பதே கிடையாது. ஆகவே, மத்திய அரசில் உள்ளவர்களுக்கு

இருக்கும் சம்பள விகிதத்தின் அடிப்படையில் இவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்துவதற்கு இரண்டாவது பே கமிஷனுக்கு அமைச்சரவர்கள் உறுதியாகச் சிபார்சு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இரண்டாவது சம்பளக் கமிஷனிடத்தில் இந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து விண்ணப்பித்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பும் வழியும் இருக்கிறது. அரசாங்கத் துறையிலிருந்தும் இதைச்சம்பளக் கமிஷனுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு வழிவகை இருக்குமானால் அது பற்றிய நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளும்.

**திரு. ஆர். கருப்பையா :** மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் ஒரே அடிப்படையில் இல்லையென்றாலும், வேறுபாடு அதிகமாக இருப்பதையாவது குறைத்துச் சீர்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைத்தான் இரண்டாவது சம்பளக் கமிஷன் ஆராயும் என்று சொன்னேன்.

### *Government Arts College at Ponneri*

* 211 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether this Government has changed the medium of instruction in the Loganathan Narayanaswamy Government Arts College, Ponneri into Tamil from English;

(*b*) if so, whether any alternative arrangement has been made for the minority Telugu speaking people of the Taluk, as it has been declared as a bilingual area by a Government Order a few years ago; and

(*c*) whether the Government propose to have at least one section in English for the benefit of the Telugu speaking people and such of those who desire to join in the English medium?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தாய்மொழி தமிழாயிராத மாணவர்கள் மட்டுமே ஆங்கிலப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்கிற நிபந்தனைக்குட்பட்டு, கல்லூரிப் புகுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் ஆங்கிலப் பயிற்றுமொழிப் பிரிவு ஒன்றை வைத்துக் கொள்ள அரசு இக்கல்லூரிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

**திரு. கே. விநாயகம் :** அப்படி அனுமதி தந்திருந்தால், தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத மாணவர்கள் எத்தனை பேர் இப்பொழுது அந்த வகுப்பில் சேர்ந்திருக்கிறார்கள்?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Linguistic Minorities Commissioner has recognised certain areas as Telugu areas in this State, such as Madras City, Gudiyatham, Ponneri and other places. May I know from the Hon. Minister for Education whether arrangements have been made to provide English sections in all the Colleges in these areas?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பகுதிகளில் போதுமான அளவுக்கு மாணவர்கள்—வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்—தங்களுக்கு ஆங்கிலத்தில் ஒரு பிரிவு இருக்கவேண்டும் என்று கோருவார்களானால், அந்த இடங்களில் அது கவனிக்கப்படும். சிறுபான்மையோரின் எண்ணிக்கை போதுமான அளவுக்கு இருக்குமானால் அது கவனிக்கப்படும்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், பொன்னேரி கலைக் கல்லூரியில் கடந்த மூன்று ஆண்டுகளாக கெமிஸ்ட்ரி (மெயின்) எடுத்துப் படித்த மாணவர்கள் அங்கு அதற்குத் தேவைப்படும் காஸ் ப்ளான்ட் என்ற சாதனம் இல்லாத காரணத்தால், அவர்கள் இன்று சரியான முறையில் பரீட்சை எழுத முடியாமல் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆம் என்றால், அந்த மாணவர்களுடைய குறையைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், அந்தக் கல்லூரி மாணவர்களுடைய கோரிக்கையின் மீது தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டிருக்கிறது.

### *Tamil as Part I subject in P.U.C.*

* 212. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government have suggested to the Madras University authorities to make Tamil as Part I subject and English as Part II subject in Pre-University Course; and

(*b*) whether the suggestion has been accepted by the University?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆம்.

**திரு. கே. விநாயகம் :** உயர்தரப்பள்ளிகளில் தமிழுக்கு முதலிடம் தந்து, ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடம் தந்திருப்பதுதான் இப்பொழுது வழக்கத்தில் இருந்து வருகிறது. இப்படி நாம் செய்கிறோம் என்று சொல்லி, 'நீங்களும் இப்படிச் செய்யுங்கள்' என்று யூனிவர்சிட்டி அதாரிட்டிக்கு சிபார்சு செய்வதிலேயே தமிழுக்கு

என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மூன்று பேருக்கு மேற்பட்டுள்ள கிராமக் குற்றேவலர்களை வேலையிலிருந்து எடுத்து விடுவது அரசு கொள்கையாதலால், இந்த வேண்டுகோள் ஏற்கப்படவில்லை.

(6) **வருவாய்க் கோட்ட அதிகாரிகள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிகாரிகளின் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கூடிப் பேசுதல்.**—இந்தக் கோரிக்கை ஆதரவுடன் கருதிப்பார்க்கப் பட்டது. மாவட்டக் கிராம அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் மாவட்ட வருவாய் அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் காலாண்டுக்கு ஒரு முறை முறையாகக் கூட்டம் கூட்டி விவாதிக்கவேண்டும் என்று கட்டளையும் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(7) **சட்ட மன்றப் பேரவையில் பிரதிநிதித்துவம்.**—ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த அல்லது வகுப்பைச் சேர்ந்த பணியாளர்களுக்கு சட்டம் மன்ற மேலவையில் இடம் ஒதுக்குவதற்கு அரசியலமைப்பில் வகை செய்யப்படவில்லையாததால் சட்ட மன்ற மேலவையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்னும் வேண்டுகோள் மறுக்கப்பட்டது.

(8) **கடன் வசூலிப்பில் கிராம அதிகாரிகளுக்குத் தரகு அளித்தல்.**—இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(9) **கொள்முதல் காரியமாக விதிமுறைக் கொள்முதல் பதிவேடுகள் தயாரிப்பதற்குக் கிராம அதிகாரிகளுக்கு ஊதியமளித்தல்.**—இது குறித்து உணவுத் துறையில் 24—7—1969 அன்று வெளியிடப்பட்ட 671-ம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(10) **வேலை நியமனத்தில் சட்டப்படிக்கான வாரிசுதார்களுக்கு முன்னுரிமை அளித்தல்.**—இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(11) **சென்னையில் அரசினர் மாளிகைப் பகுதியில் கிராம அதிகாரிகள் சங்கத்திற்குக் கட்டிடம் கட்ட நிலம் ஒதுக்குதல்.**—இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(12) **கிராம அதிகாரிகளின் மாவட்ட மாநாட்டில் மாண்புமிகு நிதி அமைச்சர் கலந்து கொள்ள வேண்டுமெனல்.**—மாண்புமிகு நிதி அமைச்சர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது உள்ளூர்ப் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்துத் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொள்வதற்கான வாய்ப்பளிக்கும் வகையில், சுற்றுப் பயண நிகழ்ச்சிநிரல்களைத் தங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மாண்புமிகு நிதி அமைச்சரை சங்கம் வேண்டிக் கொண்டது. இதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1970 மார்ச் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Police Officers—Simpson Group Companies Security staff—Clash.*

* 209 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Police Officers of Madras City came to clash with security staff of Messrs. Simpson Group of Companies Limited, Madras City about the 4th July, 1969;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 4-7-69 அன்று திருவல்லிக்கேணி காவல் நிலையத்தைச் சேர்ந்த அடிஷனல் சப்-இன்ஸ்பெக்டர் இயல்பான உடையிலிருந்த ஒரு காவலருடன், வெளியே செல்லும் வாயில் வழியாக சிம்ப்ஸன் கம்பெனிக்குள் நுழைந்தார். அவர்கள் நுழைந்ததை வாயிற்காப்போர் ஆட்சேபித்தார். சப்-இன்ஸ்பெக்டருக்கும் வாயிற்காப்போர் மற்றுமுள்ள சில தொழிலாளர்கள் ஆகியோருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. வாயிற்காப்போரும் அடிஷனல் சப்-இன்ஸ்பெக்டரும் சிறு காயமுற்றனர். அதற்காக அவர்களுக்கு மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

(உ) இது பிடியாணை வேண்டாக் குற்றமாகையால், நீதிமன்றத்தில் முறையிட்டுக் குறை தீர்த்துக் கொள்ளுமாறு வாயிற்காப்போருக்குக் கூறப்பட்டது. அடிஷனல் சப்-இன்ஸ்பெக்டர்மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு டி1. திருவல்லிக்கேணி காவல் நிலையத்திலிருந்து அவர் உடனடியாக மாற்றப் பட்டார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டிய ஒரு காவல் துறை அதிகாரி இதுமாதிரி குற்றத்தைச் செய்ததற்காக அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருக்க, அவரை வேறொரு ஸ்டேஷனுக்கு மாற்றிவிட்டால் போதுமா? அவர் மீது

உயர்வு தந்துவிட்டதாகுமா? இடத்தை மாற்றி மேலே போடுவதினாலேயே தமிழ் வளர்ந்துவிடுமா? தமிழ் வளர்ச்சிக்கு என்று ஏதாவது பிரத்தியேகமான சலுகைகளோ முயற்சிகளோ எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ் வளருவதற்கு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இது ஒன்றினால் மட்டும் தமிழ் வளர்ந்து விடும் என்று சொல்வதற்கில்லை. தமிழ் வளருவதற்கு, தமிழுக்கு உரிய இடம் கொடுப்பதற்கான முயற்சிகளில் இதுவும் ஒன்றுதான். தமிழ் வளர்ச்சிக்காக தமிழை ஆட்சி மொழியாக்கி, அரசாங்க அளவில் பல்வேறு வகைகளிலே, பல்வேறு கட்டங்களில் வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. பயிற்சிப் பாட மொழியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழுக்கு உரிய இடமாக முதல் இடம் தரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் 1969–70-ம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, சர்வகலாசாலையில் இருக்கிற வைஸ் சேன்சலர் அவர்கள் இப்படிச் செய்வது சரியல்ல என்ற அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்குச் சொன்னார்களா? அப்படி அவர்கள் சொல்லியும்கூட அரசாங்கமானது இந்த யோசனையைத் திணித்தது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூற்றில் உண்மை இல்லை. 23—3—1969-ல் அரசு பல்கலைக் கழகக் குழுவிற்கு அனுப்பிய குறிப்பை, சென்னைப் பல்கலைக் கழகம் 1969 ஜூலையில் பல்கலைக் கழக சிண்டிகேட்டில் வைத்து ஆராய்ந்து, ஏற்றுக்கொண்டது. அதற்குப் பிறகுதான் அரசு முடிவு செய்தது.

**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டு மொழிதான் பல்கலைக் கழகத்தின் சார்பில் கல்லூரிகளில் முதல் மொழியாக இருக்கிறது. அதையொட்டித்தான் பல்கலைக் கழகத்தை இதை ஏற்கும்படி அரசு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? இரண்டாவது மொழியாக ஆங்கிலத்திற்கு இடம் தரப்பட்டிருப்பதால், ஆங்கிலத்தின் தரம் குறைந்துவிடும், அறிவு குறைந்துவிடும் என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று இந்த நாட்டினுடைய மொழி தமிழாக இருக்கிற காரணத்தாலே தமிழுக்கு முதல் இடம் தரப்பட வேண்டுமென்ற கொள்கையினால், முதல் இடம் தரப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, கல்லூரி[illegible] தமிழுக்கு முதல் இடம் தரப்பட்டிருக்



கிறது. ஆங்கிலத்திற்கு இரண்டாவதாக இடம் தரப்பட்டதால் அதன் அறிவு குறைந்துவிடாது, தரம் குறைந்துவிடாது. தமிழகத்தில் தமிழ்தான் முதல் மொழி.

**திரு. எஸ். முருகையன்:** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய திரு. கே. விநாயகம் அவர்கள், தமிழகத்திலே தமிழ் முதல் மொழியாக, ஆட்சி மொழியாக வரக்கூடாது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை சட்டமன்றக் குறிப்பிலிருந்து நீக்கிவிட முயற்சிக்குமா?

**Thiru K. VINAYAKAM:** That is my liberty.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, நம்முடைய தாய் மொழியை முதல் மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கருத்தைப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட் ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார்களே, அது எந்த சிண்டிகேட்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்திற்கென்று ஒரு சிண்டிகேட் இருக்கிறது. அதுதான் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த முறைப்படி ஆங்கில மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொடுத்ததன் விளைவாக ஆங்கிலத்திற்கு உயர்வு கிடைத்தது. இப்பொழுது ஆங்கில மொழிக்கு ஒருவேளை மட்டும் என்று வைத்து விட்டு, மற்ற பாடங்களைத் தாய்மொழியில் கற்றுக் கொடுப்பதனால் ஆங்கிலத்தின் தரம் குறைந்துவிட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்கிறேன் ஒருவன் சர்வீஸ் கமிஷன் பரீட்சையில் " What is your father ? " என்று கேட்டதற்கு அவன், " My father is ' deaded ' " என்று பி.ஏ. படித்த மாணவன் பதில் சொன்னதாக பத்திரிகையில் வந்தது தெரியுமா? ஆங்கிலம் இப்படியாகக் கொலை செய்யப்படுகிறதே, இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆங்கிலத்தை இரண்டாவது பாட மொழியாக ஆக்கிவிட்டதால் அதனுடைய தரம் குறைந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. ஆங்கிலேயர்கள் இந்த மாநிலத்தை ஆண்டபொழுது ஆங்கிலத்திற்கு முதல் இடம் தரவேண்டுமென்று விரும்பினர். அப்படியே முதல் இடம் அதற்குத் தரப்பட்டது. தமிழை மாநில ஆட்சி மொழியாக நாம் ஏற்றுக்கொண்ட காரணத்தினால், தமிழுக்கு முதல் இடமும், ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடமும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தின் தரம் குறைந்து விட்டதென்றால் அதற்கு வேறு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. தரம் குறையாதபடி பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் தமிழுக்கு முதல் இடம் தரப்பட வேண்டும் என்ற

நோக்கத்தோடுதான் கனம் உறுப்பினர் அவர்கள் இருப்பார் என்று நான் எண்ணினேன். இப்பொழுது கனம் உறுப்பினர் கூறுவது எனக்கு விந்தையாக இருக்கிறது.

### சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக்

* 213 வினா—திரு. கே. பி. எஸ். மணி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தாலுக்காவிலுள்ள "சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக்" கில் போதுமான அளவு மாணவர்கள் சென்ற இரண்டு ஆண்டுகளாக சேராததால் அடுத்த ஆண்டில் (1969-70) மூடிவிட ஏதேனும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாணவர்கள் இந்தப் பாலிடெக்னிக்கில் இரண்டு ஆண்டுகளாக அதிகமாகச் சேராமல் இருப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தப் பாலிடெக்னிக்கில் 1968-69-ல் 50 மாணவர்களும், 1969-70-ல் 66 மாணவர்களும் சேர்ந்தனர். அதிகமான அளவில் மாணவர்கள் சேராததற்குக் காரணம் என்னவென்றால், எதிர்காலத்தில் தங்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் போகுமோ என்று பயப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அமலுக்கு வருகிற நேரத்தில் இப்படிப்பட்ட தொழிற் பயிற்சியுடையவர்களின் தேவை ஏற்படலாம். இனி வருங்காலத்தில் தொழில் படிப்புள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் கிடைக்கலாம் என்ற அடிப்படையில்தான் இந்தத் தொழில் பள்ளி மூடப்படவில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு பள்ளிகளில் போதிய மாணவர்கள் இல்லாமல் குறைவாக இருக்கிறார்களா? ஒவ்வொரு பள்ளியிலும் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கைச் சொல்ல முடியுமா? குறைவாக சேர்ந்துள்ள பள்ளிகளில் அந்தக் குறைவை நிரப்ப என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே பதில் கூறியிருக்கிறேன். இடையிலே மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைந்தது. இனி வருகிற ஆண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எத்தனை மாணவர்கள் ஒவ்வொரு பள்ளியிலும் என்ற கணக்கிற்கு தனிக்கேள்வி போட்டால் சொல்ல முடியும். சீர்காழி சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக்கில் 120 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வசதி இருக்கிறது. ஆனால் 1968-69-ல் 50 பேர்களும், 1969-70-ல் 66 மாணவர்களும்தான் சேர்ந்திருக்கிறார்கள்.



THIRU T. MARTIN: Sir, may I request the Hon. Minister to state the number of students who have passed from this Polytechnic and who are now unemployed in this State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 214, 215, 216 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும். அடுத்த வினா 217.

### அரசு கிடங்குகளுக்கு வந்துசேர வேண்டிய அரிசி

* 217 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 அக்டோபர் மாதத்தில், ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆவடி குடோனுக்குப் போக வேண்டிய 12 லாரி அரிசி காணாமல் போனது உண்மையா?

(இ) ஆம் எனில், அவை மொத்தம் எத்தனை மூட்டைகள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ).

1969-ம் ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதங்களில் எழும்பூர் ரயில்வே கிடங்கிலிருந்து தமிழ்நாடு அரசு கிடங்குகளுக்கு வந்து சேர வேண்டிய 12 லாரி அரிசி காணாமற்போனது. அதில் மொத்தம் 1,095 மூட்டைகள் அனுப்பப்பட்டன. இது சம்பந்தமாக வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, அரிசி ஏற்றப்பட்ட அத்தனை லாரிகளும் அரசுக்குச் சொந்தமான லாரிகளா? அல்லது வழக்கம்போல் தனியார் துறையிலிருந்து வருகின்ற லாரிகளா? அன்றையதினம் மட்டிலும் திடீரென்று கண்டுபிடிக்கப்பட்ட லாரிகளா? அல்லது ஒவ்வொரு லாரியாக, இரண்டு இரண்டு லாரியாகக் கண்டுபிடிக்கப்பட்டதா? அல்லது 12 லாரிகளும் ஏக காலத்தில் சிக்கியதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அது சர்க்கார் லாரி அல்ல. காண்ட்ராக்டர் லாரிதான். பிடிக்கப்பட்ட 12 லாரிகளைப் பற்றிய முழு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்குப் பதிவுசெய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, 1095 மூட்டைகள் கடத்திச் செல்லப்பட்டுவிட்டன என்று கூறினார்கள். அந்த மூட்டைகளில் எவ்வளவு போலீசாரால் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மூட்டைகள் கைப்பற்றப்படவில்லை. குற்றவாளிகள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** மூட்டைகள் கைப்பற்றப்படவில்லை, குற்றவாளிகள் பிடிபட்டிருக்கிறார்கள், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னால், நம்முடைய அதிகாரிகளின் திறமை எப்படி இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம். இனி மேலாவது அவற்றைக் கண்டுபிடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சர்க்கார் ஊழியர்கள் திறமையாகச் செயல்பட்ட காரணத்தினால்தான் குற்றவாளிகள் பிடிபட்டிருக்கிறார்கள். அவர்களைக் குற்றம் சாட்டிப் பயன் இல்லை. லாரிகள் காணவில்லை என்றவுடனேயே விஜிலன்சுக்கு ரிப்போர்ட் செய்து அவர்கள் தீவிரமாகப் புலன்விசாரணை செய்ததன் காரணத்தினால்தான் குற்றவாளிகள் பிடிபட்டிருக்கிறார்கள். மூட்டைகள் எங்கே போயிற்று என்றால் பலபேர்களுடைய வயிற்றில் மறைந்திருக்கலாம். மேற்கொண்டு தகவல் கொடுப்பதற்கில்லை.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** மூட்டைகள் அகப்படவில்லை, லாரிகள் அகப்பட்டன என்றால் அந்த லாரிகளைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** லாரிகள் பறிமுதல் செய்யப்படுமா என்று கேட்டார்கள். வழக்கைப் பாதிக்காத அளவில் இதில் ஏற்பட்டிருக்கிற சம்பவம் ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பியட், அம்பாசிடர் போன்ற கார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நம்பர்களை இந்த லாரிகளுக்குக்கொடுத்து ஏமாற்றியிருக்கிறார்கள். ஆயினும் டிரைவர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். காண்டிராக்டர்கள் இருக்கிறார்கள். ஆகவே பணத்தை மீண்டும் வசூல் செய்துவிட முடியும்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்த வழக்கு சம்பந்தமாக காண்டிராக்டர்கள், லாரிகளின் சொந்தக்காரர்கள் ஆகியோர் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** குற்றவாளிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த 12 லாரிகளும் ஏற்றிய அரிசி மூட்டைகளைக் கடத்துவதற்கு சில அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். இது திட்டமிட்டே செய்யப்பட்டிருக்கிறது. . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அதிகாரிகளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இவர் அவர்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.



**திரு. என். எஸ். வி. சித்தன்:** ஒரு மூட்டை, இரண்டு மூட்டை அல்ல, 1,095 மூட்டைகள் கடத்தப்பட்டிருக்கின்றன என்றால் அது இந்த அரசாங்கத்திற்கு விடப்பட்ட ஒரு சவாலாகும்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். சவால்களை டிமாண்டில் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அந்த மூட்டைகள் என்றைக்குக் காணாமற் போயின? என்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டன? குற்றவாளிகள் என்றைக்குக் கண்டு பிடிக்கப்பட்டார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த மூட்டைகள் காணாமற் போனது அரசாங்கத்திற்கு விடப்பட்ட சவாலாகும் என்றால், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களை வழக்குமன்றத்தில் இந்த அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது என்றால் இது எதிர்க் கட்சிகளின் தவறான பிரச்சாரத்திற்கு எதிராக விடப்பட்ட இன்னொரு சவாலாகும்.

## *Government Pleaders*

* 218 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether Government Pleaders in Districts are being appointed on tenure basis?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆம்.

**திரு. க. கோமதிசங்கர திட்சிதர்:** ஹைகோர்ட் பப்ளிக்ப்ராஸிக்யூடர் மாத்திரம் 5 வருஷ காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். ஏன் ஜில்லாக்களில் உள்ள சர்க்கார் ப்ளீடர்களுக்கும் இதுபோல் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உயர்நீதி மன்றத்தில் பப்ளிக் ப்ராஸிக்யூடர் நியமனம் சம்பந்தமாகத் தனி விதி இருக்கிறது. மாவட்ட அளவில் வேறுமாதிரி விதிகள் இருக்கின்றன. அந்த ஸ்டாண்டிங் ஆர்டர்படி நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**திரு. கே. விநாயகம்:** பப்ளிக் ப்ராஸிக்யூடர் ஆனாலும் சரி, கவர்ன்மெண்டு ப்ளீடர்கள் ஆனாலும் சரி, திறமையையே அடிப்படையாக வைத்து நியமனம் செய்யப்படுகிறார்கள், கட்சி அடிப்படையில் இல்லை என்று சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** யார் யார் திறமையாக இருந்தாலும்—எந்தக் கட்சியில் இருந்தாலும்—அவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக திறமை யானவர்கள் கூட நியமிக்கப்படக்கூடாது என்பதல்ல. எந்தக் கட்சியில் இருந்தாலும்—யார் திறமையானவர்களோ அவர்களை ஏற்றுக்கொள்கிறோம்.

*Exploration of oil in Tamil Nadu*

* 219 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any Russian team of Geologists are undertaking survey of the Cauvery delta area to unearth oil in this State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

ஆனால், காவிரி கயவாய்ப் பகுதியில் (Cauvery Delta) எண்ணெய் எரி வாயு ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டு வரும் துளையிடும் பணிகளுக்கு சோவியத் நாட்டின் சில வல்லுநர்களும் தொழில் நுட்பப்பணியார்களும் உதவி புரிந்து வந்துள்ளார்கள்.

* 220 வினா—திரு. எஸ். அக்னிராஜு : மாண்புமிகு தொழில் அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-1969-ல் மத்திய அரசு எண்ணெய் எரிவாயு கமிஷன் தமிழ் நாட்டில் பெட்ரோலிய ஆராய்ச்சி நடத்திய இடங்கள் எத்தனை?

(இ) எந்தெந்த இடங்களில் பெட்ரோலியம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) எண்ணெய்—எரி வாயு ஆணைக்குழுவினால் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலக்கூறு இயற்பியல், புவியியல் ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்துள்ளன. காரைக்கால், திருப்பூண்டி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், மடானம் பகுதிகளில் ஆழமான ஆய்வுக் கிணறுகளும் (Exploratory wells), கந்தர்வக் கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, நாக்குடி, காரைக்குடி, பாண்டிக்கண்மாய் பகுதிகளில் கட்டுமானக் கிணறுகளும் (Structural wells) தோண்டும் பணி முடிவடைந்துள்ளது. இவ்வாண்டில் திருத்துறைப்பூண்டி அருகில் மேலும், ஒரு கிணறு தோண்டுவதற்கு எண்ணெய்—எரிவாயு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

(இ) இதுவரை தோண்டப்பட்ட கிணறுகள் எதிலும் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஹைட்ரோகார்பன் (Hydro-carbon) இருப்பதற்கான அறிகுறிகள் கிடைக்கப்பெறவில்லை என்று எண்ணெய்-எரிவாயு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : காவேரி டெல்டா பகுதியில் நடக்கப்பட்ட சோதனைகளின் விளைவாக எங்கெங்கே என்ன என்ன எண்ணெய், எரிவாயு முதலியன கிடைக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டது? அவற்றை எடுக்க மொத்தம் எவ்வளவு செலவாகும் என்று அரசாங்கம் கருதுகிறது?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்பே சொன்னேன். இதுவரை தோண்டப்பட்ட கிணறுகள் எதிலும் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஹைட்ரோ கார்பன் இருப்பதற்கான அறிகுறிகள் கிடைக்கவில்லை என்று எண்ணெய் எரிவாயு ஆணைக் குழு தெரிவித்துள்ளது. மீண்டும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசினிடம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

*Taxis with contract carriage permites*

* 221 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether taxis with contract carriage permits in Tamil Nadu are allowed to ply in Pondicherry State also?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஆம். அவற்றின் அனுமதிச் சீட்டுகளில் புதுச்சேரி அதிகாரிகளின் மேற்கையொப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அவை புதுச்சேரி மாநிலத்திலும் ஓட அனுமதிக்கப்படுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : எந்தமாதிரியான வண்டிகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன? அப்படியானால் அரசாங்கம் என்ன என்ன அளவுகளை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வாடகை மோட்டார் வண்டி, வாடகைக் கார்கள், சுற்றுலா வாடகைக் கார்கள், சுற்றுலா பேருந்துகள் ஆகியவை புதுச்சேரியுடன் செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் அனுமதிக்கப்படுகின்றன.

திரு. பி. வேலுசாமி : இதுபோல வேறு மாநிலங்களைச் சேர்ந்த எத்தனை வண்டிகள், கார்கள், லாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தப் புள்ளி விவரம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

திரு. நா. கிருட்டிணன் : இந்தகைய அனுமதி தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை.

திரு. டி. மார்டின் : சென்னையில் ஓடுகிற டாக்சிகள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாண்டிச்சேரி சம்பந்தப்பட்ட கேள்வி.

திரு. டி. மார்டின்: இந்த வண்டிகளில் உள்ள மீட்டர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான ரேட்டைக் காண்பிக்கிறது. ஆகவே இந்த வண்டிகளில் உள்ள மீட்டர்களை எல்லாம் ஒழுங்கு செய்து எல்லாம் ஒரேவிதமான ரேட்டைக் காண்பிக்கும்படியாக ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக்கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

## Bus Stand at Esplanade

* 222 Q.—THIRU K. VINAYAKAM: (On behalf of DR. H. V. HANDE): Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Corporation of Madras propose to reconstruct the bus stand in Esplanade, Madras (near the Corporation fruit market)?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஆம்.

திரு. கே. விநாயகம்: ஆம் என்றால் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்? எவ்வளவு செலவாகும்? எத்தனை வண்டிகள் நிறுத்தப்படுவதற்கு வசதி உடையதாக இருக்கும்? இப்போது இருக்கிற இடம் நெருக்கடியானதாக இருக்கிறது என்பதற்காக வேறு இடத்தில்—நந்தனத்தில் ஏற்படுத்தவேண்டும் என்கிற சிபார்சு செய்யப்பட்டதே—அந்தக் குழுவில் நானும் இருந்தேன்—அது கைவிடப்பட்டதா? இப்போது எந்த இடத்தில் அமைப்பதாக அரசு உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, வெளியூர் பேருந்து நிலையத்தை ரூபாய் 7.95 லட்சம் செலவு மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட வரைப்படங்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு 9—1—1961 அன்று நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் ஒப்பளிப்பு வழக்கப்பட்டது. இதற்கான கடன் கோரிக்கைக்கு ஒப்பளிப்பு வழங்கும் பொருட்டு இத் திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டது. மாநகரில் உள்ள பேருந்து நிலையங்கள்,ப் அங்காடிகள் ஆகியவற்றின் மேம்பாடுகளைக் கருதுவதற்கு 14—9—1964 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் "ராமசாமி குழு" என்று விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. கிராம வளர்ச்சி உள்ளாட்சி நிர்வாகத்துறை செயலாளரின் அறையில் நடைபெற்ற விவாதத்தை ஒட்டி வெளியூர் பேருந்து நிலை திட்ட விவரங்கள் அடங்கிய செயற்குறிப்பு ஒன்று கோடு வரையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது, செயலாளரின் பார்வைக்காகவும், கடன் வழங்குவதற்காகவும், அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காகவும் அனுப்பப்பட்டது. அப்போது முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கு சிறப்பு ஆலோசகராக இருந்த



திரு. என். முருகேச முதலியார் மாநகராட்சியின் செயற் குறிப்பில் சில திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்யலாம் எனக் கருத்துத் தெரிவித்தார். அதற்கிணங்க தற்போது வரைபடங்களும் மதிப்பீடுகளும் சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே. பி. எஸ். மணி: சார், இந்தப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான இடம் நினைக்கிறபடி அதிகமாக இல்லாததால் அண்டர்கிரவுண்ட் கட்டடமாகக் கட்டுவதற்கு ஆரம்பக் காலத்திலேயே வழிவகைகள் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள மாநகராட்சி பஸ் நிலையத்திலே ஒரு ஏழடுக்கு மாளிகைபோன்ற வசதியான பஸ் ஸ்டாண்ட் அமைப்பதாக ஒரு உத்தேச வரைப்படம் கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பத்திரிகையிலே வந்தது. அதை அரசு செயல்படுத்த இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. விநாயகம்: இப்பொழுதிருக்கிற எஸ்பிளனேட் பஸ் ஸ்டாண்ட் ரொம்பவும் சிறிய இடம். என்னதான் நாம் அதை அபிவிருத்தி செய்தாலும் நாம் விரும்புகின்ற அளவுக்கு ஏற்படுத்த முடியாது என்ற கருத்துப்படி. அதே கமிட்டி, அதாவது வி. வி. ராமசாமி நாடார் தலைமையிலே வந்த கமிட்டியும் ஐலண்ட் கிரவுண்டில் நிறைய இடம் இருக்கிறது, அதை அதற்காகப் பயன்படுத்தலாம் என்று யோசனை சொன்னார்களே, அதை அரசாங்கம் விட்டு விட்டதா? அந்த அடிப்படையிலே கார்ப்பரேஷனுடைய அபிப்பிராயம் என்ன?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி: ஏற்கனவே நான் சொன்ன குறிப்புகளைத் தவிர வேறு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், 1962-லே ஆரம்பித்து 1970-க்கு வந்திருக்கிறோம். புதிய அரசு வந்து 3 வருடங்கள் ஆகின்றன. விரைவில், விரைவில் என்றால் ஆறு மாதம் ஆகுமா அல்லது ஆறு வருடம் ஆகுமா, இல்லை, எத்தனை வருடம் என்று சொல்ல வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்குக் கண்காட்சி சாலையாக அதை வைத்திருந்தார்கள். இப்பொழுது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியிலே இம்மாதிரி [illegible] என்று சொல்லியிருந்தும் மறுபடியும் [illegible] படியும் பேசினால் எப்படி?

அரசு அதிகாரிகளுடன் கூடிப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரிடத்தில் நேரடியாகவும் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கால்வாய்த் திட்டம் மிகவும் நல்ல திட்டம், வருவாய் உள்ள திட்டம் என்று மத்திய அரசு ஏற்றுக்கொண்டு இது பற்றி நல்ல முறையிலே கருத்துத் தெரிவித்து இருந்தாலும், இன்னமும் அது ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம் இரண்டையும் ஒருங்கிணைத்து, ஒருங்கு அமைந்த கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டுமென்று கருதி 5 கோடி ரூபாய் தூத்துக்குடி திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த சேது சமுதிரத் திட்டத்திற்கு எப்பொழுது ஒதுக்குவார்கள் என்று தெரியவில்லை. எழுச்சி நாள் பற்றிக் கேட்டார்கள். அது எனக்கு அப்பாற்பட்டது. அதற்கு அமைச்சரவைதான் முடிவு எடுக்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் அதற்கு விடை சொல்வார்களானால் நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் தூத்துக்குடி திட்டத்தையும், சேலம் இரும்பாலைத் திட்டத்தையும் மத்திய அரசுக்கு உணர்த்துகின்ற அளவுக்கு எழுச்சி நாள் கொண்டாடினார்கள். அதேபோல் சேதுக் கால்வாய்த் திட்டத்திலும், சேலம் இரும்பாலைத் திட்டத்திலும் தமிழக மக்கள் எத்தகைய மன எழுச்சி கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பிரதிபலித்துக் காட்டும் வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் எழுச்சி நாளைக் கொண்டாட முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** காலம் வரும்; காத்திருப்போம்.

**திரு. டி. தங்கப்பன்:** பொருளாதார ரீதியில் தன்னைக் கட்டி வரக்கூடியதும், தொழிற் துறையிலே சாத்தியமானதுமான இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்திருப்பதற்கு இலங்கை அரசு தனக்குப் பாதகம் ஏற்படும் என்ற காரணத்தால் மத்திய அரசாங்கத்தில் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் தடுக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நமது நிலத்திலேதான் கால்வாயை வெட்டுகிறோம். இந்திய மண்ணிலேயேதான் ஆறு மைல் தூரத்திற்குக் கால்வாய் வெட்டுகிறோம். இதிலே இலங்கை அரசு தலையிடுவதற்கு எந்தவித வழியும் இல்லை. அவர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று கூறியதாகவும் தெரியவில்லை.

**Thiru K. VINAYAKAM:** Sir, in view of the importance of the question which affects our State, why don't you be a little liberal in allowing me to put one more supplementary question?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண் 224, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.





### மாயூரம் வட்டம் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

* 224 வினா—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 1968-ஆம் ஆண்டு காரியதரிசியாக இருந்த ஒருவர் ரூ. 5,000 (ஐயாயிரம்) கையாடல் செய்ததாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) இது காவல் துறையின் விசாரணையிலுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** அந்தக் காரியதரிசி யார் என்பதையும், மாயூரம் விற்பனைச் சங்கத்தில் செய்துள்ளதாகக் கூறப்படும் மோசடிகளையும், அரசாங்கம் முற்பட்டு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அங்குள்ள கூட்டுறவுத் துறையின் துணைப் பதிவாளர் முகம்மது யூசுப் என்ற பெயருள்ளவர். 1967-ம் ஆண்டில், ஐயாயிரம் ரூபாய் கணக்கில் எழுதியிருக்கிறது, கும்பகோணம் பாங்கில் கொடுத்ததாக. கும்பகோணம் பாங்கில் அது வரவில்லை, பணத்திற்கு ஏதோ ஆகியிருக்கிறது என்ற அளவில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு 8—12—1969 அன்று போலீசில் கூட்டுறவுத் துறை மேலதிகாரிகள் புகார் செய்திருக்கிறார்கள். போலீஸ் மேல் நடவடிக்கை என்ன என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாயூரம் தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கத்தைப் பற்றிய கேள்வி மட்டுமே கேட்க வேண்டும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** இப்பேர்ப்பட்ட கையாடல் மாயூரம் போன்ற பல இடங்களில் நடைபெறுகின்றன. இதை அறவே தடுத்து நிறுத்த சட்ட விதிகளில் மாற்றம் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** சட்ட விதிகளில் மாற்றம் செய்வதன் மூலம் இப்படிப்பட்ட தவறுதல்களைச் சீர்திருத்தி விட முடியாது. பொதுமக்களுடைய கருத்தும் இதற்குச் சாதகமாக வளரவேண்டும். இதற்கிடையில், போலீசில் அதிக நாட்கள் இப்படிப்பட்ட வழக்குகள் காலதாமதம் ஆகாமல் இருப்பதற்காக தனியாக இதற்கென்று ஒரு போலீஸ் பிரிவை உண்டாக்க முடியுமா என்பது சொற்குறிப்பில் இருக்கிறது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** போலீசில் புகார் செய்த பிறகு சம்பந்தப்பட்ட நபரைப் போலீஸ் கைது செய்ததா?

[1970 மார்ச் 5

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:* தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் இருக்கக்கூடிய இடமானது நகரத்திலே மிகவும் முக்கியமான பகுதியிலே இருக்கக்கூடியது. அதை வெளியேற்று வதால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. தனித் தனி இடங்களில் பேருந்து நிலையங்களை வைப்பது வேறு ஒரு காரியம். அப்படி அப்படியே மாற்றங்களைச் செய்யலாமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்வ தற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் கருத்துக்கள் தெரிவிக் கின்றார்கள். அதற்குப் பின்னால் சில கருத்துக்களை மாநகராட்சி தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப் படுகின்ற அளவுக்கு நீண்ட நாட்கள் எடுத்துக் கொள்ளாது விரைவிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். இதிலே இருக்கிற சங்கடச் சூழ்நிலையினால்தான் வேலை தடைபடுகிறதே தவிர அரசாங்கத்தினுடைய கவனக் குறைவினால் இல்லை என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். ஆர். கண்ணன்:* தலைவர் அவர்களே, வடசென்னையில் தங்கசாலையில் பேருந்து நிலையத்திற்காக கார்ப்பரேஷன் முயற்சி செய்கிறது. இப்பொழுது அங்குள்ள பேருந்து நிலையத்தில் போதிய இடம் இல்லாததால் பேருந்துகள் எல்லாம் வெளியிலே நிற்கின்றன. அதைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:* கேள்வி எஸ்பிளனேட் பேருந்து நிலையத்தைப் பற்றியது. தங்கசாலை எந்த அளவிலே இருக்கிறது என்பதை பற்றிய விவரம் தற்பொழுது என்னிடத் திலே இல்லை.

### *Sethusamudram Project*

* 223 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any specific request has been made by the Government for inclusion of the Sethusamudram Project in the Fourth Plan; and

**(*b*) if not, the reasons therefor?**

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*

(அ) ஆம்.

**(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.**

*திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:* தலைவர் அவர்களே, இந்த சேதுசமுத்திரத் திட்டம் நம்முடைய நாட்டிற்கு அதிலும் குறிப் பாக நம்முடைய தமிழ் நாட்டிற்கு பாதுகாப்பு போன்ற நன்மை களை அளிக்கவல்லதால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?



1970 மார்ச் 5]

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* இந்தக் கால்வாயைத் தோண்டுவதற்கும், வெட்டுவதற்கும், வேண்டிய அளவுக்கு வெகு தீவிரமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டு வரு கிறது. ஆனால், இது மத்திய அரசினால் செய்யப்படவேண்டிய காரியமாக இருக்கிறது. இதைப்பற்றிப் பல முறைகள் மத்திய அரசுக்கு எழுதியும், முதலமைச்சர் அவர்கள் நேரிலே பார்த்துச் சொல்லியும் இருக்கிறார்கள். மத்திய அரசு கூட இது நல்ல திட்டம், வருவாய் உள்ள திட்டம் என்று எல்லாம் ஏற்றுக் கொண்டிருக் கிறது. இருப்பினும், அது இன்னும் ஆய்வில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

*திரு. எஸ். இராமச்சந்திரன்:* தலைவர் அவர்களே, இந்த சேது சமுத்திரத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க் கப்படவேண்டுமென்று நாம் கேட்பது ஏதோ இந்திய அரசை பிச்சை கேட்பதல்ல. நம்முடைய உரிமையை வற்புறுத்திப் பெற வேண்டிய காரணத்தினாலே தமிழ் நாட்டு அரசு வற்புறுத்திச் சொல்ல எடுத்த முயற்சிகள் யாவை? இந்த சேது சமுத்திரத் திட் டத்தினால் என்ன என்ன நன்மைகள் விளையும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* தலைவர் அவர்களே, இது பிச்சை கேட்பதாக ஆகாது என்பதை மிகத் தெளிவாகப் புள்ளி விவரங்களிலிருந்து சொல்ல முடியும். இந்தக் கால்வாயை வெட்டு வதற்கு 37½ கோடி ரூபாய் செலவாகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், வருவாய் இரண்டு கோடியே 37 லட்சம் கிடைக்கும். முதல் வருடத்திலேயே நிகர லாபம் 70 லட்சம் ரூபாய், அதாவது 4% கிடைக்கும். சில ஆண்டுகள் சென்றபின் 14 சதவிகிதம் கொடுக்கும். ஆகவே, இது பிச்சையல்ல, வருவாய் தரக்கூடிய விதத்திலே இருக்கிறது.

இதனால் என்ன என்ன நன்மைகள் ஏற்படும் என்று கேட்டார் கள். நன்மைகள் என்ன என்ன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். இந்தியாவின் மேற்குக் கடற்கரையையும் கிழக்கு கடற்கரையையும் இணைப்பது இந்தக் கால்வாய் ஆகும். மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்குச் செல்லவேண்டுமென்றால் இப் பொழுது இலங்கையைச் சுற்றிக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. அதாவது 360 மைல் அளவுக்குச் சுற்றிச் செல்ல வேண்டியிருக் கிறது. தூத்துக்குடியிலிருந்து ஒரு கப்பல் சென்னைக்கு வர வேண்டுமென்றால் 360 மைல் சுற்றிவர வேண்டியிருக்கிறது. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டால் அப்படிப்பட்ட அவசியமில்லை. 13-5-1969 அன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேர்முகமாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். இதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று தெரிவிக்கப் பட்டது. அதற்குப் பிறகு 26-9-1969 அன்று அதை மீண்டும் வற்புறுத்தி கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் நவம்பர் 1969-இல் தமிழக அரசின் அதிகாரிகள் இது சம்பந்தப்பட்ட மத்திய

[1970 மார்ச் 5

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :**

(அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

### *Hindu Temples*

* 226 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there are proposals under the consideration of the Government to throw open the Hindu temples to communities other than Hindus?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஆம். தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அமைதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளைச் சேர்ந்த விதி 3 ( ), இந்துக்களல்லாதவர்கள் இந்து கோயில்களில் உட்புறத்திலோ அல்லது அவற்றிற்கு வெளியிலோ அமைந்துள்ள ஓர் இடத்திற்குச் செல்வதற்கும், அல்லது இறைவழிபாடு செய்வதற்கும் தடை விதிக்கின்றது. தமிழ்நாடு அரசு இப்போது இவ்விதியை நீக்கி ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** இந்து மதத்தின் புனிதமான தன்மையில் நம்பிக்கை கொண்டு ஆலயங்கள் எவ்வாறு நடத்தப்படவேண்டும், அங்கு எவ்வாறு ஆராதிக்கப்படவேண்டும் என்பவை போன்ற விதிகளை நன்கு அறிந்து அதில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களுக்குத் தரிசனம் செய்வதற்கு அனுமதி கொடுக்கலாம் தீண்டாமையை ஒழிக்கக்கூடிய காலத்தில் என் மாதிரிப்பட்டவர்கள் ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அளிப்பதுதான் உண்மையான இந்துமதம் என்பதை ஒப்புக்கொண்டோம். ஆலயங்களுக்கு எந்த மதஸ்தர்கள் வந்தாலும்சரி, இந்த விதிகளை நன்கு அறிந்து அதற்கு மரியாதை செய்து ஒரு கட்டுப்பாட்டோடு நடந்து கொள்வார்கள் என்றால் எந்த மதஸ்தர்களுக்கும் தரிசனம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்து மதத்தின் புனிதத்தன்மை காப்பாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். எம்மதமும் சம்மதம்தான் என்பது தான் ஒவ்வொரு மதத்தின் புனிதத்தன்மையாக இருக்கவேண்டும் என்பது இந்த அரசின் கருத்தாகும்.



1970 மார்ச் 5]

### *Electric lights for Vattavilai village*

* 227 Q.—THIRU T. MARTIN ; Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) Whether electric street lights were instaled in Vattavilai village in Udangudi Panchayat Union Council area in Tirunelveli District; and

(b) if not, when tehey will be installed?

**மாண்புமிகு திரு ஓ. பி. ராமன்:** (அ) திருநெல்வேலி மாவட்டம் உடன்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த வட்டவிளை கிராமத்தில் எட்டு மின்சார விளக்குகள் நிறுவப்பட்டு 31—7—1968 தேதியிலிருந்து மின்இணைப்புக் கொடுக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின்:** இன்னும் அந்தப் பகுதியில் பல கிராமங்களில் தெரு விளக்குகள் போடப்படாத நிலையுள்ளது. கான்பரன்ஸ் நடந்த நேரத்தில் திருநெல்வேலியில் அதைப் பற்றி அமைச்சர் அவர்களிடம் சுட்டிக்காட்டியும் இன்னும் அவை போடப்படாத நிலை இருக்கிறது. ஆகவே அதைக் கவனத்தில் கொண்டு இந்தக் கிராமங்களுக்கு மின்சார விளக்குகள் போடுவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** அப்படி தமிழ்நாட்டில் 30,000 சிற்றூர்களும் கிராமங்களும் இருக்கின்றன. எல்லா ஊர்களுக்கும் அப்படி விளக்குகள் போடும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

### *Coimbatore District Motor and Automobile Labour Union*

* 228 Q.—THIRU G. GOMTHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government are aware that under the auspices of Coimbatore District Motor and Automobile Labour Union, a number of persons went on hunger strike about the 2nd July 1969; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்** (அ) & (இ). ஆம். தாராபுரத்திலுள்ள அர்த்தநாரி பாலாம்பாள் மோட்டார் சர்வீஸ் என்ற பேருந்து நிறுவனத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சி. வேலுசாமி, ஆர். சீதாபதி ஆகியோர் பணியிலிருந்து நீக்கப்பட்டதற்காக 1—7—1969 அன்று உண்ணாவிரதம் இருந்தனர். தாராபுரம் அர்த்தநாரி பாலாம்பாள் மோட்டார் சர்விஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தினர், மேற்சொன்ன இரண்டு பணியாளர்களையும் பயணச்சீட்டுகளை வழங்காமலிருந்த முறைகேடான செயலுக்காகப் பணியிலிருந்து நீக்கிவிட்டனர். தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட மோட்டார் தொழிலாளர் சங்கம், மேற்குறிப்பிட்ட இரண்டு தொழிலாளர்களின் வேலை நீக்கம் குறித்து 28—4—1969 அன்றும் 9—6—1969 அன்றும்

ஒரு தகராறை எழுப்பியது. இணக்க ஏற்பாடு நடைபெற்று வருகையில் மேற்குறிப்பிட்ட இரு தொழிலாளர்களும் 1—7—1969 அன்று உண்ணாவிரதம் மேற்கொண்டனர். தொழிலாளர் நல அதிகாரியின் நன்முயற்சியின் மூலம் 3—7—1969 அன்று உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. பின்னர் இந்த இரு தொழிலாளர்களும் நிர்வாகத்தினருடன் தங்கள் கணக்குகளைத் தீர்த்துக் கொண்டனர்.

*Meeting of Chief Secretary with Burma Repatriates*

* 214 Q.—THIRU N. S. V. CHITHAN, THIRU V. K. KOTHANDARAMAN, DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Chief Secreatary to Gvernment has met the repatriates from Burma about the 27th November 1969; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :**

(அ) ஆம்.

(இ) பர்மா அகதிகள் தலைமைச் செயலருக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தனர். அதில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக சில்லறை விடுப்பு ரூ. 30 வழங்கியதில் சீர்கேடுகள் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் செய்த நேர்முக விசாரணையில் இக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனத் தெரிய வந்தது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக ஒரு வங்கி ஆரம்பிக்கப்படவிருக்கிறதே, அது எப்போதிருந்து செயல்படத் தொடங்கும்? அதில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி வேண்டும்.

—

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இவர்கள் மேலும் சில கோரிக்கைகளை வைத்து அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். அதில் பிரதானமான ஒன்று, அவர்கள் பர்மாவிலிருந்து வந்து இங்கு மிகவும் கஷ்டப்படுகிற காரணத்தால் சிறிது காலத்திற்கு அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதும் ஒன்று. அது விஷயமாக என்ன முடிவு செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது விஷயமாக அம்மாதிரி விதிவிலக்கு அளிப்பதற்கில்லை. ஆனால், அதைக்காட்டிலும் நல்ல பல நன்மைகள் செய்து அவர்களுடைய நலன்களில் இந்த அரசு நல்ல அக்கறை கொண்டிருக்கிறது. இந்த அரசு கொண்டிருக்கிற நல்லெண்ணத்தோடு மத்திய அரசில் உள்ள அந்தத் துறையும் நல்ல ஆதரவு கொடுத்து வருகிறது.



**கிருஷ்ணாம்பேட்டை தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள்**

* 215 வினா—திரு. எம். பூபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, கிருஷ்ணாம்பேட்டை, நடேசன் தெருவில் 10—3—1969-ம் தேதி நேர்ந்த பயங்கர தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பாதிக்கப்பட்ட குடும்பங்கள்—307.

**திரு. எம். பூபதி :** பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? எவ்வளவு பேர்களுக்கு எந்த அளவிற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** பாதிக்கப்பட்ட 307 குடும்பங்களில் 89 பேர்கள் அந்தக் குடிசைகளுக்குச் சொந்தக்காரர்கள். மீதியுள்ளவர்கள் அங்கு குடியிருந்தவர்கள். குடிசைச் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் 80 ரூபாயும், முதல் அமைச்சர் அவர்களின் நகர தீ விபத்து நிதியிலிருந்து 120 ரூபாயும் ஆக ரூ. 200 வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு துணிமணிகள் வாங்குவதற்காக உதவித் தொகை கொடுக்கப்பட்டது. இதல்லாமல் சென்னை குதிரைப் பந்தயத்தார் அவர்களாக மனமுவந்து அளித்த ரூ. 10,001-ஐக் கொண்டு கலெக்டர் அவர்கள் மூலம் கைத்தறி ஆடைகள் வாங்க வழங்கப்பட்டது.

*Loans for potato cultivation*

* 216 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is anw proposal to increase the potato loan from Rs. 400 to Rs. 900 per acre under the Potato schemes introduced at Hosur and Kodaikanal; and

(*b*) if so, when it will be implemented?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து :** (அ) & (இ) கோடைக்கானல் பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே கடன் வழங்கப்பட்டு வருவதால், கோடைக்கானல் பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடுவதை மேம்படுத்துவதற்காகத் தற்போது ஏக்கருக்கு ரூ. 800 என்னும் வீதத்தில் குறுகிய காலக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. ஹோசூர் பகுதியில் துறைவாரியாக ஏக்கருக்கு ரூ. 400 என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வருகிற கடன் தொகை 17—7—1969 முதல் ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது எனினும், கடன் தொகையை ரூ. 900-க்கு உயர்த்துவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

[1970 மார்ச் 5

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** போலீசில் புகார் செய்து உடனே கைது செய்துவிட மாட்டார்கள். புலன் விசாரணை செய்து, அதற்குப் பிறகு சரியான வழக்கு இருக்கிறது என்று கண்டுபிடித்து, அதற்குப் பிறகுதான் கைது செய்து வழக்கு தொடரப்படும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know why there is delay in charge-sheeting the case?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** 8—12—1969 அன்று புகார் செய்யப்பட்டது. இரண்டு மூன்று மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன. புலன் விசாரணை செய்த பிறகுதான் வழக்கு பதிவு செய்யப்படும். அவசரமாக வழக்குப் பதிவு செய்து சாதகமாக இல்லாமல் போய்விடுமானால் நிரபராதியைக் குற்றம் சாட்டி விட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லக்கூடும். நன்றாக புலன் விசாரணை செய்து, வேண்டிய சாட்சியங்களைத் தீர்க்கமாக ஆராய்ந்து அதற்குப் பிறகு வழக்கைத் தொடருவார்கள்.

**திரு. கே. பி. எஸ். மணி :** போலீசுக்குப் புகார் செய்வதற்கு முன்னால் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகள் தவறு நடந்திருக்கிறது என்பதை உறுதி செய்து கொண்ட பிறகுதான் போலீசுக்குப் புகார் செய்கிறார்கள். அப்படி இருக்க, பொதுவாக கூட்டுறவுச் சங்கத்தின் கேஸ்கள் எது கொடுக்கப்பட்டாலும் காலதாமதமாவற்குக் காரணம் என்ன? இப்படி துரிதமாக நடவடிக்கை எடுக்காததன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட ■*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ■*■ என்று சொன்னது நீக்கப்படுகிறது. பத்திரிகைகளிலும் போட வேண்டாம். *■ என்ற வார்த்தையை இந்த முறையில் உபயோகப் படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** கும்பகோணம் பாங்கில் ஏற்பட்ட இந்த மோசடி வழக்கில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கூடியவரையில் துரிதமாகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்க ஊழியர் மீது தகுந்த முகாந்தரம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படுமானால், அரசாங்க ஊழியர் தவறான குற்றம் சாட்டப்பட்டு, தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டு வரக்கூடும். இப்படிப்பட்ட புகார்கள் மீது கூட்டுறவுத் துறை அதிகாரியே முதலில் விசாரணை செய்கிறார்கள். நான் சொன்னபடி இந்தபாங்கில் போட்டதாகச் சொல்லப்பட்ட ஐயாயிரம் ரூபாய் வழக்கைத் தவிர, மேலும் நாலைந்து குற்றங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. போலீசார் மேலும் புலன் விசாரணை செய்து வழக்குத் தொடருவார்கள்.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1970 மார்ச் 5]

**திரு. என். கிட்டப்பா :** இம்மாதிரி நிலைமைகள் மாயூரத்தில் மட்டுமல்லாது மாநிலம் பூராவும் பல இடங்களில் கூட்டுறவுத் துறையில் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட மோசடிகளிலே ஈடுபடுகின்றவர்களுக்கு அதிகமான தண்டனை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கூட்டுறவுச் சங்கங்களில், மாயூரத்தில் மட்டுமல்லாது, தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாது, பல மாவட்டங்களிலும் தவறுகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து, கூட்டுறவுத் துறை அதிகாரிகளைச் சற்று அதிகப்படுத்தியிருக்கிறோம். முன்னால் தமிழ்நாடு ஐந்து வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்போது இன்னும் இரண்டு கூட்டுப் பதிவாளர் (ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார்) அதிகமாக நியமிக்கப்பட்டு, மேலும் நன்றாகக் கண்காணித்து வரும் அளவுக்கு ஐந்து வட்டங்களாக இருந்தது ஏழாகப் பெருக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் கேள்வி கேட்கும்போது என்று குறிப்பிட்டார்கள். அதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. பத்திரிகை நிருபர்கள் பக்கம் பார்த்துச் சொல்லி விட்டேன். எப்படியும் நீங்கள் கேட்டது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. ப. மகாதேவன் :** சட்டசபைக் குறிப்புகளில் நீக்கும்படியான * என்பது கன்னித் தமிழும் கவின் மலையாளமும் கொண்ட பகுதியிலிருந்து வந்த எனக்குப் புரியாததால் அதற்கு அர்த்தம் என்ன என்று விளக்குவார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெளியே போய் விளக்கிக் கொள்ளலாம்.

**திரு. மு. கந்தசாமி படையாச்சி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம் கேள்வி நேரம் முடிந்த பிறகு கேளுங்கள்.

### நேமூர் கூட்டுறவு விவசாய வங்கி

■225 வினா—திரு. மு. இராமன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நேமூர் கூட்டுறவு விவசாய வங்கியில் நிதியைக் கையாடல் செய்திருப்பதாகப் புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1970 மார்ச் 5

THIRU B. VENKATASWAMY: Is the Hon. Minister aware of the fact that potato cultivation is considerably affected in Ooty due to diseases of Nematode and Late Blight? Is the Hon. Minister also aware of the fact that there is great potentiality to bring more lands under potato cultivation in Hosur taluk and Kodaikanal? Will the Government come forward to introduce 'package schemes' to augment potato cultivation in such areas, especially in Hosur?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஓசூர் தாலுக்காவில் பாக்கேஜ் திட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு இப்போது இல்லை. இருந்தாலும் அங்கு அரசாங்க இலாகா மூலம் ஏற்கனவே ரூ. 400 தான் கொடுக்கப்படவேண்டுமென்று முடிவு எடுத்திருந்தாலும் விவசாயத் துறை இயக்குநர் ஓசூரில் இருப்பவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பவர்கள், ஏழைகள் என்பதால் தனி அக்கறை காட்டவேண்டும் என்று ரூ. 400 என்பது ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. நீலகிரியில் நெமடோட் உருளைக்கிழங்குப் பயிரை நாசம் செய்துவருகிறது என்று தனியாக அங்குள்ள இந்தோ ஜெர்மன் திட்டக்காரர்கள் அதற்காக முயற்சிகள் எடுத்துவருகிறார்கள். நீலகிரியைப் பற்றித் தனியாக விவரம் இல்லை. ஓசூரில் உருளைக்கிழங்கிற்கு பாக்கேஜ் திட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான்: இந்த லேட் பிளைட் போன்ற வியாதிகள் அதிகமாக வருவதால் விவசாயம் செய்யக் கூடிய செலவு அதிகமாகக் கொண்டு போகிறது. ஆகவே இதற்காக அரசாங்கம் இப்போது கொடுக்கக்கூடியதை, ரூ. 200-லிருந்து ஏதாவது கூட்டி லோன் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நீலகிரியில்தான் இந்த லேட் ப்ளைட் என்ற வியாதி உருளைக்கிழங்குக்கு இருக்கிறது. ஆனால் பொதுவாக உருளைக்கிழங்கு சாகுபடிக்காக அரசாங்கம் விதைகளுக்கு ரூ. 350-ம், உரத்திற்கு 350-ம், பெஸ்டிசைட்ஸ்க்காக ரூ. 50 பயிரிடும் செலவுக்கு ரொக்கம் ரூ. 150 என்று இப்படி யெல்லாம் கொடுப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் அந்தக் கடன்களைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். பல சொசைட்டிகள் திருப்பித் தராத காரணத்தால் அதிக தேக்கம் சென்ட்ரல் பாங்கில் இருப்பதால் இவ்வளவு தொகையும் கொடுக்கமுடியாது என்று பாங்க் மறுப்பு தெரிவித்திருந்தார்கள். இப்போது தற்சமயம் நிலைமை சிறிது சரியாகியிருப்பதால் ரூ. 800 வரை இன்று கொடுக்கப்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: According to the answer given by the Hon. Minister there is no such 'package scheme' to be introduced in Hosur taluk; may I know from the Hon. Minister that there is large potentiality and the ryots are able to produce as much as 10,000 Kg. per acre? In view of this may I know from the Hon. Minister, considering the backwardness of that area, to introduce the 'package scheme' at an early date?



1970 மார்ச் 5]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அது அவசியம் இருந்தால் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, with regard to Hosur Taluk, there has been a chronic drought for the last five years. In view of this, will the Hon. Minister be pleased to consider the grant of some subsidy to help the suffering ryots there in addition to the grant of loans?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மானியம் கொடுப்பதற்கு இப்போது எந்தவிதமான திட்டமும் இல்லை. அந்தப் பகுதி பின்தங்கிய பகுதி, அங்கு ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதால் தான் ஏற்கெனவே அரசாங்கம், 400 ரூபாய் கொடுத்தால் போதும் என்று முடிவெடுத்திருந்தது. அது விவசாயத் துறை இயக்குநர் அவர்களால் 750 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மிகவும் பின்தங்கிய பகுதி. அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தான் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (■) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(2) நடைமுறைக் கேள்வி.

### ஓர் உறுப்பினரின் வினாக்கள் வினாப்பட்டியலில் இடம் பெறாதது குறித்து

■ திரு. பி. எஸ். தனுஷ்கோடி: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, கடந்த 3 வருஷ காலமாக, என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளை ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டமும் முடிந்த பிறகு புதுப்பிக்க வேண்டுமென்று நான் எழுத்து மூலமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் மூலமாகவும் தனியாகக் கடிதம் கொடுத்திருக்கிறேன். இதுவரையில் என்னுடைய கேள்விகள் இடம் பெறவில்லை. குறிப்பிட்டவர்களுடைய கேள்விகள் மட்டும் இடம் பெறுகின்றன. தனி ஏற்பாடு இருக்கிறதா? தாங்கள் இதற்குத் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. கேள்வி கொடுத்து வரவில்லை என்று சொல்லுகிறார்கள். திரு. தனுஷ்கோடி அவர்கள் கொடுத்திருக்கும் கேள்விகள் 7. 2 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன, 5 கேள்விகள் நீண்

என்ற அந்த மரபையொட்டிப் பேச வேண்டும். மரபை மீறிப் பேசுவது முறையல்ல. மரபையொட்டிப் பேசவேண்டும். இல்லையென்றால், நீண்ட நாட்களாக இருந்ததற்குப் பயனில்லாமல் போய்விடும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சம்பவத்தைப் பற்றிப் பேசக்கூடிய நேரத்திலே, இப்படிப் பேசுவார்கள், யாராகயிருந்தாலும் நீங்கள்கூட முன்பு சட்டசபையிலே எதிர்கட்சியிலிருந்தபோது இப்படிப் பேசியிருக்கிறீர்கள், அதையெல்லாம் படித்துப்பார்த்தேன். அவ்வளவு ஆத்திரப்பட்டு நீங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே . . .

திரு. வி. கே. கோதண்டராமன்: நான் முடித்து விடுகிறேன். ஒரு நிமிஷம். ரொம்ப முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதுபோலப் பழக்கங்கள் வளர்ந்து கொண்டு வருகின்றன. ஆகவே, இதை அவசியம் விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கொண்டுவந்துள்ள ஒத்திவைப்புப் பிரேரணையில் அவர்களே இதைப்பற்றி முதலமைச்சர் என்ன காரணத்தால் நடைபெற்றது என்று கூறக்கூடும் என்று சொன்னதிலிருந்தே, நான் சொல்லப்போகும் காரணம் எவ்வளவு உண்மை என்று இந்த மன்றம் அறிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறேன். வடார்க்காடு மாவட்டத்திலே மானியப்பட்டு என்ற கிராமத்தில் 18-ஆம் தேதி இரவு 11 மணி முதல் 19—2—1970 விடியற்காலை 3-15 மணி வரை லத்தேரி போலீஸ்காரர்கள் உதவியுடனும், 'மொபைல் பார்ட்டி.' யின் உதவியுடனும் வேலூர் அசிஸ்டென்ட் சூப்பரின்டென்ட் ஆப் போலீஸ் அவர்கள் அங்கே திருட்டு சாரயம் காய்ச்சிக் கொண்டிருந்தவர்களைப் பிடிப்பதற்காக அந்த இடத்தைச் சோதனை செய்தார்கள். அதன் விளைவாக போதை தரக்கூடிய வஸ்து வைத்திருந்த 16 நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் கோவிந்தசிங் என்பவரும், சேங்கன் என்பவரும் பட்டைசாராயம் குடித்திருந்தார்கள். இவர்கள் மேல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, தற்சமயம் சப்-மாஜிஸ்ட்ரேட்டின் நீதிமன்றத்தில் வழக்குகள் முடிவுறாமல் இருக்கின்றன. மேலும் இதில் சம்பந்தப்பட்ட சுப்பகோட்டியின் மகன் மைலான், சுப்பகோட்டியின் மகன் ஸ்ரீராமலு, சின்னப்பாவின் மகன் கோவிந்த கவுண்டர், முனுசாமியின் மகன் ரெங்கநாதன்,



கருப்பன் மகன் கோபால் ஆகிய ஐவரும் இதற்கு முன்னால் மதுவிலக்கு சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட நல்லவர்களுக்காக நம்முடைய கோதண்டராமன் அவர்கள் இங்கே வாதாடி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது. இதில் பொய் வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகுதான் இதைப்பற்றி எதுவும் பேசவேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற நேரத்தில் அதைப் பொய் வழக்கு என்று ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறித்திருப்பதும் பேசுவதும் முறையல்ல. ஆகவே, இப்படிப்பட்ட காரணங்களுக்காக ஒத்திவைப்பு தீர்மானங்களைக் கொண்டுவருவதை இந்த அவையின் மரபாக ஆக்கிக் கொள்வது கூட நல்லது அல்ல என்று சுட்டிக்காட்டி, இது ஒத்திவைக்கத் தேவையானது அல்ல என்ற என்னுடைய கருத்தையும் கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதற்கு அனுமதியளிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

மேலும் இப்படிப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்களை இங்கே, அவையிலே கொண்டு வருவது அவ்வளவு ஏற்புடையது அல்ல என்று கருதினாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய அறையிலே வந்து, இப்படிச் சிலவற்றை அவையில் கொண்டு வருவதற்கு ஏதாவது வழிகள், வாய்ப்புக்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்ற காரணத்தினால், அவர்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்ற காரணத்தினால், அவர்களின் உணர்ச்சிக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்ற காரணத்தினால், கொண்டு வருகிறோம். ஆகவே, அப்படி வரும் நேரத்தில், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எந்த நிலைக்கு வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். எனவே, இந்த அவையினுடைய மரபுகளையும், கண்ணியத்தையும் காப்பாற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள், பேரவைத் தலைவரோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இப்போது விடுத்துக் கொள்ளுகின்றேன்.

திரு. முனு ஆதி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், தலைவரவர்களே, கனம் உறுப்பினரவர்கள் பேசுகின்ற பொழுது, சட்டப்பேரவைத் தலைவரவர்கள்மீது குற்றஞ்சாட்டிப் பேசினார்கள். அவைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

### (4) 1970-71-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 1970-71-ஆம் ஆண்டுக் [illegible] வரவு-செலவு திட்டத்தின் மீது பொது விவாதம்.

டும் அங்கத்தினர் அவர்களுக்கோ, அல்லது மற்ற இலாக்காக்களுக்கு நடவடிக்கை எடுக்கவோ அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கான விடைகள் அந்த இலாக்காவிலிருந்து இன்னும் ஒரு கேள்விக்குக் கூட வரவில்லை. ஆதலால் அவைகளை இந்த அவைக்குக் கொண்டு வர முடியவில்லை. அதுதான் நிலைமை: ஆகவே, ஒவ்வொருவரும் இதுபற்றி கேட்க ஆரம்பித்தால் முடியாது. கேள்விகள் கொடுத்தோம், வரவில்லை என்று சொன்னால், அதை இந்த அவையிலே கேட்கக்கூடாது, பேரவைத் தலைவருடைய அறையிலே கேட்கவேண்டும். ஆகவே, உறுப்பினர்களிடம் பாரபட்சம் காட்டுகின்ற நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

**(அ) மேட்டூர் நகர எல்லையில் பிளாக் 65-ல் ஏழை தொழிலாளர்களுடைய குடிசைகள் இடித்துத் தள்ளப்பட்டதும், அவர்களில் மூவரின் உண்ணா விரதமும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். "மேட்டூர் நகர எல்லைக்குட்பட்ட பிளாக் 65-ல் நீண்ட நாளாக செருப்பு தைப்பது, துணி வெளுப்பது, சவரம் செய்வது, வெற்றிலை, பாக்கு பீடி வியாபாரம் போன்ற தொழில் செய்து பல வருடங்களாக அந்த இடத்தில் ஜீவனம் செய்து வரும் ஏழைகளுக்கு மாற்றிடம் அளிக்காமல் கூட 22 குடிசைகளை நகர அமைப்பு சிப்பந்திகள் போலீசை வைத்து இடித்துத் தள்ளி அவர்களுக்குப் பெரும் நஷ்டத்தையும், துன்பத்தையும் உண்டாக்கியிருக்கின்றனர்" என்ற இந்தச் செய்தியையும், "இது போன்ற நிலை ஏற்படக்கூடும் என்று கருதி இந்த ஏழைகளில் மூன்று பேர் 1—3—1970-லிருந்து உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்" என்ற இந்தச் செய்தி குறித்து விவாதிக்க இந்தப் பேரவையை ஒற்றி வைக்க வேண்டுமென்று, ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. உண்ணாவிரதம் போன்றவைகளுக்கு அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைப்பது பேரவை நிகழ்ச்சிகளிலே இதுவரையிலும் இல்லாத ஒரு நிகழ்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கருத்துக்களைக் கூற வாய்ப்பிருப்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

**(ஆ) குடியாத்தம் தாலுக்கா மானியப்பட்டு கிராமத்தில் காவல் துறையினர் அத்து மீறி நடந்துகொண்டதாகச் சொல்லப்படுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்தபடியாக, திரு வி.கே. கோதண்டராமன் அவர்கள் ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்[illegible] இது எப்படி இந்த அவையில் விவாதிக்கக்கூடியது



என்பதை மட்டும் சுருக்கமாக, திரு. கோதண்டராமன் அவர்களுக்குக் குறிப்பாகச் சொல்லுகிறேன், காரணத்தை மட்டும், உள்ளேயிருக்கும் நிகழ்ச்சிக்குப் போகாமல் காரணத்தை மட்டும் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ஒற்றிவைப்புத் தீர்மானத்தை நான் கொடுத்து, 3, 4 தினங்கள் ஆகின்றன. என்றாலும் அதன் மேல் காரணங்களை விளக்கிச் சொல்கிறேன். குடியாத்தம் தாலுக்காவில், மானியப்பட்டு என்ற கிராமத்தில் 24-ஆம் தேதி இரவில் போலிஸ்காரர்கள் ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே 19—2—1970 என்று கொடுத்திருக்கிறதே. . .

**திரு வி. கே கோதண்டராமன் :** கவனம் இல்லை. 19—2—1970-ம் தேதி இரவு வீடு வீடாக நுழைந்து ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் அடித்திருக்கிறார்கள். கேவலமாகப் பேசியிருக்கிறார்கள், பூட்ஸ் காலால் உதைத்து மிதித்திருக்கிறார்கள். இப்படி சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எப்படி இது அவையின் பிற அலுவல்களை ஒற்றிவைப்பதற்கு உரியது என்பதை மட்டும் கூறுங்கள், 'டிடெயில்ஸ்'-க்குப் போகாதீர்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதைத்தான் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலையில் இன்று காரணத்தைக் காட்டி, அவர்களிடத்திலேயிருந்து வந்திருக்கும் காரணத்தைக் காட்டி, கனம் முதலமைச்சரவர்கள்கூட சொல்லலாம், சாராயம் குடித்திருக்கிறார்கள், அவர்களைக் காட்டிக் கொடு என்றார்கள், ஆகையால் காட்டிக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் கீழிருந்து வருகின்ற ரிப்போர்ட் என்று சொல்லக் கூடிய அளவுக்கு சொல்லலாம். மேலும், போலீஸ்காரர்களால் மோசமான நடவடிக்கைகள் வளர்ந்து போகக்கூடிய அளவுக்கு இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலேதான் அந்தக் கிராமத்தையே ஒரு நாள் இரவிலே அவர்கள் தூங்காத அளவுக்கு அவர்கள் அந்தக் கிராமத்தைவிட்டே ஓடக் கூடிய அளவுக்கு மோசமாக நடத்தப்பட்டிருக்கிறது, அடிக்கப்பட்டிருக்கிறது, பலர் மீது பொய் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவ்வளவு மோசமாக வளர்ந்து போகும் இந்தச் சூழ்நிலையைப்பற்றி அவசியம் விவாதிக்க வேண்டும். அதில் நீங்கள், மந்திரியவர்கள் சொல்லுகின்ற காரணத்தைச் சொல்லி, அந்தக் காரணத்தைக்காட்டி அனுமதி தரவில்லை என்று சொல்லுவீர்கள் என்று தெரியும். ஆனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமன் அவர்கள் நீண்ட நாட்களாகச் சட்டமன்றத்தில் இருந்திருக்கின்றார்கள், நீங்கள் இருந்து பழக்கப்பட்டிருக்கின்றீர்கள். எப்படிப் பேசுவது

[திரு. க. இராமமூர்த்தி] [1970 மார்ச் 5

துறையிலே வங்கிகளை ஏற்படுத்தும் முறையைப் பற்றி என் பகுதியில் திண்டிவனம், செஞ்சி சென்று அமைச்சர் தங்கி இந்த விஷயங்களையெல்லாம் பற்றி பேசியிருக்கிறார்கள். ரயிலில் தெற்கே போகிற போது எல்லாம் எத்தனையோ முறை அந்தப் பகுதிக்குச் சென்று தங்கி, பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல், அங்கே தங்கி, யாரை, எப்படி போடவேண்டும் என்பதைப்பற்றி யெல்லாம் கூட்டுறவுத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது எனக்குத் தெரியும். சீஃப் பிரமோட்டர்கள் அல்லது பிரமோடர்கள் எப்படி இயங்குகிறார்கள், எப்படி வருகிறார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சில இடங்களில் அவர்களே சேர்ந்து கூட்டுறவு அமைப்பை நாங்கள் ஏற்படுத்த விரும்புகிறோம் என்ற விருப்பத்தை கூட்டுறவு பதிவாளருக்கு தெரிவித்து, அவர் ஒரு கூட்டம் நடத்தி அதிலே பிரமோட்டர் நியமிக்கப்படவேண்டும். அது தான் சட்டம், அமைச்சருடைய துறையின் சட்டத்தின்படி. ஆனால் இன்றைய தினம் அந்தச் சட்டம் கையாளப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். யாரை வேண்டுமானாலும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** உறுப்பினர் அவர்கள் சொல்வதெல்லாம் உண்மைக்குப் புறம்பாக இருக்கிற காரணத்தினால், நான் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு முறை பிரமோடரை நியமிக்கவில்லை என்று சொல்லிவிட்டேன். அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். மீண்டும், மீண்டும், அதைப் பற்றி உறுப்பினர் சொல்லிக் கொண்டிருப்பது நல்லது அல்ல. நான், பிரமோடர்களை நியமிக்கவில்லை என்று முன்னமேயே சொல்லிவிட்டேன். செஞ்சி நில வள வங்கிக்கு வந்திருந்தேன் என்று சொல்வதும் தவறு. செஞ்சிக்குச் சென்று நான் திறந்து வைத்தது வீட்டு அடமான வங்கி. நில வள வங்கிக்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

**திரு. க. இராமமூர்த்தி:** ஒரு பஞ்சாயத்துப் பெருமன்றத் தலைவர் மத்தியில் ஒரு கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் கூட்டுறவு அதிகாரிகளை வைத்துக்கொண்டு, பாண்டுரங்கம் பிரமோடரை பக்கத்தில் வைத்துக் கொண்டு, 'நீங்கள் அவர் சொல்கிறபடி நடக்கவேண்டும், அந்த வழக்கறிஞர் தான் பிரமோட்டர்' என்று சொன்னார்கள் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பிரமோடர் என்று யாரும் கிடையாது, பிரமோடர் என்று ஒருவர் இருப்பதாகவும், அவர் சார்பாக அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதாகும் கற்பனை செய்து கொண்டு, மீண்டும் மீண்டும் உண்மைக்குப் புறம்பானதை சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. எந்த அதிகாரிக்கும் உத்தரவிடவில்லை, எந்த பிரமோடரையும் நியமிக்கவில்லை. நான் இதை எத்தனை முறை சொல்வது என்று தெரியவில்லை.



1970 மார்ச் 5]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாதிரி பிரமோடர் யாரும் நியமிக்கப்படவில்லை என்று சொல்லிவிட்டார். அதுதான் உண்மையான நிலவரம். அதை எடுத்துக் கொள்ளாமல், திருப்பித் திருப்பி உறுப்பினர் அதைப்பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி:** பிரமோடரை நியமிக்கவில்லை என்று சொன்னார்கள். பிரமோடர், டைரக்டர் என்று வார்த்தைகளிலே விளையாடிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. நடப்பது என்ன என்று பார்க்கவேண்டும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வார்த்தைகளிலே விளையாடுவதில்லை. அமைச்சர் அவர்கள் தான் பிரமோடர்கள் போடவில்லை என்று சொல்லிவிட்ட பிறகு, போட்டிருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? போட்டிருக்கிறார்கள் என்றால், தகவல் கொடுங்கள். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள், உறுப்பினர் அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வார்த்தைகளிலே விளையாடுவது அமைச்சரா அல்லது நண்பரா என்பதை இந்தப் பேரவை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். பிரமோடர் நியமிக்கவில்லை என்று சொல்லிவிட்டேன். மூன்று முறை, இல்லை, இல்லை என்று சொல்லிவிட்டேன். இப்பொழுது "டைரக்டர்" என்று சொல்கிறார். இன்னும், டைரக்டரும் நியமிக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அப்படியென்றால், என்னுடைய பகுதியிலே நான்கு நில வள வங்கிகளுக்கு, பஞ்சாயத்துப் பெருமன்றங்களில் உள்ள நில வள வங்கிகளுக்கு பிரமோடர்கள் என்று சொல்லிக்கொண்டு தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான ஜீப்பை உபயோகப்படுத்திக்கொண்டு, அதிகாரிகளை வேலை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். நான் பெயர்களைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் உடனே நடவடிக்கை எடுப்பதற்குத் தயாரா என்று அறிய விரும்புகிறேன். செஞ்சி வட்டத்தில், கண்ணலம் கிராமத்தில் வோட்டராகப் பதிவு செய்யப்பட்டிருப்பவர், திண்டிவனம் வழக்கறிஞர் ஸ்ரீ பாலன். தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர், திண்டிவனம் வட்டத்தில் வானூர் பெருமன்ற எல்லைக்கு உள்ளிட்ட நில வள வங்கியில் இந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறார். பார்த்தசாரதி, ராமநாதன், இப்படி இன்னும் பலரும் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான ஜீப்களை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம் இதற்கு? எப்படி அவர்கள் இந்தத் துறைக்குச் சொந்தமான ஜீப்களை உபயோகப் படுத்துகிறார்கள்? கூட்டுறவுத் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை

[1970 மார்ச் 5

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை கடந்த ஆண்டுகளை விட மிக அதிகமான அளவிலே மத்திய ஆட்சி, மாநில ஆட்சி இரண்டு ஆட்சிகளுக்குமிடையே உள்ள உறவுகளைப்பற்றிப் பேசுகிறது. ஏறத்தாழ 10 பக்கங்கள், 12 பாராக்களில் மத்திய மாநில உறவுகளைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையில், இதற்கான நிலைமைகளை ஆராய்வதற்கான ஆணைக் குழு, வங்கிகளை தேசியமயமாக்கியதில், அது எந்த அளவுக்கு செயல்முறையில் பயன் அளிக்கவில்லை என்ற தத்துவத்தை தெரியப்படுத்துதல், மத்திய மாநில கடன் தவணை முறை மாற்றி அமைக்கப்படவேண்டிய அவசியம், சேலம் உருக்காலைத் திட்டம் செயல்படாமல் இருந்துகொண்டிருக்கிற நிலைமை இவற்றையெல்லாம் பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது இந்த நிதி நிலை அறிக்கையில். ஆனால் கடந்த ஆண்டில் எவ்வளவு மிடுக்கோடு, எவ்வளவு வேகத்தோடு, வற்புறுத்தல்கள் செய்யப்பட்டனவோ, அந்த அளவிலே இல்லாமல், இன்றைய தினம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிற அளவிலே, கையாலாகாத தனத்தைத் தெரியப்படுத்துகிற அளவிலே, இந்த நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் 'நாம் டெல்லியைத் தட்டிக் கேட்போம்' என்று சொன்னவர்கள், டெல்லியை கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு நிலைமை, மிகுந்த ஏக்கத்தோடு நம்முடைய மந்திரிலே சொல்ல வேண்டிய நிலைமை அவர்களுக்கு இன்றைய தினம் டெல்லியோடு ஏற்பட்டிருக்கும் புதிய உறவுகளின் காரணமாக ஏற்பட்டிருக்கிறதோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது.

அதோடு மட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையிலே புதியதாகத் துவக்கப்பட்டிருக்கிற நிலவள வங்கிகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நில வள வங்கிகளைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நில வள வங்கிகளைப் பொறுத்தவரையில் இவை வெறும் கட்சிக் கண்ணோட்டத் தோடு, கட்சிக்காரர்களுக்கு, கட்சியில் இருக்கிற பலருக்கும் சில வேலைகளைத் தரவேண்டும் என்ற காரணத்தினால் துவக்கப்பட்டிருக்கின்றன என்ற அச்சமும், நியாயமான சந்தேகமும் பலருக்கு மனதில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நில வள வங்கிகள் இந்த அளவிலே செயல்படத் துவங்கினால், இது கூட்டுறவுத் துறையை உருப்படாத துறையாக மாற்றிவிடும் என்பதை நான் இந்த அரசுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்த நில வள வங்கிகள் துவக்கியது கட்சியில் உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நில வள வங்கிகளில் யார் வேலை பார்க்கவேண்டும் என்பதற்கு ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறோம். அதில் முன்னால் உள்ள நில வள வங்கிகளில் வேலை இழந்தவர்களுக்கு முதல் இடம் கொடுத்து, அவர்களை வேலையில் அமர்த்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.



[1970 மார்ச் 5 [திரு. சி. பா. ஆதித்தனார்]

முன்னால் நில வள வங்கிகளில் வேலை பார்த்தவர்கள் என்றால் அவர்கள் ஏதாவது குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களா? எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எங்களுக்குக் கட்சி வேறுபாடு கிடையாது.

**திரு. க. இராமமூர்த்தி:** வேலை பார்த்தவர்கள் என்று அமைச்சர் அவர்கள் அவர்களுக்குரிய முறையிலே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரமோடர்களாக இருப்பவர்களைச் சொல்கிறேன். அதிலே அமைச்சர் அவர்களுக்கு ஞானம் இல்லை என்று நினைக்கிறேன். பிரமோடர்களாக எப்படிப்பட்டவர்களைப் போட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அந்தத் துறையில் இருப்பவர்களுக்கும் தெரியும்.

எனது தொகுதி மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் நில வள வங்கி அமைக்கப்பட்டிருக்கிறது. அள்ளமூத்தூர் பார்த்தசாரதி என்பவர் ரூ. 1,700 கோவாபரேடிவ் துறையில் வாங்கிய கடன் தவணையை செலுத்தத் தவறி, கோர்ட்டில் அவர் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், அவர் நில வள வங்கி பிரமோடர். அவர் தி.மு.க. வில் திண்டிவனம் வட்டத்தில் ஒரு முக்கியமான பதவியில் இருக்கிறார். அதைப்போல எனது தொகுதியில், அதே பகுதியிலே, அதே மரக்காணத்தில் நில வள வங்கியில் கட்டளைக் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமனுதன் அங்கம் வகிக்கிறார்கள். அவர் ஒரு பிரமோடர் செலுத்த வேண்டிய தவணையைச் செலுத்தாமல், விஷயம் கோர்ட்டுக்குச் சென்று, கோர்ட்டு தீர்ப்பு அளித்து, அதற்கு அப்பால் அமைச்சரைப் பார்த்து, ஸ்டே ஆகியிருக்கிறது. அவர் தி.மு.க.விலே ஒரு பிரமோடர். அதோடு மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏரியா ஆஃப் ஆபரேஷன். . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒரு விளக்கம், பிரமோடர் யாரையும் இந்த அரசு நியமிக்கவில்லை. அரசு யார் யாரையோ பிரமோடராக நியமித்துள்ளதாகக் குற்றம் சாட்டுவது கொஞ்சம் கூட ஆதாரமற்றது. இன்னும் சொல்லப்போனால், பிரமோடர் என்றோ, சீப் பிரமோடர் என்றோ யாரையும் நியமிப்பதற்கு சட்டத்தில் கூட இடமில்லை. ஆகவே, இந்த அரசு யாரையும் பிரமோடராக நியமிக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மிகுந்த மகிழ்ச்சி, எவ்வளவு பெரிய தவறான செயல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதற்கு அமைச்சர் அவர்களுடைய பதிலைவிட வேறு நல்ல பதில் இருக்க முடியாது. பிரமோடர்களை நியமிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எந்த நிலைமையில் இந்த நில வள வங்கிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தத் துறைக்கும் நன்றாகத் தெரியும். கூட்டுறவுக்

[திரு. க. இராமமூர்த்தி] [1970 மார்ச் 5

நான் அறிய விரும்புகிறேன். அவர்கள் பல இடங்களுக்குச் சென்று நில வள வங்கி என்ற பெயரால் பணம் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். மேத்தா:** பாயின்ட் ஆப் ஆர்டர், சார். சபையில் இல்லாத ஒருவரை வழக்கறிஞரைப் பற்றிப் பேசலாமா என்று அறியவிரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்த நிலையில் கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற ஜீப்புகளை வைத்துக் கொண்டு, அதிகாரிகளை வேலை விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்படித் தவறான முறையில் வேலைகள் நடக்கின்றன என்று சொல்லிக் கொள்வதோடு, வேறொன்றையும் சொல்ல விரும்புகிறேன். வேறு ஏதோ காரணத்திற்காக நல்ல முறையில் கூட்டுறவு அமைச்சரிடமிருந்து, பஸ் போக்கு வரத்து இலாகா பறிக்கப் பட்டது. அதே போல கூட்டுறவுத் துறையும் பறிக்கப்படுமேயானால் அது நாட்டிற்கும் . . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் இலாகா பறிக்கப் பட்டது என்று குறிப்பிட்டதைத் திரும்பத் பெறவேண்டும். இதில் பறிக்கப்படுவது ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்லுகிறேன், அவையில் பேசும்போது கொஞ்சம் உணர்ச்சி வயப்படாமல் இருக்கவேண்டும். நீங்களெல்லாம் வக்கீல்கள். வழக்காடும் பழக்கம் உள்ளவர்கள். 'பாக்ட்லை' க் கொடுங்கள். சொற்களில் ஆத்திரம் இருக்கக்கூடாது. பறிக்கப் படுவது இல்லை. மாற்றப் பட்டது என்று சொல்லுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** போக்குவரத்துத்துறை மாற்றப் பட்டது போல, இந்தக் கூட்டுறவுத் துறையும் மாற்றப்பட்டால், அது கூட்டுறவுத் துறைக்கும் நல்லது, இந்த நாட்டிற்கும் நல்லது. முதல் அமைச்சரவர்கள் இதைச் செய்தால் நன்மையாக இருக்கும் என்று இந்த அவைக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** என்னைப் பற்றிக் குறிப்பிட்டால் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. கூட்டுறவுத் துறையில், நில வள வங்கிகள், சீர்திருத்தப்பட்டு செயல்படுவதை மற்ற மாநிலங்களிலிருந்து வந்தவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அண்மையில் சென்னைக்கு வந்த மராட்டிய மாநிலக் கூட்டுறவுச் செயலாளரும், மற்ற அதிகாரிகளும், இங்கே இவ்வளவு நன்றாக நடக்கிறதே என்று பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, பாராட்டியதைப் பற்றிச் சொன்னார்கள். அவரைப் பற்றி மக்களே, அமைச்சருடைய துறையைப் பற்றி மட்டுமல்லாமல், அவருடைய சாமார்த்தியத்தைப் பற்றியே பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.



1970 மார்ச் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராமமூர்த்தி அவர்களுக்குக் கொடுத்திருப்பது 10 நிமிஷம். குறுக்கீட்டிற்காக 5 நிமிஷம் கூடக் கொடுத்திருக்கிறது. இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, அடுத்து, இந்தப் படியரிசித் திட்டம் பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சென்னை நகரத்தில் ,200 ரூபாய்க்குக் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு மட்டும் என்று கொடுக்கப் படுகிறது. இதனால் தொழிலாளர்களும், ஏழைகளும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதை மறுபடியும் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே போல இன்றையதினம், என்.ஜீ.ஓ.—க்களுக்குத் தந்திருக்கும் நிவாரணம் போதாது என்பதை வலியுறுத்திச் சொல்லுவதோடு, அரசு எத்தனையோ செலவுகளைச் செய்வதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து, இதை அதிகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின் வாரிய எஞ்ஜினியர்கள் 1.7% ஆக இருக்கிறார்கள். அதிகமாக இல்லாததால், அவர்களுடைய குறைகள் சரியான முறையில் பரிசீலனை செய்யப்படவில்லை. அதை நல்ல முறையில் அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வருவாய் இனங்கள் பொறுத்தவரையில். நிதி அமைச்சர் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு நெருங்கிய பண்ருட்டி திரு. ராமச்சந்திரன் சொன்னார் சென்ற கூட்டத்தில். இங்கே இப்படி வரிகளைப் போட்டு கஷ்டப்படுவதில், கிண்டி குதிரைப் பந்தயத்தை எடுத்துவிட வேண்டும் என்றார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ, அதில் கைவைக்க இந்த சர்க்கார் பயப் படுகிறது. அவர்களுக்கு நெருங்கியவர் சொன்னதால், ஏதாவது நடக்கும் என்ற நம்பிக்கையோடு இருந்தோம், நிச்சயமாக நடக்கும் என்றும் நினைத்தோம். ஆனால், பணக்காரர்களிடம் போக மாட்டார்கள் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டோ என்னவோ தெரியவில்லை. அப்படி இருக்கக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

புதிய அரசு விற்பனை வரியை 67-ல் 11% ஆக இருந்ததை 12 சதவிகிதம் ஆக்கியது, 77-ல் அதையே 12 லிருந்து 15 சதவிகிதம் ஆக்கியிருக்கிறது. செமண்டுக்கு 6 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது. ட்ராக்டருக்கு 7½ % லிருந்து 9½ % ஆக உயர்த்தியிருக்கிறது. இப்படி பல்வேறு துறைகளிலும் வரிகளை உயர்த்தி விலைவாசிகளைப் பாதிக்கும் அளவிற்கு, ஏழைகளை பாதிக்கும் அளவிற்கு செய்திருக்கிறார்கள். இதில் ஏழைகளை இவை பாதிக்காது என்று சொல்வது வெறும் பிரசாரத்திற்காக இருக்குமே யல்லாது, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாது.

ஏழைகளைப் பாதிக்காது என்று இந்த அரசு மதைாரச் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் அவையும் ஏற்றுக் கொள்ளாது என்று நம்புகிறேன்.

இவர்கள் கொடுத்திருக்கும் கணக்கீட்டு முறை தவறாக இருக்கிறது. வருவாய் இனங்கள் குறைத்துக் கணக்கிடப்பட்டு, சரியானபடி கணக்கிடப்படாமல் இருக்கிறது. புதிய புதிய வரிகள் மூலமாக எவ்வளவு வருவாய் என்கிற கணக்கீட்டைப் பார்த்தால், 1966-67—ல் அவர்களுடைய எஸ்டிமேட்டுக்கு அதிமாக வந்தது 3 சதவிகிதம் தான். 1967-68-ல் சதவிகிதம் அதிகமாக வந்தது 1969-ல் 12 சதவிகிதம் அதிகப்படியாக வந்திருக்கிறது. போடும் வரியினால் இவ்வளவு வருவாய் வரும் என்று கூட அறிய முடியாத அளவில் இருக்கிறது. அரசுக்கு இதை ஒன்று சரியாக எடுத்துச் சொல்லவில்லை, அல்லது பொது மக்களை ஏமாற்றுவதற்காக இதைக் குறைத்துச் சொல்லியிருக்கிறார்கள். சரியான முறையில் பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் அமைச்சர் அவர்களுக்கு உதவி அளிக்காத காரணத்தால் இப்படிப்பட்ட சிக்கலுக்கு இடம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைகளைக் காட்டும் முறையில்தான் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது, இது இந்த ஆட்சி எவ்வளவு தவறான முறையில் நடக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது என்று சொல்லி முடிக்கிறேன்.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே. . . .

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: சார், ஒரு தன்னிலை விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே ?

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: என் தொகுதியைப் பற்றிச் சொல்லிவிட்டார்கள். அது பேப்பரில் வந்தால் மோசமாகப் போய் விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரிடம் சொல்லுங்கள், அவர் பதில் சொல்லுவார்கள்.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். பிரதான எதிர்க் கட்சிப் பெரியவர் நல்ல அம்சங்களை யாவது வரவேற்பார்கள் என்று பார்த்தோம். ஆனால், அப்படி அவர்கள் செய்யவில்லை. நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில், காங்கிரஸ் கொண்டு வந்த நல்ல திட்டங்களை, ஒரு சிலவற்றை யாவது, உண்மையாக நல்லவற்றை, வரவேற்று இருக்கிறோம். நல்ல திட்டங்களை வரவேற்கவேண்டும் என்பதுகூட இல்லை. ஆனால் சொல்ல வேண்டியதெல்லாம் கூட்டுறவு பற்றித்தான் என்று அதைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு நிதி நிலை அறிக்கை முடிந்து விட்டது என்று முடித்துவிட்டார்கள். 1967 வரையில் காங்கிரஸ்





ஆண்ட காலத்தில், தாழ்த்தப் பட்டவர்களுக்கு என்று அமைக்கப் பட்ட ஒரு கமிட்டியிலும் எதிர்க் கட்சி உறுப்பினர்களை உறுப்பினராக சேர்த்துக் கொண்டதே கிடையாது. அரிசன வெல்பேர் டிபார்ட்மெண்ட் அட்வைசரி கமிட்டியில் கூட சேர்க்கவில்லை. நாங்கள் அப்பொழுது சீப் செக்ரடிரியைப் பார்த்தபோது, இதையெல்லாம் நாங்கள் ஒன்றும் செய்வதில்லை. அமைச்சர்களே போட்டு விடுகிறார்கள் என்று அப்பொழுது இருந்த சீப் செக்ரடரி சொன்னார்கள். பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தவர்கள் சென்று கேட்டோம். இன்றைக்கு எத்தனையோ கமிட்டிகளில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வேறுபாடு செய்வது கிடையாது.

பொதுவாக, அன்றைக்கு உழுபவனுக்கு நிலம் என்று சொன்ன போது, அண்ணா அவர்கள் வலியுறுத்திச் சொன்ன போது, காங்கிரஸ் பெருந்தலைவர், எட்டு ஆண்டுகாலம் முதல் அமைச்சராக இருந்தவர், சோஷலிசவாதி என்ற பெயரைப் பெற்றவர் சொன்னார்; 'உழைப்பவனுக்கு நிலம் என்றால், ஏறுபவனுக்கு ரயில், கட்டுபவனுக்கு கட்டடம்' என்று கலாட்டா செய்தார்கள். ஆனால் அதே கொள்கையைச் சொல்லி அவர் சோஷலிசவாதியகா மாறினார். அப்படி பேச்சளவில் மாறினாரேயல்லாது, சமதர்மத்திற்கு அக்கறை எடுக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு படிப்படியாக திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். உழுகிறவனுக்கு தருகிற அளவில் 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கர் என்று செய்திருக்கிறார்கள். இப்படிச் செய்வதை பாராட்ட வேண்டாம்; இதைச் செயல் படுத்த முடியுமா என்றாவது சொன்னால் ஓரளவுக்கு ஆதரிக்கிறார்கள் என்று பொருள் கொள்ளலாம்.

பல ஆண்டுகாலமாக, அரசின் உதவிபெற்ற எய்டெட் பள்ளி ஆசிரியர்களுக்கு எந்தச் சலுகையும் கிடையாது. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்போது சம்பள உயர்வு மட்டுமல்ல சர்க்கார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவோ அத்தனையும் மானேஜ்மென்ட் பள்ளிகளில் இருப்பவர்களுக்கு வழங்குவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஓய்வு ஊதியம் 20 ரூபாயாக இருந்ததை 30 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் சொன்னவுடனேயே இயற்கை நம்மைச் சதிசெய்துவிட்டது. மழையில்லாத காரணத்தால் எங்கும் வறட்சி நிலைமை உருவாகி வந்தது. 'இந்த ஆட்சி நிலைக்குமா, இருக்குமா ?' என்றெல்லாம் காங்மாஸ்காரர்கள் நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். முதலில் இருந்த நிலைமை மாறி, இயற்கையும் நமக்கு ஒத்துழைக்க ஆரம்

பெய்துவிட்டதால் நமக்குச் சாதகமாக இருந்தது. மத்திய அரசிடம் நிதி வேண்டுமென்று எவ்வளவு கேட்டோமோ அதில் ஓரளவை தந்து உதவினார்கள். அரசு அதிகாரிகளும் நல்ல திட்டத்தைத் தந்து ஒத்துழைத்தார்கள். வறட்சி நிலைமையை முன்னிட்டு ஏரி, குளங்கள் மராமத்து செய்யப்பட்டன. உடனே மழைபெய்ய ஆரம்பித்ததும், குளம், குட்டைகள், ஏரிகள் இவைகளெல்லாம் நீர் நிரம்பியிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இன்னும் ஒரு மகசூல் செய்வதற்கு வேண்டிய அளவில் நீர் இருக்கிறது. வறட்சி நிவாரண வேலைகளைச் செய்து, ஏரி, குளங்களை மராமத்து செய்தார்களே அதற்காகவாவது, இந்த அரசை காங்கிரஸ்காரர்கள் பாராட்டுகிறார்களா என்றால் பாராட்ட அவர்களுக்கு மனம் வரவில்லை. சேரர், சோழர்கள் காலத்தில்தான் ஏரி, குளங்கள் மராமத்து செய்யப்பட்டன என்று நாம் படித்திருக்கிறோம், அதற்குப் பின் ஆங்கிலேயர்கள் ஆண்டபொழுது எல்லா ஏரி, குளங்களையும் மராமத்து செய்யவில்லை. சில இடங்களில்தான் மராமத்து செய்தார்கள். மராமத்து செய்யாததினால் மண்மேடிட்டு விட்ட காரணத்தால், மழைநீர் தேங்காமல் வழிந்துவிட்டது. இப்போது அப்படி இல்லை. எல்லா ஏரி, குளங்களும் மராமத்து செய்யப்பட்டதன் காரணமாக மழை நீர் தேங்கி நிற்கிறது. மேலும் ஒரு பக்கம் பம்ப்செட், போரிங் வெல்ஸ் அமைக்கப்பட்டிருக்கின்றன. குளம், குட்டைகளில் தண்ணீர் தேங்கியிருப்பதால் விவசாயிகள் நன்றாக விவசாயம் செய்வதற்கு வழி ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, என். ஜி. ஓ-க்களுடைய கிளர்ச்சிகளைப் பயன்படுத்திக் கொண்டு, இந்த சர்க்காரை ஒழித்துவிடலாம் என்று எதிர்க்கட்சிகள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக கோஷம் போடுவதில் முனைந்தார்கள். நாங்கள் கோஷத்திற்கு ஏமாந்துவிடுபவர்கள் அல்ல. எப்படிப் பார்த்தாலும், என். ஜி. ஓ-க்களுக்கு இந்த அரசு தன்னால் முடிந்ததை, நிதிநிலைக்கேற்றாற்போல், மாதம் பத்து ரூபாய் என்ற அளவில் இடைக்கால நிவாரணம் கொடுத்திருக்கிறது. அதைப்பற்றியாவது காங்கிரஸ்காரர்கள் பாராட்டி இனிமேலாகிலும் பேசுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, பிற்பட்ட வகுப்பினருக்கென 1952-53-ம் ஆண்டில் ஷெட்யூல் கேஸ்ட் கமிஷன் போடப்பட்டது. பேக்வேர்டு கிளாஸ் கமிஷன் என்று போடப்பட்டது. பின்னர் சைமன் கமிஷன் காலத்தில் பேக்வேர்டு கிளாஸ் கமிஷன் போடப்பட்டது. அந்தக் கமிஷன்கள் எல்லாம் ஊர் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டுப் போயின. உருப்படியான காரியங்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கென்று ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தி ஒரு தனிக் கமிஷனை ஏற்படுத்தி ஒரு தனி அமைச்சரையும் ஏற்படுத்தியிருக்கிறது. 100-க்கு 60 சத





விதத்தினர் உள்ள இவர்களுக்கு ஒரு தனியான இலாகாவை ஏற்படுத்தி இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்காக 5 கோடியே 19 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் நண்பர்கள் அதையாவது பாராட்ட வேண்டாமா? இந்த நல்ல காரியத்தைச் செய்ததற்காக பிற்பட்ட, நடுத்தர வகுப்பினர் எல்லோரும் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள்.

அடுத்தபடியாக, அரிசனங்களுக்காக செய்யப்பட்ட நன்மைகளைப்பற்றி அந்த மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம் என்றிருக்கிறேன்.

அடுத்தபடியாக நிலச் சீர்திருத்தம் பற்றி அதிகமாக சொல்ல வேண்டியதில்லை. முன்பு, நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது என்று சொல்லிவிட்டு கொண்டு வந்த காரணத்தாலே நிலச் சுவான்தார்கள் நிலங்களைப் பிரித்துக்கொண்டுவிட்டார்கள். அதனால் அதிகமான பயன் அந்தச் சட்டத்தினால் ஏற்படவில்லை. இன்றைக்கு நமது அரசு கொண்டுவந்திருக்கிற நில உச்சவரம்புச் சட்டத்தினால் நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நாம் எந்தெந்த வாக்குறுதிகளை அளித்தோமோ, அவையனைத்தும் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வந்த சர்க்காருக்கும், ஒத்துழைத்த சர்க்கார் அதிகாரிகளுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கொண்வந்திருக்கிற 1970-71ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக, நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் மிச்ச வரம்பில் இருக்கும்போது, விவசாயிகளுக்கு மட்டும் ஏன் உச்ச வரம்பு என்று கேட்க விரும்புகிறேன். நிலத்தில் தன்னுடைய மனைவி மக்களோடு கஷ்டப்பட்டு பாடுபடக்கூடிய விவசாயி சம்பாதித்த சொத்து இது. முன்பு காங்கிரஸ் காலத்தில் முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தார்கள். அதிலே பட்டிருக்கிற கஷ்டத்திலிருந்து இன்னும் விவசாயி விடுபடாமல் இருக்கிறான். நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு விவசாய வருமான வரி என்று விதித்திருக்கிறீர்கள். விவசாயி அந்த வரிகளையெல்லாம் கொடுக்க முடியாத நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறான். இப்பொழுது பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்கிறீர்கள். இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும், உணவு உற்பத்தி தடைபடும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள்

தான் உணவு உற்பத்தியை அதிகமாக பெருக்க முடியும். உச்சவரம்பு கட்டுவதினாலே இந்த நாட்டிலே உணவு உற்பத்தி குறையும். சிறிய நிலம் வைத்திருப்பவர்கள் தங்கள் தேவையைத்தான் பார்த்துக்கொள்வவார்கள். மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும். பதினைந்து ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு நீங்கள் சொல்லக் கூடிய நவீன இயந்திரங்களைக்கொண்டு எப்படி உழுது விவசாயம் செய்ய முடியும்? விவசாயத்தைப்பற்றி நன்றாக தெரிந்திருந்தால் இந்தக் குறை ஏற்பட்டிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி நிலத்தைக் குறைப்பதனாலேயே கம்யூனிஸ்டுகளின் ஆதாவு கிடைக்கும், மற்ற ஏழை விவசாயிகளுடைய ஆதரவு கிடைக்கும் என்று நம்பினால் நிச்சயம் நீங்கள் ஏமாறுவீர்கள். ஆகவே, இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றபடி நகரங்களிலே மாட மாளிகைகளைக் கட்டிக்கொண்டு, பதினன்கு அடுக்கு மாளிகையிலே குடியிருக்கிறார்கள், பல பங்களாக்களை வைத்திருக்கிறார்கள், பல மில் அதிபர்கள் இருக்கிறார்கள், பல பஸ் அதிபர்கள் இருக்கிறார்கள், நகரங்களில் கோடிக்கணக்கான ரூபாய் வைத்துக்கொண்டு உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கிறார்கள், கோடிக்கணக்கில் லாபம் வரும் தொழில்களைச் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, ஏன் இந்த ஏழை விவசாயியை மட்டும் கஷ்டப்படுத்துகிறீர்கள். இதற்குக் காரணம் என்ன என்பதைத் துருவித் துருவிப் பார்த்தால் நன்றாகத் தெரிகிறது. பணக்காரர்களிடம் போனால் இந்த அரசாங்கத்திற்கு ஆபத்து வரும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவேதான் அவர்களிடம் போகாமல் விவசாயிதான் சாப்பட்டை என்று நினைத்து இப்படிச் செய்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

முன்பெல்லாம் ராஜாக்களை ஒழித்தார்கள், ஜமீந்தார்களை ஒழித்தார்கள். எல்லா நிலங்களையும் ஒழித்தார்கள். விவசாயிகள் கஷ்டப்பட்டு அந்தந்த வருஷம் ஒவ்வொரு கால் ஏக்கர், அரை ஏக்கர் என்ற முறையில் சம்பாதித்தார்கள். அவர்கள் சுகுசுகுவாசம் செய்துகொண்டு, உல்லாச மாளிகையில் இருப்பவர்கள் அல்ல. வீடுகூட, மாடுகூட இல்லாத நிலையில் இருப்பவர்கள்தான் விவசாயிகள். சர்க்கார் கணக்கை எடுத்துப் புரட்டிப் பார்த்தால் ஒவ்வொருவரும் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகும். ஆகவே, சர்க்கார் அவசியம் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பெல்லாம், 'அரசர்கள் தவறு செய்தால் தெய்வம் அந்த அரசர்களைத் தண்டிக்கும்' என்று சொல்லுவார்கள். இந்த அரசு தெய்வத்தின் மேலேயே கைவைக்கிற அரசாக இருக்கிறது. தெய்வத்தின் சொத்துக்களுக்குக்கூட உச்சவரம்பு கொண்டுவருகிற சர்க்காராக இருக்கிறது. இதை நாம் யாரிடத்தில் போய்ச் சொல்வது என்று புரியவில்லை.





சிறு சிறு விஷயங்களுக்குக் கூட இந்த அரசு கமிஷனை நியமிக்கிறது. அதை நாம் எல்லாம் பார்க்கிறோம். ஆனால் நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவதற்கு ஏன் கமிஷன் ஒன்றை நியமிக்கவில்லை என்பது என்னவோ தெரியவில்லை. இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் ஆராய்ந்து ஒரு நல்ல முடிவிற்கு வருவதற்கு ஹைக் கோர்ட் ரிடையர்ட் ஜட்ஜுகளைக் கொண்ட ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும். அவர்கள் இதுபற்றிய எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து ஒரு முடிவு தெரிவித்த பிறகே இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் விவசாய வருமான வரி இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை எடுக்கப்போகிறோம் என்று ஒன்றும் சொல்லவில்லை. ஏன் விவசாயிகளிடம் மட்டும் இந்தக் கோபம் என்பது தெரியவில்லை. நில அளவைத்தான் குறைத்துவிட்டார்களே, அதையும் ஏன் எடுக்கக் கூடாது என்பது புரியவில்லை.

கிராமங்கள் முழுவதற்கும் 71 முடிவிற்குள் மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டுவிடும் என்றார்கள். இந்த நேரத்தில் மின்சார சாதனங்கள் மீதான வரியை உயர்த்தி விட்டார்கள். இது கிராம மக்களைத்தான் வெகுவாக பாதிப்பதாக இருக்கும். ஆகவே, நன்கு பரிசீலனை செய்து 1971-க்குப் பிறகாவது இந்த வரியைக் கூட்டிக்கொள்ளலாம், இப்போது கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை விவசாயிகள் வாங்கக்கூடிய சிமிண்டுக்கு வரி விதித்திருக்கிறார்கள். கிராமப்புறங்களில் நிறைய வீடுகள் கட்டப்படவேண்டும், லோன் கொடுக்கப்படவேண்டும் என்கிறபோது சிமிண்ட் வரியை உயர்த்தினால் இது ஏழை கிராமமக்களை எவ்வளவு பாதிக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்காவது சலுகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் டிராக்டர்களுக்கு அதிக வரி. இனிமேல்தான் டிராக்டர்களையே உபயோகப்படுத்த இடமில்லாமல் போகப்போகிறது. என்றாலும் இது விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய வரியாகத்தான் இருக்கிறது.

கிராமங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நகரங்களுக்கு பெரிய பெரிய திட்டங்களுக்காக கோடானு கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டு, கிராமங்களுக்காக ஒரு கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கினால் போதுமா? கிராமங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கவேண்டுமென்றால் இன்னும் பல கோடி ரூபாய்களை ஒதுக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும். எல்லாவிதத்திலும் சோஷலிசத்தை உண்டாக்க வேண்டுமென்று நினைக்கிற அரசு கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இருக்கிற பெரிய பிளவை—ஏற்றத்தாழ்வை—ஒழிக்க ஏன் சிந்திக்கவில்லை

என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, கிராமங்களுக்கு இன்னும் அதிகமாக பல கோடி ரூபாய்கள் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கிராம இணைப்புச் சாலைகள், மகப்பேறு நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், குடித்தண்ணீர் வசதிகள் இவற்றை கிராமங்களில் ஏற்படுத்தவேண்டுமென்றால் அவர்களும் பங்குத் தொகை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதன்காரணமாக பணக்காரர்கள் நன்மை அடையக்கூடியதாக இருக்கிறதே தவிர பொருளாதார வசதிக் குறைவான கிராமங்கள் அந்த நன்மைகளைப் பெற முடியாது போகிறது. ஆகவே, இந்த இணைப்புச்சாலை, மகப்பேறு நிலையங்கள், பள்ளிக்கட்டிடங்கள், குடி-தண்ணீர் வசதிகள் ஆகிய வற்றுக்கு அறவே பங்குத்தொகை கட்டவேண்டிய முறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சி. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நிதி அமைச்சர் அவர்களால் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை வரவேற்று என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நான்கு தினங்களாக விவாதத்தில் கலந்து பேசி வருகிற காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இந்த சோஷலிச திட்டத்தைப் பாராட்டி ஒரு வார்த்தை யாவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். யாரும் பாராட்டாதது மட்டும் அல்ல. நமது எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் "பத்து பக்கத்துக்கு ஒப்பாரி வைத்திருக்கிறார்கள்" என்று பத்திரிகையில் கருத்தும் தெரிவித்திருக்கிறார். அதே அடிப்படையில் இங்கே பேசிய திரு. இராமமூர்த்தி அவர்களும் தம் கருத்தைத் தெரிவித்தார்கள். "இதற்கு முன்பெல்லாம் நீங்கள் கோபாவேசத்துடன் தட்டிக் கேட்பீர்களே, இப்போது கெஞ்சிக் கேட்கிறீர்களே, இது உங்களது கையாலாகாத தன்மையைக் காட்டவில்லையா"? என்று தெரிவித்தார்கள். ஆகவே, அவருக்கும் அவருக்கு முன்னால் பத்திரிகையில் தம் கருத்தைத் தெரிவித்த திரு. கருத்திருமன் அவர்களுக்கும் எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த 20 ஆண்டுகளாக நீங்கள் நாட்டை ஆண்டு வந்தீர்கள். எதிர்கட்சியில் இருந்த நாங்கள் "திராவிட நாடு திராவிடருக்கே" என்கிற கருத்தை வலியுறுத்தி வந்தோம். ஏழு வருடங்களுக்கு முன்னால் நாங்கள் திராவிடநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டாலும் நம்முடைய உரிமையை தென்னகத்தின் உரிமைகளை விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. நாங்கள் திராவிட நாடு கேட்ட நியங்கள் அப்படியே இருக்கின்றன. இது ஒப்பாரியல்ல மாநில சுயஆட்சி கேட்கும் உரிமைக்குரல். 1,500 மைல்களுக்கு அப்பால் டெல்லியில் இருந்து கொண்டு எடுக்கிற முடிவுகள் நம்முடைய பொருளாதார அமைப்பை சீர்குலைக்கின்றன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், மாநிலத்தி





சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி அமைப்பே நல்லது என்கிற அடிப்படைக் கருத்துக்களை முழு வலுவுடன்தான் வற்புறுத்தி வந்து கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் நம்முடைய உரிமைகளைக் காக்க கொஞ்சம் கூடத் தயக்கம் காட்டவே இல்லை. அழுத பிள்ளை பால் குடிக்கும் என்கிறபடி அழுகிறோம். கெஞ்சுகிறோம். பலிக்கவில்லை என்றால் போராட்டத்திற்கும் தயாராக இருக்கிறோம். கடந்த மூன்றாண்டுகளாக ஒப்பாரி வைத்து வருகிறவர்கள் நீங்கள்தான். மாநில ஆட்சியை இழந்தீர்கள் ஒப்பாரி வைத்தீர்கள். இப்போது டெல்லியை இழந்தீர்கள் ஒப்பாரி வைத்தீர்கள், நாளை பேசும்போது திரு கருத்திருமன் அவர்கள் தான் பெரியதாக ஒப்பாரி வைக்கப் போகிறார் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருபதாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவிட்டு வெளியே வந்த திரு காமராசர் "பணக்காரன் பணக்காரனாகி விட்டான். ஏழைகள் மிகவும் ஏழைகளாகத்தான் போய்விட்டார்கள். உங்கள் தலையில் பூசிக்கொள்ள எண்ணெயில்லையே" என்று ஒப்பாரி வைத்து வருகிறார் என்றால் அதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒப்பாரி வைப்பது நீங்கள்தான், இந்தி மொழிப் பிரச்சனையில் மக்கள் தலைவரின் மணிவாசகம் என்று கூறி நான் இருக்கும்வரை இந்தியை வர விடமாட்டேன் என்று சுவரொட்டி ஒட்டினீர்கள். இப்பொழுது இந்தியை ஒழிக்கப் புறப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டது. அந்தத் திரையும் நேற்று கிழிந்து விட்டது. எனவே, எல்லா காங்கிரஸ் உறுப்பினர்களும் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு காந்திஜி சிலையின் முன் போய் ஒப்பாரி வையுங்கள். அதற்குமாறாக மக்களால் பெரிதும் பாராட்டுகிற புரட்சிகரமான வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற நிதி அமைச்சர் அவர்களை குறிப்பாக முதல் அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். கடுமையான வறட்சி, மழைப்பஞ்சம் இவை ஏற்பட்டிருந்தும் கூட அதை மிகவும் தைரியத்துடன் சமாளித்து உணவு தானியங்கள் வழங்கி, விவசாயத்திற்கு விதை, உரங்கள் எல்லாம் வழங்கி இன்றைக்கு உணவுத்துறையில் ஒரு வெற்றியை இந்த ஆட்சி கண்டிருக்கிறது என்றால், விவசாயப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால் அதைப் பாராட்டத்தான் வேண்டும்.

விவசாயப் புரட்சி என்று நான் சொன்னதற்கான காரணங்களை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏழை எளியவர்கள் இலகுவாகக் கடன் பெறத்தக்க வகையில் நிலவள வங்கிகளை தமிழக அரசு நியமித்து அதன்மூலம் குழாய்க் கிணறுகள் மின் இணைப்புகள் பெறுவதற்கு அரியதொரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. இந்த நாடு வாழ வேண்டுமானால் வளரவேண்டுமானால் விவசாயத்திலே ஒரு மாபெரும் புரட்சியை உருவாக்கினால் ஒழிய இந்தியா உருப்படாது என்ற கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு கைக்கொண்டிருக்கின்ற காரணத்தினலேதான் இன்றைய

தினம் நிலவள வங்கிகளை ஆரம்பித்து விவசாயப் புரட்சியை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆரம்பித்து இருக்கிறது. ஏதோ கட்சிக் கண்ணோட்டத்தோடு நிலவள வங்கிகள் போடப் படுகின்றன என்று அவர்கள் சொன்னார்கள். இது நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு புதிதாக ஆரம்பித்தது அல்ல. காங்கிரஸ் கட்சி இந்த நாட்டை ஆண்டபொழுது 115 நிலவள வங்கிகளை ஏற்படுத்தினார்கள், அதற்குப் பிறகு இப்பொழுது 60 நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முன்னாலே 115 நிலவள வங்கிகள் அவர்கள் ஏற்படுத்திய காலத்திலே ஒரே ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அல்லது காங்கிரஸ் அல்லாத வேறு ஒருவரை அவர்கள் நியமிக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே அவர்கள் மனத்திலே கொள்ள வேண்டுமென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை சோஷலிஸத்தின் சின்னமாக அமைந்து இருக்கிறது. அவர்கள் 20 ஆண்டுக்காலமாக சோஷலிஸம் சோஷலிஸம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முதலிலே சோஷலிஸம் என்று சொன்னார்கள், பிறகு சோஷலிஸ்டிக் பேட்டர்ன் என்று சொன்னார்கள், அதற்குப் பிறகு ஜனநாயக சோஷலிஸம் என்று இப்படிச் சொன்னார்களே தவிர அந்த இலக்கை நோக்கிக் கடுகளவுத் தூரம்கூட அவர்கள் செல்லவில்லை. ஜனநாயக சோஷலிஸம் என்று அவர்கள் மேடைகளிலேதான் பேசிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய ஜனநாயகக் காவலர் என்று சொல்லிக்கொள்கின்ற காமராஜ் அவர்கள் இந்திரா அம்மையாரிடம் நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொன்னதை யெல்லாம் அவர்கள் நிறைவேற்றவேயில்லை. அதனால் தான் உண்மையான சோஷலிஸம் காணமுடியவில்லை, ஏழை ஏழையாகவே இருக்கிறான், பணக்காரன் கோடீஸ்வரனாக ஆகியிருக்கிறான் என்று சொல்கிறார், இப்பொழுதுதான் காமராஜ் அவர்கள் ஒரு உண்மையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முப்பது ஏக்கரிலிருந்து 15 ஏக்கராக திராவிட முன்னேற்றக் கழக அரசு குறைத்திருப்பது நாங்கள் சோஷலிஸப் பாதையில் தீவிரமாகச் செல்கிறோம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை இந்த நாடு நன்றாக உணர்ந்து இருக்கிறது. ஆனால் இங்கே உள்ளே இருக்கிற ஒரு ஐம்பது பேர்கள் உணர்ந்துகொள்ள மறுக்கிறார்கள் என்ற காரணத்தினால் அதிலே இருக்கிற நியாயத்தை, நீதியை நாம் விட்டுவிட முடியாது.

இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள் இந்த மன்றத்திலே கன்னியாகுமாரி மாவட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட ரயத்துவாரிச் சட்டம்பற்றி மன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பேசிவருகிறார்கள். நான் இதை அவர்களுக்குப் பதிலாக அல்ல, திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெளிவாக்க வேண்டுமென்பதற்காகத் தெரிவித்துக்





கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரயத்துவாரிச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது 1964-ம் ஆண்டு அதற்காக ஏற்படுத்தப்பட்ட செலக்ட் கமிட்டி அங்கே சுற்றுப்பயணம் செய்த நேரத்திலே மகாதேவன் பிள்ளை, பொன்னப்ப நாடார் உள்பட இந்த ரயத்வாரிச் சட்டம் எங்களுக்குத் தேவையில்லை என்று தெரிவித்தார்கள். அப்பொழுது அமைச்சர் மாதவன் அவர்கள்கூட அதற்கு டிஸென்டிங் மினிட் கொடுத்தார்கள். அமைச்சர்கள் திரு. மாதவன், திரு. மதியழகன், பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் எல்லோரும் இதைப்பற்றி மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் பேசியதற்குப் பிறகும்கூட 1964-ஆம் ஆண்டு அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்பொழுது வேண்டாமென்று எதிர்த்து 40 ஓட்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போட்டார்கள். ஆனால் திரு. வில்லியம், திரு. பொன்னப்ப நாடார், திரு. மகாதேவன் பிள்ளை ஆகிய மூன்று பேர்களும் அதற்கு ஆதரவாக வாக்களித்து 61 ஓட்டுகளைப் பெற்று அந்தச் சட்டத்தை அன்று அவர்கள் கொண்டுவந்தார்கள் என்பதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தச் சட்டத்தைப் போடக்கூடாது என்றுதான் தெரிவித்தார்கள் . . .

(திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்ன பேசப் போகிறீர்கள் ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்த ரயத்வாரி முறை கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பொருத்தமானதல்ல என்று நண்பர் கூறுகின்ற காரணத்தினாலே அதை ரத்துச் செய்யவேண்டுமென்று அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சி முடிவு செய்து இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். சி. பாலன் :** கன்னியாகுமரி மாவட்டக் காங்கிரஸ் இந்த ரயத்துவாரிச் சட்டம் வேண்டாமென்று தெரிவித்ததற்குப் பிறகு கன்னியாகுமரியில் உள்ள அத்தனை காங்கிரஸ்காரர்களும் அப்படி தெரிவித்ததற்குப் பிறகு ரயத்துவாரிச் சட்டம் தேவையில்லை என்று நாங்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்த 40 பேர்களும் தெரிவித்ததற்குப் பிறகு கொட்டுமேளத்தோடு நீங்களும் கைதூக்கித்தான் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ரயத்துவாரிச் சட்டம் வேண்டுமா வேண்டாமா என்பதல்ல பிரச்னை என்ற முறையில் அந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்ததைப் போல் பேசுகிறீர்களே. அந்த வரி விதிக்கப்படுகிறது, அதை நிறுத்திவைக்கவேண்டுமென்று சென்ற ஆண்டு வருவாய்த்துறை மானியத்திலே பேசுகின்றபொழுது நான் பேசியிருக்கிறேன். அந்த

[திரு. எம். சி. பாலன்] [1970 மார்ச் 5

கருத்தை இதய சுத்தியோடு நாங்கள் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் போட்ட சட்டம் அது, அந்த அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு வரியை வசூலித்துக் கொண்டிருக்கிறது. காமராஜ் பிறந்த தினப் பரிசாக அந்தச் சட்டம் வந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்தங்கிய மக்களுடைய பட்ஜெட்டாக இது அமைந்திருக்கிறது. 1966-67-ஆம் ஆண்டிலே 184 லட்ச ரூபாய் பின்தங்கியவர்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்டது. 1969-70-லே 314 லட்ச ரூபாய் அளவிற்கு அதிகமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது. பின்தங்கியவர்களின் படிப்பிற்காக 1966-67-இலே 94 லட்சம் ஒதுக்கப்பட்டது, ஆனால் 1969-70-ஆம் ஆண்டிலே 240 லட்ச ரூபாயும் நடப்பு ஆண்டிலே 260 லட்ச ரூபாயும் பின்தங்கியவர்களின் கல்வி நலனுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஜஸ்டிஸ் பார்டி எப்படி தாழ்த்தப்பட்ட மக்களும் உயர்ந்த மக்களும் ஒன்றாக இருக்கவேண்டுமென்று சொன்னார்களோ அந்த முறையிலே இன்றைய தினம் ஏழை எளியவர்கள், பிற்பட்ட மக்களுக்கு இவர்களுடைய நலனுக்காக சிறப்பான திட்டங்களைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்திருக்கிறது.

கல்விக்கு யாரோ கண்ணைத் திறந்ததாகச் சொல்லப்பட்டது. அடைந்துகிடந்த கண்ணை திறந்ததாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்குக் கல்விக்கண் எப்படித் திறக்கப்பட்டிருக்கிறது என்றால் முன்பு அரசாங்க ஆசிரியர்களுக்குமட்டும் தரப்பட்டிருந்த சலுகைகளை தனியார்ப் பள்ளிகளிலே பணிபுரிந்த ஆசிரியர்களுக்குத்தராமல் அவர்களுடைய கண்ணிலே சுண்ணாம்பை வைத்திருந்தார்கள். இன்றைக்கு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு அரசாங்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்குச் சலுகைகள் தரப்படுகின்றனவோ அவையாவும் தனியார் பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது. ஆயிரக் கணக்கான, இலட்சக்கணக்கான இதயங்களோடு நானும் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டி, வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் வருட நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற முன்வந்துள்ளேன். இந்த நிதி நிலை அறிக்கையில் மிகவும் முக்கியமான அம்சமாக 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்று கொண்டுவரப்பட்டுள்ளது ஆகும். இது வரவேற்கவேண்டிய அம்சமாகும். அதே நேரத்திலே இந்த உச்ச வரம்பு ஏற்கனவே 1960-ஆம் ஆண்டு காங்கிரஸ் சர்க்காரால் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிறகும் இந்த நாட்டு ஏழை எளிய மக்களுக்கு நிலம் கிடைக்காத உச்ச வரம்பாக இருந்ததோ அப்படியில்லாமல் பாதிக்கப்பட்ட



1970 மார்ச் 5] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு நிலம் கிடைக்கும் வகையில் இந்தத் திட்டம் அமையவேண்டும். நம்முடைய நாட்டிலே நூற்றுக்கு 80 சதவீதம் பேர்கள் விவசாயப் பெருமக்களாக இருக்கிறார்கள், அதிலேயும் 40 சதவீதம் ஏழை எளிய விவசாய மக்கள் கையகலம்கூட நிலம் இல்லாதவர்கள். அவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும். நிலம் கொடுப்பது மனிதாபிமானத்தினால் அல்ல. இந்த நாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டிலே சமூக நீதி ஏற்பட வேண்டும். தனிநபர் கையில் நிலம் குவியலாக இருப்பதால் சமுதாய முன்னேற்றமோ, பொருளாதார முன்னேற்றமோ ஏற்படாது. 40 சதவீத மக்களுக்கு அவர்கள் இந்த நாட்டிலே ஒரு குறிப்பிட்ட பகுதியாக இருக்கிற காரணத்தினாலே அவர்களுடைய வாழ்க்கை மலரவும், அவர்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்கவும், பொருளாதார அபிவிருத்தி ஏற்படக்கூடிய முறையிலேயும் இந்த உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அந்த எண்ணத்தோடு இந்தச் சட்டசபைக் கூட்டத் தொடர் இறுதிக்குள்ளாகவே அந்த மசோதாவை நிறைவேற்றவேண்டுமென்று வற்புறுத்தி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி மசோதாவாக வரக்கூடிய காலத்தில் அதில் 15 ஸ்டாண் மு.ப.
டர்டு ஏக்கர் என்பது ஒரு குடும்பத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட 11-30
வேண்டும், தனி நபருக்கு என்று நிர்ணயிக்கக் கூடாது. ஏற்கனவே 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயித்த காலத்தில் கோவில்களுக்கு, மடங்களுக்கு, டிரஸ்டிகளுக்கு, மடாதிபதிகளுக்கு என்று பல ஆயிரக் கணக்கான வேலி நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. நீலகிரி மலை, கொடைக்கானல் மலை, ஏற்காடு மலை முழுவதும் உச்ச வரம்புச் சட்டத்திற்குள் கொண்டுவரப்படாது இருக்கிறது. தரைப் பகுதியில் உச்ச வரம்பு வந்த பிறகு நிலப்பிரபுக்கள் மலைப் பகுதியில் சாகுபடி செய்து அதிகமாக லாபம் அடைந்திருக்கிறார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். இப்படி உச்ச வரம்புச் சட்டத்திலுள்ள விதிவிலக்குகளை ரத்து செய்யாவிட்டால் ஏழை எளிய மக்களுக்கு நிலம் கிடைக்காது என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த விதிவிலக்குகளை ரத்து செய்யவேண்டும். கோவில்களுக்கும், ஆதீனங்களுக்கும் வருஷத்திற்கு எவ்வளவு செலவாகிறது என்பதைக் கமிட்டி நியமித்துப் பரிசீலித்து அந்தச் செலவுத் தொகையைக் கொடுத்து விடுவதற்கு வழி செய்து விட்டு அந்த நிலங்களை எல்லாம் நிலம் இல்லாத விவசாயிகளுக்குச் சாகுபடிக்குக் கொடுக்க குத்தகைக்கு விடுவது என்ற முறையிலாவது இருக்க வேண்டும். திருவாரூர் தியாகராஜர் கோயில் பண்ணை நிலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சாகுபடி ஆகியிருக்கிறது. அதிலே மாவுக்கு ஒரு கலந்தான் விளைந்தது என்று சொல்லி 40,000 ரூபாய் நஷ்டம் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பண்ணையின் சொத்தை ஒருசில நபர்கள் ஊதாரித் தனமாகச் செலவு செய்து வருகிறார்கள். அரசு இதைப் பரிசீலனை செய்யவேண்டும். திருப்பனந்தாள் மடத்திற்கு உரிய 800 ஏக்கர் நிலத்தில் வருகின்ற வரு

அடுத்தபடியாக, விலைவாசி உயர்வைப் பற்றி ஒருவார்த்தை. அரிசி ரேஷனை எடுத்ததன் காரணமாக சேமிப்பாளர்களும், மற்றும் இருக்கக்கூடிய மொத்த வியாபாரிகளும் இப்போதே தானியத்தைச் சேமிக்க ஆரம்பித்து விட்டார்கள். சித்திரை, வைகாசி மாதங்களில் அதன் பலனைப் பார்க்கப் போகிறோம். மேலும் சென்னையிலே ஒரு குண்டு விறகு விலை 4¼ ரூபாய் என்று விற்கிறது. என்றும் இல்லாத அளவுக்கு விறகு விலை ஏறியிருக்கிறது. புளி, பருப்பு, எண்ணெ, மிளகாய் போன்ற அத்தனை பொருள்களின் விலையும் உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது என்பது மாநில சர்க்காரால் சாத்தியம் இல்லை என்றாலும் கூட மத்திய சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்தி விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். உணவுப் பொருள் மொத்த வியாபாரத்தை "ஸ்டேட் டிரேடிங்" என்ற முறையில் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும். வர்த்தகச் சூதாடிகளுக்கு உணவுப் பொருள் மீது பாங்குகள் பணம் கொடுக்கக்கூடாது என்று இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானத்தை நாம் நிறைவேற்றியனுப்பவேண்டும். அவ்வாறு மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் உணவுப் பொருள் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியும். அதைச் செய்யவேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மூ. மாரிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, இந்த 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் ஏழை மக்களின் நலனுக்கும், விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், தொழில் வளர்ச்சியைப் பெருக்கவும், பல்லாயிரக்கணக்கான படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் திட்டத்தினை வகுத்து இம்மன்றத்தில் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அவர்களைப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இன்று படித்தவர்களிடையே நிலவி வரும் பெரும் பிரச்னையான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்த அரசு நல்லமுறையில் திட்டம் வகுத்து அவற்றை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்த்திருப்பது பாராட்டக் கூடியதாகும். குறிப்பாக, சாதாரண ஏழை மக்களுடையவும், நடுத்தர மக்களுடையவும் வாழ்க்கைப் பிரச்னைகளைப் போக்கக் கூடிய அளவிலும் அதே சமயத்தில் சமுதாய முன்னேற்றத்திற்கும், கல்வி, தொழில், வேளாண்மை, பொது மராமத்து ஆகிய துறைகளின் மேம்பாட்டுக்காக 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வேலைவாய்ப்பிற்கான திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைமைச் செயலகத்தில் 1969-70-ல் 1,884 பேர்கள் வேலை செய்த இடத்தில் 1907-71-ல் 2,145 பேர்கள் வேலை செய்ய 261 பேர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மைத்





துறையை எடுத்துக்கொண்டால் 1969-70-ல் 14,198 பேர்கள் இருந்த இடத்தில் 1970-71-ல் 14,436 பேர்கள், 238 பேர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் 69-70-ல் 46,368 பேர்கள் இருந்த இடத்தில் 58,701 பேர்கள் வேலை செய்ய, 12,383 பேர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. பொது மராமத்து, நீர்ப் பாசனம், நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக் கொண்டால், 1969-70-ல் 9,086 பேர்கள் வேலை செய்த இடத்தில் 1970-71-ல் 10,934 பேர்கள் வேலை செய்ய, 1,848 பேர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையை எடுத்துக் கொண்டால், 1969-70-ல் 41,893 பேர்கள் வேலை செய்த இடத்தில் 1970-71ல் 42,586 பேர்கள் வேலை செய்ய, 693 பேர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் பின்தங்கியோர் நலன், கைத்தறி, கூட்டுறவு, காட்டு இலாகா போன்ற இலாகாக்களிலும் வேலை வாய்ப்பு வசதிகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் சுமார் 17,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆக பட்டதாரிகளிடையேயும், மற்றவர்களிடையேயும் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு வழி வகுத்துள்ள இந்த அமைச்சரவையையும், குறிப்பாக நிதியமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

அதோடு அரசு ஊழியர்களின்மேல் கருணை கொண்டு இடைக் கால நிவாரணம் அளிக்கப்பட்டிருப்பதோடுகூட இரண்டாவது சம்பள ஆணைக் குழுவிற்கும் ஏற்பாடு செய்துள்ளார்கள். இது அரசு ஊழியர்களுக்குப் பெரிதும் பயன்படும். ஆகவே, இதையும் வரவேற்று பாராட்டுகிறேன்.

அடுத்து, என் தொகுதியில் சுமார் ரூ. 30 லட்சத்திற்கும் மேலான திட்டங்கள் முடிக்கப்பட்டும் சில வேலைகள் துவங்கப்பட்டும் உள்ளன. குறிப்பாக உணவு உற்பத்தியைப் பெருக்கும் விதத்தில் பல ஆண்டுகளாக விவசாயிகள் கோரி வந்துள்ள ரூ. 20 லட்சம் மதிப்பீட்டுள்ள காட்டுக்கோட்டை, மணிவிழுந்தான், சிவசங்காபுரம், உளிபுரம் ஆகிய இடங்களில் ஏரிகள் அமைக்கத் திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதைப் பாராட்டுவதோடு, என் தொகுதி மக்கள் சார்பாக அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று தூர்ந்து போன ஏரிகளை ஆழப்படுத்தவும், ஏரிகளின் கரைகளைப் பழுது பார்க்கவும் சுமார் ரூ. 3 லட்சம் செலவிற்கான திட்டங்களுக்கு—ஆறமூர் ஏரி, தேவியாக்குறிச்சி ஏரி, ஓதியத்தூர் ஏரி, நடுவலூர் ஏரி, நாவலூர் ஏரி இவற்றிற்காக—அரசின் அனுமதி வழங்கப்பட்டு திட்டங்கள் முடிவு பெற்றுள்ளன. கவர்பனை என்ற இடத்தில் 2.25 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் 68-ல் துவங்கப்பட்டு இன்று முடிவடைந்துள்ளது. விவசாயிகளின் நலனுக்காகவும், உணவு உற்பத்தி

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1970 மார்ச் 5

வாயிலிருந்து ஸ்ரீவைகுண்டம் குமரகுருபர சாமிகள் காலேஜ் நடைபெறுவதாகக் கூறுகிறார்கள். திருப்பனந்தாள் மடத்திற்குச் சொந்தமான 800 ஏக்கர் நிலத்திலிருந்து வரக்கூடிய அந்தத் தொகையை காலேஜுக்கு உதவித் தொகையாகக் கொடுப்பது என்ற ஒப்பந்தம் இருக்கிறது. அப்படி இருந்தும் காலேஜ் நிர்வாகச் செலவுகளுக்கே போதாமல் பாங்கியில் இருந்து ஒரு லட்சம் ரூபாய் கடன் கேட்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது எப்படி கோவில்கள், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து வரக்கூடிய வருமானம் விரயம் செய்யப்படுகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதை அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்து, நிலங்களை எல்லாம் ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டு, கோவில்களுக்கும், மடங்களுக்கும் ஆகக் கூடிய செலவை நாமே கணக்கிட்டு மாதம் ஒரு முறையோ அல்லது வருஷம் ஒரு முறையோ கொடுத்து வருவது பொருத்தமாக இருக்கும். உதாரணமாக, கேரளாவில் கூட உச்ச வரம்புச்சட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்தில் பத்ம நாப சுவாமி கோவில் நிலங்கள் அரசுடைமையாக்கப்பட்டு கோவில் செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு 650 ரூபாயும், ஆண்டு ஒன்றுக்கு திருவிழாச் செலவுகளுக்காக இவ்வளவு தொகை என்றும் கொடுக்கப்படுகிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த முறையில் நாமும் கொண்டுவருவது பொருத்தமானதாக இருக்கும். இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக் கூடாதென்ற முறையில் இப்போதே தஞ்சை ஜில்லாவில் இருந்து நிலப் பிரபுக்கள் தூது கோஷ்டியாக வர ஆரம்பித்து விட்டார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த மெம்பர்களும் எதிர்ப்பது என்று ஆரம்பித்திருக்கிறார்கள். சுதந்திராக் கட்சிக்காரர்கள் எதிர்ப்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் இந்த நாட்டின் தனிநபர் சொத்துடைமையைப் பாதுகாப்பதற்காக இருக்கிறவர்கள். நிலம் பறிபோகிறது என்றால் அவர்களுக்குப் பொறுக்காது. சொத்துடைமை என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமை என்று இருப்பதன் காரணமாக, அதை வைத்துக்கொண்டு சொத்துடமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தான், இன்று நாட்டிலே ஒரு கருத்து வளர்ந்து வருகிறது. மனிதனுடைய முன்னேற்றமும், வாழ்வுந்தான் அடிப்படையே தவிர, சொத்துரிமை அடிப்படையல்ல, அப்படிப்பட்ட அடிப்படையான சொத்துரிமை என்ற விதியை அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்தே மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்துக்களும் இன்றைக்கு நாட்டில் வளர்ந்து வருகிறது. அந்த முறையில் உச்ச வரம்புச் சட்டத்தை இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிவதற்குள்ளாகவே கொண்டு வாவேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.



1970 மார்ச் 5] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

அடுத்தபடியாக, வரிகளைப்பற்றி ஒருசில விஷயத்தைக் கூற ஆசைப்படுகிறேன். சாதாரணமாக ஏழை எளிய மக்கள் உபயோகிக்கக்கூடிய மின்சாரத்திற்கு சமீபத்தில் சர்க்கார் மின்சாரக் கட்டணத்தை 8¼ பைசாவில் இருந்து 10 பைசாவாக உயர்த்தியிருக்கிறது. அதை மூன்று ஏக்கருக்குக் குறைவாக இருப்பவர்களுக்கு இந்த மின்சாரக் கட்டண உயர்விலிருந்து விதிவிலக்குக் கொடுக்கலாம். இது பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும். மேலும், நிலவரிக்கு சர்சார்ஜ் 30 பைசா, 40 பைசா என்று இருந்தது இன்று ஒரு ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. தண்ணீர்த் தீர்வை, நிலத் தீர்வை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் 10 ரூபாய் இருந்தால் இந்த செஸ் 10 ரூபாய் என்று சேர்ந்து மொத்தம் 20 ரூபாய் ஆகிறது. இம்மாதிரி ஒரு ஏக்கருக்கு 40, 45 ரூபாய் கூட கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட செஸ் நிதியைக் கூட மூன்று ஏக்கருக்குக் குறைவாக இருப்பவர்களுக்கு விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, புஞ்சை நிலத்திற்கு வரியை ஏற்கனவே ரத்து செய்திருக்கிறீர்கள். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கு மட்டும் அந்த வரியை ரத்து செய்தால் போதும். இப்போது ஆயிரம் ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள் ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம் அடைகிறார்கள். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் வரி இல்லாமல் இருப்பது போதுமானது. மேலும், இரண்டு போகம் விளையக் கூடிய நஞ்சை நிலமாக இருந்தால் ஒரு ஏக்கருக்கும், ஒரு போகம் விளையக் கூடிய நஞ்சை நிலமாக இருந்தால் இரண்டு ஏக்கருக்கும் நஞ்சை வரியையும் ரத்து செய்ய வேண்டும், புஞ்சை வரியை நீக்கியது போல்.

அடுத்து, மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கு 10 ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றாலும், மற்ற மாநிலங்களை விட, பீகார், ஆந்திரம், கேரளம், பெங்கால், போன்ற மாநிலங்களில் கொடுப்பதை விட தமிழ் நாட்டில் அவர்களுடைய சம்பளம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. அந்த வகையில் இடைக்கால நிவாரணமாக 30 ரூபாய் கொடுப்பது என்பது பொருத்தமாக இருக்கும். மேலும், 1965-ம் ஆண்டிலேயே இரண்டாவது சம்பளக் கமிஷன் நியமித்திருக்க வேண்டும்; ஆனால் 1969-ல்தான் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய தீர்ப்பு வெளிவர பல வருஷம் ஆகாமல் உடனடியாகத் தீர்ப்பு வெளிவர வேண்டும். அந்தத் தீர்ப்பு வெளிவரும் வரையில் குறைந்த சம்பளமாக இருப்பதன் காரணமாக புனர் பரிசீலனை செய்து மசோதா வரக்கூடிய காலத்தில் இடைக்கால நிவாரணத்தை 10 ரூபாயில் இருந்து அதிகப்படுத்த முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. மூ. மாரிமுத்து] [1970 மார்ச் 5

யைப் பெருக்கவும் இத் திட்டங்களை எடுத்துச் செய்ய அரசு முற்பட்டமைக்கு என் தொகுதி மக்களின் சார்பாக இந்த அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1966-ம் வருடம் வரை என் தொகுதியில் 25 கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு இல்லாமல் இருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் 15 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பட்டது). ஏழு கிராமங்கள் தெரு விளக்குகள் பெற்று விட்டன. மின்சார விஸ்தரிப்பு வேலையைத் துரிதப்படுத்த மூன்று பிரிவு அதிகாரிகள் அலுவலகங்கள் திறக்க அனுமதி செய்யப்பட்டு அவை நல்ல முறையில் வேலை செய்து வருகின்றன. மேற்கொண்டும் ஒரு வருவாய்ப் பிரிவு தம்மம்பட்டியில் நிறுவ அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மீதமுள்ள பத்து கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுப்பதற்கான திட்டத்தையும் அரசு மேற்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, மருத்துவ வசதியில்லாமல் சுமார் 15 மைல் தொலைவில் உள்ள ஆத்தூர் மருத்துவ மனைக்குச் சென்று என் தொகுதி மக்கள் சிகிச்சை பெற்று வந்தார்கள். அக்குறையைப் போக்கத் தலைவாசலில் ஒரு ஆரம்பசுகாதார நிலையம் அனுமதிக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்குச் சிகிச்சை அளித்து வரப்படுகிறது. அதேபோல், இதுவரை ஒன்றியத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் தம்மம்பட்டி மருத்துவ மனையை அரசே எடுத்து நடத்த நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியம் பராமரித்து வந்த தலைவாசல்-ஆறகழூர் சாலையை அரசே எடுத்து செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடம் அந்தச் சாலையை தார் ரோடாக ஆக்க நெடுஞ்சாலை துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதுகுறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அதேபோல் கல்வர்ட்டுகளும், சிறு பாலங்களும் அமைக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

(மணியடிக்கப்பட்டு திரு. துரைபாண்டியன் அவர்கள் அழைக்கப்பட்டார்.)

**திரு. என் துரைபாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, 70-71-ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். உண்மையிலேயே இந்தத் தமிழக அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் மக்கள் மத்தியிலே, 67-ஆம் வருஷத்துப் பொதுத் தேர்தலில் அவர்கள் சொல்லிவந்த வார்த்தைகள் எதையாகிலும் நிறைவேற்றியிருக்கிறார்களா என்பதைத்தான் பொதுமக்கள் சிந்தனை செய்து, அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆளுங்கட்சியிலுள்ளவர்களும் அறிவார்கள், எதிர்க் கட்சியிலே இருப்பவர்களும் அறிவார்கள்.



1970 மார்ச் 5] [திரு. என். துரைபாண்டியன்]

உண்மையாகவே, இன்று ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் பேசும வார்த்தையிலே கூட அவர்கள் வரிகள் போட்டிருக்கிறோம், முன்னால் நாங்கள் வரியைக் குறைப்போம் என்றும் வசதியைப் பெருக்குவோம் என்றும் மக்கள் மத்தியிலே வார்த்தைகளைச் சொல்லி, அந்தப் பசப்பு வார்த்தைகளின் மூலமாக நாங்கள் இந்த ஆட்சிக்கு வந்தோம் என்பதை அவர்களும் கூட ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இன்று அவர்கள் என்ன சொல்கிறார்கள், நாங்கள் புதிதாக வரி போடவில்லை, பணக்காரர்கள் வாங்கி உபயோகிக்கும் சமான்களுக்கான வரியைத்தான் உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்லி வரி போட்டுத்தான் இங்கு கிட்டத்தட்ட 3 வருஷத்திற்குள்ளாக தமிழகத்திற்கு 100 கோடி வருமானம் அதிகமாக வரக்கூடிய அளவிலே வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறோம் என்று சட்டசபையிலே பேசுகிறார்கள். அது உண்மை. ஆனால் உண்மையாகவே இன்று அந்த சாமான்களுக்கு வரி போட்டிருக்கிறதா? அது இன்றையை வாழ்க்கைத்தரத்தில், மனிதர்கள் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் காலத்தில், அந்தப் பொருள்கள் அத்தியாவசியமான பொருள்களா இல்லையா என்பதை ஆளுங்கட்சியிலே உள்ள அமைச்சர்கள் முடிவு செய்யவேண்டும். என்.ஜீ.ஓ.—க்களுக்கு நாங்கள் 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்துவிட்டோம், உபாத்தியாயர்களுக்கு 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்துவிட்டோம், அரசாங்க ஊழியர்கள் அத்தனை பேர்களுக்கும் மாதம் 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்துவிட்டோம், ஆகையினால் வாழ்க்கைத்தரம் முன்னேறிவிட்டது என்று பெருமைப்பட்டுக்கொண்டிருக்கும் உங்களைப்பார்த்துக் கேட்கிறேன், இன்று 'ரிஸ்ட் வாச்' வாங்காத ஆட்கள் இருக்கிறார்களா? அல்லது கிராமங்களில் மின்சாரத்தை அதிகமாக விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லிப் பெருமைப்படுகிறோம், அதைத் தமிழக அரசுதான் இந்தியாவிலேயே நல்லமுறையிலே செய்திருக்கிறது என்பதை அன்றும் மறுக்க முடியாது, இன்றும் மறுக்க முடியாது. ஆனால் அந்தக்கிராமத்திலுள்ள மக்கள், என்.ஜீ.ஓ.க்கள், உபாத்தியாயர்கள், சாதாரண விவசாயிகள் எல்லாம் மின்சாரம் இல்லாமல் இன்று அவர்கள் எதையாவது செய்ய முடியுமா என்பதை நீங்கள் நன்றாக உணரவேண்டும்.

இன்று வறட்சியின் காரணமாக, இந்த மாநிலத்தில் உணவை ஓரளவுக்குக் கட்டுப்படுத்திக்கொண்டு, தங்களுக்கு நிறைவேற்றக் கூடிய அளவிலே, இந்த நாட்டிலே உற்பத்தியாகிறது என்று சொல்லக்கூடிய அளவிலே செய்திருக்கும் அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் செய்திருக்கும் உணவு உற்பத்தி பம்பு செட்டுகள் மூலமாக உணவு உற்பத்தியானது என்பதை நீங்களும் மறுக்க முடியாது, நாங்களும் மறுக்க முடியாது ஆனால் அந்த விவசாயி வாங்கக் கூடிய மோட்டாரிலே வரி, பம்பு செட்டு வைப்பதற்காக ரூம் கட்ட வேண்டுமென்றால், அவன் ஊரிலே நன்றாக வாழ வேண்டுமென்றால், மழையிலே கரைந்து போகாமல் இருப்பதற்காக சுவர் கட்ட வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய அந்த சிமெண்டிலே வரி. அவர்கள் வீட்டிலேயிருக்கக்கூடிய குழந்தைகளின் தண் கெட்டுப்

போகாமல் இருப்பதற்காக பல்பு வாங்க வேண்டுமென்றால் அதிலேயும் வரி. குறிப்பிட்ட நேரத்திலே வேலைக்குப் போக வேண்டுமென்பதற்காக 'ரிஸ்ட் வாச்' வாங்க வேண்டுமென்றால் அதிலும் வரி. இதையெல்லாம் ஆடம்பரப்பொருள்கள் என்றால் தங்களுடைய கருத்து என்னவென்பதைத்தான் நாங்கள் உங்களை கேட்க விரும்புகிறோம். ஆகவே, இன்றையதினம், நாட்டை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறீர்கள் என்பதைப் பொதுமக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள், முன்பு போக்குவரத்து துறை அமைச்சராகவும் இருந்த திரு. ஆதித்தனார் அவர்கள், எங்கள் மாவட்டத்திலே பெரிய மில் அதிபர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சொல்லக் கூடியது, அவர்களுக்கு ஒரு கார்கூட இல்லை என்று விளம்பரப் படுத்தப் பட்டால் இந்த ஊர் மக்களை ஏமாற்றுகிறார்களா இல்லையா என்பதைத்தான் நீங்கள் சிந்திக்க வேண்டும். ஆகவே.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** தனிப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டு இருக்கக்கூடாது.

**திரு. என். துரைபாண்டியன் :** இது குற்றச்சாட்டு அல்ல. இந்த அளவுக்கு மக்கள் கண்விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகேவ, டெபுடி ஸ்பீக்கர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். எல்லோரும் கார் வாங்க ஆசைப்படுகிறார்கள், நமது மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்களுக்குக் கார் இல்லை என்றால் நமக்குக் கேவலமாக இருக்கிறது. ஆகவே, டெபுடி ஸ்பீக்கர் அவர்கள் தலைமையிலே ஒரு பிச்சைக்காரர்கள் மாநாடு போட்டு, பைசா வசூல் செய்து, அவர்களுக்குக் கார் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** பேரவைத் தலைவரைக் குறிப்பிட்டுப் பேசுவது முறையல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவரா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** யார் தலைமை வகிக்கிறார்களோ அவர்களைச் சொல்லுகிறேன். துணைத்தலைவராகயிருந்தாலும் தலைமை வகிக்கின்ற காரணத்தால் சொல்லுகிறேன்.

**திரு. என். துரைபாண்டியன் :** அடுத்தபடியாக, பள்ளிக்கூடத்திலே படிக்கும்பொழுது* * ஒரு ராஜா கதையைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் கதை என்னவென்றால், ராஜாவுக்குத் துணி நெய்யவேண்டுமென்று இரண்டு பேர் வருகிறார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், நாங்கள் நெய்யும் துணியை நுண்ணிய அறிவுள்ளவர்கள்தான் கண்ணால் பார்க்க முடியும், எல்லோருடைய கண்களுக்கும் தெரியாது என்று சொன்னார்கள். அப்பொழுது ஒருவர் எனக்கு [illegible]து தெரிகிறது என்று சொன்னார். உடனே ராஜா, நீதான் இங்[illegible] ஏற்ற மந்திரி என்று சொல்லி மந்திரியாக வைத்துக் கொள்கிறார். பிறகு துணியை நெய்கக போல்



நெய்கிறார்கள். ஒரு சில நாட்களுக்குப் பிறகு ராஜாவிற்கு அலங்காரம் செய்து, இதை உடுத்தச் செய்து உல்லாசமாக அழைத்துக் கொண்டு வருகிறார்கள், ஊர்வலமாக அழைத்துக்கொண்டு வருகிறார்கள். எல்லோரும், தாங்கள் அறிவுள்ளவர்கள் என்று காட்டிக் கொள்வதற்காக, நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் ஒரு சிறு குழந்தை மாத்திரம், * * என்று சொல்லிற்று. உடனே எல்லோருமே ராஜா * * வருகிறார் என்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** சபையிலே பேசுவதற்குச் சில வார்த்தைகள் இருக்கின்றன.

**திரு. என். துரைபாண்டியன் :** படித்த புத்தகம் வேண்டும் என்றால் அதை நிர்வாணம் என்று திருத்திக் கொள்ளுங்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, சபையினுடைய பெருமையைப்பற்றி உறுப்பினர்களாகிய நாமெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சபையில் மிகவும் அருவருக்கத்தக்க வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது என்ற மரபும் இருந்து கொண்டிருக்கிறது. என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. துரைபாண்டியன் அவர்கள் சொன்ன அந்த வாசகத்தை சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டால் நல்லது. அதற்குத் தங்களுடைய தீர்ப்பை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தனிப்பட்ட அந்த வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. என். துரைபாண்டியன் :** 'நிர்வாணம்' என்று வேண்டுமானால் போட்டுவிடுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவரவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் அவர்கள் பேசும்போது சொன்ன கதை King Solomon and clother என்ற அந்தக் கதை. அவர்கள் சொல்லுகின்ற நிலை என்னவென்றால், லஞ்சம் வாங்குபவர்களுக்குத் தெரியாது, யோக்கியர்களுக்குத்தான் தெரியும் என்ற கருத்துப்படச் சொல்லப்பட்டது. எல்லோரும் பார்த்துவிட்டு, நன்றாகயிருக்கிறது என்று, எல்லோரும் யோக்கியர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே சொன்னார்கள். ஆனால் கடைசியிலே ஒருவர் பார்த்துவிட்டு, துணியே இல்லையே என்று சொல்ல அதற்குப் பிறகு எல்லோரும், துணியே இல்லை என்று சொன்னார்கள். அதுமாதிரி ஏமாற்றக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டது.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** கதையைச் சொல்லக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. கதை சொல்லும் நேரத்தில், உபயோகிக்கும் வார்த்தைகள் கொஞ்சம் நாகரிகமாக இருக்க வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டதே தவிர, கதை சொல்லக் கூடாது என்றோ, கதை சொன்னால் தவறு என்றோ சொல்லவில்லை. அதில் தவறாக வார்த்தைகளைப் பேசினார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. என். துரைபாண்டியன்:** அதேமாதிரி இன்று 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று போட்டிருப்பதை நாங்கள் பாராட்டவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் தங்கள் தங்கள் மனத்திலே நினைத்துப்பார்க்க வேண்டும். உண்மையாகவே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவில் மொத்த வருமானம் என்ன வருகிறது? நல்ல நிலத்திலே வருஷம் ஒன்றுக்கு 300 கோட்டை நெல் வரலாம். உழுது, பயிரிட்டு, உணவு உற்பத்தியெல்லாம் செய்தபின் ஒரு மூட்டை நெல்லுக்கு 10 ரூபாய் என்றால் மொத்த வருமானம் வருஷம் ஒன்றுக்கு 3000 ரூபாய் வரும். இந்த 3000 ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு விவசாயியின் தலையில் மட்டும் ஏன் கை வைக்கிறீர்கள்? ஒரே கட்டடத்தில் உட்கார்ந்து வருஷம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான வருமானத்தை அடைகிறார்களே, அந்தக் கட்டிடத்தில் நீங்கள் ஏன் கை வைக்கவில்லை என்று கேட்கிறேன். இந்த நாடு கடைசியாக பிறந்த இடத்திற்கே திரும்பப் போகும் நிலையிலே இந்தச் சட்டம் உருவாக்கப்படுகிறதா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். கிராம மக்களுக்கு, விவசாய மக்களுக்கு 15 ஏக்கர் வருமானத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அதேபோல் மாதம் 2,000 ரூபாய்க்குமேல் சம்பளத்தை உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று கொடுக்கப் பட்டிருக்கிறதா? பல கட்டிடங்களை வைத்துக் கொண்டு சென்னையிலே சிறப்பாக வாழ்க்கை நடத்துகிறார்களே அவர்களை நாம் கேட்கக் கூடாதா? இந்த ஆட்சி நல்லாட்சியாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? காங்கிரஸ்காரர்கள் காலத்தில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று ஆக்கினார்கள், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் பட்டணத்தில் இருக்கும் பங்களாவாசிகளுக்கு உச்ச வரம்பு நிர்ணயித்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டுமே.

**திரு. ஆ. துரையரசன் :** உச்சவரம்பு சரியல்ல என்ற கருத்தை அறிவிக்கிறார்களா? அவர்களுடைய கட்சி என்ன சொல்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. என். துரைபாண்டியன் :** சரியென்று சொல்லவில்லை. சரியாக இருக்கிறது என்று சொன்னால், இந்த பங்களாவாசிகளைப் பார்த்து நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? பட்டணத்திலே ஆளும் கட்சித் தலைவர்கள் இருப்பதனாலே, பட்டணத்திலே ஏன் உச்ச





வரம்பு வரவில்லை என்று கேட்கிறேன். பட்டணத்திலே தனக்குக் கார், மனைவிக்குக் கார், மக்களுக்குக் கார், அதிலும் ஒவ்வொரு வருக்கும் ஒரு லட்சம் பெறுமானமுள்ள குளுகுளு கார், இவைகளை வைத்துக் கொண்டு அனுபவிக்கும்பொழுது, இந்தக் கிராமவாசிகள் தலையில்தான் கை வைக்க வேண்டுமா? அவர்கள் மீது இந்தச் சட்டத்தை இயற்றி சீர்குலையச் செய்கிறது இந்த அரசாங்கம் என்பதை அரசு உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் உள்ள சூழ்நிலையில் மனிதன் பழையபடி தான் பிறந்த இடத்திற்கே வரக்கூடிய நிலைமையில் ஏரோபிளேன் வானத்தில் பறந்து கொண்டிருக்கும்பொழுது, கட்டைவண்டியில் போகவேண்டும், பழையபடி நடந்து தான் செல்லவேண்டும் என்ற முறைக்கு மனிதன் பழங்கால வாழ்கைக்கு, முற்போக்கு சக்திகள் உள்ள காலத்தில், பிற்போக்கில் போகக்கூடிய நிலைமையில் அரசு சட்டத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறது. தாசில்தார் கலெக்டராக வரவேண்டும் என்ற ஆர்வத்துடன் தான் வேலை செய்ய முடியும். உங்களுடைய சம்பளமும் இவ்வளவு தான், உங்களுடைய உயர்வும் இவ்வளவுதான் என்ற நிலைமையில் சட்டத்தை இயற்றிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. சட்டசபை அங்கத்தினர்கள் நன்றாக உழைத்து, வருங்காலத்தில் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தைப் பெற்று அமைச்சராக வேண்டும் என்ற ஆசையோடு கூடத்தான் இருப்பார்கள். இந்த அளவில் நாட்டில் சட்டத்தை உருவாக்கினால், மனிதன் முதலில் தான் பிறந்தபோது எப்படி இருந்தானோ, காட்டுமிராண்டித்தனமான அதே நிலையில் தான் இந்த நாடு போய்விடும். அமைச்சர்கள் இனிமேலாவது எந்தச் சட்டத்தை உருவாக்கினாலும், பல கட்சித் தலைவர்களையும் சேர்த்து அழைத்து, கலந்து பேசி, விஷயங்களைப் புரிந்துகொண்டு, பின்னால் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. எல். கணேசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை அவைமுன் வைக்க ஆசைப்படுகிறேன். ஏழை எளிய நடுத்தர மக்களை மையமாகக் கொண்டு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக, நமது ஆட்சி கொண்டு வந்திருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நில உச்ச வரம்பு திருத்தச் சட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்து, கொண்டுவரவில்லையே என்று வருத்தம் இருந்தாலும், அவர் நமக்கு வகுத்துத் தந்த பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், நமது அமைச்சரவையும் தயாரித்து அளித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நம்மால் பாராட்டாமல்

இருக்க முடியாது. வாழ்விழந்த மக்கள் நில உச்ச வரம்புத் திருத்தச் சட்டத்தை வரவேற்பதையும் வாழ்க்கையின் உச்சாணியில் இருப்பவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றி வசைமாரி பொழிவதையும் நாம் இந்த நேரத்தில் பார்க்க முடிகிறது. தங்களைவிட யாரும் சோசலிச வாதிகளாக இருக்க முடியாது என்று பேசிய காங்கிரஸ்காரர்களுக்கு ஒன்று மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1961-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தில், 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு சட்டம் கொண்டு வந்த நேரத்தில், எதிர்க் கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை வரவேற்றுப் பேசி இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அதில் இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, இன்னும் தீவிரமாக அந்தச் சட்டம் ஆக்கப்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தங்களை சோஷலிச வாதிகள் என்று பேசிக் கொண்டிருக்கிற காங்கிரஸ்காரர்கள், இந்த சிறப்பு மிக்க நில உச்ச வரம்பு திருத்தச் சட்டத்தைப்பற்றி இரண்டு மூன்று நாட்களாக இந்த அவையிலே விவாதிக்கின்ற அருமை எதிர்க்கட்சிக்காரர்கள் யாராவது, பாராட்டிப் பேசியிருக்கிறார்களா என்று துருவித் துருவிப் பார்த்தேன். எனக்குத் தென்படவில்லை. நேற்று முன்தினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்களும், இன்றைக்கு எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைபாண்டியன் அவர்களும் இதை ஒப்புக்குப் பாராட்டிவிட்டு, இதனால் நல்ல பலன் கிடைக்குமா என்பதையும் எடுத்துச் சொல்லியிருப்பது, உள்ளபடியே இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தை அவர்கள் வரவேற்பதாக ஆகாது என்றுதான் நான் கருதுகிறேன் உண்மை சோஷலிச வாதிகள் யார் என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்ந்து கொள்வதற்கு இப்பொழுது நம்முடைய அரசு கொண்டு வர இருக்கிற இந்த உச்ச நிலை வரம்பு திருத்தச் சட்டம் ஒரு எடுத்து காட்டாக அமையும் என்று கருதுகிறேன்.

எதிர்க்கட்சி வரிசையிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டது. நில உச்சவரம்புச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரப்படும் என்று முன்னதாக எடுத்துச் சொல்லவில்லை. இது ஒரு பெரிய மோசடி என்றெல்லாம் இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். 1961-ம் ஆண்டில் நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கபிஸ்தலம் மூப்பனார், வடபாதிமங்கலம் முதலியார், பூண்டி வாண்டையார் போன்றவர்கள், இப்படிச் சட்டம் வருகிறது என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டு, உற்றார், உறவினர், வண்டிக்காரர், கார் ஓட்டுபவர் இவர்கள் பெயரில் தங்களுக்கு இருக்கிற நிலங்களையெல்லாம் பிரித்துக் கொண்டதை இந்த நாட்டு மக்கள் மறந்துவிட்டிருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். வடபாதிமங்கலம் முதலியார் கரும்புச் சாகுபடி செய்கின்ற நிலங்களாகவும், வாண்டையார் கல்லூரியின் பெயராலும்,





நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற்றதை இந்த நாடு நன்றாக அறிந்திருக்கிறது. கடந்த மாதத்தில் நமது முதல் அமைச்சர் அவர்கள் டெல்லி சென்றிருந்தபொழுது நிருபர்கள் அவரைக் கேட்டார்கள். நில உச்ச வரம்பு திருத்தச் சட்டம் கொண்டு வருகிற நோக்கம் இருக்கிறதா என்று கேட்டதற்கு, இப்பொழுது இல்லை என்று ஒன்றிரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லி விட்டார்கள். அவர்கள் அப்பொழுதே 'ஆம்' என்று சொல்லி இருந்தால், நில உச்ச வரம்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லியிருந்தால், நிலைமை என்னவாகி இருக்கும் என்பதை சற்று சிந்திக்க வேண்டும். இப்பொழுதே தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற பெருந்தனக்காரர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டாம்பு பேப்பர் எங்கேயாவது கிடைக்குமா, 26-ம் தேதியன்றாவது நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு நாம் தப்பித்துக் கொள்ள முடியுமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் அப்படிச் சொல்லாமல், திடீரென்று இந்த அவையிலே அமைச்சரவை சமர்ப்பிக்கும் நிதி நிலை அறிக்கையில் நில உச்ச வரம்பு திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்திருக்கிறார். முன்னதாக காங்கிரஸ்காரர்கள் நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்த பொழுது நிலங்களைப் பிரித்துக் கொள்வதற்கு நீண்டகால வாய்ப்பு அளித்துவிட்டார்கள். நாமும் அப்படி முன்கூட்டியே கொண்டுவரப் போவதாக சொல்லி கொண்டு வந்தால், அந்தக் குறைபாட்டையே இந்தச் சட்டத்தைப் பற்றியும் சொல்வார்கள் என்ற காரணத்தினால், முதல் அமைச்சர் அவர்கள் அவருக்கே உரித்தான அரசியல் சாதுரியத்தனத்தில் 'இப்பொழுது இல்லை' என்று சொல்லிவிட்டு, திடீரென்று நில உச்ச வரம்பு திருத்தச் சட்டம் கொண்டுவரப் போவதாக நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இல்லாத வகையில் நம்முடைய மாநிலத்தில் கொண்டுவரப்போகும் சட்டம் புரட்சிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. உத்தரப்பிரதேசத்தில் 30 ஸ்டாண்டர்டு எக்கராவிலிருந்து 40 ஸ்டாண்டர்டு ஏக்கரா வரையில் வைத்துக் கொள்ளலாம். கேரளாவில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவிலிருந்து 36 ஸ்டாண்டர்டு எக்கரா வரையில் வைத்துக் கொள்ளலாம். ராஜஸ்தானில் 22 ஸ்டாண்டர்டு எக்கராவிலிருந்து 36 ஸ்டாண்டர்டு எக்கர் வரையில் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவைகளுக்கு மாறாக நம்முடைய தமிழ் நாட்டில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் மட்டும்தான் வைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு புரட்சிகரமான சட்டம் வர இருக்கிறது. சோஷலிசவாதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் இதை முழு மனதோடு வரவேற்றிருக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், 1961-ல் காங்கிரஸ்காரர்களால் கொண்டு வரப்பட்ட உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் ஏறத்தாழ

3120 ஏக்கர்தான் உபரி நிலம் கிடைத்தது. இப்பொழுது நாம் கொண்டுவரப்போகும் சட்டத்தின் அடிப்படையில் 1½ இலட்சம் ஏக்கரா உபரி நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்த சட்டம் இருந்ததுபோல, நம்முடைய அரசு கொண்டு வரப்போகிற சட்டம் நிச்சயமாக, உறுதியாக இருக்காது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்து, இந்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் தில்லையாடி கிராமத்தில் ரூ. 6½ லட்சம் செலவில், அதை ஒரு மாதிரி கிராமமாக ஆக்கக் கூடிய ஒரு நிலைமையில் அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியினராக நாங்கள் இருந்த நேரத்தில் தமிழ் நாட்டு மக்களுக்கு தில்லையாடி வெள்ளியம்மையை நினைவுபடுத்திய பெருமை கலைஞர் அவர்களைச் சாரும். உத்தமர் காந்தியடிகளின் நூற்றாண்டு விழா நடக்கும் இந்த நேரத்தில், காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபொழுது அவருடைய சத்தியாகிரஹத்திற்கு உறுதுணையாக இருந்த வெள்ளியம்மை, நாராயணசுவாமி, நாகப்பன் போன்றவர்கள் ஆற்றிய பல சிறப்புப் பணிகளைப் போற்றும் வகையில், பல நற் பணிகளை தில்லையாடி கிராமத்தில் மேற்கொள்ள இருப்பது மிகவும் வரவேற்கக் கூடியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க பூம்புகாரில் ஏறத்தாழ ரூ. 3 லட்சம் செலவில் சிலப்பதிகார கலைக்கூடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. ஒரு சுற்றுலா மாளிகை நிறுவுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே வழிவகை செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அப்படி அமைக்கப்பட இருக்கும் சுற்றுலா மாளிகைக்கு கற்புக்கரசி கண்ணகியின் பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தனியார் துறை ஆசிரியர்களுக்குப் பல சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. என்.ஜி.ஓக்களுக்கு, அரசுப் பணியாளர்களுக்கு இடைக்கால சிறப்புப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது, கிராம உத்தியோகஸ்தார்களுக்கும் சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் பாராட்டி, வரவேற்று, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் அமைச்சர் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ரா. கனகசபை: துணைத் தலைவர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தின் மீது ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும் பேசினார்கள். வரவு செலவுத் திட்டத்தை எந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டும்? இந்தக் காலத்தில், எந்த அரசாங்கமாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வசதிகள்





செய்து கொடுத்து, மக்கள் அன்பைப் பெறாமல் இருந்தால், அரசாங்கத்தில், பதவியில் இருக்க முடியாது. ஆக, அந்த நோக்கத்தோடு, வரவு செலவுத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா என்று ஆராய வேண்டும். ஏதோ வரி போடுகிறார்கள், சொன்னதையெல்லாம் மீறிச் செய்கிறார்கள் என்று குறை கூறிக் கொண்டே போவது, இந்த அரசாங்கத்திற்கு நாம் சொல்லும் நல்ல யோசனையாக இருக்காது. ஒரு உபயோககரமான யோசனையாக constructive suggestion ஆக இருக்க வேண்டும். இல்லையென்றால் நன்மை ஒன்றும் இல்லை. ஏனென்றால் பொதுவாக நாடு முன்னேறிக் கொண்டே போகிறது. மக்களுடைய அபிலாஷைகள், தேவைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்றால், சமீபத்தில் செஸ்டர் பௌல்ஸ் எழுதி இருந்தார்கள். அதிலே பார்க்கிறோம், There is progress but the progress is arithmetical whereas the demand is geometrical என்கிறார்கள். அம்மாதிரி, மக்களுடைய தேவைகளும், விருப்பங்களும் அதிகரித்துக் கொண்டு போகும்போது, அவர்களுக்குச் செய்ய வேண்டியவைகளை, எப்படி எப்படிச் செய்கின்றோம், அது இந்தத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்ற முறையில் நாம் பார்க்க வேண்டும். ஏனென்றால் வரி போடுவது, வரி போடுவது என்றால், வளரும் பொருளாதாரத்தில் வரிகள் அதிகமாகிக்கொண்டேதான் போகும். சேமநல சர்க்கார் என்று சொல்லி கொண்டு வரியே போடாமல் உலகத்தில் எந்தச் சர்க்காரும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. சென்ற வருஷத்தைவிட, இந்த வருஷம் குறைத்து வரியைப் போடுவதை நாம் எங்குமே பார்த்தேயில்லை. ஆகவே, வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும் போது, அது ஒரு குடும்பத்திற்குப் போல்தான் ஒரு அரசாங்கத்திற்கும். ஆனால், குடும்பத்திற்குப் போல் அரசாங்கத்திற்குப் போடுவதில்லை. அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது. காரணம் என்னவென்றால் நார்த்கோட் பார்கின்சன் சொல்வது போல், ஒரு குடும்பத்திற்கு வரவு திட்டம் போடும்போது, பணம் எவ்வளவு வருகிறதோ, அதைக் கொண்டு செலவுக்கு ஏற்பாடுகள் செய்கிறோம். ஆனால், அரசாங்கத் திட்டத்தில், மக்களுடைய தேவைகளைப் பொறுத்து அவர்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அவைகளுக்கு எவ்வளவு செலவாகும் என்று அந்த அளவிற்கு வருவாயை பெருக்குகிறார்கள். அம்மாதிரி திட்டமிடும் போது, என்ன செய்ய வேண்டும் என்றால், வரி உயர்ந்து கொண்டேதான் போகும். ஆனால் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்றால், தாழ்த்தப்பட்ட மக்களை அந்த வரிகள் பாதிக்காமல், செலுத்தக் கூடியவர்கள் கொடுக்க வேண்டும் என்ற முறையில் பார்த்துக் கொள்ளவேண்டும். அந்த முறையில் எவ்வளவு அதிகரிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி ஏற்பாடு செய்யும்போது, சில பொருள்கள் மீது வரி விதித்திருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, இவையெல்லாம் சாதாரண மக்களை, பொது

மக்களை கூடியவரையில் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அவர்களிடம் இவை போகாமல் என்ன செய்ய வேண்டுமோ அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது இந்திய சர்க்கார் அதிகமாக வரிகள் போட்டிருக்கிறார்கள். நான் முதலிலே ரேடியோவிலே கேட்கும்போது, என்ன இவ்வளவு வரிகள் போடுகிறார்களே என்று நினைத்தேன். பாம் போடுவதுபோல் இருந்தது. பிறகு நன்றாகத் தெரிந்தது. இப்பொழுது இருக்கின்ற பத்திரிகைகளெல்லாம், உங்களுக்கெல்லாம் தெரியும் மத்திய சர்க்காருக்கு அதிகமாக எதிர்ப்புத் தெரிவிக்கும் பத்திரிகைகள். 'இந்து', 'எக்ஸ்பிரஸ்', 'எகனமிக் டைம்ஸ்', 'டைம்ஸ் ஆப் இந்தியா', போன்று யாரை எடுத்துக் கொண்டாலும் இந்திரா காந்திபோல் ஒரு பெரிய பொருளாதார நிபுணரே கிடையாது என்று எழுதி விட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கத்திற்கு நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இந்த அரசாங்கத்தின் வரிக் கொள்கையினால், 'இன்வெஸ்ட்மெண்ட் க்ளைமேட்' என்று சொல்லுகிறார்களே, அது அதிகமாக விருத்தியாகும் வகையில்—நான் பொருளாதார நிபுணன் இல்லை, எனக்கு தெரியாது அதிகமாக—செய்து, தொழிற்சாலைகளை ஏற்படுத்திக்கொண்டு போனால், இப்பொழுது உறுப்பினர்கள் குறிப்பிடும் வேலையில்லாத் திண்டாட்டம் தீருவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். இதை தொழில் அமைச்சர் கவனித்து, இதில் அக்கறை காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எல்லோரும் காங்கிரசிலே ரொம்ப நாளாக 'டெமாக்ரடிக் சோஷலிசம்' என்று பேசுகிறோம். பேசுகிறதில், டெமாக்ரசி எந்த அளவில் உலகத்தில் கருத்து பரவுகிறது? சோஷலிசம் எந்த அளவில் கருதப்படுகிறது? அமெரிக்காவில் கூட அந்த நாட்டை பொருளாதார நிபுணர்கள் சோஷலிஸ்ட் கண்ட்ரி என்றுதான் சொல்லுகிறார்கள்; காபிடலிஸ்ட் கண்ட்ரி என்று அவர்களும் சொல்லுவது இல்லை. அதே மாதிரி எல்லோரும் இப்பொழுது மாநில சுயாட்சி பற்றி அதிகமாக, முதல் அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்கள். எல்லோரும் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். திருவாளர்கள் லட்சுமணசுவாமி முதலியார், ராஜமன்னார், சந்திரா ரெட்டி இவர்களை வைத்து ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால், இந்தக் குழுவிடத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை; தனிப்பட்ட முறையில் யாரைப் பற்றியும் சொல்லவில்லை, ஆனால் மக்களுடைய நோக்கம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, அரசியல் சட்டத்தையே திருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். 20 ஆண்டு காலம் இப்பொழுது இருக்கும் அரசியல் சட்டத்



தின் கீழ் இயங்கி வந்திருக்கிறோம். நான்கூட அப்பொழுது பிற்பாதியில் கலந்து கொண்டேன். அப்பொழுது இருந்தது ஒரே ஒரு கட்சிதான், மத்தியில். மாநிலங்களிலும் ஒரே கட்சிதான் இருக்கும் என்ற நோக்கத்தில் தீட்டியிருக்கலாம். நாம் கேட்க வேண்டியது என்னவென்றால், புது கான்ஸ்டிடுவெண்ட் அசெம்ளி வேண்டும் என்பதுதான். நார்த்கோட் பார்க்கின்சன் எழுதியிருக்கிறார்கள். இங்கிலண்ட் சிறிய தேசம்தான். ஆனாலும், வேல்ஸ், ஸ்காட்லாண்ட் இதைத் தனி மாநிலங்களாக இயங்க சுயாட்சி வேண்டும் என்று கேட்கும்போது, மற்றவை பற்றி நாம் சிந்தனை செய்தாக வேண்டும். அதோடு ராச்சிய சர்க்கார் மக்களிடமிருந்து வரிகளை வசூல் செய்வது, மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்று சொல்வது இதையெல்லாம் விலக்கி, ராச்சிய சர்க்காருக்கே எல்லா அதிகாரமும் என்ற முறையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கிற எண்ணத்தை வலியுறுத்த வேண்டும். அதற்குப் புதிதாக ஒரு கான்ஸ்டிடுவெண்ட் அசெம்பிளி ஏற்பாடு செய்ய வேண்டும். என்று கேட்க வேண்டும். பின்னால் நிபுணர்கள் யோசனை சொல்லலாம். எப்படி நடக்க வேண்டும் என்பதையெல்லாம் அவர்கள் சொல்லலாம். (குறுக்கீடு) பெரியவர்கள் மூவர்கள், மக்களோடு தொடர்பு இல்லாதவர்கள். அவர்கள் அபிலாஷைகளைத் தெரியாதவர்கள். அம்மாதிரியான முறையில் ராச்சிய சர்க்கார் அமைய வேண்டும். அமெரிக்கன் பெடரேஷன் போல் மாற்றியிருக்கிறது. கான்ஸ்டிடுவெண்ட் அசெம்பிளியில், அமெரிக்கன் கான்ஸ்டிட்யூஷன், ஸ்விஸ் கான்ஸ்ட்டிட்யூஷன், ஆஸ்ட்ரேலியன் கான்ஸ்ட்டிட்யூஷன், இன்னும் பிரிட்டிஷ் கான்ஸ்ட்டிட்யூஷன் இந்த நான்கு பற்றி கருத்துக்கு அனுப்பினார்கள். எல்லோரும் பதில் அனுப்பினார்கள். அதிலிருந்து ஒரு அகப்பை இதிலிருந்து ஒரு அகப்பை, இன்னொன்றிலிருந்து ஒரு அகப்பை என்று இப்படி அப்படிப் போட்டு ஒரு கான்ஸ்ட்டிட்யூஷனை எந்த அளவில் பண்ண முடியுமோ அப்படிச் செய்தார்கள். இப்போது அது பலவிதத்தில் கஷ்டமாக இருக்கிறது. பார்லிமெண்ட் சுப்ரீம் இல்லை. அசெம்ளி சுப்ரீம் இல்லை என்றெல்லாம் வருகிறது. இதையெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் இப்பொழுது செய்ய முடியாது. பல இடையூறுகள் இருக்கின்றன. 20 வருஷ அனுபவத்தில், அதிலும் இப்பொழுது மத்திய சர்க்காரில் ஒரு கட்சி, மாநிலங்களில் வேறு கட்சிகள் என்று இருக்கும் நிலைகள் நினைத்துப் பார்க்கப்படவேயில்லை. ஆகவே, ஒரு புது கான்ஸ்டிடுவெண்ட் அசெம்பிளி வேண்டும். இப்பொழுது மக்களுடைய நோக்கம் என்ன, அவர்களுடைய கருத்துக்கள் என்ன என்று தெரிந்து கொண்டு, அவற்றை நிறைவேற்றத் தக்க வகையில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த அரசு அதுபற்றி வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்கம் எதற்கும், ஏதாவது ஒரு காரியம் என்றால், அதற்கு உடனே ஒரு குழு அமைத்து விடுகிறார்கள். பார்கின்சன் சொல்லியிருப்பது போல், 'லா ஆப் டிலே' என்று இருக்குமா? கூட்டுறவு

பற்றி ஒரு கமிட்டி; நம்முடைய அமைச்சர் நண்பர் மாதவன் இருக்கும்போது ஒரு கமிட்டி போட்டார்கள். அதிலும் 'லா ஆப் டிலே' இருக்கிறதா? அது என்ன ஆயிற்று? காரியம் செய்ததா? ஏதாவது சீக்கிரமாக முடிவு எடுத்தால் நலமாக இருக்கும். இரண்டு, டர்மா, இல்லையா, ஏதாவது ஒன்று தெரிந்து விட்டால் நன்மையாக இருக்கும்.

பிற்பட்டவர்களுக்கு ஒரு குழு. அரசாங்கத்திலே இன்றைக்கு உள்ளவர்கள், எதிர்க் கட்சியிலே இருந்திருக்கிறார்கள். ஒரு குழு போடாமலேயே வேண்டியவற்றைச் செய்யலாம். குழு அமைப்பதாலே காரியத்தைச் செய்து விடமுடியும், எல்லாவற்றுக்கும் கமிட்டி அமைப்பது கமிட்டி ரிபோர்ட் சமர்ப்பிப்பது, ரிப்போர்ட் வந்தவுடனே, தேர்தல் காலத்திற்குத் தகுந்தபடி முடிவு எடுப்பது என்பதெல்லாம் நல்லதல்ல. ஆகவே எந்தக் காரியத்திலும் உடனுக்குடன் முடிவு எடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நில உச்சவரம்புபற்றி (லேண்ட் சீலிங்) அதிகமாகப் பேசினார்கள். பொதுவாக, பொருளாதார ரீதியிலே நில உச்சவரம்பு சரியானபடி இருக்குமா, இருக்காதா என்பது சந்தேகத்திற்கிடமான விஷயம். விவசாயி என்பவன் விவசாயத் தொழில் துறை மூலமாக நடத்தினால்தான் சரியாக இருக்கும். அவன் டிராக்டர் வைத்துக்கொள்ள வேண்டும், பெர்டிலைசர் பற்றி நன்றாக தெரிந்திருக்க வேண்டும். மற்ற பூச்சி மருந்துகள் போன்ற நவீன முறைகளைப் பற்றியும் தெரிந்திருக்கவேண்டும். இப்பொழுது காலம் போகிற போக்கைப் பார்த்தால் நிலப் பிரபுக்களைப் பார்த்தால் எல்லோர் மனதிலும் ஓர் அருவருப்பு ஏற்படச் செய்கிறது. நிலத்திற்கு உச்ச வரம்பு வருவதைப் பற்றிக் குறை சொல்லவில்லை. இன்றைக்கு கிராமத்தில் இருக்கிற தொந்தரவுகளைப் பார்த்தால் நிலமே தேவையில்லை. எல்லாவற்றையும் விட்டு விடலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது. உச்சவரம்பு என்று சொல்லக் கூடிய நேரத்தில் ஃபேர் காம்பன் சேஷன் நல்ல முறையில் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹிண்டு ரிலிஜயஸ் எண்டோன்மெண்ட் பற்றி திரு. மகாதேவன் பிள்ளை அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களும், 'சிதம்பரம் நடராஜா, ஸ்ரீரங்கம் ரங்கநாதா' என்றெல்லாம் அன்று அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆஸ்திகர்களின் மனம் புண்படாத வகையில் இந்த அரசு நடந்து கொண்டு வருவதற்காக நான் இதைப் பாராட்டுகிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் கைத்தட்டல்) உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் சடகோபன் என்பவர் பச்சையப்பா டிரஸ்டில் போர்டில் இருப்பவர். அவருக்கு தர்ம கைங்கர்யங்களில் ஈடுபாடு அதிகம். ஏதாவது ஒரு பத்திரிகை அனுப்பினாலும் மறுநாள் செக் கொடுத்து விடுவார். அவர் ஒரு





டவை சிதம்பரம் கோவிலுக்குப் போனார். கோவிலுக்குள் போய் ல்லாவற்றையும் பார்த்து விட்டு வந்தபொழுது அர்ச்சகர் வந்து பூதி கொடுத்தார். அவர் வேண்டாமென்று சொல்லி வந்து விட்டார். வெளியே வந்ததும் இதைப்பற்றி அவரிடம் கேட்டபொழுது னக்குத் தனிப்பட்ட முறையில் நம்பிக்கை இல்லை. ஆனால் நிர்வாகத்தில் இருக்கும்போது இம்மாதிரியான விஷயங்களில் நிர்வாக ாரியங்களிலிருந்து பின்வாங்குவது இல்லை என்று சொன்னார்கள். ான்கூட முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் பயந்தேன். இவர்கள் ஆட்சிக்கு ந்திருக்கிறார்களே, என்ன நடக்குமோ, இவர்கள் அப்படிப் பேசினார்களே என்றெல்லாம் நினைத்தேன். அந்தப் பயம் இப்பொழுது நீங்கிவிட்டது. அவர்கள் நிர்வாகத்தை நல்லபடியாகத்தான் நடத்துகிறார்கள். அரசாங்கப் பொறுப்பு வந்த பிறகு பொறுப்பை உணர்ந்துதான் நடத்துகிறார்கள். ஆகவே, எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் பொறுப்போடுதான் பேச வேண்டும். அப்படிப் பேசுவதுதான் அரசியலுக்கு உகந்ததாக இருக்கும். இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் அந்தப் பக்கம் போகவேண்டி நேரிடலாம். ஆகேவ, எதிர்க் கட்சியைச் சார்ந்தவாகள் பொறுப்போடு பேச வேண்டும். (ஆளும் கட்சித் தரப்பில் கைதட்டல்).

நான் மனச்சாட்சிப்படி நடப்பவன். யார் தப்பு செய்தாலும் தப்பு என்று சொல்ல வேண்டும். நல்லதைச் செய்தால் பாராட்ட வேண்டியிருந்தால் பாராட்டத் தயங்க மாட்டேன். நான் ஆஸ்திகன் என்ற முறையில் எது நல்லது, எது கெட்டது என்பது தெரியும்.

இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் முன்பு வரி போடக் கூடாது என்றோ, வரியைக் குறைக்க வேண்டும் என்றோ சொல்லி இருக்கலாம். வரி போட்டு மக்களுக்கு நன்மை செய்தால் நல்லது தான். ஆடம்பரப் பொருள்களுக்கு வரி என்று சொல்கிறார்கள். ஆடம்பரப் பொருள்கள் என்று சர்க்கார் சொல்லும்போது, எது ஆடம்பரப் பொருள், எது ஆடம்பரப் பொருள் இல்லையென்று வரையறுத்துச் சொல்ல முடியாது. 'சோஷலிசம்' என்று சொல்லப்படுகிற நேரத்தில் எல்லாப் பொருள்களும், எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான். எல்லா வசதிகளும் எல்லாப் பிரிவு மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் சோஷலிசத்தின் தத்துவம் ஆகும். ஆடம்பரப் பொருள்கள் என்று சொல்லக் கூடிய ரெப்ரிஜிரேட்டர், ரேடியோ, கைக்கெடிகாரம், கார் எல்லா பொருள்களும் எல்லோருக்கும் இருக்க வேண்டுமென்று சொல்வது தான் சோஷலிசத்தின் தத்துவமாகும். இந்தப் பொருள்கள் எல்லாம் எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்வதுதான் அரசாங்கத்தின் கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசிகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் ஏறுகிற விலைவாசிக்குத் தகுந்தாற்போல் மக்களுக்கு வாங்கும் சக்தி இருக்கிறதா என்பதை இணைத்துப் பார்க்க வேண்டும். முன்பு 5

ரூபாய் என்று விற்ற பொருள், இப்பொழுது 7 ரூபாய்க்கு விற்கிறதென்றால், அதை வாங்கக்கூடிய சக்தி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். எப்போதும் சாமான்களின் விலை ஒரே மாதிரியாக இருக்காது. இங்கு மட்டுமல்ல, உலகம் பூராவிலும் சாமான்களின் விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. நான் சுமார் மூன்று மாதங்களுக்கு முன் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தபோது, முன்பு 35 ஷில்லிங் கொடுத்து வாங்கிய அதே பொருள் இப்பொழுது 35 பவுனுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே, ஏறுகிற விலைக்குத் தகுந்தாற்போல் மக்களுடைய வாங்கும் சக்தி உயர்ந்து கொண்டு போகிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். விலைவாசியினால் மக்கள் ஏழையாகிக் கொண்டே போகிறார்கள் என்றால் நம்ப முடியாது.

நான் கிராமத்தில் இருக்கிறவன். பத்து வருஷத்திற்கு முன்பு கிராமங்களில் தக்காளிப்பழம், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் போன்ற காய்கறிகள் எல்லாம் பணக்காரர்கள் வீட்டில்தான் இருக்கும். இன்றைக்கு எடுத்துக் கொண்டால் எல்லோர் வீட்டிலும், ஹரிஜன மக்களுடைய வீட்டிலும் அதை வாங்கிச் சாப்பிடுகிறார்கள். முன்பு காலில் செருப்பு போட்டுக் கொண்டால் கூட தப்பு என்று சொல்வார்கள். அது இப்பொழுது கிராமப்புறங்களில் தேவைப் பொருளாகி விட்டது. மக்களுடைய பொருளாதாரம் வளர்ந்து கொண்டுதான் போகிறது.

இந்தப் பட்ஜெட்டிலே 6 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். நண்பர் ராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, 'நிதித் துறையானது வருவாயைக் குறைவாகவும், செலவை அதிகமாகவும் காட்டி பட்ஜெட் போட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். பட்ஜெட் என்றாலே ரெவின்யூவைக் குறைவாகவும், எக்ஸ்பெண்டிச்சரை அதிகமாகவும் காட்டுவதுதான் முறை. வருவாயைக் குறைத்து, செலவை அதிகமாகத்தான் போட்டு வைப்பார்கள். ஆகவே, நிதித் துறை தெரிந்தோ தெரியாமலோ இப்படிப் போட்டுவிட்டது என்று சொல்ல முடியாது என்று கூறி, இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: ஆன் எ பாயிண்ட் ஆப் க்ளாரிபிகேஷன் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அங்கத்தினருக்கு அனுமதி கொடுக்கவில்லை. அங்கத்தினர் அவர்கள் எதற்காக எழுந்து நின்றார்கள்? அங்கத்தினர் அவர்கள் உட்கார வேண்டும்.

**THIRU K. RAMAMOORTHY:** Sir, reference was made about me.........

**MR. DEPUTY SPEAKER:** I have not given the hon. Member permission to speak. The Chair must give permission to speak according to rule 65 of the Assembly Rules.





**திரு. எஸ். ஆறுமுகம்:** சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற விதிமுறைகளில் சபாநாயகர் எழுந்து நிற்கும்போது வேறு யாரும் எழுந்து நிற்கக் கூடாது என்று இருக்கிறது. ந.ப. 12-00

(திரு. க. இராமமூர்த்தி நின்றுகொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பி இருக்கும்போது திரு. இராமமூர்த்தி அவர்கள் தம் இடத்தில் அமரவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி:** சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். 1966-67 பட்ஜெட் போடும்போது வருவாய் இனம் 3 சதவிகிதமாக கணிக்கப்பட்டிருந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டரா?

**திரு. கே. விநாயகம்:** பாயிண்ட் ஆப் எக்ஸ்பிளநேஷன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு நான் அனுமதி வழங்கவில்லை. அடுத்து, திரு. சு. ம. துரைராஜ் அவர்கள் பேசுவார்கள்.

* திரு. சு. ம. துரைராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி நான் என்னுடைய கருத்தைச் சொல்ல முன்வந்துள்ளேன். உண்மையில் இந்த அறிக்கையைப் பார்க்கும்போது இயற்கைக்கும் அறிவுக்கும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஏழை மக்களும், ஏழை விவசாயிகளும், என்.ஜி.ஓ.-க்களும், ஆசிரியர்களும் பாராட்டுகிறார்கள். ஆனால் எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் இதை என்னவோ பாராட்ட மறுக்கிறார்கள். எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பேசும்போது இந்த நிதிநிலை அறிக்கையை ஒரு ஆங்கிலக் கதைக்கு ஒப்பிட்டார்கள்—டான்குக்சாட் கதைக்கு ஒப்பிட்டார்கள். ஆனால் பொதுமக்கள் காங்கிரஸ்காரர்கள்தான் டான் குக்சாட்டாக இருக்கிறார்கள் என்று நல்ல விதத்தில் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அந்த வரிசையிலும் கூட ஒரு நல்ல உள்ளம் பாராட்ட முன் வந்ததைப் பார்த்தேன். பொதுவாக அறநிலையங்கள் சம்பந்தப்பட்டவரை திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல விதத்தில் நடத்தி வருகிறார்கள் என்று நல்ல விதமாகப் பாராட்டினார்கள். அதுதான் நீதியும், நியாயமும்கூட; அதற்காக என் கட்சியின் சார்பில் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சி நண்பர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்த அரசு தவறிவிட்டது என்றார்கள். அந்த நல்லவருக்கு ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் 2 தொழிற்சாலைகள் வைக்க வேண்டும் அதனால் இந்தாண்டும் போ

[திரு. சு. ம. துரைராஜ்] [1970 மார்ச் 5

களுக்கு மேல் வேலை கிடைக்கக் கூடும் என்று சொல்லி அவற்றின் செலவுக்கு 20 கோடி பணத்தைக் கேட்டார்கள். இன்று வரைக்கும் மத்திய அரசாங்கம் தரவில்லை. தனிப்பட்டவர்கள் கேட்கிறார்கள். அதற்கும் மத்திய அரசாங்கம் தரவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனத்தார் 15 கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு தொழிற்சாலை கட்ட அனுமதி கேட்டார்கள். அவர்களுக்கு இந்த மாநில அரசும் உதவியாக இருக்கிறது. இருந்தும் மத்திய அரசாங்கம் அதற்கு வேண்டிய ஒப்புதலைத் தரவில்லை. நான் நம்முடைய அரசாங்கத்தைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி, எப்படியாவது அதைப் பெற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

எனது அருமை நண்பர் இந்த ஆட்சி என்ன செய்தது என்று கேட்டார்கள். உண்மையை நான் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதில்லை. மக்களே எடுத்துச் சொல்லக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வறட்சிப் பணிகள் ஒன்றைமட்டும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய சொந்தச் செல்வாக்கால் மத்திய அரசைத் தட்டிக் கேட்டு வறட்சிப் பணிகளுக்கு மத்திய அரசிடம் இருந்து பணம் பெற்று பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஆடவர், பெண்டிர் உட்பட எட்டுலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். 13,400 சிறு பாசனப் பணிகளாக சிறிய பெரிய ஏரிகளிலும் கால்வாய்களிலும் தூர் அகற்றியிருக்கிறார்கள். 5,500 சாலைப் பணிகள், 683 மண்வளப் பாதுகாப்புப் பணிகள் ஆக இப்படி 40,600 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றால் உண்மையில் பொது மக்கள் இந்த ஆட்சியைப் பாராட்டி வருகிறார்கள். அவர்களைத் திசைமாற்றி விடவேண்டும் என்பதற்காகத்தான் எதிர்க் கட்சியினர் தவறான பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இன்றைய தினம் பொதுமக்கள் அரசியல் விழிப்புப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் எதைச் சொன்னாலும் அவர்கள் நம்ப மாட்டார்கள்.

வேளாண்மையை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் ஆண்ட காலத்தில் உற்பத்தி 57.9 லட்சம் டன்னாக இருந்தது. அதற்கு மாறாக இந்த அரசு பசுமைப் புரட்சி திட்டத்தைச் செயல்படுத்தி, ஐ.ஆர். 8 இன் கீழ் பல ஏக்கராக்களை சாகுபடிக்குக் கொண்டு வந்தது. 1969-70 இல் மொத்த உற்பத்தி 63 லட்சம் டன்னாக உயர்ந்து இருக்கிறது. விவசாயிகளுக்கு நிரம்பக் கடன் தந்து, உரவகைகள் எல்லாம் தந்து உணவு உற்பத்தியைப் பெருக்கி 24 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்கிற அளவுக்கு வந்திருக்கிறது என்றால், இந்த அரசை மக்கள் பாராட்டாது இருக்கமாட்டார்கள்.

வேளாண்மை எந்தவகையில் நடக்கிறது என்பதைப் பார்க்க வந்த அமெரிக்க நாட்டு நல்லவர்கள் — நம்முடைய மாநிலத்தைப் பார்த்து "இந்த ஆட்சி நல்லபல திட்டங்களை நிறைவேற்றுகிறது.



1970 மார்ச் 5] [திரு. கே. என். குமாரசாமி]

போகப் போக தமிழகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்" என்று சொல்லிப்போய் இருக்கிறார்கள் என்பதைப் பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன்.

அடுத்து இந்த நல்லாட்சி என்.ஜி.ஓ.க்கள், ஆசிரியர்கள் இவர்களுடைய நலனுக்காக 10 ரூபாய் கூட்டிக் கொடுத்திருக்கிறது. உண்மையில் நான் நினைக்கிறேன். முன்னாள் அமைச்சர் திரு பக்தவச்சலம் அவர்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்பட்ட போது அந்த நேரத்தில் அந்த நல்லவர் 3 ரூ. 5 ரூ. 10 ரூ. என்று கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்திருந்தால் 6 கோடி செலவு வந்திருக்காது. ஆனால் சோஷலிச அடிப்படைக் கொள்கையைச் செயலாற்றி வருகிற நம் அரசு எல்லோருக்கும் சமமாக 10 ரூபாய் வழங்கியிருக்கிறது. இதை எல்லோருமே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சிகள் தவறாகப் பிரச்சாரம் செய்யலாம். "உங்கள் கோரிக்கைகளில் உள்ள நியாயமான கொள்கையை ஏற்றுக் கொள்கிறேன். தேவையானால் எழுத்து மூலம் எழுதித் தருகிறேன். உங்களுக்குக் கொடுக்கப்படும் பணம் திரும்பவும் எங்கள் கைக்கு வந்துவிடும் என்பது தெரியும். அவகாசம் கொடுங்கள், உங்களுக்கு வேண்டியதைச் செய்கிறோம்" என்பதாக முன்பு அறிஞர் அண்ணா அவர்கள் என்.ஜி.ஓ.க்களுக்கு உறுதி அளித்தார்கள். ஆனால் நமது கலைஞர் அவர்கள் சொல்லவில்லை. செயலிலேயே பத்து ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். தவறான அரசியல் சக்திகள் தங்களை இழுத்துக் கொண்டுபோக கொஞ்சம்விட்டதற்காக வருந்துகிறார்கள்.

64 ஆண்டுகளாக எங்கள் குடும்பத்தில் ஒரு இலவசப் பள்ளி நடந்து வருகிறது. அதில் 25 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் என்னிடம் வந்து நேரில் பாராட்டியிருக்கிறார்கள். "கொஞ்சம் நாங்கள் தவறாகக் கூட நடந்துவிட்டோம். ஆனால் அரசு எங்களுக்குச் செய்திருக்கிற நன்மையை மறக்கமாட்டோம். அதற்காக இப்போது பாராட்டுகிறோம்" என்றார்கள். அந்த நல்லவரை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நேரத்திலே என்னுடைய உயிரைப் பணயம் வைத்தாவது பின் தங்கிய நிலையில் உள்ளவர்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவேன் என்று சொன்னார்கள். அதன்படி அவர்கள் பின்தங்கியவர்களின் நலனுக்காக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி அதற்காக ஒரு தனி அமைச்சர் நியமித்து குழுக்களையெல்லாம் நியமித்து இருக்கிறார்கள். இதை நான் உள்ளபடியே பாராட்டி இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

• திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்பேரிலே சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த தேசத்திலே கிரி அவர்களுடைய தேர்தலுக்குப் பிற்பாடு ஒரு எழுச்சி ஏற்பட்டு இன்றைக்குத்

செய்யவேண்டும். இதேபோன்ற பிரச்சினைதான் நமக்கும் கேரளாவுக்கும் இருக்கிறது. சமுதாயப் பிரச்னையாக இதைக் கருதாமல் அரசியல் பிரச்சினையாகக் கருதி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மைசூர் அரசாங்கம் கூட ஹேமாவதித் திட்டத்தை நடத்தப் போகிறோம் என்றும் தமிழகத்தோடு பேசப்போவதில்லை என்றும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை எப்படித் தீரப்போகிறது. இந்தப் பிரச்சினையை மத்திய அரசாங்கம் சீக்கிரமாக முடிவு செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டு நாம் உட்கார்ந்து கொண்டு இருக்க முடியாது. ஏனென்றால் இது நம்மைப் பாதிக்கின்ற விஷயமாக இருக்கிறது. இயற்கையாக ஊற்றுகின்ற ஆற்று நீரையெல்லாம் கட்டுப்படுத்தி மத்திய அரசாங்கம் . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று காலைப் பத்திரிகையிலே பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கத்திலிருந்து மைசூர் மாநிலத்திற்கு ஹேமாவதி அணைத் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று தாக்கீது போய் இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தாக்கீது வந்திருக்கிறது என்றாலும் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்க போகிறார்கள் என்று தெரியவில்லை. காவிரிக் கழிமுகப் பகுதிகளுக்காக என்று நாம் இப்பொழுது 40 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இருக்கிற போது நமக்குச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே சீக்கிரமாக மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தால்தான் நம்முடைய திட்டங்கள் வெற்றியை அளிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக அரசாங்கம் 4 ஆலைகளை எடுத்து இருக்கிறது. தனியார் துறையிலே சம்பளம் குறைக்கவில்லையே, அரசாங்கம் எடுத்துக் கொண்ட ஆலைகளிலே சம்பளம் குறைந்திருப்பது நியாயமா என்று கேட்கிறார்கள். அரசாங்கம் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏற்கனவே நாங்கள் சொன்னோம். அரசாங்கம் எடுத்துக் கொள்கிற ஆலைகளை லாபகரமாக நடத்திக் காட்டலாம்; கூலியைக் குறைக்கக் கூடாது என்று சொன்னார்கள், ஆனால் இன்றைக்குக் கூலியைக் குறைக்கிறார்கள். அதிலும் பாதிப் பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது, பாதிப் பேர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. எனவே அவர்களுக்குப் பூரணமாகச் சம்பளத்தைக் கொடுத்து லாபகரமாக ஓட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

* **திரு. ரா. ரா. முனுசாமி :** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழக அரசின் 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஓரிரு கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். இன்றையதினம் தமிழக அரசு கொண்டு வந்துள்ள நல்லபல திட்டங்களை எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் பாராட்டிப் பேசினார்களா என்றால் இல்லை; அவர்கள் பாராட்டவும் மாட்டார்கள். அவர்களுடைய பாராட்டைப்



பெற்றுத்தான் நாம் ஆட்சியை நடத்த வேண்டுமென்றால் அது முடியாத நிலை என்பதை நாடு அறியும்; நாட்டு மக்களும் அறிவார்கள். நம்முடைய அரசு எந்த அளவுக்கு நல்ல முறையில் ஆட்சி செய்து வருகிறது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தாலும் கூட, அதை மறைத்துப் பேசுகிறார்கள். அவர்கள் மீண்டும் பதவியைப் பிடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடுதான் குற்றம் சாட்டிப் பேசிக் கொண்டு வருகிறார்கள்.

1968-69-ல் ஏற்பட்ட பஞ்ச நெருக்கடியைத் தமிழக அரசு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ள முதல்வர் அவர்கள் எந்த அளவுக்கு—பஞ்சத்தை விரட்டி அடித்தார்கள் என்பதை நாடு அறியும், நாட்டு மக்கள் அறிவார்கள். இவர்கள் என்னதான் உள்ளேயும், வெளியேயும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து வரும் காரியங்களை மறைத்துப் பேசினாலும், படியரிசித் திட்டம் போன்றவைகளை இழித்தும் பழித்தும் பேசினாலும் நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். தமிழகத்தில் பஞ்ச நிவாரண வேலைகளில் எட்டு லட்சம்பேருக்கு வேலை வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. 13,400 சிறுபாசன ஏரிகள் தூர்வாரப்பட்டிருக்கின்றன. எப்பேர்ப்பட்ட ஏரிகள் எப்பேர்ப்பட்ட கால்வாய்கள் என்பது அவர்களுக்கே தெரியும். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் ஏரிகளைத் தூர்வாரி விட்டு விட்ட பிறகு 20 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நல்ல முறையில் அவை எல்லாம் தூர் வாரப்பட்டு செப்பனிடப்பட்டிருக்கின்றன. இதற்காவது பாராட்டினார்களா என்றால் அதற்கும் பாராட்டவில்லை. 5,500 சாலை வேலைகளும், 683 மண்வளப் பாதுகாப்பு வேலைகளும் நடந்திருக்கின்றன. ஒரே சமயத்தில் 45,500 பணிகள் நடைபெற்றிருக்கின்றன. வடநாட்டுச் சர்க்கார் பணம் தந்தது, அதைக் கொண்டுதானே செய்தீர்கள் என்று சொல்லுகிறார்கள். அது சாதனை இல்லையா? இத்தகைய சாதனைகள் எல்லாம் உள்ளடக்கிய இந்த நிதிநிலை அறிக்கையை நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள்; ஆனால் காங்கிரஸ் நண்பர்கள் பாராட்டிப் பேசினார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

நேற்றையதினம் காங்கிரஸ் நண்பர் ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். தமிழ் நாட்டிற்கு இந்தி வந்தால் இந்த அரசால்தான் வரும் என்று பேசியிருக்கிறார்கள். இது மிகுந்த வேடிக்கையாக இருக்கிறது. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதி தமிழக மெங்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடக்கும்போது வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலையில் நடந்ததை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தியை எதிர்த்து திருவண்ணாமலையில் மாணவர்கள் ஊர்வலம் நடத்துகிறபோது 'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக' என்று கோஷம் போட்டுச் சென்றார்கள். அப்போது காங்கிரஸ்காரர்கள் 'இந்தி வாழ்க, தமிழ் ஒழிக' என்று சொல்லிக் கொண்டு இப்போது உணவு அமைச்ச

[திரு. ரா. ரா. முனுசாமி] [1970 மார்ச் 5

ராக இருப்பவரின் வீட்டு முன்பும், சட்ட மன்ற உறுப்பினர் திரு. எஸ். முருகையன் வீட்டு முன்பாகவும் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இதை நாடும், நாட்டு மக்களும் மறந்திருக்க மாட்டார்கள். காங்கிரஸ் நண்பர்கள் இப்போது இந்தியை எதிர்க்க ஆரம்பித்திருக்கும் நிலையில் அவர்களுடைய கூற்றுக்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இந்த இந்தியை எதிர்த்ததன் காரணமாக மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவோ தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகப் பெரும் தலைவர்களும், தொண்டர்களும் சிறை செய்யப்பட்டு தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியை எதிர்த்து வந்திருக்கும் நிலையில் இந்த அரசால்தான் இந்தி தமிழகத்திற்கு வரப் போகிறது என்று அவர்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் காங்கிரஸ்காரர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடனே இருமொழித் திட்டம் என்று ஆக்கிற்று.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் கூறியதை எல்லாம் நிறைவேற்றிற்று என்று காங்கிரஸ்காரர்கள் கேட்கிறார்கள். நாம் அதை யெல்லாம் எந்த அளவுக்கு நிறைவேற்றி வருகிறோம் என்பதை நாடும், நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். இப்போது எங்கு பார்த்தாலும் நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் ஆட்சிக் காலத்தில் நிலவள வங்கி இருந்ததா என்பது யாருக்கும் தெரியாது. அதெல்லாம் காங்கிரஸ்காரர்கள் கையில் இருந்தது. அப்போது அதனால் ஏழை விவசாயிகளுக்கு லோன் கிடைக்கவில்லை; பெரும் பணக்காரர்கள்தான் அதிலிருந்து பணம் பெற்றுக் கொண்டிருந்தார்கள். எங்களுடைய வட்டத்தில் காங்கிரஸ்காரர் வசம் உள்ள நிலவள வங்கியில் தேர்தல் நடந்தது. அந்த வட்ட மக்களுக்கே தெரியாத அளவுக்குத் தேர்தலை நடத்தி இருக்கிறார்கள். முன்பு 105 நிலவள வங்கிகள் இருந்தது இவ்வளவு சீக்கிரமாக 166 என்ற அளவுக்கு அதிகமாக்கி இப்போது ஏழை விவசாயிகளுக்கு, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு மோட்டார் பம்ப் செட் வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. திண்டிவனத்திலே யாரோ ஒருவரை சீஃப் ப்ரொமோட்டராகப் போட்டுவிட்டதாக திரு. ராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு நாணயச் சங்கத்தில் நாற்பதாயிரம் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டினார்கள். (மணி அடிக்கப்பட்டது) திராவிட முன்னேற்றக் கழக அரசின் நிதிநிலை அறிக்கையிலே பல நல்ல அம்சங்கள் நிறைந்து இருப்பதைப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1970 மார்ச் 5]

* THIRU K. S. KOTHANDARAMIAH: I thank you, Sir, very much for giving me an opportunity to express my views on the budget, presented to this House, for 1970–71 by the Hon. Minister for Finance. This is the third budget that has been presented. A persusal of the budget will clearly indicate that in spite of many handicaps, drawbacks and unadequate financial aid from the Centre, this Government has been able to run the administration of this State prudently and wisely and keep the welfare of all sections of the people in their minds. They have made improvements in many walks of life. They have not forgotten to confer a number of benefits on different sections of the people. For example, generally the case of aided school teachers is forgotten by any Government. But here is a Government that has not forgotten the aided school teacher's needs and other teacher's needs. The question of village officers has also been noted by Government and Rs. 10 as compensatory allowance has been given to all Government servants. We are glad that Government have realised the necessity that a compensatory allowance should be paid to this class of persons.

In spite of all these good things, there is only one worrying item in this Budget and that is, the lowering of the ceiling on land. Only a few days back, the Hon. Chief Minister was kind enough to say that there was no immediate need for lowering the ceiling on land and that D.M.K. Government would not introduce hasty land reforms. The village economy depends upon the stability of the land or security that we give to the land owners. Yesterday I was reading a book on land reforms in the State of Tamil Nadu. It is called 'Economic conditions of South India' published by the University of Madras. With regard to stablity of land, I shall read one sentence from that book which is thought provoking. It says :—

"The economic life of the village community depends largely on land and the land being the primary source of wealth and the full utilisation of this first agent of production depend chiefly on the sense of security which the sense of ownership would give."

So cultivators must have a security over the land. For example, the previous Congress Government decided that 30 standard acres was the limit which an agriculturist can have and improve upon. Now we know that agriculture is not a cheap occupation. It is very costly. The agriculturists reconciled themselves with that ceiling. They spent large sums on land, dug a number of wells, purchased tractors, fertilisers, etc. They had been carrying on all these in spite of handicaps. But now this Government, like a bolt from the blue, quite unexpectedly, had thought it fit to reduce the ceiling from 30 to 15 standard acres. Whether 15 or 20 acres, what is needed is security of land for the agriculturist. In a democracy, Governments will come and go. No Government can think of remaining in power for an indefinite time. For example, if after some years, some other Government comes to power and says that it will lower the land ceiling to 5 or 4 acres, what will be the fate

[Thiru K. S. Kothandaramiah] [1970 மார்ச் 5

பிற் பகல் 12-30 of the agriculturists in rural areas? How can we expect increased food production in rural areas? Suppose you save 2 lakhs of acres and distribute them to all persons and each gets 2 acres. A person who has got only two acres of land will not be able to give any grain for procurement. Then how can the Government procure foodgrains and help the people when there is drought or other calamity? I think this decision is a bit hasty and I am not able to appreciate the wisdom of it. The Hon. Chief Minister said that Government would not be hasty in moving the bill to amend the Land Ceiling Act. I request the Hon. Chief Minister and the Hon. Finance Minister just to give an opportunity to the agriculturists to express their grievances, so that they may also feel that the Government are kind enough to hear their difficulties. After taking their opinion, Government can decide. After all, Government are all powerful and they can do whatever they like.

It is stated in the budget speech that the Government have provided sites to Harijans. It is not enough to give only sites; they require houses also. In my constituency a number of thatched houses of Harijans caught fire last year and a number of children died. I represented this to the Government through the District Development Council and also wrote to the Hon. Minister that the Government could provide at least tiled roofs to the houses of Harijans so that the houses could be free from fire and the inmates could be safe. Gradually they could take up the question of building houses.

With regard to drought conditions, it is unfortunate that the Government even as late as last year have been saying in their brochures and other publications that the drought has been there only since the last two years. I wish to point out that in the Dharmapuri District, especially in parts of Krishnagiri and Hosur and other areas, the drought has been there since the last six years. It has become almost chronic. Even the Government have accepted that 31 taluks in the District are backwarl and suffering from drought. Instead of saying that the drought has been there only for the last two years, many parts have drought for the last six years and so the Government have to provide facilities to these areas.

It is said that the Government have created employment opportunities in villages and they have sanctioned one crore of rupees for this purpose. Out of this one crore they have decided to give 35 to 50 per cent as contribution towards the cost of the works and for the balance they expect local contribution. In areas which are suffering from chronic drought for years and years it is very difficult to realise local contribution and the Government should bear the entire cost or increase their contribution to 75 to 80 per cent.

With regard to Backward and Depressed Classes, the Government have done a lot of service and help. I want to bring to the notice of the Finance Minister and the Chief Minister that



1970 மார்ச் 5] [Thiru K. S. Kothandaramiah]

there is an economically backward class in addition to the socially backward class and the economically backward class have to be pushed up. It is the duty of not only the Government but also of every one in the State to pull them up. In addition to socially forward class, the economically forward class also should be helped in this process to some extent. About that nothing has been mentioned.

About the establishment of a zari unit in Kancheepuram, it is really an appreciable thing that the Government have decided to help the silk weavers there by establishing the unit. In this connection, I wish to bring to the notice of the Hon. Minister that in Hosur Taluk there have been a number of master weavers. Because the Government did not give them any help or encouragement, many of them went to Bangalore. The Goddess of Fortune, who scorned at them when they were here, smiled on them in Bangalore. Some of them have become master weavers and they are doing silk business with United States and in certain other parts of the world. I request the Hon. Minister to give these people in our State some help, so that they may improve their condition.

It is said that the rates of Sales-Tax on luxury goods have been increased. In these days when our ideas of social amenities have advanced, it is very difficult to draw a clean line of distinction between luxuries and necessaries. For example, cement is not a luxury. Even a poor man wants it. On the one hand we are trying to help the poor people to become economically strong and also to improve their social condition, and on the other hand we are levying taxes on cement, electrical goods, motor spirits and typewriters. All people want these goods. Just as the Union Government reconsidered their proposal for levying an enhanced rate for third class railway passengers and dropped it, it is better that this Government also reconsidered the levy and see that some relief is given.

* *திரு. டி. டி. எஸ். திப்பையா :* உதவி சபாநாயகர் அவர்களே, 1970-71ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது படிப்படியாக வருடா வருடம் வரிகள் உயர்த்தப்பட்டு இன்று 288.04 கோடி ரூபாய் அளவிற்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்காக உபயோகிக்கும் மின்சாரத்திற்கு 6% ல் இருந்து 8% க்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் 100, 150 அடி ஆழத்திற்குக் கிணறுகள் வெட்டினாலும் நாளுக்கு நாள் அவற்றை ஆழப்படுத்திக் கொண்டே போகக் கூடிய நிலை இருக்கிறது. அத்துடன் மின்சாரக் கட்டணமும் அதிகமாகிக் கொண்டேபோவதால், விவசாயிகளுக்குப் பெரும்பளுவாக இருக்கிறது. தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாதவண்ணம் ஆங்காங்குள்ள குட்டைகளைச் செப்பனிட்டு தண்ணீர் தேங்கி நிற்க ஏற்பாடு

[திரு. கே. என். குமாரசாமி] [1970 மார்ச் 5

தேசத்தில் சகல மக்களும் ஒரு சில மக்களைத் தவிர எல்லோரும் சோஷலிஸத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிர்பந்தமானது சமுதாயத்திலே ஏற்பட்டுவருகிற காரணத்தினாலே நம்முடைய அரசாங்கமும் இந்த மாநிலத்திலே ஒரு புரட்சிகரமான திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்ற முறையிலே எடுத்துக்கொண்ட முயற்சியினால் சமுதாய மாறுதல் வேண்டுமென்ற அடிப்படையிலே நிலச்சீர்திருத்தம் என்ற பெரிலே இன்றைக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைக்க வேண்டுமென்று அறிவித்து இருக்கிறார்கள். இது வரவேற்க வேண்டிய விஷயம் ஆகும். எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக இருந்த ஒரு சமுதாயம் மக்களுடைய குறைகளைத் தீர்க்க முடியாத காரணத்தினாலே மீண்டும் அதைப் புனராலோசனைசெய்து அப்படிப் பட்ட நிலைமையை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் இப்படிப் பட்ட கொள்கையைத் தேசத்திலே அமலாக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு இன்றைக்கு மாபெரும் மாற்றங்கள் உண்டாக்குகிற நேரத்திலே சில பேர்கள் இதை எதிர்க்கிறார்கள் பூமியைப் பிரித்து பெட்டிக்கடைக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டுப் போவது என்று அவர்கள் எண்ணிக்கொண்டுதான் எதிர்க்கிறார்கள். நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்படுகின்றபொழுது நேரடியாக உழுகின்றவனுக்கு நிலம் கிடைக்கின்ற கொள்கையை மேற்கொள்ளுவதன்மூலம் இந்த நாட்டிலேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும். அதிகப் பரப்புள்ள நிலங்களில் உணவு உற்பத்தித் திட்டங்களைக் கொண்டுவருவதற்கும் சமுதாயத்திலே அதன்காரணமாக வேலை வாய்ப்புகள் அதிகப்படுகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்களே தவிர, ஏதோ இருக்கிறவர்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கி மற்றவர்களுக்கு விநியோகத்து விட்டுப் போவது என்ற அர்த்தமல்ல. இந்தப் பிரச்சினைக்கு எந்த முறையிலே தீர்வு காணலாம் என்ற முறையிலே இப்படித் தீர்வு காணலாம் என்று இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தேசத்திலே மாறுதல் வேண்டும் என்று சொல்கிறபொழுது அதைச் சிலபேர்கள் சில காரணங்களுக்காக எதிர்ப்பதாகச் சொல்கிறார்கள். பஸ்களை தேசிய மயமாக்கிய காரணத்தால், அது நஷ்டத்தில் ஓடுகிறதே என்று சொல்கிறார்கள். நஷ்டத்தில் ஓடுவது உண்மையாக இருந்தால் அதற்குக் காரணம் நிர்வாகத்திலே இருக்கிற குறைதானே தவிர, தேசிய மயமாக்கிய கொள்கையின் தவறு அல்ல அது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எப்படி நாம் அம்பை எய்தியவனைத்தான் குற்றம் சொல்கிறோம். அம்பைக் குற்றம் சொல்வதில்லையோ அதைப்போன்றுதான் இது அந்தக் கொள்கையின் குற்றமல்ல. இப்பொழுது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்



1970 மார்ச் 5] [திரு. கே. என். குமாரசாமி]

என்று கொண்டு வந்திருக்கின்றபொழுது அது சரியாகக் கீழ்மட்டத்திலே அமல் படுத்தப்படவில்லை என்று சொன்னால் அதற்காக அந்தக் கொள்கையையே தப்பு என்று சொல்வது சரியாகாது. பல காரணங்கள் சொல்கிறார்கள், அப்படிச் சொல்வது சரியல்ல. சமுதாயத்தில் மாற்றம் வேண்டுமென்று மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள், வாழ்க்கை வசதிகள் அதன்மூலம்தான் வரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டதற்குப் பிறகு அப்படிச் சொல்வது சரியல்ல. 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவரும்பொழுது அதை எடுத்துக் கையாள்கிற முறையைப் பொறுத்துத்தான் மாறுதல் உண்மையாக ஏற்படும். அதிலே இருக்கிற சில தீமைகளை வைத்துக்கொண்டே மக்களிடையே பிரச்சாரம் செய்து இந்தத் திட்டத்தை வீணடிக்கிற முயற்சியிலே ஈடுபடுவது சரியல்ல. இப்படிப்பட்ட சங்கடங்களைத் தீர்ப்பதற்குக் கையாள்கிற முறையிலே தீமைகள் ஏற்படாமல் நன்மைகள் சமுதாயத்திற்குப் பயக்கின்ற முறையிலே சட்டங்களைப் போட்டு ஆக்க ரீதியிலே பயன்படுத்தினால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும், அந்த அளவிலே வேலை வாய்ப்புப் பிரச்னையையும் நாம் தீர்க்க முடியும். இந்த அடிப்படையிலேதான் இந்த அரசாங்கம் இதைக் கொண்டு வந்திருக்கிறது என்று கருதுகிறேன். இந்தக் கொள்கையை நான் வரவேற்கிறேன்.

இன்னொரு பிரச்சினையையும் நாம் பார்க்கவேண்டும். நீர்பாசனத் திட்டங்களில் நாம் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. ஏற்கனவே போட்ட திட்டங்களிலேதான் இன்னமும் நம்முடைய கவனம் இருக்கிறது. அந்தத் திட்டங்கள் சரியாகச் செயல்படாமல் இருப்பதால் அதற்காகவே நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். உணவு உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்று சொல்கிறபொழுது நீர்பாசனத் திட்டங்களை நாம் அதிகமாக்கவேண்டும். இந்த பட்ஜெட்டிலே இதற்காக 5 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம். பழைய திட்டத்திற்காக இதிலே இரண்டேகால் கோடி ரூபாய் வரையில் போய்விடும்; பாக்கியிருக்கிற இரண்டேமுக்கால் கோடி ரூபாயை வைத்துக் கொண்டுதான் நாம் புதிய திட்டங்களைப் போட வேண்டியவர்களாக இருக்கிறோம். இதிலே இருக்கிற அடிப்படைப் பிரச்சினையையும் நாம் பார்க்க வேண்டும். கிணறுகள் தோண்டித் தண்ணீர் இல்லை, இருக்கிற அணைக் கட்டுகளிலே தண்ணீர் இல்லை, எனவே புதிய திட்டங்களைக் கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்யலாம் என்றால் அடுத்திருக்கிற மாநிலத்திலே சில பேர்கள் இதை எதிர்க்கிறார்கள். இருந்தாலும் பேச்சுவார்த்தை நடக்கிறது முட்டுக்கட்டையாக இருக்கிறது, இழுபறியான நிலைமை இருக்கிறது, இன்னும் நாம் இழுத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் இதுபற்றி முடிவு சொல்ல வேண்டும். எங்கு எங்கு தண்ணீர் உற்பத்தியாகிறதோ, அதை மையமாக கொண்டு மத்திய அரசாங்கம் எந்த மாநிலத்திற்கு தண்ணீர் பாய்ந்தால் அதிகமாகப் பயன்பெற முடியும் என்று பார்த்து முடிவு செய்து சரியான முறையிலே நீர் வழங்க ஏற்பாடு

செய்ய வேண்டும். மழை காலங்களில் வரும் தண்ணீரைத் தேக்கி நிறுத்த என் தொகுதியில் மேட்டுப்பாளையம் தோளம்பாளையம் கிராமத்தில் உப்புப்பள்ளம், பெரிய பள்ளம் என்பதற்குக் குறுக்கே அணை கட்டுவதற்கு ஏற்கனவே எஸ்டிமேட் ரூ. 13 லட்சத்திற்குப் போட்டு, சேங்க்ஷன் ஆகி அந்த வேலையை துவக்காமல் இருக்கிறது. அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் அவிநாசித் திட்டத்திற்கு 67-68 பட்ஜெட்டில் 4½ கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தும் அவ்வேலை செய்யாமல் விட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் துவக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குந்தா கழிவுநீர்த் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குடிதண்ணீர்த் தட்டுப்பாடு இப்போதே ஏற்பட்டு வருவதால் எங்கெங்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் கிணற்றை ஆழப்படுத்த வேண்டும்.

சாலைமானியம் ரூ. 581 லட்சம் என்றிருந்தது இன்று ரூ. 719 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்கு பராமரிப்பு செலவுக்கென, ரோட்டின் நீளத்தின் அடிப்படையில் அதிகத் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு வேலைமானியத் திட்டத்திற்குக் கொடுத்த தொகை போதாது, மிகவும் குறைவாக இருக்கிறது. கிராம முன்னேற்ற வேலைகளைச் செய்யும்பொழுது நிதிப்பற்றுக் குறை ஏற்படுவதன் காரணமாக, வேலைமானியத்திட்டத்தின் கீழ் அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டுமென்று (கே)ட்டுக்கொள்ளுகின்றேன்.

படித்தவர்களுக்கு, பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது இன்று இல்லாமல் அவதிப்படுவதைப் பார்க்கிறோம். அதனால் மனமுடைந்த, பட்டம் பெற்றவர்கள், கிராமங்களில் வேலையில்லாமல் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகின்றனர். அவர்களுக்கு ஏதாவது திட்டமிட்டு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவிலிருந்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக ஆக்கியிருப்பது, ஓரளவுக்கு விவசாயத் தொழிலையே நம்பியிருக்கக்கூடியவர்கள் வேதனைப்படும் அளவில்தான் இருக்கிறது. 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றால், குறைந்த பட்சம் ஒரு ஏக்கருக்கு 250 ரூபாய், சராசரி வருமானமாக வைத்துக் கொள்ள முடியும். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றால், அதிகபட்சமாக 4,000 ரூபாய்தான் ஒரு வருஷத்திற்கு வர முடியும். அதிலும், டிராக்டர் வைத்துக்கொண்டு, நவீன முறையில் விவசாயம் செய்ய வேண்டுமானால் முடியாத காரியம் என்பது விவசாயத்தொழில் செய்யக்கூடியவர்களுக்குத் தெரியும்.



அதுவும் பரம்பரையாக, தகப்பன் அல்லது பாட்டன் சம்பாதித்த பிதிராஜ்ஜித சொத்துக்களை வைத்துக்கொண்டு, 15 ஸ்டாண்டர்ட் ஏக்காராவிலே குடும்பத்தை நடத்துவது என்பது இன்று அவ்வளவு சல்லிசான காரியம் அல்ல என்பதை விவசாயம் செய்யக்கூடியவர்கள் உணருவார்கள்.

நமது மாநிலத்திலே இருக்கக்கூடிய ஜில்லாக்களை, ஜில்லாவாரியாகப் பிரித்து, 4 ஏக்கரா கொண்டது சாதாரணமாக 1 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும், தண்ணீர் பாய்ச்சல் இருந்தால் 1 ஏக்கராவை ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. கோவை ஜில்லாவிலே மிகவும் மோசமான நிலங்கள் இருப்பதால், அங்கு ஸ்டாண்டர்ட் ஏக்கராவாகப் பிரிக்கும்பொழுது அதை உத்தேசித்துப் பிரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவைகளையெல்லாம் தொடங்கும் முன்பு, செலக்ட் கமிட்டி போட்டு, ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு வேண்டும், இவ்வளவு இருந்தால்தான் விவசாயம் செய்ய முடியும், குறைந்த பட்சம் இவ்வளவு வருமானம் இருந்தால்தான் குடித்தனத்தைச் செய்ய முடியும் என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம்: பேரவைத் துணைத் தலைவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லி, அதை வரவேற்பதற்கான சில காரணங்களையும் சொல்ல முற்படுகிறேன். இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையானது, நமது மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது செவ்வி அருமையும் பாராது நன்றாகப் படைத்திருக்கின்ற பண்பான அறிக்கையாகும். இதை காங்கிரஸ் கட்சி நண்பர்களானாலும், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களானாலும், "கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் அஃதின்றேல் புண்ணென்று உணரப்படும்" என்ற அளவில் இதைக் கட்சிக் கண்ணோட்டம் இல்லாது பார்த்தால் நிச்சயமாக ஏழை சமுதாயம் மறுமலர்ச்சியான சமுதாயத்தை அடைய புரட்சித் திட்டமாக முடியும் என்பதை அறிவார்கள். அத்தகைய திட்டத்திற்காகத்தான் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் ஏங்குகிறார்கள். ஆனால் அவர்கள் படைத்த 1957-58-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, அப்போது கனம் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் இருந்த நேரத்தில், "இத்தொகையில் சுமார் 2 கோடி ரூபாய், கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர், பள்ளி ஆசிரியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் ஆகியோரின் ஊதியங்களை உயர்த்தியதால் ஏற்பட்ட செலவாகும். குறைந்த சம்பளம் வாங்கும் ஊழியர்களுக்கு, இந்த உயர்வினால் போதுமான அளவு நிவாரணம் கிடைக்கவில்லை என்பது உண்மையாயிருக்கலாம். அவர்கள் கஷ்டங்களுக்காக நாம் எவ்வளவு அனுதாபப்பட்டாலும்,

திரு. திப்பையா அவர்களைக் கூட ஒரு உறுப்பினராக சேர்த்துக் கொண்டிருக்கிறோம். எதற்காகச் சொல்கிறேன் என்றால், கட்சிக் கண்ணோட்டத்தோடு இல்லை என்பதற்காகத் தான் சொல்கிறேன். நியாயமான முறையிலே, நியாயமான வழியிலே பணியாற்ற வேண்டும் என்பது தான் எங்களுடைய கொள்கை. அதை விட்டு விட்டு வேறு ஏதேதோ சொல்கிறார்கள்.

மேலவையிலே கூடப் பேசியிருக்கிறார்கள். "கிணறுகளுக்காக அரசு கடன் கொடுத்திருக்கிறது. கிணறுகள் வெட்டி அவற்றில் சில கிணறுகளில் தண்ணீர் வரவில்லை. அப்படிப்பட்ட கிணறுகளுக்கு வழங்கப்பட்ட கடனை ரத்து செய்துவிடவேண்டும்" என்று பேசியிருக்கிறார்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது? கிணறு வெட்டுவது என்றால், நல்ல முறையிலே ஆராய்ந்து பார்த்து, அந்தப் பகுதியில் தண்ணீர் வரும் என்ற நிலையை அறிவிப்பது விவசாயி. அதற்குப் பிறகு கடன் கொடுக்கப்படுகிறது. கொடுத்த கடனைத் திருப்பி பெறக்கூடாது என்று சொல்வது நியாயமா? இப்படி எத்தனை பேர்களுக்கு கடன் கொடுப்பது, பணத்திற்கு எங்கே போவது? எந்தப் பிரச்னையையும் நியாயமான முறையில் அணுகுவதே கிடையாது. அதேபோன்று படி அரிசித் திட்டத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். "வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும், கஷ்டங்கள் தீரும்வரை படி அரிசித் திட்டத்தை அமல் செய்யவேண்டும்" என்று சொல்கிறார்கள். ஆனால், முன்பெல்லாம் படி அரிசித் திட்டத்தைப்பற்றி கேலியும், கிண்டலுமாகப் பேசிவந்தார்கள். இப்பொழுது உணவுத் கட்டுப்பாடும், கட்டுப்பாடும் நீங்கிவிட்ட காரணத்தினால், அந்தத் திட்டம் வேண்டும் என்று இப்பொழுது கேட்கிறார்கள். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்கள் . . . (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. நா. கிருட்டிணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடற்கரையில் மீளாத் துயில் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் "வெட்டிவா என்றால் வெட்டிக் கட்டி வருகிற" தம்பிகளிடம் தான் ஆட்சியை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறோம் என்று பெருமைப்படத்தக்க அளவிலே இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையை வரவேற்கும் முகத்தான் நான் ஒரு சில கருத்துக்களைச் செல்ல விழைகின்றேன்.

கழகம் தொடங்கிய நாள் முதல் அதன் மூலக் கொள்கை மத்திய ஆட்சியிடம் அதிகாரங்கள் குவிக்கப்படுகின்றன, அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்பதாகும். அந்த வகையிலே இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பார்த்தால், அதில் பெடரல் ஸ்டேட் என்று குறிப்பிடப் பட்டிருந்தாலும், நடைமுறையில் ஒரு யூனிட்டரி ஸ்டேட் என்ற வகையில் தான் இயங்கி வந்திருக்கிறது. இதை நாம் உற்று நோக்குகின்ற



நேரத்தில் "இடிப்பாரையில்லாத ஏமரா மன்னன்" என்ற நிலையில் மத்திய அரசின் போக்கு இருந்திருக்கிறது என்று கூறுவதற்குப் பதிலாக, இதுகாறும் மாநில ஆட்சிப் பொறுப்பை வைத்திருந்தவர்கள் அந்த அளவுக்கு விட்டு வைத்திருக்கிறார்கள் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு மாறாக நமது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், சென்ற ஆண்டு நமது மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவப் படத்தை இந்தியாவின் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் திறக்க வந்தபொழுது கூறியிருக்கிறார், "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று. அது எந்த அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசு வங்கிகளை நாட்டுடைமையாக்கிய கொள்கையை இந்த அரசு முழுக்க முழுக்க வரவேற்றிருக்கிறது. அதற்குப் பாராட்டும் தெரிவித்திருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், வங்கிகளை தேசிய உடைமையாக்குவதன் மூலம் அதிகாரங்கள் ஒரு சில பரம்பரையினரிடத்தில் குவிந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கை விடவும் இந்த அரசாங்கம் தயங்கவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் அதற்கு ஆலோசனையும் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற உறுப்பினர்களையும் சேர்த்து ஆலோசனைக் குழுக்கள் அமைக்க வேண்டும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது நிதி ஆணைக் குழு அதனுடைய அறிக்கையிலே நிதி ஒதுக்கீடு செய்திருப்பதில் தமிழகத்திற்கு பாகுபாடு செய்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, தனது அதிருப்தியை இந்த அரசு எடுத்துக்காட்டத் தயங்கவில்லை. ஆனால், தொழில் கொள்கையிலே மாற்றம் ஏற்படுகிறபொழுது, உரிமம் வழங்குகின்ற வகையில் மத்திய அரசு தனது கொள்கையை மாற்றிக்கொண்டிருக்கிறது. அதை வரவேற்கவும் தயங்கவில்லை இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன்.

மேலும், நான்காவது திட்ட காலத்தில் இந்த மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகையைப் பார்க்கிறபொழுது, இம் மாநிலத்திற்கு மத்திய அரசு வழங்க முன்வந்துள்ள கடன் தொகைகள் ரூ. 140 கோடியாகும். அந்தக் காலத்தில், நான்காவது திட்ட காலத்தில், இந்த மாநிலம் மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ரூ. 160 கோடியாகும். இதைப் பார்க்கிற பொழுது ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. "வட்டிக்கு கடன் வாங்கி, அட்டிகை செய்து, அட்டிகையை விற்று வட்டிக்குக் கொடுப்பது", என்று. அந்த வகையில் மார்வாடிக் கொள்கையை மத்திய அரசு கையாண்டுவருகிறது. அப்படி அணுகுகின்ற, மத்திய அரசின் போக்கை, இந்த மாநில அரசு கண்டிக்கத் தவற

[திரு. இரா. மாணிக்கவாசகம்] [1970 மார்ச் 5

மத்திய அரசாங்கம் தாராளமாக உதவ முன்வந்தால் ஒழிய, இதைக் காட்டிலும் அதிகம் செய்ய நம் ராஜ்ய நிதி நிலைமை இடம் தராது என்பதை, இச்சபை உணர வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் புலம்பிய கட்சியைச் சார்ந்தவர்கள் தான் இன்று சொல்கிறார்கள், 2 கோடி ரூபாய்க்குப் புலம்பி ஒப்பாரி வைத்தவர்கள்தான் இன்று அரசு ஊழியர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் 10 கோடி ரூபாய்க்குமேல் நிவாரணம் அளிக்கும் வகையில் நிதிநிலை அறிக்கையைத் தந்ததற்குப் பின்னால் அவர்கள் எந்த அளவிற்குப் புலம்புகிறார்கள் என்பதை உற்றுநோக்க வேண்டும்.

நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், ஒருபுறத்தில், வரி போடுகிறீர்களே, வரி போடுகிறீர்களே என்று சொல்லுகிறீர்கள்; மறுபுறத்தில் இப்படிச் செய்யக்கூடிய உதவியைப் பிச்சைக் காசு என்று சொல்லுகிறீர்கள். ஏன் இந்த இரட்டைவேடம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு ஒருபுறத்தில் சொல்லுகிறீர்கள்—விலைவாசி ஏறிவிட்டது, விலையைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள், படி அரிசித் திட்டம் வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். ஆனால் மறுபுறத்தில், 'விவசாயப் பெருமக்களே, உங்கள் உற்பத்திக்கு அதிகவிலை கேளுங்கள், இல்லையென்றால் போராட வாருங்கள்' என்று சொல்லுகிறீர்கள். இது எந்த இரட்டை வேடம் என்று நான் கேட்கிறேன். ஒருபுறத்தில் நெல்லுக்கு விலையை ஏற்றித்தர வேண்டுமென்று கோரும் அவர்கள் மறுபுறத்தில் குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படித்தான் அவர்கள் சொல்லும் காட்சியிருக்கிறது. இன்னும் சொன்னார்கள், வறட்சி நிவாரணத்திலே ஏதோ செய்துவிட்டார்கள், 13 கோடி ரூபாயை வாங்கிச் செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள், அங்கே பஞ்சம் இல்லை, பட்டினி இல்லை, தண்ணீர் வறட்சி இல்லை என்று சொன்னார்கள். ஆனால் கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்த நாட்டிலே 'விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகு மண்ணின்று உழற்றும் பசி" என்பதற்கிணங்க, மழை பெய்யாவிட்டால் தானம், தனம் கெட்டுவிடும் நிலையிருக்கிறது, ஆகவே, 13 கோடி, 15 கோடி தாருங்கள் என்று கேட்கும் நேரத்தில், இங்கிருக்கும் காங்கிரஸ் நண்பர்கள், அதைக் கொடுக்க வேண்டாமென்று சொன்ன நிலையில், கொடுக்க வேண்டாமென்று தடுத்த காரணத்தினால்தான் "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூம் உண்பதூம் இன்றிக் கெடும்" என்ற நிலையில் அவர்கள் சிதறிக்கிடக்கும் காட்சியைப் பார்க்க முடிகிறது, அந்த அளவுக்குக் கூறினார்கள்.

விவசாயப் பல்கலைக் கழகத்தைக் கோவையில் ஏற்படுத்தித் தந்தமைக்காகப் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று, 'இவர்கள் என்ன சாதித்தார்கள்' என்று சொன்னார்கள். ஏழைகளுக்குச் சமுதாயக் கிணறுகள் இல்லாத நிலையிருந்தது, பொருளாதார வசதி இல்லாது, உற்பத்தி செய்யாத கார



1970 மார்ச் 5] [திரு. இரா. மாணிக்கவாசகம்]

ணத்தை உணர்ந்து, சமுதாயக் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டன. அதனால் பல்வேறு பகுதி ஏழை மக்களும் உணவு உற்பத்தி செய்கிறார்கள்.

அதேபோல் சீரணிப்படையினர் எந்த அளவுக்குப் பள்ளிக் கூடங்களைக் கட்டியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இத்தனை நல்ல காரியங்களைச் செய்தார்கள் என்று சொல்லுகின்ற நேரத்தில், அதை நீங்கள் வரவேற்க வேண்டுமேயல்லாது, ஏதோ குற்றம்காண, குறைகாண வேண்டுமென்பதற்காகத் தாறுமாறாகப் பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, இந்த மூன்று ஆண்டு காலத்தில் குறிப்பாகச் சொல்கிறேன். தொண்டாமுத்தூர் பகுதியில், எனது தொகுதியில், சிறிய நீர்ப்பாசனத்திற்காகவும், குட்டை மராமத்துக்காகவும், ரூ. 14,01,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று பெரிய நாயகன்பாளையத்தில் ரூ. 1,39,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் என்ன பொருள்? கிராமத்திலே இருக்கிற நீர் தேங்கி நின்று, அதன் மத்தியில் கிணற்றுத் தண்ணீர் ஊறி, அதன் மூலம் விவசாயம் பெருகும் என்ற அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து தான் இந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட செயல்களிலே கூட குறை காண்கிறார்கள். அது நியாயமா? நியாயமான குறைகளை எடுத்துக் காட்டினால் நிச்சயம் சீர்திருத்திக் கொள்ள முடியும். ஆனால், ஏதோ வேணுமென்றே சொல்கிற காட்சியைத் தான் பார்க்கிறோம்.

அடுத்து நில வள வங்கிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ்காரர்களை ஒதுக்கிவைத்துவிட்டு, ஏதோ கட்சிக்காரர்களை அதிலே அமர்த்திக்கொள்வதற்காகப் போடப்பட்ட ஒரு திட்டம் அது என்று சொன்னார்கள். நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், நோக்கம் அது அல்ல. முக்கியமான நோக்கம்—ஏழை எளியவர்கள், விவசாயிகள் இதுவரையில் நல்ல முறையில் கடன் பெற முடியாத சூழ்நிலை இருந்து வந்தது, அவனை நோக்கிப் பணம் தேடிச் செல்கின்ற நிலையை உருவாக்கவேண்டும். அரசாங்கத்தால் கடனாகக் கொடுக்கப்படுகிற பணம் ஏழை எளியவர்களுக்கு நேரடியாக எட்டாமல் நடுவில் இருக்கிற தரகர்கள் அந்தச் சலுகையை இதுவரையில் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த முறை மாற்றப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் இந்த நில வள வங்கிகளை அமைப்பதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏதோ காரணத்தைக் கொண்டு, காழ்ப்புணர்ச்சியின் பேரில் பேசிக்கொண்டிருக்கிறார்கள் எங்களுடைய பகுதியில் உள்ள நில வள வங்கியில் அருமை நண்பர் சட்டமன்ற உறுப்பினர்

வில்லை என்பதையும் இங்கே எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே முறையில் தான் மத்திய அரசுக்கு மாநில அரசு திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தவணைகளை மாற்றித் தாருங்கள் என்று கூறி உரிமைக் குரலை எழுப்ப இந்த அரசு தயங்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். இவற்றையெல்லாம் வரையறுக்க, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இருக்கிற அதிகாரத் தொடர்புகளை வரையறுத்துக்கூற, இந்த மாநில அரசின் பொறுப்பை முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்ற பிறகு தான், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இருக்கிற உரிமைகளை வரையறுப்பதற்காக ஒரு குழுவினை நிறுவியிருக்கிறார்கள் என்பதைக் காணும்பொழுது, இந்த அரசு மக்களுக்கு, தான் கூறிய கொள்கைகளை சொல் அளவிலே இல்லாமல், செயல்முறைப்படுத்துவதில் எந்த அளவுக்குத் தீவிரமாக இருக்கிறது என்பது, புலனாகிறது.

இவை எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, தனது கொள்கைகள் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு நிதிநிலை அறிக்கையை வைத்த பிறகும் கூட, எந்தக் காரணத்தினால், எந்தக் கருத்தை வைத்து, இன்றைய மத்திய அரசிடம் இந்த மாநில அரசு நிபந்தனையற்ற சரண் அடைந்ததாகக் காங்கிரஸ் நண்பர்கள் கூறுகிறார்கள் என்பது வியக்கத்தக்கதாக இருக்கிறது. இருந்தபோதிலும் ஏசுவின் மொழியான "தட்டுங்கள், திறக்கப்படும், கேளுங்கள், கொடுக்கப்படும்" என்பதற்கேற்ப இந்த மாநில அரசு மத்திய அரசைத் தட்டியது, நிதிக்கதவுகள் திறக்கப்பட்டன. நிதி வாயில்கள் திறக்கப்பட்டன, கேட்டது கொடுக்கப்பட்டது. அந்த முறையில் பஞ்ச நிவாரண நிதியாக ஏறத்தாழ ரூ. 14 கோடி பெற்று இந்த மாநிலத்தில் ஏற்பட்ட வறட்சியைத் தணிக்கிற வகையில் பல பணிகளை நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் உணர முடிகிறது.

அண்ணாவிடம் பாடம் பயின்ற அருமைத் தம்பிமார்கள் தம் ஆட்சியில் அறிஞர் அண்ணா வழி நின்று, அவர்கள் கொண்டிருந்த அரும்பெரும் குணங்களை நடைமுறைப்படுத்தி, அமைதியாக, ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் இன்றி இவ்வறிக்கையில் புதிய புரட்சிக்கொள்கைகளை நிறைவேற்றி வைப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலே அமைந்திருக்கிறது, அதற்கான திட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது. அதை முழு மனதோடு பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

காஞ்சி என்றாலே பேரறிஞர் அண்ணா அவர்களின் ஞாபகம் வருகிறது முதலாவதாக. இரண்டாவதாக பட்டுப்புடவை நினைவிற்கு வருகிறது. பட்டுப்புடவைத் தொழிலுக்கு ஒரு மூலப்பொருளாக உள்ளது ஜரிகை. ஒரு ஜரிகை ஆலை காஞ்சியில்





ஏற்படுத்தவேண்டும் என்று பல்லாண்டுகளாக இருந்துவந்த கோரிக்கையை நிறைவேற்றிவைக்கும் வகையில் இந்த அரசு அங்கே ஒரு ஜரிகைத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ. 25 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய தொகுதி வாழ் மக்கள் சார்பாக மனமாரப் பாராட்டுகிற அதே நேரத்தில், இன்னொரு கோரிக்கையையும் வைக்க விரும்புகிறேன். இந்தத் தொழிலுக்கு இன்னொரு மூலப்பொருள் பட்டு. பட்டு, மைசூர் மாநிலத்திலிருந்து தான் நமக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது. நான் கூட அந்தத் தொழிலைச் சார்ந்த ஒரு கூட்டுறவு சங்கத் தலைவரோடு பட்டு வாங்குவதற்காக பெங்களூர் சென்றபொழுது, பட்டு வாங்குவதில் எத்தனை சிக்கல் இருக்கிறது என்பதை அறிந்தேன். எனவே, நமது மாநில எல்லைக்குள் தாளவாடி, ஹோசூர் போன்ற பகுதிகளில் கூடிய சீக்கிரம் நமக்குத் தேவையான பட்டை நாமே உற்பத்தி செய்யக்கூடிய அளவில், அதற்கான வழிவகைகள் செய்து சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற ஏழை நெசவாளர் மக்கள் வாழ்வு வளம்பெறச் செய்வதற்கான வழி வகுத்தாகவேண்டும். அந்த எண்ணத்தில் தான் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பின் தங்கிய வகுப்பினர் நலனுக்காக இன்றைக்கு ஒரு தனி அதிகாரி, ஒரு தனி இலாகா, ஒரு தனி அமைச்சர் ஏற்படுத்தி, ஒரு குழுவையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1966-67-ல் அந்தத் பி.ப. 1-00
துறைக்கு செலவழித்த தொகை ரூ. 97 லட்சம். இந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து நான் தெரிந்துக் கொள்வது என்னவென்றால், இன்றைக்கு அந்தத் துறைக்கு ரூ. 260 லட்சம் ஒதுக்கியிருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இலங்கையிலிருந்து திரும்பிவரும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க மலைத்தோட்ட மேம்பாட்டு குழு ஒன்றையும் நிறுவி, அதற்கென்று 10 கோடி ரூபாய்களையும் ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறோம். பிற நாடுகளில் வாழ்விழந்து தாய் நாடு திரும்பும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறது இந்த அரசு. அதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதையும் இது காட்டுகிறது.

அடுத்து, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று ஒரு கோடி ரூபாயையும் ஒதுக்கி, வளர்ச்சித் திட்டங்கள் போட்டிருக்கிறது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. அதிலும் 25 சதவீதமான 25 லட்சம் ரூபாயை, நான்கில் ஒரு பங்கை அரிசன மேம்பாட்டிற்காக என்று வைத்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாக இருக்கிறது.

அரசுப் பணியாளர்கள் மத்தியில் அமைதி ஏற்படுத்தவும், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், இரண்டாவது கமிஷனையும் ஏற்படுத்தியதோடு அல்லாமல், இடைக்கால நிவாரணமாக பத்து

ரூபாயைக் கொடுத்து, அந்த வகையில் ஆறு கோடி ரூபாய் அதிகம் ஒதுக்கியிருப்பதையும், அந்தச் செலவை ஏற்றிருப்பதையும் யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அரசு உதவி பெற்று நடக்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மருத்துவ சலுகை, வீட்டு வாடகைப்படி, விழாக் கடன், குளிர்காலப்படி, திருமணக்கடன் போன்று வசதிகள் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதும் அதற்காக 35 லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் பாராட்டுகிறேன்.

ஓய்வூதியத்தையும் அதிகரித்திருக்கிறார்கள், எங்கள் ஊரில் ஓய்வு ஊதியம் பெறுவோர் சங்கச் சார்பில் ஒரு மாநாடு போடப் பட்டபோது நானும் அதில் பங்கு பெற்றேன். அதில் தந்த கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களுடைய வேண்டுகோளுக்கு செவிமடுத்து, அவர்களுடைய ஓய்வூதியத்தை ரூ 20 லிருந்து ரூ 30 ஆக உயர்த்தியிருப்பது பாராட்டத்தக்க ஒன்று. ஓய்வூதியம் கணக்கிடுவதில், கடைசி 36 மாதங்கள் சம்பளம் என்றிருந்ததை, அந்த அடிப்படையை மாற்றி, 12 மாதச் சம்பளத்தைக் கணக்கிட்டால் போதும் என்று செய்ய இந்த அரசு முன்வந்தது, ஏழை மக்கள், நடுத்தர மக்கள்பால் இந்த அரசுக்கு உள்ள பரிவை உணர்த்துகிறது.

மேற்சொன்ன வகைகளில் சிறந்து விளங்குகிறது இந்த நிதி நிலை அறிக்கை என்று எடுத்துக் கூறி, இந்த அறிக்கையை நல்லவர் உள்ளமெல்லாம், நாட்டில் எங்கிருந்தாலும், நல்ல அறிக்கை என்று போற்றுவார்கள் என்று கூறி, இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையை அவைமுன் வைத்ததற்காக இந்த அரசையும், அமைச்சரவையை யும் முழு மனதோடு பாராட்டி, வரவேற்று, முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு பட்ஜட்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். பொதுமக்கள் இது வரையிலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு வரி போடவில்லை என்று சொல்லி வந்தார்கள். இந்த ஆண்டு, சுமார் ஆறு கோடி ரூபாய்க்கு வரிகள் போட்டிருக்கிறார்கள். இது இப்படியே இருக்காது. இது அதிகப்படும் என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால், இப்பொழுது என்.ஜி.ஓ.-க்கள் அதிகமாகக் குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ரொம்பவும் குறைவாக பத்து ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். அது போதாது. அதையே ரூ. 30 ஆக்கலாம் என்று அமைச்சர வையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு 1964-ல் ஒருதரம் சம்பள உயர்வு கொடுத்தார்கள். அது அப்படியே இருக்கிறது. இப்பொழுது கொஞ்சம் உயர்வு கொடுக்க வேண்டும். அவர்களுக்குப் பிரயாணப்





படி கிடையாது. தலையாரி முதலியோர் சம்பளம் அதிகப்படுத்தப் படவேண்டும். அதைச் செய்து கொடுத்தால் அந்த ஏழை மக்கள் இந்த அரசைப் போற்றுவார்கள். கிராமத்தில் அவர்களும் போலீஸ் காரர்கள்போல்தான் வேலை செய்கிறார்கள் ஆகவே, அவர்களுக்கும் உடை வழங்க இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆசிரியர்கள் ஹையர் கிரேடில் உள்ளவர்கள், எஸ்.எஸ்.எல்.ஸி படித்துவிட்டு, செகண்டரி கிரேடாக ஆகலாம் என்று இருக்கிறது. ஆனால், அவர்கள் செக்கண்டரி கிரேடு பரிட்சை எழுதும்போது, ஹையர் கிரேடு பாடங்களையெல்லாம் திரும்பவும் எழுதவேண்டும். ஹையர் கிரேடில் முதலில் இங்கிலீஷ் கிடையாது. ஆகவே, திரும்பவும் செகண்டரி கிரேடு பரிட்சை எழுதும்போது, ஆங்கிலத்தை மட்டும் பரிட்சைக்கு வைத்துக்கொண்டு, தமிழ்ப் பாடங்களை எழுதாமல் இருக்கும்படியான சலுகைகள் கொடுத்தால், ஆசிரியர்கள் விஷயத்தில் நல்லதாக இருக்கும். ஹையர் கிரேட் ட்ரெயினிங் கூடக் கிடையாது. ஆகவே, ஆங்கிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு, தமிழை விட்டு விடவேண்டும் என்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்கம் இப்பொழுது ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதை நான் பரிபூரணமாக வரவேற்கிறேன். நான் ஒரு காங்கிரஸ்காரன். இப்பொழுது, 30 லிருந்து 15 ஏக்கராவாகக் குறைத்து இருப்பது நல்ல காரியம். அதை நான் முழுக்க முழுக்க பரிபூரணமாக ஆதரிக்கிறேன். அதிலே, இந்த நல்ல புரட்சிகாமான திட்டத்தில், 15 ஏக்கர் என்பதை நபர் ஒன்றுக்கு இல்லாமல், ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்று வைத்தால் நிச்சயமாக ஏழை விவசாய மக்கள், பாட்டாளி மக்கள் உங்களை என்றென்றைக்கும் ஆதரிப்பார்கள். ஆகவே, அதிலே இன்னும் அந்தத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். அதை உடனடியாக குடும்பம் ஒன்றுக்கு 15 ஏக்கர் என்று செய்துவிட வேண்டும். நபர் ஒன்றுக்கு என்று இருக்கக் கூடாது. இது பழைய காங்கிரஸ் கொள்கைதான். ஆனாலும் காங்கிரஸ் முன்னால் ஒரு தபபு செய்து விட்டார்கள். சட்டம் வருகிறது, சட்டம் வருகிறது, என்று சொல்லி, அவர் களுக்கு வேண்டிய டைம் கொடுத்துவிட்டார்கள். அந்தத் தப்பையே நீங்களும் பண்ணக் கூடாது. ஒரு அவசரச் சட்டத்தையே கொண்டு வந்து—இப்பொழுதே கூட டைம் அவர்களுக்குக் கொடுத்ததுபோல் தெரிகிறது—உடனடியாக நிறை வேற்ற வேண்டும். 60-ம் வருஷத்திலிருந்து வருகிறது என்று சொன்னதுபோல், அவர்களுக்கு இடம் கொடுத்துச் செய்தால், இந்த 15 ஏக்கர் என்று செய்வதும் அர்த்தமில்லாமல் போகும். ஆகவே, இதை உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யும்போது குடும்பம் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு அல்ல, 15 ஏக்கர் என்று செய்துவிடவேண்டும். அதோடு விவசாய வருமான

[திரு. எஸ் சிவசுப்பிரமணி] [1970 மார்ச் 5

வரி வந்தபோதே அவர்கள் 7½ ஏக்கர் வீதம் பிரித்துக் கொண்டு விட்டார்கள். அதற்குக் காரணம் 7½ ஏக்கருக்குக் கீழே வைத்திருப்பவர்களுக்கு வரி கிடையாது என்பதால். ஆகவே, இப்பொழுது பார்த்தால், 30 ஏக்கர் என்று யாரிடமும் இருக்காது. 7½ ஏக்கர் என்ற அளவில்தான் பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது 15 ஏக்கர் என்று கொண்டு வந்தாலும், அத்தனை பேர்களும் தப்பித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, 60-ம் வருஷத்திற்குப் பிறகு பிரித்துக் கொண்டிருப்பதெல்லாம் செல்லாது என்று ஷரத்தைப் போட்டுவிடவேண்டும். அதை உடனடியாகச் செய்யவேண்டும் என்று நிதி அமைச்சரையும், முதல் அமைச்சரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். 25 காணிக்கு அதிகமாக உள்ள கோவில் நிலங்களையும், மடத்து நிலங்களையும் அரசாங்கமே எடுத்து, நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு வழங்கவேண்டும். நிலத்தைப் பிரிப்பதை நிலவரி அடிப்படையில் செய்யாமல், உச்சவரம்பு கட்டுவதை வருமானத்தின் அடிப்படையில் செய்யவேண்டும். நடைமுறையில் 300 ரூபாய் வரை வரி என்று இருக்கிறது. ஆகையினால், கொடைக்கானல் போன்ற பகுதிகளில் புஞ்சை வரி ஏக்கருக்கு ஒரு ரூபாய்தான். ஆகவே, ஒருவர் 300 ஏக்கர் வரையில் வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு வருமானம் 10,000 ரூபாய் வரையில் கிடைக்கும். ஆகவே, நிலவரி அடிப்படையில் செய்வது சரியாக இருக்காது. வருமான அடிப்படையில் இருந்தால் தான் நல்லது. நீலகிரி, சேலம் ஜில்லாவில் மலைப்பகுதிகள், தென்னாற்காடு ஜில்லாவில் கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகளுக்கு விதிவிலக்கு இருப்பதை ரத்து செய்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உச்சவரம்பினால் வரும் உபரி நிலங்களை வினியோகம் செய்யும் போது, அந்த அந்தக் கிராமத்தில் உள்ள நிலமில்லாத ஏழை உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். யாரோ ராணுவத்தில் இருந்தார் என்று எங்கிருந்தோ வந்தவர்களுக்கு இன்னொரு ஜில்லாவில் நிலம் கொடுப்பது உண்மைநிலைக்கு மாறானதாக இருக்கும். எனவே, எங்கே உபரி நிலம் இருக்கிறதோ அங்கேயே உள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கு அந்த உபரி நிலங்களைக் கொடுக்க வேண்டும்.

அதே வகையில் நகர்ப் புறத்திலும் நகரத்தில் உள்ளவர்களுடைய சொத்துக்கும் உச்சவரம்பு கட்டவேண்டும். அதையும் உடனடியாகச் செய்ய வேண்டும். ஏனென்றால், நிலத்திற்கு உச்சவரம்பு போட்டால், நிலத்தை விற்றுவிட்டு, அல்லது கரும்பு போட்டு ஏராளமாகப் பணத்தைக் கொண்டு வந்து நகர்ப் புறத்தில் மாட மாளிகை கூடகோபுரங்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் உச்சவரம்பு கட்ட வேண்டும். நிலத்திற்கு உச்சவரம்பு கட்டும் நோக்கத்தைப் போலவே நகர்ப் புறத்திலும்



1970 மார்ச் 5] [திரு. எஸ். சிவசுப்ரமணியன்]

நகர்ப்புற சொத்துக்கும் உச்சவரம்பு கட்டவேண்டும். நகரத்தில் ஏராளமான சொத்து வைத்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் இந்த அமைச்சரவை ஒரு உச்சவரம்பு கட்டி, அதற்கான சட்டத்தையும் நிச்சயமாக உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கிழக்குத் தஞ்சாவூரில் கூலி நிர்ணயச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தை சிதம்பரம் தாலுகாவிற்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று போன சட்டசபையில் கேட்டுக்கொண்டும், இதுவரை விஸ்தரிக்கப்படவில்லை. ஆகவே, கூலி நிர்ணயச் சட்டத்தை சிதம்பரம் தாலுகாவிற்கும் உடனே விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காலேஜில் படிக்கும் அரிஜன மாணவர்கள் ஹாஸ்டல்களில் எவ்வளவு சாப்பிடுகிறார்களோ, அதற்குண்டான பணத்தை அப்படியே கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது ஒரு மாணவனுக்கு 50 ரூபாய், 60 ரூபாய் என்று நிர்ணயம் செய்துவிட்டார்கள். சர்க்கார் கொடுக்கும் பணத்தை நம்பித்தான் அரிஜன மாணவன் சாப்பிடுகிறான். கடைசியில் உன் கணக்கு 300 ரூபாய் வந்தது, உன் கணக்கு 400 ரூபாய் வந்தது, அந்தப் பணத்தை கட்ட வேண்டும் என்று சொன்னால் அவன் என்ன செய்வான்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவோ சட்டதிட்டங்களைச் செய்து வருகிறார்கள். அரிஜன மாணவர்களை மற்ற மாணவர்களின் நிலைக்குத் தூக்கிவிட நூறு இருநூறு ரூபாய் என்று சேர்த்துக் கொடுக்க வேண்டும். எவ்வளவு ரூபாய் ஆகிறதோ அவ்வளவும் கொடுக்க வேண்டும். அரிஜன மாணவன் மற்ற மாணவர்களோடு, ரெட்டியார் பிள்ளைகளோடு, செட்டியார் பிள்ளைகளோடு, முதலியார் பிள்ளைகளோடு சேர்ந்து சாப்பிடும்போது 'ஓ, நீ சிவசுப்பிரமணியன் மகன் தமிழ்மணியா? சாப்பிட்ட பணம் இவ்வளவு ஆனது' என்று கேட்டால், தான் ஒரு அரிஜன், தான் ஒரு ஆதிதிராவிடன் என்ற உணர்வை ஊட்டக்கூடிய நிலை இருக்கிறது. அம்மாதிரி செய்யக் கூடாது. அப்படி ஒரு திட்டத்தை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் முக்கியமான விஷயம். சமூகத்தைப் பாதிக்கக்கூடிய விஷயம். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மனைக்கட்டுத் திட்டம். அரிஜனங்களுக்கு வீட்டுமனைக்கட்டுகளை ஒதுக்கித் தர வேண்டும். மற்றும் சுடுகாட்டிற்குப் போவதற்கான பாதை வசதி கிடையாது. வயல்களின் வரப்பின்மீதுதான் போகவேண்டும். அந்த நிலச் சொந்தக்காரரை 'முதலாளி' என்று சொல்லாவிட்டாலோ, கூலியைச் சிறிது அதிகமாகக் கேட்டாலோ, அல்லது அவரை எதிர்த்துப் பேசினாலோ அந்த நிலத்தின் பக்கமே போக முடியாது. எட்டு நாட்களானாலும் பிணம் வீட்டில்தான் இருக்க வேண்டும்.

[திரு. எஸ். சிவசுப்ரமணியன்] [1970 மார்ச் 5

ஆகவே, சுடுகாட்டிற்குப் போவதற்கும், வீட்டுமனைக்கும், குடிநீர் வழங்குவதற்கும் நல்ல திட்டங்களைத் தயாரித்து உடனடியாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதியில் கட்டுகின்ற தொகை குறைவாக இருக்கிறதென்றும், மற்ற மாணவர்களைப்போல கூடுதலான தொகையைக் கட்ட கஷ்டப்படுகிறார்கள் என்றும் கூறினார்கள். இந்தக் குறையை மாணவர்கள் அரசாங்கத்திற்குக் கொண்டுவந்து, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இப்போது அந்தத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சுடுகாட்டிற்குப் பாதைவசதி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபோது, "நீங்கள் இருக்கும்போது செய்யவில்லையே" என்று சொன்னேன். இப்போது சுடுகாட்டிற்குப் பாதைவசதி, உயிரோடு வாழ நல்ல குடிநீர் போன்ற நல்ல காரியங்களைச் செய்வதற்காக 25 லட்சம் ரூபாய் இவர்களுக்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1970-71-ம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்கள். மிகச் சிறப்பு வாய்ந்த, நல்ல புரட்சிகரமான திட்டங்களை உள்ளடக்கிய, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய திட்டங்களைக் கொண்டதாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இருப்பதை முன்னிட்டு இதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிநின்று அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள இந்த அரசு படிப்படியாக சமூக நலப் பணிகளுக்கு நிதியை ஒதுக்கித் தந்து வருகிறது. 66.83 கோடி ரூபாயை இந்தத் துறைக்குச் செலவிட முன்வந்திருக்கிறது. பின்தங்கியவர்களுக்காக நலத் துறை என்று இதுகாறும் இல்லாத குறையை இந்த அரசு பூர்த்தி செய்து கொடுத்திருக்கிறது. பின்தங்கியவர்களின் நலனுக்காக 260 லட்சம் ரூபாயும், அரிசன நலத்திற்கென 519 லட்சம் ரூபாயும் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறதைப் பார்க்கும்போது அந்தச் சமுதாயத்தின்பால் அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது தெளிவாகிறது.

அடுத்து, மின்துறையை எடுத்துக்கொண்டால், பல புதிய திட்டங்களை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், முன்பு ஒதுக்கப்பட்ட தொகையை விட அதிகப்படியான தொகையை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது. கடந்த இருபதாண்டுக் காலத்தில் தமிழகத்தில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டதைவிட, பல்வேறு திட்டங்களை



1970 மார்ச் 5] [திரு. எஸ் சிவசுப்பிரமணி]

உருவாக்கி, துரித நடவடிக்கையின்மூலம் 1972-க்குள்ளாக தமிழகத்தில் மின் இணைப்பு இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லத்தக்க விதத்தில் முன்னோடித் திட்டங்களை வகுத்திருப்பது பெருமைப்படக்கூடியதும், பாராட்டப்படக்கூடியதுமாகும்.

இந்த அரசு மீனவர்களுடைய நலத்திற்காக பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. நான் மீனவர்களை அதிகமாகக் கொண்ட தொகுதியைச் சேர்ந்தவன். நீண்ட கடலோரப் பகுதிகளை நாம் கொண்டிருக்கிறோம். மற்றும் பர்மா, சிலோன் போன்ற பகுதிகளிலிருந்து வருபவர்களுக்கு விசைப்படகுகளை 5 சதவீதம் ஒதுக்குவது என்று ஒரு புதிய திட்டத்தை அரசு உருவாக்கியிருக்கிறது. இந்த ஐந்து சதவீதம் என்பதை பத்து சதவீதமாக உயர்த்தினால் மீனவர்கள் சமுதாயத்திற்கு மிகவும் பயன்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடியிலே ஒரு துறைமுகத்தை ஏற்படுத்தி, மீன்பிடி துறைமுகமாக அமைப்பதற்கான முயற்சி எடுத்திருப்பது நல்ல செய்தி. எனது பகுதியில் ஒரு மீன்பிடி துறைமுகத்தை அடுத்த ஆண்டில் துவக்குவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கெல்லாம் மூத்தாய்ப்பு வைப்பதுபோல் நில உச்சவரம்புச் சட்டத்தை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நேற்றல்ல, நீண்ட பல ஆண்டுகளாகவே செயலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று மாநாடுகளின் மூலமாக முன்னே இருந்த அரசைக் கேட்டுக் கொண்டிருந்தது. அப்போது கொண்டுவந்த நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்த ஓட்டை உடைசல்களையெல்லாம் சுட்டிக்காட்டி, பல்வேறு விளக்கங்களைச் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டத்தை பொறுப்புக்கு வந்தவுடனே செயல்படுத்துவதில் இந்த அரசு ஈடுபட்டிருப்பதை உளமார மனமாரப் பாராட்டி வரவேற்கிறேன். அதே நேரத்தில் மேலும் தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதிலும், கூலி நிர்ணயிப்பதிலும், நெல்லுக்கு விலை கொடுப்பதிலும் அரசு ஒரு நல்ல திட்டத்தை செயல்படுத்துகிறது. நிலத்திற்கும் உச்சவரம்ப கொண்டுவருகிறீர்கள். ஆனால், ஏழை எளிய, நடுத்தர விவசாயிகளுடைய எதிர்கால நிலைமையைக் கவனிக்கவில்லையே என்று அவர்கள் கேட்பதிலே நியாயம் இருக்கிறது என்பதை மாத்திரம் வலியுறுத்தி இதற்கு வழிவகை காண வேண்டும் என்பதோடு அதற்குப் பரிகாரம் காணுகிற வகையிலே நகரப் பகுதிகளில் பல வீடுகளை வைத்திருப்பவர்கள், தொழில் துறையிலே பல கோடி ரூபாய்களை முதலீடு செய்து இருக்கும் முதலாளிகள், தனியார் துறையிலும் சரி, அரசுத் துறையிலும் சரி உத்தியோகம் பாக்கும் உத்தியோகஸ்தர்கள், இவர்களின் வருமானத்தைக் கணக்கிட்டு, வருமானத்திற்கு உச்ச

[திரு. மு. கிருஷ்ணமூர்த்தி] [1970 மார்ச் 5

வரம்பு கட்டவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். கிராமப்புறத்தில் ஒரு பழமொழி உண்டு. ‘உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது’ என்று சொல்வார்கள். அந்தக் கணக்குகளை எல்லாம் அரசு நிச்சயமாகப் பரிசீலித்துப் பார்க்கவேண்டும். பரிசீலித்தாக வேண்டும். அப்போதுதான் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார நிலை ஏற்படும். நகர்ப்புற சொத்துக்களுக்கும், வருமானங்களுக்கும் உச்சவரம்பு நிர்ணயித்தாகவேண்டும். அப்படி நிர்ணயிக்கிற ஒரு சட்டத்தை, ஒரு திட்டத்தை முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் துரிதமாகக் கொண்டு வரவேண்டும். கொண்டு வருவார்கள் என்கிற நம்பிக்கையை எதிர்க்கட்சிக்காரர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1961-லே உச்சவரம்புச் சட்டம் வந்தது. அதில் பல ஓட்டைகள் இருந்தன. அப்படிப்பட்ட ஓட்டைகள் இந்தச் சட்டத்திலும் ஏற்பட்டுவிடக் கூடாது. டிரஸ்டு என்றும், கரும்புக்கு என்றும், கோயில்களுக்கு என்றும், ஆதீனங்களுக்கு என்றும் அப்போது ஏற்பட்ட விதிவிலக்கு எதுவும் இன்றி ஒரு அவசரச் சட்டத்தையாவது கொண்டுவந்து—சட்டத்தில் ஓட்டைகள் எதுவும் ஏற்படாதிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். அதைப் போலவே நகரங்களில் உள்ள மற்ற மற்ற சொத்துக்களுக்கும் உச்சவரம்பை ஏற்படுத்தியாக வேண்டும் என்று தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். ஆர். கண்ணன்:** சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் மிகமிகச் சிறப்பான அம்சங்கள் இருக்கின்றன. அதற்காக நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். என்.ஜி.ஓ.க்களுக்கு சிறப்பு ஈட்டுப்படியாக 10 ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். இதை எதிர்க்கட்சி மெம்பர்கள் குறைவு என்று சொல்கிறார்கள். இதற்கே 6 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்கிறபோது இன்னும் அதிகமாகக் கொடுப்பதாக இருந்தால் பல வரிகளை உயர்த்த வேண்டியிருந்திருக்கும். அப்போது அதற்காக ஒப்பாரி வைப்பார்கள், எதிர்க்கட்சி மெம்பர்கள்.

பிற்பட்டவர்களுக்காக ஒரு தனி இலாக்காவையே ஏற்படுத்தி, ஒரு தனி அமைச்சரையே போட்டு இந்த அரசு பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. பிற்பட்டவர்கள் என்றால் நூற்றுக்கு 60 க்குமேல் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்காக ரூ. 5¼ கோடி ஒதுக்கி நல்லமுறையில் காரியங்களைக் கவனிக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

அதேபோல தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 5½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதுவும் மிகமிகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.



1970 மார்ச் 5] [திரு. மு. கிருஷ்ணமூர்த்தி]

கிராம வேலைவாய்ப்புப் பணிகளுக்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது குறைவு என்றாலும் இந்த அரசு அடிப்படைப் பிரச்சினையை மறந்துவிடாது. இதற்காகப் பணம் ஒதுக்க முன்வந்திருப்பதைப் பாராட்ட வேண்டும். இன்னும் சென்னையில் குடிசைப் பகுதிகளை மாற்றி வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு—அவர்கள் எத்தனையோ ஆண்டுகளாக பென்ஷனை உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டும் பழைய அரசு எதுவும் செய்யவில்லை—இந்த அரசு பெரிய மனதுடன் அதை உயர்த்திக்கொடுக்க முன்வந்திருப்பதற்காகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தனியார் பள்ளி ஆசிரியர்கள் பல காலமாகத் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து வந்தார்கள். இந்த அரசுதான் அவர்களுக்கும் சர்க்கார் பள்ளி ஆசிரியர்களைப்போன்றே எல்லாவித வசதிகளையும் செய்துகொடுக்க முன் வந்திருக்கிறது. அதற்காகவும் மிகமிகப் பாராட்டுகிறேன்.

ஏழை நடுத்தர மக்கள் பாதிக்கப்படாமல், ஏற்கனவே இருந்த வரிகளை மட்டும் கொஞ்சம் இந்த அரசு உயர்த்தியிருக்கிறதே தவிர எந்தவிதமான புது வரிகளையும் இந்தக் கட்சி ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதில் இருந்து போடவில்லை. அதுதான் உண்மையில் காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு குறையாக இருக்கிறது. உண்மையில் நாடு வளர்ந்து வருகிற நிலையில் எல்லாப் பொருள்களும் எல்லா மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்றாலும்—இவை இல்லாவிட்டால் மக்களால் உயிர் வாழ முடியாது என்கிற நிலை இல்லாத காரணத்தினால் அரசு ஓரளவு இந்த ஆடம்பரப் பொருள்களின் மீது போடப்பட்டிருந்த வரியை உயர்த்தியிருக்கிறது. அதுவும் அரசாங்கத்திற்கு வேறுபல நல்ல காரியங்களைச் செய்வதற்குப் பணம் தேவைப்படுகிற காரணத்தினால், உயர்த்தியிருக்கிறார்களே தவிர புது வரி போடவில்லை.

உச்சவரம்புச் சட்டத்தை எல்லாப் பகுதியினர்களும் பாராட்டுகிறார்கள். இது நல்லமுறையில் செயல்படவேண்டும் என்பதுதான் ஒவ்வொருவருடைய எண்ணமும். அதை நல்லமுறையில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை அகதிகளுக்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது போற்றத்தக்க, வரவேற்கத்தக்க செயல். வடநாட்டு அகதிகளுக்கு மத்திய சர்க்கார் ]அப்போதெல்லாம் அதிக நிதி ஒதுக்குவார்கள். நம் நாட்டவர்களுக்கு ஒதுக்கமாட்டார்கள். அப்போது இருந்த நம்முடைய சர்க்காரும் அதைக் கண்டிக்கவோ, வேறுவிதமாகச் செய்யவோ முன்வரவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் இலங்கை, பர்மா அகதிகள் விஷயத்தில் அக்கறை காட்டுகிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆர் கண்ணன்] [1970 மார்ச் 5

அயராது உழைப்போம் என்ற கொள்கை, அதிலே நாங்கள் திட்டமாக இருக்கிறோம். அண்ணா வழி நடப்போம். அண்ணாவழி என்றால் அதுதான் அறவழி, சிறப்பான வழி. ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைக்கப் பாடுபடுவோம். இந்தித் திணிப்பு எந்த முறையிலே எந்த அளவுக்கு வந்தாலும் அதை எதிர்த்தே தீருவோம் . . . . (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் பேரவை ஒற்றிவைக்கப்பட்டு, மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பி.ப. 1–31 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதும் இல்லை.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1970 மார்ச் 6.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

முகமதியர்களுக்குச் சலுகை

*229 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மைனாரிட்டி முஸ்லிம் மக்களுக்கும், மற்ற சிறுபான்மை இன மக்களுக்குக் கொடுப்பது போல் கலாசார, உத்தியோக தொழில் சம்பந்தமான சலுகைகள் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'மைனாரிட்டி முஸ்லிம் மக்கள்' என்று குறிப்பிட்டிருப்பது, 'சிறுபான்மை மொழிகளில் ஒன்றாகிய உருது பேசும் மக்களைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரிகிறது. இம் மாநிலத்தில் இதர சிறுபான்மை மொழியினருக்கு, 14–3–1961-ம் நாளைய 455-ம் எண் (பப்ளிக்-பார்ட்டிஷன்-துறை) அரசு ஆணையில் தரப்பட்டுள்ள எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் தரப்படுகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இதர சிறுபான்மை மொழிபேசும் மக்களுக்குத் தரப்படும் சலுகைகள் இவர்களுக்கும் தரப்படுவதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் மற்ற சிறுபான்மை இன மக்களுக்குத் தரப்படுவதுபோல் இந்த முஸ்லிம் மக்களுக்கும் உத்தியோக, தொழில் சம்பந்தமான சலுகைகள் தரப்பட்ட புள்ளிவிவரம் மேசை மீது வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரிசன நலத் துறையின்கீழ் ஸ்காலர்ஷிப் வழங்கும்போதும் இந்த முஸ்லீம் இனத்தவர்களில் 'லப்பை' 'மாப்பிளா' என்ற பகுதியினர்கள், 'பிற்பட்ட வகுப்பினர் (பாக்வர்டு க்ளாஸஸ்) என்ற அளவில் அந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டு அவர்கள் தகுதிகள் பரிசீலிக்கப் படுகின்றன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, 'லப்பை' என்று சொல்கின்றபோது, தமிழ் பேசுகின்ற முஸ்லீம்கள் என்றுதான் குறிப்பிடுகிற ஒரு மரபு இருந்து வருகிறது. அங்கங்கே இருக்கின்ற அதிகாரிகள் சிலர், 'ராவுத்தர்', 'மரக்காயர்',

**என்று** பின்னால் பட்டம் இருக்குமானால் அவர்களை லப்பைகளின் பட்டியலில் வைத்து அனுமதிப்பதில்லை. தமிழ் பேசுகின்ற முஸ்லீம்கள்தான் லப்பைகள். அவர்கள் பெயர்களுக்குப் பின் 'மரைக்காயர்' 'ராவுத்தர்' என்று போட்டுக்கொண்டிருக்கலாம். அரசு பாலொக லப்பை, மரக்காயர், ராவுத்தர் ஆகியவர்களை ஒன்றாக இணைத்து உத்தரவு போடுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உண்மையான லப்பைகள் யார் என்று பார்த்து அதன்படி அரசு நடந்துகொள்ளும்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, மத்திய உள்நாட்டு அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கின்றபோது, இனிமேல் போலீஸ் இலாக்காவில் அதிகமாக முஸ்லீம் மக்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்களே அதுசம்பந்தமாக நம்முடைய அரசுக்கு உள்நாட்டு அமைச்சர் சுற்றறிக்கை ஏதாவது அனுப்பியிருக்கிறாரா? அது பற்றி நாம் ஏதாவது விளக்கம் கொடுக்கமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** "போலீஸ் இலாக்காவில் முஸ்லீம்கள் இருக்கிறார்களா?" என்று மத்திய அரசிடமிருந்து வந்த ஒரு விளக்கத்திற்கு "இங்கு இருக்கிறார்கள்" என்ற பதிலை இந்த அரசு தந்திருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த மைனாரிடி முஸ்லீம்கள், சிறுபான்மையினர் என்கிற வகுப்புகளிலேகூட பணக்காரர்கள் இருக்கிறார்கள், ஏழைகளும் இருக்கிறார்கள். அதேபோல், முற்பட்ட சமுதாயம் என்று கருதப்படுகிற இனங்களிலும் ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள். பணக்காரர்களும் இருக்கிறார்கள். ஜாதி, இன அடிப்படையை மாற்றி, ஏழைகளாக இருக்கின்ற எல்லோருக்கும் தனிப்பட்ட சலுகை கொடுக்க இந்த அரசு முன்வருமா? ஜாதி மத வேறுபாடு இல்லாத அரசாங்கம் என்று சொல்லும் இந்த அரசு ஜாதி மத வேறுபாட்டை நீக்க, ஏழை பணக்காரர் என்ற இரண்டு ஜாதிகள் மட்டும் இருப்பதைக் கருத்தில் கொண்டு, சமுதாயத்திலிருக்கும் எல்லா ஏழை மக்களுக்கும் சலுகை தர இந்த அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த முறையைப் பின்பற்றுவோமானால்; உள்ளபடியே பிற்பட்ட வகுப்பினர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் பாதிக்கப்படுவார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** காலஞ்சென்ற முதலமைச்சர் அண்ணா அவர்கள் இருந்தபோது, மெடிகல் காலேஜில் சீட் வழங்குவதில் இந்த முஸ்லீம் மக்களுக்கு 75 ஸீட்கள் கொடுத்திருந்ததை சென்ற ஆண்டில் 56 ஆகக் குறைத்துவிட்டார்கள் என்ற அடிப்படையில் அந்த மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி இருக்கின்றதென்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிக் குறைத்ததற்கான காரணம் என்ன என்பதைச் சொல்லமுடியுமா?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முஸ்லீம்களுக்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் வக்காலத்து வாங்குகிறார். விஷயம் புரியவில்லை (சிரிப்பு). ஆனால், இதிலே பிரதிநிதித்துவம் ஒன்றும் கிடையாது. மெடிகல் காலேஜ் அட்மிஷனில் முஸ்லீம்களுக்கு இத்தனை ஸீட்டுகள் கொடுக்க வேண்டும் என்று எந்தவிதமான விதிகளும் இதுவரை கிடையாது. தகுதியின் அடிப்படையில்தான் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதன்படி சென்ற ஆண்டு 75 ஆக இருந்திருக்கலாம்; இந்த ஆண்டு 56 ஆகியிருக்கலாம், இதிலே எந்த உள்நோக்கமும் கிடையாது.

### Mao's Posters.

* 230 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether Mao's posters have appeared in Tiruchirappalli about the 27th March 1969; and

(b) if so, whether any pamphlets were also found pasted on the walls of the Offices of the Southern Railway?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம். 26—3—1969-ல் ஒட்டப்பட்டிருந்தது:

(இ) அச்சிடப்பட்ட சுவரொட்டி ஒன்றும், கையால் எழுதப்பட்ட சுவரொட்டி ஒன்றுமாக—'மா'வோவின் சுவரொட்டிகள் 26—3—1969-ல் திருச்சிராப்பள்ளி தென்பகுதி ரயில்வே கோட்டக் கண்காணிப்பாளர் அலுவலகத்தின் முன்பு ஒட்டிவைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது:

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுது 'மா' வோவின் போஸ்டர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய ராஜ்யத்தில் வெளிவருகின்றன. இதிலிருந்து தெரிகின்ற விஷயம் என்னவென்றால் ஏதோ புரட்சி, துப்பாக்கி முனையில்தான் வருகிறது என்றெல்லாம் தவறான கருத்தை மக்களுக்கு ஊட்டுவதாக இருக்கிறது. இப்பேர்ப்பட்ட கிளர்ச்சிகரமான போஸ்டர்கள் நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்து விளைவிக்கின்றன. இந்தப் போஸ்டர்கள், இப்படிப்பட்ட விட்ரசர் ஆகியவைகளையெல்லாம் அறவே தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் என்ன எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவைகளில் அரசாங்கம் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகின்றது. காவல் துறையும் அவர்களுடைய விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்து வருகிறார்கள். அதிலே இன்னும் சொல்லப்போனால், ஆந்திராவை சேர்ந்த தீவிர கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அங்கேகூடப் பிடிபடமுடியாமல், சென்னையில் வந்து இரகசியக் கூட்டம் போட்டுக்கொண்டிருந்த நேரத்தில் தமிழக அரசின் காவல் துறையினர் திறமையாக நாகிரெட்டி என்கிற அப்படிப்பட்ட தலைவர் உட்பட ஒன்பது பேர்களைக் கைது செய்து ஆந்திராவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். பொதுவாக, சட்டசபையில் ஒத்திவைப்புத் தீர்மானம்

[திரு. எம். ஆர் கண்ணன்] [1970 மார்ச் 5

வேளாண்மைத்துறையை எடுத்துக்கொண்டாலும் இந்த அரசு நல்லபல பணிகளைச் செய்து வருகிறது. புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலைகள் போன்ற பல வசதிகளைச் செய்து வந்தும் காங்கிரஸ் நண்பர்கள் குறைசொல்கிறார்கள், பாராட்டவில்லை என்றால் இவர்களுடைய பாராட்டுதல்களை யாரும் எதிர்பார்க்க வில்லை. இவர்கள் பாராட்ட வேண்டிய அவசியமும் இல்லை. நாங்கள் மக்கள் ஆதரவைப் பெற்று வந்திருக்கிறோம். மக்கள் பாராட்டுகிறார்கள்.

"நீங்கள் தேர்தல் காலத்தில் என்ன என்ன வாக்குறுதிகளைக் கொடுத்தீர்களோ அவற்றை நிறைவேற்றவில்லை" என்பதாகவும் காங்கிரஸ்காரர்கள் எங்களைக் குறை சொல்கிறார்கள். எங்கள் முதல் அமைச்சர் திருச்சி மகாநாட்டில் மிகமிகத் தெளிவாக, விளக்கமாக மக்களுக்கு என்ன என்ன வாக்குறுதிகளைக் கொடுத்தோமோ அவை ஒவ்வொன்றையும் நான் நிறைவேற்றி வருகிறோம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்றோம். பெயர் வைத்தாகிவிட்டது.

சுயமரியாதைத் திருமணத்தை சட்டபூர்வமானதாக ஆக்க வேண்டும் என்று சொன்னோம். அதற்காக சட்டம் கொண்டுவந்து அதைச் சட்டபூர்வமானதாக ஆக்கிவிட்டோம்.

எதிர்க்கட்சிகளுக்கு மதிப்புத் தரவேண்டும் என்று சொன்னோம். அவர்களுக்குப் போதுமான மதிப்பைக் கொடுத்தே அவர்களுக்கு உண்டான மரியாதையைக் கொடுத்து வருகிறோம்.

இந்தி மொழியை எதிர்க்கவேண்டும் என்று சொன்னோம். நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பிறகு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள்தான் நம் மாநிலத்தில் இருக்கும், இந்தி கிடையாது என்று அதை அறவே எடுத்தோம். மொழிப் பிரச்சினையில் தமிழக அரசு குழம்பிக்கொண்டிருக்கிறது என்கிறார்கள் காங்கிரஸ் நண்பர்கள். நாங்கள் குழம்பவில்லை. திட்டவட்டமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம், நாங்கள் வந்த பிறகு.

தமிழுக்கு அளிக்க வேண்டிய முதல் ஸ்தானத்தைக் கொடுத்த திருக்கிறோம். உலகத் தமிழ் மகாநாடு நடத்தி அதன் பெருமையை உயர்த்தியிருக்கிறோம்; மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

சேலம் இரும்பு உருக்காலைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்றோம். அதற்கு வேண்டிய முயற்சியை எடுத்து, மத்திய சர்க்கார் எடுத்து நடத்தாவிட்டாலும் நாமே எடுத்து நடத்துவது என்கிற அளவில் காரியங்கள் நடந்துகொண்டிருக் கின்றன.



1970 மார்ச் 5] [திரு. எம். ஆர். கண்ணன்]

கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலையை அமைக்கவேண்டும் என்றோம். அது நடந்து வருகிறது.

கல்பாக்கம் திட்டத்தை வற்புறுத்தினோம். நடைபெறுகிறது.

சென்னைக்குக் காவிரி நீரைக் கொண்டுவரவேண்டும் என்றோம். சென்னைக்குக் காவிரி நீர் வந்துகொண்டிருக்கிறது. அதாவது, வீராணம் திட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்துகிறோம். ஆக நாங்கள் தேர்தல் அறிக்கையில் என்ன என்ன சொன்னோமோ அவற்றைத்தான் செயல்படுத்தி வருகிறோம். எதையும் விட்டுவிட வில்லை. ஆசிரியர்கள், கிராமாதிகாரிகளின் நிலையை உயர்த்த வேண்டும் என்றோம். உயர்த்தி வருகிறோம்.

உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவுக்கட்டுப்பாட்டை எடுத் திருக்கிறோம். இன்னமும் கூட தான் சொல்வேன். 15 சதவீதம் வாங்கிக் கொள்வது என்கிற கட்டுப்பாட்டைக் கூடத் தளர்த்தி விடலாம். முழுக் கட்டுப்பாட்டையும் நீக்கி—அரசுக்கு அரிசி வாங்குகிறபோது டெண்டர் மூலமாக நல்ல ரக அரிசியையே வாங்கி வைக்கலாம். இதனால் கொஞ்சம் அதிகமாகச் செல வானாலும் கூட—சப்ஸிடி மூலமாக ஈடுசெய்துகொள்ளலாம். அப் படிச் செய்வதனால் இந்த 15 சதவீதம் கட்டுப்பாட்டினால் ஏற்படக் கூடிய ஒழுங்கீனங்கள் நடைபெறாதிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக, எங்கள் கட்சி மக்களுக்கு என்ன என்ன வாக்குறுதிகளைக் கொடுத்ததோ அவற்றைத்தான் செயல்படுத்தி வருகிறது என்று பி.ப. 1-30
தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு மேலும் பல நன்மைகள் செய்வதற்காக நாம் மத்திய அரசிடம் குவிந்திருக்கின்ற அதிகா ரங்கள் மாநிலங்களிடம் தரப்படவேண்டுமென்று சொல்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மத்தியிலும் ஒரே கட்சியின் அரசு, மாநிலத்திலும் ஒரே கட்சியின் அரசு என்று சொல்லிக்கொண்டு மத்திய அரசைத் தட்டிக் கேட்காமல் மக்களுடைய எண்ணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்த காரணத்தினால்தான் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டார்கள். நாங்கள் ஆட்சியிலே இருக்கின்றபொழுதும் சரி, இல்லாதபோதும் சரி மக்களுடைய உண்மையான எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற காரணத்தினாலே தான் நாங்கள் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கிறோமே ஒழிய, வீண் வம்புக்காக அல்ல. காலஞ்சென்ற முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வழிநின்று நாங்கள் ஆட்சி நடத்து கிறோம். இப்படிப்பட்ட பட்ஜெட்மீது பேசுவதற்கு ஒவ்வொரு வருக்கும் 10 நிமிடங்கள், 7 நிமிடங்கள் என்று கொடுத்தால் அது மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவே அருள்கூர்ந்து சபைத் தலைவர் அவர்கள் இதையோசித்து ஓரளவுக்கு டைம் அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய கொள்கை அறிஞர் அண்ணாவின் வழி நின்று

என்கிற மாணவியின் இரண்டு காதணிகள், ஒரு மோதிரம். ஒரு கடிகாரம்; செல்வி பத்மஜான், செல்வி எமிலி என்கிற மாணவிகளிடமிருந்து முறையே முக்கால் சவரன் மதிப்புள்ள காதணியும், 75 ரூபாய் மதிப்புள்ள புடவை—ஆகியவை களவு போய் விட்டதாகப் புகார் செய்யப்பட்டது. குவார்ட்டர்சில் வேலை செய்யும் பணியாளர்கள் இதில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று போலீசார் அவர்களை விசாரித்தனர். போதுமான துப்பு இன்னும் கிடைக்கவில்லை.

## பி. டி. ஆசிரியர் மாநாடு

* 232 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 மார்ச் மாதம் கோவை மாவட்டத்தில் நடந்த பி.டி. ஆசிரியர்கள் மாநாட்டின் முடிவை ஒட்டி அவர்களின் கோரிக்கைகள் அரசுக்கு அனுப்பப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அந்த மாநாட்டிலே எழுப்பப்பட்ட பல கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. சில அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்னென்ன ? அவற்றில் எவை அரசினரால் கவனிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகளோடு இணைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதற்கு நடவடிக்கை எடுத்து 13—1—1970-ம் தேதியன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். வீட்டு வாடகைப்படி தருவதைப் பற்றி இப்போது இருக்கிற வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மருத்துவ வசதி எல்லா ஆசிரியர்களுக்கும் செய்து தரப் பட வேண்டுமென்பதும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மாநில அரசின் அவார்டு வழங்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஏற்கெனவே துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமே ஸ்டேட் அவார்டு வழங்கப்பட்டு வருகிறது. இது 35 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் விதம் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. தற்போது மேலும் 10 மாவட்டங்கள் அதிகப்படுத்தி 45 மாவட்டங்[illegible] ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவார்டு வழங்கப்பட[illegible] அவார்டை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்





கும் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டில் இருந்து உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அவார்டு தரப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மற்றொரு கோரிக்கை படியைச் சம்பளத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்பது. இது எல்லாத் துறையினரையும் பொருத்த பிரச்சினை. இதைச் சம்பளக் குழு கவனித்துக் கொண்டிருக்கிறது. சம்பளக் குழு இது பற்றிய தீர்மானத்தை எடுத்த பிறகு இது பற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, பி.டி. டிரெயினிங்குக்கு எடுக்கும்போது மூன்று மாதம் தமிழாசிரியர்கள் ஆக வேலை செய்தால்தான் எடுத்துக்கொள்ளுகிற நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக மாற்றம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வந்ததா ? அரசு அதிலே மாறுதல் செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

## *Building for Sundhakkudi High School.*

* 233 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the construction of a high school building in Sundhakkudi village of Ariyalur Panchayat Union in Tiruchirappalli district was sanctioned in 1963;

(b) the total estimate of the construction; and

(c) whether construction of the school building has been completed?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(அ) ஆம்.

(இ) ரூபாய் 25,000.

(உ) கட்டிட வேலை தரைமட்டம் வரை பூர்த்தி அடைந்துள்ளது. வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

**திரு. நா. காசிராமன் :** இந்தப் பள்ளிக்கூடத்தில் எத்தனை மாணவர்களுக்கான வசதியோடு கட்டடம் கட்டப்படுகிறது ? இந்த வேலை எப்போது பூர்த்தியாகும் என்று அரசு உறுதி கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எவ்வளவு மாணவர்களுக்கு என்று குறிப்பு இல்லை. 25,000 ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படுகிறது. இப்போது தரைமட்ட அளவுக்கு (ஃப்ளோர் லெவல்) வந்திருக்கிறது. இது விரைவில் முடிக்கப் பெறும் என்று தலைமைப் பொறியர் அறிவித்திருக்கிறார்.

**திரு. ஆர். கருப்பையா :** இந்தக் கட்டடம் தரைமட்ட நிலையிலேயே கடந்த நான்கு ஆண்டுகளாக நின்று வருகிறது. இதைப்பற்றி நாங்கள் பல முறை சர்க்காரிடம் எடுத்துச்

கள், கவன ஈர்ப்புகள், கேள்விகள் என்று இப்படி அடிக்கடி கேட்பதன் காரணமாக இந்தச் செய்திகள் பொதுமக்களுக்கு அதிகமாக விளம்பரமாகிக் கொண்டிருக்கின்றன என்பது என்னுடைய எண்ணமாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாசேதுங் சுவரொட்டிகளை ஒட்டியதற்காக இதுவரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள்? எத்தனை பேருக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது? தமிழகத்தில் தலைமறைவாக இருக்கும் நக்ஸல்பாரிகள் எவ்வளவு பேர்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பல இடங்களில் கைது செய்யப்பட்டார்கள். சிலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தலைமறைவாக இருப்பவர்களின் எண்ணிக்கை தெரியுமானால் அவர்கள் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருப்பார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தமாதிரி நிலைமைகளைத் தடுப்பதற்காக போலீஸ் இலாகாவிலே தனிப் பிரிவை ஏற்படுத்தி அதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போதே கேரள, ஆந்திர மாநில எல்லைகளில் இப்படிப்பட்ட காவல் துறையினர் தனிப் பிரிவாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். தேவைப்படுமானால் மேலும் காவல் துறை அந்த அளவுக்குத் தீவிரப்படுத்தப்படும்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** மாவோவின் நூல்கள் சட்டப் பூர்வமாக இந்தியாவுக்குள் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற ஒன்று; அது இந்தியாவில் எங்கும் கிடைக்கும். தவறான கருத்துக்களை சரியான கருத்துக் கொண்டே சமாளிக்க வேண்டும். கருத்துக்குக் கருத்து மோதவேண்டும். நமக்கு அனாவசியமான பிராந்தி, பயம் இந்த மாதிரி பீதியை அடையச் செய்கிறது. இந்த விஷயத்தைத் திரும்பத் திரும்ப எழுப்பிக் கொண்டிருப்பதில் பயன் எதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** கருத்துக்குக் கருத்து போராட வேண்டியதுதான். அதை மீறி குற்ற ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டுமே அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது பற்றி அரசு விளக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதே கருத்தைத்தான் நான் முதலிலே சொன்னேன். இதை அதிகமாகக் கிளறிப் பார்க்க வேண்டியதில்லை. கருத்துக்குக் கருத்து போராடலாம் என்று சொன்னார்கள். இதிலே மாவோவின் புத்தகங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்றாலும் கூட. எடுத்து எழுதப்



படுகின்ற வாசகங்கள் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறுவது போல் கருத்துக்குக் கருத்து பதில் அளிக்கும் வகையில் இல்லை. அந்த வாசகங்கள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன.

"துப்பாக்கிக் குழலிலிருந்துதான் அரசியல் அதிகாரம் வளர்கிறது. மே தினத்தன்று படைக்கலம் ஏந்த நாங்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம். தோட்டாக்கள் வாயிலாகவே விடுதலையை அடைய முடியும். வாக்குகள் மூலம் பெற இயலாது. மா. சே. துங் பாதையை நாங்கள் பின்பற்றுவோம்".

மேற்கண்ட வாசகங்களின் காரணமாகத்தான் தமிழ்நாடு காவல் துறையினர் நிலைமைகளைத் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

## Thefts in Nurses Home

* 231 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of frequent thefts in Nurses Home near General Hospital in recent times; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 1969-ம் ஆண்டில் செவிலியர் விடுதியில் மூன்று திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன. 1970-ல் இதுவரை எவ்வித திருட்டும் நடைபெறவில்லை.

(ஆ) 1969-ம் ஆண்டில் நடைபெற்ற மூன்று திருட்டு சம்பவத்திலும், போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். போலீசார் மேற்கொண்ட விசாரணையில் போதிய அளவு துப்புகள் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

**திரு. கே. விநாயகம் :** அந்த இடத்தில் திருட்டுப் போனதாகச் சொல்லப்படுகின்ற பொருளின் மதிப்பு என்ன? இவ்வளவு திறமையான போலீசாரை வைத்துக் கொண்டிருந்தும் கூட அதைக் கண்டு பிடிக்காமல் போனார்கள் என்று சொல்வது அரசுக்கு இழுக்கு அல்லவா? வெட்கப்பட வேண்டிய நிலைமை அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு கூடாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தச் சிறிய திருட்டைக் கண்டு பிடிக்க முடியாமல் போனது வெட்கப்பட வேண்டிய விஷயம் அல்லவா என்று திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். முதலிலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது பெரிய குற்றத்தைச் செய்த ஒரு பெரிய கும்பலையே பிடித்தார்கள் என்று சொல்லும்போது திரு. விநாயகம் அவர்கள் எழுந்து 'அவர்கள் பாராட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள் அல்லவா?' என்று கூறியிருந்தால் நாம் கூடப் பாராட்டி இருக்க முடியும். திருட்டுப் போன சாமான்கள் செல்வி மங்கையர்க் கரசி என்கிற மாணவி அறையில் 40 ரூபாய்; செல்வி அம்சவல்லி

சொல்லியும் அதே நிலையில்தான் இருக்கிறது. இதுபோன்ற நிலை இங்கு மட்டும் அல்லாமல் பல இடங்களில் இதே போன்று பள்ளிக் கூடக் கட்டடங்கள் முற்றுப் பெறாமலே பல ஆண்டுகளாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் அவசரமாகக் கட்டித் தர வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா? இதை எடுத்த காண்ட்ராக்டரால் தாமதம் என்றால் அந்த காண்ட்ராக்டரை ரத்து செய்துவிட்டு புதிதாக காண்ட்ராக்டுக்கு விட்டு கட்டடத்தைத் துரிதமாக கட்டி முடிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதிலே தேவை யற்ற அளவுக்கு காலதாமதம் ஏற்பட்டு விட்டது என்பதைத் தலைமைப் பொறியரே ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித் திருக்கிறார். நாலைந்து ஆண்டுகளாக நின்று கொண்டிருக்கும் நிலையில் அதை விரைவாகக் கட்டி முடிக்கப்பட வேண்டு மென்பதற்கான முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. விரைவில் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

**திரு. நா. காசிராமன்:** நான்கு ஆண்டுகள் காலதாமதமானதன் காரணமாக இந்தக் கட்டடத்திற்கான செலவும் அதிகமாகக் கூடும். இந்தக் காலதாமதத்திற்குக் காரணமான காண்டிராக்டர் களிடமிருந்து இந்த நஷ்டத்தைப் பெற அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தக் கால தாமதத்திற்கு யார் காரணம் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. காண்டிராக்டர் காரணமா, அல்லது அதிகாரிகள் காரணமா அல்லது வேறு காரணமா என்று முடிவு செய்யப்படவில்லை. வழித்தடங்கள் சரியாக இல்லை என்று காரணம் காட்டி யிருக்கிறார்கள். அது முழுவதும் பொருத்தமான காரணம் அல்ல. மழைக் காலத்தில் வேண்டுமானால் போக்குவரத்து தடைப் படலாம். மற்றக் காலங்களில் வேலை நடைபெற்றிருக்கலாம். இது 1963–64-லேயே திட்டமிடப்பட்டுள்ள ஒன்று. விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். காலதாமதத்திற்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து அதற்கு மேல் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### அரசுக் கல்லூரி முதல்வர்கள்.

*234 வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வகுப்புகளுக்குச் சென்று பாடம் நடத்ாது, அலுவலகக் காரியங்களை மட்டும் பார்த்துக்கொண்டு வருகின்ற அரசினர் கல்லூரி முதல்வர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஒருவருமில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண்கள் 235, 236 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன. கேள்வி எண் 237 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### *New Rice Mill in Pandravedu village*

* 238 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether applications are pending now before the Food Department, Government of Tamil Nadu for starting new rice mill in Pandravedu village in Palliput sub-taluk in Chingleput district;

(*b*) whether any petition was sent by the villagers of Pandravedu objecting to the grant of rice mill permit very near the elementary school in the said village in September, October 1969; and

(*c*) if so, the particulars thereof and the steps taken thereon?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம். இரண்டு மனுக் கள் வரப்பெற்று, அவைகளின் மீது முடிவெடுக்கப்பட்டது.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின்:** பொதுவாக ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கிற நேரத்தில் பக்கத்தில் வீடுகள் இருக்கின்றனவா அல்லது பள்ளிகள் இருக்கின்றனவா அல்லது புதிய கட்டடங்கள் இருக்கின்றனவா என்று பார்த்து அந்தப் பக்கத்திலுள்ள இடங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று சுற்றறிக்கையை அரசாங்கம் அந்த அதிகாரிகளுக்கு அனுப்புமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதுபோன்ற ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது மாவட்ட சுகாதார அதிகாரியுடைய அத்தாட்சி பெற்றதற்குப் பிறகுதான் வழங்கப் படுகிறது.

**திரு. கே. விநாயகம்:** இந்தக் குறிப்பிட்ட ரைஸ் மில் என் தொகுதியில் இருப்பதால் அரசாங்கம் எடுத்த முடிவு சரியான முடிவுதான் என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நன்றி. தெரிந்துதான் அப்படி முடிவு எடுத்தது.

### *Study team of Indian Institute of Foreign Trade*

* 239 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any study team of the Indian Institute of Foreign Trade visited this State about the 20th June 1969;

(b) if so, the details thereof; and

(c) whether the views of the Tamil Nadu Government were provided to them?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) & (உ) இம் மாநிலத் தொழில் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகளைப்பற்றி ஆராயும்படியும் வெளி நாட்டுச் சந்தைகளில் அதிக அளவு விற்பனையாகும் தொழில், வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகத் தகுந்த நடவடிக்கைகளை வகுக்கும்படியும் புது டில்லியிலுள்ள வெளிநாட்டு வர்த்தகம் குறித்த இந்திய நிறுவனத்தை இந்த அரசு கேட்டுக்கொண்டது. இந்த நிறுவனம் பணிந்தனுப்பிய செயற்குறிப்புகள், 1969 ஜூன்—ஜூலைத் திங்களில் தலைமைச் செயலகத்தில் நடந்த தொடர்ச்சியான பல கூட்டங்களில் தொடர்புள்ள அதிகாரிகளுடன் கலந்து விவாதிக்கப்பட்டன. இந்தக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், இந்த நிறுவனம் தனது இறுதி அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளது. இது ஆய்வில் உள்ளது.

**திரு. எம். சுரேந்திரன் :** நம் ராஜ்யத்திலிருந்து வெளி நாட்டு வாணிகத்திற்கு ஏற்ற பொருள்கள் எவை எவை இருக்கின்றன. எவ்வளவு எவ்வளவு ஏற்றுமதியாகிறது என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இவைகள் ஆய்வு செய்யப்பட்டதில் கிட்டத்தட்ட 63 பொருள்கள் நம்முடைய மாநிலத்தில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். 1967–68-ம் ஆண்டு கணக்குப்படி இந்திய நாட்டின் மொத்த ஏற்றுமதி 1,200 கோடியில் நம் மாநிலத்திலிருந்து 71 கோடி வரை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதை இன்னும் விரிவாக்குவதற்கு என்னென்ன யோசனைகள் என்பதைப் பற்றி அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் தொழில் துறையில் சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் கூட்டி அழைத்துப் பேசுவதற்கு முடிவு செய்திருக்கிறது.

*Visit of Thailand Trade Delegation to Tamil Nadu*

* 240 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Trade Delegation from Thailand visited the State around 22nd August 1969; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) தாய்லாந்து பொருளாதார அலுவல்கள் அமைச்சர் மேதகு திரு. புன்காகு அத்தகோன் அவர்களும், இந்திய அரசு நல்லுறவு அதிகாரி, தாய்லாந்துத் தூதரக அலுவலகர் ஒருவர் உள்ளிட்ட ஒன்பது பேர் அடங்கிய குழு ஒன்றும் 1969-ம் ஆண்டு [illegible] புதுடில்லியிலிருந்து சென்னை வந்து



சேர்ந்தனர். அக் குழுவினர் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, டி.ஐ. சைக்கிள்ஸ் (இந்தியா) நிறுவனம், ஈசன் இன்ஜினியரிங் கம்பெனி, அசோக் லேலந்து நிறுவனம் ஆகியவற்றைச் சென்று பார்வையிட்டனர்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தாய்லாந்து, பக்கத்திலுள்ள மலேஷியா நாடுகள் போன்ற வெளிநாடுகளில் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற ஹெவி எலக்ட்ரிக்கல் ருட்ஸ்க்கு ஏராளமான கிராக்கியிருப்பதால் நமது அரசு தூதுக்குழு ஒன்றை அனுப்பி அங்கு நம் பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு மார்க்கம் இருக்கிறதா என்று காண உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே அடிக்கடி நம் தொழில் அதிபர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை பார்ப்பதற்காகச் சென்று வருகிறார்கள். நாமும் அதற்கு ஊக்கம் அளித்து வருகிறோம். மலேஷியா நாட்டைப் பொருத்த அளவிற்கு நம் தொழில் அதிபர்கள் குழு அங்கு சென்று வந்தது. இங்கு கூட மலேஷியாவிற்கு அதிகமான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு என்று ஒரு சங்கம் அமைத்து அவர்களும் இதைப் பற்றி ஆராய்கிறார்கள். அப்படி ஏற்றுமதி செய்வதோடு நம் தொழில் அதிபர்கள் மலேஷியா நாட்டில் தொழில் தொடங்குவதற்கு சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மலேஷியா நாட்டிற்கு இங்கிருந்து ஒரு தூதுகோஷ்டி போனதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கு விலைகள் குறைவாக இருக்கிறது, இங்கே விலைகள் கூடுதலாக இருக்கிறது. இப்படியிருக்கும்போது நமக்கு அது கட்டுப்படியாகுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்களின் கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அங்கு உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கும் நாம் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கும் விலை வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நம் நாட்டில் உற்பத்திச் செலவு குறைவாக இருந்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். சில சமயங்களில் வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும் என்ற காரணத்திற்காக சில சலுகைகள் கொடுக்கிறோம். நம் மாநில அரசு கூட சில வரிச் சலுகைகளைக் கொடுக்கிறது. அப்படிச் சலுகைகள் கொடுக்கிற காரணத்தினால், நாம் அன்னியச் செலாவணி பெறமுடிகிறது. இது உலக வியாபாரத்தில் ஒரு அங்கம்.

*சித்திரைச்சாவடி கண்டசாரி சர்க்கரை ஆலை.*

* 241 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா, சித்திரைச்சாவடி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்டசாரி சர்க்கரை ஆலை (அன்னபூரணி) வேலை செய்யவில்லை என்பது உண்மையா?

[1970 மார்ச் 6

(இ) ஆம் எனில், அதற்கு அரசினரால் தரப்பட்ட கடன் வசூலிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்த நிறுவனத்திற்குத் தரப்பட்ட கடன் வசூலிக்கப் பட்டுவிட்டது.

**இராமநாதபுரம் மாவட்ட கிழக்குப் பகுதிக்குப் பாசன வசதிகள்**

* 242 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்குப் பகுதியில், காட்டாற்று வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி பாசன வசதி செய்து கொடுக்க, சிறு சிறு அணைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

*Compensation to family of palmyrah tappers.*

* 243 Q.—THIRU J. JAMES :
THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government is paying compensation to the family of palmyrah tappers who met with fatal accident in the course of their work;

(b) what is the rate of compensation; and

(c) how many families have been benefited under this scheme in each district in Tamil Nadu?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) அவ்வித நடவடிக்கை எதுவும் அரசு எடுக்கவில்லை. ஆனால், பனைமரமேறும் தொழிலாளி களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, பனைவெல்லம் தயாரிக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் முறையான பணியாளர்-உறுப்பினர் தொழில் புரிகையில் விபத்துக் குள்ளானால், அவருக்கு இழப்பீட்டுத் தொகை அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒப்பளித்தது.

* 303-304-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1970 மார்ச் 6]

(இ)—

| | |
|---|---|
| | ரூ. |
| (1) சிறு விபத்துக்கு—<br>சிறு காயங்களுடன் இரண்டு அல்லது இரண்டு திங்களுக்கு மேல் தொடர்ந்து பணிபுரிய இயலாமல் உள்ளவர்களுக்கு) .. .. | 100 |
| (2) பெரும் விபத்திற்கு—<br>பெரு விபத்துக்குள்ளாகி தொடர்ந்து இரு பருவக் காலங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்டு வேலை செய்ய முடியாதிருந் தால் .. .. .. .. .. | 300 |
| (3) இறந்து விட்டால் .. .. .. .. .. | 1,000 |

(உ) இதுவரை எந்தக் குடும்பமும் இத் திட்டத்தின் கீழ் பயனடையவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : இந்தக் கோரிக்கை எவ்வளவு நாட்களாக இருந்து வந்தது? இந்தக் கோரிக்கை எந்த ஆண்டி லிருந்து செயல்படுத்தப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த வாரியம் ஏற்பட்ட நாளிலிருந்து இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஜூன் 1969-ல் இருந்து நாம் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மாதிரி உயிர் இழப்பு ஏற்பட்டவர்களுக்கு என்னென்ன முறையில் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்ற விதிமுறைகளைத் துரிதமாகப் பிறப்பித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா? இந்த சம்மேளனத்திற்கு விடாமல் அரசாங்கமே நேரடியாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே விதிமுறைகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்துமாறு அறிவிக்கப்பட் பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்தச் சம்மேளனம் மூலமாக விண்ணப்பங்கள் வரவேண்டும். அதை மாவட்ட கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் அதிகாரிகள் பரிசீலனை செய்து மேல் இடத்திற்கு அனுப்பி ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதுதான் இப்போது வகுக்கப்பட்டுள்ள விதிகள். அது ஏற்கனவே எல்லோ ருக்கும் அறிவிக்கப்பட்டும் இருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : அபாயகரமான பனை ஏறுகிற தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் அதிகமாக கூட்டுறவு முறையில் இல்லை என்ற காரணத்தினாலும், அவர்கள் பனை ஏறுகிற காலத்தில் அபாயகரமான நிலை ஏற்பட்டு கீழே விழுந்து இறந்து விட்டால் அந்த ஏழைக் குடும்பம் தவிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்ற காரணத்தினாலும் கூட்டுறவுத் துறையில் அல்லாது தனியாக வேலை செய்கிறவர்களுக்கும் அவர்களும் கீழே

*Thondamuthur Co-operative Stores*

* 245 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the auditor in his Final Audit Special Report for 1962–64 to the District Co-operative Audit Officer, Coimbatore, has pointed out a number of irregularities and misappropriations in the Management of the Thondamuthur Co-operative Stores Limited; and

(*b*) if so, the details of major irregularities and misappropriations?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :*** *தலைவரவர்களே, (அ) ஆம்.*

*(இ) தொண்டாமுத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலைத் தலைவர் 8–7–1963 முதல் 1–5–1964 வரையுள்ள கால அளவில் கோயம்புத்தூர் மத்திய வங்கியிலிருந்து 11,060 ரூபாய்வரை காசோலைகள், (செக்) மூலமாக எடுத்திருந்தார்கள். ஆனால் எடுக்கப்பட்ட அந்தப் பணம் கூட்டுறவுப் பண்டகசாலையின் ரொக்கப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. இது இறுதித் தணிக்கைபற்றி தணிக்கையாளர் அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.*

**** 246 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :*** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கொண்டாமுத்தூர் கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஊழல் சம்பந்தமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?*

*(இ) எத்தனை பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது ? அதன் விவரம் யாது ?*

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :*** *தலைவரவர்களே, (அ) ஒருவரும் கைது செய்யப்படவில்லை.*

*(இ) தொண்டாமுத்தூர் கூட்டுறவு பண்டகசாலையில் 7–7–1963 முதல் 25–3–1966 வரை பொய்க் கணக்குக் காட்டி ரூ. 10,500-ஐக் கையாடியதாக நான்கு பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. பின்னர் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.*

Dr. H. V. HANDE : May I know whether it is a fact that the President of Thondamuthur Co-operative Stores had been withdrawing large sums of money from the District Co-operative Bank even though cash balances remained in the Stores in 1963-64? Has any case been registered against the President and three others in April 1968 for misappropriation and mismanagement and the case withdrawn in July 1968? If it is so, may I know the reasons for withdrawing the case?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :*** *தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு பண்டகசாலையில் ரொக்கப் பணம் கையில் இருக்கும் போது 10,500 ரூபாய் வரையில் செக் எழுதி வங்கியிலிருந்து பணம்*





*பெற்று, அது வரவு வைக்கப்படவில்லை. இந்த வழக்கை வாபஸ் பெறக் காரணம் என்ன என்று கேட்டார்கள். இதற்குக் காரணம் நான் பார்த்த வரையில், மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுடைய தாராள மனப்பான்மையும், யாராக இருந்தாலும், பகைவராக இருந்தாலும், எதிர்க்கட்சியிலே இருந்தாலும் எவராக இருந்தாலும் அவர்களுக்குக்கூட அருள் காட்டுகின்ற கருணையுள்ளமும், என்பதைத் தவிர வேறு ஒரு காரணமும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.*

***திரு. வி. கே. கோதண்டராமன் :*** *கருநாகத்தினிடத்திலே கருணை காட்டக்கூடிய . . . .*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *இதெல்லாம் வேண்டாம், கருநாகமெல்லாம் வேண்டாம்.*

***திரு. வி. கே. கோதண்டராமன் :*** *சாதாரண மக்களாக இருந்தால் அவர்களிடத்திலே கருணை காட்டக்கூடிய அளவிற்கு நிலைமை இல்லை. இப்படி 1963–64-லே மட்டும் பத்தாயிரக்கணக்கான ரூபாய்கள், கண்ணுக்குத் தெரிந்து, இன்னும் கண்ணுக்குத் தெரியாமல் எவ்வளவு என்று சொல்ல முடியாது, அப்படிக் கையாடல் செய்திருக்கக்கூடிய அவர்கள் மீது இது போன்ற வழக்குகளை, கருணை காட்டாது, தொடரவேண்டும். அதே நேரத்தில் கைது செய்யப்படவுமில்லை. வழக்குத் தொடரப்பட்டது என்று சொன்னாலும் பல வருஷங்களாக நீடிக்கும் அளவுக்கு இருக்கிறதே, இப்படி நீடிக்காமல் உடனுக்குடனேயே அந்த வழக்குகளை முடிக்கக்கூடிய அளவுக்கு 'டிரிபியூனல்' கோர்ட்டுகளை ஏற்படுத்தும் அளவுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள், அது என்னவாயிற்று, இனிமேலாவது உடனடியாகக் கொண்டுவர உத்தேசம் உண்டா ?*

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :*** *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருநாகம் என்றெல்லாம் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அதிலே சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்ற காரணத்தினாலே.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *அவர் கருநாகத்தை விட்டு விட்டார்கள். அவர் கருநாகம் என்று சொன்னார், நான் கருநாகம் வேண்டாமென்று சொன்னேன். அவரும் விட்டு விட்டார்.*

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :*** *நண்பரவர்கள், சட்டமன்ற உறுப்பினரைக் குறிப்பிட்டு கருநாகம் என்று சொல்லிய காரணத்தினால், அப்படிப்பட்ட கொடுஞ்சொற்கள் வேண்டாமென்று சொன்னேன். யாராக இருந்தாலும் அப்படிச் சொல்ல வேண்டாமென்று அன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அளவுக்கு, எனக்கு கருணை உள்ளம் இல்லை. ஆனால் அவர்கள் பாதையிலே, அவர்கள் வழியிலே போக வேண்டுமென்ற கடமையுணர்ச்சி இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் மீதுள்ள கிரிமினல் வழக்குகளை அருள்கூர்ந்து மன்னித்துவிட்டார்கள். ஆனால்*

தொடர்ந்து, கூட்டுறவு சங்கச் சட்டத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன். சம்பந்தப் பட்டவர் எழுதியிருந்தார்கள். அது என்னவென்றால், "அரசாங்கத்துக்கு 23—7—1968-ல் விண்ணப்பித்துக் கொண்டதின்பேரில், காருண்யமுள்ள சர்க்கார், அண்ணா அவர்களின் சர்க்கார், என் மீது நம்பிக்கை வைத்து, மேற்படி வழக்கை வாபஸ் பெற உத்தரவு செய்தார்கள். அதற்கு நான் நன்றியுடையவன் ஆவேன். சங்கத்தின் நிர்வாகத்தைக் குறித்து மீண்டும் நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கேள்விப்பட்டு வருந்துகிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பொதுச் சேவை செய்பவன் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டாமென்று உத்தரவு இட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்." நான் சொன்னது, கிரிமினல் வழக்குகளை, பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்கு உட்பட்டுத் திரும்பப் பெற்றிருக்கிறோம். இந்தக் கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுப்பதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** மேற்கூறிய கூட்டுறவு ஸ்டோரின் தலைவராக இத்தனை ஆண்டுகளாக இருந்தவர் யார்? கையாடல் செய்யப்பட்ட பணம் வசூலாகி விட்டதா?

(பதில் இல்லை).

### பூலுவ வட்டி ஊராட்சி கூட்டுறவு பண்ணை

*247 வினா—**திரு. இரா. மாணிக்கவாசகம்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா பூலுவ வட்டி பஞ்சாயத்திலுள்ள கூட்டுறவு பண்ணையினால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் என்ன?

(இ) தனித் தணிக்கை அதிகாரியை நியமித்து இப்பண்ணையில் கணக்குகளை தணிக்கை செய்யும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, (அ) கோவை தாலுக்கா பூலுவவட்டி பஞ்சாயத்திலுள்ள கூட்டுறவு பண்ணையைப் பற்றியது இந்த வினா. இந்தச் சங்கத்தினால் அரசுக்கு நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) இல்லை. சங்கத்தின் கணக்குகளை தணிக்கை செய்து முடிக்குமாறு கூட்டுறவு தணிக்கை அதிகாரிக்கு உத்தரவிடப் பட்டிருந்தது. தனித் தணிக்கை தேவையில்லை. அரசு இந்தச் சங்கத்திற்கு 45,000 ரூபாய் கொடுத்திருக்கிறது. அதிலேயும் 20,000 ரூபாய் வரவேண்டியிருக்கிறது. சங்கத்திலே வருஷா வருஷம் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அது சங்கத்தின் கணக்கிலே இருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Whereas the Co-operative Societies Act as it is today is found to be defective and has got loopholes, taking advantage of which people are tempted to commit





mistakes will the Government think of plugging the loopholes by bringing in a new comprehensive legislation as soon as the committee that has been appointed by the Government on this issue gives its report?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபடி இப்பொழுதுள்ள சட்டத்தில் ஓட்டைகள் சில இருக்கின்றன. இப்பொழுது சட்ட இலாகாவிலே கூட்டுறவுத் துறைக்கு என்று தனியாக ஒரு பிரிவை நமது சட்ட அமைச்சர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரிவு இயங்கி வருகிறது. அந்தப் பிரிவு இப்பொழுதுள்ள சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைப்பது மட்டுமல்லாமல், இந்தக் கமிட்டியின் சிபாரிசுகளையும் கவனித்து, ஒரு சட்டம், காம்ப்ரெஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

**திரு. இரா. மாணிக்கவாசகம்:** தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பண்ணை கணக்குகளை தணிக்கை செய்வதற்கு உத்தரவிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்பொழுது உத்தரவிடப்பட்டது? கடன் எப்பொழுது வழங்கப்பட்டது? அப்படி இருக்கும்பொழுது கூட்டுறவுப்பண்ணையை வேறு ஒருவருக்குக் குத்தகைக்கு விடுவதற்கு இந்த அரசின் சட்டம் இடம் தருகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கூட்டுறவு விவசாயப் பண்ணைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிற நிலம் 105 ஏக்கர். இது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளது. அதற்குக் கடனாக அரசு கொடுத்தது ரூ. 45,000, அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக திருப்பிக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இன்னும் அரசுக்குத் தர வேண்டிய தொகை, தோராயமாகக் கூறுகிறேன், ரூ. 20,000. ஆனால், அந்த சங்கத்தினுடைய கணக்கைப் பார்க்கிறபொழுது ஆண்டுதோறும் நஷ்டமாக இருக்கிறது. ஆகையினால், மீண்டும் அதை நன்றாக தணிக்கை செய்து, மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், அது எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தக் கூட்டுறவுப் பண்ணைக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது? அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லை என்று கூறினார்கள் அமைச்சர் அவர்கள். சொஸைட்டிக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒரு வருடத்தில் ஏற்பட்டது ரூ. 3,370. அதற்கு அடுத்த வருடம் ஏறத்தாழ ரூ. 1,000 இன்னும் அதற்கு அடுத்த வருடம் ரூ. 2,000 சொச்சம். இம்மாதிரி வருடந்தோறும் நஷ்டம் காண்பிக்கப்பட்டது.

விழுந்து இறந்துவிட்டால் அவர்களுக்கும் ஏதாவது இழப்புத் தொகை கொடுப்பதற்கு அரசு புதுத் திட்டத்தை தீட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** முதலாவதாக இந்தத் திட்டம் கதர்-கிராமக் கைத்தொழில் வாரியத்தால் செய்யப்படுகிறது. அதற்கான தொகையை வாரியத்தின் மூலம் கொடுப்பதற்கு அந்த வாரியத்தின் உறுப்பினர்களாக அவர்கள் இருந்தாக வேண்டிய அவசியம் இருக்கிறது. இரண்டாவதாக, இதை வலியுறுத்தக் காரணம் கூட்டுறவு முறையில் அவர்கள் அனைவரும் பங்கு பெற்றுப் பயனடைய வேண்டும் என்பதும் ஒரு காரணமாகும். மூன்றாவதாக, ஏற்கனவே உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்கு வாரியத்தின் மூலம் தொகை கொடுப்பதற்கு இப்போதுள்ள திட்டப்படி நாம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அனைவரும் அந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறவேண்டும் என்பதுதான் இதன் கருத்தாகும்.

**திரு. கே. விநாயகம்:** இப்படி ஒரு விதியிருந்தும் இதற்கென்று ஒரு வாரியம் அமைத்து அதன் மூலம் விபத்துக்கள் ஏற்படுகிறவர்களுக்கு நிவாரணம் தருவதாக விளம்பரம் செய்திருந்தும் கூட இதுவரையில் ஒரு குடும்பமும், ஒருவரும் பயனடையவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால் இதுவரையில் யாருக்கும் எந்த விதமான விபத்தும் இந்த அடிப்படையில் ஏற்படவில்லையா சம் நாட்டில்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பொதுவாகவே விபத்துக்கள் அதிகமாக ஏற்படவில்லை. இருந்தாலும் ஏற்பட்ட சில விபத்துக்களில் சில பல விண்ணப்பங்கள் அவர்கள் குடும்பத்திலிருந்தோ அல்லது நேரடியாகவோ அல்லது அவர்கள் உறவினர்கள் மூலமாகவோ அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அனுப்பி ஆராயச் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்று விண்ணப்பங்கள் மட்டும் பனைவெல்ல சம்மேளனம் மூலம் வந்திருக்கின்றன. அவைகளில் குறிப்பிட்டிருக்கக்கூடிய விதி முறைகள் பின்பற்றப்படாமல் இருப்பதால் அதுபற்றி ஆராயுமாறு பணிக்கப்பட்டிருக்கிறது. அது முடிந்த பிறகு தகுதியுடையவர்களானால் அவர்களுக்கு வழங்கப்படும். ஆனால், இந்த ஆண்டு விபத்துக்கள் மிகக் குறைவாக இருக்கிறது. இந்த முறை அமல்படுத்தப்பட்ட குறிப்பிட்டிருக்கிற நாள் 21-6-1969 நாள் இட்ட நடவடிக்கைகள் படி என்று குறிப்பிட்டிருக்கிறோம். அதை 1-1-1969 என்று முன்னுக்கு தள்ளி வைத்தால், மேலும் 20 பேர்கள் பயன் அடையக்கூடும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அவசியமானால் அதன் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவரவர்களே. இதில் பனைமரத் தொழிலில் [illegible] களைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். [illegible] மாவட்டத்தில் இப்படிப்பட்ட





பனைவெல்லம் அதிகமாகச் செய்கிறார்கள். அதேபோல் கோவை மாவட்டத்திலே தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, அதனால் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க உத்தேசம் உண்டா? அவர்களுக்கும் கொடுக்க வேண்டாமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பனை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கும், தென்னைமரத்திலிருந்து 'நீரா' இறக்கும் தொழிலாளர்களுக்கும் இதிலே உரிமை உண்டு.

### முகையூர் ஊராட்சி வழியாக பண்ணைப்பட்டிக்கு சாலை அமைத்தல்

*** 244 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம், புத்தூர் மணல்மேடு ரோட்டிலிருந்து பண்ணப்பட்டுக்கு, முகையூர் பஞ்சாயத்து வழியாக ரோடு அமைப்பதற்கும், பாலங்கள் கட்டுவதற்குமான கோரிக்கை கீரப்பாளையம் யூனியனிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, பண்ணப்பட்டு, முகையூர் போகின்ற மக்கள் அந்த வழியாகத்தான் போக வேண்டியிருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதனால் மீண்டும் இதனைப் பரிசீலித்து, இத்திட்டத்தை மறுபடியும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இதைப் பரிசீலிக்க வேண்டியது அந்த ஊராட்சி ஒன்றியத்தின் வேலையாகும். அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட முறையீடுகள் ஏதும் வந்திருக்கிறதா என்ற கேள்விக்கு இல்லை என்று பதில் அளித்திருக்கிறோம். அதற்கு அமைக்கப்படவேண்டிய சாலை அமைப்புக்காக நிலம் கையகப்படுத்த 3,000 ரூபாய் ஆகும் என்றும், அதிலே 3 பாலங்களைக் கட்ட 25,000 ரூபாய் செலவாகும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிச் சாலைபோட கிராமப்பணிகள் திட்டத்தின்கீழ் இரண்டாம் நிலையாக மேற்படி பணியை மேற்கொள்ள வேண்டுமென்றும், தலைமைப்பொறியாளர் தெரிவித்துள்ளார். ஆகவே, ஊராட்சி ஒன்றியம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

[1970 மார்ச் 6

*May day as paid holiday*

* 248 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government propose to declare May day as a paid holiday; and

(b) when it will be given effect to?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது. இதை செயல்படுத்துவதற்கான மசோதா ஒன்று விரைவில் சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்படும்.

THIRU K. VINAYAKAM: In the Bill that is in the offing and that will be introduced in this House, will the Government take care to bring within its purview the workers working in the private sector also? (Interruption) In that event, will the Government declare a holiday with salary for our own workers also?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** இந்த அரசாங்கத்தினுடைய எண்ணமே அதுதான். இதைப்பற்றி தொழில் அதிபர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் கூடி விவாதித்து மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தில், (ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு) இதுபற்றி தீவிரமாக முடிவு எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்பேரில் முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தீவிரமாக ஆலோசித்து, இந்த முடிவுக்கு வந்தார்கள்.

### புதிய நெல் வகை

■ 237 வின—திரு. பெ. மலேச்சாமி: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறை அரசு விதைப் பண்ணையில் ஆடுதுறை 27-க்குப் பிறகு புதிய நெல் வகை ஏதும் கண்டறியப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) ஆம், 1966-ம் ஆண்டில் ஆடுதுறை 28 வகை நெல் உருவாக்கிப் புழக்கத்துக்கு விடப்பட்டது. இது ஆடுதுறை 3, சீனரகம் சி.எச். 42 இவற்றின் கலப்பினமாகும். இது ஆடுதுறை 3-ஐ விட அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடியதாகும். ஆனால் ஆடுதுறை 27 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது விளைச்சலிலும் தானிய தரத்திலும் இது மேம்பட்டதல்ல. இது விதைத்தது முதல் 102 நாட்களில் அறுவடையாகும் பயிராகும். தண்ணீர் தேங்கி நின்றாலும் இது கதிர் சாயும் தன்மையில்லாதது. ஆடுதுறை 27-ஐக் காட்-



1970 மார்ச் 6]

டிலும் தரத்தில் உயர்ந்த புதிய நெல் வகைகளை உருவாக்கும் பணி ஆடுதுறையிலுள்ள வட்டார ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்டும் நடைபெற்று வருகின்றது.

**திரு. கே. வினயகம்:** ஏ.டி.டி. 27 என்கின்ற நெல்லைவிட பின்னாலே புதியதாக ஒரு ரகம் கண்டுபிடித்து, அதற்கு ஏதோ ஒரு புதிய பெயர், நமது அமைச்சர்களுக்குள்ளே ஒரு அமைச்சரின் பெயரை அதற்கு வைத்திருப்பதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படியென்றால் என்ன பெயர்? அந்த விதையினால் நமக்கு அதிகமாக விளைச்சல் கிடைக்குமா?

What are the important features of that variety?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** புதியதாக கண்டு பிடிக்கப்பட்ட அந்த நெல்வகை ஆடுதுறை வட்டார ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடித்தது அல்ல, கோவையில் கண்டு பிடித்ததாகும். ஐ.ஆர். 5, ஐ.ஆர். 8 இவைகளைவிட அதிகமாக விளைச்சல் தரக்கூடியது. ஒரு ஏக்கருக்கு 4,000 கே.ஜி. விளைச்சல் தரக்கூடியது. இன்னும் நல்ல சன்ன அரிசியும் கூட. அது மிகவும் நல்ல அரிசி என்று கூறப்படுகிறது. அதற்கு நம்முடைய முதல்வரின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

**திரு. ப. மகாதேவன்:** தலைவர் அவர்களே, அதே போன்று உணவு அமைச்சர் கூறியது போல, ஜெயா, பத்மா, அல்லது ஜெயா, லலிதா என்ற ஒரு வகை ரகம் வந்திருக்கிறதா? அது நடப்பில் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இருக்கிறது. ஜெயா, பத்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. விளக்கம் கோரல்

**மராட்டிய மாநிலத்தில் வாழும் தமிழர் நிலைபற்றி தமிழக முதலமைச்சர் தெரிவித்த கருத்து பற்றி மராட்டிய முதலமைச்சர் மராட்டிய சட்டமன்றத்தில் அளித்த அறிக்கை பற்றி வந்துள்ள செய்தி குறித்து.**

**திரு. க. இராமமூர்த்தி:** ஆன் எ பாயிண்டு ஆப் கிளாரிபிகேஷன், ஸார், தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள் மகாராஷ்டிர தமிழர் நிலை பற்றி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த பொழுது, அதற்கு பதில் அளிக்கையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் மராட்டிய மாநிலத்திலுள்ள தமிழர்கள் நிலை பற்றி மராட்டிய மாநில முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுத இருப்ப-

மேற்கொண்டுள்ள ஹேமாவதித் திட்டம் நிறுத்தப்படாது, தொடர்ந்து வேலை நடந்து கொண்டுதான் இருக்குமெனக் குறிப்பிட்டுள்ளார். அணைக் கட்டி முடித்தால் தஞ்சை, திருச்சி இரண்டு மாவட்டங்களும் பெருவாரியாக பாதிக்கப்பட்டுவிடும். தஞ்சை மாவட்டம் காவிரி பாசன முழுமையும் பாதிக்கும். எனவே, இது மிக முக்கியத்துவம் பெற்ற பிரச்சினையாக உள்ளதால் நமது சட்ட மன்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்" என்று ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் இது எப்படி அவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தக்க முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கட்சிக்கு ஒருவர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு. கருப்பையா அவர்கள் முதலில் பேசட்டும்.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, குறிப்பாக தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் தமிழகத்திற்கு உணவு வழங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், இந்த ஹேமாவதி திட்டத்தை, அணையைக் கட்டினால், தஞ்சைக்கும், திருச்சிக்கும் தண்ணீர் கிடைக்காத நிலைமைகள் ஏற்படும். தஞ்சையினுடைய நிலவளம் குறையாமல் இருக்க, தமிழ் நாட்டிற்கு உணவு கிடைப்பதில் பாதகம் ஏற்படும் என்பதால், ஹேமாவதி அணை நிறுத்தப்பட வேண்டும். அப்படி நிறுத்தப்படாவிட்டால் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்று சொல்லக்கூடிய தஞ்சை பாதிக்கப் படும். இதுபற்றி மத்திய சர்க்காருக்கு உடனடியாக எழுத வேண்டும். மைசூர் சர்க்காரைவிட நம்முடைய சர்க்காருக்கு மத்திய சர்க்காரோடு கடிதம் எழுத அதிகமான வாய்ப்பும் வசதியும் இருப்பதால், இந்திய பிரதம அமைச்சரோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, இந்தத் திட்டத்தை மைசூர் சர்க்கார் நிறுத்திவைக்க வேண்டும் என்று கோரவேண்டும். அதோடு, தஞ்சைக்கு தண்ணீர் வரவில்லை என்றால், வடிமுனைக் குழாய்கள் கூட பயனற்றதாகப் போய்விடும். எனவே, இந்த முக்கியமான பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காக, இதுபற்றி விவாதிக்க, இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கூறி முடிக்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I have given notice of the following motion: "I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance namely, the reported declaration by the Chief Minister of Mysore, that his Government would ignore *the Centre's directive to it not to go* ahead with the construction of Cauvery projects. This is harmful to the interests of our State since the rejection of this directive amounts to the rejection of 1924 agreement. This is a serious situation



that does not brook any delay. It is imperative therefore that the two Chief Ministers should immediately get together and discuss this unfortunate problem. As such I move, Sir, that this House adjourns the routine business to discuss this subject without delay".

Sir, without taking much of the time of the House I wish to make one or two points in regard to this motion seeking adjournment of the House. This method of bringing it in this House and our counterparts in the other House has been going on for some time now. Relying on the reports of the Press this matter has been discussed time and again in the Houses of the respective States. In view of the fact that this is a very serious matter and we should *avoid any misunderstanding* arising between the two States and in view of the fact that there is a strained relationship between the Centre and the Mysore State-whether the Central Government might say there is a possibility of the Mysore State taking that in a particular manner because of stance these two Governments have taken against each other. I would suggest that the Hon. Chief Minister should exert his energies to the maximum extent possible and see that he and other concerned Ministers and members of different political parties in our State should sit together with the Chief Minister and the concerned Ministers of the Mysore State and also members of the different *political parties* there and discuss the matter in a favourable climate without creating any misunderstanding and without letting out passion it has become a passionate issue in this House as well as in the other House. In regard to this matter, we must take the people into our confidence and my concrete and positive suggestion will help in bringing abot a approachment between the two States, and also the people of both the States who are directly affected paddy cultivators in the two States. Whatever may be the opposition of the people there, they will adopt a human attitude in regard to this matter. Thank You, Sir.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், இதில் என்னுடைய கட்சியின் சார்பாகவும், தமிழ் நாட்டின் சார்பாகவும், மக்கள் சார்பாகவும், சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இவ்வளவு தூரம் இந்தப் பிரச்சினை நல்ல முறையில் வந்ததற்கு மிகவும் முக்கியமான காரணம் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள்தான். அதைப் பாராட்டுகிறேன். ஏனென்றால், எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு, டெல்லிக்குப் போவதற்கு முன்னால், ஆலோசனைகள் நடத்தி எல்லோரும் சேர்ந்து, தமிழக முதலமைச்சருக்கும், தமிழக சர்க்காருக்கும் பூரணமான ஒத்துழைப்பைத் தந்தார்கள். ஆதரவாக இருக்கிறோம் என்று தீவிரமாகச் சொன்ன காரணத்தால், முதல் அமைச்சர் டெல்லிக்குப் போனபோது அங்கே அழுத்தந்

தாகக் கூறினார்கள். இதுபற்றி நேற்று மராட்டிய மாநில சட்ட மன்றத்தில் பேசியுள்ள அந்த மாநில முதல் அமைச்சர் அவர்கள் நமது முதல் அமைச்சர் தமக்குக் கடிதம் எழுதுவது தவறு என்றும், நமது மாநிலம் மராட்டிய மாநில சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றி பார்வையிட அங்கே ஒரு குழுவை அனுப்புவது முறையற்றது என்றும் கூறியிருக்கிறார்கள். தவறான அடிப்படையில் தகவல்கள் வந்ததன்பேரில், அவர்கள் அவ்வாறு கூறியிருப்பதாகக் கருதுகிறேன். நமது மாநில முதல் அமைச்சர் மராட்டிய மாநில முதல் அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினால், அது முறையற்றதா என்பதைப்பற்றிய தனது கருத்தை நமது முதலமைச்சர் அவர்கள் இங்கு அவைக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். இதுபோன்று அங்கே இருக்கிற தமிழர்களுடைய நிலையைப்பற்றி ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் நம்முடைய அரசு மராட்டிய அரசுடன் கலந்து பேசி இருக்கிறது என்ற நிலையையும், அதுபற்றிய முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் திரு. மார்டின் அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்னைக்கு நான் பதில் சொல்கிற நேரத்தில், மராட்டியத்தில் சிவசேனையின் தாக்குதலினால் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக, திரு. மார்டின் அவர்கள் பேசிய நேரத்தில், அப்படிப்பட்ட நிலை அங்கே இருக்குமானால், மராட்டிய முதல்வருக்கு அதுபற்றி நான் எழுதுகிறேன் என்று குறிப்பிட்டேன். அதைப்பற்றி என்னுடைய பேச்சைப் படித்துப் பார்த்தேன். குறிப்பேட்டிலும் அப்படித் தான் இருக்கிறது. நான் மராட்டிய முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதுவேன் என்று குறிப்பிட்டிருந்தேன். நான் அப்படி கடிதம் எழுதுவேன் என்று கூறியதை, பத்திரிகையில் வந்த செய்தியின்படி பார்த்தால், மராட்டிய முதல் அமைச்சர் அவர்கள், அப்படி எழுதுவது தவறு என்று கூறியதாகவும், அதிகார பூர்வமான குழு எதையும் அனுப்பக்கூடாது, அதுவும் தவறு என்று கூறியதாகவும் பத்திரிகையில் பார்த்தேன். நான் இப்பொழுது எந்த அதிகாரபூர்வமான குழுவையும் இங்கிருந்து அனுப்புவதாக இல்லை. நான் நேற்றைய தினம் அவ்வாறு கூறவே இல்லை. ஒரு வேளை பம்பாயில் வெளியான பத்திரிகைகளில் அதைப்பற்றி தவறான செய்திகள் வெளியிடப்பட்டிருக்கக்கூடும். அதை வைத்துக்கொண்டு, அங்கே கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில், மராட்டிய முதல் அமைச்சர் அவர்கள் அப்படி பதில் அளித்திருக்கலாம். முன்பு சிவசேனையின் ஆர்ப்பாட்டம் அங்கே நடைபெற்ற நேரத்தில், கழக எம்.பி. ஒருவரும், கம்யூனிஸ்டு கட்சி எம்.பி. ஒருவரும் நிலைமையை அறிய அங்கு சென்றிருந்தார்கள், நிலைமையை அறிந்து வந்தார்கள். பழைய செய்தியைக் குறிப்பிட்டேன். புதியதாக இப்பொழுது அதிகாரபூர்வமாக குழு ஒன்றை அனுப்புவதாகக் கூறவில்லை. நான் கடிதம் எழுதுவதாகச்



சொன்னது உண்மை. அப்படி எழுதுவதாகச் சொல்வதில் தவறு இல்லை, எழுதுவதும் தவறு இல்லை. முன்பு ஒரு முறை பம்பாய் முதல்வர் அவர்களுக்கு இங்கிருந்து கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அங்கிருந்து பதில் நமக்கு வந்திருக்கிறது. அண்மையில் கூட மைசூர் முதல்வருக்கு அங்கே, தாளவாடிப் பிரச்சினை வந்து, ஏற்பட்ட குழப்பத்தினால் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று நான் மைசூர் முதலவருக்கு கடிதம் எழுதினேன். அவரும் உடனே பதில் அனுப்பினார்.

அதை போல, ஹோசூர் பற்றி ஆந்திர முதல் அமைச்சருக்கு எழுதியிருக்கிறோம். அதேபோலத்தான், நீலகிரிப் பகுதியில் உள்ள நிலை பற்றி, கேரள அமைச்சரிடமிருந்து கடிதம் வந்தது. அதற்கும் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலத்தில் உள்ள சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, பாதிக்கப் படுவதாகத் தெரிந்தால், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுவது சரியானதே. இன்னொரு மாநில முதல் அமைச்சருக்கு எழுதுவது, பதில் போடுவது இவை தவறானவை அல்ல. பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியை வைத்துக் கொண்டு மராட்டிய மாநில முதல் அமைச்சர் என்ன சொன்னார்கள் என்று நாம் விமரிசிப்பது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். நான் அவர்களுக்கு எழுதுவதாகச் சொன்ன கடிதம் எழுதப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. 'ட்ராப்ட்' தயாராகி விட்டது. பத்திரிகைச் செய்தியிலிருந்து பார்க்கும்போது, அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு என் பேச்சுக்குப் பதில் கொடுத்திருப்பது போல இருப்பதால், சபையிலே அன்று என்ன நடைபெற்றது என்பதையும் விளக்கமாக எழுத இருக்கிறேன்.

'லா அண்டு ஆர்டர் ப்ராப்ளத்தில்' ஒரு மாநிலத்திற்கு இன்னொரு மாநிலம் எழுதுவது சரியில்லை என்று மராட்டிய முதல் அமைச்சர் கூறியிருப்பதாக செய்தியிருக்கிறது. சட்டம், ஒழுங்கு, அமைதிபற்றி கருத்துக்களைச் சொல்ல முற்பட்டால், அது தவறாக இருக்கலாம். ஆனால், அங்கே இருக்கும் தமிழர்கள் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் கடிதம் எழுதப்படும். இதன் மூலமாக நண்பர் கேட்ட கேள்வியின் மூலமாக நிலைமைகள் மராட்டிய முதலமைச்சருக்கு இந்த அவையின் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்படும்.

### (3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### ஏமாவதி திட்டம் நிறைவேற்றப்படும் என மைசூர் மாநில முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவுகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சுவாமிநாதன், திரு. ஆர். கருப்பையா, திரு. ஆர். இராமமூர்த்தி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள், "மைசூர் முதல்வர் அவர்கள் மைசூர் அரசு

கொள்ள எனக்கு உரிமை உண்டு. மைசூர் மாநில மக்களுக்கு இந்த அரசின் நல்லெண்ணத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உறுதி செய்யப்பட்டிருப்பவை limit flows நமக்கு உறுதியாக்கப்பட வேண்டும். அதை மீறுகிற காரியங்கள் நடைபெறவிடக்கூடாது என்பதுதான் நம்முடைய வாதமாகும். உறுதி செய்யப்பட்டிருப்பவைகளுக்குக் குந்தகம் இல்லாமல் அணை கட்டுவதற்குத் தடை இல்லை. நாங்கள் மீண்டும் பேசத் தயாராக இருக்கிறோம். பேச்சுவார்த்தை ஒப்பந்தத்தை மதிப்பதாக இல்லையென்ற காரணத்தால்தான் மத்திய அரசிடம் நாம் வேண்டுகோள் செய்திருக்கிறோம். மத்திய அரசு இதில் தலையிட்டு, அந்த ஒப்பந்தம் மதிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த ஒப்பந்தத்தை மைசூர் மாநில அரசு மதிப்பதற்கில்லையென்று தெரியவந்ததால், மத்திய அரசு தலையிட்டு, அணை கட்டுவதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று அந்த அரசுக்கு எழுதியிருப்பதாகத் தெரிய வருகிறது. ஹேமாவதி அணையைக் கட்டியே தீருவோம் என்று அவர்கள் சொன்னால், அதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டிய அதிகாரம் நம்முடைய கையில் இல்லை. ஆகவே, மத்திய அரசை, அணுக வேண்டிய முறையிலே இந்த அரசு அணுகும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்துப் பேசுவதால் விவாதங்கள் வேறு திசைக்குப் போய்விடுமோ என்ற அவருடைய அச்சத்தை நான் ஆதரித்து, இந்தப் பிரச்சினை நல்ல முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்பதில் அரசுக்கு அதிக அக்கறை இருக்கிறது என்பதை மைசூர் மாநில அரசுக்கும், மக்களுக்கும் தெளிவாக்கியிருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்சினையை விவாதிக்க இந்தப் பேரவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்காக இப்பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன். ஆகவே, இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## (4) கவனஈர்ப்பு

### குமரி மாவட்டம், கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் அரிசித் தட்டுப்பாடும் விலை ஏற்றத்தைத் தடுப்பதன் அவசியமும்

**திரு. எம். சி. பாலன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான ஒருநிகழ்வு குறித்து மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"உணவுக் கட்டுப்பாட்டை தளர்த்திய பிறகும், குமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுக்காவிற்கும் விளவங்கோடு தாலுக்காவிற்கும் இடையில் 10-க்கும் மேல் சோதனை நிலையங்கள் இருப்பதால். விளவங்



கோடு தாலுக்காவிலுள்ள மக்களுக்கு அரிசி கிடைக்க வாய்ப்பில்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு ரேஷனும் கொடுப்பதை நிறுத்திவிட்டு, வெளிச் சந்தையில் கிடைக்க வாய்ப்பற்ற முறையில் சோதனைச்சாலைகளும் இருப்பதால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலைபற்றி".

THIRU R. PONNAPPA NADAR : Sir, I wish to call the attention of the Hon'ble Minister for Food and Commercial Taxes to a matter of urgent public importance, namely, the scarcity of rice in the border taluk of Vilavancode and Kalkulam in the Kanyakumari district even after the policy of de-control and the need to take steps to arrest the soaring prices.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் உணவுப் போக்குவரத்துத் தடையை சென்ற திங்களில் (8—1—1970) அரசு நீக்கியது. கன்யாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகள், கேரள மாநில எல்லையில் இருப்பதால், அவ் வெல்லைப் பகுதிகளில் மட்டும் உணவுப் போக்குவரத்துத் தடை நீடித்து வருகிறது. மேலும் மாநில எல்லையில் 15 மைல் சார்புப் பகுதிகளை 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதி ஒழுங்குமுறை) ஆணையின்கீழ் 'அறிவிக்கப்பட்ட சார்புப் பகுதி' யாக Notified as belt area உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விளவங்கோடு தாலுக்காவும், கல்குளம் தாலுக்காவின் சில பகுதிகளும் மாநில எல்லையிலிருந்து 15 மைல்களுக்குள் உட்பட்டு இருப்பதால், இந்த இடங்களில் உணவுப்போக்குவரத்துத் தடை தொடர்ந்து நீடிக்கப் பட்டுள்ளது. மாநில எல்லையோரங்களின் வழியாக நெல், அரிசி கள்ளக் கடத்தல் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு இப் பகுதிகளில் உணவுப் பொருள் போக்குவரத்துத் தடை தொடர்ந்து செயல் பட்டு வருகிறது.

பொது மக்களுக்கு ஏற்படும் வசதிக் குறைவைத் தடுக்கவும், அதே சமயத்தில் மாநில எல்லை வழியாக அரிசி கடத்தப்படுவதைத் தடுக்கவும், கல்குளம்-விளவங்கோடு எல்லையில் சோதனைச் சாவடிகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. உரிமம் வைத்துள்ள சில்லரை வியாபாரிகள் வரையறுக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே அரிசி வாங்கவும், அவைகளை விளவங்கோடு தாலுக்காவுக்குள் அனுமதிச் சீட்டு முறையில் கொண்டு வரவும் அனுமதிக்கப்படுகிறார்கள். உரிமம் வைத்திருப்பவர்களின் இயல்பான கையிருப்பை முன்னிட்டு தாராளமாக அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகின்றது. இம் மாற்றத்தினால் ஆரம்பகாலத்தில் சில இடையூறுகள் காணப்படலாம். ஆனால் போதுமான அளவில் சில்லரை வியாபாரிகள் இவ்விடங்களில் இயங்கும் நிலைமை ஏற்பட்டு நிலை சுமுகமாகும் என எதிர்பார்க்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, உரிமம் வழங்குவதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. வியாபாரிகளுக்குச் சரியாக உரிமம் வழங்காததன் காரணத்தால், இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகவே, வியாபாரிகளுக்குத் தாராளமாக உரிமம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்படுமா?

திருத்தமாகக் கூறியிருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணருகிறோம். உடனடியாக மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெரியாது. அவர்கள் தலையிட்டு நியாயம் வழங்கியே தீரவேண்டும். மைசூரில் இருக்கும் நிலைமை பற்றி, பத்திரிகைச் செய்தி மூலமாக அணையைக் கட்டியே தீருவோம் என்று கண்டிப்பாக இருப்பதால், இந்த சபையின் மற்ற வேலைகளை ஒத்திவைத்து விட்டு விவாதிக்க வேண்டியது நம் கடமையாக இருக்கிறது. அதனால்தான், இது அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. மத்திய சர்க்காருக்கும், மைசூர் சர்க்காருக்கும் நாம் உணர்த்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதே சமயத்தில் அதிகமாக விவாதிப்பதாலும், காரியங்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுவிடுமோ என்றும் அஞ்சுகிறோம். இந்தக் காரியத்தைக் கண்ணியமாக, வெற்றிகரமாக ஆக்கத் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கும் மாண்புமிகு முதல் அமைச்சருடைய கருத்துக்கு என்னுடைய கட்சியின் சார்பில் பலப்படுத்திக்
மு.ப. 10-00 கொடுக்கிறோம் என்கிற உறுதியைத் தெரிவிக்கிறேன். எந்த நிலையில் இதை அணுகவேண்டும். எந்த நிலையில் வெற்றிபெற வேண்டும், எப்படி ரைபேரியன் ரைட்ஸ், நம்முடைய விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில், அமைச்சர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எல்லா ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுக்கிறோம். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் எப்படி முடிவு செய்வது என்பதையும் அவர்களுடைய நிலைக்கே விட்டு விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களும் ஹேமாவதி அணைக்கட்டு சம்பந்தமாகத் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஹேமாவதி அணைக்கட்டு கட்டப்படவேகூடாது என்பது நம்முடைய அரசின் வாதம் அல்ல. ஹேமாவதி அணைக்கட்டு கூடாது என்று நான் கூறுவதைப்போல மைசூர் மாநில மக்களிடத்திலே தவறான பிரசாரம் செய்யப்பட்டு மைசூர் மாநில மக்கள் அங்கு வாழும் தமிழர்கள் மீது ஒருவேளை அதன் அடிப்படையில் வெறுப்பு கொள்ளவோ, கசப்புணர்ச்சியை உண்டுபண்ணக்கூடிய நிலைமை ஏற்படுமோ என்ற அச்சம்கூட எனக்கு இருந்து வருகிறது. ஹேமாவதி அணைக்கட்டு கட்டுவதில் நமக்கு எந்தவிதமான தடையும் இல்லை. குறிப்பாகச் சொல்வது எல்லாம், 1924-ம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கண்டுள்ள ஷரத்துக்களை மீறி அணைக்கட்டு கட்டப்படக் கூடாது என்பதுதான் நாம் மிகத் தெளிவாக எடுத்து வைத்து வருகிற வாதமாகும். 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழக அரசின் அமைச்சர்களோடு நாங்கள் கலந்து பேசத் தயாராக இல்லையென்பதுதான் மைசூர் அரசின் வாதமாக இருந்து வருகிறது. நாங்கள் பேச உட்கார நேருகிறபொழுதெல்லாம், 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான்



பேச்சு வார்த்தை நடைபெற வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகக் கூறி வருகிறோம். மைசூர் மாநில அரசு தருகிற ஒவ்வொரு அறிக்கையிலும், மைசூர் மாநிலச் சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற ஒவ்வொரு பேச்சிலும், 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தைத் தூக்கியெறிந்து விட்டு அதற்குப் பிறகு இரு அரசுகளும் கூடிப் பேசலாம் என்ற அடிப்படையிலேயே பேசிவருகிறார்கள். பத்திரிகைகளில் தவறான செய்திகள் வந்துவிடக் கூடாதே என்பதற்காக நான் மீண்டும் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஹேமாவதி அணைக்கட்டு கட்டுவதில் தமிழக அரசுக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஆனால் அந்த அணை கட்டப்படுகிற நேரத்தில் அதனால் தமிழ்நாட்டினுடைய நிலவளம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான், 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் மீறப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறோம். சில நிபந்தனைகளை வகுத்துக்கொண்டு, அதற்கான உத்தரவாதம் அளிக்கிறோம் என்று மைசூர் அரசு முன்வந்தால், மைசூர் அரசும், தமிழக அரசும்—இரு அரசுகளும்—மத்திய அரசின் முன்னிலையில் மீண்டும் கூடிப் பேசி, இதுபற்றி நல்ல முடிவு காண்பதில் எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது, இரண்டு மாநில முதலமைச்சர்களும் கலந்து பேச வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். முதலமைச்சர்கள் மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இரு தரப்பிலும், மற்றும் பேரவை உறுப்பினர்கள் இருதரப்பிலிருந்தும் கலந்து பேச வேண்டுமென்று சொன்னார்கள். எது பேசுவதாக இருந்தாலும், நமது திட்டவட்டமான கொள்கை, 1924-ம் ஆண்டு ஒப்பந்த ஷரத்துக்கள் மீறப்படக் கூடாது என்பதுதான். இதிலே எந்தவிதமான கிளைப் பிரச்சினைகளுக்கும் இடமில்லை. 'அந்த ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொள்ளமாட்டோம்', என்று சொல்லி, மைசூர் அரசு எந்தப் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும், நாமும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மற்ற எல்லாக் கட்சித் தலைவர்கள் எல்லோருமாக நாங்கள் கூடிப் பேசிய நேரத்தில் அரசுக்கு ஒத்துழைப்புத் தருவதாக அளித்த உறுதியின்பேரிலே மத்திய அரசை அணுகி, இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களை அணுகி, உடனடியாக இதற்கு நடவடிக்கை, எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். இந்தச் சபையிலே இதைப்பற்றிப் பிரச்சினை எழுந்த நேரத்திலே, மத்திய அரசு நடவடிக்கை எடுப்பார்கள், நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறேன். மைசூர் மாநில மக்களுடைய நல்வாழ்வு பாதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் தமிழ்நாட்டு மக்களுக்கு யாருக்கும் இல்லை, இந்த அரசுக்கும் இல்லை, அரசுப் பொறுப்பை ஏற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இல்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் எந்தக் கட்சிக்கும் அந்த எண்ணமும் இல்லையென்பதைத் தமிழக மக்களின் சார்பில், தமிழக அரசின் சார்பில் தெரிவித்துக்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, உரிமம் வழங்குவதிலே எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. உரிமம் அவர்களுக்குத் தாராளமாக வழங்கப்படும்.

**திரு. எம். சி. பாலன்:** தலைவர் அவர்களே, 15 மைல் எல்லையோரப் பகுதி என்றிருப்பதை 5 மைல் என்ற அளவில் குறைத்துக் கொள்வதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? எல்லைப் பகுதிகளில் இன்னும் நிறைய சோதனை நிலையங்கள் நிறுவப்பட்டால், கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, 5 மைல் எல்லையோரப் பகுதி என்று குறைக்கும் யோசனை இல்லை. ஆனால் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட மற்றொரு யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

## (5) 1970 71-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொதுவிவாதம்—(தொடர்ச்சி.)

***திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது கடந்த சில நாட்களாக நடந்து வருகிற பொதுவிவாதத்தில் கலந்து கொண்டு நானும் எனது கருத்துக்கள் சிலவற்றை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

ஏற்கனவே இருக்கிற வரிகளை உயர்த்தியிருப்பதன் மூலம் 6 கோடிக்கு மேல் வருமானம் என்று ஆட்சியினர் கருதியபோதிலும் 16 கோடிக்குமேல் வரும் என்கிற கருத்து மக்கள் மத்தியில் இருக்கிறது.

குறிப்பாக நிதி அமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னால் 1966-67-இல் செலவினங்களுக்கு ஒதுக்கியதைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்றார்கள். நான் எங்கே ஒதுக்கியிருக்கிறார்கள் என்று பார்த்தேன்.

1966-67-இல் அமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ஐந்து லட்சத்து பதினாராயிரம் சொச்சம் தான். ஆனால் இந்த 1970-71-க்கு பத்து லட்சத்து ஐம்பத்தாறாயிரம் சொச்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அமைச்சர்கள் செலவு காங்கிரஸ் ஆட்சியில் 5 லட்சமாக இருந்தது என்றால் இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பத்து லட்சமாகக் கூடியிருப்பதை நான் பார்க்கிறேன்.

அதோடு மட்டும் அல்ல, 1967-68-இல் கார் வாங்க 3 லட்சம் ஒதுக்கினார்கள். அடுத்து, 1968-69-இல் இரண்டு லட்சத்து ஐம்பத்தொன்பதாயிரம், 1969-70-இல் இரண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் ஆக மூன்றாண்டுகளில் ஏழு லட்சத்து 95 ஆயிரம் கார்



வாங்க ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு 1970-71-இல் 2 லட்சம் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆக 9 லட்சம் ரூபாய் வாகனச் செலவுக்காக ஒதுக்கியிருக்கிறார்களே, ஏதாவது கார் வியாபாரம் நடைபெறுகிறதா என்கிற ஆச்சரியம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, டிராவலிங் அலவன்சுக்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய், இதர அலவன்சுக்கு ஒரு லட்சம் என்று இந்த இனத்தில் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் பார்க்கிறபோது இவர்கள் சிக்கன வாழ்வா வாழ்கிறார்கள். சிக்கனம் எங்கோ பறந்துவிட்டது என்கிற கருத்துதான் மக்களிடையே இருக்கிறது.

அடுத்து; மக்களுடைய அன்றாடத் தேவைக்கான செலவினங்களில் கூடுதல் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. குறிப்பாக ஆஸ்பத்திரி—டிஸ்பென்சரி ஆகிய இனங்களின் கீழ் நோயாளிகளுக்கு உணவு வழங்க, மருந்து வழங்க 1968-69-இல் 68 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் இந்த ஆண்டு 66 லட்சமாகக் குறைத்திருக்கிறார்கள். ஆக, அந்த இனத்தில் 2 லட்சம் குறைந்துவிட்டது.

அதோடு மட்டுமல்ல, மருத்துவத்துறையில் கருவிகள் வாங்குவது, மருந்துகள் வாங்குவது என்கிற இனத்தில் ஏழு லட்சத்து இருபத்தெட்டாயிரமாகக் குறைத்திருக்கிறார்கள்.

ஆடம்பரச் செலவுகள் இனத்தில் எல்லாம் செலவைக் கூட்டிவிட்டு—அடிப்படையில் ஆஸ்பத்திரியில் இருக்கிற நோயாளிகள் சம்பந்தப்பட்டவரை குறைத்திருப்பது நல்லமுறையில் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் குணமாகி வருவார்களா என்கிற சந்தேகமும் அவர்களது உயிருக்கே அபாயம் ஏற்படுகிற நிலை உண்டாகுமா என்று சந்தேகிக்கின்ற நிலை உள்ளது.

மென்டல் ஆஸ்பத்திரியை எடுத்துக்கொண்டால் கடந்த ஆண்டு மருந்துக்கு ஒதுக்கப்பட்டது நாலு லட்சத்து முப்பத்தொன்பதாயிரம் என்றால் இன்றைக்கு 4 லட்சமாகக் குறைத்திருக்கிறார்கள். பாவம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்ன குற்றத்தைச் செய்தது?

தாலுக்காபோர்டு ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி வாகனங்களுக்காக 67 ஆயிரம் ஒதுக்கப்பட்டதில் 3 ஆயிரமாகக் குறைத்திருக்கிறார்கள். ஏழை எளிய நோயாளிகளுக்கு அவசரமாக ஆஸ்பத்திரி போக ஆம்புலன்ஸ் கிடைக்குமா? போவதற்குள் இறந்துவிடக்கூடிய அபாயத்தைத்தான் ஏற்படுத்துகிறார்கள்.

[திரு. டி. மார்டின்] [1970 மார்ச் 6

மேலும், சர்க்கார் நிலங்களை லீசுக்குக் கொடுக்கிற முறையில் ஒரு தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்வே 4275.1-இல் அடையார் பக்கத்தில் சத்யா ஸ்டுடியோ பக்கத்தில் 39 க்ரவுண்டுகளை க்ரவுண்டு ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று நிர்ணயம் செய்து மொத்தக் குத்தகை வருமானம் 175 என்று நிர்ணயம் செய்து அதை 30 வருட லீசுக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லப் படுகிறது. முப்பது வருட லீசுக்குக் கொடுப்பது என்பதே கூடாது என்று முன்னாள் நிதி இலாக்கா செயலாளர் 5 வருடத்திற்கு மேல் கொடுக்கக் கூடாது, கொடுத்தால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் It will come for Trastic Comment என்றெல்லாம் குறிப்பு எழுதி வைத்திருந்ததாகக் கூறப்படுகிறபோது செக்ரடேரி யட்டில் 5 வருடம் என்பதை 30 வருடம் என்று லீசுக்குக் கொடுத்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

அதன்விலை க்ரவுண்டு 5 ஆயிரம் பெறும் என்று மாவட்ட கலெக்டர் குறிப்பிட்டிருக்க—இப்போதுள்ள அடிஷனல் சீப் செக்ரடரி—போர்டு மெம்பராக இருந்தபோது நேரில் அதைப் பார்வையிட்டு 15 ஆயிரம் ரூபாய்க்குமேல் பெறும் என்று குறிப்பிட் டிருந்தும்—அதை செக்ரடேரியட்டில் 2,500 என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள் என்றால் இது சரியான முறையில் நடந்திருக் கிறதா என்பதைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, அதே நிலத்தின் ஒரு பக்கத்தில் சினிமாப்படம் எடுக்கிற நேரத்தில் ஒரு நாள் ஒன்றுக்கு 200 ரூபாய் கட்டவேண்டு மென்று முன்பு கொடுத்திருக்கிறார்கள். 1968-இல் இருந்து 1970 வரை அந்தநிலம் எத்தனை நாட்கள் உபயோகப்படுத்திக்கொள்ளப் பட்டிருக்கின்றது, அதற்கான பணம் கஜானாவில் கட்டப்பட்டிருக் கிறதா என்று கேட்க விரும்புகிறேன். சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இதுபற்றிய எல்லா விவரங்களையும் file வரவழைத்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. . ..

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, உறுப் பினர் வேறு ஒரு கருத்துக்குப் போவதற்கு முன்னால் இதுபற்றி விளக்கத்தைக் கேட்டதனால் நான் குறுக்கிடுகிறேன். அடையாறு சத்யா ஸ்டுடியோவின் பின்புறம் இருக்கிற நிலத்திற்குப் போவ தற்கு சரியான வழியில்லை. ஆற்று வழியாக வரவேண்டும், அல்லது பங்களாவுக்கு உள்புறமாக வரவேண்டும். பங்க் வழியாக வர வேண்டும். போகும் பாதை இல்லாதது. மேலும் நிலப்பரப்பு சரியாக கவனம் இல்லை. இரண்டு ஏக்கர் இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த இடத்தை வாடகைக்கு வேண்டுமென்று கேட்டார்கள். அரசு அதைப் பரிசீலனை செய்து ரூபாய் 6,500 என்று நினைக்கிறேன். தனியாகக் கேள்வி போட்டால்— ஷார்ட் நோட்டீஸ்



1970 மார்ச் 6] [திரு. ப. உ. சண்முகம்]

க்வச்சன் கொடுத்தால் முழு விவரங்களையும் தரத் தயாராய் இருக்கிறேன்—லீசுக்கு விட்டிருக்கிறது. அதுவும் எந்த நாளில் இருந்து வாடகைக்கு விடுவது என்கிறபோதுகூட அவர்கள் எந்தத் தேதியில் மனுப் போட்டுக்கொண்டார்களோ, அந்தத் தேதியில் இருந்து வாடகைக்குவிட உத்தரவு போட்டிருக்கிறது. இதில் முறைகேடான செய்கை எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேட்டால் முழுத் தகவல்களையும் தருகிறேன் என்று இப்போது சொல்கிறார்கள. என் கட்சியின் சார்பாக திரு. மகா தேவன் பிள்ளை பேசுகின்றபோது இந்தவிதமான தகவலைக் கொடுத் திருந்தால் பாராட்டியிருக்க முடியும். இவ்வளவு தகவல்களையும் நாங்கள் சேகரித்து வந்த பிறகு . . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** திரு. மகாதேவன் அவர்கள் பத்மனாபனுக்கு வாடகைக்குக் கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்டார், இல்லை என்று சொல்லப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இது சரியல்ல. அது சர்க்கார் நிலம், குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது என்றால் யாருக்கு விட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லலாம். சர்க்காருக்குத் தெரிந்தும் மறைத்திருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டைச் சொல்கிறேன்.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம் ஏற்கெனவே இந்தக் கோட்டையில் இது போன்று தனியார்களுக்கு லீசுக்குச் சர்க்கார் நிலங்களைக் கொடுத் திருக்கிறார்களா? முன்பு காலஞ்சென்ற முதலமைச்சர் மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் அந்தவிதமாகத் தனியாருக்கு லீசுக்குக் கொடுக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அவர்களு டைய கொள்கையைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள் கின்ற அமைச்சரவை அந்தவிதமாக ஏன் செய்யவில்லை? தலைவர் அவர்களே, ஏன் அவர்கள் அந்தவிதமாகச் செய்யக்கூடாது என்ப தைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மீண்டும் ஒரு விளக்கம் சொல்லலாம் என்பதற்காகக் குறுக்கிடு கிறேன். அது தனிப்பட்ட ஆளுக்குக் கொடுக்கப்படவில்லை. ஒரு நிறுவனத்திற்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கக்கூடாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் எங்கும் உத்திரவுபோட்டதாகத் தெரியவில்லை.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விசாரணை வைத்தாலும் அதைப்போன்று ராவ் முன்னாலே கேட்டாரே அந்தத் தகவலையும் file ஐயும் கொண்டு வரச்செய்து விசாரணை வைத்தாலும் இந்தப் பேரவை உண்மை யைப் புரிந்துகொள்ள முடியும் என்பதைத் தங்களிடம் தெரி வித்துக் கொள்கிறேன்.

ஜே. ஜான் சிம்லன்; அஸிஸ்டெண்ட் மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர், கோயம்புத்தூர் ஆக வேலை பார்த்துக்கொண்டிருந் தார். 5—4—1965 அன்று ஸ்பெஷல் ஜட்ஜ் சி.சி. 1/65-இல் அண்டர் செக்ஷன் 5(1) டி. செக்ஷன் 5(2) அண்டர் தி பிரிவென்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்ட் பிரகாரம் ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அதற்குப் பிறகு சி.ஏ. 234/65 உயர் நீதி மன்றத் திலே 17—2—1967 தேதியன்று ஹைகோர்ட் ஜட்ஜ் திரு. கிருஷ்ண சாமி ரெட்டியார் அவர்களுடைய தீர்ப்பின்படி 3 மாதம் கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டவர். தலைவர் அவர்களே, ஆனால் அவர் இன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் அஸிஸ்டெண்ட் மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர் வேலை பார்க்கிறார். இப்படித் தண்டிக்கப்பட்டு அதுவும் லஞ்ச லாவண்யக் குற்றத்திற் காகத் தண்டிக்கப்பட்ட அதிகாரி வேலை பார்த்துக்கொண்டு வரு கிறார் என்றால் தலைவர் அவர்களே, அவர் தண்டிக்கப்பட்டது, அவரை வேலையில் சேர்த்தது இவற்றைப்பற்றிய பைலை இந்த அவைக்குக் கொண்டுவந்து நிச்சயமாகப் பரிசிலனை செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்கார் ஊழியர்கள் தண்டிக்கப் பட்டதற்குப் பிறகு வேலைபார்த்துவருவது என்பது இந்த ஆட்சி யிலே நடந்த பெரிய விநோதமான காரியமாகும். எனவே, இந்த பைலை வரவழைத்துப் பரிசிலனை செய்யவேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே குற்றங்கள் பெருகிவருகின்றன. குற்றங்கள் பெருகி வருகின்றன என்று சொல்கிற நேரத்திலே திருட்டுக் குற்றம், விபச்சாரக் குற்றம், கொள்ளைக் குற்றம் இவை போன்ற குற்றங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக கூவம் ஆற்றினைச் சுத்தப்படுத்த நினைக்கின்ற ஆட்சி விபச்சார விடுதிகளிலிருந்து வருகின்ற நாற்றத்தைப் போக்க முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும். முதலமைச்சர் 1953-ல் "சிங்கத் திருநாடே, நீ சிலந்திக் கூடானது எப்பொழுது? வீரப் பெண்க ளின் ஏடுகளை எழுதி எழுதி ஏற்றம்பெற்ற என்னருமைப் பொன்னாடே நீ வீதிகளிலே விபச்சாரிகளைத் திரியவைத்து உன் விழிகளை மூடிக்கொண்டது ஏன்?" என்று கேட்டிருந்தார்கள். ஆனால் அதே விபச்சாரக் குற்றங்கள் சென்னையிலே பெருகி வருகின்றன. அவர்கள் 1953-இல் நினைத்ததை எழுதியதை 1970-இல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக இன்று அரசு வேலைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் செயல் திறனற்ற நிலையில் இருக்கிறது. ஏப்ரல் மாதம் 1967-இல் தஞ்சாவூரிலிருந்து நீலகிரிக்குச் சென்ற பர்ஸ்ட் ஸார்ட் அரிசியை இரண்டாவது சார்ட்டாக விற்ற காரணத்தால் இந்த அரசுக்கு 31,815 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அரிசியை மில்லர்களிட மிருந்து சரியாகப் பெறமுடியாத காரணத்தால், ரூபாய் 78,412 இந்த அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மதுரை மில்க் ப்ராஜக்டில் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரண மாக தமிழக அரசுக்கு ரூபாய் 2 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய்



நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மதுரை மில்க் கன்சர்வேஷன் ப்ராஜக்டில் பால்தொடர்புள்ள பொருள்கள் செய்கிற பணியில் ஜனவரியிலிருந்து ஜூலை 1968 வரையில் 7 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நெய்யின் தரம் குறைந்ததால் கிலோ 11 ரூபாயாக இருந்தது 9½ ஆகக் குறைந்து பிறகு 8.60 ரூபாய்க்கு விற்றதன் காரணமாக இந்த அரசுக்கு 18,300 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. ஷண்முகம்: உறுப்பினர் அவர்கள் 1968-ஆம் ஆண்டு இது நடைபெற்றதுபோல் பேசுகிறார்கள். 1968-ஆம் ஆண்டிலே இவை கண்டுபிடிக்கப்பட்டன. ஏற்கெனவே மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற விவகாரம், 1968-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு அது நீதிமன்றத்திலே போயிருக்கிறது.

திரு. டி. மார்டின்: செப்டம்பர் 1968-இல் இந்த மில்க் ப்ராஜக்டிற்காக வாகனங்கள் காலதாமதமாக வந்தது சம்பந்தமாக ரூ. 17,700 அரசினுடைய பணம் பாழாகியிருக்கிறது. இப்படி அரசினுடைய செயல் திறன் அற்ற நிலைமையினால் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தலைவர் அவர்களே அரசினுடைய எஃபிஸியன்ஸி எங்கே போயிற்று? சர்க்கார் பணக்கையாடல்களைப் பார்த்தால் பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருடைய இதயமும் குலுங்கும். 1967-68-ஆம் ஆண்டு கையாடல்கள் 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் அளவிற்கும், 1968-69-ஆம் ஆண்டு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அளவிற்கும், 1969-ஆம் ஆண்டில் அப் டு ஜூன் 74 ஆயிரம் ரூபாய் வரையிலும் ஆகமொத்தம் 3 லட்சத்து 54 ஆயிரத்து 136 ரூபாய் வரையில் கையாடல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, மக்களுடைய பணம் எந்த அளவுக்குப் பாழாகியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

சர்க்காருடைய ஸ்டோர்களிலிருந்து திருட்டுகள், தெஃப்ட்கள், (Thefts) டாமேஜ்கள் இந்தவிதமாகப் போன பணம் 19 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய். அதோடு மட்டுமல்ல ஓ, தெஃப்ட் (Theft) இவை போன்றவைகளால் இந்த ஆட்சியாளர்களால் தள்ளுபடிசெய்யப்பட்ட பணம் 53 லட்சம் என்றால் இந்த ஆட்சியின் நிர்வாகத்திறன் எங்கே செல்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பஸ் போக்குவரத்துத் துறையினைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு 2 கோடி ரூபாய் லாபம் தரப்படும், அதற்கான திட்டத்தை வைத்திருக்கிறேன், முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசுவேன் என்று அப்பொழுது அந்த அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் ஆசையோடு எதிர்பார்த்தேன். சாதாரணமாகக் கிராமங் களில் மந்திரவாதி மாங்கொட்டையைக் காட்டி மண்ணிற்குள் வைத்து மூடி மாங்கொட்டைக்குள்ளிருந்து மாமரத்தை உண்டாக்கி, அதிலிருந்து பழங்கள் பழுக்கவைத்து, அந்தப் பழத்தை உங்களுக்குத் தருவேன் என்று சொல்லிக் கூட்டத்திலே

இருக்கிறவர்களைப் பார்த்து ஜோராகக் கைதட்டுங்கள் என்று சொல்லுவான். கூட்டத்திலே இருக்கிற சிறுவர்கள் கைதட்டுவார்கள், எல்லோரும் கைதட்டுவார்கள். அந்தவிதமாகக் கடந்த பட்ஜெட்டில் இந்த டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டை ஏற்றிருந்த அமைச்சர் இரண்டு கோடி லாபம் காண்பிப்பேன், அதற்கான திட்டத்தை வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு . . . (மணியடிக்கப்பட்டது) பேரவைத் தலைவர் அவர்களே குறுக்கீடுகளை எல்லாம் பார்த்து எனக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லாவற்றையும் பார்த்துத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** குறுக்கீடுகளினாலே ஏற்பட்ட காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு எனக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் தரவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Be liberal, sir.

MR. Deputy Speaker : I cannot be more liberal than this.

THIRU K. VINAYAKAM : Discretion is the letter part of value.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய கட்சியின் சார்பிலே பின்னாலே பேசுகிறவர்களுடைய நேரத்தைக் குறைத்துக்கொண்டு கனம் உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்கலாம்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜோராகக் கைதட்டினார்கள். ஆனால் அந்தக் கிராமத்திலிருந்து மந்திரவாதி கொட்டையிலிருந்து மரத்தை உண்டாக்கி மரத்திலிருந்து பழத்தை உண்டாக்காமல் அந்தக் கிராமத்தைவிட்டே போனதைப் போன்று அந்த அமைச்சர் அவர்கள் அந்த இலாகாவை விட்டுப் போனார்களே. இரண்டு கோடி லாபம் எங்கே, அவர்கள் முதலமைச்சரிடம் கொடுத்த திட்டம்தான் என்ன. ஏன் அந்தத் திட்டத்தை முதலமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை? இலாகா மாற்றம் அமைச்சரவையைப் பொறுத்ததுதான். ஒருவருடைய பதவியை எடுத்து மற்றொருவருக்குக் கொடுப்பதற்கு முதலமைச்சருக்குப் பூரணமாக உரிமை இருக்கிறது. ஆனால் அந்த அமைச்சர் அவர்கள் முக்கியமான திட்டத்தை வைத்திருக்கிறார்கள். இரண்டு கோடி லாபம் தருகிற திட்டத்தை வைத்திருந்தார்கள் என்று சொன்னார்கள். அவரை அந்த இலாகாவை விட்டு மாற்றியது ஏன் என்று பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்வியை எல்லோரும் கேட்கிறார்கள்.





குறிப்பாக என்.ஜி.ஓ.-க்களுக்கு 10 ரூபாய் உதவிமானியம் கொடுத்திருக்கிறார்கள். 30 ரூபாய் அவர்கள் கேட்டதற்கு 10 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்ததை அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அந்த 30 ரூபாயும் கொடுக்கவேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன். என்.ஜி.ஓ.-க்களை சமூக விரோதிகள் யாரோ தூண்டிவிடுகிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். சமூக விரோதி யார்? கொள்ளை லாபக்காரன் சமூக விரோதி, கொள்ளையடிக்கிறவன் சமூக விரோதி, விபச்சார விடுதி நடத்துகிறவன் சமூக விரோதி, விபச்சார விடுதி நடத்துகிறவர்களுக்குத் துணை போகிறவர்கள் சமூக விரோதிகள், கொலைக் குற்றம் புரிகின்றவர்கள் சமூக விரோதிகள். ஆக இவர்கள்தான் சமூக விரோதிகள் * *

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மார்டின் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டது குறிப்பேட்டில் இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. டி. மார்டின் :** என்.ஜி.ஓ-க்களை யாரும் தூண்டிவிடத் தேவையில்லை. அவர்கள் ஓரளவு படித்தவர்கள், அவர்கள்தான் அரசு போடுகின்ற திட்டங்களுக்கெல்லாம் துணையாக இருந்து நிறைவேற்றித் தருகின்றவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்.ஜி.ஓ-க்களை வன்முறைக்குத் தூண்டிவிடுகின்றவர்களைப்பற்றிச் சொன்னேன். என்.ஜி.ஓ-க்களை யாரும் தூண்டிவிடத் தேவையில்லை என்று சொன்னால், தூண்டிவிடாமலேயே அவர்கள் வன்முறையில் நடக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் குற்றம் சாட்டுகிறாரா?

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ-க்கள் நன்றாக அறிவு படைத்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள். அவர்களை யாரும், எந்தச் சமூக விரோதியும் தூண்டிவிடத் தேவையில்லை, அவர்களுடைய பிரச்சனையைக் கேட்க வேண்டுமென்று அவர்களுடைய வயிறுதான் கேட்கச் சொல்லுகிறது. அப்படியானால் அவர்களுடைய வயிறு சமூக விரோதியோ என்னமோ தெரியவில்லை. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு ஆட்சியிலுள்ளவர்கள் நிச்சயமாகப் பரிகாரம் காணவேண்டும். பே கமிஷன் பற்றி நான் குறிப்பிடவில்லை என்று கூறினார்கள். அந்த நாள் குறிப்பிட்டு அந்தக் குறிப்பிட்ட நாளுக்குள்ளாக பே கமிஷன் அறிக்கை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். இங்கே கையாடல், அங்கே கையாடல் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயின்ட் ஆப் இளாரிபிகேஷன் என்று உங்களைப் பற்றிச் சொல்லியிருந்தால் மட்டுமே நீங்கள் பதில் சொல்லலாம். பொதுப்படையாகப் பேசியதைப் பற்றி நீங்கள் கேட்பதற்கு விதிகளில் இடம் இல்லை.

**திரு. இரெ. இளம்வழுதி:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையை ஆதரிக்கின்ற முறையிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள், சர்க்காருடைய பணம் பல வழிகளில் கையாடல் செய்யப்படுகிறது. அவை இத்தனை லட்சங்கள் என்று குறிப்பிட்டார்கள். இப்படி கையாடல் செய்யப்படுகின்ற சர்க்காருடைய பணம் யார் யாரால் கையாடல் செய்யப்படுகிறது, எந்த எந்தத் துறையில் கையாடல் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருப்பார்களேயானால் அதை வரவேற்றிருப்பேன். இன்று காலையில் கேள்வி நேரத்தின்போது நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சர்க்காருடைய பணத்தைக் கையாடியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் யார் யார் என்று கேட்டபோது பெயரைச் சொல்லாமலே அமர்ந்து விட்டார்கள். அப்படி அவர்கள் அந்தப் பெயர்களைச் சொல்லியிருப்பாரானால் அந்த நபர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சர்க்காருடைய பணத்தை எவ்வளவு கையாடியிருக்கிறார்கள் என்பது வெகு தெளிவாகத் தெரிந்திருக்கும். காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த மாதிரிக் கையாடல்களைப் பற்றிப் பேசும்போது மிகவும் ஜாக்கிரதையாகப் பேசுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்.ஜி.ஓ-க்களுக்கு இடைக்கால நிவாரணமாக 10 ரூபாயை நம்முடைய அரசு அளித்திருக்கிறது. அந்த வகையில் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாயை என்.ஜி.ஓ-க்களுக்கு நம்முடைய அரசு அளித்திருக்கிறது. ஆனால், அந்த என்.ஜி.ஓ-க்களை மேலும் மேலும் தூண்டி விடுபவர்கள், வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தூண்டி விடுபவர்கள், அமைதியான வழியில் இருந்து பாபாட்டுக் கொள்ளத் தூண்டிவிடுகின்றவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அவர்கள் சமூக விரோத சக்திகள்தான் என்பதை அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நிரூபித்து விட்டன. என்.ஜி. ஓ. க்களுக்காக இடைக்கால நிவாரணமாக 10 ரூபாய் அளித்து விட்ட பிறகும் கூட, என்.ஜி.ஓ-க்களில் சில பேர் 'இந்தப் பணம் பிச்சைக் காசு, எங்களுக்கு அது தேவையில்லை; இந்தச் சர்க்காரை எதிர்த்து மறுபடியும் போராடுவோம்; உண்ணாவிரதம் இருப்போம்' என்று பேசியதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றியதாகவும் பத்திரிகையில் பார்த்தோம். 'அந்த முறையில் அந்த என். ஜி. ஓ. க்களை தூண்டி விட்டவர்கள், அந்த என்.ஜி.ஓ-க்களை மீண்டும் சர்க்காருக்கு எதிராகத் தூண்டிவிட்டது யார்?' என்பதை



இந்தச் சபைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் குறிப்பிட்டது போல் என்.ஜி.ஓ-க்கள் அமைதியானவர்கள், படித்தவர்கள், இந்தச் சர்க்காருடைய ஆணிவேர் போன்றவர்கள், முதுகெலும்பு போன்றவர்கள். அவர்களை நம்முடைய அரசு வெகு நல்ல முறையில் கவனித்து அவர்களுக்கு வேண்டிய முறையில் சம்பளத்தை அளிப்பதற்காகவும், நிவாரணங்களை கொடுப்பதற்காகவும் திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறது. பே கமிஷனும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அந்த என்.ஜி.ஓ-க்கள் ஆற அமர இருந்து நல்ல முறையில் நிவாரணத்தைப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோமே தவிர, நிவாரணமே இல்லை என்று சொல்லவில்லை.

காங்கிரஸ் நண்பர்களும், மற்ற நண்பர்களும் ஒரு விஷயத்தை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். என்.ஜி.ஓ-க்கள் பிரச்சினையில் இன்றைக்கு இண்டிகேட் காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் சரி, சிண்டிகேட் காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் சரி, இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் சரி, வலதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் சரி, சுதந்திராக் கட்சியினர் ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் சரி, அந்த மாநிலங்களில் எல்லாம் என்.ஜி.ஓ.-க்கள் பிரச்சினையை அந்த அந்த அரசு எப்படி அணுகுகிறது. என்.ஜி.ஓ.-க்கள் பிரச்சினைக்கு எப்படி நிவாரணம் காணுகிறது, எந்த முறையில் செயல்புரிந்து வருகிறது என்பதைச் சொல்லியிருப்பார்களேயானால் நாங்கள் வரவேற்றிருப்போம். அங்கெல்லாம் ஆளும் கட்சியாக இருக்கும் அவர்கள் என்.ஜி.ஓ-க்களுக்கு நிவாரணம் தருவதில் எப்படிச் செயல்புரிகிறார்கள் என்பதை மறந்துவிட்டு, சட்டமும் அமைதியும் நல்லமுறையில் நிலவி வரும் தமிழகத்தில், தமிழக அரசு செய்யக் கூடிய காரியங்களைக் குறை பேசியும், தமிழக அரசு கொடுக்கிற நிவாரணத்தைக் கேலி பேசியும் என்.ஜி.ஓ.க்களைத் தூண்டி விடக்கூடிய அளவில் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

அண்மையில் நடைபெற்ற கூட்டங்களில் கூட காங்கிரஸ் கட்சியினரும், மற்றவர்களும் என்.ஜி.ஓ-க்களை எந்தெந்த முறையில் தூண்டிவிட்டார்கள் என்பதை நாம் அறிவோம். என்.ஜி.ஓ-க்கள் கூட்டத்திலே போய், நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசினார்கள். என்.ஜி.ஓ.க்கள் கூட்டத்தில் பேச வேண்டியதன் அடிப்படை என்ன? காங்கிரஸ் கட்சியாக இருக்கட்டும் அல்லது மற்றக் கட்சிகளாக இருக்கட்டும், என்.ஜி.ஓ-க்களுடைய பிரச்சினையைப் பற்றி பேசி இருக்க வேண்டும். அவர்களுக்கு எப்படி உதவி வேண்டுமென்று பேசியிருக்க வேண்டும். அங்கே போய் 'கலைஞர் ரோமாபுரிப் பாண்டியன் காலத்தில் வாழ்கிற ராஜராஜ சோழன் போல் இருக்கிறார்' என்று பேச வேண்டிய காரணம் என்ன என்பதைத் தயவுசெய்து உணரவேண்டும். இப்படித் தனிப்பட்ட

முறையில் முதலமைச்சரைத் தாக்குவதற்கு என்.ஜி.ஓ-க்கள் கூட்டம் பயனபடுத்தப்பட வேண்டுமா என்று என்.ஜி.ஓ.க்களைப் பணிவோடு கேட்கிறேன். நீங்கள் அருள்கூர்ந்து இந்த அரசியல் சேற்றில் மாட்டிக் கொள்ளாதீர்கள், அரசியல் சிக்கலிலே மாட்டிக் கொள்ளாதீர்கள். அரசியல்வாதிகள் உங்களுக்கும் அரசாங்கத்தினை நடத்திக் கொண்டிருக்கும் கட்சிக்கும் இடையே நிச்சயமாக விரோத உணர்வை ஏற்படுத்தி விடுவார்கள். நல்ல சூழ்நிலை இருப்பதை வீணாகக் கெடுத்து விடுவார்கள். முதலமைச்சர் அவர்களுக்கும் உஙகளுக்கும் இடையே இருக்கும் பாசத்தைக் கெடுத்து விடுவார்கள். நம்முடைய அரசாங்கம் என்.ஜி.ஓ-க்களால் ஆதரிக்கப்பட்டது, மாணவர்களால் ஆதரிக்கப்பட்டது, தொழிலாளர்களால் ஆதரிக்கப்பட்டது. என்.ஜி.ஓக்கள் அருள்கூர்ந்து அமைதியாக இருந்து அரசு நீட்டுகின்ற திட்டங்களை நல்ல முறையில் கவனித்து பயன்பெற வேண்டுமென்று இந்தப் பேச்சின் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய அரசுக்கு ஒரு வேண்டுகோள். செகரடேரியட்டில் இருக்கும் என்.ஜி.ஓ.க்களுக்கும், ஸ்டேட் லெவலில் இருக்கும் என்.ஜி.ஓக்களுக்கும் பெரிய தாரதம்மியம் இருக்கிறது. செகரடேரியட்டில் இருக்கும் என்.ஜி.ஓ-க்களுக்கு கிரேடு அதிகமாகவும், ஸ்டேட் லெவலில் இருக்கும் என்.ஜி.ஓக்களுக்கு கிரேடு குறைவாகவும் இருக்கிறது. ஒரே வேலையை ஒரே முறையில் செய்யக் கூடிய அவர்களுக்கிடையே சம்பளத்தில் தாரதம்மியம் இருக்கக் கூடாது. வேண்டுமானால் செகரடேரியட்டில் இருப்பவர்களுக்கு கிராஜுவேட் அலவன்ஸ் என்று தனிப்பட்ட முறையில் கொடுக்கலாம். இந்த வேறுபாட்டை நீக்கினால் தமிழகத்தில் இருக்கும் என்.ஜி.ஓக்கள் நம்முடைய அரசை வாயார, மனமாரப் பாராட்டுவார்கள். அதுமட்டுமல்லாமல், என்.ஜி.ஓ-க்களுடைய குறைகளை நம்முடைய அரசு நல்ல முறையில் கவனித்து ஆவன செய்து வருகிறது என்பதை என்.ஜி.ஓ.க்களுக்குத் தெரிவித்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை புரட்சிகரமான அறிக்கை என்பது சொல்லாமலே தெரியும் என்று கருதுகிறேன். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை, துணிந்து, தைரியமாக 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்தது சாதாரண காரியமல்ல. அது நிலச் சீர்திருத்தத்தில் ஒரு திருப்புமுனை என்று கூறி என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல முன் வருகிறேன்.

என்னுடைய தொகுதியிலே பெண்ணையாற்றுக்குக் குறுக்கே உள்ள இரண்டாயிரம் விளாகம் என்ற கிராமத்தினை இணைக்கும் வகையில் பாலம் கட்ட நிதி அறிக்கையில் வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. இது அங்குள்ள மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும். பத்து லட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்திருப்பதற்காக இந்த அரசுக்கு நான்





என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் என்னுடைய தொகுதியில் இருக்கும் தாழம்குழாய் என்ற பகுதி மீனவர் வாழும் பகுதி. அங்கு ஒரு தரைப் பாலம் தேவை என்று கேட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித்தரு மாறு கேட்டுக் கொள்கிறேன். கடலூர் நகரம் தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகராகும். இடையில் கெடில நதி ஓடுகிறது.

வெள்ளக் காலத்தில் அந்த ஆறு கரைபுரண்டு நகரமே அபாயத்திற்கு உள்ளாகிறது. அந்த ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் கரைகள் எழுப்பி நகரத்தை அபாயத்திலிருந்து காப்பாற்றவேண்டும். என் மாவட்டத்தின் பெயர் தென் ஆர்க்காடு மாவட்டம் என்றிருக்கிறது. ஆர்க்காடு நவாபின் ஆட்சி முடிந்து பல வருடங்கள் ஆகின்றன. எனவே, இன்னும் எங்கள் மாவட்டத்திற்கு தென் ஆர்க்காடு மாவட்டம் என்ற பெயர் இருப்பதை எங்கள் மாவட்ட மக்கள் விரும்பவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆர்க்காடு நவாபின் ஆட்சி முடிந்து விட்டது. ஆனால் ஆர்க்காடு இருக்கிறது.

**திரு. இரெ. இளம்வழுதி:** தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரின் பெயரை வைத்து கடலூர் மாவட்டம் என்று சூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தென் ஆர்க்காடு மாவட்டத்தின் பெயரை கடலூர் மாவட்டம் என்றும், வட ஆர்க்காடு மாவட்டத்தின் பெயரை வேலூர் மாவட்டம் என்றும் பெயர் வைப்பது சாலச்சிறந்தது. கடலூர் நகரத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் அதைப் பற்றிய குறிப்பைக் காணவில்லை. ஆகவே அதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதி மக்களுக்கு நல்லபல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறி இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கிறேன்.

*** திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்துள்ள 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆழ்ந்து கவனத்துடன் படித்து பரிசீலனை செய்து பார்த்தேன். சிறந்ததொரு இலக்கியத்தைப் போன்று இந்த அறிக்கை அமைந்திருக்கிறது. நான் தமிழில் படித்த காரணத்தினால் போலும்! அதுகூட, ஆங்கிலத்தில் முதலில் தயாரிக்கப்பட்டு பிறகு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது புலனாகிறது, வாசகங்கள் தலையைச் சுற்றி வருவதால்! ஆம்; திறமையான புலவரால் மொழிபெயர்க்கப்பட்டிருந்தும் கூட இந்த அறிக்கை முதலில் தமிழில் தயாரிக்கப்பட்டு, பின்னர் அது தெரியாத துர்பாக்கியசாலிகளுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக்கும் நாள் விரைவில் வர வேண்டும், வரும் என்ற நம்பிக்கையோடு நான் மேலே பேச முற்படுகிறேன்.

இதில் உள்ள புதுமையான—புரட்சிகரமான அம்சம் என்னவென்றால், விளைநிலங்களின் உச்சவரம்பு 30 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றிருப்பதை, 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கராகக் குறைப்பது என்று இந்த ஆட்சி செய்ய இருக்கிற மாறுதலாகும். இந்த மாறுதல் நமக்கு சுதந்திரம் வந்த ஆரம்பத்திலேயே செய்யப்படும் என்று காந்தியடிகள் உறுதி கூறினார்கள். சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த ஆண்டில், லூயிபிஷர் காந்தியடிகளைப் பார்த்துக் கேட்ட போது, அடிகள் கூறியிருப்பதைப் பற்றி "காந்தியடிகளுடன் ஒரு வாரம்" என்ற நூலில் எழுதியிருக்கிறார். "சுதந்திர இந்தியாவில் மக்களுக்கு நீங்கள் கொடுக்கப்போகும் பரிசு என்ன?" என்று கேட்கிறார் பிஷர். அதற்கு ஒரு கணமும் தயங்காது காந்தியடிகள் பதில் சொல்கிறார்; "மக்களுக்காக இந்த விவசாய நாட்டில் மக்களுக்கு அளிக்கப்போகும் பரிசு, அவர்கள் விளைவிக்கிற நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக்குவதுதான்" என்று கூறியுள்ளார்கள். உடனே பிஷர் கேட்கிறார் "நிலச் சுவாந்தார்கள் அதை எதிர்க்க மாட்டார்களா?" என்று. அதற்கு காந்தியடிகளின் பதில்; "முதலில் எதிர்ப்பார்கள், பிறகு காலத்திற்கு ஏற்றபடி அவர்கள் வழிக்கு வந்துவிடுவார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் லூயிபிஷர் கேட்கிறார், "நஷ்டயீடு இல்லாமலா?" என்று. காந்தியடிகள், சொல்கிறார் "நஷ்டயீடா, என்றால் அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. இந்தியா ஏழை நாடு" என்று.

ஆக, சுதந்திரம் வந்தவுடன் நிகழும் என்று காந்தியடிகள் எதிர்பார்த்திருந்த நிலப் புரட்சியை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்திருக்கிற ஒரு நிலை ஏற்பட்டிருப்பதைக் காண நான் மகிழ்ச்சியடைகிறேன், காந்தியடிகளிடம் நம்பிக்கைக் கொண்ட ஊழியன் என்ற முறையில்.

கொண்டுவரப்படுகிற இந்தச் சீர்திருத்தம் 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்பது ஒரு குடும்பத்திற்கா அல்லது ஒரு தனி நபருக்கா? என்பது தெரியவில்லை. ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று இருப்பதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. தனி நபருக்கு 15 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. நிலவுடைமையில் புரட்சி ஏற்படுத்துவது தான், நிலப்பிரபுத்துவத்திற்கு முடிவு கட்டுவதுதான் நோக்கம் என்றால், இதைப்பற்றிச் சிந்தித்து எது சரியோ அதை யோசித்துச் செய்யவேண்டும்..

அறநிலையங்களின் நிலங்கள் எடுக்கப்படவேண்டும் என்று இங்கு பேசப்பட்டது. உணர்ச்சியளவில் அப்படிப்பேசிய அவர்களோடு நான் ஒன்றுபடுகிறேன் என்று அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். தனி நபர்களின் விளை நிலங்களில் உழுபவர்களுக்கு ஒரு நியதி, அறநிலையங்களுக்கு சொந்தமான விளை நிலங்களில் உழுபவர்களுக்கு ஒரு நியதி என்று இருக்க முடியாது. ஆனால், நிலைமை என்ன என்பதை நாம் சிந்தித்துப்பார்த்து முடிவு எடுக்கவேண்டும். அறநிலையங்களுக்குள்ள நிலங்கள் என்றால்,





அவை தனி நபர்களுக்குச் சொந்தமானவை அல்ல. காந்தியடிகள் சொன்னதுபோல், 'தர்மகர்த்தா முறையில், ஒரு ஸ்தாபனத்தின் கீழ் நிலம் இருக்கிறது. அறநிலையங்களின் சொத்துக்களில் வரும் வருவாய் மூலம் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், போன்ற ஏராளமான அறக் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆகவே, இதை நினைவில் கொண்டு ஒரு தனிப் பிரச்சினையாகக் கவனிக்க வேண்டும். தனிநபர் நிலத்தோடு சேர்த்து வரக்கூடிய பிரச்சினை அல்ல அது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, நன்கு சிந்தித்து, அறநிலையங்களுக்குச் சொந்தமாகவுள்ள நிலங்களில் வேலை செய்து வரக்கூடிய உழவர்களுக்கு எந்தெந்த உரிமைகள் வழங்க முடியும் என்று யோசித்து, அதுகுறித்து முடிவு எடுக்கவேண்டுமென்பது என் வேண்டுகோள். அறக் கட்டளைகள் பாதிக்கப்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது. குடிசைப் பகுதிகளை கட்டடப் பகுதிகளாக மாற்றுவதற்கு ஒரு கோடி ரூபாய் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நல்ல மாறுதல், வரவேற்கிறேன். சென்னை நகரத்தொகுதியிலேயே என் தொகுதி குடிசைப் பகுதிகள் அதிகமாகவுள்ளதாகும். ஒருவேளை முதல் அமைச்சர் இதில் என்னுடன் போட்டியிட்டால் மறுக்க நான் விரும்பவில்லை. அவர் தொகுதி முதல், என்னுடையது இரண்டாவது என்று ஏற்றுக் கொள்கிறேன். திரு. அரங்கண்ணல் சைகை காட்டுகிறார், 'என்னுடைய தொகுதி' என்று. அந்த அளவிற்குப் போட்டியிட்டுக் கொண்டு, 'என்னுடையது' 'என்னுடையது' என்று கூறுகிற அளவிற்கு நகர்முழுவதுமே குடிசைப் பகுதி ஆகிவிட்டது. குடிசைகளை நிலத்திற்கு உரியவரின் அனுமதியோடு போட்டிருக்கிறார்களா அல்லது அனுமதி இல்லாமல் போட்டிருக்கிறார்களா? என்பது சட்டபூர்வமானதொரு பிரச்சினை என்பதை ஒப்புக்கொள்கிறேன். எனினும், நகரில் குடியேறி விட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடியிருப்பதற்கு வீடு கொடுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. அப்படி வீடு இல்லாவிட்டாலும் நிலம் கொடுக்கவாவது கடமைப் பட்டிருக்கிறது. அப்படியிருக்க திடீரென்று போலீஸார் வந்து குடிசைகளைப் பிய்த்துவிட்டு ஓலைகளையும் கொம்புகளையும் லாரிகளில் ஏற்றிப் போவதைக் காணும்போது, அதைப் பார்க்கிற மக்கள் அந்நேரத்தில் மிகவும் ஆத்திரப்படுகிறார்கள் என்பதை நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். குடிசைப் பகுதிகளைக் கட்டடப்பகுதிகளாக மாற்ற ஏழு ஆண்டு திட்டமிட்டு இந்த ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி—அதைப் பரிபூர்ணமாக நிறைவேற்றுகிற வரையில் அல்லது அதற்கான வேலைகள் தொடங்கப்படுகிற வரையில் அனுமதி பெற்றோ அல்லது அனுமதி இல்லாமலோ குடிசைகள் போட்டிருப்பவர்களை அங்கிருந்து அகற்றுவது என்ற நிலையில்லாமல், திட்டத்தோடு கூடி குடிசைகள் அகற்றபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சியைக் கவிழ்த்து விட்டால், அடுத்து என்ன? சுயாட்சி கேட்போரெல்லாம் தேசத் துரோகிகள் என்று சொல்லும் கும்பல் அல்லவா அந்த இடத்தில் உட்காரும். அதைச் சிந்திக்கவே என்னால் முடியவில்லை; நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. உங்களுடைய நோக்கம் எப்படியாவது இந்திராவின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்பதுதான். அதற்காகக் கிடைத்ததையெல்லாம் எடுத்து அடி என்ற மட்டரகமான அரசியலுக்கு இறங்கிவிட்டீர்கள் என்று எண்ணுகிறேன். தமிழ்நாட்டின் உரிமைக்கு மதிப்புக் கொடுத்து—இந்தியாவின் ஒருமைக்கு மதிப்புக்கொடுத்து, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று நீங்கள் கேட்கத் தயாரா? இந்திராகாந்தியுடன் சேர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்ட் கட்சியும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றுபட்டு முயன்றாலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றத்திலே, இந்தி மொழி பற்றிய திருத்தத்தையும், மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கும் திருத்தத்தையும் கொண்டுவந்து நிறைவேற்றக்கூடிய சாத்தியக் கூறு ஏற்பட்டிருக்கிறதா? உண்மையிலே இந்தி மொழிபற்றிய விதி திருத்தத்தில் நம்பிக்கை இருந்தால், உண்மையிலேயே மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால், இந்திரா காந்தியுடன் சேர்ந்து, இந்தி ஆட்சி மொழி பற்றிய திருத்தத்திற்கும், மாநில சுயாட்சி பற்றிய திருத்தத்திற்கும் ஆதரவுதர உங்கள் பெருந்தலைவர் அகில இந்திய ரீதியிலுள்ள தன் கட்சிக்கு கட்டளையிடத் தயாரா? என்று கேட்க விரும்புகிறேன். ஓட விட்டுப் பார்ப்போம் ஒத்துழைக்கத் தயாராகயில்லை--என்று சொல்லுகிறீர்கள். இந்த நிலையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு உறுதியாக இருக்க வேண்டுமென்று இறுதியாகக் கேட்டுக்கொண்டு, ஒரேயொரு விஷயத்தைக் கூறி முடித்துவிட விரும்புகின்றேன்.

திருச்சியில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக மகாநாட்டில் முதல்வரால் ஒரு கோஷம் எழுப்பப்பட்டிருக்கிறது. அதை புதிய கோஷம் என்று சிலர் சொல்லுகிறார்கள். எனக்கு அது புதியதாகத் தெரியவில்லை. கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள்கூட, திருச்சியிலிருந்து திரும்பியவுடனே என்னைக் கேட்டார்கள், "முதலமைச்சரவர்களின் கோஷத்தைப்பற்றி உங்களுடைய கொள்கை என்ன?" என்று. "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்பது பற்றி உங்கள் கொள்கை என்ன என்று கேட்கிறார்களே, என்னைகூடப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறார்களே என்று நினைக்கத் தோன்றியது; பிறகு நிச்சயமாக அப்படி நினைத்திருக்க மாட்டார்கள், அந்த கோஷத்தின் மீது முதல்வர் தந்த விளக்கம் பற்றி என்னுடைய கருத்தை அறிய விரும்பினார்கள் என்று நினைத்தேன். எனக்கு கூட்டாட்சியைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பற்றி 1966-க்குப் பிறகு என்றைக்குமே சந்தேகம் எழவில்லை. அண்ணா அவர்கள் இருக்கும்பொழுது கொடுத்த உறுதிமொழியில் திராவிட முன்னேற்றக் கழகம் ஊன்றி இருக்கிறது என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. திரும்பவும்





ஒன்றைச் சொல்லுகின்றேன். "மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி" என்று சொல்லும்பொழுது, நாடாளுமன்றமே இல்லாத ஒன்று, மத்தியில் ஆட்சியே இல்லாத ஒன்று என்று முதல்வர் சொன்ன வாசகங்களை நான் பத்திரிகையில் பார்த்த பொழுது, அது பிரிவினைக்கு அடிப்படையாக இருக்காது என்ற நம்பிக்கையுடன் நான் அவரிடம் விளக்கம் கேட்கவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நிருபர்கள் என்னைக் கேட்டார்கள், நாடாளுமன்றமே இல்லாமல் இருக்குமா, மத்தியில் ஆட்சியே இல்லாமல் இருக்குமா என்று கேட்டார்கள். இவைகளைப் பற்றி நான் விளக்கமாக எதுவும் சொல்ல முடியாது. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்கின்ற தத்துவதற்கு இன்னும் விரிவான விளக்கங்களை, விவரங்களை எங்களுடைய பொதுக்குழு முடிவு செய்யும் என்று சொன்னேனே தவிர, நாடாளுமன்றமே இல்லாமல் இருக்கும் என்ற கருத்தை நான் சொல்லவில்லை.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவரவர்களே, நான் திரும்பவும் சொல்லுகின்றேன். நாடாளுமன்றமே இல்லாத ஒரு நிலையை விரும்புகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. மத்திய ஆட்சியைச் "கூட்டாட்சி" என்று ஒப்புக்கொண்ட பிறகு இந்தியாவின் ஒருமைப்பாட்டை விரும்புகிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் விளக்கம் இதற்கு முரண்பாடு என்பது நான் உணர்ந்தேன், அதற்குத் தெளிவு பெற வேண்டுமென்பதற்காகச் சொல்லிக்கொண்டு வந்தேன், என்னுடைய பேச்சை முடிக்கும் வரை பொறுமையுடன் இருந்தால் புரிந்துகொண்டிருக்க முடியும். எனக்குக் கொஞ்சமும் ஐயப்பாடு இல்லை என்பதை உறுதியாகச் சொல்லுகிறேன். ஆனால், எனக்குள்ள ஒரு ஐயப்பாட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். "மாநிலக் கட்சிகள் இனி இந்தியாவை ஆளும்" என்று சொன்னார்கள். என் கழகமும் ஒரு மாநிலக் கட்சிதான். தி.மு.க-வும் மாநிலக் கட்சிதான். ஆனாலும்கூட, ஒன்றில் எனக்கு ஐயப்பாடு உண்டு. மாநிலம் தோறும் மாநிலக் கட்சிகள் இருந்தாலும், எல்லா மாநிலக் கட்சிகளும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. ஜாதிக்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு, தொண்டர்களுக்கு மதிப்புக் கொடுத்து, தனிநபர்களின் யதேச்சாதிகாரத்திற்கு அப்பாற்பட்டு, நன்கு வேரூன்றியுள்ள ஒரு ஜனநாயக கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்பதில் எனக்குக் கொஞ்சமும் ஐயப்பாடு இல்லை. ஆனால், முதல்வர் அவர்கள் அறிந்து இருக்கிறார்களோ என்னவோ, அனைத்து மாநிலங்களிலும் இப்படித்தான் என்ற நிலை இல்லை. மேற்கு வங்காளத்தில், மற்ற இடங்களில் என்ன நடக்கிறது? இந்தியாவின் ஒருமைப்பாட்டை ஒத்துக்கொண்டுள்ள நாம், ஜனநாயகத் தன்மையுள்ள கட்சிகளுடன் கூட்டு சேரலாம். ஜனநாயக தன்மையற்ற கட்சிகளுடனும் கூட்டு சேரலாம், ஆனால் அதை நீங்கள் நிரந்தரத் தன்மையாக ஆக்கிவிடுகிறோம் என்று சொன்னால், ஐயம் ஏற்படும்; ஒருமைப்பாட்டிற்குக் கேடோ என்ற சந்தேகத்

எல்லாத்துறைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஒன்றைத் தவிர. அது தமிழ் மொழி வளர்ச்சித் துறையாகும். ஒருகால், நிதிநிலை அறிக்கையில் சொல்லாமலே, இலாகாக்கள் மூலம் செலவு செய்வார்களோ என்னவோ தெரியவில்லை. தமிழுக்கென்று தனியாக நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் நல்ல பல அம்சங்களுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறபோது, தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்திற்காக, பல்கலைக் கழகங்களின் தமிழ்த் துறை வளர்ச்சிக்காக இவர்கள் எவ்வளவு நிதி ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு இதில் இடம் பெறவில்லை. கடந்த ஆண்டுகளிலும் இத்தகைய குறிப்பு இருந்ததில்லை என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, வரி உயர்வு பற்றிச் சொன்னார்கள். வரி உயர்வு என்பது எனக்குப் பிடிக்காதுதான். வரியில்லாமல் இருந்தால் நல்லதுதான். வரி கட்டுவதில் அதிக கஷ்டப்படுபவன் அல்ல நான் ஆனால் ஒன்றை நாம் கவனிக்கவேண்டும். தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக புது வரிகளைப் போடாத ஒரு ஆட்சி, இந்த ஆண்டில் பழைய வரிகளை சிறிது உயர்த்தி இருக்கிறது என்பதைக் காணும் போது அனுதாபம் இல்லாமல் அதைக்குறைகூறி விடுகிற நிலையில் நான் இல்லை. போடப்பட்டிருக்கிற வரிகள் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்ற குறை இல்லை. அது நடுத்தர மக்களைப் பாதிக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். இதில் எதிர்க்கட்சியினர் என்னிடம் அபிப்பிராயபேதம் கொள்ளலாம். இருந்தாலும் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாமான்ய மக்களைப் பாதிக்கக்கூடிய விதத்தில் வரி போடக் கூடிய வரி இனங்கள்தான் மாநில அரசுக்கு உள்ளன. வளமானவர்கள் மீது வரி போடக் கூடிய இனங்கள் மத்திய அரசிடம் தான் உள்ளன. ஆகவே, அப்படிப்பட்ட வரி இனங்கள் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வந்தாலொழிய, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் வரி உயர்வினால் சாமான்ய மக்கள் பாதிக்கப்படக் கூடிய நிலைதான் இருக்கும்.

என்.ஜி.ஓ-க்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. என்.ஜி.ஓ-க்களின் குறைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் கோபதாபம் நிலவி வருவதை சற்று முன்னர் இங்கு பார்த்தோம். அதற்காக ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பினரின் நலன்—கிராமமக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பது—என்.ஜி.ஓ-க்களுக்கு சம்பள உயர்வு போன்றவைகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைக் காணும்போது, போடப்பட்டிருக்கக்கூடிய வரி உயர்வில் குறை காண என்னால் முடியவில்லை.

நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். "பொருளாதாரக் கொள்கை குறித்த பெரும் முடிவுகளில் பெரும் பாலானவை, இம் மாநிலத்திற்கு வெளியே, அதாவது புது டில்லி





யிலும் பம்பாயிலும் மேற்கொள்ளப்படுவதால், வளர்ச்சிப் பணியில் மாநில அரசின் முயற்சிகள் பெரிதும் தடைப்படுகின்றனவென்பதை நான் முதற்கண் அழுத்தமாகக்கூற விரும்புகிறேன்." என்று.

இங்கு ஒரு காட்சியைப் பார்த்தேன். ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையில் மத்திய மாநில உறவு பற்றிக் குறிப்பிட்டுவந்தார்கள், அப்பொழுதெல்லாம் எதிர்க்கட்சியினர், 'இது என்ன மத்திய அரசைக் குறைகூறுவது வழக்கமாகப் போய்விட்டது' என்று குறை சொன்னார்கள்; இன்றைய தினம் குறை கூறுவதோடு நின்று விடலாமா? போராட்டம் எப்போது? என்று கேட்டார்கள்; ஆகஸ்ட் 20-இல் நாம் சுயஆட்சிப்போர் நடத்தியபோது இவர்களிடத்திலிருந்து ஆள் எடுத்துக் கொண்டிருக்கலாமே என்று நான் நினைத்தேன். அடுத்த ஆகஸ்டிலேயாவது அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன் மாநிலச் சுயாட்சிப் போராட்டத்திற்காக. என்னுடைய நண்பர் மாண்புமிகு. திரு விநாயகம் அவர்கள் சொன்னார்கள். ரொம்ப நாளாகிவிட்டது, அவர் தமிழ்நாடு, தமிழ்நாடு என்று பேசி இப்பொழுது அவர்கள் பேசுவதை கேட்டபொழுது அவர் என் பக்கத்திலே இருப்பதைப் போன்று உணர்ந்தேன். ஆனால் கொஞ்சம் பின்வாங்கி, மாநில சுயாட்சி எங்கள் கொள்கை என்று எண்ணுகிறீர்கள், உங்கள் கொள்கைக்கு ஏன் நீங்கள் போராடவில்லை என்று சொன்னார்கள். ஒன்றை நான் உணர்கிறேன். நான் கோபத்தால் சொல்லவில்லை, போட்டி மனப்பான்மையோடும் சொல்லவில்லை, உண்மை உணர்ச்சியோடு சொல்லுகின்றேன்; இந்த மாநிலத்தின் நலன்களுக்குப் பாடு பட வேண்டியது உங்கள் கடமை அல்லவா? அது உங்கள் உரிமை அல்லவா? அது உங்களின் பிறப்புரிமை அல்லவா? நீங்கள் இங்கு அமர்ந்திருப்பதே, இந்த மாநிலத்து மக்களின் ஓட்டைப்பெற்று தானே? சுயாட்சி கோருவதை உங்கள் கொள்கையாக்கி, அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று, கேட்க உடன்பாட்டு முறையில் எங்களுடன் நீங்கள் சேரத் தயாராகயிருந்தால் ஆளுங்கட்சி வருகிறதோ, இல்லையோ என்னைப் பொறுத்தவரையில், உங்களுடன் சேர்ந்தோ, உங்களை என்னுடன் சேர்ந்தோ பாடுபடத் தயாராகயிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுடைய நோக்கம் என்ன? 25 தி.மு.க. எம்.பி.-க்களின் ஓட்டுகளை இந்திராவிடமிருந்து எப்படிப் பிரிக்கலாம் என்பது தான். 25 எம்.பி. ஓட்டுக்களைப் பிரித்து எடுக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் முயல்வதைப் புரிந்து கொள்ள என்னால் முடிகிறது. எப்படியிருந்தாலும், திராவிட முன்னேற்றக்கழகம் கோருகின்றபடி, மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கித்தான் ஆகவேண்டும் என்ற நிபந்தனையை வைத்து, அந்த நிபந்தனையை பிரதமரின் ஆட்சி ஏற்க மறுத்தால், 25 எம்.பி.-க்களும் ஒத்துழைக்க மறுக்க வேண்டுமென்று சொன்னால், இந்திரா அரசைக் கவிழ்க்க வேண்மென்று சொன்னால். அப்படிக் கவிழ்த்துவிட்ட பிறகு நிலை என்ன? சுயாட்சி வேண்டுமென்பதற்காக, தி.மு.க.-வின் 25 எம்.பி.-க்களும் சிண்டிகேட்டுக்குக் கைகொடுத்து, இந்திராவின்

திற்கு இடம் கொடுக்கும். ஒரு பெரியவர் சொல்லுகிறார், மொழி வாரி மாநிலம் அமைத்ததே இந்தக் கூத்துக்குக் காரணம்; அதை ரத்து செய்துவிட வேண்டுமென்று தங்களுடைய அறிக்கையில் வெளிப்படையாகச் சொல்லியிருப்பதைப் பார்க்கிறேன். மொழி வாரி ராஜ்யம் தவறு என்றால், அதை அவர்கள் காலத்திலேயே தவிர்த்திருக்கலாம். அவர்கள் ஆண்ட காலத்தில்தான் ஆந்திரத்தைப் பிரித்தார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது, அவர்களால் தான் மொழிவாரி ராஜ்யம் அமைந்திருக்கிறது என்பது தெரிகிறது. அவர்களுடைய எதிர்ப்புகளை முறியடித்துத்தான் மொழிவாரி ராஜ்யங்கள் ஏற்பட்டன.

நான் உங்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மாநில சுயாட்சியை பார்லிமெண்டரி முறையில் பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கை இல்லை, அப்படிப்பெறலாம் என்று நேற்றுவரையிருந்த நம்பிக்கை கெட்டுப்போய்விட்டது. அடுத்த பொதுத்தேர்தலுக்குப் பிறகேனும் ஒற்றைக் கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் கிடைக்குமா என்ற ஐயமிருக்கிறது. நாம் சிந்திக்கவேண்டியது, மத்திய சர்க்காருக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்பது பற்றியல்ல; மாநில அரசாங்கங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்ற லட்சியத்தை மத்திய அரசு ஒப்புக்கொள்ளும்படிச் செய்ய கிளர்ச்சி நடத்த வேண்டும். அதற்கு யார் யார் சேருகிறார்களோ, அவர்களுடனெல்லாம் என்னுடைய கட்சி சேரத் தயாராகயிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நாடாளுமன்றத்தில், இந்திமொழிப் பிரச்னைக்காக குடியரசுத் தலைவரவர்களின் உரையின் மீது திருத்தம் கொண்டுவந்த திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மாநில சுயாட்சியைக் கோரி ஒரு திருத்தம் கொடுத்திருக்கலாம். அதை நான் குற்றமாகச் சொல்லவில்லை. எவ்வளவு எச்சரிக்கையாக செயல்பட வேண்டியிருக்கிறது என்பதை நினைப்பூட்டவேண்டுமென்றுதான் இதைச் சொல்லுகிறேன். இந்த வாய்ப்பைத் தந்த பேரவைத் துணைத்தலைவரவர்களுக்கு நன்றி செலுத்தி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி—நிதியமைச்சரவர்கள் தந்த இந்த அறிக்கை, இந்தக் கால சூழ்நிலையில் இதைவிடச் சிறந்ததாகத் தயாரிக்கப்பட்டிருக்க முடியாது என்று சொல்லி நிதி அமைச்சரைப் பாராட்டுகின்றேன்.

* **திரு. ரா. ராமச்சந்திர துரை:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்குகொண்டு பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய ஒருசில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவைக் கொண்டு வந்ததை ஒரு பெரிய புரட்சிகரமான திட்டம் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், அதையொட்டிய கட்சிகளும், இந்த அவையிலே பேசி வருவதைப் பார்க்கின்றோம்.





30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவை ஒரு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக ஆக்கியது ஒரு பெரிய புரட்சியா? நன்கு சிந்தித்துப் பாருங்கள். ஆயிரம் வேலி, இரண்டாயிரம் வேலி என்றிருந்த நேரத்தில், அதை 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக காங்கிரஸ் ஆக்கியது ஒரு பெரிய புரட்சியா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இரண்டாயிரம் வேலியில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா போக அரசாங்கம் எடுத்துக்கொண்டது எவ்வளவு?

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** அரசாங்கத்தை ஆள்பவர்களுக்குத்தான் அது தெரியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டது தவறு என்றால், இந்த அரசாங்கம் வந்தபிறகு விசாரணை செய்து நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நான் சொன்னதற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லிவிட்டார்கள். சட்டப்பிரச்னைகள் அவருக்குத் தெரியும் எப்படியெப்படி நீதிமன்றத்திற்கு விஷயம் செல்லும் என்று தெரியும். 1959-ம் ஆண்டிற்கு முன்பே பிரித்துக்கொண்டு விட்டார்கள். பிரித்துக்கொண்டபிறகு சட்டம் வந்ததால் எதுவும் எடுக்க முடியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சட்டப்படி செய்திருக்கிறார்கள் என்றால், ஏமாற்றினார்கள் என்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்?

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுது இருந்ததைப் பற்றி இப்பொழுது குறை சொல்கிறார்கள். அதே நேரத்தில் டிரஸ்டு என்ற பெயரால் இப்பொழுதும் கூட பல பேர் தங்களுடைய சொத்துக்களை பாதுகாத்துக்கொண்டு வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொன்னால், நமது மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சபையில் பொதுப்படையாகத் தான் பேசலாமே தவிர, தனிப்பட்ட நபரை குறிப்பிட்டுப் பேசக் கூடாது என்று எத்தனையோ தடவை பேரவை தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** உதவி சபாநாயகர் அவர்களே, பெயரைச் சொல்லவேண்டாம் என்றால் சொல்லவில்லை, பெயரைச் சொல்லாமல் பேசுகிறேன். டிரஸ்டு என்ற பெயரால் ஒரு அமைச்சர் தன்னுடைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அவையிலே கொடுத்திருக்கிற கணக்குகளைப் பார்க்கிறபொழுது விசித்திரமாக இருக்கிறது. அவர்களே கூட நெஞ்சில் கை வைத்துப்பார்த்தால், இது வாஸ்தவம் தானா என்பது தெரியவரும்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி:** பாயிண்டு ஆப் ஆர்டர், சார். அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறபோது தான் இது போன்ற பேச்சுக்கள் இடம் பெறலாம். பட்ஜெட் விவாதத்தில் இது போன்ற பேச்சுக்கள் இடம் பெறலாகாது. இது விதிக்குப் புறம்பானது. அது பற்றி தங்களுடைய தீர்ப்பை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** டிரஸ்டு சொத்துக்கள் என்ற பெயரால் சொத்துக்கள் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. சீர் திருத்தவாதிகள், பகுத்தறிவுப் பாசறையிலிருந்து வந்தவர்கள் என்றெல்லாம் பேசப்படுகிறது. மடாதிபதிகள் என்ற பெயரால் எத்தனையோ ஆயிரம் ஏக்கர்கள் டிரஸ்டு என்ற பெயரால் வைத்துக் கொண்டு, அவர்களைச் சார்ந்தவர்களுக்கும், அவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் அவைகளை பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்றால், இந்த அரசு அதற்கு உறுதுணையாக இருக்கிறது என்று தான் பொருள்படும். அதிகமாக நேரம் இல்லாத காரணத்தால் சுருக்கமாக இதை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன். இம் மாதிரியான டிரஸ்டு முறைகளை மாற்றி அமைத்து, ஆயிரக்கணக் கான நிலங்கள் இருக்கக்கூடிய மடாதிபதிகளிடம் உள்ள, டிரஸ்டுகள் என்ற பெயரால் உள்ள நிலங்களையெல்லாம் சேர்த்துஎடுத்துக் கொண்டு அவைகளைக் கொண்டு பொது மக்களுக்கு நிலம் வழங்கி, ஓரளவுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டு கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடும்பக் கட்டுப்பாடு பிரச்சினையைப் பற்றி ஒரு சப்ளிமெண்டரி குவெஸ்சின் இந்த அவையிலே கேட்ட பொழுது . . .

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார்:** ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, பொது மக்களுக்குக் கொடை வழங்குவது என்ற பண்பாடு தெரியாது என்று நினைக்கிறேன். அதை எப்படிச் செய்வது என்பதும் தெரியாது. அப்படிக் கொடுத்த பழக்கமும் இல்லை. கொடை என்பது என்ன என்பது அவருக்குத் தெரியுமா? அதை ஒரு முறைப்படி செய்ய, டிரஸ்டு உண்டாக்காமல் வேறு எப்படிச் செய்ய முடியும்? வேறு வழி இருந்தால் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது என்னைக் குறித்துப் பேசியிருக்கிறபடியால், அதற்கு விளக்கம் சொல்வதற்குக் நான் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் 56 கிராமங்கள் அடங்கியது என்னுடைய ஜமீன், இன்றைக்கு ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால் ஒன்றும் கிடையாது. 56 கிராமத்திலுள்ள பல ஆயிரக்கணக்கான நிலங்களை 1926-ஆம் ஆண்டுக்கு முன்பே, அவர்களுக்கு விற்கக்கூடிய வாய்ப்பு இருந்த அந்த நேரத்திலேயே, அவ்வளவு நிலங்களையும் குடிமக்கள் அனுபவித்துக் கொள்ளட்டும் என்று விட்டுவைத்த வள்ளல்



பரம்பரையில் வந்தவன் நான். இவரைப் போல குறுகிய கால அளவில் பணக்காராக வந்தவன் நான் அல்ல என்பதை இந்த அவையிலே விளக்க விரும்புகிறேன். அடுத்த படியாக.....

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார்:** நீங்கள் ஏதோ 1962-ஆம் வருடத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துவிட்டு, பிறகு காங்கிரசில் சேர்ந்து ஜெயித்து வந்து விட்டீர்கள். நான் என்ன கேட்டேன் என்றால் பொது உபயோகத்துக்கு, மக்களுக்கு, ஒரு கல்லூரி, ஒரு எலிமெண்டரி ஸ்கூல், அவ்வாறு ஏதாவது நீங்கள் கொடுத்தது உண்டா? ஆகவே, அதற்கான காரியங்களைத் தெரிந்து கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகர் அவர்களே, எங்களுடைய கட்சி அங்கத்தினர் கொடை என்றால் என்ன என்பதைத் தெரிந்திருக்கிறார்களா, அவர்களுக்கு யோக்கியதை இருக்கிறதா என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். 56 கிராமங்களையே கொடுத்ததாக் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான்கூட சொல்லலாம். உறுப்பினர் கொடுத்தது நல்ல கொடை என்றால் அமைச்சர் அவர்கள் கொடுத்தது ஓட்டை கொடையா? வேறு விதமாக சம்பாதித்து, வரியை ஏமாற்றி, அவர்கள் குடும்பத்தினர்களுக்குள்ளேயே டிரஸ்டுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுபற்றி நீதிபதி ஒருவரைக்கொண்டு விசாரணை நடத்த வேண்டும். நான் நிரூபிக்கத் தயார் என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். திரு. ராமச்சந்திர துரை கொடுத்தது நல்ல கொடை என்றால், அவர் கொடுத்தது ஓட்டை கொடை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி நிரூபிக்கிறேன் என்று சொல்கிறார்கள். 85 லட்ச ரூபாய்க்கு வருமான வரி சம்பந்தமான வழக்கு ஒன்று திரு. ஆதித்தனார் மீது இருக்கிறது என்றும் அதை நிரூபிப்பதாகவும் முன்பு சொன்னார்கள். இதுவரை நிரூபிக்கவில்லை. இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக நிரூபிப்பாரா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மகன் பெயரில் ஹைகோர்ட்டில் கேஸ் போடப்பட்டிருக்கிறது. மகன் இவர்கள் வழியாக வந்த மகன் தானே? வேறு வழியாக வந்த மகனா? அந்த ஆதித்தன் யார்? அவருடைய குடும்பத்தின் வழி வந்த ஆதித்தன் என்ற பெயரில் தான் இருக்கிறது. தன் பெயரில் இல்லை என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். உண்டா, இல்லையா? நாளைக்குக் கேள்வி நேரம் முடிந்த பிறகு சட்டசபையில் அதற்கான ஆதாரத்தைக் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சமர்ப்பிக்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அமைச்சர் அவர்களுடைய மகனைப் பற்றி பேசுகிற நேரத்தில் பண்பாட்டை மறந்து, மிக அசிங்கமாக பேசினார்கள். அது வருந்தத்தக்கது. அதை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவருடைய குடும்பத்து மகன் என்று தான் சொன்னேன். அப்படிச் சொன்னதில் என்ன தப்பு? எனக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதை இந்த சட்டமன்றக் குறிப்பிலிருந்து எடுக்கவேண்டாம். அப்படியே இருந்தால் தான், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய பண்பு நாட்டிற்குத் தெரியும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, நான் ஏதோ பல கட்சிகளில் இருந்துவிட்டு இப்பொழுது காங்கிரஸ் கட்சிக்கு வந்து விட்டேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஆத்திரப்படுகிறார்கள் அவர்களைப் பற்றி பேசிவிட்டேன் என்று, நான் தானா அந்தக் கட்சியிலிருந்து வந்தேன்? கனம் அமைச்சர் அவர்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால், எத்தனை கட்சி, ஒன்றா, இரண்டா? திராவிடக் கழகத்திலிருந்து [redacted]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் ரூல் 67-ஐ கொஞ்சம் படிக்கவேண்டும் you are making a personal charge அமைச்சர் அவர்கள் விளக்கம் தான் கேட்டார். நீங்கள் அப்படி இருந்தீர்களா என்று தான் கேட்டார்கள். இப்படி நடந்தீர்கள் என்று சொன்னால் தான் அது குற்றச்சாட்டு. நீங்கள் இப்படி இருந்தீர்களா என்று கேட்டால் அது கிளாரிபிகேஷன். நீங்கள் சொல்வது கட்சியிலிருந்து என்று சொல்கிறீர்கள். கொஞ்சம் 67-வது விதியைப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறக்கட்டளை சொத்துக்களையெல்லாம் உச்ச வரம்பு செய்யவேண்டும் என்கின்ற கொள்கையிலே பேசினார் என்று கருதுகிறேன். அப்படி அறக்கட்டளைச் சொத்துக்களெல்லாம் உச்ச வரம்புக்கு உள்ளாக்கப்படவேண்டும் என்கிற சட்டம் வருகிற நேரத்திலே ஆதித்தனார் அவர்கள் அப்படி ஏதாவது வைத்திருந்தால், அந்த அறக்கட்டளை சொத்துக்களையும் அதற்கு உட்படுத்துவோம் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, இந்த அவையிலே குடும்பக் கட்டுப்பாடு பிரச்னை சம்பந்தமாக ஒரு சப்ளிமெண்டரி குவெஸ்சின் நான் கேட்ட நேரத்தில், இந்த அவையிலே அதற்கு ஒரு தவறான பதிலை முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை, குடும்பக் கட்டுப்பாட்டுக்கு மாதம் ஒன்றுக்கு 2, 3 பேர்களை பஞ்சாயத்து யூனியனிலிருந்து வற்புறுத்திக் கொண்டுவர வேண்டுமென்று செய்கிறார்கள், இது நியாயமா என்று கேட்டேன். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் 'அப்படியில்லை' என்று பதில் சொன்னார்கள். அது அப்படி இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக சில குறிப்புகளை தலைவர் அவர்களுடைய அனுமதியின் பேரில் இங்கே படிக்கிறேன்.



"கல்வி—ஆரம்பக் கல்வி—இலால்குடி ஊராட்சி ஒன்றியம் மகிழம்பாடி ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர் திரு. பி. சிங்காரவேலு சேமநல நிதி முன் கடன் கோரும் சம்பந்தமாக எழுதிய கடிதம் குறித்து. . . . .

எல்லாவற்றையும் படித்தால் அதிகமாக டைம் ஆகும். ஆகவே, கீழே உள்ள முக்கியமானவற்றை மட்டும் படிக்கிறேன்:

"குற்றச்சாட்டு—(1) மகிழம்பாடி பள்ளித் தலைமையாசிரியர் திரு. பி. சிங்காரவேலு அவரது சேமநல நிதிக் கடன் சம்பந்தமாக அவரது நிர்வாகத்தினரை 16-2-1970 தேதிய கடிதத்தில் மிரட்டி எழுதியது.

(2) அவரது உயர் அதிகாரிகளின் குடும்ப நலத் திட்டம் சம்பந்தமான உத்தரவுகளை அலட்சியப்படுத்தி குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைக்கு எவ்வித முயற்சியும் எடுக்காமல் இதுவரை ஒரு அறுவை சிகிச்சை கூட செய்யாமல் இருப்பது."

இது தான் முக்கியமானது. இதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இரண்டு குற்றச் சாட்டுகளும் இருக்கின்றன, ஒன்று 'உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை அலட்சியப்படுத்திக் கொண்டு இருப்பது, மற்றது, அவரது உயர் அதிகாரிக்கு அனுப்பின 16—2—1970 தேதிய கடிதத்தில் முறை தவறி எழுதியிருப்பது என்று இப்படி குற்றச்சாட்டுகளில், குடும்ப நலத் திட்டத்தில் அறுவைச் சிகிச்சை செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் இருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்த யூனியனிலும், உயர் அதிகாரிகள் கட்டாயப்படுத்துவது கிடையாது. அவர்களே வேண்டும் என்று கோரி எடுத்துக் கொண்ட பணியை செய்யவில்லை என்கிற குறைபாடுகளே தவிர, வேறொன்றும் இல்லை. யாரையும் வற்புறுத்துவது கிடையாது. யாரும் கட்டாயமாக குடும்ப நலக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதும் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 'உத்தாவை மீறியிருக்கிறார்கள்' என்று குற்றச்சாட்டில் இருக்கிறது.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** குடும்பக் கட்டுப்பாடு திட்டம் விரிவாக்கப்படவேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் கொண்டிருக்கிறது. நாட்டிலே இந்த முறை தொடர்ந்து மேற் கொண்டது. அதிகாரிகளும், ஆசிரியர்களும், பொது அரசியல் வாதிகளும் இதற்கு அவரவர்கள் ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று பழைய அரசாங்கமும், இன்றைய அரசாங்கமும் ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள், அதற்கு முழு நேரத்தைச்செலுத்தவேண்டும். மற்ற ஆசிரியர்கள் அதிகாரிகள் வாய்ப்புக் கிடைக்கும்போது, தம்முடைய ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதில் கட்டாயப் படுத்தும் ஆணை எதுவும் அரசாங்கம் பிறப்பிக்க

வில்லை. அவர்களாகவே, சமுதாய வளர்ச்சிப் பணியில் பங்கு எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். யாராவது ஆணையர் உத்தரவு போட்டிருந்தால், அது பற்றி சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரும்போது, அதன் பேரில் நடவடிக்கை எடுத்து, ஆணையருக்கு அறிவுரை கூறவோ அல்லது அவர் மீது நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கம் தவறுவதில்லை. அரசாங்கம் கட்டாயமாக திணிக்க வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. எங்கோ ஒரு இடத்தில், இரண்டு இடத்தில் நடக்கும் ஒன்றை, தனிப்பட்ட அதிகாரிகள் செய்திருக்கும் நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு அது தான் அரசாங்கத்தின் கொள்கை என்று விமர்சிக்கத் தேவையில்லை என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: இது ஒவ்வொரு யூனியனிலும் நடக்கிறது.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** உறுப்பினர் பேசும்போது, முதல் அமைச்சர் தவறான தகவலைக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிட்டது போல், அங்கே ஒன்று இங்கே ஒன்று நடந்திருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆட்சேபணை இல்லை. ஆனால் "அரசாங்கம் கட்டளை பிறப்பித்திருக்கிறதா பஞ்சாயத்து யூனியன்களில் அப்படி நடக்க வேண்டும் என்று வற்புறுத்தப் படுகிறார்களா" என்று கேட்டபோது, அப்படி தகவல் இல்லை என்று சொன்னேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் கொடுத்த இரண்டு நிமிஷங்களும் குறுக்கீடுகளால் போய்விட்டது. நிறையச் சொல்ல வேண்டியது இருந்தாலும், ஒரு பாயிண்டை மட்டும் முடிக்க அனுமதி கோருகிறேன். அமைச்சர் மீதும், ஒரு சட்ட மன்ற உறுப்பினர் மீதும், இரண்டு குற்றச் சாட்டுக்களைச் சொன்னேன். நான் இல்லாத நேரத்தில் பதில் சொன்னார்கள். அப்படி பதில் சொன்னதை வைத்துக் கொண்டு, பிற்பாடு நான் வந்தபோது, மாண்புமிகு முதல் அமைச்சர், அந்தத் தகவலை வைத்துக் கொண்டு, 'நீங்கள் நீதி விசாரணைக்குத் தயாரா' என்று கேட்டார்கள். நான் தயாராக இருக்கிறேன் என்று இந்த அவையில் ஏற்றுக்கொண்டேன். அதைப் பற்றி அடுத்த நாள் குறிப்பிடப் படவில்லை. அடுத்த சட்ட சபைக் கூட்டம் நடந்தது, அதிலும் நடவடிக்கை எடுக்க வில்லை. அதற்கு அடுத்த கூட்டத்திலும் நடவடிக்கை எடுக்க வில்லை. அதற்கும் அடுத்த கூட்டம் . . .

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி:** என் மீது குற்றச்சாட்டுகளை கூறி மாண்புமிகு உறுப்பினர் பேசினார்கள். என்றால் விளக்கம் தரப்பட்டது. அதற்குப் பிறகு, முதல் அமைச்சர் கேட்ட விளக்கத்திற்கு பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன் என்றார்கள். அதற்குப்



பிறகு அது சட்டப் பேரவைத் தலைவருக்குப் போய்விட்டது. ஆகவே, நடவடிக்கை எடுக்கவேண்டியது சட்டப் பேரவைத் தலைவர். இந்த மாமன்றத்தில் சட்டப் பேரவைத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, எங்களை இழுத்துப் பேசுவது முறையல்ல என்று மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவிக்க வேண்டும். தங்கள் தீர்ப்பும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, அன்று மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிய நேரத்தில், 'இதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள், இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்' என்று முதல் அமைச்சர் கேட்ட நேரத்தில், பதில் திருப்திகரமாக இல்லை என்று நான் சொன்னேன். அதை நான் ஒத்துக் கொள்ளவில்லை, திருப்திகரமாக இல்லை என்று சொன்ன பிறகு, மாண்புமிகு முதல் அமைச்சர் 'நீதி விசாரணைக்குத் தயாரா' என்று கேட்டார்கள், தயார் என்று நான் சொன்னேன். தேதி வைக்கவில்லை. அதிலிருந்து குற்றத்தை ஒப்புக் கொண்டதாகப் பொருள் செய்து கொள்கிறேன். விசாரணைக்குத் தயாரா என்று கேட்டபோது, நான் தயார் என்று சொன்ன பிறகு, அதற்குத் தேதி வைக்கவில்லை என்றால், நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அவர்கள் விசாரணையை வற்புறுத்தவில்லை, அந்தக் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதாகப் பொருள் என்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** சட்டப் பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவித்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர், நடவடிக்கை எடுக்க வில்லை, அடுத்து அடுத்து கூட்டம் வந்தது என்று பேசிக் கொண்டு இருப்பதை தலைவர் அனுமதிக்கக் கூடாது என்றும், பேரவைத் தலைவர் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற விளக்கங்களை சொன்ன பிறகும், அதையே பேசிக்கொண்டிருப்பது சரியா என்று தலைவர் சொல்ல வேண்டும். பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன பிறகு, பேரவைத் தலைவரிடம் தனிப்பட்ட முறையில் பேசி அதற்கான விளக்கங்களைப் பெறவேண்டும். எங்கள் மீது குறைகளைச் சொல்வது பொருத்தமில்லை என்கிற விளக்கத்தை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பீர் முஹம்மது.

*ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1970-71-வது ஆண்டுநிதி நிலை அறிக்கை மீது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் பேசுவதற்கு அனுமதி அளித்ததற்கு, எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

தன்னுடைய மதிவளத்தால், தமிழக நிதித் துறையை பெற்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிலக்கிழார்களால் சதி அமைச்சர் என்று சொல்லும் வகையில் 15 ஏக்கர் என்று உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிதி அமைச்சரை

[ஹாஜி. ம. மு. பீர். முஹம்மது] [1970 மார்ச் 6

சதி அமைச்சர் என்று ஒரு சாரார் பேசுகிறார்கள். மற்றும் ஒரு சாராரோ ஏழை எளிய மக்களின் நல்விதியால்தான் இந்த அமைச்சர் தமிழக அரசுக்கு கிடைத்திருக்கிறார்கள். அதன் மூலம் 15 ஏக்கர் நில உச்சவரம்பு சட்டம் வந்திருக்கிறது என்று பாராட்டிப் பேசுகின்ற நிலை நாட்டில் இருக்கின்றது. மேன்மை தங்கிய ராஜாஜி அவர்கள் சென்ற காலத்தில் 60–40 என்ற ஒரு விவசாயச் சட்டத்தின் மூலம் இந்த நாட்டிற்கு எந்த நல்ல தொண்டை, காலத்தை உணர்ந்து செய்தார்களோ, அதேபோன்ற தொண்டை இன்றையதினம் மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் செய்திருப்பதை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். ஏனென்றால், நம்முடைய அண்டை மாநிலங்களாகிய வங்கத்திலும், கேரளத்திலும் என்ன நிலை நிலவி வருகின்றது என்பதைக் காணவேண்டும். கேரளத் திருநாட்டில், நில உச்சவரம்புச் சட்டத்தினை 12 ஏக்கர் உச்சவரம்பு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த 12 ஏக்கர் நிலத்தையும் கூட, நிலக் கிழார்கள் தங்களுக்கு சொந்தமான நிலம் என்று அது பலிக்கும் நிலை இல்லாத சூழல் உள்ளது அதே போன்ற தீய விளைவுகள் தமிழ் நாட்டிலும் வந்துவிடக்கூடாது என்கிற எண்ணத்தோடு, காலத்தை உணர்ந்து, இப்பொழுது இந்த 15 ஏக்கர் உச்சவரம்பு என்கிற சட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வந்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதேநேரத்தில் பதினைந்து ஏக்கர் என்று சொல்கின்ற நேரத்தில், இஸ்லாமியத்தைப் பொறுத்தவரையில் பெண்களுக்கென்று தனியாக சொத்து வைத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. கணவனும் நிலம் வைத்துக் கொண்டு, மனைவியும் நிலம் வைத்துகொண்டு இருக்கும் உரிமையை இஸ்லாம் தருகிறது. சட்ட உரிமையை அடிப்படையாக வைத்துகொண்டு மனைவி தனியாக நிலம் வைத்திருக்கிறபொழுது, கணவனுடைய நிலத்தையும், மனைவி யினுடைய நிலத்தையும், ஒருசேர சேர்த்து உச்ச வரம்புக்கு உட்படுத்தக்கூடாது என்பதை இஸ்லாமிய சட்டத்தின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உச்சவரம்பு சட்டத்தை அடிப்படையாக வைத்துக் கைப்பற்றப்படும் நிலத்திற்கு கால நிலவரத்தை அடிப் படையாக வைத்து நட்ட ஈடு பணம் அளிக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரிசா மாநில நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்து, கைப்பற்றப்பட்ட நிலத்திற்கு வருகின்ற நிகர வருவாயைக் கணக்கிட்டு 15 மடங்கு நட்ட ஈடு கொடுக்கப் பட்டதை ஆட்சேபித்து அங்கிருக்கிற நிலக்கிழார்கள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்கள் சுப்ரீம் கோர்ட்டு, அந்த வழக்கை ஏற்று, 15 மடங்கு வருவாய் நட்ட ஈடு கொடுப்பது சரி யல்ல. கால விலை நிலவரத்தை வைத்துத்தான் நட்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று 15—7—1969-ல் ஒரு தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் அளித்திருக்கிறது. இதை இந்த மாநில அரசு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.



1970 மார்ச் 6] [ஹாஜி ம. மு. பீர் முஹம்மது]

1969-வது ஆண்டு நில உச்சவரம்புச் சட்டம் வந்த நேரத்தில் நாடாளுமன்றத்தில் இருந்த நிலவரத்தை அடிப்படையாக வைத்து இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தின் 17-வது விதியைத் திருத்து கின்ற வாய்ப்பு அன்று இருந்தது. இன்றைக்கு மத்திய அரசிலே நிலவுகிற கலவரமான நிலவரத்தை அடிப்படையாக வைத்துப் புதியதொரு சட்டத்திருத்தம் வருமா என்று பார்த்தால் அப்படி வருவதற்கான சூழ்நிலை இல்லை. நில உச்சவரம்பு சட்டத்தின் பெய ரால அதிகப்படியான நிலத்தைக் கைப்பற்றுகின்றநிலையில் காலவிலை நிலவரத்தை அடிப்படையாக வைத்து நட்ட ஈடு கொடுப்பதன் மூலமாகத்தான் எழும் சட்ட சிக்கலிலிருந்து இவ்வுச்சவரம்பு சட்டத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 15 ஏக்கர் நில உச்சவரம்பை அடிப்படையாக வைத்துக் கைப்பற்றப்படுகின்ற நிலத்தில் ஒரு பகுதியை இலங்கை யிலிருந்தும், பர்மாவிலிருந்தும் அகதிகளாகத் திரும்ப வருபவர் களுக்குக் கொடுப்பதன் மூலம், அந்த அகதிகளின் மறுவாழ்வுக்குத் துணைபுரிய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர் களுக்கும், இலங்கை பிரதமராக இருந்த ஸ்ரீமதி பண்டார நாயகா வுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பின்னர் இந்தியத் திருநாட் டிற்கு அகதிகளாக வந்தவர்களுக்கு மட்டிலும்தான் அகதி களுக்குரிய சலுகைகள் கிடைக்கின்றன. இந்தச் சலுகைகள் அனைத்தும், 'சாஸ்திரி-பண்டாரநாயகா ஒப்பந்தம்' ஏற்படுவதற்கு முன்னர் வந்த இலங்கை அகதிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்திற்கு முன்னரே இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பிய எல்லா அகதிகளுக்கும் உதவி அளிக்கக்கூடிய உரிமையை மத்திய அரசைக் கேட்டுப்பெறுவதற்கு முயற்சிக்க வேண்டுகிறேன்.

முஸ்லீம்களுக்காக 'வக்ஃப் போர்டு' முன்னர் இருந்தது. இப்பொழுது அது இல்லை. அது கலைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளா கியும், இன்னும் புதிய போர்டு அமைக்கப்படவில்லை. இதனால் முஸ்லீம் சமுதாய மக்களின் மத்தியில் இந்த அரசைப் பற்றி ஓர் அதிருப்தி உணர்வு நிலவுகிறது. ஆகவே, இந்தக் குறையை மாற்றியமைக்கின்ற வகையில், விரைவில் முஸ்லீம் சமுதாயத்தின் நம்பிக்கைக்குகந்தவர்களைக்கொண்டு புதிய வக்ஃப் போர்டு ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன் றையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்து அறநிலைய போர்டுக்கு இருக்கக்கூடிய அளவுக்கு முஸ்லீம்களுக்காக அமைக்கப்படும் வக்ஃப் போர்டுக்கு அதிகாரம் இல்லை. முஸ்லீம் வக்ஃப் போர்டின் அதிகாரம் மத்திய அரசின் நேரடிப் பொறுப்பில் இருக்கிறது. அந்த அதிகாரத்தை மாநில அரசுக்கு மாற்றுகின்ற முறையில் மத்திய அரசோடு மாநில அரசு தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

திருநெல்வேலி, மதுரை, முகவை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் மழை பற்றாக்குறை காரணமாக வறட்சி நிலவரம் அதிகமாக இருக்கிறது. அந்த வறட்சி நிலைமையை நிவர்த்திக் கின்ற வகையில் அரசு அந்தப் பகுதிகளுக்கு அதிக நிதியைக்

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1970 மார்ச் 6

கொடுத்து, வறட்சி நிவாரணப் பணிக்கு மேலும் உதவி செய்ய வேண்டும். மத்திய அரசினுடைய அறிவிப்பை பத்திரிகையில் பார்த்தேன். வறட்சிப் பணிகளுக்கென்று 25 கோடி ரூபாய் நிரந்தரமாக ஒதுக்கியிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதி, முகவை மாவட்டத்தில் பெரும் பகுதி நிரந்தரப் பஞ்சப் பிரதேசங்களாக இருந்து வருகின்றன. ஆகவே, நமது அரசு மத்திய அரசினிடத்திலிருந்து நிரந்தர பஞ்ச நிவாரண நிதியில் இருந்து உதவி பெறுவதற்கு முயற்சிக்க வேண்டுகின்றேன்.

நாம் உணவுக் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டோம். இந்த நேரத்தில் மழை நிலைமை சாதகமாக இருந்தால்தான் நமக்கு நல்லது. இறைவனுடைய திருவருளால் பூமிக்குக் கீழே நீர்வளம் நிறைய இருக்கிறது. அந்த நீர்வளத்தை வெளியே கொண்டுவருகின்ற முறையில் 72 கோடி ரூபாயை இந்த ஆண்டு அரசு ஒதுக்கியிருக்கிறது. அதைநான் வரவேற்கிறேன். பூமிக்குக் கீழே இருக்கும் நீரை மேலேகொண்டுவருவதன் மூலம், பஞ்சமும் பிணியும் அகலும், உணவுக்கட்டுப்பாடு நீக்கத்தையும் நிரந்தரமாக்க முடியும், பூமியில் இருந்து நீர் எடுக்க ஒதுக்கியுள்ள நிதி ஒதுக்கீடுகளை எல்லாம் விரைவில் செயல்படுத்தக்கூடிய அளவில் நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுகின்றேன்.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் பஞ்சத்துக்கும், பசிக்கும் ஆளாகியிருக்கிறார்கள், விசைத்தறி வருகையினால் இவர்களுடைய நிலைமை இன்னும் நெருக்கடியாக ஆகப்போகிற இந்த நேரத்தில், அரசுத் தரப்பிலிருந்து ஆரம்பிக்கின்ற புதிய தொழில்களை கைத்தறி நெசவாளர்கள் இருக்கின்ற பகுதிகளில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். ஆந்திர மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பரவலாக இல்லாத காரணத்தால் 'தெலுங்கானா' என்று தனியாக பிரியக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலும் அம்மாதிரியான நிலைமை வருங்காலத்தில் வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையில், புதிய திட்டங்களை, தொழில்கள், இல்லாத இடங்களில் ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் தெலிங்கானா நிலைமை தமிழ்நாட்டில் உருவாகாதபடி காப்பாற்ற முடியும். தொழில்துறை வளர்ச்சியைப் பின்தங்கிய மாவட்டங்களில் ஆரம்பிக்க வேண்டும். அதற்கான சிறப்புத் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. டி. தங்கப்பன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் நம்முடைய அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை அஞ்சாநெஞ்சத்துடன் நல்ல கோட்பாடுகளைக் கொண்டதாக, கற்றறிந்த பெருமக்கள் பாராட்டத்தக்க முறையில் வெளியிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிய வாழ்த்துக்கள் உள்ளபடியே இந்த நாட்டு மக்களுடைய இதயத்தின் பாலிருந்து வரப்பட்டதாகும்.



1970 மார்ச் 6] [திரு. டி. தங்கப்பன்]

பொதுவாகச் சொல்லப்போனால் ஆசிரியர்கள் பணி உலகத்திலேயே சிறந்த பணி என்று சொல்லப்படுகிறது. ஆகவேதான், 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்று கூறி வந்தார்கள். குரு தொழிலைச் செய்கின்ற அவர்களுக்கு எல்லாம் அவர்களுடைய வாழ்க்கையிலே மறுமலர்ச்சி ஏற்படுகின்ற தன்மையிலே, அவர் மு.ப. 11-30
களுக்கு மருத்துவ உதவி, விழாக் கடன், திருமணக் கடன் போன்ற எல்லாவித வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறது. அரசாங்கத்திலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு உள்ள சகல வசதிகளையும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு விஸ்தரித்திருக்கிறது. உள்ளபடியே இது மெச்சத்தகுந்தது, பாராட்டத்தக்கது என்று சொல்லலாம். மற்றும் கிராம அலுவலர்கள், அரசாங்க அலுவலர்கள் இவர்களுக்கெல்லாம் இடைக்கால நிவாரணமாக, 500 ரூபாய் வரையில் சம்பளம் பெறுகின்ற அலுவலவர்களுக்கு பத்து ரூபாய் ஊதியம் உயர்வு கொடுத்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. நீண்ட நாட்களாக எதிர்க்கட்சிக்காரர்கள் இதைத் தங்களுக்கு ஒரு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள். அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களிடத்தில் எல்லாம் அவர்கள்தான் அன்பு வைத்திருப்பதுபோல பல காரியங்களைச்செய்து வந்தார்கள். நாம் உள்ளபடியே நம்முடைய நிதிவாயில்களுக்கேற்ப எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய முடியுமோ, அதைச் செய்து வந்திருக்கிறோம். இந்த ஆண்டில் கூட பத்து ரூபாய் இடைக்கால நிவாரணம் அளிக்க முன்வந்திருப்பதைப் பாராட்டவேண்டும்.

எதிர்க்கட்சி நண்பர்கள் பேசும்போது இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 15 ஏக்கரா என்று உச்சவரம்பு நிர்ணயித்திருக்கிறீர்களே. இது டிரஸ்டு என்று வைத்திருக்கிறவர்களுக்கு இல்லையா என்று கேட்டார்கள். பொதுவாக நேற்றைய தினமும், இன்றைய தினமும் அவர்கள் அமைச்சர் ஆதித்தனாரை மனதில் வைத்தே தாக்கிப் பேசி வருகிறார்கள். அது மிகமிக வருந்தத்தக்கதாகும். நேற்று ஒரு உறுப்பினர் பேசுகின்றபோது பதவியைப் பறித்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார். வேலைப்பளுவின் காரணமாக அவரிடம் இருந்து ஒரு இலாக்கா எடுக்கப்பட்டதே தவிர, பதவியைப் பறித்துக்கொள்ளவில்லை. அதை மனதில் வைத்து கூட்டுறவுத் துறையையும் பறித்துக்கொள்ளவேண்டும் என்று பேசுகின்றார். இவ்வளவு அநாகரீகமான முறையில் அமைச்சரை நேரில் வைத்துக்கொண்டு பேசுவதற்கு சிறிதும் கூசவில்லை. கொஞ்சமும் லௌகிகத்தன்மையோடு பேசவில்லை. ஆதித்தனாருடைய பிள்ளை அவருடைய பிள்ளையா என்கிற முறையில் பேசுகின்றார்கள். நல்ல பாரம்பரியத்தில் வந்த எதிர்க்கட்சி என்று எண்ணியதுபோக மிகத் தரக்குறைவாக அவர்கள் பேசத் தலைப்பட்டுவிட்டார்கள். அவருடைய கௌரவம், மரியாதை இவற்றைக் காப்பாற்றுகின்ற வகையில் முதல் அமைச்சர் அவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாகவேண்டும். அவருடைய உயிருக்கே அபாயம் ஏற்பட

யுனைடெட் ஸ்டேட்ஸ் நாட்டிலுல் நடத்தப்படுகின்ற வாய்ஸ் ஆப் அமெரிக்காவில் ஒலிபரப்பப்பட்டு வந்த தமிழ்ப் பிரிவை எடுத்து விடப்போவதாகச் சொல்லியிருக்கிறுர்கள். அந்தத் தமிழ்ப் பிரிவை தொடர்ந்து நடத்தச் செய்வதற்கு, எப்போதும் குறி வைத்தால் தப்பாது என்ற நிலைமையிலே இருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழ்த்தாயின்மேல் உள்ள பற்றினுல் தமிழுக்கே ஏற்றம்கொடுத்துக்கொண்டு வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை நீடிக்கச் செய்யவேண்டும். தேசியக் கவி பாரதியால் எழுதப்பட்ட நூல்களனைத்தும் அரசாங்க வெளியீடுகளாக வந்துவிட்டன. அதேபோன்று புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய கவிதைகளையும் அரசாங்கமே வெளியிடுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை மனப்பூர்வமாக வரவேற்று மக்களின் சார்பாக வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, it is nearly two and half years to 3 years since the D.M.K. took over the administration and for the last three years they have presented to this House three different budgets. In this particular context I would like to stress one point which may not be directly connected with the budget but is very much connected with the alliance of D.M.K. and Swatantra party.

On behalf of the Swatantra party I wish to offer certain comments which I hope the D.M.K. party members will take in the right spirit. It has been mentioned in this House on a few occasions that this alliance had been forged by the statesmanship and far-sightedness of the two distinguished men, viz., Rajaji and Anna, and that I should not break it. In fact a few Members in this House took the stand (I felt it was uncharitable when they pointed at me) that the alliance forged by the two big leaders need not be broken by Dr. Hande. That is what they said. I wish to say in this context that our stand ought to be very clear. We have an alliance on the basis of certain electoral understanding, constituency-wise. It is a fine alliance, a model to the whole world, I would say. After that, even Anna and Rajaji both agreed that we should be given freedom to express our points of view and that D.M.K. should be given freedom to do what they wanted to do since we are in a minority and they are in a majority. I may say that when D.M.K. did certain things they did not consult us. I do not blame them for it. At the same time we must have the right to point out the things which we consider as mistakes. That right should not be confused with a certain attitude which they attribute to me, viz., that I am torpedoing the alliance. It is not a fact. In the present context of political uncertainly in the whole country in Tamil Nadu this alliance is absolutely necessary. Therefore it is that I felt that I should emphasise this point.

There are a few members in our party who feel that the D.M.K is going the same way as the Congress Party. At the same time there may be some members among the D.M.K who may feel that they could go it alone and that they need not be burdened with this alliance. These two are extreme suggestions. What I say is that there should be " give and take " attitude on both sides. That is the most important point. If this alliance is taken in the right spirit by every party constituting the alliance, I am sure Tamil Nadu will have a stability which will be a model to other States of India. I do not want the political confusion prevailing at present in New Delhi to permeate here, into our State.

Let us not try to find out who is stronger. Let us have proper understanding and let us be given freedom to criticise. I request the D.M.K. Ministers not to be allergic to our criticism but be 'sensitive' to them (I am using the term in medical history, since I have close proximity to that profession and am very much in it since I am practising). Let them be 'sensitive".

I can recall a particular meeting in Triplicane when our distinguished Leader of the House, the Hon. Minister for Education participated (Thiru M. P. Sivagnana Gramaniar was also there). The Hon. Minister for Education said at that time " We are now in a fine position wherein we have a variety of parties which would criticise us, not with a view to toppling us but to rectify to correct us ". I can never forget what he said. We in the Opposition point out what we consider honestly as general grievances. The Ministers are insulated by higher officials, who are unmoved and who do not give the right picture. We, represantatives of the peopple, give the right picture and I implore, that it has to be taken in the right spirit. With this preamble let me now come to the budget proper.

Let us take the taxation policy. We have had the State budget and heard the budget speech. It has been drafted by some brilliant people. I do not bother by whom it had been drafted. The Central also has presented its budget. Between the two Governments, the State and the Centre, each presenting its taxation proposals, the cost of living (I do not know whether there had been any understanding between the two Governments) had gone up very high. Take petrol. There has been taxation both by Centre and State. What is the result? The transport cost goes up. I would like to refer to what a lady during French Revolution said.

" If they do not have bread, let them eat cakes ", she said. In New Delhi we have a lady who says, " If they do not have houses, let them live in flats. " The poor man here has not even a hut to live in. Such tall talk does not impress anybody.



Coming to the taxation policy, what has the Government done with Sales Tax? They seem to think that, if they raise the rate of tax, the revenue will increase. It is against all fundamental canons of taxttion. There is the law of diminshing returns. The officers and the Ministry concerned are aware of it. They cannot go on increasing the percntage of tax. They should not kill the goose that lays the golden eggs. It should be the policy of the Government to stimulate the goose to lay more golden eggs.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொன் முட்டையிடும் வாத்தை அறுத்துப் பார்க்கவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. இன்னொரு முட்டையும் சேர்த்துப் போட முடியுமா என்று முயற்சித்துப் பார்க்கிறோம். அதிலே வெற்றி பெறுவோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : That is the point I was trying to drive home. I want our Minister for Commercial Taxes to stimulate the goose to lay more golden eggs. But there is a difference of opinion. I do not agree that the Government's policy is one of stimulation.

By raising the rate of sales tax on certain goods, what has happened? Whether it is a constitutional measure or unconstitutional measure is a different thing. The net result is that you are taxing. If the turnover of a dealer is Rs. 5 lakhs, at the rate of 3 per cent on that turnover, he has to pay Rs. 15,000. On the turnover there is a surcharge now. Trade and commerce must be encouraged. Is this a measure by which the Government are encouraging trade and commerce? Even if a dealer does not get a new income, by this levy weare in effect making it an income-tar. Income-tax at least is levied after ensuring that he has made the income. This levy is obnoxious. In the Parliament the Ministry took the views of the Opposition. I am sure the suggestion of the Opposition Members will be taken into consideration here also. When I was a member of the Legislative Council. I used to say that unless there was buoyancy in the State, the turnover could not be increased. Who pays the maximum revenue to the Railways? It is not those who travel in air-conditioned coaches or in first class compartments; it is those who travel in the third class that contribute the maximum revenue. That is what is called turnover. Unless we take measures to increase the turnover we cannot hope to increase the revenue. If such measures are taken, then the revenue will be not 300 crores but 320 crores.

Because of the paucity of time, I shall touch on only a few points. Coming to non-gazetted government officers, Mr. Elamvazhudi was complaining that some people spoke in a harsh manner. I was one of those who spoke at the meeting of the non-gazetted government officers. Those who have heard my speech would have appreciated how analytically I spoke. I had the Pay Commission's report and I read extracts from it. If some people

[Dr. H. V. Hande] [1970 மார்ச் 6

have spoken in the manner suggested by Mr. Elamvazhudi I am not responsible for it. Let us not consider that non-gazetted government officers are instigated by persons belonging to different political parties. Whether they are students, labour or non-gazetted officers, let us first of all find oout what exactly is the cause for their unrest. That is most important. Let us objectively view it. There was a time when the Justice Party thought that the Congress Party was responsible for instigating the students and later on when the Congress party came to power, it thought that the Dravida Munnetra Kazhagam was responsible. Let not the same mistake be committed by the Dravida Munnetra Kazhagam. Therefore let us not cast aspersions on others. What I want to stress is that the grant of a Special Compensatory Allowance of Rs. 10 per mensem should not be contemptously treated. An inflationary budget, whether it be Central or State or a joint inflationary budget, pushes up the cost of living. What is given by the right hand is taken away by the left hand.

The minimum pension has been raised from 20 to 30 rupees. A pensioner who gets a pension of 28 rupees gets an increase of only 2 rupees, he who gets a pension of 25 rupees gets only 5 rupees and only a pensioner who gets 20 rupees gets 10 rupees.

With regard to land ceiling, I cannot resist the temptation of speaking on this subject, because it has been my favourite subject. On behalf of Swatantra Party I wish to clearly state that this land ceiling policy is a very reactionary policy. Whatever land policy we bring in must be production-oriented. The question that we should ask ourselves is whether the policy is production oriented. We are talking of tractors and modern implements on the one hand and slicing or parcelling the land into small bits on the other. Dr. A. Lakshmanaswami Mudaliar and Mr. K. Balasubramania Ayyar have pointed out that with the tremendous volume of inputs like fertilisers and the provision of irrigation facilities the State should have doubled its production but that could not be achieved only because of this reactionary policy. Unless we revise our opinion on land policy, we cannot increase food production. Can any one who owns a small piece of land plough that land with a tractor? Show me a single country in the world where modern implements are not used. In our country the most primitive implements are used. By attacking the land ceiling policy, let me not be misunderstood as trying to get the support of landlords. All the big landlords are on the side of different political parties. A fraction of them might be with us. By talking in this manner I am not going to gain any votes. It is immaterial whether I please those people or not. Will this policy increase food production is the only question I want to ask. We are going to fight against this policy tooth and nail in the political arena. In the land ceiling, where are we to draw a line? Fifteen acres is sought to be made the ceiling today. Tomorrow another party may come to power and say that five acres are sufficient. Another point I want the



1970 மார்ச் 6] [Dr. H. V. Hande]

House to consider is that the lands are going to be broken up into smaller and smaller units by virtue of partition. Recently one of the companies belonging to the Simpson Group showed us a small model farm. They ploughed the land by machinery and they were able to double the production. What does this show? How can we reduce the ceiling and at the same time tell the people that we want increased production? Tamil Nadu has a population of 3-1/2 crores. For giving one square meal per day to every one. Tamil Nadu will require 100 lakhs of tonnes and not the 60 lakhs of tonnes that we are now having. In Ambattur and Avadi there are several factories and each factory has a capital of a few crores of rupees. Do we bring in a ceiling on the factories saying that nuts and bolts should be given to this factory, the other parts should be given to the other factory, and thus break the factories into pieces? What sort of ante-diluvian ideas are we having! Why should we not re-orient our policy?

Sir, I want to strike a note of warning that if we do not re-orientate our policy with regard to land ceiling this country is going to suffer for want of food and there will be hunger among the people. In spite of an extensive area of cultivable land, we are not able to have enough production. That is the most important thing that I wish to stress in this connection.

I want to refer to one other matter before I wind up my speech. Are we going to have co-operative farming? That is the only solution. Either you have co-operative farming or you remove land ceiling. Otherwise your production can never be stepped up. At the same time, I must point out that in the countries where co-operative farming is introduced the experience is that it is a complete failure. Also we must consider whether those countries are exporting food or importing it. Even in countries where there is dictatorship and workers are ordered to work without any trade union rights there is a feeling that the co-operative framing is a failure. Therefore, my revered leader Professor Ranga a few years ago had stated that the co-operative farming was a hoax and that was accepted by the late Pandit Jawaharalal Nehru . . . .

THE HON. THIRU S. B. ADITANAR : Sir, may I ask whether the hon. Member is keeping in mind the difference between the joint farming and co-operative farming?

DR. H. V. HANDE : Sir, I can tell my distinguished Friend and the Hon. Minister for Co-operation that having sat by my side in the Legislative Council for three years, if he should entertain any doubt about my capacity to understand the difference between Joint farming and the co-operative farming, it is very painful to hear this because I was punctual. He knows very well how punctually I have been attending the meetings of the Legislative Council. On the other hand he would have realised the difference between the two only after entering the Ministry. However, that is a different thing. But my point is that the incentive factor

லாம் என்கிற நிலை இருப்பதனால், அவருக்கு தக்க பாதுகாப்பை அளிக்க முன்வரவேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. என்னுடைய பகுதி தீவுப் பகுதிகளாகவும், மீனவர் வாழும் பகுதிகளாகவும் இருக்கின்றன. அந்தப் பகுதிக்கேற்ற—மேன்மைப்படுத்தும் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கிறபோது இல்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை வளப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பாக கச்சத் தீவு இருக்கிறது. அது நீண்ட நெடுங்காலமாகவே நம்முடைய பகுதியைத்தான் சார்ந்தது. அதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. வெள்ளைக்காரன் காலத்தில் 1922-ஆம் ஆண்டு டிமார்க்கேஷன் செய்கிறபோது படத்தில் ஒரு கோட்டை போட்டுச் சென்றான். நாம் நம் பக்கத்தில் இருப்பதாகச் சொல்கிறோம். இலங்கை அரசாங்க அதிகாரிகள் அவர்களுடைய பக்கத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதி தமிழ்நாட்டோடு சேர்ந்தே இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. ஒருகாலத்தில் பார்க்கப் போனால் இலங்கையே தமிழ் நாட்டுக்குச் சொந்தமாகத்தான் இருந்திருக்கின்றது. இராவணன் ஆண்டிருக்கிறான். இராமன் அவனை வென்ற பிறகும் விபீஷணன் ஆண்டிருக்கிறான். தமிழன் சோழர் காலத்தில், பாண்டியர் காலத்தில் நம்முடைய பிரதிநிதிகளே ஆண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் வைத்து இலங்கையே நமக்குச் சொந்தமானது என்று வாதிட உரிமை இருக்கிறது. அப்படியிருக்க கச்சத் தீவு முழுக்க முழுக்க நமக்கே சொந்தமானது. அது இலங்கைக்குப் பக்கத்தில் இருப்பதனால் நம்முடைய மீனவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மீனவர்களை கள்ளக் கடத்தல்காரர்கள் என்றும், கள்ள குடியேற்றக்காரர்கள் என்றும் அந்த அரசு பலவித தொந்தரவுகளைக் கொடுத்து வருகிறது. அவற்றை நீக்க நம்முடைய உரிமையை நிலைநாட்ட இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேதுசமுத்திர திட்டம் நீண்டகாலமாக ஆய்வு நிலையிலேயே இருந்து வருகிறது. பல்வேறு குழுக்கள் போடப்பட்டு, அவை அறிக்கை கொடுத்திருக்கின்றன. 1968-ல் கூட வெங்கடேசுவரன் குழு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. இந்தத் திட்டம் லாபகரமானது, இராமநாதபுரத்தை வளப்படுத்தக் கூடியது. அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தரக்கூடியது, வெளி நாட்டில் கடன் வாங்கி மூலதனம் போட்டாலும் அதிக வட்டியைக் கட்டியும், நமக்கு அதிக லாபத்தைத் தரக்கூடியது என்பதாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது ஆசியாவின் சூயஸ் என்று சொல்கிறார். இராமேஸ்வரம்—பாம்பனுக்கு மத்தியில் 25 மைல் கிழக்கு—மேற்கே 25 மைல்—மெயின் லாண்டு 6 மைல் இவற்றை ஆழப்படுத்தி ஒழுங்கு செய்ய 35 கோடியில் இருந்து 40 கோடி தேவைப்படும்—





1969-ல் துவக்கினால் 1974-ல் முடிந்துவிடும் என்றெல்லாம் வெங்கடேசுவரன் குழு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அது நான்காவது திட்டத்தில்கூடச் சேர்க்கப்படாத நிலையைக் காண்கிறோம். நம்முடைய அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு அதை முடிக்க முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. என். ராமச்சந்திரன் :** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மழைமுகம் கண்ட பயிர் முகம் போல இந்த நிதிநிலை அறிக்கையை மக்கள் வரவேற்கிறபோது காங்கிரஸ்காரர்கள் மட்டும் இதை எதிர்த்துப் பேசுகின்ற புதிய கொள்கையில் போய்க்கொண்டிருப்பது ஒன்றை நினைவூட்டுகிறது. டாக்டர் ஜான்சன் அவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கிறபோது பலமுறை ஒரு கருத்தை விளக்கியும், புரிந்துகொள்ளத் தயங்கிய நிலையில் One man can lead twenty horses to water. But 20 men cannot make them drink என்று குறிப்பிட்டார்கள். ஒரு மனிதன் இருபது குதிரைகளை ஓட்டிச் செல்லலாம், ஆனால் இருபது மனிதர்கள் சேர்ந்து ஒரு குதிரையைத் தண்ணீர் பருக வைக்க முடியாது என்றார்கள். நிதி அமைச்சர் அவர்களது விளக்க உரையைக் கேட்ட உடனேயே காங்கிரஸ்காரர்களுக்கு இதன் நன்மைகள் புரிந்திருக்கவேண்டும். நாங்கள் 200 பேர் விளக்கியும் அவர்களுக்குப் புரியவில்லை என்றால் வேண்டுமென்றே குற்றம்சாட்டுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளலாம்.

1967 வரை மத்தியில் ஒரு கட்சியின் ஆட்சி மாநிலங்களிலும் அதே கட்சியின் ஆட்சி இருந்து வந்தது. அதற்குப் பிறகுதான் மத்தியில் ஒரு கட்சியின் ஆட்சியும், ஏழெட்டு மாநிலங்களில் வேறு கட்சிகளின் ஆட்சியும் ஏற்பட்டிருக்கிறது. வங்கி, நாணயச் செலாவணி, நிதிக்கொள்கை இவற்றை மத்தியில் வைத்துக்கொண்டு இருப்பதால் மாநிலங்கள் பாதிக்கப்படுகிற நிலையைப் பார்க்கிறோம். கம்பன் சொன்னான். கொள்வார் இல்லாமையால் கொடுப்பார் இல்லை என்று. இப்போது கொள்வார் இருந்தும் கொடுக்க வேண்டிய மத்திய ஆட்சி கொடுக்க மறுக்கின்ற காரணத்தினால் ஏற்பட்டுள்ள சங்கடங்களைத்தான் நிதி அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். வடபுலத்தில் இருக்கிற மாநிலங்களுக்கு 800 கோடிக்குக் கடன் கொடுத்தும் பல ஆண்டுகளாக வசூலிக்காத மத்திய அரசு நமக்கு 160 கோடி கடன் சுமத்தி, 140 கோடி கொடுக்க அறிவித்திருப்பது வருந்தத் தக்கதாக இருக்கிறது. இதை எதிர்த்து காங்கிரஸ்காரர்கள் துணிவோடு பேச முன்வராது—சொத்தை வாதங்களை எழுப்பி குறைகாண முன்வந்திருப்பது வருந்தத்தக்கது. முன்பு 20 ரூபாய் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுத்தார்கள். இப்பொழுது ஓய்வு பெற்றவர்களுக்கு மினிமம் 30 ரூபாய் என்று கொடுக்க முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும். மற்றப் பத்திரிகைகளிலேகூட நிதியமைச்சர் அவர்களுடைய துணிவைப் போற்றிப் புகழ்ந்திருக்கின்றார்கள். நிலச் சீர்திருத்தம் என்ற பெய

has escaped our attention. Unless we give incentive there would not be increased food production. Therefore, either we do co-operative farming which has been considered as useless or remove the land celling. In this connection, I must state that we are not able to venture into the domain of co-operative farming because—

(1) it is a scheme of things where there is no incentive and counture that have adopted this are finding out new ways; and

(2) it will lead to constant, friction and litigation between one small farmer and another.

As such what else can I say except that this madness has gone far enough and let us not go still further. This House can rest assured that by expressing our strong resentment against this obnoxious measure we are not going to get a single extra supporter from the big landlords for whom I have very little respect, because they are only after people with power. We have no power. We are in a minority. And by saying these things, I know I run the risk of being misunderstood because even the press is not with us. But I have said whatever I wanted to say with the interest of my country and its food production at heart. I am sure the Hon. Minister for Finance will reconsider the matter in the interest of the hungry people and in the interest of the one-rupee a measure scheme. If food production is not done on an industrial basis, even the one rupee a measure scheme which you have promised to the people cannot be implemented. So, I request the Hon. Minister for Finance to forget the party affiliations and agree as suggested by my distinguished Friend Thiru Kariamanicka Ambalam, to the appointment of a Commission to go into the matter and thus save the country and save yourselves. Thank You, Sir.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை இம்மன்றத்தின் முன்னால் இந்த அரசு சமர்ப்பிக்கிற நான்காவது நிதிநிலை அறிக்கையாகும். காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது போடப்பட்ட வரிகளை உயர்த்தியும், காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டத்தில் இருந்த வரம்பைக் குறைத்தும் இப்படி காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது செய்யப்பட்ட முயற்சிகளை தொடர்ச்சியாக—அதுவும் சரியான தொடர்ச்சியாக இல்லை—இந்த அரசு செய்து வருகிறதே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்தின் பட்ஜெட் என்று சொல்லக்கூடிய விதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முத்திரை பதிந்த நிதிநிலை அறிக்கையாக கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லை என்றே சொல்லலாம்.

கடந்த நாலைந்து நாட்களாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் வழக்கம் போல் பணக்காரர்கள் மீதுதான் வரிகள் போடப்பட்டிருக்கின்றன, [illegible]க்கூடியவர்களின் மீதுதான் வரிகள் போடப்பட்டிருக்[illegible] என்று கூறினார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக





திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதில் இருந்து விலைவாசிகள் உயர்ந்துகொண்டே வருகின்றன. வரிப் பளுவின் கொடுமை அதிகரித்து வருகிறது என்பது நாடும் ஏடும் ஒப்புக்கொண்ட உண்மை. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக 48 கோடி ரூபாயாக இருந்த வணிக வரி இன்று 72 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 48% அளவிற்கு அது உயர்த்தப்பட்டிருக்கிறது. 7½% மேல் வரி ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்பவர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மேல் வரியை வியாபாரிகள் தான் கட்டுவார்கள் என்று எதிர்பார்த்தால் அவர்கள் அனுதாபத்திற்கு உரியவர்களாவார்கள். அப்படி ஒன்றும் வியாபாரிகள் ஏமாந்தவர்கள் அல்ல. அந்த மேல் வரியை மறைமுகமாக விற்கப்படுகிற பண்டங்களின்மேல் உள்ள விலையில் ஏற்றி அதைச் சரிக்கட்டுவார்களே தவிர அவர்கள் தங்கள் கையிலிருந்து கொடுக்க மாட்டார்கள்.

அடுத்தபடியாக, இரண்டு ஆண்டுகளில் மின்சாரக் கட்டணம் 32 காசிலிருந்து 34 காசாக உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணம் 8¼ காசிலிருந்து 10 காசாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது ஏழை மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரியா அல்லது பணக்காரர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரியா என்று கேட்க விரும்புகிறேன். சிமெண்ட், பல்புகள், டிராக்டர்கள் இவை மீது போடப்பட்டுள்ள வரிகள் பணக்காரர்களைத் தான் பாதிக்கும் என்று சொல்வது விந்தையாக இருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கத்தின் வரிக் கொள்கையை மறுபரிசிலனை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு பருவ மழை பல இடங்களில் பொய்த்துள்ளது. மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், உசிலம்பட்டி, வேடசெந்தூர் போன்ற பகுதிகளில் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. திருமங்கலம் தாலுகாவில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதன் காரணமாக கோடை கால ஆரம்பத்திலேயே அங்கு குடி தண்ணீர் பஞ்சம் நிலவி வருகிறது. ஆகவே அரசாங்கம் முனைந்து அங்குள்ள குடி தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு வரிகளை ஒத்திப் போடவேண்டுமென்று எனக்கு சுந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அங்கு வரி வசூல் செய்யவேண்டும், கடன் வசூலை ஒத்திப்போட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்தமுறை நான் இங்கு பேசும்போது அடையாறு பகுதியில் அரசாங்கத்திற்கு சொந்தமான நிலத்தை சத்தியா ஸ்டுடியோவோடு தொடர்பு கொண்ட எம்.ஜி.ஆர்.-க்கு வேண்டிய பத்மநாபன் என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அது பத்து லட்சம் ரூபாய் மதிப்பு பெறும். அப்போது இந்த [illegible] அமைச்சர் அவர்களும் மற்ற [illegible] அமைச்சர்களும்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 மார்ச் 6

கேட்டுக்கொண்டு இருந்தார்கள். அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு பத்து லட்சம் என்று சொல்கிறீர்களே, அரை லட்சம் குறைத்து 9½ லட்சம் ரூபாய்க்கு எடுத்துக் கொள்கிறீர்களா என்று பேரம் பேசினார்கள். கடந்த ஒன்றரை மாத காலமாக இந்தப் பேச்சு பல இடங்களில் அடிபட்டு வருகிறது. பின்னால் மகாதேவன் பிள்ளை அவர்கள் பேசும்போது அப்படி பத்மநாபன் என்பவருக்குக் கொடுக்கப்படவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று பல நாட்கள் சென்ற பிறகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், மாதம் ரூ. 6,500-க்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று முப்பது ஆண்டு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருப்பதாக இப்போது சொல்கிறார்கள். முதலில் நடந்த ஊழலை மறைப்பதற்காக இப்போது இந்த ஏற்பாடு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றி விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன குற்றம் நடந்தது, என்ன நிலைமை என்பதைப் பற்றி சரியாகச் சொல்லவேண்டும். பிரசாரமாக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக அப்படிக் கொடுத்திருக்கிறது, இப்படி கொடுத்திருக்கிறது என்று சொல்லக்கூடாது. அதுபற்றிய விவரங்களை என் பதில் உரையில் விளக்க இருக்கிறேன். அரசாங்கம் எங்கும் போய்விடப் போவதில்லை. இந்த நிதிநிலை அறிக்கை மீது பேச எவ்வளவோ விவகாரங்கள் இருக்கின்றன. யாருக்கு கொடுக்கப்பட்டது, என்ன கொடுக்கப்பட்டது, என்ன காரணம் என்பதைப் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. நடந்ததை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பது முறையல்ல. அதுவும் இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கிற ஒருவரைப் பற்றி சம்பந்தம் இல்லாத வகையில் குற்றம் சொல்வது சரியானது அல்ல.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** கடந்த முறை நான் இங்கு பேசும்போது குறிப்பிட்டேன். இப்போதும் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கத்தின் கொள்கை ஏழை எளியவர்களை ஆதரிப்பதாகத் தான் இருக்கவேண்டும். அரசாங்கம் ஏதாவது கொடுப்பதாக இருந்தாலும் ஏழைகளுக்குத்தான் கொடுக்கவேண்டும். பல கோடி ரூபாய்க்கு அதிபராக உள்ள ஒருவருக்குக் கொடுக்கவேண்டுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** குறிப்பிட்ட காரணங்களுக்காகக் கொடுப்பதில்லையா? டி.வி.எஸ். கம்பெனிக்கு கொடுத்திருக்கிறார்கள். காமராஜுக்கு வேண்டியவரான தாமஸ் கம்பெனிக்கு கோட்டைக்கு முன்னால் பழைய அரசாங்கம் கொடுக்கவில்லையா? அம்பத்தூர் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தியாகராஜ செட்டியாருக்கு இதற்கு முன்னாலே கொடுத்திருக்கிறது, மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. ஆகவே, எந்தெந்தக் காரியங்களுக்கு, யார் யாருக்கு என்னென்ன நிலைமைகள் என்பது தான் அரசாங்கத்தின்



1970 மார்ச் 6] [திரு. கே. ஏ. மதியழகன்]

கொள்கையே தவிர, அந்த அரசாங்கம் கொடுத்தது தவறு என்பது அல்ல. ஏதோ எம். ஜி. ராமச்சந்திரனுக்குக் கொடுத்தது என்று பேசினாலும் தாராளமாகப் பேசிக்கொள்ளட்டும். அதையே திருப்பித் திருப்பி பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கொடுப்பது முறையாக, நியாயமாகக் கொடுப்பது. சத்தியா ஸ்டுடியோவிற்குக் கொடுத்தது. அதுகூட பெரிதாக ஒன்றுமில்லை, ஏதோ ஒரு ஏக்கர் இருக்கும் என்று கருதுகிறேன். வெளியிலே யிருக்கும் பத்திரிக்கைகளில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு இந்த மன்றத்திலே பிரச்சினையாக ஆக்குவதெல்லாம் சரியாக இருக்குமா? மாண்புமிகு உறுப்பினர் எம். ஜி. ராமச்சந்திரன் மீது மட்டுமல்ல, பொதுவாகவே பொறுப்பாக நாம் சிந்திக்க வேண்டும்.

கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது, கூட்டுறவு வழக்கிலே இருப்பவர்களிலே பல பேர்களை நம்முடைய முதலமைச்சரவர்கள் பெருந்தன்மையோடு, மன்னிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு நாகசுந்தரம் அவர்கள் யார் என்று கேட்டார்கள். முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டாமென்று சொன்னார்கள். அந்த அளவுக்கு நம்முடைய நாகரிகம் இருக்க வேண்டும். எனவே, நன்றாக, முறையாக, நடந்த காரியங்கள்தானே தவிர, திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருந்தால் நாம் என்ன செய்யமுடியும்? உங்களைப்போல் உறுப்பினராக இருக்கக்கூடியவர், அவர் கோடிஸ்வராக இருக்கிறாரே என்று சொன்னால் நாம் என்ன செய்ய முடியும்? அவர் உழைப்பாளி தான், 20 மணி நேரம் வேலை செய்கிறார். சொல்லக்கூடாது என்பது கூட அல்ல. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் கூட சொல்லவில்லை. ரொம்ப சின்ன விஷயம். அதை விட்டு விட்டு, என்ன கேட்டார்கள், பத்மநாபனுக்குக் கொடுத்தீர்களா என்று கேட்டார்கள். முதலமைச்சரவர்கள் இல்லை என்று சொன்னார்கள். எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்குங் கொடுத்ததாகக்கூட ஆகாது. அசைன்மெண்ட் கொடுத்தார்களா என்றால் இல்லை என்று சொன்னவுடன் லீஸுக்குக் கொடுத்தார்களா என்று கேட்பது? காமராஜ நாடார் அவர்களுக்கு ரொம்ப வேண்டியவர் என்று சொல்லப்படும் ஏ. வி. தாமஸ் அவர்களுக்கு ஃபோர்ட் ஸ்டேஷனுக்கு எதிரே லட்சக்கணக்கான பெறுமானமுள்ள நிலத்தை வாடகைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இது மாதிரி டி.வி.எஸ்.-க்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் என்ன சொல்லுகிறீர்கள், எம். ஜி. ராமச்சந்திரனுக்கு கொடுத்து விட்டார்கள் என்று நான் சொல்லுகின்ற சமாதானத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களோ, இல்லையோ, நாங்கள் நியாயமுள்ள மனசாட்சிப்படி, முறைப்படி தான் நடந்துகொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினரைப் பற்றி ரொம்பத் தவறான கருத்தை, திரும்பத் திரும்பச் சொல்வது, தலையிலே மண்ணைப் போட்டுக் கொண்டதாகத்தான் ஆகும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுடைய அங்கத்தினர் பேசக் கூடாது என்று திரும்பத் திரும்பச் சொல்லுகிறீர்களே.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : பேசக் கூடாது என்று சொல்லவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஒருமுறை சொன்னால் புரியவில்லை. பல் முறை சொன்னால்தான் புரிய வைக்க முடிகிறது. அவர்கள் செய்தார்கள், தப்பு செய்தார்கள் என்றால் அதே தப்பைச் செய்வதா? ஒருவர் லஞ்சம் வாங்கினார், நான் லஞ்சம் வாங்கக்கூடாதா என்று சொன்னால் அது என்ன நியாயம்? அவர் தப்பு செய்ய வில்லையா, இவர் தப்பு செய்யவில்லையா, ஆகையால் நான் செய்கி றேன் என்று சொன்னால், அந்த சர்க்கார் தப்பு செய்தது என்றால் நடவடிக்கை எடுங்கள். அவர் வாங்கினார், நாங்கள் வாங்குகிறோம் என்பதுதான் வாதமா? இருக்கும்படியான பிரச்சினை, உங்களுக்கு ஆலோசனை சொல்வதற்காகத் தானே தவிர, குறை சொல்வதற் காக அல்ல. உங்களுக்குத் தெரியாமல் நடந்துகொண்டிருப்ப வற்றைச் சொல்லும்பொழுது, மாலை போட்டோ பேசிக்கொண் டிருப்போம். நல்லதை நல்லது என்று சொன்னோம். காவிரி நதி பற்றி முதலமைச்சருக்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக் கிறோம். தவறை எடுத்துச் சொல்வதுதானே தவிர வேறில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தகவல். கொடுத்தது தவறு என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்கிறார்களா ?

திரு பி. ஜி. கருத்திருமன் : கொடுத்தது தவறோ, இல்லையோ, அது மனப்பான்மையைப் பொறுத்திருக்கிறது. புறம்போக்கு நிலத்தை நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதில் இடத்திற்குத் தகுந்த மாதிரியிருக்கலாம். எல்லாயிடத்திற்கும் ஒரே மாதிரி இருக்குமென்று சொல்லவில்லை. இடம், பொருள், ஏவல் என்றிருக்கிறது. ஒன்றுமே சொல்லாததை எடுத்துக் காட்டத்தான் . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சொல்லாததற்குக் காரணம், பத்மநாபன் என்பவருக்கு விலைக்குக் கொடுத்தார்களா என்று கேட் டார்கள். கொடுக்கவில்லை என்று சொன்னேன். ஏனென்றால் இலாக்காவிற்கு நேரில் செல்லுவதற்காகச் சொல்லாமல் இருந் தேன். அவர்கள் விவரத்தைச் சேகரித்து வந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி.

திரு. பி. ஜி, கருத்திருமன் : நாங்கள் இலாக்காக்களுக்குச் சென்று பேச வேண்டுமென்றால், உங்களுக்கு அரசாங்கத்தில் என்ன வேலை இப்பொழுது இருக்கும்படியான விஷயம், ஏதேனும், தவறு [illegible]இருக்கின்றனவா, கட்சியின் சார்புள்ள ஒருவருக்குக் [illegible]யான நிலை இருக்கிறதோ என்ற சந்தேகம் இருந்[illegible] சொல்லக் கூடாதா?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நிறுவனங்களுக்கு இடங்கள் ஒதுக்கும்பொழுது கட்சிகள் எதையும் பார்ப்பது இல்லை. அப்படிப் பார்க்காமல் இந்தப் பத்தாண்டுக் காலத்தில், நீங்களும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத் திலே பல பேர்களுக்கு இப்படிப்பட்ட இடங்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. இதுவும் சத்தியா ஸ்டுடியோ நிறுவனத்திற்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, தனிப்பட்ட யாருக்கும் தரவில்லை. அதுவும் அவர்களுக்கு அப்படியே ஒதுக்கிவிடவில்லை. 30 ஆண்டு என்று கால நிர்ணயம் செய்து, அந்த இடத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வாடகை என்று தான் கொடுக்கப்பட்டிருக் கிறது. பல ஆதாரங்கள் தர முடியும். நாளைய தினம் நிதியமைச் சரவர்கள் பதிலளிக்கும்பொழுது 10, 15 நிறுவனங்களுக்கு, எந்தெந்த நிறுவனங்களுக்கு எந்தெந்த தொழிற்சாலைகளுக்கு இப்படிப்பட்ட இடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டி யலை இங்கே வைப்பார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நிறுவனங்களுக்கு இடம் ஒதுக் கும்பொழுது கட்சியைப் பார்ப்பது இல்லை என்று முதலமைச்ச ரவர்கள் சொன்னார்கள். சென்னையிலே, மவுண்ட் ரோட்டிலே, புகாரி ஹோட்டலுக்கு எதிரிலே, தர்கா அருகே, கூவம் நதிக்கரை ஓரத்திலே, கெயிட்டி தியேட்டருக்குப் போகும் வழியிலே, அர சாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலம், முதலமைச்ச ருக்கு வேண்டியவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது ரொம்பத் தவறா னது. ஆதாரங்கள் இல்லாமல் முதலமைச்சருக்கு எதிராக இப்படி யெல்லாம் பேசிக்கொண்டு போவது முறையாக இருக்காது. இன்னார் என்று சொல்ல வேண்டும். உங்களுடைய மஞ்சள் பத்திரிக்கை யிலே போட்டிருப்பதையெல்லாம் வைத்துக் கொண்டு மிகத் தவறாகச் சொல்லக்கூடாது. தவறுகள் இருந்தால் சொல்லட்டும் தாராளமாக. இன்னாருக்கு, இவ்வளவு என்று சொன்னால் பரவா யில்லையே தவிர, இப்படி பேசுவது முறையல்ல. குற்றமிருந்தால் தாராளமாகச் சொல்லுங்கள். இன்னாருக்கு, இந்தத் தேதியில் இந்த அரசாங்கம் கொடுத்தது என்று சொல்ல வேண்டுமே தவிர, முதலமைச்சருக்கு வேண்டியவருக்குக் கொடுத்து விட்டார்கள், உறுப்பினருக்குக் கொடுத்து விட்டார்கள் என்று சொல்வது சரியா னது அல்ல.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதலமைச்சருக்கு வேண்டி யவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார் கள். நான் ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1959-ம் ஆண்டில் திரு. அ. பொ. அரசு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக மேயராக வந்த காலத்தில், என்னுடைய கோபாலபுரம் வீட் டிற்குப் பின்புறத்தில், தாழ்வாரம்போன்ற இடம், அந்த இடத்தில் ஆடு மாடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே, வீட்டில் எங்களால் தாங்க முடியாத நாற்றம் ஏற்படுகிறது என்று எழுதி,

தனக்குத் தெரிந்தவரையில் அப்படி ஒன்றும் இல்லை என்றுதான் சொல்கிறார்கள். அந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லவேண்டும் என்று மீண்டும் மிகுந்த பணிவன் போடு, உற்ற நண்பரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் மீதும் பழி சுமத்தவேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. பொறுப்பு உள்ள எதிர்க்கட்சி என்ற முறையிலே அரசாங்கம் செய்கிற தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. நான் மீண்டும் சொல்கிறேன். மௌண்ட் ரோடில் புகாரிக்கு எதிரில் கூவம் ரிவரை ஒட்டி, அங்கிருக்கிற முஸ்லிம் தர்க்காவுக்குப் பின்னால், கெயிட்டி தியேட்டருக்குப் போகும் வழியிலே கொடுக்கப்பட்டி ருக்கிறது. இது ஒன்றுமட்டுமல்ல. இன்னும் மூன்று, நான்கு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அத்தனையும் நிரூபிக்கத் தயா ராக இருக்கிறேன். பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராக இருக் கிறேன். அரசாங்கம் ஒரு நீதிபதியை வைத்து விசாரணை செய் வதற்குத் தயாரா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஒரு உறுப்பினர் பேசு கிறபொழுது, மற்றொரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு சாட்டி பேசக்கூடாது என்பது 67-வது விதி. அப்படிக் குற்றம் சாட்டி னால் அது நமது நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று 235-வது விதியில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் அவர்கள் மீண் டும் அதையே சொல்கிறார்கள். ஒரு ஏக்கர் நிலம் என்னுடைய டிரைவருக்கு விலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல் கிறார். ஒரு ஏக்கர் நிலம் எங்கே இருக்கிறது? அந்த விவரங் களைச் சொல்ல வேண்டுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் சொன்னதையே தான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். ஆதாரம் இருக்கிறது. நிரூ பிக்கிறேன். நீதி விசாரணைக்குத் தயாராக இருக்கிறேன். நான் அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்று இது குறித்து நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்வார்களா? நான் பொறுப்பேற்றுக்கொள்ள தயா ராக இருக்கிறேன், நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒரு ஏக்கர் நிலம் என்று நிரூபித்தால் நான் விலகத் தயார். ராஜி னாமா செய்யத் தயார். அவர் தயாராக இருக்கிறாரா?

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். புகாரி ஹோட்டலுக்கு எதிரில் 25 ஆண்டுகளாக தகர வியாபாரிகள் கடை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லாமல் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால். . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தயவு செய்து உட்காரவேண்டும்.**

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். என் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் ஆதாரம் சமர்ப்பிக்கிறேன், பூரண பொறுப் பேற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக் கிறார்.

**திரு. முனு. ஆதி :** முன்னதாகவே ஆதாரங்களைத் தயாராக வைத்துக்கொண்டு பேசவேண்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) (சில உறுப்பினர்கள் எழுந்தார்கள்).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் யார், என்னை உட்காருங்கள் என்று சொல்வதற்கு? அவர்கள் சொல்கிறார்கள். இவர்கள் கேட்கிறார்கள். ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கு தயார் என்று அங்கத்தினர் சொல்லியிருக்கிறார். ஒன்றும் பயந்து கொண்டு போவது கிடையாது. அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயா ராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்புள்ளவர்கள். நாடாளுமன்றத்தில் அனுபவம் பெற்றவர். அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் விதிமுறைகளை பின்பற்றுவதில். தலைவர் எழுந்து நிற்கும் பொழுது, உறுப்பினர் உட்காரவேண்டும். தலைவர் எழுந்து நின்று கொண்டிருக்கும்பொழுது நீங்களும் உட்காராமல் நின்றுகொண்டி ருந்தால், சபையை எப்படி நடத்த முடியும்? நான் மணி அடித்துக்கொண்டிருக்கிறேன். மணி ஓசை கேட்ட பிறகாவது தாங்கள் உட்காரவேண்டும். அப்படி தலைவர் எழுந்து நிற்கும் பொழுது, நீங்களும் நின்று கொண்டிருந்தால், பல உறுப்பினர் களும் எழுந்தால், குழப்பம் ஏற்படுகிறது. அதனால் ஒன்றும் பயன் இல்லை. எந்த உறுப்பினரும் தன்னுடைய கருத்தைத் தெளி வாகச் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. தலைவர் எழுந்து நிற்கும்பொழுது மேஜைக்குக் குறுக்கே உறுப்பினர்கள் ஒருவ ரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தால், தமிழ்நாடு சட்டமன்றத் தின் கண்ணியம், கட்டுப்பாடு எங்கே போவது என்று தான் நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படு கிறேன். உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் மீது ஒரு குற்றச் சாட்டைக் கொண்டுவந்தார். முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இங்கே இருந்தால் கொடுங்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு சித்தன் அவர்கள் அதற்குச் சொல்ல வேண்டிய பதில், ஆதாரம் இங்கே இருக்கிறது. அல்லது இல்லை என்று சொல்லிவிட்டு அமரவேண்டும். அதற்குத் தான் நான் அனுமதி கொடுத்தேன். விளக்கம் கொடுக்க அனுமதி கொடுக்க வில்லை, திரு. சித்தன் கொண்டுவந்த குற்றச்சாட்டிற்கு ஆதாரம்

அந்த இடத்தை அஸைன்மெண்ட் பண்ணிவிடும்படி மனுப் போட்டேன். அந்த மனுப்போட்ட 1959-ம் ஆண்டுக்குப் பிறகு யாரும் கவனிக்கவில்லை. பிறகு நான் பொதுப்பணித்துறை அமைச்சராக வந்தபொழுது மீண்டும் ஒரு மனுக் கேட்டார்கள். அப்பொழுது நான் சொன்னேன், 1959-லே போட்ட மனுவிற்குப் பதில் அளிப்பதாக இருந்தால் பதில் அளியுங்கள், நான் அமைச்சர் என்ற முறையில் மீண்டும் மனுப் போட மாட்டேன் என்று சொன்னேன். அதற்குப்பிறகு, நாங்கள் அந்தத் தாழ்வாரம் போன்ற இடத்தை 3,000 ரூபாய்க்கு எடுத்துக்கொள்ளலாம் என்று வந்தது. முதலமைச்சர் அண்ணா அவர்கள் கையெழுத்துப்போட்டு, நாங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். நான், அந்த இடம் வேண்டாம், அமைச்சரான பிறகு பயன்படுத்துவது முறையல்ல என்று திருப்பித் தந்துவிட்டேன்.

இப்பொழுது, கெயிட்டி தியேட்டருக்குப் பக்கத்தில், எனக்கு வேண்டியவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒருவேளை என்னுடைய ஞாபகத்திற்கு வராமல், அல்லது எனக்குத் தெரியாமல், செய்யப்பட்டிருந்தால், அதைத் திருத்திக்கொள்ளத் தயாராகயிருக்கிறேன். யாருக்கு, எவ்வளவு சொந்தம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற அந்த இடம் முதல் அமைச்சர் அவர்களுடைய கார் டிரைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ஒரு ஏக்கர் இருக்கலாம். இப்பொழுது அந்த இடத்திலே கார் சாமான்கள் விற்கிற 4, 5 கடைகள் எழும்பியிருக்கின்றன, சினிமா செட்டிங்குகள் போல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு ஏக்கர் என்றால் அது எந்த இடத்தில்?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** கூவம் ரிவருக்குப் பக்கத்தில், முஸ்லீம் தர்க்காவுக்குப் பின்னால், கெயிட்டி தியேட்டருக்குப் போகும் வழியில். இன்னும் விரிவாகச் சொல்லவேண்டுமானால், நேரம் கூடுதலாக இருந்தால் பேசிக்கொண்டே இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அமைச்சர் மீது குற்றம் சாட்டிவிட்டு, தனக்கு நேரமில்லை, விரிவாகச் சொல்லவேண்டியிருக்கிறது என்று கூறி தப்பித்துக்கொள்வது முறையாகாது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். ஒரு பெரிய குற்றச்சாட்டு, மௌண்டு ரோடில் பக்கின்ஹாம் [illegible] பக்கத்தில் ஒரு ஏக்கர் என்றெல்லாம் சொல்லிவிட்டு 'எனக்கு நேரம் இல்லை' என்று சொன்னால், அதை ஒத்துக்கொள்ள [illegible] நாங்கள் தயாராக இல்லை. நாங்கள் சென்னையைச்





சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கிறோம், யாருக்குக் கொடுத்தார்கள், எந்த உத்தரவு, என்ன கையில் இருக்கிறது, யார் கொடுத்தார் என்று விளக்கமாகச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதற்கு இந்த மன்றத்தில் உரிமை உண்டு. பொறுப்புள்ள உறுப்பினராக இருப்பவர்கள் பொறுப்புள்ள அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டுகளைக் கொண்டு வரும்பொழுது, நீங்கள் ஏற்கனவே மன்றத்திற்கு வருகிற நேரத்தில் மன்றத்தில் அமைச்சர் மீது ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவர வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்துகொண்டு வருகிற நேரத்தில், அதற்கான உண்மையான ஆதாரங்களையும் கொண்டு வரவேண்டும். அப்படியில்லாமல் இங்கே வந்து அமைச்சர் மீது குற்றச்சாட்டைச் சொல்லும்பொழுது, அமைச்சர் விளக்கம் கேட்டால் ஆதாரம் கேட்டால், யார், எவர் எந்த இடம் என்று கேட்டால், தெரியாது என்று சொல்லிக்கொண்டு போனால், நிலைமை வளர்ந்துகொண்டே போகிறது. நீங்கள் ஒன்று பேசுவது, அமைச்சர் விள்க்கம் கேட்பது, உறுப்பினர்கள் உடனே ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது, இப்படி நேரம் வீணாகப் போய்க்கொண்டே இருக்கிறது. இன்னும் பல உறுப்பினர்கள் பேசியாகவேண்டும். நாளை பட்ஜெட் விவாதத்திற்குக் கடைசி நாள். நாளைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு நிதியமைச்சர் ஆகியோர் பேசவேண்டும். ஆகவே, பேசுவதாக இருந்தால் ஆதாரம் இருந்தால் பேசுங்கள். ஆதாரம் இல்லாமல் பேசிக்கொண்டு, நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டை சுமத்தினார். முதல் அமைச்சர் அவர்கள் யாருக்குக் கொடுக்கப்பட்டது நிலம் என்று பெயரைக் கேட்டார். நிலத்திற்கு உண்டான சர்வே நம்பரைக் கேட்டார். நிலம் எங்கே இருக்கிறது என்று கேட்டார். உங்கள் குற்றச்சாட்டிற்கு ஆதாரமாக எழுத்து மூலம் ஏதாவது அரசாங்க உத்தரவு இருக்கிறதா என்று கேட்கிறார். இது சம்பந்தமாக உறுப்பினர் அவர்களிடம் ஏதாவது தகவல் இருந்தால் நான் அவர்களைத் தொடர்ந்து பேச அனுமதிக்கிறேன். அப்படியில்லை இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் இதையெல்லாம் கேட்பது கூட உறுப்பினர் அவர்கள் மீது எதிர்க்குற்றம் சாட்டவேண்டும் என்பதற்காகவோ, அல்லது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகவோ அல்ல. உறுப்பினர் அவர்கள் விவரங்களைச் சொன்னால் நான் தவறு இருந்தால், திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். [illegible] அமைச்சர் அவர்களும் சொல்லுகிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவை குறிப்பேட்டில் இருக்க வேண்டும் . . . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நோ, நோ. (குறுக்கீடுகள்).

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அப்பொழுது, சபையிலே இருக்க வேண்டிய அவசியமே கிடையாது. வாங்க போகலாம் . . . . (திரு கருத்திருமன் அவர்களும், அவர் கட்சியைச் சேர்ந்தவர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவருக்கு மன்றத்திலே சபாநாயகர் கொடுக்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதியிருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, இப்படி இந்த மன்றத்தை துஷ்பிரயோகம் செய்து கொள்வதை அனுமதிக்கக் கூடாது. ஆகவே, அவற்றை மன்றத்தின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எப்பொழுதுமே எடுத்து விடவேண்டும், நாளைக் காலைவரை 'வெயிட்' பண்ண வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாளைக்காலை ஆதாரங்களை பேரவைத் தலைவரிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு. இதுபற்றி பேசியிருப்பதை சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் * என்று தெரிவித்திருக்கிறேன். பத்திரிகைகளிலும் வரக்கூடாது.

THIRU PALANIVEL RAJAN: Mr. Deputy Speaker, Sir, the hon. Member Thiru N. S. V. Chithan has chosen to bring forward a very serious allegation against an hon. Member sitting on the Treasury Benches.

MR. DEPUTY SPEAKER: That portion of Thiru Chithan's reference to the Hon. Chief Minister had already been ordered to be expunged till tomorrow. The hon. Member need not refer to it.

THIRU PALANIVEL RAJAN: I wish to say in this context that all parties in the House must remember and take care to see that parliamentary traditions are maintained. I wish to remind hon. Members who had walked out of this House today, that even this morning the Hon. Chief Minister instructed the Hon. Minister for Co-operation not to divulge the name of a Member of this distinguished House, who was alleged to have been involved in a case of embezzlement.

* 7—3—1970-ம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த விளக்க உரையையொட்டி, நிகழ்ச்சிக் குறிப்பில் இது இடம் பெறலாம் எனப் பேரவைத் தலைவர் அவர்களால் 7—3—70-ல் ஆணையிடப்பட்டது.



Now speaking on the budget, I welcome the treatise of the Hon. Finance Minister and I wish to congratulate him not only on the brilliant economic survey of the Government's performance for a period of three years but also on the excellent way in which the Hon. Finance Minister has made out the case of how grave injustice had been meted out to our State by the Fifth Finance Commission. The hon. Member Thiru K. Vinayakam in the course of his speech said that the Hon. Finance Minister had only indicted the Central Government. I do not think it is improper to do so. After all Thiru Vinayakam and Members belonging to his party owe no loyalty to the Government at the Centre. They should be more than happy that we have chosen to indict the Centre. Be that as it may, I would respectfully submit that the Fifth Finance Commission has done very great injustice to our State from every point of view. Even when the Finance Commission's Report was published, the Hon. Finance Minister took the House into confidence and gave a statement of the manner in which the State revenues had been affected by the award of the Finance Commission. The Hon. Minister had raised three pertinent points in his address. He said that financial prudence and administrative ability of this State, which had been unquestioned in the past, had now been penalised by the award of the Finance Commission. Some doubtful criteria and doubtful premises have been inducted in the proceedings in the name of backwardness and huge surpluses have been given to the States in the North. The provision allotted by the Fifth Finance Commission to other States would show that States like Maharashtra had obtained surplus of Rs. 420 crores, Uttar Pradesh Rs. 280 crores, Bihar Rs. 200 crores and Gujaret Rs. 160 crores, Punjab Rs. 151 crores. As compared to this, the Southern States including our sister States of Andhra and Mysore had sustained heavy losses by the award. I say that this Finance Commission is in reality a Political Commission and not an Expert Commission. The Fourth Finance Commission was presided over by an enmient jurist, the retired Chief Justice of Madras High Court. The Fifth Finance Commission had at its Chairman, an active politician, belonging to the Syndicate and there had been a great deal of parochialism in the award with the result grave injustice been done to the Southern States. The Hon. Finance Minister should impress upon the Central Government that in future in the composition of the Finance Commission, politicians should not be made Members but only economic experts should be invited to have an impartial say in a matter like this.

(Thiru M. Surendran in the Chair).

Coming to the recent news about loose federation at the Centre and autonomy for States, that seems to have agitated many friends in the Opposite side. The presence of the Hon. Gurnam Singh, Chief Minister of Punjab in the Tiruchy Conference seems to have agitated some. Full autonomy for States and loose

Federation at the Centre had been talked of. I would like to say that in the open conference the set-up of unitarial structure and federal structure now existing in our country had been discussed. Sir, the views of the Chief Minister and the Finance Minister are supported not only by Mr. Gurnam Singh, who is an eminent jurist, but also by Professor Parkinson, an eminent political scientist, who visited this country recently. With your permission, I would like to read an extract from what the Professor has said in Madras a few days ago. Answering questions at a Press Conference, the Professor said : " I cannot think of a more monstrously wasteful method of collecting taxes than the existing Indian arrangement of the States and the Centre going about collecting their allotted taxes with their own elaborate machinery. The State, with its greater knowledge of the area and people living there, should be a far more efficient agency to impose and collect taxes, both Central and State. The proceeds could be shared between the State and the Centre according to agreed tasks to be performed. "

Under conditions of autonomy, Professor Parkinson said, " States could freely choose between the socialists and capitalist methods of development, and their achievements could be compared. He disapproved of the present attempts in India to compromise between socialism and private enterprise, as the best possibilities of neither could be achieved by such compromise ". I very respectfully submit thtt we have got eminent economic authorities to support our principle and our cry for greater autonomy for the States. The prsence of Mr. Gurunam Singh in Tiruchirappalli is only a germination of the idea and I have no doubt that this popular idea will spread far and wide in all the four corners of this country and we shall soon see that the Constitution is amended to provide for a federal set-up. After all, the Constitution of a country can command respect only if it reflects the aspirations and will of the people. I have no doubt that, under the distinguished leadership of our Chief Minister and the other leaders, the idea of regional autonomy with a loose federation at the Centre will spread far and wide in all the four corners of the country and become a reality in the days to come.

With regard to taxation proposals and the benefits conferred by the budget, I congratulate the Hon. Finance Minister on his human approach to the problems and the great consideration he has shown to all classes of employees, employees of not only the State Government but also of the local bodies and the teachers. I think all right-thinking persons will warmly applaud the human approach and the efforts of this Government to improve the lot of its employees. In this context I would suggest that government servants of all categories should be encouraged to form co-operative societies of their own where essential commodities can be obtained at a fair price. That will be a better solution than a review and revising the allowance with reference to the cost of living index.



I want particularly to congratultte the Hon. Finance Minister on the great interest he has shown in the Cooum Improvement Scheme and the Veeranam Lake Water Supply Scheme. The implementation of these two schemes will be a boon to the long-suffeing citizens of Madras who have suffered patiently for twenty years. I think in the years to come the Dravida Munnetra Kazhagam will be gratefully remembered by the people of Madras as the architect of modern Madras with a beautiful Cooum and plentiful water supply. I warmly applaud the Finance Minister for these schemes and I commend the budget for the acceptance of the House.

திருமதி கோ. பத்மாவதி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனது கணவர், மறைந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஓயாது உறங்காது உழைத்ததன் காரணமாகத்தான் சீக்கிரத்தில் இயற்கையை எய்தினார்கள். அவருடைய தொகுதி மிகமிகப் பின்தங்கிய தொகுதியாக இருந்ததால்தான், அவர் தன்னையும், தன்னுடைய குடும்பத்தையும் மறந்து உழைத்ததன் காரணமாக அகால மரணமடைய நேரிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களும் தன்னுடைய சக்திக்கு மீறி உழைத்ததன் காரணமாகத்தான் அவர்களையும் நாம் இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இன்றையதினம் முதலமைச்சராக இருக்கும் கலைஞர் அவர்கள் நல்ல திறமையான ஆட்சியை நடத்தி வருகிறார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் ஏழை எளிய, நடுத்தர மக்கள் பாராட்டுகின்ற வரவு செலவுத் திட்டத்தை அளித்துள்ளார்கள்.

குறிப்பாக விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு நன்மைகள் கிடைத்திருக்கின்றன. கிராமப்புறங்களில் ஏழை மக்கள் நாள்கணு, எட்டணா கூலி வேலை செய்து பிழைக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர கடந்த இருபதாண்டுகளில் ஆண்ட காங்கிரஸ் கட்சியினர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து காங்கிரஸ்காரர்கள் பதவியை வாங்கும்போது ரூபாய்க்கு ஆறுபடி அரிசி விற்றது. ஒரு ரூபாய்க்கு நான்கு சேரும் துணி விற்றது. "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நாட்டில் தேனும் பாலும் தெருவெல்லாம் ஓடும்." என்று காங்கிரஸ்காரர்கள் கூறினார்கள். பொய்மான்களைக் காட்டி, கிராமப்புற மக்களை ஏமாற்றி, ஆட்சிக்கு வந்து, திறமையற்ற ஆட்சி செய்ததால், நாட்டில் பஞ்சமும் பிணியும் தாண்டவமாடின. காங்கிரஸ்காரர்கள் இருபது ஆண்டுகளில் செய்யாததை நாங்கள் எங்கள் ஆட்சியில் செய்திருக்கிறோம். 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஏழைகளுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது 30 ஏக்கர் என்று இருந்ததை 15 ஏக்கர் என்று நில உச்சவரம்பு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிக் கிடைக்கும் நிலத்தை கிராமமக்களுக்குப் பிரித்துக்கொடுத்தால் அவர்களுக்கு மறுவாழ்வு கிடைக்கும்.

தற்சமயம் கைவசம் இருக்கிறதென்றால், அல்லது ஞாபகத்தி லிருந்து ஆதாரத்தைச் சொல்ல முடியும் என்றால், சொல்ல வேண்டும். முடியாது என்றால், முடியாது என்று சொல்லிவிட வேண்டும். அதைத்தான் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தாங்கள் எழும்போது நாங்கள் கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டுடனும், பொறுப்போடும் நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்கிறீர்கள். அதேமாதிரி அந்த கண்ணியம், கட்டுப்பாடு என்பதெல்லாம் அந்தப் பக்கத்தில் இருப்ப வர்களுக்கும் வேண்டாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அதைத்தான் முதலில் சொன்னேன். நான் எழுந்திருந்ததைப் பார்த்து, நீங்கள் உடனே உட்கார்ந்திருந்தால், மேற்கொண்டு மற்ற பிரச்சினைகள் இங்கே எழுந்திருக்காது. நான் மணி அடித்தேன். மணியின் ஒலியையும் மீறி, நான் கொடுத்த மணியின் சத்தத்தையும் மீறி, நீங்கள் உட்காராமல் பேசிக்கொண்டே இருந்த காரணத்தினால், மற்ற உறுப்பினர்களும் குறுக்கே எழுந்து பேசவேண்டிய நிலை ஏற்பட்டது. சட்டமன்ற விதிமுறைகளின்படி உறுப்பினர்கள் ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டும். ஒரே சமயத்தில் இரண்டு உறுப்பினர்கள் எழுந்து நிற்பது விதிக்குப் புறம்பானது. நான் ஏதோ உங்கள்மீது குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டும் என்பதற் காகச் சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, அதாவது குற்றச்சாட்டு சாட்டவேண்டும் என்று செய்ததாகச் சொல்ல வில்லை. நீங்கள் பேச எழுந்தால் உட்கார வேண்டும் என்கிற அந்த நிலைக்கு அவர்களும் கட்டுப்பட வேண்டும் என்று சொல்லு கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்** பாயின்ட் ஆப் ஆர்டர், சார் விவாதத்தில் இருக்கும் பிரச்சினை பற்றி திரு. சித்தனுக்கு பதில் கொடுத்துக்கொண்டிருக்கும்போது, இடையில் பேசுவது சபையின் கௌரவத்திற்கு உகந்தது இல்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. திரு. சித்தன் அவர்கள், அவருக்கு அனுமதித்த நேரத்திற்கு அதிகமாகவே எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். குற்றச் சாட்டு என்றால், பேரவையில் பேசுகிறவர்கள் ஆதாரத்தோடு பேசினால், அமைச்சர்கள் குறுக்கீடு செய்ய வேண் டிய அவசியம் இருக்காது. நேரமும் வீணாக வேண்டிய அவசியம் இல்லை. சித்தன் அவர்களை நான் கேட்பது, முதல் அமைச்சர் சொன்னது போல், குற்றச் சாட்டுகளைப் பற்றிய ஆதாரம் தற் போது இருந்தால், அந்த ஆதாரங்களைச் சொல்லுங்கள், இல்லை என்றால், இல்லை என்று சொல்ல அனுமதி தருகிறேன்.





**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத்தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் நான் சொன்ன பதிலையேதான் சொல்ல வேண்டி யிருக்கிறது. அது மட்டுமல்ல, இன்னும் சொல்ல வேண்டியிருக் கிறது. அத்தனையையும் சொல்ல வேண்டும் என்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதலிலே கொண்டு வந்த குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருக்கிறது, இல்லை என்று சொல்லிவிட்டால், இதற்கெல்லாம் அவசியமே இல்லை. கொண்டு வந்திருக்கும் குற்றச் சாட்டிற்கு தற்போது, கைவசம் ஆதாரம் இருக்கிறதா ? இல்லையா ? திரு. சித்தன், ஆதாரம் இருக்கிறதா ? இல்லையா ? என்று கேட்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத்தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும், நான் சொன்ன பதிலையேதான் சொல்ல வேண் டும். ஆதாரங்கள் இருக்கின்றன. இது தவிர இன்னும் 4, 5 குற்றச் சாட்டுகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அரசு பொறுப்பேற்றுக் கொள்வதாக இருந்தால், நீதி விசாரணை செய்வதாக இருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** மாண்புமிகு உறுப் பினர் திரு. சித்தன் அவர்களுக்கு, ஒன்றைச் சொல்லுகிறேன். மாண்புமிகு அமைச்சர் மீது கொண்டு வந்த குற்றச் சாட்டிற்கு இன்றையதினம் உங்களிடம் ஆதாரங்கள் இப்பொழுது இல்லா விட்டாலும், நாளைக்காலை 9 மணிக்குள் பேரவைத்தலைவரிடம் கொடுக்கும் படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத்தலைவர் அவர் களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். இவ்வாறு பேசுவதும், குற்றச் சாட்டுகளை சொல்வதும் எதற்காக என்றால், நாளைக்கு தங்கள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் போடுவதற்கு என்பது இது தெள்ளத் தெளிவாகத் தெரியும். நாளைக்கு வருகிறேன் என்று சொல்லுகிறார்கள், மாண்புமிகு முதல் அமைச்சரும், இன்று போய் நாளை வா, என்று விட்டுவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு நடவடிக்கைகள் அப்படியே இருந்தால் தவறாகப் போகும். ஆகவே, இந்த நடவடிக்கைகள் பேரவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லா விடில், பத்திரிகைகளிலெல்லாம் வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் எழுப்பியிருக்கும் பிரச்சினை நியாய மானது. ஆகவே, நாளைக் காலையில் ஆதாரங்களை பேரவைத்தலை வரிடம் கொடுக்கும் வரைக்கும், இன்றையதினம் திரு. சித்தன் மாண்புமிகு முதல் அமைச்சர் மீது குறிப்பிட்ட குற்றச்சாட்டு பற்றிய பேச்சுக்கள் சட்டமன்ற குறிப்பேட்டிலிருந்து நீக்கப் படும் என்று தெரிவிக்கிறேன்.* பத்திரிகைகளிலும் வரக்கூடாது என்றும் தெரிவிக்கிறேன்.

[திருமதி கோ. பத்மாவதி] [1970 மார்ச் 6

உணவுக் கட்டுப்பாட்டைத் தைரியமாக எடுத்ததற்காக இந்த அரசை நல்ல உள்ளம் படைத்த அத்தனை மக்களும் பாராட்டு கிறார்கள். வரவு செலவுத் திட்டத்தில் பின்தங்கிய மக்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. பின்தங்கியவர்களின் நலனுக்கென ஒரு தனி இலாகாவை அமைத்து, ஒரு தனி அமைச் சரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பின்தங்கிய மக்களின் நலனுக் காக ஒதுக்கிய தொகை முன்பைவிட பலமடங்கு அதிகமாகி இருக்கிறது. இப்போது அவர்களின் நலனுக்கு 2 கோடியே 60 லட் சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் நந்தன் கால்வாய்த் திட்டம் என்பது நீண்டநாள் திட்டமாக இருந்து வருகிறது. என்னுடைய கணவர் அவர்கள் எப்போதும் நந்தன் கால்வாய்த் திட்டத்தைப்பற்றி கூறிக்கொண்டே வந்தார். அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமலே குறை மனத்துடனே அவர் மறைந்துவிட்டார். இது அவசியமான திட்டமாக இருக்கிற காரணத்தால், அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் பல ஊர்களுக்கு சாலைவசதி கிடையாது. என்னுடைய தொகுதியின் முக்கியப் பிரச்சினையே இதுதான். மேலும் சில இடங்களில் தெரு விளக் கிற்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. பொது மக்கள் இதைப் போற்றிப் பாராட்டுகிறார்கள். எல்லா கிராமங் களுக்கும் விரைவில் இந்த மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையில் நடுத்தர வகுப்பு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு அதிக வசதி கள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. பாலசுப்பிரமணியன்**: தலைவர் அவர்களே, நாலாவது பட்ஜெட்டாக இப்போது இதை விவாதித்துக்கொண்டிருக்கி றோம். இந்த பட்ஜெட் உரையிலேயே இந்த நாட்டிலே மந்த நிலை ஏற்பட்டிருப்பதற்கு மத்திய அரசின் பணக்கொள்கை, நிதிக் கொள்கை காரணம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கைகள் என்ன என்பதை நாம் தெளிவாகவும், விரிவாகவும் பார்ப்பது நல்லது, அதை அடியோடு மாற்றுவதற்கு முயற்சிக்கா விட்டால், போராடாவிட்டால் வருடா வருடம் இப்படித்தான் பட்ஜெட் போட்டுக்கொண்டிருக்கிற நிலை இருக்கும்.

மத்திய சர்க்கார் விதிக்கிற மறைமுக வரிகளின் மூலம் விலை வாசிகள் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்துகொண்டே இருக்கின்றன. பற்றாக்குறை பட்ஜெட் இருநூறு கோடி முந்நூறு கோடி என்று



1970 மார்ச் 6] [திரு. ஏ. பாலசுப்பிரமணியன்]

விழுந்துகொண்டே இருக்கிறது. அடுத்தடுத்து நோட்டு அடிப் பதும் நடந்துகொண்டே இருக்கிறது. அந்நிய நாடுகளிடம் இருந்து கடன் வாங்கிக்கொண்டே இருக்கிறார்கள். அந்நிய நாட்டு முதலாளிகளுக்கும், உள்நாட்டு முதலாளிகளுக்கும் வசதி செய்து கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இவைகளின் காரணமாகத்தான் பயங்கரமான வறுமை, வேலையில்லாத் திண் டாட்டம், விலைவாசி ஏற்றம், ஏகபோக முதலாளிகளின் ஆதிக்கம் எல்லாம் வளர்ந்துகொண்டே வருகின்றன. இப்போதும் கூட அந்தக் கொள்கையில்—சிண்டிகேட்—இண்டிகேட் என்று பிரிந்தும் மாற்றம் ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போன வருஷம் எல்லா மாநிலங்களிலும் பற்றாக்குறை பட்ஜெட் தான். மத்திய சர்க்காருக்கும் 200 கோடி பற்றாக்குறை பட்ஜெட் தான். இந்த வருஷமும் அநேகமாக எல்லா மாநிலங்களிலும் பற்றாக்குறை பட்ஜெட்தான் விழப்போகிறது. மத்திய அரசிலும் 225 கோடிக்கு பற்றாக்குறைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இப்படியே கொள்கை மாற்றம் இல்லாது போவதால் அவர்கள் உலக பாங்கிடமும் கடனுக்குப் போகத்தான் வேண்டும். நாம் மத்திய அரசிடம் கடனுக்குப் போகத்தான் வேண்டும். அவர்கள் கடன்களை எல்லாம் "ரீஷெட்யூல் பண்ணவேண்டும், புதுத்தவணை போட்டுதரவேண்டும்" என்று உலக நாடுகளிடம் கேட்கிறார்கள். மத்தியில் ஏராளமான கடன் இருக்கிறது என்றால் எல்லா மாநிலங் களுக்கும் ஏராளமான கடன்கள் இருக்கின்றன. ஆக அடிப்படை யில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் இந்த விஷவட்டம் போய்க் கொண்டேதான் இருக்கும். இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டு மென்றால் இந்த விஷ வட்டத்தை வெட்டியாக வேண்டும். இல்லை யென்றால் ரிசஷன் என்றோ, கிரைசிஸ் என்றோ பல வார்த்தைகள் இருக்கின்றன—மாற்றி, மாற்றி அவற்றைச் சொல்லிக்கொண்டு தான் இருக்க நேரிடும். இதற்கு மாற்றுப்பாதை என்று சொல் கிறபோது எனது கட்சி பத்துவருஷங்களுக்காவது வெளிநாடு களுக்கான கடனை ஒத்திவைக்கவேண்டுமென்று வற்புறுத்திவரு கிறோம். நாங்கள் சொல்வது இருக்கட்டும். அமெரிக்கநாட்டு தூதுவர் செஸ்டர் பவுல்ஸ்—ப்ராங் மொரேஸ் என்கிற பத்திரிகைக் காரரிடம் பேசுகின்றபோது

'If a moratorium on the repayment of capital and interests on past loans could be granted for, say, five years, the Indian economy would be given a massive boost'.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுக்காவது கடன் ஒத்திவைத்துக் கொடுத்தால்தான் நமது பொருளாதாரத்திற்கு முன் னேற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று சொன்னார்கள். நாங்கள் பத்தாண்டு கேட்கிறோம். கடனை இல்லை என்று சொல்லவில்லை. ஹிட்லர் கடனைத் தருகிறேன் என்று சொல்லிவிட்டு "இல்லை" என்றானே அப்படிச் சொல்லவில்லை. நம்முடைய பொருளா தாரத்தை நாமே சீர்படுத்திக்கொண்டு, மேம்படுத்திக்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்திவிடுவோம்.

[திரு. ஏ. பாலசுப்பிரமணியன்] [1970 மார்ச் 6

அதற்கடுத்தபடியாக, நாட்டின் செல்வத்தின் ஊற்றுகள் எல்லாம் 75 ஏகபோக குடும்பங்களிடமே அகப்பட்டிருக்கின்றன. அவற்றை மீட்டுக்கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. வரி போடாத நிலை வரவேண்டும் என்றால் பொதுத்துறை விரிவாக வளர்ந்தாக வேண்டும். அது ஜனநாயக ரீதியில் செயல்பட வேண்டும். தொழில் நுட்ப வல்லுநர்களையும், உழைப்பாளிகளையும் கலந்து செயல்படுத்தியாக வேண்டும். வெறும் ஐ. ஏ. எஸ் அதிகாரிகளைப்போட்டு பொதுத்துறை என்றாலே ஒழுங்காக நடக்காது என்ற கருத்தை உண்டாக்கிவிடக்கூடாது. அத்தகைய நிலை தான் இன்றைக்கு ஒன்றிரண்டு பொதுத்துறைகளில் கூட நாட்டில் இருப்பதைப் பார்க்கிறோம். இப்படி அடிப்படையான மாற்றம் வருகிறபோது தான் சுதந்திரமான பொருளாதாரம் Independent economy ஏற்பட வாய்ப்புண்டு. அதற்கு வேண்டிய கிளர்ச்சியை—போராட்டத்தை மற்ற ஜனநாயக கட்சிகளுடன் சேர்ந்து இந்த அரசு நடத்தியாக வேண்டும். இல்லையென்றால் அவர்கள் பேசியதைப் போல Mixed economy கலப்பட பொருளாதாரம், கூட்டுத்துறை என்றெல்லாம் பேசிக்கொண்டே போகவேண்டியது தான். அந்நிய நாட்டு தொழில் முதலாளிகளுக்கு நாமும் அதிக வசதிகளைச் செய்து தர வேண்டும் என்றே பேசுவோம். இருக்கிற பிரத்யட்ச நிலைமைக்கு ஏற்ப காரியங்களைச் செய்தாகவேண்டும் என்று சொல்லுவோம். இதுவரை என்ன நடந்தது? 23 ஆண்டுகளாக ஜவஹர்லால் நேரு காட்டிய Pragmation என்ற பாதைதான் இந்த அளவுக்குக் கொண்டு போய்விட்டது. 75 ஏக போக குடும்பங்கள்தான் வளர முடிந்தது. இன்றைக்கு பொருளாதார தேக்கம், க்ரைசிஸ், ரிசஷன் எல்லாம் வந்துவிட்டது. இந்த பட்ஜெட்டைப் போடுகிறபோது கூட நாம் அடிப்படைக் கொள்கை மாறவேண்டும் என்கிற நிலையில் பாதை மாற்றத்திற்கு சிந்திக்கவில்லை.

போட்டிருக்கிற வரிகளுக்கு எங்கள் பக்கத்தில் பெரிதாக ஆட்சேபணை இல்லை. மின்சார பல்புகளின் மீது போட்டிருப்பதை எடுத்துவிடலாம். சாதாரண கடைக்காரர்கள் வீட்டுக்காரர்கள் கூட பல்புகள் உபயோகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அது போல் 95, 100 ரூபாய் வாட்சுகள், டிரான்சிஸ்டர் மீது போடப்பட்டிருக்கிற வரியை எடுத்துவிடலாம். மற்றவற்றை நாங்கள் பொதுவாக எதிர்க்கவில்லை.

இன்று நாட்டின் நடப்பு என்ன? நம்மை காப்பாற்ற நாம் மத்திய அரசிடம் போகிறது போல நகர மன்றங்கள் நம்மிடம் வந்தாகவேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் எல்லாம் வரியை ஒன்றுக்கு இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு என்று உயர்த்திகொண்டு போகச் சொல்லுகிறோம். கிராமங்களில் அந்த செஸ், இந்த செஸ் என்பதாக ரூபாய்க்கு ரூபாய் என்று போடச் செய்கிறோம். அயினும் தாக்குப் பிடிக்கவில்லை. அதனால் தான் நாங்கள் சொல்கிறோம், தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய போக்குவரத்து பஸ்களில் பெரிய 3 கம்பெனிகளையாவது—டி.வி.எஸ்



1970 மார்ச் 6] [திரு. ஏ. பாலசுப்பிரமணியன்]

ஏ.பி.டி. போன்றவற்றை நாட்டுடைமையாக்க வேண்டும். அலுமினியம் பாக்டரிக்கு நாம் ஆண்டுக்கு 1 கோடி மான்யம் போல் கொடுப்பதற்குப் பதிலாக பொதுத்துறையிலேயே எடுத்து நடத்த வேண்டும். தூத்துக்குடி உரத்தொழிற்சாலை நம் கைவசம் இருந்தாகவேண்டும். ப்ளாண்டேஷன் கார்ப்பரேஷனை 10 கோடி மூலதனத்தில் நாமே நடத்தப்போவதாகச் சொல்கிறோம். அத்துடன் சேர்த்து பெரிய தேயிலைத் தோட்டங்களை எல்லாம் நம் கையகப்படுத்தவேண்டும் என்பதாக நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். நம்முடைய வருமானம் இந்த வகைகளில் பெருகினாலொழிய வரிகளைக் குறைப்பதோ, போடாமல் இருப்பதோ, மத்திய அரசிடம் பிச்சை கேட்காமல் இருப்பதோ முடியாது. முன்பு நாங்கள் சர்க்கரை ஆலைகளை தேச உடமையாக்க வேண்டும் என்ற போது ஒப்புக்கொள்ளாத இண்டிகேட்காரர்கள் கூட இப்போது பம்பாய் மகாநாட்டில் அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இங்கேயும் சொல்கிறார்கள் என்கிறார்கள். சந்தோஷம். பெரிய சர்க்கரை ஆலைகளை எல்லாம் அதுவும் வெள்ளைக்கார முதலாளிகளிடம் உள்ளவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் முனிசிபல் வரி, பஞ்சாயத்து வரி, செஸ் வரி என்பதாக மேலும் மேலும் போய்க்கொண்டே இருக்காத நிலை ஏற்படும்.

இப்படிப்பட்ட மாற்றுப் பாதைக்குப் போகாத வரை நாம் மத்திய சர்க்காரிடம் காவடி எடுத்துத்தான் ஆகவேண்டும். அவர்கள அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் என்பதாக உலக நாடுகளிடம் காவடி எடுத்துத்தான் ஆகவேண்டும். மக்களுக்கு உண்மையான நிவாரணம் கிடைக்காது. அடிப்படைக் கொள்கையில் மாற்றம் இல்லா நிலையில் ஒரு பெடரல் ப்ளானிங் கவுன்சிலோ பெடரல் கடன் கவுன்சிலோ டெல்லியில் ஏற்படுத்தி என்ன பயன்? இவர்களிடம் ஒவ்வொரு மாநிலமும் போய்க் கொண்டிருக்கும். இவர்கள் விவாதித்துக்கொண்டிருப்பார்கள். அது ஒரு விவாதம் அரங்கமாகத்தான் இருக்குமே தவிர, பலன் ஏற்படும் என்று நினைக்கவில்லை.

முதலமைச்சர் அவர்கள் திருச்சியில் பேசிய பேச்சுக்கு இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவை. பொதுக்குழு கூட்டி அதைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். செய்யவேண்டும். நாடாளுமன்றம் இருக்காது, மாநிலங்களில் இருந்து பிரதிநிதிகள் போய் கூட்டாட்சி அமைப்பதாக இருக்கும் என்கிற ரீதியில் தான் புரிந்தது. பத்திரிகைகளில் அப்படித்தான் போடப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட கருத்தாக இருந்தால் அது தவறான கருத்து என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுப்பதனால் நடுவில் ஆட்சி பலவீனப்பட்டுவிடும் என்று நாங்கள் கருதவில்லை. நாடாளு மன்றமும் இருக்கத்தான் வேண்டும். அங்கு மேல்சபையும் இருக்கத்தான் வேண்டும். மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுத்து

[திரு. ஏ. பாலசுப்பிரமணியன்] [1970 மார்ச் 6

Widest autonamy எல்லா மாநிலங்களில் இருந்தும் மத்தியில் உள்ள மேல்சபைக்கு சம அந்தஸ்துள்ள—எண்ணிக்கையுள்ள—9 கோடி மக்கள் கொண்ட உ.பி.-யாக இருந்தாலும், 4 கோடி மக்களைக் கொண்ட தமிழகமாக இருந்தாலும் 1½ கோடி மக்களைக் கொண்ட கேரளமானாலும்—சம எண்ணிக்கையுள்ள பிரதிநிதித்துவம் கொடுத்து அந்த ராஜ்ய சபை அமையவேண்டும். அதன்மூலமாகத்தான் இரண்டு சபைகளும் ஏற்றுக்கொண்டால்தானே எந்தச் சட்டமும் நிறைவேறக்கூடிய நிலைமை ஏற்படும்பொழுதுதான் மத்தியிலே இருக்கின்ற அரசுக்கு வலுவும் இருக்கும். அதே நேரத்திலே மாநில அரசுகளுக்கும் அதிகாரங்கள் கிடைக்கப்பெற்று சுயாட்சி நிலையிலே இயங்கமுடியும் என்பதை என்னுடைய கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1-00 அடுத்து நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி இங்கே பேசப்பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஒரு வார்த்தை. ஏதோ வெளியே போனவர் ஒருவர் உள்ளே வந்திருக்கிறார். அவர்கள் எல்லாம் வெளியே போனதினால் நமக்கு நிறைய நேரம் கிடைக்கும். டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கொள்கை எனக்கு நன்றாகத் தெரியும். செஸ்டர் பவுல்ஸ் என்பவர் நான் லெனினுடைய கொட்டேஷனைச் சொல்லவில்லை, அல்லது ஸ்டாலின் கூறியதைச் சொல்லவில்லை அல்லது படத்தைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது என்று சொல்கிறார்களே அந்த மாவோ சொல்லியதைச் சொல்லவில்லை—ஒரு அமெரிக்கன் செஸ்டர் பவுல்ஸ் என்பவர் பிராங் மொரைஸிடம் பேட்டியளித்துச் சொல்லியிருக்கிறார்.

'In Japan and South Korea the ceiling is 7½ acres per family; in Taiwan it is 10 acres; and these ceilings are strictly enforced'.

தென்கொரியாவிலும், ஜப்பானிலும் ஒரு குடும்பத்திற்கு 7½ ஏக்கர் என்ற முறையிலே கொடுக்கப்பட்டு அமலாக்கியிருக்கிறார்கள். அதுபோல பார்மோஸாவிலே 10 ஏக்கர் என்ற அளவிலே வைத்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல மேலும் அவர் குறிப்பிடுகிறார் :

'Production per acre in Japan is not only far higher than India, it is higher than the United States of America'.

அதாவது இந்தியாவைக் காட்டிலும் ஏக்கருக்கு அதிகமாக, அமெரிக்கா பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களை வைத்துப் பண்ணை நடத்துகிற அமெரிக்காவைக் காட்டிலும் இங்கே 7½ ஏக்கர் கொண்டு நடத்தப்படுகின்ற விவசாயத்தின் மூலம் நல்லமுறையிலே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்று செஸ்டர் பவுல்ஸ் அவர்கள் ப்ராங் மொரேஸுக்குக் கூறியிருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

காம்ப்ரஹென்ஸிவ் லொண்ட் ரிஃபார்ம்ஸ் என்று நாம் பல காலமாகப் பேசிக்கொண்டு வந்திருக்கிறோம். இப்பொழுது ஒரு முக்கியமான விஷயத்தை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதை



1970 மார்ச் 6] [திரு. ஏ. பாலசுப்பிரமணியன்]

நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது இந்த விதிவிலக்குகளை எடுத்துவிடவேண்டும். திரு. ம.பொ.சி. அவர்கள் சொன்னார்கள் அறநிலையங்களுக்கு வேண்டுமென்று. எந்தக் கடவுளும் உழுதது கிடையாது. எந்தக் கடவுளும் சாப்பிட்டது கிடையாது. எனவே, கோயில்களுக்கு நிலம் வேண்டாம். கோயில்களுக்கு வேண்டிய செலவைக் கொடுத்துவிடலாம். இப்பொழுது கேரளாவிலே அப்படித்தான் செய்கிறார்கள். மாதத்திற்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுத்து விடுகிறார்கள். அல்லது 4 லட்சம் என்று வருஷத்திற்குக் கொடுத்துவிடலாம். கோயில்களுக்குப் பக்தர்கள் பங்குபோட்டுச் செய்யலாம். பக்தர்கள் எவ்வளவு சிறப்பாக நடத்தினாலும் நாம் தடுக்கவில்லை. கோயில் ஸ்தாபனங்களுக்கும், சாமிக்கும் நிலங்கள் இருக்கக்கூடாது என்பதில் நாம் கறாராக இருக்கவேண்டும். அதேபோன்று குடும்பத்தைப் பொறுத்தவரையில் கறாராக வரையறுத்துவிட வேண்டும். குடும்பம் என்றால் தனி நபரா ஒருவரா இருவரா எத்தனை பேர்கள் என்று இருக்கவேண்டும். அவரவர்கள் இஷ்டப்படி வியாக்கியானம் செய்யும்படி விடக்கூடாது. நபருக்கு, 15 ஏக்கர் என்றால் 5 பேர்களுக்கு 15 ஏக்கர் வீதம் 75 ஏக்கர் என்றும் 10 பேர்களுக்கு 15 ஏக்கர் வீதம் 150 ஏக்கர்கள் என்று போய்விடும். எனவே இந்த இரண்டு அம்சங்களையும் இணைத்துதான் இந்தச் சட்டத்தை இந்தச் சபையிலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு மாநில அரசு மட்டும் பொறுப்பு என்று நான் சொல்வதாக அந்தப் பக்கத்திலே இருக்கிறவர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நிலச் சீர்திருத்தத்தை நாம் கொண்டுவரவேண்டும். அரசியல் சட்டத்தை மாற்றவேண்டுமென்றால், அதற்கும் ஆவன செய்ய வேண்டும், மொழிப் பிரச்சினை என்றால் அரசியல் சட்டத்திலே மாற்றம் செய்யவேண்டும் மத்திய அரசிலிருந்து அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்றால் அதற்கு அவர்கள் அரசியல் சட்டத்தை மாற்றவேண்டும். அதேபோன்று அடிப்படை சொத்துரிமை வேண்டாம் என்றால் அதாவது பண்டமண்டல் ரைட்டாக அது இருக்கக்கூடாது என்றால் அதற்கு அரசியல் சட்டத்தை மாற்றலாம். திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு அவர்களும், திரு. ஏ. கே. கோபாலன் அவர்களும் இதைக் குறித்துச் சொன்ன பொழுது அடியோடு மாற்றவேண்டுமென்று சொன்னார்கள் 'அலகும் பிடியும் மாற்றுக' என்றனர் ஆங்கிலத்தில் Lock, stock and barrel என்பார்கள் அப்படிச் சொன்னபொழுது அந்தபக்கத்தில் இருந்தவர்கள் பரபரப்பு அடைந்தார்கள். அரசியல் சட்டம் அடியோடு மாற்றப்படவேண்டுமென்று இப்பொழுதும் சொல்லி வருகிறோம். இந்த அரசியல் சட்டம் இருக்கும்வரை அன்னிய ஏகாதிபத்தியத்தின்மீது நடவடிக்கை, முதலாளித்துவத்தின்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இந்த அரசியல் சட்டத்திலே அடிப்படையாக மாற்றம் செய்ய

[திரு. வ. பாலசுப்பிரமணியன்] [1970 மார்ச் 6

வேண்டுமென்று சொல்கிறோம். இப்படிச் சொல்வதிலே எங்களுக்குச் சங்கோஜமோ அல்லது பயமோ என்றைக்கும் இருந்ததில்லை, இன்றைக்கும் இல்லை. வெளியிலேயும் அப்படித் தான் சொல்கிறோம். இங்கேயும் அதைத்தான் சொல்கிறோம். படித்த மாணவர்களிடையே பயங்கரமான வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துகொண்டே வருகிறது. இந்த நிலச்சீர்திருத்தம் ஓரளவுக்கு நல்ல நிலச் சீர்திருத்தமாக அமைந்தால் பயன் உள்ளதாக இருக்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவிற்குக் குறைக்கும். வேகமான விரிவான தொழில் வளர்ச்சிதான் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு சரியான பதிலாகும். அது இல்லாது, தேக்கம் மந்தம் மேலும் மேலும் பெருகக்கூடிய தன்மை, முதலாளித்துவத்தைக் கொழுக்க வைப்பது, இஷ்டப்படி அவர்கள் நடக்க அனுமதிப்பது இவையெல்லாம் படித்த வாலிபர்களிடத்திலே பெரிய ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

மாணவர்கள் தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்று கவலைப் படுகிறார்கள். அவர்கள் மனதிலே அமைதியில்லை. அமைதி என்பது போலீஸ் ஸ்டேஷன் ஒழுங்காக நடப்பதுதான் என்று நினைக்கக்கூடாது. நாட்டு மக்கள் உள்ளத்திலே அமைதியிருக்க வேண்டும். மாணவர்கள் உள்ளத்திலே அமைதியில்லை என்றால் அதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏன் வேலை நிறுத்தங்கள் ஆரம்பிக்கின்றன என்றுகூடச் சில சமயங்களிலே சொல்ல முடியாது. அப்படி இருக்கிறது நிலைமை. இதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் வேலை கொடுங்கள் இல்லாவிட்டால் வேலையில்லாத காலத்திற்கு நிவாரணம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். வேலையும் இல்லை, நிவாரணமும் இல்லை, பெண்டாட்டி கட்டக்கூடாது, 2 பிள்ளை குட்டிகள் பெறக்கூடாது என்று சொன்னால் இந்தச் சமுதாயம் நீடிக்க வேண்டுமா வேண்டாமா, நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு வாலிபர்கள் திருமணம் செய்துகொண்டு பிள்ளைகுட்டிகள் பெறக்கூடாது என்ற முறையிலே ஒரு அமைப்பு இருந்தால், அதைப்பற்றி நாம் என்ன என்று நினைத்துப் பார்க்க வேண்டும். பொறுமை, பொறுமை என்று சொன்னால் மட்டும் நடக்கப் போவதில்லை. எந்த அளவிற்கு வேலையைத் திரட்டி அவர்களுக்குப் பயனளிக்க முடியும் என்பதை ஆராய மாநில அளவிலே ஒரு குழுவை அமைத்து ஆராய்ச்சி செய்யலாம். இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்ற அளவிலே சொத்துகள் உடையவர்களிடம் ஏதாவது ஒரு செஸ் அன்எம்ப்ளாயிமெண்ட் செஸ் என்ற முறையிலே போட்டு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்ற அளவிலாவது வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையில் நிவாரணம் கொடுக்க, டோல் என்று சொல்வார்களே அந்த முறையிலே கொடுக்கவேண்டும்.

விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. இரண்டு வருடத்திலே 30 பள்ளிகள் உயர்ந்திருக்கின்றன. விலைவாசி ஏறியிருக்கிற காலத்திலே சலசலப்பு இருக்கத்தானே செய்யும்.



1970 மார்ச் 6] [திரு. வ. பாலசுப்பிரமணியன்]

ஆசிரியர்கள், ஆகட்டும் என்.ஜி.ஓ.-க்கள் ஆகட்டும் மற்றப் பகுதியினர் ஆகட்டும், உழைப்போர் உலகத்திலிருந்து, அது எடுகட்டப்படவேண்டுமென்ற கிளர்ச்சி வலுக்கும். எல்லா மாநிலங்களிலேயும் இந்த நிலைமை இருக்கிறது. தமிழ்நாட்டிலே என்.ஜி.ஓ.க்களுக்கு இருக்கக்கூடிய சம்பள நிலைகள் தாழ்ந்தவை. மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தாழ்ந்து இருக்கிறது. அவர்களுக்கு அது கூடுதலான வேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. பல லட்சக்கணக்கான மக்களை எவனோ ஒருவன் பின்னாலே உட்கார்ந்துகொண்டு தூண்டிவிட்டால் அவர்கள் வந்துவிடுவார்கள் என்று சொல்வதால் பிரச்சினையில் உண்மையான தன்மையை அதாவது மெரிட் ஆப் தி கேஸ் என்று சொல்வார்களே அதைப் பார்க்க மறுக்கிறோம் என்றுதான் சொல்லவேண்டும். இங்கே கடைநிலை ஊழியர்களுக்குச் சம்பளம் 50-1-60 என்று இருக்கிறது. ஆனால் வடக்கே இருக்கும் பிற்பட்ட பீகார் மாநிலத்திலே அவர்களுக்கு 75 முதல் 85 வரையில் கொடுக்கிறார்கள். நான் கேரளத்தைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. திரு. இளம்வழுதி கேட்டார்கள் என்பதால் சொல்கிறேன். அங்கே 70-3-115 என்று கொடுத்து வருகிறார்கள். அவர்கள் சொன்னதால் நான் சொல்லுகிறேன். இல்லையென்றால் நானும் சொல்லியிருக்கமாட்டேன். தங்களுக்கு வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கிறார்களே தவிர வேறு எந்த விதமான கோளாறும் இல்லை. பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இவர்கள் அவர்களிடம் கேட்டால் அவர்களும் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். கடைசியிலே வெளிநாட்டுக் கடன் வாங்கவேண்டுமென்று அவர்கள் நினைக்கிற அளவுக்கு இது ஒரு விஷச் சக்கரமாக நடித்துக்கொண்டிருக்கிறது. அதை வெட்டி எறிய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர்கள் விஷயத்திலே நான் வற்புறுத்திப் பேச விரும்புகிறேன். சம்பள உயர்வு என்பது மட்டுமல்ல, எய்டட் ஸ்கூல்ஸ் டீச்சர்ஸ் அதாவது உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. எந்த நேரத்திலே வேண்டுமென்றாலும் அவர்களை வேலையைவிட்டு வெளியே போகச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் ஐந்து வருடம் என்று வேலைபார்த்தவர்கள் கூட பாதிக்கப்படுகிறார்கள். வெளியேற்றப்பட்ட பிறகு டி.இ.ஓ. உத்திரவு போட்டாலும், சீப் எஜுகேஷனல் ஆபிஸர் உத்திரவு போட்டாலும் வேலை கிடைப்பதில்லை. இங்கே வந்தாலும் நடப்பது இல்லை. நானும் திரு என். வரதராஜனும் ஒரு ஊரிலே தேவரப் பன்பட்டி என்ற ஊரிலேயுள்ள சாலா பள்ளிக்கட்டடத்தைப் பார்த்தோம். மாத்தடியிலே வைத்து 7 வகுப்புகள் நடத்தப்படுகின்றன, நான்கூட Insoection book-ல் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். அவர்களுக்கு 8 மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லை. என்ன செய்யப்போகிறோம்? எத்தனை நாட்களுக்கு அப்புறம் பார்க்கலாம்

[திரு. ஏ. பாலசுப்பிரமணியன்] [1970 மார்ச் 6

அப்புறம் பார்க்கலாம் என்று சொல்வது? லா டிபார்ட்மெண்டும், கல்வி டிபார்ட்மெண்டும் மூன்று தினங்களுக்குள்ளாக ஒரு சட்டத்தை அவசரமாகப் போட்டு இந்த ஆசிரியருடைய உத்தியோகம் பாதிக்கப்படக்கூடாது என்றும், காலாகாலத்திலே சம்பளம் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற உத்திரவாதத்தைச் செய்யக்கூடாதா? நான் கேட்பது அதுதான். அதைவிட என்ன முக்கியமான வேலை லட்சக்கணக்கான ஆசியர்கள் இருக்கிறார்கள். முக்கியமான பல கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றை உரிய காலத்தில் அவசரமாகக் கவனிக்க வேண்டும். எய்டெட் ஸ்கூல் டீசர்சுக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பொருத்தவரை ஏழு வருஷம் ஆனாலும் வேலை கிடைப்பதில்லை, ஐந்து வருஷம் ஆனாலும் திரும்ப வேலை கிடைப்பதில்லை, மூன்று வருஷம் ஆனாலும் கிடைப்பதில்லை. எட்டு மாதம், 10 மாதம் என்று சம்பளம் கிடைக்காதவர்கள் எத்தனையோ பேர் அவ்வப்போது அதிகாரிகளிடம் முறையீடுகளைக் கொடுத்து கொண்டுதான் இருக்கிறார்கள். நிவாரணம் இல்லை. அரசினர் இதற்கு ஒரு சட்டப் பாதுகாப்பை எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்காக செய்து கொடுக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

கைத்தறி பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். காஞ்சிபுரத்தில் ஜரிகைத் தொழிற்சாலை ஆரம்பித்திருப்பது நல்ல முடிவுதான். ஆனால் இப்போது பட்டு கிடைக்கமாட்டேன் என்கிறது. மைசூரில் இருந்து நேரா வரவேண்டும். குஜராத்தில் இருந்து (சூரத்தில் இருந்து) ஜரிகை வரவேண்டும் என்ற நிலை இருந்தது. ஜரிகைத் தொழிற்சாலையை இங்கே ஆரம்பித்து உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டால் இங்கே ஜரிகை கிடைக்கும். ஆனால் பட்டை இப்போது மைசூர்க்காரன் அனுப்பமாட்டேன் என்கிறான். பட்டை அனுப்பக்கூடாது என்று அங்கே கிளர்ச்சி நடக்கிறது. முன்பு காஞ்சிபுரத்தில் பட்டு பாதுகாப்பு மாநாடு நடந்தது. அதிலே மறைந்த முதல்வர் அண்ணா அவர்களோடு நானும் கலந்து கொண்டேன். அங்கே நான் "வெகு வேகமாக மல்பரி பிளாண்டேஷனை உண்டாக்கி பட்டுப் பூச்சியை இங்கேயே உருவாக்க போதுமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்" என்று கூறினேன். நம்முடைய தேவைகளை சுய நிறைவாய் வைத்துக் கொண்டால்தான் தமிழகத்தில் பட்டு நெசவு தொழிலை வளர்க்க முடியும் என்று சொன்னேன். இன்று நான் தமிழன், நான் கன்னடக்காரன், நான் தெலுங்கன் என்று கூறிக்கொண்டு இந்தியாவின் ஒற்றுமைக்கே பாதகம் ஏற்பட்டு வருகிறது. காஞ்சிபுரத்திலுள்ள பட்டு நெசவாளருடைய பிரச்சினையைக் கவனிக்க வேண்டும். விசைத் தறியைப் புகுத்துவது பற்றி மறு பரிசீலனை செய்து கொஞ்ச காலத்திற்கு அதை ஒத்திப் போடுமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். பல லட்சக்கணக்கான குடும்பங்களைக் கவலையில் ஆழ்த்தக் கூடியதாக இருக்கிறது. இவ்வளவு நேரம் எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



1970 மார்ச் 6]

*திரு. பி. துரைராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். முதற்கண் இந்த அறிக்கை புரட்சிகரமான, புதுமையான, சமதர்மம் நிறைந்த அறிக்கை என்று சொன்னால் மன்றத்தில் இருக்கக்கூடிய அத்தனை அங்கத்தினர்களும் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். சுதந்திரம் கிடைத்த பிறகு 20 ஆண்டுக் காலம் நாட்டை ஆண்டதிலே, திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தவிர வேறு எந்த அரசும் இத்தகைய நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. இது ஏழைகளின் அரசு, நடுத்தர மக்களின் அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. கடந்த இருபது ஆண்டு காலமாக ஜனநாயக சோஷலிசம் பேசி வரக்கூடிய காங்கிரஸ்காரர்கள் ஏழை எளிய மக்களை வாட்டி, முதலாளிகளையும், வசதி உள்ளவர்களையும் தாஜா செய்து வந்தார்கள். ஆனால் இப்போது முற்றிலும் ஏழைகளுக்கு நன்மை ஏற்படக்கூடிய நிதிநிலை அறிக்கையை திராவிட முன்னேற்றக் கழக அரசு சமர்ப்பித்திருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஆசிரியப் பெருங்குடி மக்களுக்கும் என்.ஜி.ஓ.-க்களுக்கும் நன்மைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 20 ஆண்டுக் காலத்தில், நானும் ஆசிரியர் குழாத்தில் இருந்த நிலையில், சலுகைகளைக் கேட்ட நேரத்தில் எல்லாம் மறுக்கப்பட்டே வந்தன. ஆனால் இன்றையதினம் ஏழை, எளிய ஆசிரியப் பெருங்குடி மக்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் மருத்துவச் சலுகையையும், வீட்டு வாடகைப் படியையும் மற்றும் பல சலுகைகளையும் வழங்கியிருப்பதன் காரணமாக பத்துலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தமிழக அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதை யாவரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தமிழக அரசு மட்டுந்தான் காரணம் என்று பேசியவர்கள் யாரும் குறிப்பிடவில்லை. மத்திய அரசிலே உள்ளவர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறுத்தி வைத்ததன் காரணமாகத்தான் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அத்தனை பேரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இன்றையதினம் நிதி நிலை அறிக்கையில் என்னென்ன பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ 17,000 படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய சூழ்நிலை இந்த அறிக்கையில் காணப்படுகிறது. ஆசிரியப் பெருங்குடி மக்கள் வேலை இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமையைப் போக்க ஏறத்தாழ 2,720 ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற

ஆசிரியர்களுக்கும், 1,930 செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் 1,320 பி.டி. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்பு வசதிகளை இந்த நிதிநிலை அறிக்கையில் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். பழங்குடி மக்களுக்கும், அரிசனப் பெரு மக்களுக்கும் சேர்த்து 9 கோடி ரூபாயை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருப்பது கண்டு அவர்கள் மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த இருபது ஆண்டு காலத்தில் காங்கிரஸ்காரர்கள் என்ன நன்மைகளைச் செய்து வந்தார்கள் என்பதைப் பார்க்கும்போது இன்றைக்கும் தமிழக அரசு அரிசன மக்களுக்காக எந்த அளவுக்கு நிதி உதவி அளித்து வருகிறது என்பதை நாட்டிலுள்ள அரிசன மக்கள் அனைவரும் உணர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் நம்மைக் காப்பாற்றக் கூடிய சிறந்த அரசியல் கட்சி என்பதை ஒப்புக்கொண்டு இந்த ஆட்சிக்கு முழுக்க ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்ள முடியும். கடந்த ஆண்டு தமிழக அரசாங்கம் அரிசன மாணவர்களுக்கு அளிக்கக்கூடிய உபகாரச் சம்பளத்திற்காக ஏறத்தாழ 143 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. மத்திய அரசாங்கப் பங்கு கிடைத்திருப்பது ஐந்து லட்சம் ரூபாய்தான். மேலும் பத்தாண்டுகளுக்கு அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்ற சலுகைகளை நீடிக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் சட்டத்தை உருவாக்கினாலும் அவர்களுடைய உதவி மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அரிசன மக்களுக்காக செலவழிக்கப்பட்ட 539 லட்சத்தில் 25 லட்சந்தான் மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் இங்குள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேசும்போது குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன்; அரிசனப் பெருங்குடி மக்களுக்கு மத்திய அரசாங்கம் நல்ல முறையில் நிதிஉதவி செய்யவில்லை என்பதை அவர்கள் கண்டித்துப் பேசியதாகத் தெரியவில்லை. அடுத்தபடியாக இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக எல்லா அரிசன மக்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை அரிசன மக்கள் சார்பில் போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியைப் பற்றிய சில பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். சங்கரநயினார் கோயில் கோவில்பட்டி தாலுகா நீர்ப்பாசனத் திட்டமாக கீரி ஆறுத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றி ஆய்வு செய்து ஏதோ சூழ்ச்சியின் காரணமாக விட்டு விட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீரியாறு திட்டம் பற்றி கேரள அரசோடு கலந்து பேசி நிறைவேற்றித் தருவார்களானால் சங்கரன்கோவில் வட்டாரமும், கோவில்பட்டி வட்டாரமும் தஞ்சை மாவட்டமாக காட்சியளிக்கும். அதற்கு மிகுந்த உற்சாகத்தோடு பாடுபடு





வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வறட்சி நிதிக்காக நெல்லை மாவட்டத்திற்கு 16 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சங்கரன் கோயில் வட்டாரமானது மிகவும் பின்தங்கிய பகுதி. முழுக்க முழுக்க மழை பெய்யவில்லை. அதிலே ஆறு லட்சம் ரூபாயாவது அந்தப் பகுதிக்கு ஒதுக்கி அந்த மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையில் உள்ள மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், நில உச்சவரம்பை 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவிலிருந்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாகக் குறைக்கப் போகிறோம் என்று நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதுதான். சென்ற காலத்தில் 30 ஏக்கர் என்று கொண்டுவந்தபோது அதற்கு முன்னால் இந்தச் சட்டம் வரப்போகிறது, இந்தச் சட்டம் வரப்போகிறது என்று சொல்லி மிச்ச நிலமே இல்லாமல் சட்டத்தின் நோக்கம் நிறைவேறாமல் போனதுபோல் இதுவும் ஆகிவிடக் கூடாது. இந்தச் சட்டத்தைக்குறித்து இரண்டு தினங்களுக்கு முன்னர் முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதை பத்திரிகைகளில் பார்த்தேன். இதை முன் தேதியிலிருந்து அமல் நடத்தக் கூடிய முறையில் கொண்டு வந்து 15 ஏக்கர் என்று செய்வதினால் கிடைக்கக்கூடிய மிச்ச நிலத்தை கிராமப் பகுதிகளில் வயல்களில் பாரம்பரையாகப் பாடுபட்டு வரும் ஏழை எளிய விவசாயிகளுக்கு, கூலி விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு நிலம் கொடுத்தால் அவர்களுடைய வாழ்வும் முன்னேறும், நம் நாட்டில் உணவு உற்பத்தியும் அதிகரிக்கும். ஏற்கனவே உள்ள சட்டத்தில் கோவில்கள் மடங்கள், தேவாலயங்கள், ட்ரஸ்ட்கள் இவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிவிலக்குகள் அறவே நடக்கவேண்டுமென்றால் அதற்கான பணத்தை ஒதுக்கி அதைபாங்கில் போட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம். ஆனால் அவற்றிக்காக நிலத்தை ஒதுக்கி உழுபவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இடத்தரகர்களை ஏற்படுத்தி அவர்கள் சுரண்டக் கூடிய நிலையை ஏற்படுத்தக் கூடாது. ஆகவே, விவசாயத் தொதழிலாளர்கள் உழுபவர்களுக்கு அதிகப்படியான நிலம் கிடைக்கக்கூடிய வகையில், அதிகப்படியான மிச்ச நிலங்கள் கிடைக்கக் கூடிய வகையில் சட்டம் கொண்டு வரப்படவேண்டும். அடுத்தபடியாக, சேலம் உருக்காலை, சேதுசமுத்திரத் திட்டம் பற்றி பத்தாண்டுகளுக்கு மேலாக மத்திய அரசாங்கத்தினிடம் முறையிட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இதுவரையில் அவை நிறைவேற்றப்பட எந்த விதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால், படித்தவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதும் இல்லை.



## இணைப்பு

[216-ம் பக்கத்தில் 242-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) அணைக்கட்டுத் திட்டங்கள், அவற்றின் செலவு மதிப்பீடு ஆகியவை பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண்ணும், வட்டத்தின் பெயரும். | திட்டத்தின் பெயர். | செலவு மதிப்பீடு. (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சிவகெங்கை | 26 ஏரிகளுக்கு அதிகமாக நீர்வழங்க செய்களத்தூர் நீர் வழங்கு கால்வாய் பிரியுமிடத்தில் உப்பாறின் குறுக்கே அணைக் கட்டல். | 9·934 |
| 2. சிவகெங்கை | பல ஏரிகளுக்கு நீர் நிரப்ப, மானு மதுரை—விருதுநகர் இரயில் பாதையின் கீழே பரலியாற்றின் குறுக்கே அணைக் கட்டல். | 5·40 |
| 3. சிவகெங்கை | கடம்பங்குடி, வேளாங்குடி புதுக்குளம் கல்குளம் ஏரிகளில் நீர்நிரப்ப, நட்டாற்றின் குறுக்கே அணைக் கட்டல். | 2·65 |
| 4. சிவகெங்கை | பில்லூர் அணைக்கட்டிலிருந்து வலப் பக்கக் கால்வாய் திறத்தல். | 2·40 |
| 5. முதுகுளத்தூர் | கீழ்த்தூவல் ஏரிக்கும் மற்ற 33 ஏரிகளுக்கும் நீர் நிரப்ப பரலியாற்றின் குறுக்கே அணைக்கட்டல். | 11 50 |
| 6. முதுகுளத்தூர் | கள்ளிகுளம், தாரைக்குடி போன்ற ஏரிகளுக்கு நீர் நிரப்ப இருதுமால் நதியின் குறுக்கே அணைக் கட்டல். | 9·50 |
| 7. முதுகுளத்தூர் | மேளக்கொடுமலூர் ஏரிக்கு நீர் நிரப்ப பரலியாற்றின் குறுக்கே அணைக் கட்டல் | 7·00 |
| 8. திருப்பத்தூர் | அரிசிக் கோயில் கிராமத்தின் அருகே சுண்ணம் பிறப்பு ஏரியின் உபரி நீர்க்கால்வாயின் குறுக்கே அணைக் கட்டல். | 1·16 |
| 9. திருப்பத்தூர் | மாரிசிக்கட்டி போன்ற ஏரிகளுக்கு நீர் நிரப்ப, எருமைப்பட்டி ஏரியின் குறுக்கே அணைக் கட்டல். | 0·592 |
| 10. திருவாடானை | மன்னனூர் எனவயல் போன்ற ஏரிகட்கு நீர் நிரப்ப, திருப்பக்கொடையான் குறுக்கே அணைக் கட்டல். | 1·98 |

இத் திட்டங்களைத்தவிர பிற சிறு திட்டங்களும் ஆய்வில் உள்ளன.

அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகள் எடுத்து அவ்வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்த மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அடுத்தபடியாக, திருநெல்வேலியைச் சேர்ந்த கோவில்பட்டி, சங்கரன்கோயில் தாலுகாக்கள், ராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சில பகுதிகள் இவை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி அப்பகுதிகளை பஞ்சப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யவேண்டும். அப்படி பிரகடனம் செய்து அவ்விடங்களில் பாசன வசதிகளைச் செய்து கொடுக்கவும், பல தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் வழி வகைகள் செய்யப்படவேண்டும். தொழில்கள் பல தேங்கிக் கிடப்பதற்கு உற்பத்திப் பொருள்கள் விற்கப்படுவதில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. இன்று விவசாயிகளிடம் வாங்கும் சக்தி மிகக்குறைவாக இருக்கிறது. அவர்களது விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. உதாரணமாக மிளகாய்வத்தலை எடுத்துக்கொண்டால் ரூபாய் 1,100 ஆக இருந்தது இப்போது ரூபாய் 400-க்கு வந்திருக்கிறது. விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்கிற காலத்தில் அது குறைவான விலைக்கு வாங்கப்படுகிறது. பிறகு பெரும் வியாபாரிகள் அதை அதிக விலைக்கு விற்று லாபம் பெறுகிறார்கள். ஆக விவசாயிகளுக்கு தங்கள் விளை பொருள்களுக்கு நியாய விலை கிடைக்காத காரணத்தினால், அவர்கள் தாங்கள் வாங்கியுள்ள கடன்களை திரும்பக் கட்டமுடியாது கஷ்டப்படுகிறார்கள். தாங்கள் வாங்கிய கடன்களுக்கு பல ஆண்டுகளாக வட்டி கொடுத்தும்கூட இன்று அவர்கள் நிலங்கள் எல்லாம் ஜப்தி செய்யப்பட்டு அவர்கள் தங்கள் நிலங்களை இழக்கக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, கடன் நிவாரணச் சட்டத்தைக்கொண்டு வந்து அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க முயற்சி எடுத்தால்தான் நாம் நம் பசுமைப் புரட்சியை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். நில வள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிறோம். ஆனால் முன் கடனைத் தீர்க்க கடன் கொடுப்பதில்லை. ஆகவே, முன் கடன்கள் அடமானம் ஒத்தி போன்றவை இருந்தால் அவைகளைத் தீர்க்கவும் கடன் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க ஒரு கோடி ரூபாய் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இன்னும் அதிக நிதி ஒதுக்கப்படவேண்டும். இன்று பல கிராமங்களில் சாலை வசதிகள் கிடையாது. குடி தண்ணீர் வசதிகள் கிடையாது. ஆகவே, நாம் அதிகப்படியாக நிதி ஒதுக்கி இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக ரோடு வசதியில்லாத கிராமங்கள் இல்லை என்ற முறையில் இணைப்புச் சாலைகளை அமைத்து சாலை வசதிகளைப் பெருக்குவதோடு குடி நீர் பிரச்சினையையும் தீர்க்கவேண்டும். இப்படி கிராமங்களுக்கு சாலை வசதிகள் செய்து கொடுப்பதால் ஓரளவு அங்குள்ள வேலையில்லாத்





திண்டாட்டமும் போகும். இன்று ஹரிஜனங்கள் வசிக்கக்கூடிய கிராமங்கள் பலவற்றில் சாலைவசதிகளே இல்லை. [illegible] தண்ணீர் வசதியும் இல்லை. ஆகவே அக்குறைகளைப் போக்கி, ஐந்து ஆண்டுகளுக்குள் சாலைவசதியில்லாத, தண்ணீர் வசதியில்லாத ஹரிஜன கிராமங்களே இல்லை என்ற நிலையை அடையச் செய்யவேண்டும். அடுத்தபடியாக, போக்குவரத்து தொழிலாளர்களின் சம்பள போர்ட் அறிக்கை [illegible] அவர்கள் 1969 ஏப்ரலில் இருந்து கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் அதன்படி எந்த முதலாளியும் கொடுக்கவில்லையென்று பஸ் தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே பஸ் முதலாளிகள் தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லோரையும் கூப்பிட்டு வைத்துப்பேசி அந்த சம்பள போர்ட் சிபார்சின் அடிப்படையில் அந்தத் தொழிலாளர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பே அமைக்கப்பட்ட அந்த போர்டின் சிபார்சை இப்போதுள்ள சூழ்நிலையில் பார்த்தால் அப்போதிருந்ததைவிட இப்போது விலைவாசிகள் ஏறியுள்ளன. ஆகவே, அந்த போர்ட் சிபார்சுகளை உடனடியாக அமல் நடத்த தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விவசாயக் கூலி நிர்ணயச் சட்டம் தஞ்சையில் மட்டும்தான் அமல் நடத்தப்படுகிறது. அதுவும் அங்குள்ள ஒரு சில தாலுகாக்களுக்கு மட்டும்தான். புன்செய் நிலங்களாக இருந்தால் நிலைமையில் மாறுபாடுகள் இருக்கலாம். ஆகவே நான் கேட்டுக்கொள்வது, இந்தக் கூலி நிர்ணயச் சட்டத்தை மாநிலம் முழுவதிலுமுள்ள நன்செய்ப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும். சாகுபடியாளர் பதிவு மசோதா இன்று மூன்று ஜில்லாக்களில் மட்டுமே அமலில் இருக்கிறது. இதைப் பயன்படுத்தி வேறு ஜில்லாக்களில் உள்ள நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களில் உள்ள விவசாயிகளை வெளியேற்றி வருகிறார்கள். எங்கள் மாவட்டத்தில் வேளார்களம் என்ற கிராமத்தில் அங்குள்ள ஒரு இனாம்காரர் தன் நிலத்திலிருந்து பலவந்தமாக ஆட்களை வைத்துக் கொண்டு விவசாயிகளை வெளியேற்றக் கூடிய விதத்தில் தொந்தரவு கொடுத்து வருகிறார்கள். ஆகவே இந்த பதிவு மசோதா எல்லாயிடங்களுக்கும் விஸ்தரிப்பு செய்யப்படவேண்டும். அப்போது யார் யார் எந்தெந்த நிலங்களில் பயிர் செய்து வருகிறார்கள் என்பது தெரிய வரும். (மணியடிக்கப்பட்டது) இப்போது என்.ஜி.ஓ-க்களுக்கு பத்து ரூபாய் நிவாரணமாக அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இடைக்கால நிவாரணமாக ரூபாய் 30 கேட்பது நியாயமே, அதைக் கொடுக்கவேண்டும். கடைநிலை ஊழியர்களுக்கு தினப்படி ரூபாய் $1\frac{1}{4}$ தான் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு கொடுக்கப்படும் ஃபிக்ஸட் ட்ராவலிங் அலவன்ஸும் குறைவு. ஆகவே அவைகளை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(a) Yes.

(b) The following statement shows the anicut schemes with estimated amount.

| Serial number and name of taluk. | | Name of Scheme. | Estimated amount. RUPEES IN LAKHS |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1. | Sivaganga | Anicut Across Upper at the off-take of Seikalathur supply channel to augment supply to 26 tanks. | 9·934 |
| 2. | Do. | Anicut across Paralaiar below Manamadurai, Virudhunagar Railway line to feed a series of tanks. | 5·40 |
| 3. | Do. | Anicut across Nattar to feed Kadambankudi, Velangudi, Pudukulam and Kalkulam tanks. | 2·65 |
| 4. | Do. | Opening a Right side channel from Pillur Anicut. | 2·40 |
| 5. | Mudukulathur | Anicut across Paralaiar to feed Keelathooval and other 33 tanks. | 11·50 |
| 6. | Do. | Anicut across Gridamal river to feed Kallikulam, Tharaikudi, etc., tanks. | 9·50 |
| 7. | Do. | Anicut across Paralaiar to feed Melakodumalur tank. | 7·00 |
| 8. | Tirupathur | Anicut Across Sunnambirappu tank surplus course near Arichikoil village. | 1·16 |
| 9. | Do. | Anicut across Erumaipatti tank surplus course to feed Marichikatti, etc. tanks. | 0·592 |
| 10. | Tiruvadanai | Anicut across Thiruppakkottai surplus course to feed Mallanur Enavayal, etc. tanks. | 1·98 |

In addition to these schemes, there are also other small schemes which are under investigation.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## சனிக்கிழமை, 1970 மார்ச் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### வேப்பூர் பஞ்சாயத்து ஒன்றிய ஆசிரியர்கள்

* குறுகிய கால வினா எண் 1—திரு. எ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) வேப்பூர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்கள் அந்த யூனியனில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு, கருத்தடை—அறுவை சிகிச்சைக்கு ஆட்களைக் கொண்டு வரும் வேலையை செய்யாவிடில், அவர்களது வருடாந்தர உயர்வு நிறுத்தப்படும் என்று தாக்கீது அனுப்பியுள்ளாரா?

(இ) ஆம் எனில், ஆசிரியர்களை இதுபோன்ற நிர்பந்தத்திற்கு ஆளாகாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம்.

(இ) வேப்பூர் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் ஆசிரியர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், ஆசிரியர் ஒவ்வொருவரும் கருத்தடை—அறுவை சிகிச்சைக்கு ஒரு நபரையாகிலும் கொண்டு வரத் தவறினால் அவருடைய வருடாந்திர ஊதிய உயர்வு நிறுத்தப்படும் என்று தன்னுடைய கவனக் குறைவினால் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆசிரியர்களுடைய வருடாந்திர ஊதிய உயர்வையோ அல்லது ஏன் வருடாந்திர உயர்வை நிறுத்தக்கூடாதென்ற நடவடிக்கையோ எடுக்கவில்லை. அந்த சுற்றறிக்கை இப்பொழுது திரும்பப்பெறப்பட்டுள்ளது.

திரு. எ. பாலசுப்ரமணியன்: தலைவர் அவர்களே, சுற்றறிக்கையில் மட்டும், கருத்தடை—அறுவை சிகிச்சைக்கு நபரைக் கொண்டு வரத் தவறிய ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு ஊதிய உயர்வு நிறுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி அமைச்சரவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று கூறிய பதிலிலிருந்து ஏதோ ஓரிடத்தில் நடப்ப

ளர்களுக்குரிய சம்பள விகிதத்திற்கும் அரசு உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றின் கீழ் இதைப்போன்ற பதவிகளுக்குரிய சம்பள விகிதத்திற்கும் வேறுபாடு எதுவும் இல்லையாதலின் மற்ற தரத்தினரின் சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்படவில்லை.

DR. H. V. HANDE : For a long time, the employees of this department—Local Library Authority—have been agitating for the implementation of the pay scales and certain advantages given by the First Pay Commission. Even the previous Government had casually stated that they would accept the recommendations of that Pay Commission. But, so far, the recommendations have not been implemented. In view of this, in view of the fact that the Pay Commission has not categorically stated or given the assurance that their grievances would be looked into, in view of the fact that there are adequate funds through the collection of cess—this particular Department has collected cess and has its own funds in view of all these factors, may I know whether this Government will kindly implement the recommendations of the First Pay Commission so that people will have the confidence that the recommendations of the second Pay Commission will not go the same way and will not have the same fate as those of the first Pay Commission?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, முதல் சம்பளக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அந்தச் சம்பள விகிதத்தின் அடிப்படையைப் பார்த்து அளிக்கப்பட்டதாகத்தான் எனக்கு குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அளிக்கப்படாத தன்மை இருந்து, சுட்டிக்காட்டப்பட்டால் அதனைக் கவனிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். நூலகக் குழுவைப் பொறுத்த வரையில், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் தனியாக மாற்றியமைப்பதற்கில்லை. மாநிலம் முழுவதும் இருக்கும் எல்லா மாவட்டங்களிலும் உள்ள நிலைமைகளையும் அனுசரிக்கவேண்டியிருக்கிறது. ஓரிடத்தில் சம்பளத்தை அங்கேயிருக்கும் பண வசதிக்கேற்ப ஏற்றிவிடுவோமானால் மற்ற இடங்களிலும் ஏற்ற வேண்டும் என்று கேட்பது நியாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக அமையும். நூலகக்குழுவினிடம் அதற்குரிய அளவுக்கு நிதி வசதி இல்லை. நூலகக் குழுக்களினுடைய நிதி வசதியைப் பெருக்குவதில் கவனம் செலுத்திவருகிறோம். எல்லா மாவட்டங்களின் நிலைமைகளையும் பற்றி கவனம் செலுத்த வேண்டி வரும்.

இரண்டாவது சம்பளக் கமிஷனுடைய சிபார்சுகள் வந்தபின், அதன் அடிப்படையில்தான் சம்பள விகிதங்களை மாற்றியமைக்கலாம் என்றாலும் முதல் கிரேடில் உள்ள நூலகக் காப்பாளர்களுக்கு மட்டும் 1–6–1969-ம் தேதியிலிருந்து சம்பள விகிதம் சிறிது மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 140-லிருந்து ரூ. 280 வரை என்று இருந்தது ரூ. 140-இலிருந்து ரூ. 350 என்று இப்போதைக்கு மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.



THIRU K. VINAYAKAM : Sir, is there any disparity between the scales of pay of the employees of the Local Library Authority in the State and those of the employees of other local bodies such as municipalities and Corporation, and the other Government servants in the State? If so, may I know whether the question of revision of their pay is being or has been referred to the Second Pay Commission?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்றங்கள், அரசு ஆகியவைகளில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு சம்பள வேறுபாடு எதுவும் இல்லை என்று முதலில் குறிப்பிட்டேன். சம்பள வேறுபாடு எதும் இல்லை. இது சம்பளக் கமிஷனுக்கு ரெஃபர் பண்ணுகிற தன்மை அல்ல. இவர்கள் என்.ஜி.ஓ.-க்கள் என்கிற 'காடிகரி'யில் வருபவர்கள் அல்லர். இதற்குச் சமமாக இருக்கும் பணியாளர்களுக்கு எவ்வளவு சம்பள விகிதங்களைச் சம்பளக் கமிஷன் நிர்ணயிக்கிறதோ அதனுடைய அடிப்படையில் நாம் இதை மாற்றியமைக்க வேண்டிவரும். இது பின்னல் தனியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### கல்லூரி ஆசிரியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி

* 250 வினு—*திரு. ஆர். கருப்பையா :* மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தற்போது கல்லூரி ஆசிரியர்களிடத்திலிருந்து எந்த விகிதத்தில் (Provident Fund) நலநிதி பிடிக்கப்படுகின்றது ?

(இ) இதில் ஏதாவது மாற்றம் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* (அ) 6 %.

(இ) இல்லை.

*திரு. ஆர். கருப்பையா :* தலைவரவர்களே, அரசினர் கல்லூரிகளில் வேலை பார்ப்பவர்களுக்கும், தனியார் கல்லூரிகளில் வேலை பார்ப்பவர்களுக்கும் ஒரே சீரான அடிப்படையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவார்களா ? புதிதாக, சம்பளத்தை நிர்ணயிக்கும் அந்த முறையிலே சீர் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, பிராவிடெண்ட் ஃபண்ட் என்பது தனியார் பள்ளிக்கூடத்தைப் பொறுத்ததாக அமையும். 6 சதவிகிதம் ஆசிரியர்கள் கட்ட வேண்டும், சரிபாதியை நிர்வாகம் கட்ட வேண்டும். இலவசக் கல்வி கொண்டு வந்ததற்குப் பிறகு அந்தப் பாதிக்கு அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொண்டு, இறுதியில் தருகிறது. கடைசியிலே நிர்வாகம் தருவது ஆசிரியர்கள் கட்டுவது இரண்டையும் சேர்த்து,

மூன்றிலே ஒரு பகுதியை அரசாங்கம், அவர்கள் ஓய்வு பெறும் போது அல்லது அந்தத் தொகையை மீண்டும் பெற்றுக்கொள்ளும் பொழுது தருகின்ற நிலையில் இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், தனியார் கல்லூரிகளில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்களிடத்திலே பிடித்தம் செய்யக்கூடிய இந்த பிராவிடெண்ட் ஃபண்ட் பணத்தை பாங்கிலே போடுவது இல்லை, அவர்களுக்குச் சரியான கணக்கில் காண்பிக்கப்படுவதில்லை என்ற அளவுக்கு புகார் வந்துள்ளதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு திட்டவட்டமாக ஏதாவது உத்தரவு பிறப்பித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்பொழுது அதுபற்றி புகார் எதுவும் வந்ததாகக் குறிப்புகள் இல்லை. பாங்கிலே கட்ட வேண்டுமென்று விதியிருக்கிறது. அதை மீறினால் அதற்காக கல்வித்துறையைப் பொறுத்தவரையிலேயுள்ள சட்டதிட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்களின் பிராவிடெண்ட் ஃபண்ட் நிதி பிடித்தத்திற்கு, அவர்களின் சம்பளம் அடிப்படையாக இருக்கிறது. இந்தச் சம்பளம் மற்ற ராஜ்யங்களில் இருப்பதைவிட இங்கே குறைவாக இருக்கிறது என்ற புகார் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, ஆசிரியர்கள் ஓய்வு பெற்றபின் அவர்களுக்குத் தரப்படும் பிராவிடெண்ட் ஃபண்ட் பணத்தை ஒரே தவணையில் தராமல், இரண்டு, மூன்று தவணைகளில் தருவதாக அவர்களிடமிருந்து புகார்கள் எதுவும் வந்துள்ளனவா? ஆமெனில், அத்தகைய நிலையை மாற்றி, ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு, பிராவிடெண்ட் ஃபண்ட் நிதியை ஒரே தவணையில் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றி புகார்கள் வந்ததாக இப்பொழுது என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றிக் கவனிக்கலாம்.

## *E.S.I. HOSPITAL AT AYANAVARAM*

*251 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) Whether it is proposed to convert the E. S. I. Hospital at Ayanavaram into a Teaching Institution; and

(*b*) if so, the details thereof?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) முதுநிலைப் பயிற்சி மருத்துவர்களுக்கு (Senior House Surgeons) பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஒன்று ஆய்வில் உள்ளது.

(இ) பல்கலைக்கழகம் நியமித்த சிறப்புக் குழுவினர் புலனாய்வு செய்து சில நிபந்தனைகளை விதித்துள்ளனர். இவை குறித்து மருத்துவக் கல்வி இயக்குநரையும், சுகாதாரப்பணிகள்—குடும்ப நலத்திட்ட இயக்குநரையும் கலந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : This is one of the finest hospitals in the City and it has got equipment and other facilities. In view of this, what is the difficulty of the Government in seeing that students are immediately posted there? Students are suffering from hunger for want of opportunities. Will the Government give us an assurance that it will be done immediately and also will the Hon. Minister tell us what the differences are between the University specifications and the amenities available in the Hospital?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, யூனிவர்சிட்டி ஒரு குழு அமைத்து ஆராயும்படி செய்தார்கள். அவர்களின் சிபாரிசின் அடிப்படையில் பல்கலைக்கழகம் சில நிபந்தனைகள் விதித்திருக்கிறது. அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் செய்யப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

The University has recognised the E.S.I. Hospital as a training centre to train candidates for one year of Senior House Surgeoncy subject to the fulfilment of the following conditions—

(i) that only medical officers with post-graduate qualifications and a minimum of four years of experience subsequent to getting the post-graduate qualification will be recognised to train the candidates for one year of Senior House Surgeoncy in the Hospital;

(ii) such candidates should be trained in all the branches, viz., Medicine, Surgery, Midwifery, Ophthalmology, Ear, Nose and Throat, Paediatrics, Orthopaedics. In addition, they should also be trained in the para-medical subjects like Pathology, Bio-chemistry and Microbiology;

(iii) that the number of candidates to be trained for house surgeoncy should not exceed the following :—

| | |
|---|---|
| Medical 4 units | 8 |
| Surgical 4 units | 8 |
| Midwifery 3 units | 6 |
| Ophthalmology 1 unit | 1 |
| Ear, Nose and Throat 1 unit | 1 |
| Orthopaedics 1 unit | 1 |
| Paediatrics 3 units | 3 |
| | 28 |

(iv) that persons who have worked for at least one year in a primary Health Centre or a similar institution and posted as Junior Registrars in the Employees State Insurance Hospital be treated on a par with the Senior House Surgeons, and on completion of one year of such work, they be deemed eligible for undergoing the post-graduate studies in recognised teaching institution;

(v) that not more than two years of service put in the hospital by the heads of units will be counted for appointment to teaching posts;

(vi) that continued recognition of the hospital for training House Surgeons will depend on the staff appointed which should be approved by the University. The Hospital should forward to the University half-yearly on 15th January and 1st August each year returns of staff in the pro forma prescribed and furnish such other returns as may be called for by the University from time to time;

(vii) that quarters should be provided for the House Surgeons posted to work in the hospital.

இந்த நிபந்தனைகளெல்லாம் இப்பொழுது ஆராயப்பட்டு வருகின்றன. விரைவிலே அதுபற்றி முடிவு செய்யப்படும்.

*மாணவர்களுக்கு இலவச மருந்துவ சோதனை*

* 252 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி, சுகாதாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கு வருடா வருடம் இலவச, கட்டாய மருத்துவ சோதனை கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மாணவர்களுக்கு ஏற்கெனவே ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை 'மெடிகல் செக்கப்' செய்து எந்தெந்த வியாதிகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, அதன்மீது சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது மீண்டும் இல்லையென்றாலும், அதுபோன்ற அடிப்படையிலே அவர்களைச் செக் செய்து போதுமான மருத்துவ சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கட்டாயமாக மருத்துவ ஆய்வு நடத்தப்பட வேண்டுமென்ற நிலை இல்லை. Medical aid scheme on a voluntary basis என்ற முறையில் 3 மாவட்டங்களில், ஈரோடு, நாமக்கல், மதுரை ஆகிய இடங்களில் பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டு, Mobile Medical Unit மூலமாக இந்த ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த மூன்று





டிம் திட்டம் சரியாக நடைபெற்றால் மற்ற எல்லா மாவட்டங்களிலும் அந்தத் திட்டத்தைப் புகுத்த அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

கண் நோயைப்பற்றி மதுரையிலே இருக்கிற டாக்டர் வெங்கடசாமி அவர்கள் ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு இரண்டு மூன்று வார காலம் அளிக்கப்படும் பயிற்சியால் அவர்கள் மாணவர்களைச் சோதித்து மாணவர்களுக்கு கண் பழுதுபட்டு இருக்கிறத்தா என்று ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு மதுரை நகரைப் பொறுத்தவரையில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது வெற்றி பெற்றால் பிறகு பிற இடங்களிலும் பரப்பலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

*Remains of Pallava Age.*

* 253 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the remains of the Pallava Civilisation were excavated at Vasavasamudram in Chingleput District at the Palar river bed; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. ரோம் நாட்டு புதைப்பொருள்கள் சில தோண்டி எடுக்கப்பட்டன.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவரவர்களே, இந்த பல்லவர் காலத்து சிலைகளிலே ஐந்தில் ஒரு பாகம் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? பொதுமக்களால் கண்டுபிடிக்கக்கூடிய அந்தச் சிலைகளில் ஆராய்ச்சியாளர்கள் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுவதாகப் பத்திரிகையில் செய்தி வருகிறது, அப்படி வரக்கூடிய சிலைகள் கடைசி நேரத்திலே பித்தளை சிலைகளாக மாறி இருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி மாறியதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக்கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனியாகக் கேள்விபோட்டால் அதுபற்றி விவரங்கள் சேகரித்துத் தர முடியும். அந்த இடத்தில் சிலைகள் அகப்படவில்லை. பல்லவ காலத்துச் சின்னம் ஒன்றும் அகப்படவில்லை. பாலாற்றினுடைய முகத்துவாரப் பகுதியில், வசவசமுத்திரம் என்ற இடத்திலே தோண்டிக்கொண்டிருக்கும்பொழுது மட்பாண்டங்களும், மற்ற சில பொருள்களும் கிடைக்கப்பெற்றன. அதுபற்றி ஆர்.டி.ஓ.-வுக்குச் சொல்லப்பட்டு, பிறகு தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குத் தகவல் கொடுத்து, அவர்கள் சென்று பார்த்தபொழுது ரோம் நாட்டைச் சேர்ந்த ஜாடித்துண்டுகளும், டெரிகோஸ் பைப்ஸ் மற்றும் ரோம் நாட்டைச் சேர்ந்த மட்பாண்டங்கள்

என்றும் கிடைக்கப்பெற்றன. அதிலிருந்து பல்லவர்கள் ஆண்ட காலத்தில் ரோம் நாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். அந்தப் பொருள்களை வைத்துத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேலும் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த பொழுது கூட இதைப் பல முறை சொல்லியிருக்கிறார். பல்லவ நாகரிகப் பொருள்கள், சின்னங்கள் எல்லாம், காஞ்சிபுரத்தில் இருந்து பாலாறு ஓடுகிற பகுதியெல்லாம் எத்தனையோ புதைப் பொருள்கள் இருப்பதாகவும், இதையெல்லாம் நாம் தோண்டிப் பார்த்து, நம்முடைய பழைய சிறப்புகளை கண்டுபிடிக்கவேண்டும் என்று சொன்னதின் விளைவாக, இப்பொழுது ஓரிரண்டு பொருள்கள் வசவ சமுத்திரத்தில் கிடைத்திருக்கின்றன. எப்படி மொகஞ்சதாரா, ஹரப்பா முதலிய சின்னங்களைத் தோண்டிப் பார்த்து திராவிடர்களுடைய நாகரிகத்தைக் கண்டு பிடித்தார்களோ, அம்மாதிரி இங்கும் கிடைக்கக்கூடும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நம்முடைய ஆர்கியாலாஜிகல் டிபார்ட்மெண்டு மூலமாக, பால்டிமார் போன்ற நிபுணர்களின் உதவியையும், அறிவையும் கொண்டு, இதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு நமது அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் பல்லவ மேடு என்ற பகுதியிலே தொல் பொருள் ஆராய்ச்சித்துறையினர் ஆராய்ச்சி நடத்திவருகின்றனர். வசவ சமுத்திரத்தில் சில பொருள்கள் கிடைக்கின்றன. பாலாறு முகத்துவார பகுதி பல்லவர் காலத்தில் ஒரு துறைமுகப்பட்டணமாக இருந்திருக்கக்கூடும் என்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சியின் விளைவாக. பக்கத்தில் வயலூரில் ஒரு கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 8-வது நூற்றாண்டு பல்லவ காலத்தைப்பற்றிய குறிப்புகள் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவை வெளி நாட்டு வாணிபங்களைப் பற்றியவை. அதைப்பற்றி சில கல்வெட்டுகள் இருக்கின்றன. அதை வைத்து பார்க்கிறபொழுது, வசவசமுத்திரம் ஒரு காலத்தில் துறைமுகப்பட்டணமாக இருந்திருக்கக்கூடும். தமிழக தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் பாலாறுப் பகுதிகளில் இதைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். இந்திய ஆராய்ச்சித் துறையினரும் காஞ்சிபுரத்தில் ஆராய்ந்து கொண்டு வருகின்றனர்.

### மதுரையில் டிராக்டர்களுக்கான பணிக்களரி

***254 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாய உற்பத்திக்கு உதவியான உழுகருவிகள், டிராக்டர்கள், ஜீப்கள் இதரவைகளை பழுது பார்க்கும் திறமையான



தொழிற்சாலையாக மதுரையில் உள்ள அரசின் தொழிற்சாலைகள் (வசந்தநகர் சமீபம், கலெக்டர் அலுவலகம்) இரண்டையும் விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து :** இந்த அலுவலகங்களை விரிவுபடுத்துவதற்கு எந்தச் செயற்குறிப்பும் இல்லை. எனினும், மதுரையில் டிராக்டர் தயாரிக்கும் பணிக்களரி ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொடக்க ஏற்பாடுகள் முடிவுற்று, இப்பணிக்களரி விரைவில் செயல்படும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதுரை நகரத்தில் இரண்டு அரசினர் தொழில் பேட்டைகள் இருந்தும், நமது பஞ்சாயத்து யூனியனில் சில டிராக்டர்கள், மருந்து அடிக்கும் கருவிகள் பழுது அடைந்தால், அவைகளைச் சரி செய்வதற்குத் தனியார் தொழிற்சாலைகளுக்குக் கொண்டுபோகவேண்டியுள்ளது. இதனால் வீண் கால தாமதமும், பண விரயமும் ஆகிறது. இந்தத் தொழிற்சாலைகளை துரிதமாக நல்ல முறையில் இயங்கும்படி அபிவிருத்தி செய்து விஸ்தரித்தால், பண விரயமும் குறையும், யூனியன் வேலைகளுக்கும், விவசாய வேலைகளுக்கும் உதவியாக இருக்கும். துரிதமாக இதை, நல்ல தொழிற்சாலையாக மாற்றுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏறத்தாழ எல்லா வேலைகளும் முடிவுற்று, விரைவிலே துவக்க விழா நடைபெறும்.

DR. H. V. HANDE : Sir, while we are glad that there is a factory there, will the Hon. Minister be pleased to tell the number of persons employed in this factory and the number of persons likely to be employed? Because of the increased demand for tractors, may I know whether this Government have also taken into consideration the fact that the production of tractors in Tamil Nadu is very imperative to solve the employment problem of thousands of unemployed persons ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கேள்வி இப்பொழுது இருக்கிற பணிக்களரிகளை விஸ்தரிக்க முடியுமா என்பது குறித்துதான். அதில் எத்தனை பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்பது பற்றிய குறிப்பு எதுவும் இப்பொழுது இங்கு இல்லை. தனிக்கேள்வி போட்டால், உரிய பதில் தரமுடியும்.

### *Fertiliser Inspectors.*

*255. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(*a*) whether the Government have any proposal to train block extension officers as fertiliser inspectors; and

(*b*) if so, the details thereof?

தாக அமைச்சரவர்கள் கருதுவதாகத் தோன்றுகிறது. துர்பாக்கிய வசமாக இதுமாதிரி பல இடங்களில் நடந்துகொண்டு இருக்கின்றன என்று எனக்கு தகவல் உண்டு. ஊதிய உயர்வுத் தொகை, விழா முன் பணம், ஓய்வு காலச் சம்பளம், பிராவிடண்ட் பண்டிலிருந்து கடன் இவைகளையெல்லாம் கூடக் கொடுக்க மறுப்பதன் மூலம் நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்து கட்டாயப்படுத்துகிறார்கள். ஆசிரியர்களை இந்த வேலையில் நிர்ப்பந்தப்படுத்துவதற்கு இடமே இருக்கக்கூடாது. மாணவர்களுடைய மனோதத்துவத்தை புரிந்துகொண்டு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. ஏ. பாலசுப்ரமணியன் : கேள்வியைத்தான் போடுகிறேன். பிள்ளைகளின் மனோதத்துவத்தை அறிந்து, பலவீனங்களை புரிந்து, அவர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு இருப்பதால், அவர்களுக்கு பள்ளிக்கூட வேலை தவிர எக் காரணத்தைக் கொண்டும் வேறு வேலை கொடுக்கக் கூடாது என்று அரசு தெளிவுபடுத்துமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த அரசு ஊழியர்கள், மற்றும் மருத்துவ மனை ஊழியர்கள், ஏனைய ஊராட்சி உதவித் தொகை பெறும் பள்ளியாசிரியர்கள் அனைவருக்கும் அவர்களுடைய வேலை நேரம் தவிர்த்து மற்ற நேரத்தில் கருத்தடை—அறுவை சிகிச்சைக்கு ஆட்கள் கொண்டுவருவதற்காக நபர் ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் மதிப்பு ஊதியம் தர அரசு அனுமதித்திருக்கிறது. ஆனால், இப்படி அனுமதித்திருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு ஆசிரியர்களையோ ஏனைய ஊழியர்களையோ கட்டாயப்படுத்தக் கூடாது என்பதுதான் அரசு கூறியிருக்கிற தன்மையாகும். ஆனால், குறிப்பிட்ட மேற்படி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், பத்து ரூபாய் மதிப்பு ஊதியம் பெறலாம் என்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார். மேலும் அதிக மதிப்பு ஊதியம் பெறுவதற்காக அதிகமான ஆட்களைக் கொண்டுவர மற்றொரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார். தங்களுடைய ஊராட்சி ஒன்றியத்தில் அதிகமான ஆட்களை இதன் மூலம் பயனடையச் செய்ய வேண்டும் என்ற ஆர்வ மிகுதி காரணமாக, அவசரப்பட்டு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்றாலும், அதன் மூலம் எந்த ஆசிரியருக்கும் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் தம்முடைய தவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்றும் அவருக்கு அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுபோல் பல்வேறு இடங்களில் நடப்பதாக புகார் வருவதாகச் சொன்னார்கள். பல நேரங்களில் புகார்களுக்கு ஆதாரம் இல்லாமலும் இருக்கலாம். என்றாலும், பொதுவாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி, யாரையும் கட்டாயப்படுத்தக்கூடாது என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்துவதற்கும் நாம் தயங்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை இலட்சம் பேர்களுக்கு கருத்தடை—அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்று கோட்டா ஒதுக்குவதன் காரணமாக கீழ் சிப்பந்திகள் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். ஆகவே, கோட்டா ஒதுக்கும் முறையை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நாம் ஒரு இலக்கை வைத்துத்தான் முன்னேறவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அதற்காக ஒவ்வொருவரும் இந்தப் பணியில் ஈடுபடவேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். யாரையும் கட்டாயப்படுத்தி இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. கட்டாயப்படுத்தினாலும், வரவேண்டியவர்கள் வந்தால்தான் இந்தக் காரியம் நடைபெறமுடியும். ஆகவே, சமுதாயத்தின் உயர்வுக்காக நாம் மேற்கொண்டிருக்கிற இந்தத் திட்டத்தில் அனைவரும் பங்குபெற வேண்டும் என்று அனைவருக்கும் எடுத்துக் கூறுவதிலும், அனைவரும் பங்குபெறுவதிலும் தவறு இல்லை. ஆனால், ஒரு துறையில் உள்ளவர்களை மட்டும் இதற்காகக் கட்டாயப்படுத்தி அந்தக் காரியத்தைச் செய்யச் சொல்வது என்பதும் தேவையற்ற ஒன்றாகும். ஆகவே, அப்படிப்பட்ட கட்டாயம் கூடாது என்பதுதான் ஏற்கனவே அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற முடிவாகும். அப்படிக் கட்டாயப்படுத்தக்கூடாது என்பதை மீண்டும் ஒரு முறை அனைவருக்கும் தெரியப்படுத்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

*Scale of Pay of Employees of Local Library Authority*, Madras.

* 249 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether petitions have been received from the employees of the Local Library Authority, Madras City requesting revision of their scales of pay; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் மட்டுமுள்ள உள்ளூர் நூலக அதிகாரக் குழு பணியாளர்களின் சம்பள விகிதங்களைத் தனித்து மாற்றியமைப்பதற்கில்லை. மாநிலம் முழுவதுமுள்ள நூலக அதிகாரக் குழுக்களின் பணியாளர்கள் அனைவர்க்கும் சம்பள விகிதங்களை மாற்றியமைப்பது குறித்து பொது நோக்கின் ஒரு பகுதியாகக் கொண்டு ஆய்வு செய்யப்படவேண்டியிருந்தது. பொதுவாக, எல்லா நூலக அதிகாரக் குழுப் பணியாளர்களின் சம்பள விகிதத் தையும் அதிகரிக்க நூலக அதிகாரக் குழுக்களின் நிதிநிலை இடந் தராது என்று கருதப்பட்டது. எனினும், உள்ளூர் நூலக அதிகாரக் குழுக்கள் அனைத்திலும் உள்ள 1-ம் தர நூலகக் காப்பாளர்கள் சம்பள விகிதத்தை அரசு 1—6—1969 முதற்கொண்டு மாற்றியமைத்தது. உள்ளூர் நூலக அதிகாரக் குழுவில் மற்ற பணியா

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) வளர்ச்சி வட்டாரத்திலுள்ள வேளாண்மை வளர்ச்சி அதிகாரி, 1957-ம் ஆண்டு உரக்கட்டுப்பாட்டு ஆணையின் 19-வது பகுதியின் கீழ் நியமிக்கப்படும் உர இன்ஸ்பெக்டரும் ஆவார். அவர் வேளாண்மை வளர்ச்சி அதிகாரியாக முதற்கண் நியமிக்கப்பட்டபோது அவருக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ள பயிற்சியையும் வேளாண்மை இயக்குநர் அலுவலகத்துடன் இணைந்துள்ள மாவட்ட வேளாண்மை அதிகாரி (உரங்கள்) வளர்ச்சி வட்டாரங்களைப் பார்வையிடுவதற்காகச் சுற்றுப் பயணம் செய்யும் போதெல்லாம், அவர் வளர்ச்சி அதிகாரிக்கு மேலும் அளிக்கும் பயிற்சியையும் தவிர சிறப்பான பயிற்சி எதுவும் உர இன்ஸ்பெக்டருக்கு அளிப்பது குறித்த செயற்குறிப்பு எதுவுமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் விவசாய விஸ்தரிப்பு அதிகாரி என்று ஒருவர், கிராம சேவக் என்று ஒருவர் இருக்கிறார். இந்த இன்ஸ்பெக்டர்கள் சரிவர வேலை செய்வதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் நல்ல முறையில் செயல்பட ஏற்பாடுகள் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சாதாரணமாக இப்பொழுது உழவர்கள் நிலங்களுக்கு உரம் இடுவதன் அவசியத்தை நன்கு அறிந்திருக்கிறார்கள். துரிதமாக உரங்களை அவர்களுக்கு அளிப்பதற்காக இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு மேல் அதிகாரிகள் இருக்கிறார்கள், அந்த மேலதிகாரிகள் இவர்கள் வேலைகளை துரிதமாகச் செய்வதற்கான உரிய பயிற்சியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்தக் குறையுமின்றி அவர்கள் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா: குறிப்பாக கெமிகல் பர்டிலைஸர்ஸ், அந்த உரங்களைத் தான் கிராமப் பகுதிகளில் மிக அதிகமாகப் போட்டுவருகிறார்கள். அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இந்த உரங்களில் பலவிதமான கலப்புகள் இருக்கிற காரணத்தினால், இந்தக் கலவைகள் சரியான முறையில் கலக்கப்படாததினால், பயிர்களுக்குப் பூச்சி விழுகிறது என்று பெருவாரியாகப் பேசப்பட்டு வருகிறது. இது போன்ற நிலைமையைத் தடுக்க, இந்த இன்ஸ்பெக்டர்களுக்கு அரசாங்கம் கலவை இருக்கும் தன்மையை விளக்குவதற்கும் அறிவதற்கும் தனிப்பயிற்சி கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்த உர இன்ஸ்பெக்டர்கள் தகுந்த முறையில் உழவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உழவர்கள்தான் சரியான முறையில் இந்தக் கலவைகளை உபயோகப்படுத்தவில்லை என்



புகார் இருக்கிறது. எத்தனை சதவிகிதம் எந்த உரங்களைக் கலந்து போடவேண்டுமோ அப்படிப்பட்ட வகையிலே உழவர்கள் முழு அளவையையும் போடவில்லை, அதனால் தான் அதிகப்படியான விளைச்சல் காணவேண்டியிருந்தாலும், போதுமான உரம் சொல்லிக் கொடுக்கிற அளவுக்குப் போடாத காரணத்தினால், இன்னும் விளைச்சல் குறைவாக இருக்கிறது என்பதை அதிகாரிகள் அவ்வப்பொழுது அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொண்டு வருகிறார்கள்.

உணவுப் பொருள் வழங்குத்துறை

*256 வினா—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. டி. மார்டின்: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், உணவு, தானிய மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தக்கூடிய செயற்குறிப்பு ஏதாவது தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேள்வி சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா என்பது. அதற்கு இல்லை என்று பதில் சொன்னேன். மூலக்கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

*257. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) whether most of the staff of the Accountant General's Office working at the Office of the Commissioner of Civil Supplies have been withdrawn; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் அலுவலகத்தில் (கணக்குப்பிரிவில்) தமிழ்நாடு கணக்காய்வாளர் அலுவலகப் பணியாளர்களில் சிலர் முகமை அடிப்படையில் பணியாற்றி வந்தனர். அவர்கள் பதவிக்காலம் முடிந்தபின் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

திரு. டி. மார்டின்: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார். அக்கௌண்டெண்டு ஜெனரல் ஆபீசிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த சிப்பந்திகள் குறிப்பிட்ட காலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் என்ற ஒரு நியதியில் எடுத்துக்கொள்ளப்பட்டார்களா? இல்லை, அவர்கள் இந்த டிபார்ட்மெண்டு இருக்கிற வரைக்கும் வேலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்பட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1970 மார்ச் 7

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** குறிப்பிட்ட கால வரம்புக்கு உட்பட்டு எடுக்கப்பட்டு, காலம் முடிந்தபின் திருப்ப அனுப்பப்பட்டார்கள்.

**திரு. கே. விநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் வேலைசெய்யும் அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸ் சிப்பந்திகளை அவர்கள் வாபஸ் பெற்றுவிட்டார்களா? நாம் டீ—கண்ட்ரோல் செய்ததினாலே சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலிருந்து பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீசிலிருந்து வந்தவர்கள் அனைவருமே திரும்ப அனுப்பப்படவில்லை. 23 பேர்கள்தான் திரும்ப அனுப்பப்பட்டார்கள். இன்னும் நாலைந்து பேர்கள் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் இருக்கிறார்கள். டீ-கண்ட்ரோல் செய்ததன் விளைவாக பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். தனிக் கேள்விகேட்டால் பதில் சொல்லப்படும்.

## தமிழ்நாடு மத்திய சிறைச்சாலைகள்

**258 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் நாட்டிலுள்ள மத்திய சிறைச்சாலைகளை புதுப்பிக்கவும், விரிவுபடுத்தவும், அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** பேரவைத் தலைவர் அவர்களே, 1967-க்குப் பின்னால், நமது அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் மத்திய சிறைச்சாலைகளில், சிறைச்சாலைச் சீர்திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனிக் கேள்வி போடவும்.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே இருக்கிற மத்திய சிறைச்சாலைகள் எல்லாம் வெள்ளையர் ஏகாதிபத்திய காலத்தில் கட்டப்பட்ட மிகப் பழைமையான கட்டிடங்களாகும். ஆகவே, இந்தக் கட்டிடங்களைப் புதுப்பிக்க அரசு முடிவு செய்யுமா? பாளையங்கோட்டையிலுள்ள சிறைச்சாலையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டு வருவதுபோல, மற்ற இடங்களிலும் மாறுதல் செய்து, சில புதிய திட்டங்களை அமல் நடத்துமா?



1970 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையில் புதிதாக மத்திய சிறைச்சாலையை அமைப்பதால் சில மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக, சிறைச்சாலைகளின் எண்ணிக்கை விரிவடையக்கூடாது என்பதுதான் இந்த அரசின் கொள்கையாகும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலையில் அப்போது ரொம்ப இட நெருக்கடியாக இருந்தது. இப்போது இருக்கக்கூடிய அமைச்சர்களும் அதிகமாக அங்கே போயிருக்கக்கூடும். இட வசதி குறைவு, மிகவும் பழமையான கட்டிடம். ஆகவே, இப்படிப்பட்ட பழமையான கட்டிடங்களை மாற்றி, புதிதாக, கைதிகளுக்கு ஓரளவு வசதிகளை செய்து கொடுக்க இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மத்திய சிறையில் இட நெருக்கடி இருப்பதாக கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இனிமேல், அப்படிப்பட்ட கஷ்டம் அவருக்கு அங்கு இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

**திரு. எம். சுரேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சிறைச்சாலைகளை அதிகப்படுத்துவது இந்த அரசின் கொள்கை அல்ல என்று கூறினார். தண்டனையாளர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தும்போது, அதற்குத் தக்கபடி சிறைச்சாலைகளின் எண்ணிக்கையும் அதிகப்படவேண்டும் அல்லவா? தண்டனையாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறதே, அதற்குத்தக்கப்படி அரசு இடவசதி செய்து தருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் இத்தனை பேர் என்று கணக்கு இருக்கிறது. பொதுவாக சிறைச்சாலைகளின் தேவை குறைந்து, குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்தால்தான் நல்லாட்சி நடக்கிறது என்று அர்த்தம். அப்படிப்பட்ட நல்லாட்சியை அமைக்க நாங்கள் விரும்புகிறோம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் திறந்தவெளி சிறைச்சாலைகளை அமைக்க அரசு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, என்னுடைய நினைவுக்குத் தெரிந்தமட்டில், இரண்டு இடங்களில் இருக்கின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கக்கூடிய மத்திய சிறைச்சாலை பெரிய மருத்துவமனைக்குப் பக்கத்தில் இருப்பதால், மருத்துவமனையை மேலும் விஸ்தரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே,

[1970 மார்ச் 7

சென்னை மத்திய சிறைச்சாலையை சென்னைக்கு வெளியே மாற்ற உத்தேசம் இருக்கிறதா? அப்படியெனில் எப்போது மாற்றப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, சென்னைக்கு வெளியே மத்திய சிறைச்சாலையை மாற்றுவது என்ற விஷயம் நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போதைக்கு அதன்மீது முடிவு எடுப்பதாக இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள் மேலும் விஸ்தரிக்கப்படாவிட்டாலும், அங்கே இருக்கிற குற்றவாளிகளுக்கு சில வசதிகளையாவது செய்து கொடுப்பாரா? அதாவது, குற்றவாளிகள் சாப்பிடுகின்ற நேரத்திலே வெயிலிலே நின்றுகொண்டுதான் சாப்பிடுகிறார்கள். அவர்கள் சாப்பிடுவதற்கென்று நிழலில் ஒதுங்குவதற்காக ஒரு ஷெட்டாவது கட்டித்தரலாமே. அப்படி அவர்களுக்கு இடவசதி செய்துகொடுக்கப்படுமா? முன்னே இருந்த அரசாங்கத்தில் செய்யாவிட்டாலும், நமது அரசாங்கத்திலாவது இந்த வசதியைச் செய்து தருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்ற கருத்தைத் தான் நம்முடைய அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதைப்பற்றிய முழு விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. குறிப்பாக, சிறைச்சாலைகளில் லெட்ரின் வசதி மிகவும் குறைவு என்று இந்த மன்றத்தில் அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டது. இப்போது சிறைச்சாலைகளில் ஃப்ளஷ் அவுட் லெட்ரின் வசதி செய்து தரப்பட்டு வருகிறது. அதற்காக 15 லட்சம் ரூபாய் செலவிலே பேஸ்ட் ப்ரோகிராம் திட்டத்திலே வசதிகளை ஏற்படுத்தி வருகிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, கோவையில் இருக்கிற மத்திய சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றி, திறந்தவெளி சிறைச்சாலையாக அமைத்து, கோவையின் இட நெருக்கடியைத் தீர்க்க அரசு உத்தேசித்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே. திறந்த வெளி சிறைச்சாலைகளை எங்கெங்கு நிறுவுவது என்று பரிசீலனை செய்து, அதற்கு உகந்த இடத்தில் நிறுவ ஏற்பாடுகள் செய்து வருகிறோம், கோவையைப் பொறுத்தவரையில் அந்த முடிவு இல்லை.

## தொழிற் பேட்டைகள்

**259 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரைக்கு அருகே கப்பலூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் தொழிற்பேட்டைக்கு மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?



1970 மார்ச் 7]

(இ) தொழிற்பேட்டை எப்போதிலிருந்து உற்பத்தியைத் துவக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) மதுரை அருகே கப்பலூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சீரமைக்கப்பட்ட தொழில் மனைக்கு மொத்தம் 525.59 ஏக்கர் பட்டா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் முதல் கட்டத்தை சீரமைத்து சாலைகள் போடுதல், சாக்கடை அமைத்தல், தண்ணீர் வழங்குதல் ஆகியவற்றுக்கான சீரமைப்பு பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இப்பணி இன்னும் சுமார் ஆறுமாத காலத்திற்குள் முடிவுறும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக்கிறது? என்ன விலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது? தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு என்ன விலைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்போதைக்கு 525.59 ஏக்கர் நிலம் போதும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. என்ன தொகைக்கு வாங்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு ஏக்கருக்கு 14 ஆயிரம் ரூபாய் என்று தற்போதைக்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

***260 வினா.—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான வேலைகள் ஏதேனும் தொடங்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) தற்போது இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். கருப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே. திருச்சி மாவட்டத்தில் அரியலூர், உடையார்பாளையம் வட்டங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. இந்த வட்டங்கள் அபிவிருத்தியடைய இனிமேலாவது தொழிற்பேட்டைகளை அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? அப்படியெனில் எப்போது தொழிற்பேட்டைகள் வரும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு கோட்டத்தின் (ரெவின்யூ டிவிஷன்) எல்லைக்குள் தொழிற்பேட்டை இருக்கவேண்டுமென்று கருதி, சிட்டத்தட்ட 33 இடங்களில்

தொழிற் பேட்டைகளை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. 15 இடங்களிலே நாம் படிப்படியாக இதை நிறைவேற்றலாம் என்ற முடிவு எடுத்திருக்கிறோம். அரியலூரைப் பொறுத்த வரையில் அந்த 15 இடங்களைப்பற்றி முடிவு எடுக்கும்போது கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அரியமங்கலத்தில் உள்ள தொழிற்பேட்டையில் பல இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. அந்தக் காலி இடங்களையெல்லாம் தொழிற்துறையில் ஊக்கம் அளிக்கும் வகையில் மற்றவர்களுக்கு ஒதுக்கித்தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மாவட்ட எல்லைக்குள் சில தொழிற்பேட்டையிலே அதிகமாகத் தொழில் தொடங்க தொழிலதிபர்கள் முன்வரவில்லையென்ற குறை இருக்கிறது. இந்தக் குறைகளை நீக்க அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் (மோபஸல் ஏரியா) தொழில் தொடங்கினால் சில சலுகைகள் கொடுக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. உதாரணமாக, தொழிலதிபர்களுக்கு மின்சார சலுகை அளித்தல், நிலத்தின் விலை, வாடகை சலுகை அளித்தல் நீண்டகால கடன் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வது என்ற சலுகைகள் அளிக்கலாம் என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கட்டப்பட்டிருக்கிற தொழிற்பேட்டைகளில் தொழில் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது கோயில்பட்டியில் தொழிற் பேட்டை மூன்று, நான்கு ஆண்டுகளாக சும்மா இருக்கிறது. அந்த இடத்தில் அரசாங்கமாவது சில தொழில்களை ஆரம்பிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டேன். நம்முடைய தொழிற்கொள்கையை செயல்படுத்தி வருகிறோம். சில இடங்களில் தொழில்களை ஆரம்பிக்க முன்வரவில்லையென்ற காரணத்தால் என்ன திட்டங்கள் செய்யலாம் என்பதை யோசித்து வருகிறோம்

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கதர் விற்பனை

■261 **வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1969-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தீபாவளியை முன்னிட்டு கதர் விற்பனையில் முதல் இடம் வகிக்கும் ஊராட்சி ஒன்றியம் எது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** குளித்தலை.



**திரு. வை. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே தீபாவளியின்போது எவ்வளவு ரூபாய்க்கு கதர் விற்பனையானது ? தமிழ்நாட்டில் எந்தப் பஞ்சாயத்து யூனியன் கதர் விற்பனையில் முதன்மையாக இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த தகவல் இருக்கிறது. இரண்டு அபிவிருத்தி மாவட்டங்கள். ஒன்று திருச்சி, மற்றொன்று கரூர். திருச்சிராப்பள்ளி அபிவிருத்தி வட்டத்தில் தீபாவளியின்போது மொத்தக் கதர் விற்பனை ரூபாய 6,14,905.04 ; கரூர் அபிவிருத்தி வட்டத்தில் விற்பனை ரூபாய் 5,60,986.74 ; குளித்தலை ஊராட்சி ஒன்றியம் விற்பனையில் முதல் இடத்தைப் பெறுகிறது. அதன் விற்பனை ரூபாய் 1,04,509.61 ஆகும்.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளியின்போது கதர் வாங்கித்தான் தீர வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சிப்பந்திகளைக் கட்டாயப்படுத்தியிருப்பது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிக் கட்டாயப்படுத்தாமலிருக்க அரசால் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏதோ ஒருசில இடங்களில் இருந்து அப்படிக் கட்டாயப்படுத்தியதாகப் புகார் வந்தது. அப்படிப் புகார் வந்தவுடனேயே, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்குத் தந்திமூலம், அப்படி யாரையும் கட்டாயப் படுத்தக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது. இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கதர் உற்பத்தியில் செய்துள்ள மாறுதலையொட்டி, பலர் விரும்பிக் கதர் வாங்குகிறார்கள். கதர் நல்ல விற்பனையாகியிருக்கிறது. யாரையும் கட்டாயத்திற்குள்ளாக்கவில்லை.

### லால்பகதூர் சாஸ்திரியவர்களின் உருவச்சிலை

* 262 **வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமரர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் உருவச் சிலையை எழுப்புவதற்கு அனுமதி கேட்டிருந்த கோயம்புத்தூர் நகராட்சிக்குத் தமிழ்நாடு அரசு அனுமதி மறுத்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) நகராட்சி நிதியிலிருந்து சிலை எடுக்கும் செலவை அனுமதிப்பதில்லை என்ற பொதுக் கொள்கையின் காரணமாக அனுமதி மறுக்கப்பட்டது.

*Tamil Nadu Co-operative Union Building.*

*264 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether the Registrar of Co-operative Societies has written a letter to the Tamil Nadu Co-operative Union in or about May 1963 pointing out several irregularities in the matter of the construction of the building of the Tamil Nadu Co-operative Union;

(b) whether the said letter was discussed at a meeting of the Executive Committee of the Union in July 1963 which was attended by the Registrar; and

(c) if so, the action taken by the Registrar against those responsible for the mismanagement?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் சுட்டிக்காட்டப்பட்ட மறுப்புரைகளில் ஒன்றைத்தவிர மற்றவை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் முடிவு செய்யப் பட்டுள்ளன. முடிவு செய்யப்படாத ஒரு தவறுகுறித்து இன்னும் கடிதப்போக்குவரத்து நடந்துகொண்டு வருகிறது.

DR. H. V. HANDE: Is it a fact that the cost per square foot for the Tamil Nadu Co-operative Union building in the Island Ground constructed in 1963 was in excess of Rs. 17 per square foot compared to similar buildings constructed in the same year and that the payment of excess over Rs. 17 was due to mismanagement of funds by the Tamil Nadu Co-operative Union and what action has been taken against those responsible for the mismanagement? ஒன்றைத் தவிர என்று அமைச்சர் சொன்னார்கள். அந்த ஒன்று என்ன என்று விளக்க முடியுமா?

THE HON. THIRU. SI. PA. ADITANAR: The cost per square foot for a building varies according to the time of construction. I have nothing on record to show that the amount paid is in excess of the average. I said that there was one matter which was still the subject matter of correspondence. That relates to a sum of Rs. 6,600, being the payment to the contractor for cement. It is alleged by the Department that this is in excess of the contractual amount. The matter is still pending because no criminal action could be taken. The Public Prosecutor who had been consulted, gave the opinion that, since six or seven years had elapsed, it was very difficult to find evidence to substantiate it. The Department is still pursuing the matter in order to find out whether any other remedies will be available.

DR. H. V. HANDE: It is nearly seven years since the building was completed and I gave notice of the question one and a half years ago. The payment for cement has escaped the attention of the Department. Is it not a fact that this payment of Rs. 6,600 is responsible for the excess over Rs. 17 per square foot and that this





has not been brought to the notice of the Department? Even after my question also, the Department has not bothered. If that is the position, what is the use of asking questions?...........

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* என்ன பயன் என்று கேட்பதில் பொருள் இல்லை. துணைக் கேள்விகள், மூலக் கேள்விக்கு அளிக்கப் பட்ட விடையிலிருந்து விளக்கம் பெறுவதற்குப் போடவேண்டும். கேள்வி கொடுத்துப் பயன் என்ன என்று சொல்வதையெல்லாம், டிமாண்டின்மீது நடக்கும் விவாதத்தின்போது பேசுங்கள். கேள்வி நேரத்தில் பேச வேண்டியதில்லை.

DR. H. V. HANDE: Does not the Speaker agree that there are two main objects in asking questions—One is eliciting information and the other is corrective?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அதை ஒத்துக்கொள்கிறேன். கேள்வி நேரம் அமைச்சர்களிடமிருந்து, சர்க்காரிடமிருந்து தகவல் பெறுவதற்குத்தான். ஆனால் கேள்வி கேட்டுப் பயன் என்ன, 1½ வருஷம் ஆகிறது, நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்வது எல்லாம், டிமாண்டில் பேசுங்கள்.

DR. H. V. HANDE: I will re-frame the question.

THIRU K. VINAYAKAM: To embarrass the Ministry we are putting questions. இந்த நேரத்தில் அதைக் கேட்கிறோம். அதற்குப் பதில் சொல்லக்கூடாதா?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கேள்வி போட்டு என்ன பயன் என்றால்? துணைக் கேள்விகள், நீங்கள் தகவல்களைத் திரட்டுவதற்குத்தான். குற்றம் சாட்டுவதற்கில்லை.

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* ஒத்துக் கொள்கிறேன். குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் கேட்கலாம் இல்லையா?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அதை டிமாண்டில் பேசுங்கள்.

DR. H. V. HANDE: Sir, it is nearly six years since this matter had taken place. I am not blaming this particular Ministry or the particular Minister concerned. The point is that seven years have elapsed since the building was completed and one and a half years have elapsed since I brought the matter to the notice of the Department through my question. In view of the fact that this payment of Rs. 6,600 has slipped the notice of the Government and if the Government accept the theory that Rs. 17 per square foot is excessive, are the Government prepared to appoint a small enquiry commission consisting of persons not belonging to and unconnected with the Union to go into this particular malpractice or grievance that I have brought to the notice of the Government or what other step that the Government are going to take in the matter?

THE HON. THIRU SI. PA. ADITANAR: This matter has been thoroughly gone into by the Departmental Officers. It may be noted that the mistake occurred during the previous regime. It

**திரு. என். கிட்டப்பா :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை அமைக்க வேண்டுமென்று அனுமதி கோரி மாயூரம் நகராட்சியிலிருந்து விண்ணப்பம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா? ஆம் எனில், அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, சிலை அமைக்க வேண்டுமென்று நகராட்சியினர் கோரிக்கை அனுப்பிய போது, இந்த அரசாங்கத்தின் கொள்கை குறிப்பிடப்பட்டது. அதாவது சிலை அமைக்கும் செலவைப் பொதுமக்கள் நன்கொடை மூலம் நிறைவேற்ற வேண்டும். நகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, மறைந்த இந்திய பிரதமர் திரு. லால்பகதூர் அவர்களுக்கு சிலை வைக்க கோவையில் தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் அல்லது காங்கிரஸ் தலைவர்கள் ஏதாவது மனுப் போட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சிலை நிறுவும் செலவை நகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கக்கூடாது என்றும், யாராவது அன்பளிப்பாகக் கொடுத்தால், அதோடு அதன் பராமரிப்புக்காக 20 சதவிகிதம் கொடுத்தால், அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாகச் சிலை எடுக்கும் செலவை உறுதிப்படுத்த ஒரு சிலர் சேர்ந்து, நகராட்சித் தலைவர், துணைத் தலைவர், மற்றவர்கள் சேர்ந்து ஒரு குழு அமைத்துக்கொண்டு, நன்கொடைகள் திரட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதாக ஆணையரிடமிருந்து அறிக்கை வந்தது. ஆனால் இப்பொழுது அந்தக் கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதன் காரணமாகத் தடை ஏற்பட்டிருக்குமோ என்னவோ தெரியாது.

**திரு. கே. விநாயகம் :** பெருந்தலைவர்களுக்குச் சிலை எழுப்புவதில் அபிப்பிராய பேதம் இல்லை; லால்பகதூர் சாஸ்திரி, காந்தி அடிகள், காமராஜர் போன்றவர்களுக்குச் சிலை வைக்க கையாளுகிற அதே கொள்கைதான் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை வைக்கவும் கையாளப்படுகிறதா? எந்த முனிசிபாலிடி, டிஸ்ட்ரிக்ட் போர்டு அணுகினாலும், அதே விதிகள்தான் கையாளப்படுகிறதா, அல்லது பணத்தை அதிகமாகச் செலவு செய்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நான் ஏற்கனவேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். மறைந்த மாமேதைகளானாலும், இப்பொழுது இருக்கும் தலைவர்களானாலும், சிலை வைப்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அதற்கு நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்படுவது தடைப் படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நகராட்சிகளுக்குச் சிலை எடுக்க அனுமதி கொடுத்தால் எவ்வொரு கட்சிக்காரர்களும் வரும்போது, அவரவர்கள்



அனுமதி கொடுக்கும் நிலை ஏற்பட்டு, நகராட்சிகள் சிலை எடுக்கும் காரியத்தைத் தவிர வேறு காரியம் செய்ய முடியாது என்ற காரணத்தாலேயே இந்தத் தடையை விதித்து இருக்கிறோம். மக்கள் முயற்சி எடுத்து, அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று முன்வந்தால் நல்லது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் சிலை ஆங்காங்கே பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது என்றால், அவர்களிடத்தில் அந்த அளவிற்கு அன்பு கொண்டிருக்கக்கூடிய தோழர்கள், மற்றவர்கள் நன்கொடை செலுத்தி அவை எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் செலவில் எதுவும் எடுக்கப்படவில்லை. அப்படி மாயூரம் நகராட்சி அனுமதி கேட்டது மறுக்கப்பட்டிருக்கிறது. கடலூர் நகராட்சி மன்றம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அதையும் நிராகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, முன்னாள் வீரர்—மன்னிக்கவும்—அகில இந்தியக் காங்கிரஸ் பழைய தலைவர் திரு. காமராஜர் அவர்களுக்கு சென்னையிலே சிலை எழுப்பப்பட்டிருக்கிறதே அது யாருடைய செலவில் எழுப்பப்பட்ட சிலை?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அப்பொழுதிருந்த மாநகராட்சி தன்னுடைய செலவில் அந்தச் சிலையை நிறுவிக் கொடுத்தது. 1968-ல், புதிய அரசு பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு, உத்தரவு பிறப்பித்து, தடை போட்டது. ஆனாலும், உலகத் தமிழ் மாநாடு விழாவை ஒட்டித் தனிப்பட்ட முறையில் அது முக்கியமான ஒரு உலக விழா என்று ஓரிரு சிலைகள் எடுக்க, மாநகராட்சிக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம்.

**இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள்**

**263 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன்,** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள போகலூர், இளையான்குடி, பரமக்குடி ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள 154 ஊராட்சி மன்றங்களை நான்கு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்கும்படி பொதுமக்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அப்படிப் பிரிப்பதற்குச் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

took place in 1962. The Government gave a subsidy of Rs. 25,000 in 1962 and five years had elapsed when we took charge. After we took charge, we probed into the matter again and the Public Prosecutor said that, since four or five years had already elapsed, it would be very difficult to trace what quantity of cement had been used in each place. Cement to the value of Rs. 6,600 was used, according to the Union, for constructing an underground wall. They say that they used excess cement in order to reinforce a wall which was underground.

*திரு. இராம. அரங்கண்ணல்:* காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பல தீய வினைகளுக்கு நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

*(திரு. மார்டின், திரு. இராமமூர்த்தி ஆகியோர் எழுந்திருந்தார்கள்).*

THIRU K. VINAYAKAM: Sir, first let me know whether this is a question. The Chair must give a ruling on this point. We cannot allow the Hon. Member to level charges against us. நாங்கள் கேட்கிறபோது ரூல்ஸ் வருகின்றன. அவர்களுக்கு என்றால் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

*திரு. இராம. அரங்கண்ணல்:* 1963-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு இப்போது பதில் சொல்கின்ற வகையில் இருக்கிறோம். இப்போது அந்தக் கட்டடத்திற்கு ரிப்பேர் செலவுக்காக மட்டும் 40 ஆயிரம் ஆகும் என்கிற தாக்கீது அரசுக்கு வந்திருக்கிறதா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* இந்தக் கட்டடத்திற்கு ரிப்பேருக்காக எவ்வளவு ஆகும் என்பது அல்ல கேள்வி. முந்திய ஆட்சியில் நடந்த தவறுகளுக்குப் பதில் சொல்கின்ற நிலைமையில் தான் உண்மையில் இருக்கிறோம். கூடுமானவரையில் அதைத் தாங்கிப் பிடித்துக்கொண்டே பதில் சொல்கிறேன். இருந்தாலும், 6,600 ரூபாய் சிமின்டுக்காக அதிகப்படி கொடுக்கப்பட்டிருப்பதை மீண்டும் 5 வருடத்திற்குப் பிறகு எப்படி வசூல் செய்வது என்று இந்த அரசின் சார்பாக, மக்கள் சார்பாக நான் முயற்சி எடுத்து வருகிறேன்.

## மத்திய கூட்டுறவு நிலவள வங்கி

* 265 வினா.—*திரு. என். எஸ். வி. சித்தன்:* மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைக்கால நிதிக்காக, தமிழ்நாடு மத்தியக் கூட்டுறவு நிலவள வங்கியினர் தமிழக அரசிடம் எத்தனை கோடி ரூபாய்க்கு எப்போது உறுதிமொழி கேட்டுள்ளனர்?

(இ) எப்போது வழங்கப்படும்?



*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* (அ) 1969-ஆம் ஆண்டு மே திங்களில் அந்த வங்கி ரூ. 5 கோடி அளவிற்கு உத்தரவாதம் (guarantee) அளிக்குமாறு அரசை வேண்டியது.

(இ) இவ்வங்கிக்குத் தேவைப்படும் உத்தரவாதத்தை அளித்து இப்போது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

*திரு. என். எஸ். வி. சித்தன்:* பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வங்கி அரசாங்கத்திற்கு உத்தரவாதத் தொகையை 45 கோடியிலிருந்து 75 கோடிக்கு உயர்த்திக்கொடுக்கவேண்டுமென்று கோரி ஒரு ஆண்டுக்குப் பின்னால் உயர்த்திக்கொடுக்கப்பட்டிருக்கிறதே, இவ்வளவு காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* ஐந்து கோடிக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்ட தேதி மே மாதம் 1969. காரண்டி கொடுக்கப்பட்டது, 30—8—1969. பங்களூரில் நடந்த மகாநாட்டில் மத்தியக் கூட்டுறவு அமைச்சர், மற்ற மாநிலக் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எல்லாம் வந்திருக்க நேரத்தில், இந்த வங்கியைச் சேர்ந்த ஒருவர் பேசுகின்றபோது 'Guarantees given by the Governmentare not worth the paper on which they are written' என்று குறிப்பிட்டதான செய்தி, எனக்குச் சிறிது அதிர்ச்சியை அளித்தது. உண்மையில் அப்படி ஏதாவது இருந்திருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க நான் விரும்பினேன். அப்படிப் பார்க்கிறபோது 1964-ஆம் ஆண்டு, அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதி மட்டும் நிறைவேற்றப்படாமல் இருந்ததைக் கண்டேன். இதை எல்லாம் பரிசீலிக்க வேண்டி இருந்த காரணத்தினால் 30—8—1969-இல் தான் இந்த காரண்டி உத்தரவை அனுப்ப முடிந்தது.

*திரு. ரா. கனகசபை:* சார் ஆன் எ பாயின்ட் ஆப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். பங்களூர் மகாநாட்டில் இந்த வங்கியைச் சேர்ந்த ஒருவர் பேசினார் என்று குறிப்பிடுவது என்னுடைய பேச்சைக் குறிப்பிட்டுத்தான். மாண்புமிகு அமைச்சர் இதை எல்லா இடங்களிலும்—பொதுக்கூட்டத்திலும் சொல்லி வருகிறார். நான் இதுபற்றி முதல் அமைச்சர் அவர்களிடத்திலேயே ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறேன். நான் குறிப்பிட்டது இந்த மாநில அரசைப்பற்றியோ, அல்லது வேறு மாநில அரசைப்பற்றியோ அல்ல. என்னுடன் அந்த மகாநாட்டிற்கு வந்த ஒருவர் சுகர் பாக்டரிகள் சம்பந்தமாக ஐ.எப்.டி.-யிலே கொடுக்கப்படுகிற காரண்டி உதவி வராதிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அப்போது நான் 'காரண்டி கொடுக்கப்பட்டு மதிக்கப்படவில்லையானால் அது அந்தப் பேப்பருக்குக் கூட பொருமானமானது அல்ல 'It is not worth the paper on which it is written' என்று சொன்னேன். நான் நம்முடைய அரசைப் பற்றிச் சொன்னதாகக் குறிப்பிட்டு அடிக்கடி சொல்லி வருவது சரியானதல்ல என்று குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தாங்கள் அப்படிக் குறிப்பிட்டதாக தவறான தகவல் அமைச்சர் அவர்களுக்குக் கிடைத்த காரணத்தினால்தான் உள்ளபடியே அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டியதாக இருந்தது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் இப்போது இங்கே கொடுத்த விளக்கத்தை முன்பே என்னிடத்திலும் தந்திருக்கிறார்கள். அதை நான் அப்போதே ஒத்துக்கொண்டிருக்கிறேன்.

*** 266 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நில அடமான (நிலவள) வங்கியில் கடன் கோரும் போது வில்லங்க சர்டிபிகேட் எடுக்க சர்க்கார் கடைப்பிடிக்கும் முறை யாது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கூட்டுறவு வளர்ச்சி (E.O.C.) அதிகாரியால் பெறப்படும் கடன் மனுக்களைப் பொறுத்தவரையில் 113 ஆண்டுக் காலத்திற்கு வில்லங்கச் சான்றை அனுப்புமாறு துணைப் பதிவாளர்களுக்குத் தெரிவிப்பார். நில அடமான வங்கிகளால் பெறப்படும் கடன் விண்ணப்பங்களைப் பற்றிய வில்லங்கச் சான்றிதழை அனுப்புமாறு வங்கியின் செயலாளர் துணைப்பதிவாளர்களுக்குத் தெரிவிப்பார். வில்லங்க சான்றிதழ்கள் துணைப் பதிவாளர் கையெழுத்துடன் வழங்கப் படுகின்றன.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** நில அடமான வங்கிகள் ஏழை எளியவர்களுக்குக் கடன் கொடுப்பதற்காகத்தான் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் 1940-ஆம் ஆண்டில் இருந்து வில்லங்க சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்பதால் அதை வாங்க முடியாது, ஏழை எளியவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே 1960-ஆம் ஆண்டில் இருந்து வில்லங்க சர்டிபிகேட் கொடுத்தால் போதும் என்று உத்தரவிடுவார்களா ? அல்லது வேறு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு அங்கத்தினர் முன்னால் நடந்தவைகளைச் சொல்கிறார். அப்போதெல்லாம் நில அடைமான வங்கிகளின் மூலம் பணக்காரர்களுக்கு மட்டும் தான் கடன் கொடுக்கப்பட்டு வந்தது, 1967-க்குப் பின்னால் . . .

THIRU K. RAMAMURTHI : Sir, is the Hon. the Minister prepared to take responsibility for his statement ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதில் ஒன்றும் தவறு இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் சொல்வது கேள்வி கேட்ட உறுப்பினர் அவர்களுக்குக் கொஞ்சம் ஆறுதலளிக்கும் என்று நினைக்கிறேன். முன்னாலே இருந்த விதிகள் எல்லாம் மாற்றப்





பட்டு, தளர்த்தப்பட்டு இருக்கின்றன. சான்றிதழ் கொடுப்பதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சிவசுப்பிரமணியன் அவர்கள், ஏழை எளியவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லையே, அவர்களுக்கும் கிடைக்கச்செய்யக் கூடாதா என்று கேட்டார்கள். ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காமல் இருந்த நிலைமையை மாற்றி, சட்டத்தைத் திருத்தித் துணை விதியைத் திருத்தி, ஏழை எளியவர்களுக்கு முதலிடம் கொடுக்கும் வகையில் செய்யப்படக்கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் யாராவது 10 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால், அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆகவே 25 ஆயிரம் ரூபாய் அளவுக்கு நிலம் சொந்தமாக வைத்திருக்கிறவர்களுக்குத்தான் 10 ஆயிரம் 8 ஆயிரம் என்று கடன் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது புது விதியைப் போட்டு நிலத்தை வளப்படுத்தியதற்குப் பின்னாலே, பயனுள்ளதாக ஆக்கியதற்குப் பின்னாலே, நஞ்சையாக இருந்தால் என்ன மதிப்புப் பெறுமோ, அல்லது புஞ்சையாக இருந்தால் என்ன மதிப்புப் பெறுமோ, அதைப் பார்த்து ஏழை எளிய விவசாயிகளுக்குக்கூட 10 ஆயிரம் 12 ஆயிரம் ரூபாய் என்ற முறையிலே கடன் அளிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது முன்னால் இருந்த நிலைமையே தவிர இப்பொழுதுள்ள நிலைமையல்ல.

*Electricity connection to pumpsets in Megnanapuram*

* 267 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Electricty be pleased to state whether electricity connection has been granted to the agricultural pumpsets for which applicaions from the agriculturists of Megnanapuram village in Tirunelveli district have been pending?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மெஞ்ஞானபுரம் கிராம மக்களிடமிருந்து வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கவேண்டி 30 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில், 7 விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கப்பட்டுள்ளது மற்ற 5 விசையேற்றங்களைப் பொறுத்தவரை, பணிகள் நடந்தேறி வருகின்றன. நான்கு விசையேற்றங்களைப் பொறுத்தவரையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் மின்சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதைப் பொறுத்து, மின்சக்தி கொடுக்கப்படும். எஞ்சிய 14 விசையேற்றங்களைப் பொறுத்தவரையில் அவற்றிற்கு மின்சக்தி வழங்குவது ஆதாயமற்றதாகும் என்பதால் அவற்றிற்கு மின்சக்தி கொடுப்பதற்குத் தற்சமயம் இயலாது.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார். இந்த மெஞ்ஞானபுரம் பகுதியில் டிரான்ஸ்பார்மர்களை மாற்றித்தான் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. உடனடியாக டிரான்ஸ்பார்

வலியுறுத்திக் கேட்டதோடு, அப்படி அவர் விவரம் அறிவிப்பாரேயானால் ஒரு வேளை எனக்கு தெரியாமலே, என்னுடைய கவனத்திற்கு வராமலே, எனது கார் டிரைவர் அந்த இடத்தை வாங்கியிருப்பாரேயானால், நான் அந்தத் தவறைத் திருத்துகிறேன் என்றும் அவையில் குறிப்பிட்டேன். அதற்குப் பிறகு எழுந்த கடுமையான வாதங்களின் காரணமாக இது சம்பந்தமான நடவடிக்கைக் குறிப்புகளை துணைச் சபாநாயகர் அவர்கள் 7-ம் தேதி காலை வரை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றவேண்டாமென்றும், பத்திரிகைகளில் வெளிவர வேண்டாமென்றும் தீர்ப்பளித்தார்கள். என்னுடைய டிரைவர் அரசாங்க நிலம் ஒரு ஏக்கர் விலைக்கு வாங்கியிருக்கிறாரா? என்று நான் கேட்டபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், "ஆதாரம் இருக்கிறது, நிரூபிக்கிறேன், அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

நான் அதன்பிறகு அதுசம்பந்தமான தஸ்தாவேஜிகளைக் கொண்டுவரச்சொல்லி, கூவம் ஆற்றோரத்தில், உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில், யார் யாருக்கு, எந்த எந்த நேரத்தில், நிலங்கள் எந்தெந்த அளவு வழங்கப்பட்டிருக்கின்றன என்ற குறிப்புகளைப் படித்துப் பார்த்தேன். உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை 1953-ம் ஆண்டு முதல் லீஸுக்கு விடத் தொடங்கியிருக்கிறார்கள். 1953-முதல் 1966 வரையில் மொத்தம் 132 நபர்களுக்கு அந்த இடங்கள் லீஸுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. 1967-ம் ஆண்டில் 37 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 1966-ம் ஆண்டில் மாத்திரம் 71 பேருக்கு வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

அங்கத்தினர் குறிப்பிட்ட என்னுடைய கார் டிரைவர் கதிரவன் என்று அழைக்கப்படும் யாகியா மரைக்காயர் என்னிடத்தில் டிரைவராக வேலைக்கு வந்து சேர்ந்தது நான் முதலமைச்சராக ஆன பிறகு, அதாவது 1969-ம் ஆண்டு. அங்கத்தினர் குறிப்பிட்ட கூவம் நதிக்கரையோரத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அவர் ஒரு இடத்தை லீஸுக்கு எடுத்திருக்கிறார். அந்த இடத்தினுடைய அளவு 400 சதுர அடியாகும். அதாவது ஒரு சென்டிற்கும் குறைவானதாகும். அதற்கான வாடகையும் வசூலிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதாவது மாதம் 10 ரூபாய் வாடகை.

இவருக்கு, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு ஏக்கர் நிலம் அந்த இடத்தில் வழங்கப்படவில்லை என்பதையும், மிகக் குறைந்த அளவில் 400 சதுர அடிக்குப் பொறியாளர்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி பகுதியில் 1961-ல் டீ. ஏ. எம். நிறுவனத்திற்கு 4,250 சதுர அடி கொடுத்திருக்கிறார்கள்.



25—5—63-ல் ஜெனரல் ஏஜென்சீஸ்க்கு 3,000 சதுர அடி கொடுத்திருக்கிறார்கள். இன்னும் பலருக்கு 1966 க்கு முன்பே 1,200 சதுர அடி என்றும், 2,400 சதுர அடி என்றும், 1500 சதுர அடி என்றும் பலவாறாக குறிப்பிட்ட அந்த இடத்தில் நிலங்கள் லீஸுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. இதில் இன்னும் ஒரு முக்கியமான தகவலை இந்த அவைக்கு வைக்க நான் விரும்புகிறேன். கூவம் சீர்திருத்தத்தை முன்னிட்டுக் கரையோரத்தில் உள்ள இப்படிப்பட்ட கடைகள், குடிசைகள், அனைத்தையும் மாற்று இடங்களுக்கு அகற்றிவிட்டு, வேலை தொடங்க வேண்டுமென்பதற்காகப் பலருக்கு இடங்களைக் காலி செய்ய வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதுபோல, இந்தக் குறிப்பிட்ட இடத்திலே உள்ள 169 நபர்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் குறிப்பிட்ட என்னுடைய டிரைவர் யாகியா மரைக்காயர் உள்பட 169 பேரும் அந்த இடங்களைக் காலிசெய்ய வேண்டும் என்று 28—10—1969 அன்றைய தினம் நோட்டீஸ் அனுப்பப்பட்டு, அவைகளை அனைவரும் பெற்றுக்கொண்டதற்கான கையெழுத்துக்களையும் நான் குறிப்பேட்டில் பார்த்துள்ளேன். சிலர் தங்கள் இடங்களைக் காலி செய்ய மறுத்து, நீதிமன்றத்தில் ரிட் வழக்குத் தொடர்ந்து, நீதி மன்றம் ஸ்டே ஆர்டர் போட்டிருப்பதால் அந்த வழக்கு முடிந்ததும் எல்லா இடங்களையும் காலி செய்வதாக இலாகா முடிவெடுத்திருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் அனைத்து இடங்களும், கூவம் சீர்திருத்தத்திற்காகக் காலி செய்யப்படுவது போலவே இந்த ஒரு சென்ட்டுக்கும் குறைவான இடமும் காலி செய்யப்படும்.

பெரும்பாலும் விறகுக் கடைகள், சிறு பட்டறைகள், டீக்கடைகள், பழைய பேப்பர் கடைகள், கயிறு தயாரிக்கும் இடங்கள், இவைகளே அந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதும், அந்தக்கடைகளைப் பெரும்பாலும் அந்த 169 நபர்களில் முஸ்லீம் மக்களும், நாடார் குல மக்களும் நடத்திவருகிறார்கள் என்பதும், அவர்களில் எல்லாக் கட்சிகளையும் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

ஆகவே, பொறியியல் துறையினர் என்னுடைய டிரைவர் என்பதற்காக அல்ல; எல்லோருக்கும் அந்த இடத்தை வாடகைக்கு விடுவதுபோல, சட்டத்திற்கும், விதிக்கும் உட்பட்ட வகையில் முறைப்படி மேற்படி நபருக்கு லீஸுக்கு விட்டிருக்கிறார்கள். இதில் எந்தவிதமான தவறும் நடக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் மிகைப்படுத்திக் கூறியதுபோல எந்தக் குற்றமும் நடைபெறவில்லை. நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு வேண்டுமென்றே என்மீது களங்கம் ஏற்படுத்துவதற்காகச் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டேயல்லாமல், அவர் மிகைப்படுத்திச் சொல்லியதுபோல எதுவுமில்லை என்பதை

[1970 மார்ச் 7

மர்களை மாற்றி எந்த எந்த இடங்களில் அதிகமாகக் கொடுக்கமுடியுமோ அந்த அந்த இடங்களிலே எல்லாம் அதிகமாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ.பி.இராமன்:** தலைவர் அவர்களே, மெஞ்ஞானபுரத்தைப் பொறுத்தவரையில் அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 30 அப்ளிகேஷன்கள் கொடுக்கப்பட்டு அவற்றிலே 7 இடத்திற்கு இப்பொழுது கொடுத்திருக்கிறோம்; இன்னும் 14 இடத்திற்கு கொடுக்காமல் இருப்பதற்குக்காரணம் நாட்டீஸிபிள் ஆக இருப்பதால்தான். இன்னும் சில அப்ளிகேஷன்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் கூறுகிற தகவல் என்னிடத்திலே இல்லை.

### திருநெல்வேலி மாவட்டத்துக்கு மாநிலத் தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள்

*** 268 வினு—திரு. டி. மார்டின்:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும், விக்கிரம சிங்கபுரத்திலும் தொழிலாளர் இன்சூரன்ஸ் ஆஸ்பத்திரிகள் நடப்பு ஆண்டில் தொடங்கப்படும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** (அ) (இ) காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் அகப்பிணி மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும், விக்கிரமசிங்கபுரத்திலும் மாநிலத் தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் இருந்தன. தொழிலாளர் அரசுக் காப்புறுதி நிறுவனம் நிதி நிலையை மறு பரிசீலனை செய்த பின்னர், போதிய நிதி வசதியில்லாத காரணத்தால், ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களுக்காகவும், புதிய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ள இயலாதென 1968-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் அரசுக்குத் தெரிவித்தது. எனவே தற்சமயம் இந்த இரண்டு இடங்களிலும் தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவ மனைகள் கட்டுவதற்கு இயலாது.

ஆனால் மேற்கண்ட மருந்தகங்கள் மாநில அரசுக்குரிய கட்டடங்களில் நடந்துவருகின்றன.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுடன் இன்னும் அதிகமாக நம்முடைய மாநில அரசு போராடாவிட்டாலும் நியாயமாக அடிக்கடி கேட்டு அம்பாசமுத்திரத்திலும், தூத்துக்குடியிலும் மருத்துவ மனைகளை மத்திய அரசின் உதவியின் நல்முறையில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1970 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** கனம் உறுப்பினர் அவர்களைவிட அதிகமான கவலையோடு இதிலே இந்த அரசு செயலாற்றி வருகிறது. அண்மையிலே திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் இங்கு வந்திருந்த பொழுதுகூட தனியாக எழுத்துமூலமாக ஒரு வேண்டுகோளை நானே சந்தித்துக் கொடுத்திருக்கிறேன். மீண்டும், மீண்டும் மத்திய அரசினைக் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அதேமாதிரி இ. எஸ். ஐ. கார்ப்பரேஷனுக்கும் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. முதலமைச்சரின் விளக்க உரை.

முதலமைச்சருடைய கார் டிரைவருக்கு கூவம் ஆற்றோரத்தில் புறம்போக்கு நிலம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட குற்றச் சாட்டு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதி 82-ன்படி ஒரு அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

*** மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. சித்தன் அவர்கள் என்மீது ஒரு குற்றச்சாட்டைக் கொண்டு வந்து அது சம்பந்தமாக நடைபெற்ற விவாதங்கள் துணைப் பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பின்படி சட்டப்பேரவை நடவடிக்கைப் புத்தகங்களிலே இன்று காலை 9 மணி வரையிலே இடம்பெறத் தேவையில்லை என்றும், இதைத்தவிரப் பத்திரிகைகளில் அவற்றை வெளியிடத் தேவையில்லை என்றும், அதற்குள்ளாக ஆதாரங்களை திரு. சித்தன் அவர்கள் கொடுக்கக்கூடும் என்றும் தீர்ப்பளித்தார்கள். அவர்கள் ஆதாரங்களைக் கொடுத்தாலும்சரி, கொடுக்காவிட்டாலும் கவலையில்லை. நேற்றையதினம் நடைபெற்ற சம்பவத்தினுடைய நடவடிக்கைக் குறிப்புகளை மீண்டும் நடவடிக்கை புத்தகத்தில் ஏற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அறிக்கைகை நான் அவைமுன்னர் வைக்கிறேன்.

நேற்று, 6-3-70, சட்டசபையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது பேசுகிற சமயத்தில் என்னுடைய கார் டிரைவருக்கு, கூவம் நதிக்கரை ஓரத்தில் ஒரு ஏக்கர் அரசாங்கப் புறம்போக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். நான் உடனே குறுக்கிட்டு. ஒரு ஏக்கர் நிலம் என்னுடைய கார் டிரைவருக்கு விலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டு, அதற்கு விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களை

[திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 7

யும் இதில் எனக்கு எந்த சம்பந்தமுமில்லை என்பதையும் இந்த அவைக்கு விளக்கவேண்டிய கடமையின் காரணமாக நான் இந்த விவரத்தைத் தந்துள்ளேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அறிக்கை சமர்ப் பித்த பிறகு எந்தவிதமான விவாதமும் கூடாது. நீங்கள் எதற்காக நிற்கிறீர்கள் ?

DR. H. V. HANDE : Under sub-rule (3) of rule 83 I raise a point of order. Yesterday a ruling was given by the Deputy Speaker that, if the hon. Member Thiru Chithan did not produce any proof to the Hon. Deputy Speaker or the Hon. Speaker before 9 a.m. to-day, the entire proceedings relating to that matter should be expunged. He had not brought any proof. According to the ruling of the Deputy Speaker yesterday, the proceedings relating to the matter should be expunged, unless there is a new ruling revoking the ruling of the Deputy Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன தீர்ப்பு கொடுக்கிறேன் என்று பார்த்துவிட்டு நம்முடைய உறுப்பினர் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இருக்கலாம். நேற்று பேரவைத் துணைத் தலைவர் கொடுத்திருக்கின்ற தீர்ப்பு இன்று காலை 9 மணிக்குள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் அதற்கான ஆதா ரத்தைக் கொடுக்கிறார் என்ற காரணத்தால் . . . . .

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் கொடுக்கிறேன் என்று ஒத்துக் கொள்ளவில்லை; துணைத்தலைவர் அவர்கள்தான் அப்படிச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் மறுக்கவில்லை. ஆக இன்று காலை 9 மணி வரை பத்திரிகைகளில் வரக்கூடாது என்றும், நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறக்கூடாது என்றும் தீர்ப்புக் கொடுத்தார். திரு. சித்தன் அவர்கள் இன்று காலை 9 மணி வரை எந்த ஆதாரத் தையும் கொடுக்கவில்லை. முதலமைச்சர் அவர்களுடைய விரிவான அறிக்கையும் வந்திருக்கிறது. நேற்று பேரவைத் துணைத்தலைவர் கொடுத்த தீர்ப்பை மறுத்து நான் தீர்ப்புக் கொடுக்கப் போவதில்லை ஆதாரம் கொடுக்கின்ற வரையில், இன்று காலை 9 மணிவரையில் குறிப்பில் ஏறக்கூடாது என்றுதான் அவர் தீர்ப்புக் கொடுத்தார். இன்று முறைப்படி அவை நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறிவிடும். பத்திரி கைகளும் இன்று முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கை, நேற்றுக் கொடுத்த செய்தி ஆகியவற்றில் கூடுதல், குறைத்தல் இல்லாமல், நோக்கம் கற்பிக்காத வகையில் வெளியிட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.



1970 மார்ச் 7]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நேற்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்த தீர்ப்பு எனக்கு ஞாபகம் இருக்கும் வகையில் நீக்கவேண்டுமென்றுதான் கொடுத்தார்கள். கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எழுந்து அவற்றை நீக்க வேண்டுமென்று கூறியவுடன், கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கூறுவது சரிதான் என்று அவற்றை நீக்க வேண்டுமென்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்தார்கள். இன்று காலை 9 மணி வரையில் என்று சொல்லி யிருந்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்திருக்கமாட்டோம். இதனால் நாங்கள் வெளிநடப்புச் செய்ததற்குக் களங்கம் கற்பிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மிகவும் உயர்ந்த குரலில், மிகவும் வேகமாக 'கூட்டுறவுத் துறை அமைச்சர் சொன்னதை ஏற்றுக் கொள்ளுகிறேன்' என்று சொன்னார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நேற்றையதினம் பேரவைத் துணைத் தலைவர் அளித்த தீர்ப்பைப் படிக்கிறேன். 'மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் எழுப்பியிருக்கும் பிரச்சினை நியாய மானது. ஆகவே, நாளைக் காலையில் ஆதாரங்களைப் பேரவைத் தலை வரிடம் கொடுக்கும் வரைக்கும், இன்றையதினம் திரு. சித்தன் மாண்புமிகு முதல் அமைச்சர் மீது குறிப்பிட்ட குற்றச்சாட்டு பற்றிய பேச்சுக்கள் சட்டமன்றக் குறிப்பேட்டிலிருந்து நீக்கப் படும் என்று தெரிவிக்கிறேன். பத்திரிகைகளிலும் வரக்கூடாது என்றும் தெரிவிக்கிறேன்' என்பதுதான் அவருடைய தீர்ப்பு.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது முதலில் சொன்னது. அடுத்த தடவை சொன்னது வேறு. அதற்காகத்தான் டேப் ரெக்கார்டர் வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். முதலில் இவ் வாறு சொன்னார்கள். மறுபடியும் கூறும்போது உயர்ந்த குரலிலே 'எக்ஸ்பஞ்ச் செய்கிறேன்' என்று சொன்னார்கள். அப்படியானால் எங்களுக்கு இங்கு வேலை இல்லை என்று சொல்லி நாங்கள் வெளி நடப்பு செய்தோம்.

### (3) கூட்டுறவுத் துறை அமைச்சர் மீது சாட்டப் பட்ட குற்றச்சாட்டு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு பேச்சைப் பேசியிருக்கிறார்கள். "மகன் பெயரில் ஹைகோர்ட்டில் கேஸ் போடப்பட்டிருக்கிறது. மகன் இவர்கள் வழியாக வந்த மகன்தானே ? வேறு வழியாக வந்த மகனா ? அந்த ஆதித்தன் யார் ? அவருடைய குடும்பத்தின் வழி வந்த ஆதித்தன் என்ற பெயரில்தான் இருக்கிறது" என்று பேசி யிருக்கிறீர்கள். இந்தப் பேச்சு இந்த அவையின் கண்ணியத்தை எந்த அளவு காப்பாற்றும் என்று தெரியவில்லை. எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையின் கண்ணியத்தையும், மரபையும் காக்கின்ற வகையில் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர்கள் எல்லாம் கூடிய மாநாட்டிலே, அமைச்சரவை மீதும் மற்றவர்கள் மீதும் குற்றம் சாட்ட வேண்டுமென்றால் எப்படிக் குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்கு ஒரு முறையை வகுத்துக் கொண்டார்கள். இன்ன அமைச்சர் மீது குற்றம் சாட்டப் போகிறேன் என்று முன்கூட்டியே பேரவைத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் குறிப்பிட்ட அந்த அமைச்சரும் அவையில் இருக்க வேண்டுமென்று கூறலாம்; அவரும் அந்தக் குற்றச் சாட்டிற்குப் பதில் அளிக்க முடியும். உரிய ஆதாரங்களோடு அவரும் வந்து இருக்க முடியும். எடுத்த எடுப்பிலேயே திடும் என எழுந்து குற்றங்களைச் சாட்டிவிடுவதால் உடனே அதற்குரிய ஆதாரங்களோடு பதில் சொல்ல முடியாது போகலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் நேற்று கூறிய குற்றச்சாட்டைக் கூறப் போகிறேன் என்று முன்னதாகவே சொல்லி இருந்தால் முதலமைச்சர் அவர்கள் இன்று கொடுத்த அறிக்கையை நேற்றே விளக்கிக் கூறியிருக்க முடியும். அப்படிப்பட்ட முன்னறிவிப்பு இல்லாத நிலைமை காரணமாகத்தான் இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கவே பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் இத்தகைய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நான் இதற்கு முன்பு பலமுறை கூறியிருக்கிறேன். இப்போதும் கூறுகிறேன். எந்தக் குற்றச்சாட்டைக் கூறினாலும் குற்றச் சாட்டைக் கூறுகின்ற நேரத்தில் அதற்குரிய ஆதாரங்களோடு கூற வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். 'நான்கூறுகிறேன். ஆதாரம் பிறகு காட்டுகிறேன், ஆதாரம் இருக்கிறது' என்று பேசிவிட்டுப் போவது அவையின் மரபையும் பெருமையையும் காப்பதாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவைத்தலைவர் அவர்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : I raise a point of order (Interruption). A point of order can be raised at any time. The Speaker, instead of following the rules set by this House, is bringing in new factors and a new code of behaviour for us. What transpired in the Speaker's Conference, we are not aware of. We have not been given sufficient literature. Now the Speaker is saying that, if a member wants to allege anything against any Minister, he must inform the Minister, he must inform the Speaker, he must inform everybody. That is a thing which I have never heard of.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

**திரு. கே. விநயகம் :** நான் சொல்லிவிட்ட பிறகு நீங்கள் தீர்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** யார் மீது பாயிண்ட் ஆப் ஆர்டர்?





THIRU K. VINAYAKAM: On the ruling of the Speaker. There is nothing wrong.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநயகம் அவர்கள் நீண்ட நாட்களாக இந்த மன்ற உறுப்பினராக இருந்து அனுபவம் பெற்றவர்கள் என்று அடிக்கடி கூறிக் கொள்ளுகிறார்கள். நீண்ட நாள் அனுபவம் பெற்ற அவர்கள் பேரவைத் தலைவர் கொடுக்கின்ற தீர்ப்பின்மீது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது என்ன முறை என்று தெரியவில்லை. அதற்கு என்ன விதி இருக்கிறது என்பதை நீண்ட நாள் அனுபவம் பெற்ற உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இதைப் பற்றியும் பேரவைத் தலைவர்கள் கூடிய மாநாட்டில் முடிவு எடுத்தார்கள். சட்டசபையில் உறுப்பினர்களுக்கு உள்ள உரிமையைப் பறிக்கும் நிலை இல்லை. சட்டசபையின் விதிகளும், மரபுகளும் இருக்கின்றன. அவற்றைக் கடைப் பிடிக்க வேண்டியதுதான் நியாயமான முறை. சட்டசபை அங்கத்தினர்களுக்குப் புதிய முறை எதையும் புகுத்தவில்லை. ஏற்கனவே இருப்பதைதான் நான் கூறுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் தலைவர்கள் எல்லாம் மட்டுந்தான் கூடி முடிவு எடுக்க முடியுமா? சட்டசபை அங்கத்தினர்கள் எல்லாம் கூடி எப்படிப்பட்ட முறையை அனுசரிக்க வேண்டுமென்று முடிவு எடுக்கும் நிலைமை ஏற்படலாம். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் கூட எப்படி இருக்க வேண்டுமென்று முடிவு எடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்படலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆதாரங்கள் இல்லாமல் தான் குற்றச்சாட்டுகளைக் கூறுவோம் என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் வாதமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அப்படி நான் சொல்லவில்லை. மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் சொத்து விவரத்தைப் பற்றி இன்று சபையில் கொடுப்பதாகச் சொல்லியிருந்தேன். அப்போது நான் சொன்ன சில வார்த்தைகள் அவ்வளவு நல்லதாக இல்லையென்றும், குறிப்பேட்டில் இருந்து நீக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். பின்னால் நானும் யோசனை செய்து பார்த்ததில் அவை அவ்வளவு நன்றாக இருக்காது என்ற காரணத்தால் குறிப்பேட்டில் இருந்து நீக்கி விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. ஆதித்தனார் மகன் பேரில் சொத்து வைத்திருக்கிறார்கள். நானும் தப்பான எண்ணத்துடன் சொல்லவில்லை. அடாப்டெட் சன்ஸ் ஆக இருக்கலாம். அந்தக் கருத்தில் எந்த வழியாக வந்த மகன் என்று தெரியவில்லை என்று சொன்னேன். அவற்றை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கொடுத்த வாக்குறுதிக்கு இணங்க அந்த விவரத்தைக் கூறுகிறேன்.

**I do place on the table of the House regarding my reference in the Assembly, the Trust created by Thiru Si. Pa. Aditanar on the proceeding regarding the Trust and the Income-tax assessment in the High Court.**

[1970 மார்ச், 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக்கு வந்த பிறகு அவையில் வைக்கப் போகிறேன் என்று சொல்கிறீர்கள். அதைப் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் அவையில் வைக்க வேண்டும். என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்று பார்க்கக் கூட நேரம் இல்லையே. நான் பார்த்து, பேரவையில் வைக்கக்கூடியது தானா இல்லையா என்று பார்த்து, தீர்ப்பு அளிக்கவேண்டாமா?

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு பேசுகிற நேரத்தில் சென்ற கூட்டத் தொடரில் 85 லட்சம் ரூபாய்க்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் மீது ஹைகோர்ட்டில் ஒரு வழக்கு இருக்கிறது, அதற்கான ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதை அடுத்த கூட்டத் தொடரில் கொண்டு வைப்பதாகச் சொன்னார்கள். நேற்றையதினம் அதைப் பற்றிக் கேட்டேன், இப்படிச் சொன்னீர்களே அது எங்கே என்று. உடனே அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் மீது இருந்தால் என்ன அல்லது அவரது மகன் மீது இருந்தால் என்ன என்று—அன்று அழுத்தந் திருத்தமாக கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது 85 லட்சம் ரூபாய்க்கு வழக்கு இருப்பதாகச் சொன்னவர்—திடீரென்று அவர் மகன் மீது வருமான வரி சம்பந்தமாக ஹைகோர்ட்டில் வழக்கு இருக்கிறது என்று நேற்றையதினம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வருமானவரி சம்பந்தமான வழக்கு ஹைகோர்ட்டில் இருக்கிறது என்பது அவர்களுடைய குற்றச் சாட்டாகும். குற்றச் சாட்டு யாரைப் பற்றி என்று சொல்லாமல் இதோ இருக்கிறது, தருகிறேன் என்று சொல்வது சரியல்ல. தவறு இருந்தால் ஒப்புக் கொள்ளத் தயார். அது என்ன தவறு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் 85 லட்சம் ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்து ஹைகோர்ட்டில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் விவகாரங்கள் என்ன என்று அவர்கள் படித்துக் காட்டி விளக்கினால் நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றியுடையவனாக இருக்கிறேன். நான் இப்போது சொல்வது அவர் மகன் மீதும் அல்ல.

*Volume* 32, *I.T.R.*/1964.

S. B. Adityan—V—First Income Tax Officer.
In the Madras High Court.

இதைப்பூராவும் படிக்கவேண்டியதில்லை. 55 லட்சம் ரூபாய்க்கு வரி ஏய்ப்பு டெய்லி தினத்தந்தி ட்ரஸ்ட் என்றிருக்கிறது. அவரும் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறார். அவர்கள் அமைச்சராகவந்த பிறகு தினத்தந்தி ட்ரஸ்ட்தானே என்று கேட்பது பொருத்தமல்ல. அவர்கள் பேரில் உள்ள சொத்து மறைக்கப்பட்டிருக்கிறது. அது இங்கு கொடுக்கப்பட்ட கணக்கில் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப் படுகிற கணக்குகள் மகன் பேரில் இருக்கிற சொத்துக்களும்



1970 மார்ச் 7] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, இவ்வளவு தகுதி உடையவர்கள் தமக்கு கார் கூட இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பாயிண்டுக்கு வாருங்கள். முதலில் குற்றஞ்சாட்டியது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வரி ஏய்ப்பு செய்ததாக, 85 லட்சம் ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்ததாக ஹைகோர்ட்டில் வழக்கு இருக்கிறது என்று சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இதை வேண்டுமானால் படித்துக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன் அதை வைப்பதற்கு முன் தலைவரின் அனுமதி பெறவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது உங்களுக்கிடையே உள்ள விஷயம். இந்த அவை விவகாரம் என்னைப் பொறுத்து இருக்கிறது. அதை இங்கு வைப்பதற்கு தலைவரின் அனுமதியைப் பெற வேண்டும். அதில் என்ன எழுதியிருக்கிறது, எந்தக் காகிதத்தை வைப்பதாகச் சொல்லியிருக்கிறீர்களோ அது அந்தக் காகிதம் தானா இல்லையா என்று எனக்குத் தெரியவேண்டும். அதைப் பார்க்கக் கூட எனக்கு நேரம் இல்லையே. அவைக்கு வந்த பிறகு உங்கள் அனுமதியோடு கூட வைக்கிறேன் என்று சொல்கிறீர்கள். முதலில் அவர்கள் மீது வழக்கு என்று சொன்னீர்கள், பின்னர் அவர் மகன் மீதுள்ள வழக்கு என்று சொன்னீர்கள், இப்போது தினத்தந்தி ட்ரஸ்ட் பற்றியது என்று சொல்கிறீர்கள். ஆகவே, அது எதையொட்டியது என்பதை நான் பார்க்கவேண்டாமா? அவரது மகன் மீதுள்ள வழக்கு பற்றிய காகிதத்தை வைப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள், அதை வைக்கிறீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 'பவுண்ட் ஆஃப் ஃப்ளஷ்' என்று ஷேக்ஸ்பியரில் சொல்வதுபோல் இருக்கிறது. அவர்கள் குடும்பத்தின் பேரில் இருப்பதாகச் சொன்னேன், மகன் மீது என்று சொன்னதைக் கூட வாபஸ் பெற்றிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** முதலில் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது வழக்கு இருப்பதாகச் சொன்னீர்கள். பின்னர் அவர் மகன் மீது உள்ள வழக்கு என்று நேற்றைய தினம் சொன்னீர்கள். அவர் மகன் மீது உள்ள வழக்கைப் பற்றிய தஸ்தாவேஜுகளை இந்த அவையில் வைக்கவேண்டும் நேற்று கூறியபடி. இப்போது சொல்வது அதுவும் இல்லாமல், தினத்தந்தி ட்ரஸ்ட்

மீதுள்ள வழக்கு பற்றிய தஸ்தாவேஜுகளை வைப்பதாகச் சொல்கிறீர்கள். மகன் மீது என்று சொன்னால் என்ன, அல்லது ட்ரஸ்ட் மீது என்று சொன்னால் என்ன என்று சொல்வது சரியல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்படிப் போய்க்கொண்டிருக்குமானால் சட்டசபையே இல்லாமல் நடத்திக் கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் பெர்மிஷன் கேட்டுத்தான் சொல்லலாம் என்று சொன்னால் எப்படி? நேற்று சொன்னபடி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதுவும் அவைத் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் நடைபெறவேண்டும். "விதிமுறைகளில் கூறியுள்ளபடி தலைவரின் அனுமதி பெற்றுத்தான் நடைபெற வேண்டும் என்பது கூடாது. அப்படி இருந்தால் சட்டசபையே நடைபெறாது, நாங்கள் விரும்பியபடிதான் நடக்க வேண்டும், அப்படிச் செய்தால்தான் சட்டசபை நடக்கவேண்டும்" என்று அவர்கள் விரும்புகிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நேற்று வாக்குறுதி கொடுத்தேன். திரு. ஆதித்தனார் அவர்கள் மகன் மீது இருக்கிறது என்று சொன்னேன். இப்போது அந்த ட்ரஸ்ட் என்றுதான் பேசிக் கொண்டிருந்தேன். அதில் அவருக்கு சம்பந்தம் இருக்கிறது என்று சொன்னேன். ட்ரஸ்ட் பற்றி, அவர்கள் சம்பந்தப்பட்டது பற்றி படிக்கிறேன். . . . . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நேற்றையதினம் அவர் மீது இல்லை, அவர்களது மகன் மீது இருப்பதாகச் சொன்னீர்கள். இன்றையதினம் யார் மீது இருப்பதாக திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திட்டவட்டமாகச் சொல்லத்தான் சபை முன்னால் நிற்கிறேன். அவர்களே குழப்பப்படுகிறார்கள் என்றால், அவருக்கே குழப்பம் இருக்கிறது என்றால், சொத்து இருப்பவருக்கே குழப்பம் இருக்கிறது என்றால் எனக்கு எப்படி இருக்காது? முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டதால் படிக்கிறேன்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது படிக்கிற குற்றச் சாட்டை பேரவைத் தலைவரின் அனுமதியின் மீது, பேரவைத் தலைவர் அந்தக் குற்றச்சாட்டை பார்த்து பரிசிலனை செய்தபிறகு படிக்கிறாரா அல்லது விதிமுறைகளுக்கு மாறாகப் படிக்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த அவையில் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் ஆளும் வரிசையில் இருந்திருக்கிறார்கள். நீண்ட காலமாக அவர்கள் இந்த அவையில் இருந்திருக்கிறார்கள்.



இந்த அவையில் எவ்வளவோ சபாநாயகர்கள் இருந்திருக்கிறார்கள். சில மரபுகளை யொட்டித்தான் இந்தச் சபை நடந்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு குற்றச்சாட்டைப் படிப்பதாக இருந்தாலும் அதற்கு ஆதாரமான கடிதங்களை இங்கு வைப்பதாக யிருந்தால் அதன் ஒரு படியை, ஒரு பிரதியை, சபாநாயகர் அவர்கள் கையில் கொடுத்துவிட்டுத்தான் படிக்கவேண்டும். அதில் இருப்பதைத்தான் படிக்கிறாரா இல்லையா என்று தெரிந்து கொள்ள சபாநாயகர் அவர்களிடம் ஒரு பிரதியைக் கொடுத்து விட்டுப் படிப்பது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இதன் பிரதியை திங்கட்கிழமை காலையில் கொடுத்துவிட்டு திங்கட்கிழமை படிக்க அனுமதி கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியானால் திங்கட்கிழமை அன்று படியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, . . . .

### (4) நடை முறைக் கேள்வி.

**உறுப்பினர்களுக்கு அவர்களுடைய உரையின் படிவத்துடன், அவ்வுரையின் இடையில் செய்யப்படும் அமைச்சர், மற்றவருடைய குறுக்கீடுகளின் படிவமும் சேர்த்து அனுப்பாதது குறித்து.**

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த விதி மீறப்பட்டிருக்கிறது ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** விதி 234.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதில்,

'An official report of the proceedings of the Assembly shall be published under the supervision of the Secretary and shall be made available to every member.'

என்று சொல்லப் பட்டிருக்கிறது. அது எந்த வகையில் மீறப்பட்டிருக்கிறது?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அதில் தப்பு நடந்திருக்கிறது. தலைவர் அவர்களே, ஒவ்வொரு உறுப்பினரும் பேசும் பேச்சுக்கள் அவர்களுடைய கவனத்திற்கு அனுப்பப்படுகிறது. முன்பெல்லாம் அந்தப் பேச்சுக்களைக் கொடுக்கிற நேரத்தில் அந்தப் பேச்சுக் குறிப்பு, அமைச்சர்கள் குறுக்கீடுகள் செய்வது அல்லது அங்கத்தினர்கள் குறுக்கீடு செய்வது இவை எல்லாம் வரும். அந்தப் பிரதியில், சட்டசபையில் செய்த குறுக்கீடுகளும், குறிப்பில் வந்ததற்கும் வித்தியாசம் இருக்கிறதா என்பதை அப்போதுதான் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இப்போது உறுப்பினர்களின் பேச்சுக்கள் . . . .

அரசாங்கம் திட்டமிடுகிறதோ அதேபோல் கிராமாந்தாரங்களில் வீடில்லாதவர்களுக்கு வீடு கொடுக்க அரசாங்கம் வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஐந்தாவது நிதிக் கமிஷன் நீதி வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு, இந்த மன்றத்தில் மட்டுமல்ல, ஏனைய மாநிலங்களின் சட்டமன்றத்திலும் எழுந்திருக்கிறது. வாதாடியாவது, போராடியாவது அதிக நிதி நமக்காக பெறுவதில் காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சேபணை இல்லை. நமது நிதி மேம்பாடு அடைய வேண்டும். அதற்காகக் காங்கிரஸ் கட்சி அயராது உழைக்கும் என்பதை நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, லேண்ட் சீலிங் இருக்கிறது. 30 ஏக்கராவிலிருந்து 15 ஏக்கராவாகக் குறைக்கப்பட்டிருப்பதால் உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்படும் என்ற வாதம் எழுப்பப்பட்டிருக்கிறது. நான் ஒன்று சொல்கின்றேன். சீலிங் என்றால் 'ப்ராக்மெண்டேஷன்' அல்ல. ஏதோ போடுகின்ற 'இன்புட்ஸ்' போட்டால் சரியாக உற்பத்தி பெருகும் என்ற கருத்து அல்ல. நிலச்சீர் திருத்தம் இல்லாத காலத்தில், உற்பத்தி தானாகப் பெருகிவிடவில்லை. நிலச் சீர்திருத்தத்தினால் 15 ஏக்கராவாகக் குறைத்திருப்பதால் சிறு நிலச் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சொல்லுகிறேன், நிலச் சீர்திருத்தத்தை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நிலச்சீர்திருத்தம் ஏற்படக்கூடிய காலத்தில் உண்டாகும் அபாயகரமான நிலைமைகளைப்பற்றியெல்லாம் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று சிறுநிலச் சொந்தக்காரர்கள் வெளியூர்களில் வேலைக்கு அமர்ந்திருக்கிறார்கள். சொந்தமாக நிலத்தைப் பயிரிட வேண்டுமென்பதற்காக, 'ரிசம்ப்ஷன் பவர்' இருப்பதால் கொடுக்கிறார்கள். 'காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' வரப்போகும் நேரத்தில் என்னென்ன வழி செய்யப் போகிறார்கள் என்பதற்கு அமைச்சரவையிடமிருந்து விளக்கம் தேவை. உற்பத்தி பாதிக்காது என்பதை நான் பகிரங்கமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உத்தரப் பிரதேசத்தில் 40 ஏக்கர், ஏனைய பகுதியில் இன்னும் அதிகமாக வைத்திருக்கிறார்கள் ஒரு பத்திரிகையில் தலையங்கங்கள் தீட்டியிருந்தார்கள்.

'Firgmentation is one thing and land ceiling is another thing' என்று நான் குறிப்பிடுகிறேன். ஆகலால் இது உற்பத்தியைப் பாதிக்கும் என்ற ஐயப்பாடே தேவையில்லை, மக்களுக்கு அதிகமாக ஊக்கமளிக்க வேண்டும். அதிகமாக உரம் விநியோகம் செய்ய வேண்டும், காலாகாலத்தில் நவீன முறையிலே எல்லாக் கருவிகளையும் வழங்க எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





நிலச்சீர்திருத்தத்தை ஆட்சேபிக்கவில்லை என்பதையும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் சிறுநிலச் சொந்தக்காரர்களுக்கு அதிக வசதி செய்யக்கூடிய அளவுக்கு அரசாங்கம் வேண்டிய சட்டங்களை உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றேன்.

முப்பத்தேழு ஆலைகள் மூடப்பட்டு கிடந்தன; இவற்றிலே 13 ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நலிந்த ஆலைகளுக் கெல்லாம் இன்று போதிய பொருளுதவி செய்யப் போகின்றோம் என்று அரசாங்கம் கூறுகிறது. இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகுதான் பெருவாரியான ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அந்த ஆலைகளைத்திறந்து உடனடியாக வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

இன்று கற்றறிந்தவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. என்ஜினியர்களுக்கு வேலையில்லை, ஆசிரியர்களுக்கு வேலையில்லை. பல இலாகாவிலிருந்து பதவியைப் பிரித்துவிடக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சிவில் சப்ளைஸ் இலாகாவிலுள்ளவர்களைப் பிரித்து மாற்று வேலை கொடுக்கப் போவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆனால் இன்னும் பிரிக்கப்பட்டவர்கள் பலரும் இருக்கிறார்கள். பட்டியலையே அமைச்சரவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு மாற்று வேலைகளைக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்னும் குறிப்பாக, இந்தத் தேசத்தில் நல்ல பல காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. அன்று எழுச்சி நாள் கொண்டாடினார்கள், சேலம் இரும்பாலைக்காக. நாங்களும் எவ்வளவோ ஆவலோடு எதிர்பார்த்தோம். மத்திய சர்க்கார் 'கிரீன் சிக்னல்' இன்னும் கொடுக்கவில்லை. இது நான்காவது திட்டத்திலாவது உட்படுத்தப்படவில்லையென்றால், அதற்காக அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன். சேது சமுத்திரத் திட்டமும் இன்றியமையாத திட்டம். அதையும் உருவாக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எல்லாத் துறைகளிலும் பார்க்கும்பொழுது இந்த அரசாங்கத்திலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. வேலைவாய்ப்பு இல்லாத நிலை இருந்து கொண்டேயிருக்கிறது. ஆதலால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[1970 மார்ச் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டும் வரவேண்டுமென்று சொல்கிறீர்கள். உங்கள் பேச்சு மட்டும் வருகிறது. இடையி லுள்ள அமைச்சர்களின் குறுக்கீடுகள் வரவில்லை என்று சொல்கி றீர்கள். அதை உங்களுக்கு அனுப்புவது அது நீங்கள் கூறியது தானா அல்லது வேறுவிதமாக இருக்கிறதா என்று பார்ப்பதற் காகத்தான் உங்கள் பேச்சின்பிரதி உங்களுக்கு அனுப்பப்படு கிறதே தவிர மற்றதற்காக அல்ல. ஆகவே அமைச்சர்களின் குறுக்கீடுகள் போன்ற மற்ற பேச்சுக்களை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும் என்பது முறையல்ல. ஆகவே அதில் எந்த விதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

## (5) 1970-71-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சபாநாயகரவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்திலே ஓரிரு கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பாக இந்த அவையின் முன் வைக்கின்றேன். முதலிலே நமது வரவு-செலவுக் கணக்குத் திட்டத்தை மாண்புமிகு நிதி யமைச்சரவர்கள், மத்திய வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்பு தாக்கல் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 2½ மணிநேரம் தான் இருக்கிறது. 1 மணிக்கு 'கில்லட்டின்'. வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். அமைச்சரவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமென்று சொல்லிவிட்டால் நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கு 1½ மணி நேரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு 1½ மணி நேரம் வேண்டுமென்று சொன்னால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேச முடியாது, மற்றவர்கள் பேச முடியாது. திரு. பூவராகனுக்கு 15 நிமிஷங்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுதே 'அலாட்' பண்ணிவிடுவது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்களுக்கு ஒரு மணி நேரம். எதிர்க் கட்சித் தலைவர்கள் 11 மணிக்கு ஆரம்பித்து 12 மணிக்குள் முடித்து விட்டார்கள் என்றால் சரியாக இருக்கும் அந்த அரை மணி நேரத்தை திரு. பொன்னப்ப நாடார் அவர் களும், மற்றவர்களும் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்படி மத்திய சர்க்கார் சுங்க வரியை அதிகப்படுத்திய காரணத்தால், மாநில சர்க்காரும் விற்பனை வரியை அதிகப்படுத்திய காரணத்தால் விலைவாசி



1970 மார்ச் 7] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அதிகமாக ஏறி இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். இந்தமாதிரி இருதரப்பினரின் வரிக்கொள்கையின் காரணமாக விலையேற்றம் ஏற்பட்டிருப்பதால் இந்தத் தமிழகத்திலே பெருங் கஷ்டங்கள் ஏற்படும் என்பதை நான் இந்த அரசாங்கத்திற்கு எச்சரிக்க விரும்புகிறேன். உதாரணமாக வாழ்க்கைப் புள்ளி அதிகமாக ஆகிக் கொண்டிருக்கிறது. இன்றிருக்கும் நிலைமையில், தொழிலாளர்கள் அவர்களுக்கு அதிக ஊதியம் வேண்டுமென்று கேட்கிறார்கள், என்.ஜி.ஓ. க்கள் அவர்களுக்கு அதிக ஊதியம் வேண்டுமென்று கேட்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தின் காரண மாக இது நியாயமான முறையிலே தெளிவாக்க வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலை உருவாகிவிடும் என்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். மத்திய சர்க்காரின் வரிக்கொள்கைள், மாநில சர்க்காரின் வரிக்கொள்கைகள் ஆக இரு அரசாங்கங்களின் வரிக் கொள்கைளின் காரணமாக விலையேற்றம் ஏற்படுகிறது. ஒருசில அரசியல் கட்சிகள் 'வறுமையே வெளியே போ', 'குவிட் பாவர்ட்டி' என்ற கோஷங்களை மக்கள் மத்தியிலே சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். வறுமையே வெளியே போ என்றால் உடனடியாக வறுமை வெளியே போய்விடுமா ? அதற்குக் கடினமாக உழைக்க வேண்டாமா என்பதைத் துருவித்துருவி ஆராய்ந்து அலசிப் பார்க்க வேண்டும்.

இந்த தேசத்தில் உழைக்கும் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏதோ பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது, உழவர்களுக்கு அதிக மான வசதிகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன , என்றெல்லாம் இங்கே கூறப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையிலேயே நாம் அதைப்பற்றிச் சிந்திக்கின்றபொழுது கிராமாந்தரங்களிலே வாழ் கின்ற ஏழை மக்களின் வாழ்க்கைதரம் எவ்வளவு முன்னேறியிருக் கிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணமாக நான் கூற விரும்புகிறேன். கிராமந்தரங்கள் இன்று புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஏதோ, பட்ஜெட்டில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறேன். ஆனால் கிமாமாந் தாரங்களில் இருக்கும் ஆக்கப் பணிகளுக்கு ஒரு கோடி ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கின்றது என்ற குற்றச்சாட்டை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற ஆசைப்படுகிறேன். உதாரணமாக, கிராமங்களில் வாழும் மக்களுக்கு, ஏழை மக்களுக்கு இன்று வீடு இல்லாத அவல நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்திலே பத்திரிகையிலே பார்த்தேன், திரு. கே. சந்தானம் என்ற பெரியார் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். கிராமந்தாரங்களில் வீடில் லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உருவாக்க வேண்டுமென்றும், அதைப் பஞ்சாயத்து மூலமாகக் கைக்கொள்ள வேண்டுமென்ற திட்டத்தையும் அந்தப் பத்திரிகையிலே விடுத் திருக்கின்றார்கள். இதைப்பற்றி அரசாங்கம் ஆழ்ந்து ஆலோசிக்க வேண்டும். எப்படிப் பட்டணப் பகுதியிலே குடிசைகளை ஒழிக்க

இன்னொரு விஷயம். உலகத்தமிழ் மாநாடு நடந்தபொழுது, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வார்த்தைக்கு ஸ்டாம்பிலே இந்தியிலே மொழி பெயர்ப்பு இருந்த காரணத்தினாலே அன்று நிறுத்தப்பட்டது. சமீபத்திலே மறைந்த தலைவர் மாமேதை, உயர்திரு அண்ணா அவர்கள் உருவம் பொறிக்கப்பட்ட ஸ்டாம்பை வெளியிட்ட பொழுது அதிலே இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் தமிழக சர்க்கார் சொல்லவில்லை. ஒருவேளை இந்திமீது இவர்களுக்குள்ள வெறுப்பு குறைந்திருக்கிறதா என்று மக்கள் கவனத்தில் வந்திருக்கிறது.

எங்கள் ஜில்லாவிற்கு சட்டசபை உறுப்பினர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சமீபத்திலே விஜயம் செய்திருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே, அவருக்குப் போலீஸ் அணிவகுப்பு மரியாதை யெல்லாம் செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு குழுவின் உபதலைவர் என்ற முறையில் வந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்படிக் குழுத் தலைவருக்குப் போலீஸ் அணிவகுப்பு மரியாதை செய்யும் மரபை புதிய அரசாங்கம் செய்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. அப்படியென்றால், பொது கணக்குக் குழுவின் தலைவராக இருக்கும் எதிர்க் கட்சித் தலைவரான எங்கள் கட்சித் தலைவருக்கும் அந்த மாதிரி உண்டா? அந்தப் புகைப் படமும் என்னிடத்தில் இருக்கிறது, மாலைமுரசுப் பத்திரிகையில் அந்தப் படம் வெளிவந்திருக்கிறது. இம்மாதிரி போலீஸ் அணிவகுப்பு மரியாதை எம். எல். ஏக்களுக்கும் உண்டா என்பதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னொரு விஷயம், எங்கள் பகுதியில் ரயத்வாரி செட்டில்மெண்டு பற்றியது. இதைச் சார்ந்து அந்தப் பகுதியில் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. நான்கு வருடங்களுக்கு ரயத்வாரி வரிகளை யெல்லாம் ஒரே தவணையாகக் கொடுக்க வேண்டும் என்று அங்கு கெடுபிடி செய்து கொண்டிருக்கிறார்கள். ரயத்வாரி முறையை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று பேசிக் கொண்டவர்கள், இப்பொழுது அவர்கள் கையில் அரசாங்கத்தின் அதிகாரம் இருக்கிறது. ரயத்வாரி முறையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் உடனே அதை ரத்து செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்காக வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பிற்பாடு மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் பெரிய ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். எந்தப் பகுதியில் சென்றாலும்,



இம்மாதிரியான சலசலப்பு ஏற்படக்கூடிய தன்மை இருந்து வருகிறது என்பதையும் கூறிக்கொள்கிறேன். சட்டம், ஒழுங்கை சரியான முறையில் இந்த அரசாங்கம் நிர்வகிக்கவேண்டும். காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு நீதி, ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கு இன்னொரு நீதி என்ற முறையைக் கைவிட்டு, நியாயமான முறையில் எல்லா மாவட்டங்களிலும் சீரும் சிறப்புமாக ஆட்சி செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கத்தை வலியுறுத்துக் கேட்டுக் கொள்கிறேன். பல இடங்களில் காங்கிரஸ்காரர்கள் தாக்கப்படக் கூடிய நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. எங்கள் எம். எல். சி. தாக்கப்பட்டிருக்கிறார். இது மாதிரியான நிலைமையை திவிர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோ. பூவராகன் . . .

**திரு பி. ஜி. கருத்திருமன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சில பேர்கள் வேறு கட்சியினர் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வேறு இடங்களிலிருந்து பேச வேண்டும். சபாநாயகர் அவர்களுக்குப் பெயர் கொடுக்கப்பட்டும் இடம் ஒதுக்குவதற்கு ஏன் இவ்வளவு நாள்? சபாநாயகர் ஏன் தாமதமாக இருக்கிறார்கள்? அத்துடன் எங்கள் கட்சியினர் பேசும்படியான சந்தர்ப்பத்தில் எங்களுக்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. எங்களுடனே சேர்ந்து உட்கார்ந்துகொண்டு எங்களை தாக்கிப் பேசினால் சகிக்க முடியாத நிலை ஏற்படும். அதே இடத்தில் உட்கார்ந்து கொண்டு பேசினால் அந்த நிலைமை ஏற்படும் ஆகவே, தங்களுடைய தீர்ப்பு என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவைக்கு வந்த பிற்பாடு கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லா உறுப்பினர்களையும் ஒரு முகமாகப் பார்க்க வேண்டும் பேரவைத் தலைவர். யாருக்கு எந்த இடம் ஒதுக்கப்படுகிறதோ அந்த இடத்தில் உட்கார வேண்டும், அப்படி இடம் கொடுக்கிற உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது.
( A member shall sit in such order as the Speaker may, fire
என்று விதி கூறுகிறது. பேரவைத் தலைவர் ஒரு உறுப்பினருக்கு எந்த இடம் கொடுத்திருக்கிறாரோ அவர் அந்த இடத்திலிருந்து பேசவேண்டும். ஆகவே, இன்னும் ஏன் வேறு இடம் கொடுக்கவில்லை என்று பேரவைத் தலைவரைக்கேட்பதற்குச் சட்ட மன்ற விதி முறைகளில் இடமில்லை. இடம் கொடுக்கிற உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. எந்த முறையில் இடம் கொடுப்பது என்பதைப்பற்றியெல்லாம் விதி முறைகளில் இல்லை. கட்சிவாரியாகக் கொடுக்க வேண்டும் என்றும் விதிமுறைகள் கூறவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியில்லை இல்லாவிட்டால் அடல்டரேஷன் ஏற்படும். There will be adulteration கட்சி ஒழுக்கத்தோடு அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு பேசவேண்டும். அவர்களுக்காவது புத்தி இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கலந்து உட்கார்ந்தால் வேகம் இல்லாமல் இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் என்ன கேட்கிறேன் என்றால், ஒரு கட்சியைச் சார்ந்தவர்களுக்கு அந்தக் கட்சியில் விசுவாசம் வேண்டும். அவர்கள் ஒரு பக்கமாக இருக்க வேண்டும். என்னைக் கேட்டார்கள். நான் முடியாது என்று சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவருக்கு மரியாதை வைக்க வேண்டும். எதிர் பாராத அளவுக்கு திடுக்கிடும்படியான சம்பவங்கள் ஏற்படலாம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று தெரியவேண்டும். தயவு செய்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு பகுதியில் ஒரு கட்சி அங்கத்தினர் சேர்ந்து தான் இருக்க வேண்டும். சேர்ந்து இல்லாவிட்டால் முறைகேடானது. வேறு கட்சி என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான்காவது பிளாக்கில் கம்யூனிஸ்டு, பி. எஸ். பி, எஸ். எஸ்.பி., டி. எம்.கே எல்லோரும் இருக்கிறார்கள் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு பக்கத்தில் சேர்ந்துதான் உட்கார்ந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்குகிற முழு உரிமையும் பேரவைத் தலைவரைச் சார்ந்தது. ஆனால் ஒரு மரபு கையாளப்படுகிறது. ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில், 'கண்டிகுவஸ்லி' என்ற வகையில் இடம் ஒதுக்கித் தரப்படுகிறது. தாங்கள் தனிக் கட்சி, தங்களுக்கு தனி இடம் ஒதுக்க வேண்டும் என்று மாண்புமிகு பூவராகன் அவர்கள் கேட்டிருந்தார்கள். அது பேரவைத் தலைவர் அவர்களின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கட்சித் தலைவர்களைக் கலந்து கொண்டு இடம் ஒதுக்குவதுபற்றி முடிவு எடுக்கப்படும். எந்த ஒரு குறிப்பிட்ட இடமும் காங்கிரஸ்காரருக்குச் சொந்தம் என்பது இல்லை. குறிப்பிட்ட இடம் எந்தக் கட்சிக்கும் சொந்தம் என்பது இல்லை. உட்கார்ந்திருப்பவர்களுக்குச் சொந்தம். ஒவ்வொரு கட்சிக்கும் தனியாக ஒரு இடம் ஒதுக்குவது என்ற ஒரு மரபு கையாளப்படுகிறது. அந்த மரபு கைக்கொள்ளப்படும். அது பரிசீலனையில் இருக்கிறது என்று பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரீஅலகேஷன் ஆப் ஸீட்ஸ் பற்றி நாம் உட்கார்ந்து பேசி முடிவு எடுக்கலாம். அதுவரை இந்த இடம் பூவராகன் அவர்களுக்குத் தான் சொந்தம். எந்த ஒரு கட்சிக்கும்



சொந்தம் இல்லை. இப்பொழுது அந்த இடத்திலிருந்து அவர் பேசுவதில் தவறு ஒன்றுமில்லை. விரைவிலே முடிவு எடுக்கப்பட்டு, தனியாக இடம் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் ஐந்து நிமிடங்கள் போய்விட்டன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்கள் அப்பொழுதே தனி இடம் கொடுத்திருந்தால் இந்த ஐந்து நிமிடங்கள் போயிருக்காது. மரபு, மரபு என்று சொல்கிறீர்களே, மரபைக் கையாள வேண்டும் என்று சொல்கிறீர்களே, நீங்கள் மட்டும் மரபை மீறலாமா? இந்தக் கட்சியிலிருந்து கொண்டுதான் பேசினேன் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? நிலவரம் அப்படிப் போய்க் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே மரபு ஒன்றும் மீறப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் யாரும் எந்த இடத்தையும் தனக்குச் சொந்தம் என்று உரிமை பாராட்ட முடியாது. பேரவைத் தலைவர் கொடுக்கிற இடத்தில்தான் உட்கார வேண்டும். இடம் கொடுக்கிற உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. இந்த இடம் எனக்குச் சொந்தம் என்று சொல்லக்கூடிய உரிமை மாண்புமிகு உறுப்பினருக்கு இல்லை. நம்முடைய அவை முன்னவர் சொன்னதுபோல கட்சிவாரியாக இடம் கொடுக்க வேண்டும் என்பது ஒரு மரபு. நான் ஏற்கனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். திரு. பூவராகன் அவர்கள் தனி இடம் கேட்டிருக்கிறார்கள் அவர்களுடைய கட்சிக்கு. அதேபோல் பார்வேர்டு பிளாக் கட்சிக்குத் தனி இடம் கேட்டிருக்கிறார்கள் அவர்கள். அதே நேரத்தில் அதில் கொஞ்சம் சிக்கல்கள் இருக்கின்றன. அதைப் பார்த்து பரிசீலனை செய்து இடம் ஒதுக்க வேண்டும். இப்பொழுது ஒரு இடம் கொடுத்துவிட்டு, மறுபடியும் இன்னொரு இடம் மாற்ற வேண்டாம் ஒரே கூட்டத் தொடரில் என்பதற்காகத் தான் ஒரு முடிவு தெரிந்த பிறகு எல்லோருக்கும் இடம் ஒதுக்கலாம் என்று காத்திருக்கிறேன். அந்த இடத்திலேயே அவர்களை உட்கார வைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய இடத்திலிருந்து வேறு யாராவது வந்து பேசக்கூடுமோ என்று பயப்பட வேண்டாம். நிரந்தரமாக அவர்களுக்கே அந்த இடம் சொந்தமாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்கள் தயவில் நான் எதிர்க் கட்சித் தலைவராக இங்கே வரவில்லை. என்னுடைய சக்தியைக் கொண்டு தான் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். வேண்டுமானால், நீங்கள் அங்கே நிரந்தரமாக உட்கார்ந்து கொண்டால் போதும்.

[திரு. கோ. பூவராகன்] [1970 மார்ச் 7

இந்த பட்ஜட்டைத் தொடர்ந்து பார்க்கும் போது, நம்முடைய தமிழ் நாட்டிற்கு நிதிநிலையைப் பொருத்தவரையில், ஒரு நிரந்தரமான புகழ் உண்டு. மற்ற மாநிலங்கள் பாராட்டும் அளவிற்கு, நம்முடைய மாநில நிதிநிலை ஸ்திரமான தன்மையுள்ளதாக இருக்கும். அப்படித் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. ஆனாலும், இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது. தொடர்ந்து ஆண்டுதோறும் கொஞ்சம் திட்டங்கள் உயர்ந்து நல்ல முறையில் காரியங்கள் நடந்து வரும்போது, இந்த ஆண்டு குறைவாக மதிப்பீடு இருப்பதற்குக் காரணங்கள் என்ன என்று தெரியவில்லை. மற்ற மாநிலங்களைப் பார்க்கும் போது, அண்டை மாநிலங்களாகிய ஆந்திரா, மைசூர், கேரளா போன்ற மாநிலங்களைப் பார்க்கும் போது, நம் நிலை உயர்ந்துதான் இருக்கிறது. இருந்தாலும், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்திருப்பதற்குக் காரணங்கள் என்ன என்று தெரியவில்லை.

மூலதனச் செலவை ஆண்டுதோறும் குறைத்திருக்கிறோம், மூலதனச் செலவு குறைந்து, நிர்வாகச் செலவு பெருகியிருக்கிறது, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்த முறையில் நம்முடைய மதிப்பீடு இருந்தால் நல்ல முறையில் சமூகப் பொருளாதார அரசியல், நிலைகளுக்கு உகந்ததாக இருக்க முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். ஆகவே, மூலதனச் செலவில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அதிகமாக மூலதனத்தைப் போட்டு, முதலீடு செய்து, பொருளாதாரத் துறையை வளர்க்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கம் ஏற்று நடத்தும் துறைகள் அத்தனையிலும் வருமானங்கள் குறைந்து ஆண்டுதோறும் நஷ்டத்தில் இருக்கின்றன, அவற்றைச் சரி செய்ய வேண்டும் என்று. அதற்கு பராமரிப்பு வேண்டும் என்று சொன்னார்கள். அதை நானும் வற்புறுத்துகிறேன்.

1966-67-ல் செலவிட்ட தொகையைவிட 1970-71-ம் ஆண்டு செலவினங்கள் அதிகம் என்று நிதி அமைச்சர் மதிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது 1966-67-ல் பட்ஜெட் எந்த அளவிற்கு இருந்தது என்று பார்க்க வேண்டும். அப்பொழுது பட்ஜெட் 201 கோடி ரூபாய். சில இனங்களை மட்டும் குறிப்பாக, நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இலாகாவில் தவறாகக் கணக்கிட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட சிலவற்றைக் கூற விரும்புகிறேன். 1966-67-ல் 201 கோடி ரூபாய்க்குத் திட்டம் இவற்றில் சாலை பேணுதல் பணிக்கு 518 லட்ச ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். 1970-71-ல் 300 கோடிக்கு ரூ. 719 லட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். இதில் வித்தியாசம் இல்லை. அதிகம் பணம் செலவிட ஒதுக்கியதாக இல்லை. குறைவாகத்தான் இருக்கிறது. அதே போன்று சாலை மேம்பாட்டிற்கு 1966-67-ல் ஒதுக்கியது 201



1970 மார்ச் 7] [திரு. கோ. பூவராகன்]

கோடிக்கு 124 லட்சம் ; ஆனால் 300 கோடிக்கு 1970-71-ல் 161 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதுவும் குறைவாக இருக்கிறது, இவர்கள் கொடுத்த கணக்குப் பிரகாரம். அதே போன்றுதான் அரிசன நலத் துறைக்கு 201 கோடிக்கு 1966-67-ல் 405 லட்சம், ஆனால் 1970-71-ல் 300 கோடிக்கு 519 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இவர்கள் கூற்றுப்படிப் பார்த்தால் 600 லட்சத்திற்கு மேல் ஒதுக்க வேண்டும். கூட்டுறவுத் துறையில், 201 கோடிக்கு 1966-67-ல் 31 லட்சம் ஒதுக்கியிருந்தது. இப்பொழுது 300 கோடிக்கு 1970-71-ல் 44 லட்சம் தான். இவ்வாறு பார்த்தால் அதிகம் ஒன்றும் செலவிற்காகப் பணம் ஒதுக்கவில்லை என்பது தெரிகிறது. அதிகமாகக் கவனம் காட்டுகிறோம் என்பது சரியில்லை.

ஆனால், பல் வேறு துறைகளில் அதிகமாகக் கவனம் செலுத்தியிருக்கிறோம். ஆனால், நிதிநிலை அறிக்கையில் குறித்திருப்பது கணக்குச் சரியானதாக இல்லை. சென்ற ஆண்டு ஒதுக்கிய பணம் ஒழுங்கான முறையில் செலவு செய்யப் படவில்லை. உதாரணமாக வேளாண்மைத் துறை, கால்நடை வளர்ப்புத் துறை, தொழில் வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, காட்டு வளம் போன்ற இனங்களில் சரியான முறையில் பணத்தைச் செலவு செய்யவில்லை. அதற்கு என்ன காரணம்? எதனால் தயக்கம்? இப்படி முக்கியமான இனங்களில் செலவழிக்காமல் இருக்கிறார்களே, ஏன்?

அடுத்து, வரி போடுகிறார்கள். இந்த ஆண்டு வரி போட்டிருக்கிறார்கள் என்றால், அடுத்த ஆண்டு, அதற்கு அடுத்த ஆண்டு, வரி போட முடியாது, தேர்தல் வருகிறது. ஆகவே, இந்த ஆண்டே நிதிநிலையைச் சரிக்கட்டிவிடலாம் என்று போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த ஆண்டு இப்படி வரி போடாமலேயே கூடச் சமாளித்திருக்கலாம். இருந்தாலும், அடுத்து அடுத்து வரும் ஆண்டுகளில் எப்படியிருக்குமோ என்று, அடுத்த அடுத்த ஆண்டுகளில் போடாமல் இருக்க, கொஞ்சம் வரி இனங்களைக் கூட்டியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட வரியினங்களைப் பார்க்கும்போது, அதிலே விற்பனை வரியை எடுத்துக் கொண்டால், அதைப் பொருத்த வரையில், அடுத்த மாநிலங்களில் விற்பனை வரியை எப்படிப் போட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து நாம் மாற்றங்களைச் செய்ய வேண்டும். அங்கே 13 சதவிகிதம் என்றால் நாம் இங்கே 15 சதவிகிதம் என்று மாற்றினால், நமக்கு விற்பனை வரி குறைவாகப் போய்விடும். வியாபாரத்திலும் சுணக்கம் ஏற்படும். அங்கேயிருக்கும் முறையையும் பார்க்க வேண்டும். உதாரணமாக, ஒரு பஸ் என்று எடுத்துக் கொள்ளுங்கள். பாடி வாங்க வேண்டும் என்றால், நம் ஊரில் 15% என்றால், அடுத்த ஊரில் 13% என்றிருந்தால், பஸ் வாங்குகிறவர் அங்கே போய் பாடியை வாங்கி கட்டிக் கொண்டு வந்து விடுவார்கள். இங்கே வந்த பிறகு ரீ-ரெஜிஸ்ட்ரேஷன் செய்து கொண்டு விடுவார்கள். நமக்கு அதனால் வரும் வரியும் போய்விடும், வியாபாரமும் போகும். பல இனங்களில் போட்டிருக்கும் வரி அதிகமாக இருக்கிறது. 6லிருந்து

* திரு. கோ. பூவராகன் : இந்த இடம் ஒதுக்குகின்ற பிரச்னையில் 10 நிமிடங்கள் போய்விட்டன. (மாண்புமிகு பேரவைத் தலைவர் : 6 நிமிடங்கள் தான்) கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய கட்சிக்குத் தனியாக இடம் ஒதுக்குகிறதா, இல்லையா என்பது பற்றி கூட ஒன்றுமில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு உட்கார்ந்திருக்கிறவர்களுக்குப் புத்தியில்லை என்று சொன்னார்கள். விவாதத்தை எழுப்பியவருக்கு எவ்வளவு புத்தி தீட்சண்யம் இருக்கிறது என்பதைப் பற்றி நன்றாகத் தெரிந்துவிட்டது இந்த பிரச்சினையை எழுப்பியதன் மூலம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்களுக்குப் புத்தி தீட்சண்யம் இருக்கிறது என்றால் அந்தப் பக்கம் போய்விட வேண்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் :

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று."

என்றெல்லாம் படித்து இருக்கிறோம், நாம் அந்த மரபை ஒட்டியல்லவா சொற்களைக் கையாள வேண்டும். ஆத்திரப்பட்டு பேசக் கூடாது. மாண்மிபுகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் வாயில் இப்படிப் பட்ட சொற்களா வரவேண்டும்? கண்யமான சொற்களைக் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கண்யத்தைப்பற்றி மக்கள் அறிந்துகொள்வார்கள். யார் கண்யமாக இருக்கிறார்கள், இல்லை என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள்.

திரு. கோ. பூவராகன் : ஆகையால் நான் இந்த இடத்திலிருந்து பேசுவதில் தவறு ஒன்றுமில்லை. இந்த மன்றத்தில் எந்த இடத்திலிருந்து பேசினாலும், இந்த மன்றத்தில் எதைப் பேச வேண்டுமோ, எதை எடுத்து வைக்க வேண்டுமோ, எது நாட்டு மக்களுடைய நலனுக்குத் தேவையோ அதை எடுத்துச் சொல்வதற்குத்தான் இந்த மன்றம் இருக்கிறது. சில சமயங்களில் வேண்டாத விவாதத்தை எழுப்பிவிட்டு, அதை வித்டிரா பண்ணுகிற அளவுக்கு நான் எப்பொழுதுமே போகமாட்டேன் என்பதை முதலில் சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்டமன்றத்தில் இப்பொழுது நான்காவது நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நான்காவது நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதில், தொடர்ந்து அளித்த மூன்று நிதி நிலை அறிக்கைகளுக்கும் இந்த நான்காவது அறிக்கைக்கும் ஒரு வித்தியாசத்தைப் பார்க்கிறேன். என்னவென்றால், இந்த அறிக்கை மட்டுமல்லாமல், இன்றைய தினம் நாட்டில் இருக்கும் நிலைமை, உலக நிலைமை, முற்போக்கு சக்திகள்தான் இன்றைய தினம் நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்பதையும் முற்போக்குச் சக்திகள்



தான், முற்போக்கு எண்ணங்கள், லட்சியங்கள், இவற்றை செயல்படுத்த முன்னோடியாக இருப்பதையும் பார்க்கிறோம். ஆகவேதான், பிற்போக்குவாதிகளும்கூட நாங்களும் முற்போக்குக்காரர்கள் என்று சொன்னால்தான் நாட்டில் நடமாட முடியும் என்ற நிலை இருப்பதைப் பார்க்கும்போது, கனம் நிதி அமைச்சர் அவர்களும் பல முற்போக்கு எண்ணங்களை இந்த நிதி நிலை அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் உள்ள உறவு முறைகள்; இரண்டாவது, சென்ற ஆண்டு செய்த காரியங்கள்; மூன்று, வரி விதிப்பு, அதற்கான காரணங்கள், நான்காவது, பல புதிய முயற்சிகள், முன்னேற்றத்திற்கான காரியங்கள். இப்படி நான்கு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். முதல் வகையை எடுத்துக் கொண்டால் மத்திய ஆட்சி, சுயாட்சி இவற்றைப் பற்றிப் பேச நேரம் இல்லை. அதில் புக விரும்பவில்லை, எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறோம். மத்திய சர்க்கார் திறமையாக, நிலையாக, உறுதியாக இருந்தால்தான் மாநில நிலைகளுக்குத் தக்கவாறு, அவற்றைச் சரி செய்து, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமை, பங்கு முதலிய காரியங்களில் தலையிட்டுச் செய்யமுடியும் என்பதனை தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை நன்கு எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு நிலைமைகள் இருக்க, இப்பொழுது இருக்கும் மத்திய சர்க்கார் நம்முடைய மாநில சர்க்காருக்குப் பாரபட்சமாக இருந்தார்கள், பாராமுகமாக இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு அங்கத்தினர் 'மார்வாடி வேலை செய்கிறது' என்று சொன்னார்கள். அவ்வாறு செய்திருக்கிறதா? இந்த அரசைப் பொருத்தவரையில் என்று பார்த்தால் எதிர் பார்த்ததைவிட அதிகமாகவே இன்றைய தினம் மத்திய சர்க்கார், நம்முடைய மாநில சர்க்காருக்குப் பரிவாக நடந்து, மனமார எல்லா உதவிகளையும் கொடுத்திருக்கிறது. இதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மத்திய சர்க்காரிடம் மானியமாக நாம் எதிர்பார்த்தது 31 கோடி ரூபாய், சென்ற ஆண்டு கிடைத்தது 35 கோடி; அடுத்து வருமான வரியில் பங்கு எதிர்பார்த்தது 15 கோடி ரூபாய். அவர்கள் இப்பொழுது 21 கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்திருக்கிறார்கள். மத்திய வரியில் நாம் எதிர்பார்த்த பங்கு 38 கோடி, என்றால், இப்பொழுது நமக்கு அவர்கள் கொடுத்தது 46 கோடி. இப்படி நமக்கு அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சமயத்திலே சொல்ல விரும்புகிறேன். எவ்வாறெல்லாம் அவர்கள் நமக்கு உதவ வேண்டும் என்று கேட்கிறோமோ அவ்வாறெல்லாம் உதவிகளை அளித்திருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்தில் கூற விரும்புகிறேன்.

8% என்றும், 7 லிருந்து 9% என்றும் இப்படி 2, 3 சதவிகிதம் அதிகமாக்கி இருப்பதால், ஓரளவுக்குப் பாதகம் ஏற்படும் என்று கருதுகிறேன். எந்த அளவில் கணக்குப் போட்டுச் செய்தார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, பாதிக்கும் அளவில் இருப்பதை திருத்தி மாற்றி அமைப்பதில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். வியாபாரமும் பாதிக்கப்படக் கூடாது, ஒழுங்காக வரும் வருமானமும் பாதிக்கப் படக் கூடாது.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். விற்பனை வரியின் மூலமாக 200 கோடி ரூபாய் வரும், வர வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்பொழுது 85 கோடி ரூபாயாவது வருமா என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று." வரி ஏய்ப்பு பல இடங்களில் இருக்கிறது. இப்படி அரசாங்கத்திற்கு வர வேண்டிய வரிகளை ஏய்ப்பவர்களை நல்லமுறையில் கண்டு பிடித்து வரிகளை வசூலிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சில இனங்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வரி போட்டிருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்களுடைய வாதம் என்னவென்றால் இவை யெல்லாம் ஆடம்பரப் பொருள்கள்தானே என்பது. சமுதாயத்தில் ஆடம்பரப் பொருள் எது, ஆடம்பரமற்ற பொருள் எது என்று பிரித்துச் சொல்ல முடியாது. உண்மை நிலையைக் கூற வேண்டுமானால், ஆடம்பரப் பொருள்கள் என்று சொல்லக்கூடியவைகளும், சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்குக் கிடைக்க வேண்டும், கீழ்மட்டத்தில் இருப்பவர்களும் அந்தப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் திட்டத்தின் கொள்கையாக இருக்க வேண்டும். இப்பொழுது எங்கு பார்த்தாலும் டிரான்சிஸ்டர் இருக்கிறது. இது ஆடம்பரப் பொருளா? குருவிக்காரன்கூட இப்பொழுது டிரான்சிஸ்டர் வைத்திருக்கிறான். ஹோட்டல்களிலே ரெப்ரிஜிரேட்டர் வைத்திருக்கிறார்கள். எல்லோரும் ஹோட்டல்களுக்குச் செல்கிறோம், குளிர்ந்தபானங்கள் அருந்துகிறோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தப் பொருள்கள் எல்லாம் தினந்தோறும் வாங்கப்படுகிற பொருள்கள் அல்ல.

திரு. கோ. பூவராகன்: இந்தப் பொருள்களை ஒருதடவை வாங்கி விட்டால் நீண்டநாட்களுக்கு உபயோகப்படுத்த முடியும். ஒருவர் வீட்டில் ரேடியோ இருந்தால் தானும் ரேடியோ வாங்கவேண்டுமென்றுதான் பக்கத்துவீட்டுக்காரன் எண்ணுவான். இன்றைய தினம் குளிர்பதனப் பெட்டி இருக்கும் ஹோட்டல்களில்தான் விற்பனை அதிகமாக இருக்கிறது. நாம் ஆடம்பரப் பொருள்கள் என்று சொல்வதையும் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள். ஆனால், அவர்கள் பொருளாதாரத் துறையில் சற்று முன்னுக்கு வருகிறபோது





இந்தப் பொருள்கள் விலை உயர்ந்து அவர்கள் வாங்க இயலவில்லை. ஆகையால் ஆடம்பரப் பொருள்கள் என்று குறிப்பிட்டு அவைகளின்மீது விதிக்கப்பட்டிருக்கும் வரிகளைக் குறைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, டிராக்டர் மீது வரி போட்டிருக்கிறீர்கள். விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு எந்த வகையில் இது உதவியாக இருக்கும், இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை இப்போது 15 ஏக்கர் என்று குறைத்திருக்கிறீர்கள். இது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். பலருக்குப் பயன்படக்கூடிய காரியங்கள் சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அவர்களாகவே மனம் வைத்து மக்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அரசாங்கமானது சட்டத்தின் மூலமாகத்தான் அவ்வப்பொழுது நல்ல காரியங்களைச் செய்ய முடியும். சிறுபான்மையாளர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும் அரசாங்கம் அந்த விஷயத்தில் தயக்கம் காட்டக் கூடாது. 15 ஏக்கர் என்று நில உச்சவரம்பு கொண்டுவந்ததை நான் வரவேற்கிறேன். நில்வரி, விவசாய வருமான வரி இவைகளை எடுத்துவிட வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால் 6 கோடி ரூபாய் இன்றையதினம் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது, இதன்மூலம் இந்த வரியைப் பெறுவதற்கு 2 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். இரண்டு கோடி ரூபாய் செலவு செய்து, பெறுவது ஐந்தாறு கோடி ரூபாய்தான். 15 ஏக்கர் என்று நில உச்சவரம்பைக் கொண்டு வந்தால், அரசாங்கம் இந்த வரிகளைத் தள்ளிவிடும் என்பதை எதிர்பார்க்கலாம். இந்த ஆறு கோடி ரூபாயை மற்ற வரிகளில் சரிக்கட்டிக் கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் இதைக் கவனத்திலே கொண்டு, விவசாய முன்னேற்றத்திற்கேற்ப இந்த இரண்டு வரிகளை நீக்கி, அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டில் நம்முடைய நாட்டிலே கொடுமையான பஞ்சம் இருந்தது. ஆனால் நிலவரியைக் கொஞ்சம் குறைத்து அல்லது நீக்கி வசூல் செய்ததாகக் கணக்கில் இல்லை. கிராமத்தில் இருப்பவர்கள் எல்லாம் வரி கொடுத்திருக்கிறார்கள். சென்னை நகரத்தில் நகர்புற வரி என்று போட்டோம். அதில் எவ்வளவு வசூல் செய்தார்கள், ஏன் வசூல் செய்யவில்லை? என்ன காரணம்? கிராமத்தில் இருப்பவர்கள் வரி கொடுக்கலாம், வரி கொடுத்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால் நகர்புறங்களிலே போடப்பட்ட வரியை ஏன் வசூல் செய்யவில்லை, என்ன காரணங்கள்? மதிப்பிட்ட தொகை ஏன் வரவில்லை? கிராமங்களில் சிறிது வரி குறைந்தால் அதிகாரங்கள் கெடுபிடி செய்து வசூலித்துவிடு

பிராயத்தைத் கூறும்படியான நிலையில் இருக்கிறேன். சுமார் 100 அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக இன்று நான் பேசும்படியான நிலையில் இருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒவ்வொருவரும் பேசும்போது அவரவர்களுடைய கட்சி அபிப்பிராயத்தைச் சொல்லி வந்தார்கள். ஆளும் கட்சியினர்கள் பேசும்போது ஒரு பாராட்டுதலைக் கூடச் சொல்லவில்லையே, பாராட்டிப் பேசக் கூடாதா என்றார்கள். உண்மையில் பாராட்டத்தக்கவை இருந்தால் பாராட்ட வேண்டியதுதான் அவசியம்.

நான் என்னுடைய கருத்துக்களை மூன்று பகுதிகளாகப் பிரித்து எடுத்துச் சொல்லலாம் என்று இருக்கிறேன். முதன்முதலாக என்னுடைய கட்சியின் பாராட்டு என்னவென்றால்—நிதி அமைச்சர் அவர்கள் கோவையில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்குத் தீவிரம் காட்டியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியின் சார்பில் இல்லையா ?

**திரு பி. ஜி. கருத்திருமன் :** அடுத்த என்னுடைய பாராட்டு 1967 தேர்தலில் பல பல கட்சிகள் பலபலவிதமாகக் கூட்டணிகள் அமைத்துக் கொண்டன. விநோதமான முறையில் அமைச்சரவை அமைப்பதும், வெளியில் வருவதும் மீண்டும் அமைப்பதும் எல்லாம் பார்க்கிறோம். ஆனால் தமிழகத்தில் மட்டும்தான் தேர்தலுக்குக் கூட்டணி என்று அமைத்துக்கொண்டாலும் அமைச்சரவை அமைக்கும் போது—அது ஒரு கட்சி அமைச்சரவையாக—செய்கிற காரியங்களுக்கு முழுப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு கடந்த 3 வருடங்களாகச் செயல்பட்டு வருகிறது. அதற்காகப் பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்டுகிறேன். நிலையான ஆட்சி, ஸ்திரமான ஆட்சி—அது எப்படி செயல்பட்டு வருகிறது என்பதைப் பின்னால் விமர்சிக்கிறேன்— நமது தமிழகத்தில் இருப்பதற்காகப் பாராட்டாமல் இருக்க முடியாது.

சென்ற ஆண்டு திரு. அண்ணா அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். அவர்கள் பிரிந்த பிறகு எத்தனையோவிதமான அபிப்பிராயபேதங்கள் அவர்களது கட்சிக்குள் இருந்தாலும் வெளியில் அதைக் காட்டாது ஒரே கட்சியாக அமைத்து நமது முதல் அமைச்சர் அவர்கள் கடந்த ஓராண்டாக செயல்பட்டு வருகிறார்கள். அதுபற்றி அவர்கள் அறிக்கைவிட்டபோது "எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பின் காரணமாகத்தான் நான் ஒரு வருஷம் முதல் அமைச்சராக இருந்திருக்கிறேன்" என்று சொன்னதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. எதிர்க்கட்சிகள் என்று பொதுவாகச் சொல்லியிருக்கிற காரணத்தினால் அதில் எனது கட்சியையும் சேர்த்தே சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்காகவும் பாராட்டுதலைச் சொல்ல விரும்புகிறேன்.



அரசியலில் எந்தக் கட்சி வேண்டுமானாலும் ஆட்சிக்கு வரலாம். எந்தக் கட்சி வேண்டுமானாலும் போகலாம். அபிப்பிராயபேதங்களின் காரணமாக கட்சிகள் பிரிந்திருப்பதில் தவறு கிடையாது. சொல்லிக்கொள்கிறபோது முற்போக்கு, பிற்போக்கு என்கிறார்கள். யார் முற்போக்கு, யார் பிற்போக்கு என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள். "உன் நண்பர்கள் யார் யார் என்று சொல்லு. நீ எப்படிப்பட்டவன் என்று சொல்கிறேன்" என்பார்கள். அதைப் போல இன்றைக்கு முற்போக்கு கட்சி என்றால் அதில் உள்ளவர்கள் யார் யார் என்று பார்த்தாலே போதும், அந்தக் கட்சி எப்படிப் பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பட்ஜெட்டைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** நாட்டு அரசியலைப் பேசி—அதை வைத்தே பட்ஜெட்டைப் பற்றிப் பேசுவது முக்கியம் என்று நினைக்கிறேன். நிலையான அரசியல், நாணயமான அரசியல், யோக்கியமான அரசியல் இல்லாவிட்டால் அரசே இருக்க முடியாது. பித்தலாட்டம் இருந்தால் எந்தக் கட்சியும் வாழ முடியாது.

இன்றைக்கு டெல்லியில் இருப்பது என்ன? வருந்தத்தக்க அரசியல்தான் என்று குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

எப்பேர்ப்பட்ட பிரதமர் ? 52 கோடி மக்களுக்குப் பிரதமராக இருக்கக்கூடியவர்—ஜனாதிபதி தேர்தலிலே தானே அபேட்சா பத்திரத்தில் ஒருவருக்குக் கையெழுத்திட்டுவிட்டு அவருக்கு எதிராகவே செயல்பட்டிருக்கிறார் என்றால் இதைவிட மோசமான நிலை இந்த நாட்டில் என்ன இருக்கிறது ?

மற்றொருவர் மந்திரியாக இருந்துகொண்டே 13 வருஷங்களுக்கு வருமான வரி கட்டாது இருந்துவிட்டு—அதை மறந்துவிட்டேன் என்று சொல்கிறார் என்றால் அவரைத் தலைவராகக் கொண்ட கட்சி எப்படிப்பட்டதாக இருக்கும்?

**திரு. கோ. பூவராகன் :** ஒரு கட்சியின் தலைவரைப் பற்றி இங்கே விவாதத்தில் இழுப்பது பொருத்தமாக இருக்காது. இன்னும் யார் யார் வருமான வரி கட்டவில்லை என்பதற்கான பட்டியலை வெளிவந்தால் தெரியும்.

[திரு. கோ. பூவராகன்] [1970 மார்ச் 7

கள். நகர்புறங்களில் இருப்பவர்களிடத்தில் அரசு அதிகாரம் பயன்படவில்லை. நகர்புறங்களில் பத்திரிகை இருக்கிறது, அதிகாரிகள் இருக்கிறார்கள், பணக்காரர்கள் இருக்கிறார்கள், தலைமைச் செயலகம் இருக்கிறது, அமைச்சர்கள் இருக்கிறார்கள். நகர்புறத்திலே வரி போட்டால் இவர்கள் பத்திரிகைகளுக்கு எழுதிவிடுவார்கள், அதிகாரிகளைப் பார்ப்பார்கள், அமைச்சர்களைப் பார்ப்பார்கள், வரி விலக்கு வாங்கிக் கொள்வார்கள். சட்டம் எல்லா இடங்களிலும் சீரான முறையில் அமலாக்கப்பட வேண்டும்.

நிதியமைச்சர் அவர்கள் கிராமங்களுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களுக்கு ஒரு கோடி என்று ஒதுக்கியிருக்கும் அதே நேரத்தில் சென்னை நகரத்திற்கு மட்டும் 7 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். கிராமங்களுக்கு ஒதுக்கியிருக்கும் அந்த ஒரு கோடி ரூபாயில் 25 லட்சம் ரூபாய் அரிசனங்களுக்கு ஒதுக்கியிருக்கிறது. மீதி 75 லட்சம் ரூபாயைத்தான் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் குடித் தண்ணீருக்காகவும், சாலை இணைப்பு, சுகாதார வசதி, மின்சார இணைப்பு, இவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னை நகரத்திற்கு 7 கோடி ரூபாய் கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. கிராமப்புறங்களில் குடித்தண்ணீர் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதைத் தீர்க்கவும், மின்சார இணைப்புத் தருவதற்கும் இன்னும் அதிக தொகையை ஒதுக்கித் தர வேண்டும்.

என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் குடிநீர்ப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலுள்ள பண்ருட்டிதொகுதியில் காடம்புலியூர் பிர்க்கா பகுதிகளில் நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து எல்லா வசதிகளையும் செய்து தரப்பட்டிருக்கிறது, என்னுடைய தொகுதியில் ஊமங்குளம் பிர்க்காவில் பல கிராமங்களுக்கு குடிநீர் வசதி இல்லை. அரசாங்கம் அந்தப் பகுதிகளுக்கும் நல்ல தனிச் சலுகைகளைக் காட்டி, நல்ல வசதிகளைச் செய்துதர வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இனிமேல் செய்வார்கள்.

**திரு. கோ. பூவராகன் :** அந்தத் தொகுதி மக்களுக்காகச் செய்ய வேண்டும். எனக்காக அல்ல. அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்துகொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றையதினம் விலைவாசி ஏறியிருக்கிறது. அதைத் தடுப்பதற்கான முயற்சிகளை நிதிநிலை அறிக்கையிலே எடுக்கவில்லை. அங்காங்கே கூட்டுறவு விற்பனை அங்காடிகளை ஏற்படுத்தி விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.



1970 மார்ச் 7] [திரு. கோ. பூவராகன்]

படித்தவர்களிடையே வேலைவாய்ப்பு பிரச்சினை இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். நான் அப்படிக் கேட்கவில்லை. டாக்டர், என்ஜினீயரிங், தொழில்நுட்பக் கல்லூரிகளில் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகளில் இடம் இருக்கிறது, சேர வாருங்கள் என்று சென்ற ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. என்ன காரணம் என்றால், இப்போது அந்தப் படிப்புகளுக்கு வேலைவாய்ப்பு இல்லை. இந்த ஆண்டு வைத்தியப் படிப்பு படித்தவர்களுக்கு அடுத்த ஆண்டில் வேலைவாய்ப்பு இல்லாமல் போகலாம். அடுத்த ஆண்டில் பல உறுப்பினர்களுக்குச் சீட்டு வாங்கித்தரும் தொல்லை இருக்காது. இப்பொழுதெல்லாம் பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரிகளுக்குச் சிபாரிசு தேடி யாரும் வருவதில்லை.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறி, என்னுடைய உரையை முடித்துவிடலாம் என்றிருக்கிறேன். மற்றும் பல கருத்துக்கள் கூற வேண்டுமென்று எண்ணியிருந்தேன். நேரமில்லை. அந்தந்த மானியங்கள் வரும்போது அவற்றின்மீது பேசிக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் புதிய காரியங்கள், புதிய முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. முன்பு 7 லட்சம் ரூபாய் செலவிலே நீண்ட பாதை போட்டார்கள். அந்தப் பாதையை மூன்று ஆண்டுகளாக பராமரிப்புக் கூட செய்யவில்லை. ஏன் இந்த பாரபட்சம் என்று தெரியவில்லை. மேலும், குடிநீர்ப் பிரச்சினை, பாதை வசதி, கிராமங்களுக்கு மின்இணைப்பு வசதி முதலியவைகள் செய்துதரப்பட வேண்டும். மின்சார அமைச்சர் அவர்கள் மின்சார இணைப்பு விரைவில் எல்லா கிராமங்களுக்கும் செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் 1967-ல் என்ன நிலைமை இருந்ததோ, அதற்குப் பிறகு கொஞ்சங்கூட நகர்ந்ததாகத் தெரியவில்லை. அதை எல்லாம் கவனத்தில் வைத்துக் காரியங்கள் ஆற்ற வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு புதிய கண்ணோட்டத்துடன் சில முற்போக்குக் காரியங்களுக்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள். முயற்சிதான் அது. அதை அறிவிக்கிறதோடு நின்றுவிடக் கூடாது. முன்பெல்லாம் பட்ஜெட் உரையில் சில அறிவிப்புகள் வரும். அது அறிவிப்போடு நின்றுவிடும். அப்படியின்றி செயலிலும் காரியங்கள் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன்பு வைக்கப்பட்டிருக்கும்படியான நிதிநிலை அறிக்கை மீது ஐந்தாறு நாட்களாக விவாதம் செய்துவருகிறோம். இன்று அமைச்சர் பேசுவதற்கு முன்னால் நான் என்னுடைய அபிப்

[1970 மார்ச் 7

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வரட்டும். கட்டாதவர்களைப் பிடியுங்கள். ஜெயிலில் போடுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நியாயத்திற்காக வாதாடுகிறார்கள். அதனால் தான் முன்பு கூட மொரார்ஜி தேசாய் அவர்களுடைய மகனைப் பற்றிய பிரச்சினை வந்ததே, அதைப்பற்றியும் கொஞ்சம் விளக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மொரார்ஜியின் மகனாக இருந்தாலும் சரி, அவரது அப்பனாக இருந்தாலும் சரி — ஒன்று சொல்லிக் கொள்கிறேன். 1958 இல் என் மகன் என்ஜினியரிங் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். பத்துநாட்கள் கல்லூரிக்குச் சேர்ந்தாற்போல போகவில்லை என்பது எனக்குத் தெரிந்தவுடன் என் மகன் ஜவஹரைக் கல்லூரியில் இருந்து நீக்கிவிடுமாறு அதன் தலைவருக்குக் கடிதம் எழுதினேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் மகனிடத்தில் காட்டுகிற கண்டிப்பைப்போலத்தான் நானும் என் பிள்ளைகளிடத்தில் காட்டுகிறேன். நாம் இருவரும் காட்டுகிற கண்டிப்பை திரு மொரார்ஜி தேசாய் காட்டவில்லையே என்பது தான் வாதம்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் ஏன் இந்திராகாந்தியிடம் காட்டவில்லை ஜகஜீவன்ராமிடம் காட்டவில்லை? ஏன் அட்ஜஸ்ட் பண்ணிப்போய்க் கொண்டிருக்கிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாராளுமன்றத்திலே எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு கமலநாதன், எம்.பி. அவர்கள் திரு ஜகஜ்ஜீவன்ராம் அவர்கள் வருமான வரி கட்டாத நேரத்திலே நீங்கள் காங்கிரஸ் தலைவராகப் போகிறீர்கள், காங்கிரஸ் கொள்கையை மறந்ததைப்போல் நீங்கள் வரி கட்ட மறந்துவிடாதீர்கள் என்று கண்டித்துப் பேசியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்தக் கண்டிப்பு எப்பொழுதும் நிரந்தரமாக இருக்க வேண்டும். அட்ஜஸ்ட் பண்ணக்கூடிய வேலை இருக்கக் கூடாது. கண்டிப்பாக இருங்கள், யார் தவறு செய்தாலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஓரளவு கண்டிப்பாக நீங்கள் இருந்ததால்தான் இங்கே வந்து உட்கார்ந்தீர்கள். ஒரு இடத்திலே கூட்டணி என்று சொல்லிக்கொண்டு தனியாக ரயில்வே ஸ்டேஷனை ஆரம்பித்துவிட்டார்கள். டிக்கட் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். வங்காளத்திலே முதலமைச்சர் எனக்குத் தெரியாது என்று சொல்கிறார்கள். உள்துறை அமைச்சரும் அவருக்குத் தெரியாது என்கிறாராம். அவருக்கு என்ன வேலை என்று கேட்கிறேன் .



1970 மார்ச் 7]

**திரு. என். சங்கரய்யா :** மேற்கு வங்காளத்திலே என்று அவர் சொல்வது எந்த ஆதாரத்தின் பேரிலே சொல்கிறார்? அது பத்திரிகையிலே வந்த செய்திதான், அப்படிப்பட்ட புகார் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஆதாரமற்ற முறையிலே அங்கே இருக்கிற அரசாங்கத்தைப்பற்றித் தவறாக எதிர்க் கட்சித் தலைவர் இங்கே சொல்லவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களுடைய திட்டமெல்லாம் இப்படி அம்பலமாகிறதே என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். அன்டர்கிரவுண்டில் பண்ணிக்கொண்டிருந்தோமே அதையெல்லாம் இங்கே வந்து சொல்லிக்கொண்டு இருக்கிறாரே என்றுதான் அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள் . . . .

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்,

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஐயா ?

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தாங்கள் பல முறை சொல்லியிருக்கிறீர்கள். குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால் ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் மேற்கு வங்காளத்தைப்பற்றிச் சொல்லுகிறார்கள், எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு குற்றஞ்சாட்டுகிறார் என்பதைக் கூற வேண்டும்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** பத்திரிகையிலே வந்தது மட்டுமல்ல, மேற்கு வங்காளத்தைப்பற்றி எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. தனியாகக் கேட்டால் எத்தனையோ சொல்லிக்கொண்டிருக்கலாம். அங்கேயிருக்கிற முதலமைச்சர் அவர்களே 'கூட்டணியில் இருக்க முடியுமா என்று கேட்டு இருக்கிறார்கள். . . .

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது பணிவான வேண்டுகோள். ஆரம்ப நாள்முதல் தாங்கள் சொல்லிவருகின்ற மரபு காக்கப் படவேண்டும். அவர்கள் குற்றச்சாட்டு என்று சொல்லிக்கொண்டு கமிட்டி போடவேண்டுமென்பது போல் ஆரம்பிக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், அவர்கள் எந்த தஸ்தாவேஜை ஆதாரமாக வைத்துக் கூறுகிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் அவர்கள் நான் சொன்னதற்கு விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் செய்ய வேண்டுமென்றால் மேடை இருக்கிறது அங்கே செய்யலாம். இங்கே அவர்கள் அப்படிப் பேசுவதற்கு என்ன ஆதாரம் அடிப்படையாக வைத்திருக்கிறார்கள்? ஆதாரமில்லாவிட்டால் தலைவர் அவர்கள் ஆதாரமற்ற முறையிலே பேசுவது தவறு என்று தீர்ப்பளிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். . .

[1970 மார்ச் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனிப்பட்ட முறையிலே ஒன்றும் இல்லை. அடிக்கடி குறுக்கிடவேண்டாம். கொடுத்திருக்கிற நேரத்திற்குள் அவர்கள் முடிக்கவேண்டியிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இருக்கும்படியான பிரச்னை ஒருவருக்கோ தனிப்பட்ட கட்சிக்கோ என்று நினைத்துக்கொண்டு கோபம் கொள்ளக்கூடாது. அவர்கள் எந்தனையோ பேசினார்கள், எனக்கு கோபம் வந்ததா நான் அதைப் பற்றியெல்லாம் கேட்டேனா? இதிலே 1966-67ஆம் ஆண்டிற்கான பிரச்னையை எடுத்திருப்பதாலே 20 வருடக் காலமாக அபிவிருத்திகள் நடக்கவில்லை என்று சொல்வதற்காகத்தான் போட்டிருக்கிறார்கள். முதலமைச்சராக திரு காமராஜ் அவர்கள் இருந்த காலத்திலே அதாவது 1953 முதல் 1964 அக்டோபர் 10 தேதிவரை அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் முதலமைச்சராக இருந்த சமயத்திலே என்ன அபிவிருத்தித் திட்டங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு நிபுணர் கமிட்டி போட்டால் அப்பொழுது இருந்த வருவாய்க்கு செய்யப்பட்ட வசதிகள் இதற்கு எந்தவிதத்திலும் குறைந்திருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு ப. 11-30 அவருடைய லட்சியம் என்ன? நாட்டு மக்கள் எல்லோரும் நன்றாக வாழவேண்டும்; ஏழை மக்களுக்கெல்லாம் கல்வி வசதி கொடுக்கவேண்டும்; பொருளாதார வசதிகள் பெருக வேண்டும் என்ற குறிக்கோளில்தான் அவர்கள் இருந்தார்கள். அதோடு மட்டுமல்லாது ஜனநாயக சோஷலிசந்தான் அடிப்படை லட்சியம் என்பதையும் சொன்னார்கள். ஜனநாயக சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் எல்லோரும் படித்தவர்களாக இருக்க வேண்டும் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும்.

“ கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை அவைவல்லால் அல்லாரும் இல்லை
எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வம் எய்தலாலே
இல்லாரும் இல்லை, உடையாரும் இல்லை”

என்பதுதான் ஜனநாயக சோஷலிசத்தின் அடிப்படை. (சிரிப்பு) என்னய்யா சிரிக்கிறீர்கள்? உங்களுக்குச் சிரிப்பாகத்தான் இருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்தில் நல்ல கருத்துக்கள் வந்தால் சிரித்து ஆதரிக்கிறார்கள். ‘என்னய்யா சிரிக்கிறீர்’ என்று சிரித்த உறுப்பினரைப் பார்த்துக் கேட்பது முறையல்ல.



1970 மார்ச் 7]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மகிழ்ச்சி பொங்கியதால் நான் கேட்டேன்.

**திரு. ஆலடி அருணா:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கம்பர் பாடிய பாடலைச் சொல்லி அதுதான் ஜனநாயக சோஷலிசம் என்றார். ஜனநாயக சோஷலிசத்தைச் சொன்னது காமராஜா அல்லது கம்பரா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காமராஜர் கம்பருக்கே கூட வழிகாட்டியிருக்கிறார். கம்பர் ஒரு காலத்தில் இருந்தார். காமராஜர் உயிருடன் இருந்து கொண்டிருக்கின்ற கம்பர். காமராஜர் அவர்கள் பெரிய தத்துவத்தைக் கூறியிருக்கிறார்கள். அவருடைய சேவையை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அரசியல் குரோதத்தால் பேச முடியுமே தவிர நியாயமான முறையில் தாக்க முடியாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காமராஜர் அவர்கள் கம்பருக்கே வழிகாட்டி என்று சொன்னார். முன்னால் இறந்து விட்டவருக்குப் பின்னால் பிறந்தவர் வழிகாட்டியாக இருக்க முடியுமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முன்னால் இறந்தவருக்கு நீங்கள் வழிகாட்டியாக இருப்பதாகக் கூறவில்லையா? அண்ணாதுரைக்கு வழிகாட்டியாக இருப்பதாகச் சொல்லுகிறீர்களே.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மறைந்த அண்ணா அவர்கள்தான் எங்களுக்கு வழிகாட்டி என்று நாங்கள் சொல்லுகிறோம். நீங்கள் சொல்லுவதைப்போல் இறந்துவிட்ட கம்பருக்கு இப்போது பிறந்துவிட்ட காமராஜர் வழிகாட்டி என்று கூறவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இறந்துவிட்ட கம்பர் கற்பனையில் இருந்திருப்பார். இப்போதுள்ள காமராஜர் செயலில் காட்டுகிறார். எத்தனை கல்விச்சாலைகள் அமைத்தார்? எவ்வளவு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன? அவர் காலத்தில்தான் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை வைத்துக் கொண்டு அபிவிருத்திகள் நடந்திருக்கின்றன. அவருடைய ஆட்சியின்போது அமைக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாகத்தான் இப்போது விஸ்தரிப்பு நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் மறுக்க முடியுமா? ‘நான் கேட்கிறேன், நீங்கள் மறுக்க முடியுமா’ என்று கேட்கிறீர்கள் அல்லவா? நானும் அப்படிக் கேட்கலாம் அல்லவா?

1963-ல் இருந்து 1967 வரை நான்கு மில்கள் மூடப்பட்டன. அப்போது யார் முதலமைச்சராக இருந்தார்? அவர் உங்களுடைய ஆலோசனையைக் கேட்டார். நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஆலோசனை பண்ணி இப்போது நிலை எப்படி இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. 1964-ம் ஆண்டுக்குப் பிறகு நடந்த காரியங்களுக்குக் காமராஜரா பொறுப்பாளி? அவர் இருந்த

[1970 மார்ச் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மாநில பட்ஜெட்டின் மீது பேசுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதற்கு வந்துவிட்டேன். நாட்டிலே உள்ள பிரச்னைகளைப்பற்றிச் சொல்லவில்லை. இது ஒரு சாம்பிள். இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இதிலே 1966-67-ம் ஆண்டு குறுக்கீடு (அப்பு) ஹானைட் அல்ல, ஆண்டு, டாகடாடம காதைக் காட்டுங்கள். திட்டத்தை இப்பொழுது வைத்திருக்கும்படியான நேரத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலே 1966-67-ஐ குறிப்பிட்டதற்குக் காரணம் என்ன? 1967-68ஐ ஏன் குறிப்பிடக் கூடாது? 1966-67-ஐ ஏன் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்றால் அப்பொழுது காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்பொழுது செய்ததைவிட அதிகமாக நாங்கள் செய்து இருக்கிறோம் என்ற குற்றச்சாட்டை சொல்வதற்காக நையாண்டிபோல் சொல்லியிருக்கிறார்கள். நையாண்டி என்ற சொல் பார்லிமெண்டரிதானே? இதிலே இருக்கிற விவரத்தையெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். 1966-67 ஆம் வருடத்திலே என்ன அபிவிருத்தித் திட்டங்கள் நடந்தன, அப்பொழுது இருந்த நிதிநிலைமை என்ன, இப்பொழுது இருக்கிற நிதிநிலைமை என்ன, அதற்கு ஏற்ப வசதிகள் வந்திருக்கிறதா, அபிவிருத்தி ஆகியிருக்கிறதா என்று கணக்குப்போட்டுப் பார்த்தால் அதற்கு ஏற்ற அபிவிருத்தி இல்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பொழுது பட்ஜெட் 194 கோடி இப்பொழுது பட்ஜெட் 297 கோடி அளவுக்கு ஆகியிருக்கிறது. அப்பொழுது இருந்த வசதிகளைவிட இப்பொழுது 50% எல்லா இடங்களிலும் வந்திருக்கிறதா, அப்படி வந்திருந்தால், ஓரளவு சரி என்று சொல்லலாம். புள்ளி விவரங்களையெல்லாம் காட்டித் துருவித் துருவிப்பார்த்து விவரங்களையெல்லாம் மிகத் தெளிவாக என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே நான் அதிகமாக அதைப்பற்றிச் சொல்லவில்லை. வரி அதிகமாகியிருக்கிறதே தவிர வசதிகள் பெருகவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சாட்டுகிறேன். வரிப் போடவில்லை அற்புதமான பட்ஜெட் என்றெல்லாம் சொல்கிறார்கள். இப்பொழுது அதிகமாக வருமானத்தைப் பெருக்கியிருக்கிறார்கள்; அதாவது கூடுதலாக வரி வாங்கியிருக்கிறார்கள். அது என்ன? தானிக்கி பேரேமி? புது வரிப்போட்டு மக்களுக்குக் கஷ்டமில்லாமல் கண்டுபிடித்துப் போடக்கூடிய திறமை உங்களுக்கு இல்லை. அந்த முறையிலே மக்களுக்குக் கஷ்டமில்லாமல் செய்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். அப்படிச் செய்யாமல் நாங்கள் வரியைப் போடாத பட்ஜெட் கொண்டுவந்தோம் என்று சொல்வது பெருமையல்ல. தேவகோட்டையிலே வட்டி வாங்குவது தெரியாமல் இருப்பதற்கு சொல்வார்கள் அதாவது, இத்தனை சதவீதம் என்று சொல்ல மாட்டார்கள். தம்பிடிக்குத் தம்பிடி என்றுதான் சொல்வார்கள். அது 100 சதவீத வட்டி என்பது கொடுக்கக்கூடிய நிலைமையிலே



1970 மார்ச் 7] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

தான் தெரியும். அந்த மாதிரி முன்னாலே 207 கோடியாக இருந்தது, பிறகு 235 கோடியாகி, அதற்குப் பிறகு 265 கோடியாகி போன வருஷத்திலே 285 கோடியாக ஆகி இப்பொழுது 296 கோடியளவிற்கு ஆகியிருக்கிறது. இல்லையென்று சொல்லமுடியுமா? வரிகளையெல்லாம் போட்டுவிட்டார்கள். ஆனால் வரி போடவில்லை, போடவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுடைய தேர்தல் வாக்குறுதியிலே 40% வரிகளைக் குறைப்போம் என்று சொன்னார்கள். ஏன் குறைக்கவில்லை என்றால் கருத்திருமன் வருவாரா என்கிறார்கள். நான் ஏன் வரவேண்டும்? அதன்பலனை அனுபவிக்க வேண்டியவர்கள் நீங்கள்தானே? புதுத் திட்டம் வைத்திருக்கிறோம், மக்களுக்காகத் திட்டங்கள் வைத்து இருக்கிறோம் நாங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம் என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்வேன். உங்கள் வாக்குறுதி என்ன? ஆட்சிக்கு வந்தால் சட்டமன்றத்திலே புரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன், அதாவது எத்தனை சதவீதம் மக்கள் எந்தக் கட்சிக்கு எவ்வளவு வாக்குகள் போட்டிருக்கிறார்களோ அந்த அடிப்படையிலே நடக்கும் என்று சொன்னீர்களே, என்ன ஆயிற்று. 138 லட்சம் மக்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். அதிலே 64 லட்சம் பேர்கள் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள். 61 லட்சம் பேர்கள் தனியாகப் பார்த்தால் உங்கள் கட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஏறக்குறைய மொத்தத்திலே 41 சதவிகிதம் பேர்கள் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள். உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில்தானா நடக்கிறது? அடுத்த தேர்தலுக்குப் பார்ப்போம் என்று சொல்கிறார்களே, அடுத்த தேர்தலுக்காவது செய்வீர்களா? . . .

**திரு. என். சங்கரய்யா:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் புரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் பற்றிக் கேட்கிறார்கள். அங்கே எங்களுடைய கட்சி இதைப்பற்றித் தீர்மானம் கொண்டு வந்த நேரத்திலே அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அதைத்தோற்கடித்தார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும் (ஆரவாம்).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சும்மா ஆதரிக்காதீர்கள். நீங்கள் ஆதரித்தால் உங்களை மூழ்கிவிடுவார்கள். அவர்கள் திட்டம் என்ன தெரியாதா, அங்கே எங்களைத் தாண்டிவிடுவது, இங்கே உங்களைத் தாண்டுவது. இதுதான் கம்யூனிஸ்டுகளின் திட்டமாகும். . .

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** எதிர்க்கட்சித் தலைவர் தாண்டிவிடுகிறார்கள், ஆதரவு தருகிறார்கள் என்றெல்லாம் சொல்லி அந்தப் பக்கத்திலே உள்ளவர்களைப் பார்த்துச் சொல்கிறார்கள் . . .

காலத்தில் சில தவறுகள் நடந்திருக்கலாம், இல்லையென்று சொல்லவில்லை. அவர் யார் யாரையோ அமைச்சராக ஆக்கி விட்டார். அமைச்சராவதற்குத் தகுதி இல்லாதவர்களையெல்லாம் அமைச்சராக ஆக்கினார். சில பேர் அமைச்சராக வரமுடியும் என்று நினைத்துப் பார்த்திருக்க முடியுமா?

**திரு. கோ. பூவராகன்:** சில பேர் அமைச்சராக முயற்சி செய்து கிடைக்காததன் விரக்தி காரணமாகப் பேசுகிறார்கள் என்று எண்ணுகிறேன். இப்போது என்ன கொள்கை என்பது தான் பிரச்சனை. (ஆரவாரம்)

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவரைவிடப் பத்து மடங்கு சாமர்த்தியமாக நடக்கத் தெரியும். புத்தி இல்லாதவர்கள் அமைச்சராக இருக்க முடியும் என்று நிலைதான் இருந்தது. இது போன்ற சில அமைச்சர்களால் தான் காங்கிரஸ் கட்சி தோற்றது. இதை ஒரு நீதிபதி தீர்ப்புக்கு விட்டால் காங்கிரஸ் கட்சி சில அமைச்சர்களுடைய நடத்தையினால் தான் தோற்றது என்பதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** மூன்றால் இருந்த அமைச்சர்களால் தான் காங்கிரஸ் தோற்றது என்றால் அகில இந்தியாவுக்கும் நீண்ட நாட்கள் தலைமைப் பொறுப்பிலே இருந்தார்களே; காங்கிரஸ் கட்சி தோற்றதற்கு யார் பொறுப்பு, அவர்கள்தான் பொறுப்பா என்று விசாரிக்கத் தயாரா? (ஆரவாரம்)

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அகில இந்தியாவுக்கும் யார் பொறுப்பு என்றால் இந்திரா காந்தி அம்மையார் மீதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த காமராஜரைக் குறிப்பிடுகிறார் என்று கருதுவது சரியாக இருக்குமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதலமைச்சர் அவர்கள் இந்த மாதிரிப் பிரித்துவிடும் வேலை பார்த்தால் அது நடக்காது. இது எங்கள் குடும்பச் சண்டை இதை வைத்து கொண்டு நீங்கள் மீன் பிடிக்கலாம் என்று பார்த்தால் நடக்காது.

**திரு. ஆலடி அருணா:** பட்ஜெட் விவாதத்தின் போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதைபோன்று வாதங்களைப் பேசிக் கொண்டு போவது பட்ஜெட்டிலிருந்து விலகி எங்கோ போய்க் கொண்டிருப்பதாகத் தெரிகிறது இப்படிப் பேசலாமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** புண்ணை ஆப்பரேஷன் பண்ணித் தான் ஆகவேண்டும். முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வார்த்தை. எங்கள் கட்சியில் அப்போது புகுந்துவிட்ட அமைச்சர்களைப் போல் யாரையும் சேர்த்துக் கொள்ளாதீர்கள். அப்படிப்பட்ட



வர்களால் கட்சியே போய்விடும். முதலமைச்சர் அவர்கள் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறேன். இதுமாதிரி நிலையிலே . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அமைச்சரவை பற்றிப் பேசிவிட்டு அடுத்த கட்டத்திற்குப் போவதால் அது பற்றி ஒரு கருத்தை அறிய விரும்புகிறேன். காமராஜர் யார் யாரையோ அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டதால்தான் காங்கிரஸ் கட்சி தோற்றது என்றார். தற்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கும் திரு. கக்கன் அவர்களும் அப்போது அமைச்சராகத்தானே இருந்தார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் குறிப்பிட்ட சில அமைச்சர்களைத்தான் சொன்னேன்.

இப்போது சோஷலிசம் பேசுகின்றவர்களில் யார் யாருக்கு 15 ஏக்கருக்கு மேல் இருக்கிறதோ அவற்றை எல்லாம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள். முன்பு இது தப்பு அது தப்பு என்று சில பேரைப்போல் சொல்லிவிட்டு மாட்டிக் கொள்ளமாட்டேன் என்றார்கள். பழைய குறிப்பேடுகளை எடுத்துப் பார்த்தால் யார் யார் எப்படிப் பேசி மாட்டிக் கொண்டார்கள் என்பது தெரியும். யாராக இருந்தாலும் நியாயமாக, நாணயமாக நடக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீங்கள் எப்படி ஆட்சிக்கு வந்தீர்கள்? தேர்தல் சமயத்திலே என்ன பேசினீர்கள்? 'இப்போது பை நிறையப் பணம் கொண்டு சென்று கையிலே அரிசியை வாங்கிக் கொண்டு வருகிறீர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கையிலே பணத்தைக் கொண்டு போய் பையிலே அரிசியை வாங்கலாம்' என்று சொன்னீர்கள். அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் அரிசி இருந்தும் சரிவரப் போடாமல் இருந்தார்கள். அந்த நிலையில் மக்கள் யாருக்கு ஓட்டைப் போடுவார்கள்? அந்த மாதிரித் தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். காமராஜர் ஏதோ ஒரு சமூகத்தைப் பற்றிப் பேசிவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றிக் கூற பழைய சட்டசபை நிகழ்ச்சிகளில் இருந்து படிப்பதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன். அதாவது, 'மோஷன் எக்ஸ்பிரசிங் வான்ட் ஆஃப் கான்பிடன்ஸ் இன் தி மினிஸ்டரி' என்ற தலைப்பிலிருந்து அப்போது முதுகளத்தூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. காமராஜர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், கைது செய்ய வேண்டும் என்றெல்லாம் அப்போது சொன்னார்கள். அப்போது முதலமைச்சர் பொறுப்பில் யார் இருந்தார்? மீஞ்சூரார் இருந்தார்; மீஞ்சூரார் என்றார் பக்தவத்சலனார். நிதியமைச்சராக என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் சி. சுப்பிரமணியம் இருந்தார். அவர் பேசும்போது என்ன சொன்னார்?

"[redacted] உங்களுள்ளவர்கள் எல்லோரும் வீரர்கள் என்றும்,

வீர உணர்ச்சியுள்ளவர்கள் என்றும், அங்குள்ளவர்கள் மறவர்கள் என்றும் சொன்னார்கள். [redacted] ” எப்படியெல்லாம் பிழைத்து வாழ்கிறார்கள் என்று சொன்னார்கள்? “ . . . . பிச்சை எடுத்துப் பிழைப்பது சமுதாயத்தைப் பாதிக்கப்படுவது இல்லை என்று நினைக்கிறார்கள் . . . . பிச்சை போடுவதையே நல்ல காரியம் என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். அந்த முறையிலும் தங்களுடைய வாழ்க்கையில் கொஞ்சம் தியாகத்தையும் செய்கிறார்கள். சிலர் தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று நினைக்கும்போது தங்களுடைய வாழ்க்கைக்கு சிலவற்றை அத்தியாவசியமாகப் பெறவேண்டியதாக இருக்கிறது. அதனால் அவர்கள் கொள்ளை திருட்டுகளில் இறங்குகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் . . . ”

**திரு. ம. பொ. சிவஞானம்:** தமிழ்நாட்டிலுள்ள குறிப்பிட்ட ஜனத்தொகை உடைய தமிழர் சமுதாயத்தின் ஒரு பகுதியினரைப் பற்றி முன்பு எப்போதோ, யாரோ இழிவுபடுத்திக் குறிப்பிட்டார்கள் என்றால், திரும்பவும் அந்தப் பகுதியை உறுதிப்படுத்தி இழிவுபடுத்தும் வாசகங்களை மீண்டும் இங்கு எடுத்துக்காட்டுவது முறைதானா? அது முறையான நடவடிக்கையா? என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடந்ததைக் கூட எடுத்துக்காட்டத்தான் இந்தப் புத்தகம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அன்றையதினம் நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தேவர்களைப் பற்றி ஏதோ இழிவாகப் பேசினார்கள் என்று எடுத்துக்காட்டி இப்போது ஏதோ தேவர் சமுதாய மக்களிடத்தில் ஒரு புது உணர்ச்சியை சுப்பிரமண்யத்திற்கு விரோதமாகவோ அல்லது இன்றையதினம் இருக்கும் வேறு ஒரு காங்கிரஸ்க்கு விரோதமாகவோ உள்ள ஒரு சூழ்நிலையை உருவாக்க எண்ணுவது வேண்டுமானால்—எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய ஆசை—அவருக்கு விரோதமாக இருப்பதைச் செய்தோம் என்ற அளவில் இருக்கலாம். ஆனால் முதுகுளத்தூர் பகுதியிலுள்ள மறவர் பெருமக்களிடம் வேறு ஒரு உணர்ச்சியைத் தூண்டிவிட்டு மீண்டும் ஒரு முதுகுளத்தூர் ஏற்படுத்த நாம் காரணமாக இருந்து விடக்கூடாது என்று மிகப் பணிவுடன் எதிர்கட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் வைத்துள்ள புத்தகத்தைப் பார்த்து அவர்கள் அதிலிருந்து ஏதாவது பேசுவார்கள் என்று தெரிந்துதான் நான் கூட ஒரு புத்தகத்தைக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். திரு சசிவர்ண தேவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். “‘தேவர் வோட்டுக் கேட்க வந்தால் அடியுங்கள். உங்களைச் சர்க்கார் ஒன்றும் செய்யாது. சர்க்கார் உங்களுக்கு ஆதரவாக இருக்கும்.” இப்படிப் பேசியிருப்பதாகச் சசிவர்ண தேவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதோடு, இன்



னொரு குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார்கள். “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று அங்கேயுள்ள ஜனங்களைக் கேட்பார். கிணறு வேண்டும் என்றால் உடனே “சரி, இங்கே கிணறு வெட்டுங்கள்” என்று அதிகாரிக்கு எழுதி உத்தரவு கொடுத்து விடுவார்”. “இதற்குப் பதிலறிக்கையில் கக்கன் அவர்கள் கூறியுள்ளார்கள். “எக்ஸிக்யூடிவ் அதிகாரிக்கும் கிணறு வெட்டுவதற்கும் சம்பந்தம் கிடையாது. இவர்கள் ரோடு போடுவார்கள். அவ்வளவுதான்.” என்று சொல்லியிருக்கிறார்கள் “தேவர் வோட்டுக் கேட்க வந்தால் அடியுங்கள். ‘உங்களைச் சர்க்கார் ஒன்றும் செய்யாது. சர்க்கார் உங்களுக்கு ஆதரவாக இருக்கும்” என்று கக்கன் அவர்கள் மீது சாட்டிய முதல் குற்றச்சாட்டை கக்கன் அவர்கள் மறுக்கவில்லை. ஆக, இதுபற்றிப் பேசிக்கொண்டு போனால் நாங்களும் பல ஆதாரங்களை இப்படி ஸிண்டிகேட்டில் இருப்பவர்கள் என்னென்ன சொல்லியிருக்கிறார்கள் என்று எடுத்துக் காட்ட முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகின்ற பேச்சு எப்படி நிதிநிலை அறிக்கையையொட்டி வரும்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** காமராஜை அரஸ்ட் பண்ணுங்கள் என்று சொல்வது மட்டும் நிதிநிலை அறிக்கையொட்டி வருமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசியல் கட்சிகள் பேச வேண்டிய பேச்சுகளை அரசியல் மேடைகளில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த அவையை அரசியல் மேடையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** காமராஜ் அவர்களைக் கைது செய்யுங்கள் என்று ஒருவர் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். அது சுதந்திரா கட்சி உறுப்பினர் என்று கருதுகிறேன். அது கவர்னர் உரை மீதான விவாதத்தின்போது நடந்தது. அப்போதே எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஒரு சிறு விளக்கம் தர விரும்புகிறேன். அன்றையதினம் நடைபெற்ற விவாதத்தின் போது, அப்போது நானும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தோம். அப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து சுப்பிரமணியம் அவர்கள் வாதாடிப் பேசினார்கள். அப்போது நம்பிக்கை உண்டு என்று சுப்பிரமணியத்திற்கு ஆதரவாக வோட்டுப் போட்டவர் எதிர்கட்சித் தலைவர்தான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** மதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் முன்பிருந்த நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தேவர் குல மக்களைப்பற்றி இழிவாகப் பேசினார் என்று எடுத்துக் காட்டுவது, எந்தக் காரணத்திற்காக இந்த சமயத்தில் அதை

எடுத்துக் காட்டுகிறார்? என்று நான் அறிய விரும்புவதோடு கூட இப்படியெல்லாம் எடுத்துக்காட்டுவதன் மூலம் அவர்களது நோக்கம் நிறைவேறிவிட முடியும் என்று நினைத்தால் அது பொய்யாகிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் சொல்வதை மக்கள் ஒப்புக் கொள்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றி . . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த விவாதம் வந்தபோது உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் இருந்திருக்கிறார்கள். அப்படி அப்போது அந்த அமைச்சர் பேசியபோது அதைத் தடுத்துப் பேசினார்களா? இப்போது பேசிய கருத்துக்களைத்தான் அப்போது வைத்தார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டசபையில் அக்கட்சிக் கொறடாவாக இருந்து கொண்டு அதை எதிர்த்துப் பேசியிருக்க முடியுமா? வெளியே, அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது என்று எதிர்த்துப் பேசியிருக்கிறோம், அதைக் கண்டித்திருக்கிறோம். பார்டி கூட்டத்தில், அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது வோட்டு எடுக்கையில் இவர்கள் வெளியே போய்விட்டார்கள். ஆகவே, நான் அரசியல் நோக்கத்திற்காக இதைச் சொல்லவில்லை என்று கூறிக்கொண்டு மேலே செல்கிறேன்.

நீங்கள் என்ன பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறீர்கள்? மிக முக்கியமான பிரச்சினை, மொழிப் பிரச்சினை. அதில் உங்களுக்கு எவ்வளவு குழப்பம் இருக்கிறது திட்டவட்டமாக நீங்கள் உங்கள் மொழிக் கொள்கையைக் கூறியிருக்கிறீர்களா என்று கேட்கிறேன். நீங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறீர்களா என்று கேட்கிறேன். 14 மொழிகளும் தேசிய மொழிகளாக ஆக வேண்டுமென்று சொன்னீர்கள். 1968 ஜனவரியில் என்ன தீர்மானம் செய்யப்பட்டது? இரு மொழிக் கொள்கைதான் எங்கள் கொள்கை, தமிழும் ஆங்கிலமும்தான் இருக்கவேண்டும், இந்தியை ஒழித்து விடவேண்டுமென்று சொன்னீர்கள். தேர்தல் பிரகடனத்தில் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? இந்திச் சொற்களை உபயோகிக்கும் வரை என்.ஸி.ஸி. யே இருக்கக்கூடாது என்று தீர்மானம் போட்டீர்கள். அதைப் பரிபூர்ணமாக நிறைவேற்றினீர்களா? அது மாணவர்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றத்தைத்தான் கொடுத்தது. உங்களால் பரிபூர்ணமாக இந்தியை எதிர்க்க முடிந்ததா? திருச்சி மாநாட்டில் என்ன தீர்மானம் போட்டீர்கள்? பண்டித நேரு அவர்களின் உறுதிமொழி செயல்படுத்தப்பட வேண்டும் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் தீர்மானங்களை எல்லாம் உங்கள் பத்திரிகைகளில் வருவதை மட்டும் படித்துவிட்டுப் பேசுகிறீர்கள். எல்லாப் பத்திரிகைகளிலும் அவை வந்திருக்கின்றன. பொதுக்குழு தீர்மானத்திலும், மாநாட்டில் போட்ட தீர்மானத்திலும் நாங்கள் வலியுறுத்திச் சொல்லியிருப்பது இந்தித் திணிப்பை அகற்றுகிற வகையில் அரசியல் சட்டம்





திருத்தப்படவேண்டும் என்பது தீர்மானம். அதற்குப் பிறகு அதுவரையில் குறைந்தபட்சம் நேருவின் உறுதிமொழி சட்டப்பூர்வமாக ஆக்கப்படவேண்டும் என்பதுதான் எங்களது தீர்மானம். முற்பகுதியை விட்டுவிட்டு பிற்பகுதியை வைத்துக் கொண்டு விளையாட்டு நடத்துவது நல்லதல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை நீங்கள் விளையாடிக்கொண்டிருக்கிறீர்கள். 343-வது பிரிவைப் நீக்கிவிடவேண்டும், அதற்காக எங்களுக்கு வோட்டுப் போடுங்கள், நாங்கள் டெல்லிக்குச் சென்று போராடுகிறோம் என்று சொன்னீர்கள். மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. இப்போதுதான் இத்தீர்மானம் வந்திருக்கிறது. காமராஜ் அவர்கள் ஊர் ஊராகப் போய் சொன்னதற்குப் பிறகு தான் இவர்களுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்து இத்தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். இதை நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஏன் செய்யவில்லை? இந்திரா காந்தியைப் பிரதமர் பதவியை விட்டு இறக்கவேண்டுமென்று சொன்னீர்கள் 1967-ல். அவர்கள் அந்தமானுக்குச் செல்லும்போது சென்னைக்கு வாரீர்கள், குழப்பமாக இருக்கிறது. ஆகவே வேறு வழியாகப்போங்கள் என்று சொல்லிவிட்டு சென்ற அக்டோபரில் அவரை வரவேற்றீர்கள். ஆகவே, உங்களுக்கு ஒரு குழப்பமான நிலைதான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எங்களுக்கு மொழிக் குழப்பம் என்று சொல்கிறீர்கள், நீங்கள் என்ன தெளிவான கொள்கையைக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைச் சொல்வதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? நேருஜியின் உறுதிமொழியைச் செயல்படுத்தவேண்டுமென்று சொன்னீர்கள். இப்போது நடந்த வோட்டெடுப்பில் என்ன நடந்தது? உங்கள் 25 பேர்கள் இருக்கிறீர்களே, பதினைந்து பேர்கள் எங்கே போனார்கள்? (குறுக்கீடு) காமராஜை தேடிக்கொண்டு போனார்களா. நன்றி. எங்களைத்தான் தேடிக்கொண்டுவரவேண்டும், வேறு வழியில்லை. 25 பேர்களில் பத்து பேர்கள்தான் வோட்டளித்தார்கள். மீதி 15 பேர்கள் என்னவானார்கள் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பத்து பேர்கள் என்னவானார்கள் என்று கேட்கிற கேள்வியை காமராஜ் அவர்கள் ஒரு வோட்டு போட்டுவிட்டுக் கேட்டால் நன்றாகயிருக்கும், நாணயமாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் 'நியூட்ரல்'-ஆக இருந்திருக்கிறார்கள். கட்சிக் கட்டுப்பாடு என்றிருக்கிறது. ராம்சுபாக் சிங் தலைமையில். நாங்கள் நியூட்ரலாக இருந்துவிட்டோம். மொரார்ஜி தேசாய், ராம்சுபாக்சிங், தாரகேஸ்வரி சின்ஹா ஆகியோர்கள் நடுநிலைமையாக இருந்தார்கள் என்றால் இதைவிட வேறு என்ன வேண்டும்?

விளக்கம் வேண்டும். ராஜமான்யத்தை ரத்து செய்ய தீர்மானம் வருகிறதே அதை நாங்கள் ஆதரிப்பதா, எதிர்ப்பதா? இவைகளுக்கு நல்லமுறையில் விளக்கம் அளிக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எங்களிடத்திலே புத்தி கேட்பதாக இருந்தால், நீங்கள் இந்தப் பக்கம் வந்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தப் பக்கத்திலே இருப்பவர்களுக்கு புத்தி சொல்வதற்கு உரிமை படைத்தவர்கள் என்றால், அதேபோல் நாங்கள் சொல்லுகிறோம், நீங்கள் கேளுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எங்களுக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை. உங்களுக்கு சுயபுத்தியுமில்லை, சொற்புத்தியும் இல்லை. நிலையான கொள்கை கிடையாது. இங்கிலீஷ் வேண்டாமென்று நீக்கிவிட்டீர்கள். தமிழ்தான் வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆங்கிலம்தான் அகில இந்திய மொழியாக இருந்தால் நல்லது என்ற நிலை. மாநிலத்தில் தமிழ்தான் என்று சொன்னால், இந்தி மொழியை வேறு வேண்டாமென்று சொல்லி ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள், பிறகு ஆங்கிலத்தின் தரம் என்ன? தமிழ் ஆட்சி மொழி என்று கல்லூரியிலே வைத்துவிட்டு, ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்தவில்லையே?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படியானால் ஆட்சி மொழி தமிழ் என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் விரும்புகிறாரா இல்லையா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தமிழ் ஆட்சிமொழியாக வேண்டாமென்று சொல்லவில்லை. அதே சமயத்தில் ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்தவேண்டும், அபிவிருத்தி செய்திருக்கவேண்டும், அகில இந்திய ரீதியில் விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்காக. இல்லாவிட்டால் கடைசியிலே கிணற்றுத் தவளைகள்போல்தான் இருக்க முடியும். இப்பொழுது நீங்கள் இந்தி வேண்டாமென்று சொல்வதில் தீவிரமாக இல்லை. அதை அரசியலுக்காகப் பிரயோஜனப் படுத்திக் கொண்டிருக்கிறீர்கள், அரசியல் லாபத்திற்காகச் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். எந்தவிதமான தெளிவான கொள்கையும் உங்களிடத்திலே கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நேருவின் உறுதிமொழி சட்டமாக ஆக்கப்படவேண்டும் என்பது காங்கிரஸ் மாணவர்கள் மாநாட்டுத் தீர்மானமா? காங்கிரஸ் கட்சியின் தீர்மானமா? அல்லது காமராஜரின் பேச்சா? அல்லது அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தீர்மானமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பாராளுமன்றத்தில் நான் உறுப்பினராக இருந்த சமயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி தீர்மானமாக இதைப் போட்டிருக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** போட்டிருக்கிறது. நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், நாங்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாதா? நாங்கள் பரிபூர்ணமாக பொறுப்பு ஏற்றுக்கொள்கிறோம். கௌகத்தியில் போட்டிருக்கிறது. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூட ராஜினாமா செய்துவிட்டு வந்தார்களே. ஆகவே சொல்லுகிறோம். இதில் நிலையான நிலைமையில் இல்லை என்ற குற்றச்சாட்டை சாட்டாமல் இருக்க முடியாது. பாராளுமன்றத்தில் என்ன நடந்தது? அதற்குக் காமராஜர் ஏன் வரவில்லை என்றால், நடுநிலைமையாக இருந்தோம். நீங்கள் ஏன் 15 பேர் போகவில்லை? 10 பேர் மட்டும் போனீர்கள்? அதற்குக் காரணம், இந்திரா காந்தியிடம் நாமெல்லாம் உதவி பெற்றாகி விட்டது, எல்லோரும் சென்று எதிர்த்து ஓட்டளித்தால் அவர்கள் மன வருத்தம் அடைவார்கள் என்று வெளியிலே இருந்து விட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் கற்பனையாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்களானால், அதேபோல் எனக்கும் கொஞ்சம் கற்பனையில் கைவண்ணம் உண்டு. மொரார்ஜி தேசாய் அவர்கள், காமராஜர் டெல்லியிலே இறங்கியதுமே, உள்ளே வந்தால் என்ன செய்வேன் தெரியுமா என்று அதட்டினாராம், அதனால்தான் காமராஜர் பாராளுமன்றத்திற்குச் செல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பச்சைத் தமிழர்கள் அப்படி இருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? மொரார்ஜி தேசாய் அவர்களை, இரண்டு முறை பிரதமராக வராமல் தடுத்து நிறுத்தியவர் காமராஜர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் மிரட்டினாராம், இவர் பயந்துவிட்டாராம். உங்கள் 15 பேர் என்ன ஆனார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உங்கள் கற்பனைக்கு நான் சொன்ன இன்னொரு கற்பனைதானே தவிர, வேறில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கற்பனை ஜோதி என்று நான் சொல்லிவிட்டேன். சில சமயத்திலே சொன்னார்கள், கருத்திருமன் அவர்கள் ஒப்பாரி என்று சொல்லிவிட்டாரே என்று. சனிக்கிழமை அன்று ஒப்பாரி வைக்கிறார் என்று இன்னொருவர் சொன்னார். ஒரு அங்கத்தினர் சொன்னார், திருச்சி அங்கத்தினர், பேசிய சமயத்தில் சொன்னார். பாம்புகளை சேலத்திற்குக் கொண்டுபோய் விட்டார்களே, என்று சொன்னார்கள். சபாநாயகரவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதே சட்ட மன்றத்தில், இப்பொழுது நிதியமைச்சராக இருப்பவர்கள், முன்பு இட்டிலியைக் கொண்டு வந்து காண்பித்திருக்கிறார்கள், சட்டசபை நிகழ்ச்சிக் குறிப்பிலே இருக்கிறது. ஆனால் நாங்கள் இங்கு கொண்டுவந்து காண்பிக்கவில்லை. அந்தப் பொருட்காட்சியைப் பார்க்க வேண்டுமென்றால், நேற்றிரவு வந்த நீர்ப்பாம்பு ஒன்று

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 மார்ச் 7

வைத்திருக்கிறேன், அமைச்சர்கள் வேண்டுமானால் பொருட்காட்சியாக அதைப் பார்க்கலாம். நான் தப்பாகச் சொல்லவில்லை, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லுகின்றேன். நடந்திருக்கிறது, வேண்டுமானால் என்னுடைய அறையிலே இருக்கிறது. நீர்ப்பாம்பு, வண்ணாரப்பேட்டையிலே ஒரு குழாயிலிருந்து வந்ததாகச் சொன்னார்கள். இங்கு காண்பிக்க அனுமதி கொடுத்தால், சட்ட சபையில் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். என்னுடைய அறையிலே இருக்கிறது.

ஒப்பாரி என்றால் என்ன? ஒரு உத்தரவு போட்டு, இண்டர்வியூவிற்கு வரச் சொல்லி, புரொவிஷனலி செலக்டட் என்று சொல்லிப் பிறகு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

'Establishment—Traffic—Posts of checking Inspectors—Filling up of by direct recruitment—Candidates for—Training'.
'The following candidates are provisionally selected by the Selection Committee...".

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வேலை கிடையாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதலில் வா என்று சொல்லிவிட்டு, பிறகு ஏன் போகச்சொல்லவேண்டும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மறுபடியும் வேலையில் அமர்த்திக் கொள்கிற காலம் ஒத்திவைக்கப்பட்டதே தவிர, வேலை கொடுக்க முடியாது என்று உத்தரவு போடவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 12-2-ல் இண்டர்வியூவுக்கு வரச் சொல்லிவிட்டு, வந்தவர்களிடம் அப்பொழுதே அதை எடுத்துச் சொல்லியிருக்கலாமே?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வந்தவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று கூறி அனுப்பிவைத்தேனே தவிர, வேலை கிடையாது என்று சொல்லவில்லை. இனிமேல் வேண்டுமானால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய பிறகு அவர்களுக்கு வேலை கொடுக்கலாமா, வேண்டாமா என்பது பற்றி யோசிக்கலாம்.

ந.ப. 12-00 **திரு. பி. ஜி. கருத்திருமன்:** ப்ரொவிஷனலாக செலக்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்களே? அப்பொழுதே சொல்லியிருக்கலாமே? அப்படிச் சொல்லவில்லை. இவ்வளவு தூரம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், நிர்வாகம் நன்றாக நடக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் இல்லை. இதுமாதிரி இந்த போக்குவரத்து இலாகாவில் பல தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். நான் எப்படிப் பாராட்டமல் இருக்கமுடியும். ரூ. 2 கோடி லாபம் கண்டுபிடித்துத் தருவதாகச் சொன்ன



1970 மார்ச் 7] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

அமைச்சரை முதல் அமைச்சர் அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். அதைப் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்? சில சமயங்களில் இம்மாதிரி ஏற்படும் பொழுது, இந்த மாதிரி மாற்றம் ஏற்படும் பொழுது 'ஓயிங் டு ஹெல்த் ரீஸன்ஸ் ஐ ரிஸைன்' என்று சொல்வார்கள். மாற்றுவது என்றால் சாதாரண விஷயமில்லை. மாற்றினார்கள் என்றால், அவ்வளவு குற்றச்சாட்டுகள் இருந்தன. தமிழ் நாட்டில் பஸ்களா போயிற்று? புகைவண்டிகள் தானே போயிற்று. ஒரு கார்டுன் கூட போட்டிருந்தார்கள். கண்ணீர்ப் புகை விடுவதற்காகக் கொடுத்தோம், அதனால் கூட்டம் கலையவில்லை, நான்கு பஸ் டிரான்ஸ்போர்ட் வண்டிகளை ஸ்டார்ட் செய்துவிட்டால், அந்தப் புகையில் கூட்டம் கலைந்துவிடும் என்று. அந்த அளவுக்கு பொது மக்களிடத்தில் பஸ்களின் பராமரிப்பு நிலையைப்பற்றிய அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், முதல் அமைச்சர் அவர்களை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அந்த அமைச்சரை பூரணமாக நீக்கிவிடவேண்டும். அப்படியானால் அவரை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுவேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒரு அமைச்சருடைய இலாகாவை மாற்றியதற்கு என்னைப் பாராட்டியிருக்கிறார்கள். மத்திய அரசில் நிதிமந்திரியாக இருந்த திரு. மொரார்ஜி தேசாயை நிதி மந்திரி பதவியிலிருந்தே நீக்கி இருக்கிறார்கள் இந்திராகாந்தி அவர்கள். அவர்களை எவ்வளவு பாராட்டவேண்டும்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோடுகிற மாதிரி தான். இப்பொழுது அவர்களைப் பூரணமாக நீக்குங்கள், பாராட்டுகிறேன். அவர்கள் செய்த மாதிரி நீங்கள் செய்யுங்கள், பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்தவிதமான குற்றச்சாட்டின் அடிப்படையிலும் கூட்டுறவுத் துறை அமைச்சரிடமிருந்து போக்குவரத்துத் துறை எடுக்கப்படவில்லை என்பதை நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், நிலவள வங்கிகளின் மூலமாகவும், 60,000-க்கு மேற்பட்ட ட்யூப் வெல்ஸ், குழாய்க் கிணறுகளைத் தமிழ் நாட்டில் அமைக்கவேண்டிய புதிய பொறுப்பு முழுவதும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அந்த வேலைகளை இரண்டு ஆண்டு காலத்தில் துரிதமாகக் கவனிக்கவேண்டும் என்ற அடிப்படையிலே, வேலைகளைத் துரிதப்படுத்துவதற்குப் போக்குவரத்துத் துறையை அவர்களிடமிருந்து மாற்றி இன்னொரு அமைச்சருக்குத் தரப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** விளக்கத்திற்கு நன்றி, நாட்டின் வளர்ச்சிக்கு அல்லாமல் கட்சியினுடைய வளர்ச்சிக்கு, கட்சி வளர்வதற்காக ஒரு துறை கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்சிப் பணியில் ஈடுபடுவதற்கு, கட்சியை வளர்ப்பதற்கு ஒரு துறை கொடுத்திருக்கிறார்கள்., "மினிஸ்டர் பார் இம்ப்ரூவிங் தி டி.எம்.கே. பார்டி" என்று ஒரு போர்ட்போலியோ கொடுத்துவிடலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ராம்சுபாக்சிங், மொரார்ஜி தேசாய், சுதேச கிருபளானி இவர்களுடைய மொழிக் கொள்கை என்ன?

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவ்வளவு தீவிரமாக இருக்க வேண்டுமென்று சொன்னவர்கள் நடுநிலைமையாக இருந்தார்கள் என்றால் அதன் பொருள் என்ன? ஒருவர் சொல்வது, சொல்வதை ஏன் நிறைவேற்றவில்லை என்றால், நீங்கள் எங்களுக்காக ஆதரவு தாருங்கள் என்றால் என்ன அர்த்தம்? எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. மலைமுக்கி மகாதேவன் என்று ஒருவன் இருந்தான். ஊரிலேயெல்லாம், மலையைத் தூக்குகிறேன், மலையைத் தூக்குகிறேன் என்று சொல்லிவந்தான். அந்த ஊரிலிருந்த மக்களிடம், ஒரு மாதத்திற்கு விருந்துபோட்டு, தயார் செய்தால் இந்த மலையைத் தூக்கிவிடுவேன் என்று சொன்னான். சாப்பாடு விருந்தெல்லாம் போட்டு, மலையைத் தூக்கு என்றவுடன், அந்த மலையைத் தூக்கி என்னுடைய தலையில் வையுங்கள் என்று சொன்னானாம். அதுபோல் இந்திமொழிக் கொள்கையை நீக்கிவிடுவோம் என்று சொல்லி ஓட்டு வாங்கி வந்துவிட்டு, இப்பொழுது எங்களுக்கு ஆதரவு தாருங்கள் என்று சொன்னால் அந்த மலைமுக்கி மகாதேவனுக்கும், இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? ஆகவே, நான் சொல்லுகிறேன், சொல்லுது நீங்கள், அதை நிறைவேற்ற நாங்கள் வரவேண்டுமா? அந்தப் பொறுப்பை நீங்கள்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். குழந்தையைப் பெற்ற தாய்தான் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சென்னையிலும், தமிழகம் எங்கணும், மக்கள் தலைவரின் மணிவாசகம் என்ற எழுத்துக்களை அழகாகப் போட்டு, காமராஜரின் திருவுருவப்படத்தையும் போட்டிருந்தார்கள். நாம் இருக்கும்வரையில் இந்தி வராது என்று அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கும்பொழுது அறிக்கை வெளியிட்டாரே இப்பொழுது இந்தி வருவதாக அவரே பயப்படுகிறாரே, இந்தி வருவது பொய்யா? அவர் இருப்பது பொய்யா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்தப் பிரச்சினையை எடுத்தால் நீங்கள் தோற்றுவிடுவீர்கள். கட்டாய இந்தி திணிக்கக்கூடாது என்று அவரும் சொன்னார், நாங்களும் சொன்னோம். கௌகத்தியில், இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். அண்ணா ஸ்டாம்பைச்சுற்றி இந்தி போடப்பட்டிருக்கிறதே. உலகத் தமிழ் மாநாட்டின்போது ஸ்டாம்பில் இந்தி போட்டிருந்தது என்பதற்காக அந்த நிகழ்ச்சியையே ரத்து செய்தார்களே? இப்பொழுது அண்ணா ஸ்டாம்பைச் சுற்றிலும் இந்தி இருக்கிறதே?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் விரும்புவதுபோலவோ, காமராஜர் அவர்கள் விரும்புவது போலவோ, இந்திரா அரசைக் கவிழ்ப்பதற்கு



அருமையான சந்தர்ப்பம். நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக ஆக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் காமராஜர் கொண்டு வருவாரா? அல்லது எங்கள் கட்சியின் சார்பாகக் கொண்டு வருகிறோம். அதற்கு சிண்டிகேட் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்களா? நிச்சயமாக சுதந்திராக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஓட்டு அளிப்பார்கள் என்று நம்புகின்றேன். இவ்வளவுபேரும் சேர்ந்து ஓட்டளித்தால், இந்திரா அரசைக் கவிழ்த்துவிடலாம். இந்த நல்ல சந்தர்ப்பத்தில் நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நீங்கள் கொண்டு வருவீர்களா? அல்லது நாங்கள் கொண்டு வந்தால் அதை ஆதரிப்பார்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்திராகாந்திக்கு சப்போர்ட் பண்ணினார்கள். இப்பொழுது அந்த அம்மா சரியில்லை என்றதும் நீங்கள் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களை அழைத்து வந்து, உங்களைப் போல அழகு உண்டா? பேச்சுத் திறமை உண்டா என்று வரவேற்பு எல்லாம் செய்கிறார்கள். அழகு என்றால் நான் சொல்வது அரசியல் அழகைச் சொல்கிறேன். தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இப்பொழுது வந்து ஏன் எதிர்த்து ஓட்டுப் போடுகிறீர்கள்? நான் கேட்பதெல்லாம் உங்கள் கொள்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்திராகாந்தியின் அரசை நிபந்தனையின்றி ஆதரிக்கிறோம் என்று நான் எங்கும் சொன்னதில்லை, கழகத்தின் சார்பில் தலைவன் என்ற முறையில் நானோ, அல்லது பொதுச் செயலாளரோ, கழகத்தில் உள்ள முன்னணித் தலைவர்கள் யாருமோ அல்லது கழகமோ, நிபந்தனையில்லாமல் இந்திராகாந்தியின் அரசிற்கு ஆதரவு தருகிறோம் என்று என்றும் சொன்னதில்லை. நிலைமைகளுக்கேற்ப, வருகின்ற தீர்மானங்களுக்கு ஏற்ப, தன்மையை அறிந்து எங்களுடைய ஆதரவு தரப்படும் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. எதிலும் நிலையாக இருக்க மாட்டார்கள் என்பது தெரியும். அரசியலிலே குழப்பமான நிலை. இதை இன்று சொல்லுவார்கள், அதை அன்று சொல்லுவார்கள். உங்கள் அரசியலே குழப்பமான அரசியல்தானே. இவர்களுக்கே புரிந்துகொள்ள முடியாத அரசியல் என்ன அரசியல்? இந்தியை ஒழித்து விடுவோம், இந்தி வராமல் தடுத்து விடுவோம் என்று சொன்னார்கள். அண்ணா ஸ்டாம்பிலே இந்தி வார்த்தைகள் ஏன்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தமிழ் நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை அண்ணா அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்பொழுது எதிர்க்கட்சித் தரப்பில், காங்கிரஸ்கட்சித் தரப்பில் நீங்கள் ஆதரித்தீர்கள். ஆதலால், திராவிட முன்னேற்றக் கழகத்து ஆட்சியை முழுமையாக ஆதரித்ததாக அர்த்தமா? அதற்கு எனக்கு

[1970 மார்ச் 7.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : டைம் ஆகிவிட்டது. முடித்து விடுங்கள். அப்ரோபிரியேஷன் பில்லின் பேரில் பேசிக்கொள்ள லாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நிலவள வங்கிகள் பற்றி சொல்லப் பட்டது. கார்மடை என்ற ஊரில் பணத்தைக் கொடுத்து நில வள வங்கி ஆரம்பிக்கச்சொல்லி, பிறகு சில காங்கிரஸ்காரர்கள் இருந்ததால், அது இல்லை என்று சொல்லப்பட்டது. எங்கள் கட்சி நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் இதுபற்றி சில குற்றச் சாட்டுகளைக் கூறினார்கள். நில வள வங்கிகள் சரியான முறையில் இயங்கவேண்டுமென்றால், எல்லாக் கட்சியினரையும் அணைத்து, எல்லோருக்கும் நன்மை பயக்கும்படியாக இருந்தால் தான் நன்றாக இருக்கும். குற்றச் சாட்டு சாட்டினால், '20 வருஷங்களுக்கு முன்னால் நீங்கள் எப்படிச் செய்தீர்கள்' என்று கேட்பார்கள். யார் முக்கியமாக இருக்கிறார்களோ அவர்களின் பேரில் நட வடிக்கை எடுக்க வேண்டும், வேண்டாம் என்று சொல்ல வில்லை. அதற்காக ஒரு போர்ட்போலியோவைக் கொடுத்துச் செய்ய சொன் னாலும் எனக்கு ஆட்சேபணை கிடையாது.

இந்த நிதிநிலை அறிக்கையில் 300 கோடி ரூபாய் வந்து கூட, அது எந்தப் பிரச்சனையையும் தொடவில்லை. கடைசியாக ஒரு அறி விப்புக் கொடுத்திருக்கிறார்கள். நில உச்ச வரம்பை 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்திருக்கிறார்கள். இந்த நில சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்ததே காங்கிரஸ்காரர் கள் தான். அதற்கு என்னவெல்லாமோ மாசு கற்பிப்பார்கள். அதைச் செய்துவிட்டார்கள் இதைச் செய்து விட்டார்கள் என்று சொல்லுவார்கள். இன்று சட்டத்தை நான் வரவேற்கிறேன். அதை நான் எதிர்ப்பவன் அல்ல. ஆனால் அது சம்பந்தமாக இருக்கும் பிரச்சனைகளையெல்லாம் மீண்டும் பரிசிலனை செய்ய வேண்டும். அதற்காக ஒரு பொறுக்குக்குழு போட்டு, எல்லா விஷயங்களும் ஆராயப்படவேண்டும். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. எங்கள் கட்சிக்கும் ஆட்சேபணை கிடை யாது. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் எல்லாவற்றையும் யோசித் துச் செய்யவேண்டும்.

1966-67-ல் உள்ள வசதிகளைப் பற்றியும் இப்பொழுதுள்ள வசதி களைப் பற்றியும் சொன்னார்கள். 1966-67-ல் அமைச்சர்களுக்காக ரூபாய் 5½ லட்சம் செலவு செய்யப்பட்டது. 1970-71-ல் ரூபாய் 11½ லட்சம். இது குறைந்திருக்கிறது அல்லவா ? 5½ லட்சத்திலிருந்து 11 லட்சத்திற்கு அதிகமாக செலவிடப்படு கிறது. இதே நிலையிலே பார்க்க போனால், நகர்ப்புறத்தில் இருக் கும் படியான சொத்துக்களுக்கும் உச்ச வரம்பு வைக்கப்படவேண் டும். பாக்கி இருக்கும்படியான சொத்துக்களுக்கும் உச்ச வரம்பு வைக்கப்படவேண்டும்.



1970 மார்ச் 7] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தவிதமான பிரச்னை யும் தீர்க்கப்படவில்லை. எந்தவிதமான பிரச்னையும் அணுகப்பட வில்லை. எந்தவிதமான மக்களுடைய பிரச்னையும் தீர்க்கப்பட வில்லை. இருக்கும்படியான நிலையில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை வரவேற்கிறோம். ஆனால், அதற்குப் பொறுக்குக் கமிட்டி ஒன்று போட்டு, எல்லாவிதமான விசாரணைகளையும் செய்து, வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையினால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது, கட்சியை வளர்க்கும் ஒரு அறிக்கையாகத்தான் இது அமைந்திருக்கிறது என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7 நாட்களாக இந்த நிதிநிலை அறிக்கை யின் விவாதத்திலே நம்முடைய 100 மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின் விவாதத்திற்குக் கடைசியாக பதிலிறுக்கும் முறையிலே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 99-வது என்று நினைக்கிறேன், நான் 100-வது உறுப்பினராக, உங்கள் முன்னிலையில் நின்று கொண் டிருக்கிறேன். நான் ஆரம்பத்திலேயே மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி அமைச்சர் பொறுப்பிலிருந்து, அதுவும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிற நேரத்தில், அதனுடைய பொது விவாதத்தில் வேறு எந்த மாநிலத்தினுடைய முதல் அமைச்சராவது, எந்த நாட்டினுடைய முதல் அமைச்சராவது, இப்படிப்பட்ட ஒரு மாமன்றத்தில் இவ்வளவு பெரிய ஏகோபித்த ஆதரவையும், இவ்வளவு பெரிய பாராட்டுதலையும் இவ்வளவு பெரிய ஒரு நம்பிக்கையையும் பெற்றிருக்கிறார்களா என்றால், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நான் ஏதோ உபசாரத்திற்காகச் சொல்லவில்லை. 7 நாட்களாக இந்த மாமன்றத்தில் நடந்த விவாதத்தில் ஒவ்வொறு உறுப்பினருடைய உணர்வையும், ஒவ்வொரு உறுப்பினருடைய கருத்துக்களையும், அவர்கள் ஆழ்ந்து சொன்ன கருத்துக்களையும் கவனித்துப் பார்த்தால், தமிழ்நாடு அரசினால் இந்த ஆண்டிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக் கை மொத்தமாக மிகப் பெரிய ஆதரவைப் பெற்றிருக்கிறது என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது. அதற்காக நான் எல்லாத் தரப்பினருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத் தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி அமைச்சரின் பொறுப்பு என்பது ஒரு மிக்க் கசப்பான அனுபவம். அது சாதாரண அனுபவம் இல்லை. நெருப்பாற்றில் நீந்திக்கொண்டிருக்கும் மக்கள், பொது மக்கள், 4 கோடி மக்களு டைய பிரதிநிதிகள் அவர்களை வழி நடத்திச் செல்லுகிறார்கள். அவர்களுடைய கருத்துக்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை யிலே மிக நல்ல அளவிலே இருந்ததற்கு நான் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயத்தின் அடித்தளத்தில் இருக்கிற நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்பு

மிகு உறுப்பினர்கள் கோபாவேசப்பட்டு சில வேளைகளில் ஒருவருக்கொருவர் காரசாரமான கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டாலும், இவைகளுக்குப் பின்னால் பொதிந்து கிடக்கின்ற ஆழமான எண்ணத்தை நாம் பார்த்தோமானால், இந்த மாநிலம் வளர்ச்சி அடையவேண்டும், மாநிலத்தில் வெகு வேகமாக நலத் துறைகள் முன்னுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்ற ஒரு பெரிய எண்ணத்தின் இழை ஓடிக்கொண்டிருக்கிறது. அப்படி இழை ஓடிக்கொண்டிருக்கிற எண்ணத்தை எல்லோருமே பிரதிபலிக்கிறோம்.

இன்றைக்கு இங்கு கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மிகப் பெரிய முக்கியமான சட்டத்திற்கு சகல தரப்பினரும் கொடுத்த ஆதரவை நான் மனமாறப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடைசியாக இந்த அறிக்கை யாருக்கும் உதவவில்லை என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சம்பிரதாயப்படி கடைசியாக அப்படிச் சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் சொல்லியிருக்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இவ்வளவு நேரம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சாதாரணமாக வரி இனங்களைப்பற்றி, ஒன்றிரண்டைப் பற்றியாவது சொல்வார்கள் என்று நினைத்தேன். ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுடைய ஒரு பெரிய ஆதரவுடன் இந்த நிதிநிலை அறிக்கை நிறைவேற இருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா சட்டமன்றங்களையும் விட தமிழ்நாடு சட்டமன்றம் தலை சிறந்த மன்றம் என்பதைத் தான் இது நிரூபிக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையின் மிக முக்கியமான அம்சங்களை வழக்கம்போல், ஒவ்வொரு உறுப்பினரும், அவரவர்கள் கோணத்திலிருந்து அதன் மேம்பாட்டை ஆராய்கிறார்கள். தனிப்பட்ட ஒவ்வொரு உரைக்கும் பதில் சொல்லவில்லை என்றால், என்னுடைய சக அமைச்சர்கள் அந்த அந்த மானியங்கள் வரும்போது, பதில் அளிப்பார்கள். பல குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டாம் என்கிற காரணத்தால், ஒவ்வொன்றுக்குள்ளும் நுழையவில்லை. எல்லா உரைகளும் அரசாங்கத்தினுடைய கவனத்தில் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். றேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதற்குப் பிறகு நான்காவது நிதிநிலை அறிக்கையாகும். இந்த அறிக்கை உருவாவதற்கும், இங்கே அளிப்பதற்கும் நல்ல கருத்துக்களைச் சொல்லி மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் கடந்த இரண்டு மாதகாலமாக என்னோடு மிகுந்த ஒத்துழைப்புக் கொடுத்து, அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் எடுத்துக் காட்டிய கருத்துரைகளுக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி இந்த அறிக்கை இங்கே வந்திருக்கிறது:





பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து சொன்னார்கள். எல்லோருக்கும் கவலை இருக்கிறது. நான் முதலிலே குறிப்பிட்டது போல், இந்த நிதிநிலை அறிக்கை என்பது வெறும் கணக்குப் புத்தகம் இல்லை. அட்டவணைகள் இல்லை. மளிகைக்கடைக் கணக்கல்ல. பொருளாதார மேம்பாட்டிற்கு, மூலதன முதலீட்டை மறு ஆய்வு செய்ய, முன்னேற்ற வளர்ச்சிப் பணிக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ள பெரும் வாய்ப்பாக இந்த ஏட்டைப் பார்க்கிறோம். அந்த வகையில் ஆராய்ந்திருக்கும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் தன் உரையில் புள்ளி விவரங்களுக்குள் போகாமல், மேல் மட்டத்தில், நாட்டு நிலைமைகள் மாநில நிலைமைகள் என்று, பட்ஜெட்டைப்பற்றி என்று இல்லாமல், பேசியிருப்பது, அவர்களுடைய பேச்சு அவர்களுடைய இதயத்திலிருந்து பேசினார்கள் என்று பார்க்கிறோம். அதை நான் வரவேற்கிறேன். சட்ட மன்றம் இப்படி உறுப்பினர்களின் இதயக் கண்ணாடியாகப் பிரதிபலிக்க வேண்டும். அந்த வகையில் இந்த சட்ட மன்றத்தினுடைய விவாதத்தில், இந்த நிதிநிலை அறிக்கையின் முதல் பக்கத்தை, பெருமதிப்பிற்குரிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி., இலக்கியம் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்த நாட்டையே இலக்கியமாக்க வேண்டும் என்ற அவா இருந்தாலும், பொருளாதாரக் குறைவு காரணமாக, அதிகம் செய்ய முடியவில்லை. என்றாலும், நல்ல வகையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தன் கொள்கையை நடத்தியிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். தங்களை சமுதாய பணிகளுக்கு அர்ப்பணித்துக் கொண்ட நேரத்தில், அவர்களுடைய எண்ணங்களுக்கு, கனவுகளுக்கு உருவம் தருகிற வகையில் இருக்கிறது, இந்த அறிக்கை.

முதலிலே, மத்திய-மாநில அரசு உறவு பற்றிக் குறிப்பிட்டிருப்பதை எல்லாத் தரப்பினரும் பாராட்டினார்கள். நண்பர் திரு. மார்டின் போன்றவர்கள் போராடவில்லையே என்று கேட்கிறார்கள். போராடுவது என்றால், கத்தியை எடுத்துக்கொண்டு கட்டபொம்மன் போல், அல்லது துப்பாக்கி எடுத்துப் போவது என்று பொருள் இல்லை. உணர்வுகளுக்கு இடம் கொடுக்கிறோம். அதை முதல் 7, 8 பக்கங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்கு இந்த மாமன்றத்தில் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகைகள் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். அரசியல் கட்சிகள் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். எல்லா மக்களுடைய ஆதரவும் பெரும் அளவில் கிடைத்திருக்கிறது. இது உண்மையிலேயே மன நிறைவு அளிக்கிறது. மத்திய ஆட்சி, மாநில ஆட்சி பற்றிய பிரச்சினை 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலையில் இருக்கிறது. ஒரு ஆண்டா, இரண்டு ஆண்டா, 20 ஆண்டுகளாக அரசியல் சட்டம் அமுலில் இருந்திருக்கிறது. அன்று இதைக் கனவு கண்டிருக்கமாட்டார்கள். இப்பொழுது கலைஞர் முதல் அமைச்சர். அவர் பக்கத்தில் நாவலர், இவர்கள் " இத்தனை நன்றாகவா நடத்துகிறார்கள் " என்று நினைக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களில் பல்வேறு ஆட்சிகள் நடக்கின்றன.

மத்தியில் இப்படியெல்லாம் சம்பவிக்கும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். உண்மையாகவே தீட்டியிருக்கிற அரசியல் சாசனம் கவைக்கு உதவாத, காலப் போக்கின் அறைகூவலைச் சமாளிக்க முடியாத நிலையில் இருக்கிறது. மாநில அரசுகள் ஏற்றிருக்கும் பெரிய பொறுப்பை எடுத்துச் சொன்னார்கள். போர்க்கோலம் பூணுவது, சண்டை போடுவது பற்றியெல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கும் நிலவரத்தில் அதிகாரங்கள் எல்லாம் அங்கேயே குவிந்து கிடக்கின்றன. எல்லாவிதமான திட்டங்களுக்கும்—சேலம் திட்டம் வேண்டுமா, நெய்வேலி நிலக்கரி திட்டம் வேண்டுமா, சேதுசமுத்திரத் திட்டமா, கல்பாக்கம் அணு மின்சாரத் திட்டமா, எதுவாக இருந்தாலும் அங்கே அங்கே போகவேண்டியிருக்கிறது. ஆக, டெல்லி நகரத்திலும், பம்பாய் நகரத்திலும் நம்முடைய பொருளாதாரக் கொள்கை உருவாகும் வகையில், நிலைமைகள் இருக்கின்றன. நம்முடைய விமோசனம் அவர்கள் கையில் என்பதைத் தெட்டத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். கரன்சியா, செலாவணியா, பிஸ்கல் பாலிசியா, நம்முடைய நிதிக் கொள்கைகளா, இவைகளையெல்லாம் நிர்ணயிக்க எல்லா அதிகாரமும் டெல்லி மாநகரத்தில் தான் இருக்கிறது. திட்டங்களுக்குப் போடவேண்டிய வரி இனங்கள், போட வேண்டிய நிலைகள் எல்லாம் அங்கேயிருக்கின்றன. அங்கே அதிகாரங்கள் குவிய வைத்துக் கொண்டு பொறுப்பு இல்லாமல் இருக்கிறது. இங்கே கேட்கிறார்கள். நண்பர் மாண்புமிகு பூவராகன் கேட்ட நேரத்தில், வெட்கமாகக் கூட இருந்தது. மாநில சுயாட்சி வேண்டும் என்கின்ற போது, ஐந்து ஆண்டுகாலம் அமைச்சராக இருந்தவருடைய தொகுதியில் இன்னும் குடி தண்ணீரையும் கொடுக்கவில்லை என்றால், இந்தச் சாதாரண வசதியையும் செய்யவில்லை என்றால், அந்த நிலையில் தான் நம்முடைய நிதி ஆதாரங்கள் இருக்கின்றன. நானே வெட்கப்பட்டுக் கொண்டேன். இவைகளெல்லாம் நாங்கள் ஆட்சியில் இருப்பதால் இல்லை. அவ்வளவு அதிகாரங்களும் அவர்களிடம் இருக்கின்றன. பாங்கிகள், செலாவணி, நோட்டு அடிக்கும் அதிகாரம், இப்படியெல்லாம் அங்கு குவிக்கப்பட்டிருப்பதால், மாநிலங்கள் அப்பவித்தனமாக இருக்கும் நிலைகள் உருவாகியிருக்கின்றன.

விலைவாசி பற்றிச் சொன்னார்கள். விலைகள் ஏறியிருக்கின்றன என்று சொன்னார்கள். விலைவாசி உயர்வுக்குப் பெரும் காரணம் மத்தியப் பேரரசின் கொள்கைகள். குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. இந்திரா காந்தி அம்மையார் அரசாங்கமாக இருந்தாலும், இவர்களுக்கு நல்ல ஜாதகம் இருந்தால், இவர்களுடைய அரசாங்கமாக இருந்தாலும், விலைவாசிகள் ஏற்றத்திற்கு மத்திய சர்க்கார் தான் காரணம். போராட்டம் நடத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கொஞ்சங்கூட மாநிலங்களைக் கலக்காமல், பல முடிவுகள் டெல்லியில் எடுக்கப் படுகின்றன. காபி, டீ இவைகளின் விலை ஏறியிருக்கிறது. இதற்கு மாநில அரசா காரணம்? விலைவாசி ஏறினால் யார் பொறுப்பு? காபி, தேயிலை வரி என்றால். அதை



மத்திய சர்க்கார் போடுகிறது. விலை ஏறுகிறது. போராட்டம் வேண்டும் என்று சொன்னால், முதலிலே அந்தக் காரியத்தில் வாதாடும் உரிமையை மாநிலத்திற்கு வாங்கவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். 20 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியா முழுவதும் சேர்ந்து ஒரு பெடரல் எகனாமிக் கவுன்சில் ஒன்றை நியமிக்க வேண்டும் என்ற எண்ணம் தமிழ் நாட்டில் இருக்கிறது. பிரபல பத்திரிகைகள், "இந்து", "மெயில்", 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகளும், இன்னும் பல தமிழ்ப்பெரும் ஏடுகள். தங்கள் ஏகோபித்த ஆதரவைத் தந்திருக்கின்றன. இது கட்சியின் சுலோகங்கள் அல்ல. நாட்டு மக்களின் இருதயத் துடிப்பு. அதை அங்கே இருப்பவர்கள் உணரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தின் 263-வது விதிப்படி இந்த உறவுமுறைகளை நிர்ணயிக்கவேண்டும். அடுத்து 21, 22-ம் தேதிகளில் டில்லி மாநகரில் நடைபெறவிருக்கும் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் மாநாட்டில் நமது முதலமைச்சர் அவர்களும் நானும் கலந்துக்கொள்ளவிருக்கிறோம். இந்த அபிவிருத்திக் கவுன்சில் சில நேரங்களில் கூடிக் கலையத்தான் இருக்கிறதே தவிர, முடிவு எடுத்துக்கொண்ட பிரச்னைக்கு ஒரு மதிப்புக்கொடுத்து, மாநிலங்களுக்குச் சௌகரியமாக இருக்கும்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதாகக் காணோம். தமிழ்நாட்டிலே இருக்கிற உணர்வுகளை, இங்கே இருக்கும் மக்கள் அளிக்கும் ஆதரவை, அங்கே இருக்கின்றவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பாங்குகள் எல்லாம் தேசியமாக்கப்பட்டன. அதை வரவேற்கிறோம். சமதர்ம சமுதாயம் அமைய இதைச் செய்தது ஒரு தைரியமான முயற்சி, பாராட்டத்தக்கது என்று திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களைப் பாராட்டினோம். பம்பாயிலும் டெல்லியிலும் அதிகாரக் குவியல் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று சொன்னோம். அந்தந்த மாநிலப் பிராந்தியங்கள், மாநில அரசாங்கங்கள், பெருவாரியான பிரதிநிதிகள் இந்த நிர்வாகத்திலே பங்குகொள்ள வேண்டுமென்று சொன்னோம். பாங்குகள் தேசிய மயக்கொள்கை என்பது கொள்கையளவில்தான் இருக்கிறதே தவிர, பழைய கதையே பரவாயில்லையென்ற நிலைமைக்குப் போய் இருக்கிறதென்பதை உங்கள் எல்லோர் மூலமாகவும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நிதிக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஃபைனான்ஸ் கமிஷன்பற்றி இங்கு நிரம்பச் சொன்னார்கள். நான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டியது நிரம்ப இருக்கிறது. ஆனால் எல்லாவற்றையும் சொல்ல கால அவகாசம் இல்லை. ஆகவே, ஒன்றை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கேரள சட்டமன்றத்திலே கேரள நிதியமைச்சர் திரு. சேஷன் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இரண்டு நாட்களுக்கு முன்னதாக சமர்ப்பித்தார்கள். வட இந்திய மாநிலங்களான உத்திரப் பிரதேசம், பீகார், அரியானா, மத்தியப் பிரதேசம், மராட்டியம், குஜாராத் போன்ற

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 7

குந்தா மின்சாரத் திட்டத்திற்காக இனாமாக சில மின்சாரக் கருவி களை இந்திய நாட்டிற்குக் கொடுத்தான். அப்படி இனாமாகக் கொடுத்த கருவிகளுக்காக நாம் பணம் கட்ட வேண்டுமென்று மத்திய அரசிடமிருந்து நோட்டீஸ் வருகிறது. குந்தா மின்சாரத் திட்டம் 14 ஆண்டுக் காலமாக நின்றுவிட்டிருக்கிறது. ஆகவே, திட்டத்திற்குத் தகுந்தபடி 25 வருஷம் என்ற அளவில் தவணை முறைகளைத் திருத்தியமைத்தால் நல்லது. கனடா நாட்டுக் காரன் இனாமாகக் கொடுத்ததைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நம்மிடத்தில் அதற்குண்டான பணத்தையும், அதற்கு வட்டியும் கேட்கிறார்கள். நமக்குக் கொடுத்த கடனுக்குக் குறைந்தது 25 வருஷ காலம் தவணை கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதுள்ள நிலைமை

பி. ப. களினால் பல அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன
12-30 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் அல்ல, கேரள மாநில மாகட்டும், உத்தரப்பிரதேச மாநிலமாகட்டும் இந்த நிலைக்குத்தான் உள்ளாக்கப்பட்டு வருகின்றன. ஆகவே தான் அனைத்து மாநில கடன் ஆணைக்கு குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலை, சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கம், கல்பாக்கம் இரண்டாவது மின்நிலையம் இவைகள் எல்லாம் சேர்க்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துகிறோம். இவற்றைச் சொல்லிச் சொல்லி இவைகள் வந்தாகவேண்டும் என்கிற எண்ணம் மக்கள் உணர்வோடு, உணர்ச்சியோடு கலந்துவிட்டது. மக்களது இந்த உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். திரு. கருத்திருமன் சொன்னாலும் சரி, திரு. காமராசர் சொன்னாலும் சரி—அதைப்பற்றிக் கவலை யில்லை. இந்த மாதம் 21-ஆம் தேதி டெல்லியில் நடைபெற இருக்கிற முதல் அமைச்சர்கள் மாநாட்டில் நமது முதல் அமைச்சர் அவர்கள் இவற்றை வற்புறுத்துவார்கள், பலவற்றைப் பெற்றே வருவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பெற்று வரவேண்டும் என்றும் வற்புறுத்துகிறேன். கல்பாக்கம் மின் உற்பத்தி அளவினை 400 மெகாவாட்டுக்கு உயர்த்தவில்லை என்றால் நான்காம் திட்டம் இறுதியில் நமக்குக் கடும் மின்பற்றாக்குறை இருந்தே தீரும். நம் முடைய நியாயமான கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்கவில்லை என்றால் முதல் அமைச்சர் அவர்கள் உங்கள் எல்லோருடனும் கலந்து பேசிப் போர்க் குரலை எழுப்பித்தான் தீரவேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை வாய்தாவே கொடுத்து விட்டார்கள். சுதந்திராக் கட்சி மெம்பர்கள் 'ஹாலிடே' விடவேண்டும் என்று சொல்லிவந்தார்கள். ஹாலிடே என்று இல்லாவிட்டாலும் ஒருவிதத்தில் ஹாலிடேயாகவே போய்க் கொண்டிருக்கிறது.



1970 மார்ச் 7] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஏறக்குறைய 24,000 கோடிக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அவர்கள் உருவாக்கியபோது நமக்கு 624 கோடிக்கு திட்டத்தைக் குறித்தார்கள். 1966-இல் ஆலோசனை செய்து தமிழ் நாட்டிற்கு 564 கோடிக்குத் திட்டத்தைக் குறைத்தார்கள். திட்ட ஆணைக்குழு 1969-74-க்காக தமிழ்நாட்டிற்கு 502 கோடிக்கே தனது வரைவுத் திட்டத்தில் வகை செய்திருக்கிறது. இதை நாம் எப்படி ஏற்பது? கண்டிப்பாக 575 கோடி அளவுக்காவது ஒரு திட்டத்தை ஏற்கவேண்டும் என்று மிகக் கடுமையாக வற்புறுத்தி வருகிறோம். ஒரு வருஷம் நாங்களும் நடந்து பார்த்தாகிவிட்டது. இப்போது புது வரிகள் எல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு நம்முடைய நியாயமான கோரிக்கைக்கு 575 கோடிக்காவது இணங்கியாக வேண்டும்.

இன்னொரு முக்கியமான கருத்தையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்துறையில் பணம் அதிகமாக ஒதுக்க வில்லையே என்றார்கள். விவசாயத்துறையில் செய்திருக்கும்படி யான சாதனைகளை எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துச் சொல்லியிருக்க லாம். ஆனால் அரசியலிலேயே அதிகம் புகுந்துவிட்டார்கள். ஆயினும் சபையில் எழுப்பப்பட்ட தவறான கருத்தை நான் திருத் தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிகப் பயங்கரமான உணவு பஞ்சம், விலைவாசி ஏற்றம், பருவ மழை பொய்த்துப்போனது இவ்வளவு கஷ்டங்கள் இருந்தும் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் விவசாயத் துறையில் புரட்சிகரமான திட்டங்களை மேற்கொண்டது. உணவுக்கொள் கையை இரண்டாகப் பிரித்து ஒன்று தீவிரக் கொள்முதல் திட்டம், திறமையான விநியோகத் திட்டம் இவற்றை ஒரு பக்கம் செயல் படுத்தியது. மற்றொரு பக்கம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க—பசுமைப் புரட்சி திட்டத்தைச் செயல்படுத்தியது. அதன் காரணமாகத்தான் மொத்த உணவு உற்பத்தி 1966–67-ல் 57 லட்சம் டன்னாக இருந்தது என்றால் 1969–70-ல் 63 லட்சமாக உயர்ந்திருக்கிறது. 1966–67-ல் 5,27 லட்சம் ஏக்கரா நிலங்களிலே ஹை ஈல்டிங் வரைடி நெல் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் 1968-69-ல் 17 லட்சம் ஏக்கராவில் சாகுபடி செய்வது நடப்பு ஆண்டில் 24 லட்சம் ஏக்கரா கொண்டுவரப்பட்டிருக்கிறது என் பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கரா, வடார்க்காடு மாவட்டத்தில் ஒண்ணே முக்கால் லட்சம் ஏக்கரா, தென்னார்க்காடு மாவட்டத்தில் 1 லட்சம் ஏக்கரா—ஹை ஈல்டு வெரைடி க்ராப்ஸ்—ஐ.ஆர். 8 சாகுபடித் திட்டத்தின் கீழ்—வயல்வெளிகள்—கிட்டத் தட்ட 5 லட்சம் அறுவடைக்கு தயாராகிக்கொண்டிருக்கிறது என்கிற விவரத்தையும் சொல்கிறேன். (மாண்புமிகு டாக்டர். திருமதி சத்தியவாணிமுத்து 6 லட்சம்) அம்மையார் ஆறு லட்சம் என்கிறார்கள். எனக்கு ஐந்து லட்சம் ஏக்கரா உணவு அறுவடை கொடுத்தால் போதுமானது. இது பசுமைப் புரட்சித் திட்டத்தின் மாபெரும் சாதனை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 7

மாநிலங்களுக்கு 1,300 கோடி ரூபாய் அளவிற்கு வரவின மிகுதி வரும் வகையில நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கிற கருத்தை நாம் மட்டும் சொல்ல வில்லை, அவர்கள் வேகமாகச் சொல்கிறார்கள். ஒருவேளை இந்தக் கருத்தை எடுத்துச் சொல்வதில் நாம்தான் பின்னடி இருக்கிறோமோ என்று சொல்லிக்கொள்ள வேண்டிய வனாக இருக்கிறேன். தமிழ்நாடு, மைசூர் மாநிலம், கேரள மாநிலம், போன்ற தென்னாட்டில் இருக்கிற மாநிலங்கள்தாம் புறக் கணிக்கப்பட்டிருக்கின்றன. வட நாட்டிலே இருக்கிற இந்தி பேசுகிற மாநிலங்களுக்கு அதிக நிதி கொடுத்து, தென்னாட்டு மாநிலங்களுக்கு ஓரவஞ்சனை செய்கிறது பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறது என்று தன்னுடைய பட்ஜெட் உரையில் கூறி யிருக்கிறார். நம்முடைய நலன்களுக்கு ஊறு விளைவிக்கும் வகை யில் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வருமான வரி இனத்திலும் ஆயத் தீர்வை இனத்திலும் நமக்கு வரவின வாயில்கள் குறைந்திருக்கிறது. ஐந்தாண்டுக் காலத்திற்கானபற்றுக்குறை மானியம் 34 கோடியிலிருந்து 23 கோடி ரூபாய்க்குக் குறைக்கப்பட்டுள்ளது. நாம் கெட்டிக்காரர் களாக இருந்ததற்காக நாம் தண்டிக்கப்பட்டிருக்கிறோம். இந்த மாநிலத்தின் நிர்வாகத்தைச் சிக்கனமான நடத்தியதற்காக நாம் தண்டிக்கப்பட்டிருக்கிறோம். 1968-69-ம் ஆண்டுக் கணக்குகளை வைத்துக்கொண்டு நம்மை ஏமாளிகளாக ஆக்கியிருக்கிறார்கள். நாம் தமிழ்நாட்டில் அபிவிருத்தி வேலைகளைச் செய்திருக்கிறோம். இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைத்திருக்கிறோம். இரண்டாவது சம்பளக் கமிஷனுக்காக கொடுக்கப்பட வேண்டிய பணம் இதிலே சேர்க்கப்படாமல் இருக்கிறது. இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் டெல்லி பாராளுமன்றத்திலே நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கும்போது 175 கோடி ரூபாய் மாநிலங்களுக்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பணத்திலிருந்து அரசாங்க அலுவலர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் கட்டாய சலுகை களைக் கொடுக்கிற வகையில் பஞ்ச நிலைமையைச் சரிக்கட்டுகிற வகையில் ஒரு நல்ல தொகையை நமக்கு வாங்கித் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கணிசமான தொகை அதி லிருந்து நமக்கு வர வேண்டுமென்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். அதற்காக எல்லாக் கட்சி உறுப்பினர் களும் ஆதரவு தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரி வித்து, அவர்களை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், அதாவது கடன் வகைகள். நாம் ஏற்கெனவே கடன் 140 கோடி ரூபாயை ஐந்து வருஷத்திலே 160 கோடி ரூபாய் என்ற அளவிலே திருப்பிக் கொடுக்க வேண்டி யிருக்கிறது. இதைத் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர் விட்டத்தில் போன வருஷத்தில், நானும் முதலமைச்சர் அவர்களும்



1970 மார்ச் 7] [திரு. கே. ஏ. மதியழகன்]

நேரடியாகச் சொன்னோம். 140 கோடி ரூபாய் கடன் கொடுத்து விட்டு 160 கோடி ரூபாயாக திருப்பி வாங்கிக் கொள்கிறார்கள். நான் நேரடியாகவே, "whether it is assistance from centre to state or whether it is assistance from state to centre" சொல்லிவிடுங்கள் என்று சொன்னேன். இந்தக் கையிலே கொடுக்கிறார்கள்; அந்தக் கையாலே வாங்கிக் கொள்கி றார்கள். மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி செய்கிறதா? அல்லது மாநில அரசு மத்திய அரசுக்கு உதவி செய்கிறதா? கொடுப்பதை முதல் நாளில் கொடுத்து விட்டு, இரண்டாவது நாளில் வாங்கிக் கொள்கிறார்கள். இப்படிச் செய்வதால் மாநில அரசு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதுவும் ஒருசில மாநிலங் களின் நிலைமை மோசமாக இருக்கிறது. ஒருசில மாநிலங்களின் கடன் தவணைகளை 800 கோடி ரூபாய் அளவுக்கு மாற்றியமைக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த அடிப்படையில் 50 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதிவாயில் கள் கிடைத்திருந்தால் நிலைமை நல்லதாக இருந்திருக்கும். நாம் நல்ல காரியங்களைச் செய்திருக்க முடியும், கடன் தவணைகளை மாற்றியமைக்க வேண்டும். எப்பொழுதோ வாங்கிய கடன், ஏதோ காரணங்களுக்காக வாங்கிய கடன், முன்காலக் கடன் எல் லாம் மொத்தமாகச் சேர்ந்துவிடுகின்றன. ஆகவே, கடன் தவணை களை மாற்றியமைக்கவேண்டும். மேலும் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் மாற்றப்பட வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க இதுவரையில் ஒரு நல்ல பதில் வரவில்லை. மத்திய மாநில உறவு சரியாக இல்லை.

நேற்றைய தினம் பேசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, "Amortisoation of debts பற்றியும், Federal Debt Commission "பற்றியும் சொன் னார்கள். உலக நாடுகளில் இந்தியா வாங்கிய கடனைத் தள்ளி வைத்தால்தான் சுபிட்சம் அடையும் என்று சொன்னார்கள். பல் வேறு மாநிலங்கள் மத்திய அரசிடத்தில் அவ்வப்பொழுது கடன் வாங்கியிருக்கிறது. கடன்வாங்கி அந்தத் திட்டத்தின் பயன் நிலைமைகளுக்கேற்ப தவணை நிலைமைகள் மாறவேண்டும். தவணை கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வெளிநாடுகளில் வாங்கும் கடனை ஐம்பது வருஷங்களில் திருப்பித் தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை நமக்குக் கடனாகக் கொடுக்கும்போது பத்து வருஷங்களில் கடனைத் திருப்பித் தரவேண்டுமென்று அதிக வட்டிக்குக் கொடுக்கிறார்கள். நீர்ப்பாசனத் திட்டத்திற்குக் கடன் கொடுக்கிறார்கள் என்றால் அத் திட்டத்தின் பயன் கிடைத்த பின்னர்தான் தவணைக் கடன் வசூ லிக்க ஆரம்பிக்க வேண்டும். நாம் நீர்ப்பாசனத் திட்டங்களுக் காக கடன் வாங்கியிருக்கிறோம். பொற்கொல்லர்கள் நலவாழ் விற்காகக் கடன் வாங்கியிருக்கிறோம். கனடா நாட்டுக்காரன்

இன்னும் இரசாயன உரங்களை எடுத்துக்கொண்டால் முன்பு 85,000 டன் கொடுக்கப்பட்டது என்றால் தற்போது 1,33,000 டன் ஐக்கு உயர்த்தியிருக்கிறோம். இன்னும் 2 லட்சம் ஏக்கரா நிலத்திற்கு விமானம் மூலம் மருந்து தெளிக்க வகை செய்திருக்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இன்றைக்கு என்னைப் பாராட்டினார்கள். ஒரு பழமொழி சொல்வார்களே, 'வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷிப் பட்டம்' என்று. அதைப்போல எனக்கு ரொம்ப நாளைய ஆசை—நம்மை எதிர்க்கட்சித் தலைவர் பாராட்டமாட்டார்களா என்று. இன்றைக்கு கோவையில் விவசாய பல்கலைக்கழகம் ஏற்பட இருப்பதைக் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் என்னைப் பாராட்டினார்கள். எனக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் கோவை சொந்தமான இடம் என்பதால் இந்தப் பல்கலைக்கழகம் அங்கே ஏற்படவில்லை. பலகாலமாக அங்கே விவசாயக் கல்லூரி இருந்து வந்திருக்கிறது, பல விவசாய ஆராய்ச்சிகள் நடந்துவந்திருக்கின்றன, அதன் காரணமாக இன்றைக்கு எல்லா விவசாயக் கல்லூரிகளையும் ஒருங்கிணைக்கிற விவசாயப் பல்கலைக்கழகம் அங்கே அமைக்கப்படுகிற சூழ்நிலையை அடைந்திருக்கிறது என்பதை திரு. காசிராமனுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவும் விவசாயத்துறையில் நல்லதொரு முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மிக முக்கியமான மற்றொரு திட்டம் ரூபாய் 40 கோடி செலவில் தஞ்சை மாவட்ட பாசனத் திட்டங்களை மாற்றி அமைப்பதாகும். உலக பாங்குடன் தொடர்பு கொண்டு—கால்வாய்களை ஒழுங்குபடுத்துவது, கரைகளை சிமெண்ட் போட்டு ஒழுங்குபடுத்துவது இது போன்று வாய்க்கால், மதகு, வடிகால் செப்பனிடப்பட்டால் பல்லாயிரக்கணக்கான ஏக்கராக்களுக்கு பாசன வசதி நிலையானதாக இருக்கும். கரிகால் பெருவளத்தான் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பாசன ஆதாரங்கள் இப்போது ரூபாய் 40 கோடி செலவில் நவீனப்படுத்தும் பெரிய திட்டமொன்று அமைந்திருக்கிறது. அங்கே விரையமாக, ரொம்பப் பிற்போக்காக இருந்த முறைகளில் எல்லாம் மாற்றம் செய்து வளத்தை ஏற்படுத்தக்கூடிய நல்ல காரியமாக இது அமைந்து இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களிடம் புதுக் கிணறு வெட்டுகிற பொறுப்பைக் கொடுத்திருக்கிறோம். ரூபாய் 72 கோடி ஒதுக்கப்பட்டு அந்தத் திட்டத்தின்கீழ் 54 ஆயிரம் கிணறுகள், 34 ஆயிரம் பம்ப் செட்டுகள், மின் இணைப்புப் போன்ற காரியங்கள் ஆற்று நீரை மட்டும் நம்பிக்கொண்டு இராமல் ஊற்று நீரையும் பயன்படுத்தக்கூடிய காரியங்களை நாம் செய்து இருக்கிறோம். நாம் விவசாயத் துறையிலே நல்லமுறையிலே செய்திருக்கின்றவை மிக முக்கியமான காரியங்கள் ஆகும்.





ஏழை எளிய மக்களுக்குப் பிற்பட்ட மக்களுக்குச் சென்னை நகரிலே சேரி ஒழிப்புத் திட்டம், ஏழாண்டுக் காலத்திலே எல்லாச் சேரிகளையும் ஒழிக்கக்கூடிய திட்டத்தைச் செய்திருக்கிறோம். ஸ்லம் கிளியரின்ஸ்க்காக டெல்லியிலே 10 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டு அதிலே 30 கோடி ரூபாய் சேரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலிருந்து போதிய அளவு நிதியைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

ரொம்பவும் முக்கியமான இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கின்ற நேரத்தில் அரசாங்க ஊழியர்களையும் மற்றவர்களுக்குச் செய்திருக்கிற சலுகைகளின் தன்மையின் அடிப்படையில் கவனித்து உதவிகள் செய்துகொண்டுவருகிறோம். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அரசாங்க ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாகக் கருதவில்லை. அவர்கள் மக்களுடைய நன்மைக்கான காரியங்களை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே அவர்களைப் பங்காளர்களாக, அதிலே ஈடுபடுகிறவர்களாக திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாலுமிகளாக வறுமையை விரட்டுகின்ற தன்மையிலேயும் பேதங்களையும், தாரதம்மியங்களையும் ஒழிக்கின்ற தன்மையிலேயும் நாம் மேற்கொண்டிருக்கின்ற போராட்டத்திலே பங்கெடுத்துக்கொண்டிருக்கின்ற சமுகத் தொண்டர்களாக நாம் கருதிவருகின்றோம். இது ஏதோ வருணனையல்ல, வார்த்தை ஜாலங்கள் அல்ல, ஏதோ இங்கிதமாக பேசுகின்ற மொழிகள் அல்ல. அவர்களுக்காக இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு அகவிலைப் படியை 1—11—1967-லும், 1—6—1968-லும், 1—6—1969-லும் மூன்று முறைகள் உயர்த்தியிருக்கிறது. இதற்காக 7½ கோடி ரூபாய் வரையில் அரசாங்கத்திற்குச் செலவாகிறது.

Extension of City Compensatory allowance to Government servants and teachers in aided schools in belt areas in and around Madras City and Madurai. என்ற முறையிலே புறநகர்ப் பகுதியிலே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர திருமணக் கடன்கள், போன்ற கடன்களும் வழங்கப்படுகின்றன. இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற உயர்வுகள் நம்முடைய ஆசைகளை நிறைவேற்றிவிடக்கூடியவையல்ல. இந்த அரசாங்கத்தினுடைய இதயபூர்வமான உணர்வும், இதயபூர்வமான அன்பும் அந்த ஊழியர்களிடத்திலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் மாநில அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பென்ஷன் முறையிலே இன்றைக்கு சென்ற 26-ம் தேதி முதல் டியர்னஸ் அலவன்ஸையும் கணக்கிட்டு அதையும் சேர்த்து ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறோம். இந்த மாறுதல் எந்த அளவுக்கு நன்மையைக் கொடுத்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பியூனை எடுத்துக்கொண்டால் அவர் கடைசியாக 60 ரூபாய் சம்பளம் வாங்கியிருந்தால் அவர் சென்ற 26-ம் தேதிக்கு முன்னால்

ரிடையர் ஆகியிருந்தால் அவருக்குக் கிடைத்திருக்க வேண்டிய ஓய்வூதியம் 22 ரூபாய், ஆனால் இப்பொழுது கிடைக்கிற ரூபாய் 40. ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளை எடுத்துக்கொண்டால் அவர் சென்ற 26-ம் தேதிக்கு முன்பு ரிடையர் ஆகியிருந்தால் 35 ரூபாய் தான் கிடைக்கும். இப்பொழுது 62 ரூபாய் கிடைக்கிறது. அதே போன்று செகரட்டரியேட் சூப்பிரண்டெண்டெண்ட் மாதம் 250 ரூபாய் முதல் 500 ரூபாய் சம்பளம் பெற்றிருந்தவர், அவருக்கு முன்னாலே 178 ரூபாய் கிடைத்திருக்கும். இப்பொழுது 233 ரூபாய் கிடைக்கும். அதைப்போலவே அஸிஸ்டெண்ட் செகரட்டரியை எடுத்துக் கொண்டாலும் முன்னாலே 282 ரூபாய் கிடைக்கும். இப் பொழுது 345 ரூபாய் கிடைக்கும். எனவே அரசாங்கம் இப்படிப் பட்ட காரியங்களிலே மிகுந்த சிரத்தை கொண்டிருக்கிறது. இதைத்தவிர எல்லாப் பகுதி ஊழியர்கள், மற்றவர்கள் இவர்களும் இப்படிப்பட்ட பலன்களைப் பெறத்தக்க வகையிலே பெரிய மாற்றத்தை நாம் செய்திருக்கிறோம். மத்திய அரசும் நல்ல முறையிலே உதவியளித்து இன்னும் நல்ல முறையிலே நாம் செய் வதற்கு வாய்ப்பு கொடுக்கும். மீண்டும் மீண்டும் அவர்களிட மிருந்து பெறுவதிலே நாம் மாற்றங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக் கிறோம், அதிகமாகப் பெறுவோம் என்று நாம் மனமார நம்புகிறோம்.

வரிகளைப்பற்றி எல்லோரும் ஏகோபித்த எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் கூட ஒன்றும் சொல்லவில்லை, எனவே அதை வரவேற்கிறது என்றுதான் அர்த்தம். பொதுவாக அதிகமாகச் சொல்லப்படவில்லை. இந்த வாசகத்திலே தாங்கு வோர் மீதுதான் வரி போடப்பட்டு இருக்கிறது. அதுகூடச் சாதாரணமாகத்தான் போடப்பட்டிருக்கிறது. நாட்டு மக்க ளிடையே அப்படித்தான் சொல்கிறார்கள். இங்கே கொஞ்சப் பேர்கள் வேறு விதமாகச் சொல்லிக்கொள்கிறார்கள். அவர்கள் இருக்கிற இடத்திற்கு அப்படித்தான் சொல்லவேண்டும் என்று நினைக்கிறார்கள். மோட்டார் கார் 20 ஆயிரம் ரூபாய் போட்டு வாங்குகிறார்கள் அவர்கள் 600 ரூபாய் வரி கொடுக்க வேண்டும். இது ஒன்றும் பெரிதல்ல. நாம் மிகவும் குறைவாக வரி போட்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சினிமாக் காரர்கள் 6 லட்சம், 7 லட்சம் போட்டுப் படம் எடுக்கிறார்கள். சில வேளைகளில் படம் வராமல் போவதும் உண்டு. ஏழு லட்சம், எட்டு லட்சம் போட்டு சினிமா எடுக்கிறவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வரி கொடுப்பது பெரிதல்ல. அதே போன்று எலெக்ட்ரிக் சாமான்கள். சிமிண்ட் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் மிகவும் மிகைப் படுத்திச் சொல்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். நான் கணக்குப் போட்டுப் பார்த்தேன். அதிகாரிகள் கொடுத்த கணக் கைச் சொல்லவில்லை, சொந்தமாகப் போட்டுப் பார்த்தேன், அதைச் சொல்கிறேன். 50 ஆயிரம் ரூபாய் அளவுக்குக் கட்டுகிற வீட்டிற்கு 3 ஆயிரம் ரூபாய்க்குத்தான் சிமிண்ட் வேண்டியிருக் கிறது. (குறுக்கீடு) தப்பு என்றால் பலமாகச் சொல்லுங்கள்.





**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் கட்டப்போகிற வீட்டுக்கு அவர்கள் காண்ட்ராக்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொள்கிறார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் வாதத்திற்காகச் சொல்லவில்லை. 3 ஆயிரம்தான் ஆகும், நான் சொல்வது தப்பு என்றால் எடுத்துக்கொள்ள வேண்டாம். (குறுக்கீடு) இப்பொழுது 5 ஆயிரம் என்கிறார்கள். நான் சொல்வதை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். 50 ஆயிரம் ரூபாயில் கட்டப்படுகிற வீட்டுக்கு சிமிண்ட என்று சொல்கிற நேரத்திலே இதன் மூலமாக 100 ரூபாய்தான் அதிகமாகிறது. இது எப்படி பாதிக்கும் என்று தெரியவில்லை. சில பத்திரிகைகள் இருக்கின்றன, எழுதுகிறார்கள், என்னுடைய ஊர் கோயம்புத்தூர் பத்திரிகைகூட எழுதுகிறது. அது பணக்காரர் பத்திரிகை (குறுக்கீடு) நாயுடு அவர்கள் எழுது கிறார்கள், டிராக்டர் பற்றி எழுதுகிறார்கள், இன்றைக்கு 10 ஆயிரம் 15 ஆயிரம் என்று டிராக்டர்கள் யார் வைத்து இருக்கிறார்கள். டிராக்டர் வேண்டுமென்று 15 எம்.எல்.ஏ.க்களோடு அய்யையா நாட்டம் போவார்கள் அல்லது முதலமைச்சர் அவர்களிடம் போவார் கள். இன்றைக்கு 4 ஆயிரம் 5 ஆயிரம் டிராக்டர்கள் என்றுகூட இல்லை. 3 ஆயிரம் டிராக்டர்கள் கொடுக்கலாமா என்று யோசனை செய்யக்கூடிய கட்டத்திலேதான் இருக்கிறோம். ஒரு டிராக் டருக்கு 400 ரூபாய் கொடுப்பது பெரியதல்ல. அதிலும்கூட அவர் கள் எல்லாம் இந்த வரப்போகிற நில உச்சவரம்பு வலையிலே வரக் கூடியவர்கள்தான் இருப்பார்கள். அவர்கள் எழுதுகிறார்கள், உணவு உற்பத்தி பாதிக்கிறது என்றெல்லாம் எழுதுகிறார்கள். கடி யாரத்திற்கு வரிப் போடப்படுகிறது. ஆபீசுக்குப் போகவேண்டு மென்று எல்லாம் பேசுகிறார்கள். 100 ரூபாய் கொடுத்து ஒரு ஏழை எளியவர் கடியாரம் வாங்குவார். நம்முடைய கருத் திருமனைப் போன்ற பணக்காரர்கள் 1,000 ரூபாய் போட்டுக் கடி யாரம் வாங்கலாம். 100 ரூபாய்க்கு கடியாரம் வாங்கினால் அதற்கு 3 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது எப்படி ஏழை எளியவர்களைப் பாதிக்கும்? நண்பர் பூவராகன் அவர்கள் இதனால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். ஏதாவது சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறார்கள். டர்ன் ஓவர் டாக்ஸ் பற்றி எல்லோரும் ஆத ரித்துப் பேசினார்கள். இதிலே இரண்டு மூன்று வாதங்கள் சொல்லப்படுகின்றன.

சட்டத்திலே எப்படிப் போட்டாலும், இது காபிடல் அல்லவா, இது பிராபிட் அல்லவா என்றார்கள். இது காபிடலும் அல்ல, பிராஃபிட்டும் அல்ல; சேல்ஸ்டாக்ஸ்தான். டர்ன் ஓவருக்குத் தான் டாக்சே தவிர, வேறு ஒன்றும் இல்லை. வாங்குபவர்களைப் பாதிப்பது இல்லை. இது இல்லாவிட்டாலும் இன்கம்டாக்சில் போய் விடும். இந்த மன்றத்தில் அதைப்பற்றிச் சொல்லக்கூடாது என்றாலும் அவர்களுக்கு நஷ்டம் இல்லை என்பதை விளக்க விரும்பு கிறேன். பத்து லட்சம் டர்ன் ஓவர் இருப்பவர்கள் என்று சொன்

[திரு. கே. அ. மதியழகன்] [1970 மார்ச் 7

ளால் 30,000 ரூபாய் செல்வ்டாக்ஸ் வரும். இப்போது புது வரியின் மூலமாக மேலும் 2,250 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும். இந்த 30,000 ரூபாயைக் கழித்துவிட்டு அவர்களுக்கு எட்டு சதவிகிதம் லாபம் வருவதாக வைத்துக் கொண்டால அவர்களுடைய இன்கம் எண்பதாயிரம் ரூபாய். அதிலே இன்கம்டாக்ஸ் 40,700 ரூபாய் போய்விடும். நெட் இன்கம் 39,300. இதை சர்சார்ஜ் கொடுத்த பிறகு பார்த்தால் இன்கம் 77,750; இன்கம்டாக்ஸ் 39,900. நெட் இன்கம் 37,850. மேலே இருப்பதிலே வருமானம் 39,300. ஆகவே, சர்சார்ஜ் ஆக அவர்கள் செலுத்தும் 2,250 ரூபாயிலே அவர்கள் செலுத்துவது 1,200 ரூபாய்தான்; மீதியை மத்திய அரசாங்கம் செலுத்தி விடுகிறது என்றுதான் பொருள். பாதிக்கப்படுகிறார்கள், தொழிலே போய்விடும் என்று பேசுவதெல்லாம் சரியல்ல. ஐந்து லட்சம் டர்ன் ஓவர் என்று கணக்குப் போட்டாலும் இதே போன்றுதான் வரும்.

வரியே போடக்கூடாது என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை அல்ல. தாங்குபவர்களுக்கு வரி போட வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. ஏழை விவசாயிகளுக்காக புஞ்சை நில வரியை இந்த அரசு நீக்கியிருக்கிறது. மற்றும் பல காரியங்களைச் செய்திருக்கிறது. பெரிய மாறுதலை ஏற்படுத்தக் கூடிய நில உச்சவரம்புத் திட்டத்திற்கு எல்லோரும் ஏகோபித்து ஆதரவைத் தெரிவித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், விதிவிலக்குகள் கொடுத்திருப்பது பற்றியெல்லாம் ஆழ்ந்த கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த உச்சவரம்பு ஆண்டாண்டுக் காலமாக இருந்து வருகின்ற நிலைமைகளைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு ஒரு உண்மையான விவரத்தை மட்டும் கூறி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை இவ்வளவு தூரம் புரட்சிகரமாக அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய அளவில் கொடுத்த ஒத்துழைப்புக்கும், மற்றும் ஒத்துழைப்புக் கொடுத்த சக அமைச்சர்களுக்கும், இந்தக் காரியங்களை எல்லாம் செய்து கொடுத்த நிதி இலாகா காரியதரிசி திரு. வெங்கடரமணன் அவர்களுக்கும், அவருடைய துணைவர்களுக்கும், கடந்த இரண்டு மாத காலமாக இரவு பகல் என்று பாராது பணியாற்றிய ஊழியர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

அடையாறு பகுதியில் சத்தியா ஸ்டுடியோவுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் இன்றைய தினம் ஏறக்குறைய இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்தை ஒப்படை செய்திருக்கிறது தமிழ் நாடு பூராவும். இவ்வளவு எல்லாம் நடைபெறுகின்ற நேரத்தில் முதலமைச்சர்பற்றி



1970 மார்ச் 7] [திரு. கே. அ. மதியழகன்]

ஒரு அபாண்டம் சொல்லுவதோ, கட்சியில் பெரிய பிரமுகரைப் பற்றிச் சொல்லுவதோ மேற்கொண்டிருக்கிற பெரும் காரியங்களுக்கும், மரபுகளுக்கும் உகந்ததுதானா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் யோசிக்க வேண்டியது அவசியமாகும். அவர்களுக்குச் சொல்ல உரிமை இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. இந்த அரசாங்கம் உழுபவனுக்கு நிலம் கொடுக்கிறது, தொழிற்சாலைகள் அமைக்க நிலம் கொடுக்கிறது, வீடு கட்டிக் கொள்ள நிலம் கொடுக்கிறது. சத்தியா ஸ்டுடியோ சம்பந்தப்பட்ட வரையில், 39 கிரவுண்ட் நிலம் அடையாறு நதிக் கரையிலே இந்த நிலத்திற்கு மேற்குப் புறமாக சத்தியா ஸ்டுடியோ, கிழக்குப் புறமாக அரசாங்கத்தின் கோழிப் பண்ணை, தென்புறமாக கர்நாடிக் மியூசிக் ஸ்கூல் மணற்பாங்கான உப்பு நிறைந்த புதரான இடம்; நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. அங்கே நூற்றுக்கணக்கான பாம்புகள் இருக்கின்றன. அங்கிருந்து பாம்புகள் திரு. மாதவன் அவர்கள் வீட்டுக்கும் என் வீட்டுக்கும் வந்து விடுகின்றன. பாம்பைப் பிடிக்க மகுடிக்காரனை வரவழைத்ததில், மாதவன் வீட்டில் 57 பாம்புகளும், என் வீட்டில் 19 பாம்புகளும் பிடிக்கப்பட்டன. நான் சொல்வதை நம்பவேண்டும். பாம்புப் புதர்கள் இருக்கின்ற அந்த இடம் எதற்காகக் கொடுக்கப்பட்டது? பிலிம் இண்டஸ்ட்ரி ஆரம்பிப்பதற்காக இந்த இடத்தைக் கொடுங்கள் என்று கேட்ட நேரத்தில் அந்த இடத்திற்கு 2,500 ரூபாய் என்று மதிப்பீடு செய்து—தவறான மதிப்பீடு அல்ல; பக்கத்தில் கலாக்ஷேத்திரத்திற்கும் அதே மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது—கொடுக்கப்பட்டது. 7½ சதவிகிதம் அதிலே வாடகையாக 30 ஆண்டுக் காலத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஏதாவது கட்ட வேண்டுமென்றால் நம்முடைய அனுமதி பெற்றுத்தான் கட்ட வேண்டும். இதுமாதிரி பல இடங்களில் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 8—11—1961-ல் டி.வி.எஸ். நிறுவனத்திற்கு 20 ஏக்கர் 79 சென்ட், ஒரு ஏக்கர் இரண்டாயிரம் வீதம் ஜி.ஓ. எண் 4823-ல் வில்லிவாக்கத்தில் கொடுக்கப்பட்டது. மைக்ரோ கம்பெனிக்கு 1.19 ஏக்கர் கொடுக்கப்பட்டது. 23—1—1966-ல் டபில்யூ.எஸ். இன்சுலேட்டர்சுக்கு 2 ஏக்கர் 29 சென்ட் ஆயிரம் ரூபாய் விலையில் கொடுக்கப்பட்டது. புழலேரிக்கு பக்கத்தில் முன்பு அமைச்சராக இருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் சம்பந்தப்பட்ட வெங்கடாசலம் கார்டிமென்சுக்கு 4 ஏக்கர் 80 சென்ட் நிலம் ஒரு சென்ட் 16 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சதர்ன் இண்டர்ஸ்ட்ரியல் கார்ப்பரேஷனுக்கு 37 ஏக்கர் 39 சென்ட் நானூறு ரூபாய் விலையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கதிரேசன் என்பவருக்கு 2—3—1967-ல் பி. ப. 1-00
ஒரு ஏக்கர் இருபது வருடங்களுக்கு ரூ. 900-க்கு வாடகைக்கு பழைய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் தப்பு என்று நான் சொல்லவில்லை. வெவ்வேறு காரணங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி ஒரு பிலிம் இண்டஸ்ட்ரி வைக்க அவர்கள் விண்ணப்பத்தின் மீது முறைப்படித்தான் செய்யப்பட்டது. ஆக, பாரபட்சமாக யாரும் நடக்கவில்லை.

ஆகவே இந்த அவை உறுப்பினரை அல்லது அரசாங்கத்தைக் களங்கப்படுத்த வேண்டும் என்று இப்படிச் சொல்வது சரியல்ல, காமராஜ் நாடார் அவர்களுக்கு ரொம்ப வேண்டியவர் என்று சொல்லப்படுகின்ற தாமஸ் என்பவருக்கு . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சர்க்காரைக் களங்கப்படுத்தக் கூடாது என்று சொல்லி இவர்கள் மட்டும் காமராஜ் அவர்களை களங்கப்படுத்தலாமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அண்ணாமலை மன்றத்திற்கு எதிராக ஸ்போர்ட் ஸ்டேடியம் பக்கத்தில் ரூ. 1,893 வருட வாடகைக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது தவறு என்று சொல்லவில்லை ஆகவே, நாங்கள் ஒன்றும் முறைக்கேடாகச் செய்து விடவில்லை என்று கூறி இந்த அறிக்கையை ஆதரித்த எல்லா உறுப்பினர்களுக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் கூறிக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

(6) 1970-71-ம் ஆண்டின் முன்பண நிதிக் கோரிக்கைகள் (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது 1970-71-ம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநருடைய பரிந்துரையின்பேரில், 1970-71-ம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளின் அறிக்கையில் 1 முதல் 47 மானியக் கோரிக்கைகளுக்கெதிராகக் கீழ்க்கண்டபடி காட்டியுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று தொடங்கும் நிதியாண்டின் ஒரு பகுதி குறித்து அரசுக் கணக்கில் வழங்கப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

| | | | ரூபாய் |
|---|---|---|---|
| கோரிக்கை | 1 | நிலவரித் துறை .. .. .. | 52,00,000 |
| ஷை | 2 | மோட்டார் வண்டிச் சட்டங்கள்-நிர்வாகம். | 9,00,000 |
| ஷை | 3 | பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் .. | 45,00,000 |
| ஷை | 4 | முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் .. | 7,00,000 |
| ஷை | 5 | பத்திரப் பதிவுத் துறை .. .. | 23,00,000 |
| ஷை | 6 | மாநிலச் சட்டமன்றம் .. .. | 6,00,000 |
| ஷை | 7 | தேர்தல்கள் .. .. .. .. | 2,00,000 |
| ஷை | 8 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. | 1,14,00,000 |
| ஷை | 8-ஏ | பால்வழங்கு திட்டங்கள் .. .. .. | 97,00,000 |
| ஷை | 9 | மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் .. | 3,89,00,000 |
| ஷை | 9-ஏ | 1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் .. .. .. | 10,00,000 |



| | | | ரூபாய். |
|---|---|---|---|
| கோரிக்கை | 10 | நீதி நிர்வாகம் .. .. .. | 60,00,000 |
| ஷை | 11 | சிறைச்சாலைகள் .. .. .. | 59,00,000 |
| ஷை | 12 | காவல் துறை .. .. .. .. | 3,62,00,000 |
| ஷை | 13 | கல்வி .. .. .. .. .. | 16,93,00,000 |
| ஷை | 14 | மருத்துவம் .. .. .. .. | 3,99,00,000 |
| ஷை | 15 | பொதுச் சுகாதாரம் .. .. .. | 2,25,00,000 |
| ஷை | 16 | வேளாண்மை .. .. .. | 4,00,00,000 |
| ஷை | 17 | மீனளம் .. .. .. .. | 44,00,000 |
| ஷை | 18 | கால்நடை வளர்ப்பு .. .. .. | 96,00,000 |
| ஷை | 19 | கூட்டுறவு .. .. .. .. | 1,00,00,000 |
| ஷை | 20 | தொழில்கள் .. .. .. .. | 96,00,000 |
| ஷை | 21 | சிறு கோளு .. .. .. .. | 14,00,000 |
| ஷை | 22 | கதர் .. .. .. .. .. | 4,00,000 |
| ஷை | 23 | சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. .. .. .. | 1,51,00,000 |
| ஷை | 24 | தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் .. | 20,00,000 |
| ஷை | 25 | பழங்குடி மக்கள் அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் .. .. .. .. | 2,21,00,000 |
| ஷை | 26 | பாசனம் .. .. .. .. | 94,00,000 |
| ஷை | 27 | பொதுப் பணிகள்—பணிகள் .. | 2,55,00,000 |
| ஷை | 28 | பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும் .. | 1,09,00,000 |
| ஷை | 29 | பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் .. | 75,00,000 |
| ஷை | 30 | சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் .. | 4,88,00,000 |
| ஷை | 31 | பஞ்சத் தணிப்பு .. .. .. | 4,00,000 |
| ஷை | 32 | ஓய்வூதியங்கள் .. .. .. | 1,08,00,000 |
| ஷை | 33 | பல்வகை .. .. .. .. | 2,08,00,000 |
| ஷை | 34 | எழுதுபொருள்—அச்சுத்துறை .. | 69,00,000 |
| ஷை | 35 | காட்டுவளத் துறை .. .. .. | 49,00,000 |
| ஷை | 36 | ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. .. | 2,23,00,000 |
| ஷை | 37 | ஜமீன்தார்களுக்கு இழப்பீடு .. .. | 19,00,000 |
| ஷை | 38 | பொதுச் சுகாதார மூலதனச் செலவு .. | 11,00,000 |
| ஷை | 39 | வேளாண்மை மூலதனச் செலவு .. | 5,00,000 |
| ஷை | 40 | தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு .. .. .. .. | 2,17,00,000 |
| ஷை | 41 | பா[illegible] மூலதனச் செலவு .. .. | 2,13,00,000 |
| ஷை | 42 | [illegible] பணிகள் மூலதனச் செலவு .. | 3,00,00,000 |
| ஷை | 43 | சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. .. .. | 75,00,000 |

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| கோரிக்கை | 44 | காட்டுவள மூலதனச் செலவு .. .. | 35,00,000 |
| ஷை | 45 | ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல். .. .. .. .. | 2,00,000 |
| ஷை | 46 | அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. .. .. .. | 14,25,00,000 |
| ஷை | 47 | மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் .. .. .. | 5,89,00,000 |

மேற்கண்ட கோரிக்கைகள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

(7) அறிவிப்பு.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) அரசினர் மசோதா

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இந்த மன்றத்தின் திருமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

The Hon. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduced the till.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

எதுவும் இல்லை.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

**திங்கட்கிழமை, 1970 மார்ச் 9.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 269, 270 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது 271-ஆம் எண்ணுள்ள வினா எடுத்துக்கொள்ளப்படும்.

*Connemara Public Library.*

* 271. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the new building constructed for the Connemara Public Library in the Museum compound has been occupied; and

(b) if not, why?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இன்னும் சில சிறு வேலையினங்கள் செய்து முடிக்கப்பட வேண்டும். நூல் அலமாரிகள், மேசை, நாற்காலி ஆகியவற்றை வழங்க வகை செய்ய வேண்டும்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அடையாற்றி லுள்ள நூல்நிலையம் ஒரு மாத காலமாக மூடப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதன் காரணம் என்ன? அது மீண்டும் திறக்கப் படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூல வினா, கன்னிமாரா நூலகத்தைப் பற்றியது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கன்னிமாரா நூல்நிலையத்தைப் பற்றியது. அடை யாற்றைப்பற்றி விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி போடவும்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், இந்தக் கன்னிமாரா லைப் ரரிக் கட்டடத்தின் மேல்பாகத்தின் சில இடங்களில் கொஞ்சம் தண்ணீர் கசிந்து அங்குள்ள புத்தகங்களுக்கு எல்லாம் நஷ்டம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறதே, அது உண்மையா? ஆம் எனில், அந்தச் சேதாரத்தைத் தவிர்க்கும் பொருட்டு, கட்டடம் ரிப்பேர் செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பழுது பார்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 12 லட்சம் 70 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, அதற்கான ஃபர்னிச்சர், அலமாரி, மேசை, நாற்காலி ஆகியவை வாங்க தொகை சாங்ஷன் செய்ய வேண்டியிருக்கிறது. அது முடிந்தவுடனே புத்தகங்கள் நல்ல முறையில் வைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கன்னிமாரா நூல் நிலையத்திலிருந்து உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு, அவர்களுடைய வீட்டிலே கொண்டுவந்து நூல்களைக் கொடுக்கிற ஒரு முறை இருந்து வருகிறது. அந்த முறையை விரிவுபடுத்துகின்ற உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : In the present building of the Connemara Library, the ventilation and other arrangements are very poor and cause inconvenience to the readers who have to take down notes. So, may I request the Hon. Minister to make some temporary arrangements to remove this inconvenience?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தச் சங்கடங்களை நீக்குவதற்காகத்தான் 12 லட்சம் 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசு 6 லட்ச ரூபாய் மானியம் தருகிறது. பாக்கித் தொகையை மாநில அரசு செலவிட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. கம்பிகள் போடவேண்டும். அலமாரி, மேசை, நாற்காலி ஆகியவையும் போடவேண்டியிருக்கிறது. விரைவிலே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன.

**திரு. ம. சொ. கோவிந்தராசன் :** சென்னை மாநகரத்திலுள்ள நூல் நிலையத்திற்கு 'கன்னிமாரா நூல் நிலையம்' என்று பெயர் வைத்திருப்பது போல், மதுரையில் கட்டப்படும் பெரிய நூல் நிலையத்திற்கு 'அண்ணா நூல் நிலையம்' என்று பெயர் வைக்கப்படுமா ?

(விடை இல்லை)

**திரு. வி. கே. கோதண்டராமன் :** 'கன்னிமாரா நூலகம்' என்னும் பெயர் அந்தக் காலத்தில் வைக்கப்பட்டது. பல பெயர்களை மாற்றிக்கொண்டு வருகிறீர்கள். (குறுக்கீடு) ஆகையால், மாண்புமிகு நண்பர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னதுபோல் 'ஜோதி பாசு நூலகம்' என்று பெயர் வைக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பெயர்கள் எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்ற அந்த முடிவுக்கு நாம் வந்துவிடவில்லை. பழைய பெயர்கள் முக்கியமான





அவசியத்தையொட்டியும் தேவையை யொட்டியும், அவ்வப்போது ஏற்படுகிற உணர்ச்சியையொட்டியும் மாற்றப்படுகின்றன. இது பற்றி முடிவு எதையும் எடுக்கவில்லை.

**திரு. நா. வீராசாமி :** கன்னிமாரா லைப்ரரியில்தான் பல்கலைக் கழகம் நடத்துகிற தேர்வுகள், அரசாங்கம் நடத்துகிற தேர்வுகள் ஆகியவற்றிற்கான பழைய வினாத்தாள்களெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றைப் பார்க்கின்றவர்கள், மத்தியில் இருக்கும் சில வினாத் தாள்களை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய குற்றச்சாட்டு அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. கொண்டுவரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, I understand some invaluable old books in the Connemara Public Library . . . .

MR. SPEAKER : Valuable or invaluable?

THIRU K. VINAYAKAM : Invaluable. I mean that they are so very valuable that they cannot be sold for money or any value. Their value is immense. That is the idea. Such kind of old books have been destroyed by white ants in this Library. Was any special step taken to restore such kind of books by some other methods? When a question was put on this subject in the Assembly sometime back, we were told that steps were being taken in that direction. May I know to what extent those steps have fructified in a fruiful manner?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆனால், புத்தகங்கள் செம்மையாகப் பாதுகாக்கப்பட எல்லா நடவடிக்கைகளும் கன்னிமாரா நூல் நிலையத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அனைத்திந்தியாவில் இருக்கும் மூன்று முக்கியமான நூல் நிலையங்களில் கன்னிமாரா நூல்நிலையம் ஒன்றாகக் கருதப்பட்டு, எந்தப் புத்தகம் எங்கே பதிப்பிக்கப்பட்டாலும் அதனுடைய படியொன்று இந்த நூல் நிலையத்திற்கு வரவேண்டும் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள புத்தகங்களைக் காப்பதற்கு என்ன என்ன நடவடிக்கையெல்லாம் எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அத்தகைய பழுது ஏற்பட்டதா என்ற விவரம் இல்லை. அப்படியிருந்தால் அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

[1970 மார்ச் 9.

**திரு. ஏ. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, இந்த தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக மத்திய சர்க்கார் ஏதாவது நிதி உதவி செய்கிறதா? அல்லது மாநில சர்க்காரே முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறதா? இம்மாதிரித் திட்டத்தில் எத்தனை ஊழியர்கள் வேலை பார்க்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மத்திய சர்க்காரினுடைய உதவியும் இருக்கிறது. அதுபற்றி முக்கியமான குறிப்புகள் இங்கு இல்லை. தனிக்கேள்விபோட்டால் சொல்லலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் வேலை பார்க்கின்றவர்கள் தற்காலிகமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. எந்த நேரத்தில் வேலையிலிருந்து நீக்கப்படுவோமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, அவர்களை நிரந்தரமாக ஆக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தத்திட்டத்தில் தற்காலிகமாகத்தான் அவர்களுக்கு வேலை வழங்கப்பட்டது. ஏனென்றால் நான்காவது கட்டம் முடிந்தபிறகு அவர்கள் அத்தனைபேர்களுக்கும் நிலையான உத்தியோகம் கொடுக்க முடியாது. வேறுபல திட்டங்களுக்கு அதிலே பணிபுரிபவர்களை ஈர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அதுவரை நிலையாக வைத்தால், அந்தத்திட்டம் ஒழிக்கப்பட்டபிறகு அவர்களுக்கு வேலையில்லாமல் சம்பளம் கொடுக்க வேண்டி நேர்ந்தால் கணக்கு ஆய்வாளர் அதுபற்றிக் கேள்வி எழுப்பலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் என்பதை மலேரியா ஒழிப்புத் தேசிய திட்டம் என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

**திரு. கே. விநாயகம் :** என். எம். இ. புரோக்ராம் என்பது நாம் கொடுத்த பெயர் அல்ல. சென்ட்ரல் கவர்ன்மெண்டில் கொண்டு வந்தார்கள். நாம் மாற்றிக்கொள்ள உரிமை இல்லை. தலைவரவர்களே,

May I know how many persons were affected by the malaria disease before this programme was introduced in our State and the number of persons who died on account of it and also what is the progress so far made on account of the introduction of the scheme and is there any improvement?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தப்புள்ளி விவரங்கள் பற்றிய தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் புள்ளி விவரங்கள் சேகரித்துத் தரலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். மலேரியாவின் தன்மைகள் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் மூலமாக பெருவாரியான அளவில் இந்த மாநிலத்தில் அகற்றப்பட்டு விட்டது. இன்னும் சொல்லப்போனால்,



1970 மார்ச் 9]

இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களையும்விட மலேரியா ஒழிப்பில் தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது, இந்தத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது என்ற அத்தகைய குறிப்பு வந்திருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராசன் :** தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உடுப்புகள் வழங்கப்படுவதில்லை. அப்படி உடுப்புகள் வழங்கப்படாதபொழுது, சம்பளம் பெறும்பொழுது உடுப்புகளைப்போட்டுக்கொண்டு சம்பளம் வாங்க வேண்டுமென்று நிர்பந்திக்கப்படுகிறது அதிகாரிகளால். அது சரியா? அந்த நிபந்தனைகள் கூடாது என்று அரசாங்கம் செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையீடுகள் வந்தன. அதுபற்றிப் பரிசீலிக்கும்படி நான் துறையினரிடம் கூறியிருக்கிறேன். பரிசீலிக்கப்பட்ட பிறகு அந்த நிலைமைகள் பற்றி ஆராயப்படும்.

### வேலை அடிப்படையில் கல்வித் திட்டம்.

*** 275 வினா திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை அடிப்படையில் கல்வி போதிக்க திட்டம் ஏதாவது தமிழ்நாடு அரசு தயார் செய்து கொண்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 235, 236, 276, 277, 278, 279 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### *Stock of broken wheat in Government Godowns*

* 280. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(*a*) whether large stock of broken wheat has been piled up in Government Godowns in this State; and

(*b*) if so, the reasons thereof ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) 3. 11. 1969 அன்றிருந்த நிலவரப்படி சென்னை மாநகர மண்டலக் கிடங்குகளில் 11 டன் அளவே கோதுமை நொய் இருந்தது. அந்த இருப்பு முழுவதும் தற்போது அனுப்பப்பட்டுவிட்டது.

### *Central Semen Banks.*

* 281. *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether there is any proposal to establish Central Semen Banks, for frozen semen of high yielding breeds of cattle?

## கோயம்புத்தூர் தலைமை மருத்துவ மனைக்கு கண் மருத்துவர்

* வினா 272—திரு. எம். பூபதி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோயம்புத்தூரிலுள்ள சர்க்கார் தலைமை ஆஸ்பத்திரியில் ஒரு கண் வைத்தியரை நியமிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி கண் நோய்ப் பிரிவு சிறப்புப் போராசிரியராகவும், கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவச்சாலையில் (முன்னாள் தலைமை மருத்துவச்சாலை) சிகிச்சைப் பணி புரியவுமாக ஒருவரை நியமித்து, 16–12–1969 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஏற்கனவே 14–3–1969 முதல் கண்நோய் பிரிவில் சிறப்புப் பட்டம் பெற்ற உதவி மருத்துவர் ஒருவர் மருத்துவ மனையின் கண் நோய் பிரிவில் வேலை பார்த்து வருகிறார்.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவச்சாலையில் கண் நோய் மருத்துவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அங்கு வருகின்ற நோயாளிகளினுடைய கண்களைப் பரிசோதனை பண்ணுவதற்குத் தேவையான, கண்ணில் இருக்கும் ஓட்டையையும், பிளவையும் அடைத்து உறையச் செய்யும் மெஷின் (Photo Coagulation Machine) கண்ணுக்குள் இருப்பதைப் பார்க்கும் கருவி (Ophthalmoscope) கண்ணுக்குள் இருக்கும் நரம்புகளைப் பரிசோதனை செய்யும் கருவி (Electro-retinogram) கண்ணுக்குள்ளிருக்கும் பிசிறு, கட்டிகளை கண்டு பிடிக்கும் கருவி (Ultro-sonogram) மற்றும் ‘ காண்டாக்ட் லென்ஸ் ’ ஆகியவை அங்கு இல்லை என்று தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டே போகிறீர்களே.

**திரு. எம். பூபதி:** பல்வேறு ஆஸ்பத்திரிகளில் இரண்டு மூன்று கருவிகள் மட்டும் உபயோகிப்படுத்துகிறார்கள். ஆனால், இம்மாதிரியான முக்கியமான கருவிகள் இல்லாமல் எந்தவிதமான ட்ரீட்மென்டும் செய்ய முடியாது. ஆகவே, இவைகளையெல்லாம் அரசு உடனடியாக வாங்கிக்கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அத்தகைய கருவிகள் அங்கு இருக்கின்றனவா இல்லையா என்ற தகவல் இங்கே இல்லை. அங்கே அப்படிப்பட்ட கருவிகள் இன்றியமையாமல் தேவைப்படுகின்றன என்றால் அங்கிருக்கும் தலைமை மருத்துவ அதிகாரியோ மற்றவர்களோ அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும். ஒரு கண் மருத்துவப் பிரிவுக்கு என்ன என்ன கருவிகள் இன்றியமையாமல் தேவைப்படுகின்றனவோ அவையத்தனையும் கோவை மாவட்டக் தலைநகரில் இருக்கும் மருத்துவச்சாலையில் என்ன தேவைப்படுகின்றனவோ அவை அத்தனையும் இருக்க வேண்டியதற்கு வகை செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.





## *Water supply scheme to Alandur Municipality.*

* 273. *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu has sanctioned a scheme of drinking water-supply to the municipality of Alandur, Chingleput district; and

(b) if so, the estimate of that scheme?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) ஆலந்தூர் நீர்வழங்கு திட்டத்தின் மூன்றாம் கட்டம் அமைப்பதற்கான மதிப்பீடு ரூ. 3.52 லட்சத்திற்கு 1969-ல் செப்டம்பர் மாதத்தில் அரசினரால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**திரு கே. விநாயகம்:** இந்தக் குடிநீர்த் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் அந்தப் பகுதியில் சட்டசபை அங்கத்தினர் தன்னுடைய சொந்தச் செலவில் லாரி மூலம் குடி தண்ணீருக்கு வசதி செய்தாரே அது ஒரு சில நாட்கள் மட்டும் செய்யப்பட்டு பிறகு அதை விட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா? உங்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத்தரப்படும்.

## தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம்

* 274 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தினை தமிழகத்தில் எடுத்து விடும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக நமது அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு எவ்வளவு? இந்தத் திட்டத்தினால் பயன் அடைந்த மக்கள் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்புத் திட்டம் ஒரு தேசியத் திட்டமாகக் கருதப்படுகிறது. 1959-60இல் இந்தத் திட்டம் துவங்கப்பட்டது. நான்கு கட்டங்களில் இந்தத் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் நிறைவேறி வருகிறது. முதல் மூன்று கட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நான்காவது கட்டத்தில் விஜிலென்ஸ் செல் என்ற முறையில் அமைத்து மேலும் பரவாமல் தடுக்கும் அத்தகைய சூழ்நிலையில் அந்தத் துறையில் இருக்கிறவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். 32 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணியாற்றி வருகிறது. அதற்காக மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகையினுடைய விவரம் இங்கில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

**THE HON. THIRU P. U. SHANMUGHAM**: Government have sanctioned the establishment of a frozen semen laboratory and utilisation of frozen semen in the Madras Veterinary College during the current year.

**திரு. ஏ. எம். இராஜா**: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கையிலே வெட்டரினரி காலேஜிலே இம்மாதிரி பேங்க் ஒன்று ஏற்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதனுடைய கிளைகளைத் திறந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள கால்நடைகளை வளர்க்க இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டந்தோறும் கிளைகளைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: தலைவரவர்களே, இது ஆலோசனை. இதுபற்றி ஆலோசிக்கலாம்.

வளவனூர் பெருந்தேவித் தாயார் கூட்டுறவு பால் விற்பனைச் சங்கம்

* **282 வினா—திரு. மு. இராமன்**: மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வளவனூர், பெருந்தேவித் தாயார் கூட்டுறவு பால் விற்பனைச் சங்கத்தில் கையாடல் செய்திருப்பதாக அரசாங்கத்திற்கு புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அது சம்பந்தமாக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மத்திய அரசு நிறுவனங்களுக்கு பாதுகாப்பு

* **269 வினா திரு. வி. கே. கோதண்டராமன்**: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது ராஜ்யத்தில் மத்திய சர்க்காருக்கு சொந்தமான தொழிற்சாலைகள் எத்தனை ? எவை எது ?

(இ) அவைகளுக்கெல்லாம் மத்திய சர்க்கார் தனியாக போலீஸ் பந்தோபஸ்து படையை ஏற்படுத்தியுள்ளார்களா ?

(உ) அது விஷயமாக நமது சர்க்கார் எதிர்ப்புக் காட்டி எழுதியுள்ளார்களா ? விபரம் என்ன ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தமிழ் நாட்டில் மத்திய அரசின் பொறுப்புள்ள நிறுவனங்களின் பட்டியல்* ஒன்று சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசின் பொறுப்பிலுள்ள தொழில் நிறுவனங்களை இன்னும் மேலான முறையில் பாதுகாக்கவும், செக்யூரிடி அளிக்கவும், நாடாளுமன்றம், 1968-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள், பாதுகாப்புச் சட்டத்தினை அண்மையில் நிறைவேற்றியது.

(உ) இத்தகையதொரு படையை நிறுவவேண்டிய தேவையில்லையென இம்மாநில அரசு கருதியதால், இச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு அது உடந்தையாக இருக்க இயலாதென தனது ஏலாமையைத் தெரிவித்தது.

**திரு. வி. கே. கோதண்டராமன்**: சார், மத்திய சர்க்காரிடமிருந்து வந்த பதிலுக்குப்பிறகு, இந்த சர்க்காரையும், மாநில சர்க்காரையும் கலக்காமல் மத்திய சர்க்கார், அவர்கள் பிரியம்போல இங்கு ஒரு படையை நிறுவுவதன் மூலமாக சமீபத்திலே ஏற்பட்ட கோச் பேக்டரி சம்பவம்போல நடக்கலாம் அல்லவா ? உடனடியாக அது போன்று எடுக்க வேண்டுமென்பதைக் குறித்து பாராளுமன்றத்திலே பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியிருக்கிறார்களே அதைப்போல மீண்டும் வலியுறுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தலைவரவர்களே, இதில் நம்முடைய அரசு, அந்தப படை இங்கே மத்திய சர்க்காருடைய நிறுவனங்களுக்குத் தேவையில்லை என்பதற்கான பல காரணங்களைத் தெரிவித்து மறுத்திருக்கிறது. அந்தக் காரணங்களில் முக்கியமானது, சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளை மாநில அளவில் கவனிக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசையே சாரும். மாநிலத்தின் எப்பகுதியில், எந்த நிறுவனம் இருந்தாலும், அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். அவ்விதம் இருக்கும்போது, மத்திய நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கு என்று தனியாக படை அமைக்கப்பட்டால், தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்க அரசு திறன் இழந்து விட்டது என்றே பொருள்படும். இவ்விதம் நியமிக்கும் படை சில சந்தர்ப்பங்களில் மாநிலக் காவல் துறையின் உதவியையும் நாடும் என மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் பாதுகாக்கும் பொறுப்பை இரு பகுதியினரும் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் மாநில காவல்துறையின் திறன் குன்றும்; தகுந்த கட்டுப்பாடும் இராது. கட்டுப்பாடு நிலவவில்லை என்றால் இப்படிப்பட்ட தொல்லைகள் பெருகிக்கொண்டே போகும். இம் மசோதாவின் 10 ( ) பிரிவின் மூலம் மத்திய அரசு நிறுவனங்களோடு தொடர்புகொண்ட இதர நிறுவனங்களிலும் இப்படை பயன்படுத்தப்படலாம் என்றுள்ளது. இப் பிரிவு மாநில நிறுவனங்களுக்கும் பொருந்துமோ என ஐயுற வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பல காரணங்களை

* 498-499-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது மாநில அரசின் காவல்துறை பாதுகாப்பு அளிக்கின்றது. மாநிலத்தில் சட்டம், அமைதி, ஒழுங்கு காக்கவேண்டிய பொறுப்பு மாநில காவல் துறையைச் சேர்ந்தது. இதற்கு என்று தனியாக ஒரு படையை நிறுவ அனுமதிப்பது, டியூயல் கண்டிரோல், இரட்டை ஆட்சி நிறுவப்படுகிற ஒரு முறையாகிவிடும் என்பதை இந்த அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறது.

THIRU T. MARTIN : Under the Constitution the Centre has got the right to send executive directions to the State for the purpose of carrying out the objects of the Constitution. May I request the Hon Chief Minister to state Whether there is any statutory bar for installing the Industrial Security Force in any State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப்பற்றிச் சட்டத்தில் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், 1968-ம் ஆண்டு மத்திய தொழில் நிறுவனப் பாதுகாப்பு படைச் சட்டம் என்கின்ற தலைப்பின் கீழே இதை நிறைவேற்றுகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் போலீஸ் இங்கு செயல்படும்பொழுது, மாகாண சர்க்காருடைய ஆலோசனைக்கோ அல்லது கருத்துக்கோ விரோதமாகச் செயல் படக் கூடிய உரிமை இருக்கிறதா ? அல்லது மாகாண சர்க்காரின் கட்டுப்பாட்டின் கீழ் அது செயல்படக்கூடிய நிலைமை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது முழுக்க முழுக்க அவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழேதான் இருக்கும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

*270 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the authorities of the Small Arms Factory sought Police assistance to deal with the stay-in-strike in their factory at Suriur, Tiruchirappalli about the 24th July 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி (கிராமப்பகுதி) காவல்துறை இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர், காவலர்கள் நால்வர் ஆகியோருடனும், படைக்கலன்கள் தாங்கிய ரிசர்வ் போலீஸின் இரண்டு பிரிவுகளுடனும் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்தும் பொருட்டு இத் தொழிற்சாலை வளைவுகளுக்கு வெளியே பாதுகாப்பு அளித்தார். 24—7—69-ல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதும், காவல்துறைப் பாதுகாப்பு நிறுத்தப்பட்டது.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state the reasons for this strike?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொழிலாளர்கள் தாங்கள் வசிக்கும் குடியிருப்புக்குத் தண்ணீர் வழங்குவதற்காக வரி ரூ. 1.90 மாதம் தோறும் கட்டப்படவேண்டியதைக் கொடுக்க முடியாது என்று முதலில் மறுத்து, அதற்கான வேண்டுகோள் விடுத்திருந் தார்கள். அது நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாததால் அதன் காரணமாக கேரோ செய்யப்பட்டனர் நிறுவனத்தார். அதில் 8 பேர்களின் மீது வழக்கு தொடரப்பட்டு, 8 பேர்கள் தண்டிக்கப் பட்டார்கள். அதைத் தொடர்ந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடைபெற்றது. பிறகு அந்த வேலை நிறுத்தம் திரும்பப்பெறப் பட்டது.

## டிராக்டர்கள் இறக்குமதி

* 276 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள Ago Industries Corporation மூலம் வெளிநாடுகளிலிருந்து (Tractor) கள் வரவழைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நாடுகளிலிருந்து ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ருஷ்யா, ருமேனியா, செக்கோஸ்லோவிக்கியா, கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி.

திரு. கொளத்தூர் கோதண்டம் : விவசாயிகளைப் பொறுத்த வரையில் குறைந்த குதிரை ஓட்டமுள்ள டிராக்டர்களைத் தான் விரும்புகிறார்கள். தற்பொழுது பெரிய டிராக்டர்களை விவசாயிகள் வைத்துப் பராமரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் குறைந்த குதிரை ஓட்டமுள்ள டி.டி. 14 டிராக்டர்களை அதிகமாக இறக்குமதி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டி.டி. 14 ருஷ்யன் டிராக்டர்கள் 350 வேண்டும் என்று கேட்கப்பட்டதில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கேட்கின்ற அளவுக்கு விரைவாக மற்ற நாடுகளிலிருந்து கேட்கின்ற அளவு டிராக்டர்கள் அனுப்பப்படுவதில் சில சங்க டங்கள் இருக்கின்றன. ருமேனியாவிலிருந்து 110 டிராக்டர்களைக் கேட்டோம். அவர்கள் தான் 110-ஐயும் கொடுத்திருக்கிறார்கள். ருஷ்யன் டி.டி. 14, அதாவது 14 குதிரை ஓட்டமுள்ள டிராக்டர்கள் வரவழைப்பது பற்றி அவர்கள் எழுதிக் கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். விரைவிலே அதை அதிகமாக வரவழைத்து அனுப்பு வதற்கு மத்திய அரசாங்கம் ஆவன செய்யும்.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, ஊட்டியில் உள்ள இண்டோ-ஜெர்மன் பிராஜெக்டில் மிகச் சிறந்ததாகவும், சிறியதாகவுமுள்ள டிராக்டர்களை ஜெர்மனியர்கள் அங்கிருந்து கொண்டுவந்து உபயோ கிக்கின்றார்கள். அத்தகைய டிராக்டர்களின் விலை ரூ. 10,000-லிருந்து

யும் கூறி அது தேவையில்லை என்று நாம் சொல்லியிருக்கிறோம். இப்படை அமைப்பை இந்தியாவில் முதலில் மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், மைசூர்—இம்மாநிலங்கள் தவிர பிற மாநிலங்கள் ஒப்புக்கொண்டன. கடைசியாக மேற்கு வங்காளம் மட்டும் சில நடவடிக்கை முறைகளைக் கூறி அதன்மீது ஒப்புக்கொண்டது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றுவதும், உடைமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் மாநில அரசின் தலையாய பொறுப்பாகும். மாநில அரசு வேறு, மத்திய அரசு வேறு என்று பாகுபடுத்துவது, மத்திய அரசினுடைய சொத்துக்களுக்கு தனி போலீஸ் படையை மத்திய அரசு அமைத்துக் கொள்வது, மாநில உரிமையைப் பாதிப்பது ஆகாதா? நாம் அவர்களை நம்பினாலும், நம்மை அவர்கள் நம்ப மறுக்கிறார்கள். இந்திய ஒருமைப்பாடு என்பது வெறும் கூப்பாடுதானா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படிப் பட்ட கருத்துக்களையெல்லாம் மையமாக வைத்துத்தான் இந்த மாநிலம் அவர்களுடைய அந்தத் தீர்மானத்தை ஏற்பதற்கில்லை என்று மறுப்புரைத்திருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே கிளர்ச்சிகள் ஏற்படும்பொழுது மத்திய அரசினுடைய சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டால் அந்த நட்டத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென மத்திய சர்க்கார் எழுதியிருக்கிறதா? அதற்கு மாநில அரசு அளித்த பதில் என்ன? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தனிக்கேள்வி போட்டால் அதைப்பற்றிச் சொல்லலாம். இந்தக் கேள்வியில் அது இடம் பெறவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, நம்முடைய ஆதரவைத் தெரிவிக்கும் எதையும் கேளாமல், மற்ற ஏதோ ஒரு சில மாநிலங்கள் ஒத்துக்கொண்டதற்காக அந்தப் படையை ஏற்படுத்துவதுபற்றி நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? அப்படி எடுக்கவில்லையென்றால் மேற்கொண்டு எடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய மாநிலம் மறுத்திருக்கிறது. அவர்கள் 1969-இல் ஜூலைத் திங்களில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இன்னும் படை எதையும் அவர்கள் அனுப்பவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்படி ஒரு படையை மத்திய சர்க்கார் நிறுவி இருப்பது இந்த மாநில சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத காரணத்தினால் நிறுவியுள்ளதா? எதற்காக வேண்டி நிறுவப்பட்டுள்ளது? மேற்கு வங்காளத்தில் சில மாறுதல்களுடன்



ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த மாறுதல்கள் என்ன, என்ன அடிப்படையிலே ஏற்றுக்கொண்டுள்ளார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த விவரங்கள் தெரியாது. மேற்கு வங்காளம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது மாத்திரம் தான் எனக்குத் தெரியும்.

**திரு. கே. வினாயகம் :** மத்திய அரசாங்கத்தினுடைய சொத்துக்கள், ஸ்தாபனங்கள் இங்கு இருப்பதினால் அதற்குப் போதிய அளவுக்கு நம்மால் பாதுகாப்புத் தரமுடியாது என்று அவர்கள் சந்தேகிப்பதனாலும், அவர்கள் நம்முடைய கோரிக்கையையும் முறையாக அனுமதிக்காமல் நம் மீது படையைத் திணிப்பதனால், இந்த ஸ்தாபனங்களையும், நிறுவனங்களையும், இந்தத் தொழில் ஸ்தாபனங்களையும் எங்களுக்கே கொடுத்துவிடுங்கள், நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்ற யோசனையை நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்குச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதை நாங்கள் சொன்ன நேரத்தில் எதிர்த்தவர்கள், இன்று இந்தக் கேள்வியைக் கேட்பது வரவேற்கத்தக்கது.

**திரு. இராம அரங்கண்ணல் :** இந்தப் படைக்கு ஆட்களை தேர்ந்தெடுத்து அனுப்புகிற பொறுப்பையும் மத்திய அரசாங்கமே நிறைவேற்றுகிறதா அல்லது நமது போலீஸ் படையிலிருந்து நாம் ஆட்களைத் தருகின்றோமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்களும் அனுப்புவார்கள். இங்கிருந்தும் ஆட்களை எடுத்துக்கொள்வோம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** மத்திய அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலை இருக்கும் இடங்களிலெல்லாம் அந்தத் தொழிற்சாலைகளுக்கு வரி போடும் அதிகாரத்திற்கு நமது அரசு தடை விதித்திருக்கிறது. இந்தத் தடையை நீக்கி, அப்படி வரி விதிக்கும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு அளிப்பது பற்றி யோசிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படிப்பட்ட விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர்கள் அதற்கான தனிக் கேள்வி போட்டால், முழு விவரங்களையும் அளிக்க முடியும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் சார்புடைய தபால், தந்தி, ரயில்வே ஆகிய நிறுவனங்களில் வேலை நிறுத்தம், மறியல், போராட்டம் நடைபெறுகின்ற சமயங்களில், மத்திய அரசுப் போலீஸ் பிரிவு பாதுகாப்பு அளிக்கின்றதா? அல்லது மாநில அரசு போலீஸ் பிரிவு பாதுகாப்பு அளிக்கின்றதா?

கானலுக்கு வந்து, கொடைக்கானலில் உள்ள மாளிகைகளில் தங்கி, கோஹினூர் மாளிகை, கவர்ன்மெண்ட் ரெஸ்ட் ஹவுஸ் இங்கெல்லாம் தங்கி அங்கு சென்ற கமிட்டிக் கூட்டங்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் இடம் இல்லாமல் பல சிக்கல்கள் ஏற்பட்டன என்பதால், மிடில் கிளாஸ் மக்களுக்குத் தங்கவென்று இந்த ரெஸ்ட் ஹவுசுகளை உடனடியாகக் கட்ட, இந்த ஆண்டிலேயே கட்டுவதற்கு ஏதாவது முயற்சி எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கொடைக்கானலில் குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பூக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, 12 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் நெருக்கடியைப் பற்றிக்கவனிக்கலாம். (சிரிப்பு)

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, இது தவிர வேறு எங்கெங்கு விடுதிகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது பூரணமாக பட்டியல் இல்லை, என்றாலும், இந்த ஆண்டு சிதம்பரம், காஞ்சி இன்னும் சில இடங்களில் கட்ட உத்தேசம். திருச்செந்தூரில், கன்யாகுமரியில் ஏற்கனவே கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கும் தறுவாயில் இருக்கின்றது.

*Hotel Review and Survey Committee*

* 278. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether any hotel in this State has received ranking by the Hotel Review and Survey Committee of the Union Government?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆம்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, இந்த ஓட்டல்களுக்கு மத்திய சர்க்காரால் பண உதவி ஏராளமாக அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 24 ஓட்டல்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன அதற்கென்று மத்திய சர்க்காரால் தனியாக சர்வே செய்யப்படுவதற்காக சர்வே கமிட்டி போட்டு, அவர்கள் எல்லா மாநிலங்களையும் சுற்றிப் பார்த்து, ஓட்டல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். 1, 2, 3, 4 ஸ்டார் ஓட்டல் என்கிற அடிப்படையில் தரம் பிரித்திருக்கிறார்கள். மிக உயர்ந்த ஓட்டலை 4 ஸ்டார் ஓட்டலாகப் பிரித்ததில் சென்னையில் கனிமாரா ஓட்டலையும், மதுரையில் பாண்டியன் ஓட்டலையும் நாலு-ஸ்டார் ஓட்டல்களாகப் பிரித்திருக்கிறார்கள். இன்னும் ஓட்டல் சவேரா (சென்னை), ஓட்டல் தாசபிரகாஷ் (சென்னை), ஓட்டல் விக்டோரியா (சென்னை), ஓட்டல் இம்பீரியல் (சென்னை), உட்லண்ட்ஸ் ஓட்டல் (சென்னை), தாசபிரகாஷ் (ஊட்டி), சவாய் ஓட்டல் (ஊட்டி), ரிட்ஸ் ஓட்டல் (குன்னூர்), ஓட்டல் அசோகா (சென்னை), இவை மூன்று ஸ்டார் ஓட்டல்களாகவும், ஓட்டல் க்ளாரிட்ஜஸ் (சென்னை), கீதா ஓட்டல் (சென்னை), ஹாம்ப்டன் ஓட்டல் (குன்னூர்), ஓட்டல் துவாரகா (சேலம்), கார்ல்டன் ஓட்டல் (கொடைக்கானல்) இவை இரண்டு ஸ்டார் ஓட்டல்களாகவும், டூரிஸ்ட் ஹோம் (சென்னை), ஓட்டல் ஸ்வாகத் (சென்னை), குப்தாஸ் ஓட்டல் (சென்னை), ஓட்டல் அலங்கார் (கோவை), ஓட்டல் குரு (கோவை), ஓட்டல் அரிஸ்டோ இவை ஒரு ஸ்டார் ஓட்டல்களென்றும் பிரித்திருக்கிறார்கள். இன்னும் 'குவாலிடி ரெஸ்டாரன்ட்' என்பதை ஒரு 'அப்ரூவ்ட் ரெஸ்டாரென்ட்' என்ற வகையில் தனியாகச் சிபார்சு செய்திருக்கிறார்கள்.



**திரு. ஏ. சி. நரசிம்மன் :** சென்னையில் நாலு நட்சத்திரம் பெற்ற ஓட்டல் ஒன்று இருக்கிறது. மேற்கொண்டு அமைக்க அரசாங்கத் தரப்பில் முன் வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாநில அரசு 4, 5 ஸ்டார் ஓட்டல் அமைக்க தக்க அளவில் நிதி வசதி இல்லை என்றாலும், தனியார் அப்படிக் கட்டுவதற்கு முன் வந்தால், மத்திய சர்க்கார் 50 சதவிகிதம் உதவி கடனை அளிக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு பெரிய ஓட்டல்களைக் கட்ட முன் வருகிறார்கள். தனியாருக்குத் தகுந்த இடம் கிடைத்து அப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஐந்து ஸ்டார் ஓட்டல் ஏதாவது இருக்கிறதா ? ஐந்து ஸ்டார் ஓட்டல் கட்டுவதற்கு யாராவது முயற்சி எடுத்துக் கொண்டால், அரசு கடன் உதவி அளிக்க முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஐந்து ஸ்டார் ஓட்டல் அமைக்கப்படவில்லை. மத்திய சர்க்காரால் அமைக்கப் பட்டுள்ள அசோகா ஓட்டலையும் ஐந்து ஸ்டார் ஓட்டலாக எடுக்கப் படவில்லை. அந்த ஓட்டலையே 4 ஸ்டார் ஓட்டல் என்றுதான் சர்வே கமிட்டி எடுத்திருக்கிறது. டெல்லியிலே உள்ள 'ஒபிராய்' ஓட்டலை ஐந்து ஸ்டார் ஓட்டலாக எடுத்திருக்கிறார்கள். அவர்களும் சென்னையில் கூட இடம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். தகுந்த இடம் கிடைத்தால், நிச்சயமாக ஐந்து ஸ்டார் ஓட்டலை ஒபிராய் நிறுவனத்தார் ஏற்பாடு செய்வார்கள்.

**திரு. கே. விநாயகம் :** சார், நம்முடைய சட்டசபை அங்கத்தினர்கள் தங்கும் ஓட்டல் ஒன்று இருக்கிறதே. அதை எந்த ஸ்டாரிலே எடுத்திருக்கிறார்கள். அதை எந்த ஸ்டாரிலும் எடுக்கவில்லையென்றால், அதற்கு அரை-ஸ்டார் ஓட்டல் என்றாவது நியமிக்க முடியுமா ? எந்த ஸ்டாருமே கொடுக்க மறுக்கிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாநில அரசாங்கம் செய்வது ஒன்றும் இல்லை. மத்திய சர்க்கார் அதற்கென்று ஒரு குழு அமைத்து, அவர்கள் இப்படிப் பிரித்திருக்கிறார்கள். இந்த ஓட்டல் அந்த அளவிற்கு இடம் பெறவில்லை.

ரூ. 14,000-க்குள் அடக்கப்படுகிறது. ஆகவே, அம்மாதிரி சிறிய டிராக்டர்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைத்து விவசாயி களுக்குக் கொடுப்பது பற்றி அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** உதகை யிலே இருக்கிற ஜி.டி.ஆர். தொடர்புடன் நாம் நடத்துகிற உருளைக் கிழங்கு சாகுபடிக்காக, அவர்கள் சொந்தத்திற்கு, அவர்கள் விருப் பப்படி டிராக்டரைக் கொண்டுவந்து பயன்படுத்திக்கொண்டிருக்கி ருர்கள். மத்திய அரசாங்கம் ஜி.டி.ஆர். அரசாங்கத்தை 100 டிராக்டர்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறது. இதுவரை ஒன்று கூட அவர்கள் அரசுக்குக் கொடுக்கவில்லை.

**திரு. ஆ. துரையரசன் :** அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக தஞ்சை மாவட்டத்திற்கு இதுவரையில் டிராக்டர்கள் ஏதாவது வழங்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படி என்ருல் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாவட்ட ரீதியாக எவ்வளவு டிராக்டர்கள் வழங்கப்பட்டன என்கின்ற குறிப்பு இப்பொழுது இல்லை. கேட்கப்பட்ட கேள்வி வெளிநாடு களிலிருந்து டிராக்டர்ஸ் வரவழைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா, ஆமெனில் எந்த நாடுகளிலிருந்து என்பதுதான். எனவே, தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதிலை தயாரித்துத் தர முடியும்.

**திரு. என். ராஜாங்கம் :** வெளி நாடுகளிலிருந்து டிராக்டர்கள் வரவழைக்க மத்திய கார்ப்பரேஷன் வேலை செய்வதுபோல, அக்ரோ இண்டஸ்டிரிஸ் கார்ப்பரேஷனுக்கு அந்த உரிமை கொடுக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனுக்குத் தான் அந்த உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. வேறு எந்த கார்ப்பரேஷனுக்கும் அந்த உரிமை கொடுக்கப்படவில்லை. மத்திய அரசு 'ஸ்டேட் டிரேடிங் கார்ப் பரேஷன் மூலமாக இவைகளையெல்லாம் தருவித்து, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக அந்த மாநிலத்திலுள்ள மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் வேறு எந்த கார்ப்பரேஷனும் இதில் ஈடுபடவில்லை.

## கொடைக்கானலுக்கு சுற்றுலா மாளிகை

*** 277. வினு—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்தியதர வகுப்பினர் கொடைக்கானலில் தங்க விடுதி கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஒரு சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் உள்ளது.

(இ) கொடைக்கானலிலுள்ள, 'அம்மனடி', 'சிவனடி', 'அகி லாண்ட விலாஸ்' என்ற இடங்களையும் அவற்றிலுள்ள கட்டடங்க ளோடு கையெடுப்பு செய்து பின் அவற்றிற்குத் தேவையான மாறு தல்களை செய்து ஒரு சுற்றுலா மாளிகையாக மாற்றும் உத்தேசம் உள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் ? எத்தனை பேர்கள் அந்த மாளிகையில் தங்கலாம் ? இந்தத் திட்டம் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த மாளிகை கட்டுவதற்காக சுமார் ரூ. 1,75,000 தொகையை இந்தத் துறை ஒதுக்கியிருக்கிறது. கட்டடத் துறை தலைமைப் பொறி யாளரை தேவைப்படும் பணிகளுக்கான வரைபடம், செலவு மதிப்பீடு தயாரிக்குமாறு அரசு கேட்டுள்ளது. நிலத்திற்கான ஈட்டுத் தொகை ரூ. 1.75 லட்சம் ஆகலாம் என்று தோன்றுகிறது. மு.ப. 9-20

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, கொடைக்கானலில் இப்படிக் கட்டும் போது, போக்குவரத்து அதிகமாகி சமாளிக்க முடியாத நிலை ஏற்படலாம். ஆகவே, ஒரு ரெயில் பாதை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ரெயில்வே பற்றி தனியாக சம்மந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கவேண்டும்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, கொடைக்கானலில் புதிதாகக் கட்டடம் கட்ட வேண்டும் என்ருல் ஏராளமான செலவு ஆகும். ஆகவே, பழைய கட்டிடங்களையே வாங்கி அவற்றை மராமத்து செய்து புதுப்பிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இங்கே தனியாக இடம் எடுத்துக் கட்டவேண்டும் என்று செயற்குறிப்பு இருக்கிறது. அதற்கு நிலத்திற்கு ஈட்டுத் தொகை ரூ. 1,75,000 என்று குறிப்பிட்டேன். பழைய கட்டடங்கள் பற்றி தகவல் இல்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், சமீபத்தில் கொடைக்கானல் மலை யிலே குறிஞ்சி மலர் பூத்தது என்று சொல்லி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வியைப் பார்க்க வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** கடைசியில் 'ரெஸ்ட் ஹவுஸ்'ல் வந்து நிற்பேன் பாருங்கள் ! குறிஞ்சி மலர் வந்தது என்று பெரிய விளம்பரம் செய்யப்பட்டு, ஏராளமான மக்கள் கொடைக்

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** திரு. விநாயகம் அங்கே தங்கியிருக்கிறார்களா ?

**திரு. கே. விநாயகம் :** அங்கே சாப்பிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதையெல்லாம் பார்க்காமலேயே கேள்வி போட்டால் எப்படி ?

### மதுரை மாவட்ட அரசு விதைப் பண்ணைகள்

* 279 **வினா—திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரசாங்க விதைப் பண்ணைகள் எத்தனை உள்ளன ?

(இ) அவைகளின் மூலமாக செய்யப்பட்ட விநியோக அளவு எவ்வளவு ?

(உ) அவைகளின் மொத்த மதிப்பென்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விவர அறிக்கை * ஒன்று மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். அக்கினிராஜு :** பண்ணை விதைகளை பஞ்சாயத்து யூனியன் மூலம் வினியோகம் செய்யப் படுகிறது. ஒவ்வொரு யூனியனும் விவசாயிகளுக்கு போதுமான அளவில் விதைகள் கொடுக்க விதைப்பண்ணைகள் போதவில்லை. ஆகவே, வட்டந் தோறும் விதைப் பண்ணைகளை அமைக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, அரசாங்கப் பண்ணைகள் புஞ்சை தானியங்களான வீரிய கம்பு, வீரிய சோளம் போன்ற விதைகளையும் உற்பத்தி செய்கின்றனவா ? இல்லையென்றால் அந்த விதைகள் ஒரு ஏக்கருக்கு 40, 50 ரூபாய் என்று விலை இருப்பதால், அரசாங்கப் பண்ணையில் இவற்றை உற்பத்தி செய்ய முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விதைப் பண்ணைகள் நஞ்சை, புஞ்சை இரண்டு விதைகளையும்தான் உற்பத்தி செய்கின்றன. பொதுவாக சில பண்ணைகள் மண் வளம், பாசன வசதி இவை இல்லாமல் இருக்கும் அளவில் ஏற்பாடு செய்துவிட்டு இருப்பதால், நாம் விரும்பும் அளவில் செய்ய முடியவில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, இந்த அரசாங்க விதைப் பண்ணைகளை ஏற்படுத்தும்போது, என்னென்ன செயல் முறைகளை அரசு கையாள்கிறது ?

---

* 502–503-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே 60, 62 பண்ணைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சு வந்தபிறகு, 1967-க்குப் பிறகு குடிமியான்மலையில் உள்ள பண்ணையை எடுத்திருக்கிறது. குடிமியான்மலை பண்ணை லாபகரமாகத்தான் நடக்கிறது. நஞ்சை, புஞ்சை பயிர்களுக்கான விதைகள் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் பொதுவாக 60, 62 விதைப் பண்ணைகள் தேர்ந்தெடுக்கப்படும் போது, முறையாகச் செய்யப்படவில்லை. தண்ணீர் கிடைக்குமா, எவ்வளவு காலம் கிடைக்கும், சரியாக இருக்குமா, மண் வளம் சரியாக இருக்கிறதா என்றெல்லாம் பரிசீலனை செய்யாததால், பல இடங்களில் கிணறு தோண்டினாலும், தண்ணீர் போதுமான அளவில் கிடைக்காத நிலை இருக்கிறது. மண் வளமாக இல்லை. இப்படிப்பட்ட குறைபாடுகளால் 60, 62 விதைப்பண்ணைகள் போதுமான விதைகளை உற்பத்தி செய்ய முடியவில்லை. அந்த நிலையில் இருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சார், கேள்வி மதுரை டிஸ்ட்ரிக்ட் பற்றி இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் பேப்பரில், கோவில்பட்டி பற்றி இருக்கிறது. மதுரையில் கோவில்பட்டி இருப்பதாகத் தெரியவில்லை. மொத்தத்தில் மாநில ரீதியில் ஸீட் பார்ம்ஸ் எவ்வளவு இருக்கின்றன என்று சொல்ல வேண்டும் அல்லது அந்த டிஸ்ட்ரிக்ட் பற்றிச் சொல்லவேண்டும். இல்லையென்றால் பிரயோசனம் இல்லை. ஏதோ கேட்கிறோம், ஏதோ இருக்கிறது. ஆகவே, இந்தத் தவறுகளைத் திருத்தி, மொத்தத்தில் மாநிலத்தில் எவ்வளவு ஸீட் பார்மஸ் இருக்கின்றன, உற்பத்தி என்ன, எல்லோரும் காணும் அளவில் இருக்கிறதா என்று பதில் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். அப்பொழுது மொத்த மாநிலத்திற்கும் விவரங்கள் கொடுக்கப்படும்.

**திரு. ஆர். கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசாங்கத்திலே நல்ல தரமான விதைகள் கிடைப்பதில்லையென்று சொல்லப்படுகிறது. நெல்லை அறுத்தவுடனே, ஈரமாக இருக்கும்போது காயவைக்காமல், விதைக்கென்று நெல்லை கொள்முதல் செய்து விடுகிறார்கள். ஐ.ஆர். 8 போன்ற நல்ல ரக வித்துக்களை காயவைக்காமல் வாங்கிக்கொள்கிறார்கள். பிறகு அதை ஸ்டாக் செய்த பின்னர், மீண்டும் விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது அதில் 50 சதவீத நெல் முளைப்பதில்லை ஆகவே, அரசு கொள்முதல் செய்யும்போதே, தரமான நல்ல விதைகளை வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, அப்படித் தரக் குறைவான விதைகளை எடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் 'ஸ்டேட் ஸீட் சர்ட்டிபிகேஷன் கமிட்டி' என்ற ஒரு குழுவினை அரசாங்கம் சமீபத்தில் நிறுவியிருக்கிறது. நல்ல தரமான விதைகளை அந்தக் குழு தேர்ந்தெடுக்கிறது. அதை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும். உரிய பலன் தரத்தக்க

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ல் மத்திய சர்க்கார் அதிகமாக நோட்டு அடிக்கின்ற காரணத்தாலே விலைவாசி பணப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறதென்று கூறி, நோட்டு அடிக்கின்ற பொறுப்பை மாநில சர்க்காருக்கே வழங்க வேண்டுமென்று . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் ரிசர்வ் பாங்க் பற்றித்தான் கேள்வி கேட்க வேண்டும் . . . .

**திரு. டி. மார்டின் :** அந்த முறையைத்தான் பேசுகின்றேன் . . அதாவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிப் பேசக்கூடாது. அடுத்த உறுப்பினர் திரு. எஸ். இராமச்சந்திரன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, மக்களுக்கு அடிப்படைத் தேவைகளில் முக்கியமாக அமைவது வீடு. இப்போதெல்லாம் ஆளுக்கு ஒரு வீடு என்பதே சோஷலிச சிற்பிகளின் கோஷமாக இருக்கிறது. ஆகவே, அதிக வீடுகளைக் கட்டுவதற்கு மறுநிதி உதவி தரவேண்டுமென்பதற்காக மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்தி, ரிசர்வ் பாங்கியின் மூலம் நிதி பெற வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆளுக்கொரு வீடு என்பது சோஷலிச சிற்பிகளின் கோஷமாக இருக்கிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆளுக்கொரு வீடு என்று சொல்லும்போது, ஒரு வீட்டில் ஐந்து பேர்கள் இருந்தால், ஆளுக்கொரு வீடாக பிரிக்க வேண்டுமல்லவா ? இந்த சோஷலிசக் கோஷம், இந்த முழக்கம், தமிழ்நாட்டில் எப்பொழுது ஆரம்பமானது என்பதெல்லாம் கனம் உறுப்பினருக்குத் தெரிந்திருக்கும்.

THIRU K. VINAYAKAM : Sir, did the Minister under reference meet the Governor of the Reserve Bank in his individual capacity or did he meet him as a representative of our State Government with any concrete proposal? It was reported in the Press that just to gain propaganda our Minister met him . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்திலே குற்றச் சாட்டுக்கள் இருக்கக்கூடாது. "தனிப்பட்ட முறையில் சென்றாரா, அல்லது" . . என்று சொல்லக்கூடாது.

THIRU K. VINAYAKAM : Sir, I am sorry. This is not the way I should be heckled. I am putting a supplementary question to elicit information. Let him refute my allegation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே அலிகேஷன் இருக்கக்கூடாது.

**திரு. கே. விநாயகம் :** நான் அலிகேஷன் செய்யவில்லையே.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** நீங்கள்தானே 'என்னுடைய அலிகேஷன்' என்று சொல்லுகிறீர்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, it is reported . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகைகளில் வருவதை வைத்துக் கொண்டு நீங்கள் கேள்வி கேட்கக்கூடாது.

THIRU K. VINAYAKAM : All right, Sir, I have it to you. After all I am a Member of the Opposition Party and I am not a Member of the Ruling Party. Whenever I put any inconvenient question, the Hon. Speaker comes to the aid of the Hon. Ministers Is this the way how we should be treated? Is not the Hon. Minister capable of defending himself? He is an experienced person . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேள்வியைப் போடுங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, did the Hon. Minister put forward any concrete proposal sanctioned by our Government to the Governor of the Reserve Bank and what was his reaction?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The interview was made by previous appointmeat and the interview took place or behalf of the Ministry. I have no individual dealings with the Reserve Bank. The concrete proposal put forward on behalf of the Ministry is that the Reserve Bank should come forward to refinance loans given on houses by the Co-operative House Mortgage Societies. The Governor of Reserve Bank was extraordinarily sympathetic. Refinance will help us to build more new houses and to advance moare moneys. Once you lend money on old houses and new, houses and you get them mortgaged, that mortgage is refinanced by the Reserve Bank. This has got nothing to do with Central Government. Although the Governor said that some amendment of the Reserve Bank of India Act was necessary, he was able to announce afterwards the appointment of this High Power Board, which has got now authority to sanction refinance.

**திரு. ரா. கனகசபை :** தற்சமயம் ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்குகளுக்கு எல். ஐ. சி. பணம் கொடுத்து வ்ந்தது. அந்தப் பணம் தேவைக்குக் குறைவாகவே இருக்கிறது, போதவில்லை. தற்சமயம் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிற சேர்மனை சந்தித்து அதிலிருந்து அதிகப்பணம் பெற அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எல்.ஐ.ஸி. ஒரு கோடிக்குக் கடன் கொடுத்து வருகிறது. இந்த ஆண்டு ஒரு கோடி என்பதற்குப் பதில் 1½ கோடி கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். ரீபைனான்ஸ் செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. இந்தியா பூராவுக்கும் இரண்டாயிரம் கோடி தேவை என்கிறபோது நமக்கு பத்தில் ஒரு பங்கு, அதாவது 200 கோடியாவது வேண்டும். ஒரு கோடி, ஒன்றரை கோடி என்பது பிரச்னையைத் தீர்க்காது.

முறையில், விதையின் சத்துப்பொருள் கெடாத முறையில் பாதுகாக்க, அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. உரிய விளைச்சலைத் தரத்தக்க அளவில் விதைகளைப் பாதுகாத்து வைக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

### சிறப்பு அங்காடிகள்

* 283 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனை உள்ளன ?

(இ) அவைகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** (அ) கோவையில் "சிந்தாமணி" என்ற பெயரில் "கூட்டுறவு சிறப்பு அங்காடி" ஒன்று இயங்கி வருகிறது.

(இ) அதில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர்.

* 284 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் சிறப்பு அங்காடி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சூப்பர் மார்க்கெட்டில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆறு பேர்கள் என்னென்ன வேலைகளில் இருக்கிறார்கள் ? கிளெரிகல் செக்ஷனிலா அல்லது சுத்தப்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவர் அவர்களே, என்னென்ன வேலைகளில் அவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் இப்போது என் கைவசம் இல்லை.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இராமநாதபுரம் மாவட்டத்திலே சூப்பர் மார்க்கெட்டே இல்லை. அங்கே சிவகாசி, விருதுநகர், ராஜபாளையம் இந்த நகரங்களின் ஜனத்தொகையைக் கணக்கில் கொண்டு சூப்பர் மார்க்கெட் ஒன்றை ஆரம்பிக்க ஏதாவது செயல்திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு அங்காடி மத்திய அரசின் உதவியில் நடைபெறுகிறது. மத்திய அரசு ஒரு திட்டத்தின் அடிப்படையில் சிறப்பு அங்காடிகளுக்கு நிதி உதவுகிறது. எந்த நகரங்களில் ஒன்றரை



லட்சம் மக்களுக்கு அதிகமாக இருக்கிறார்களோ, அந்த நகரங்களில், நட்டம் வராமல் நடைபெறும் சாத்தியக்கூறுகள் இருந்தால், சிறப்பு அங்காடிகள் வைக்க மத்திய அரசு உதவி செய்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பிட்ட இடங்களில், 1961-ம் ஆண்டு எடுத்த சென்ஸஸ்படி, முப்பதாயிரத்துக்கு மேல் ஜனத்தொகை இல்லை. ஆகவே, அங்கு சிறப்பு அங்காடி ஏற்படுத்தும் எண்ணம் இல்லை.

### *Minister for Co-operation—Governor of Reserve Bank meeting.*

* 285. Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether he met the Governor of the Reserve Bank around 14th December 1969; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** (அ) ஆம்.

(இ) வீட்டு அடைமானக் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட கடன்களுக்காக அக்கூட்டுறவுச் சங்கங்கள் மறு கடன் உதவி பெறுவதற்கு வகை செய்வது குறித்து ரிசர்வ் வங்கி கவர்னருடன் விவாதிக்கப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கியிடம் வீட்டு அடைமானக் கூட்டுறவுச் சங்கங்களுக்காக எவ்வளவு பணம் கோரப்பட்டது ? அதற்கு ரிசர்வ் பாங்க் கவர்னர் என்ன பதில் அளித்தார் ? நிலவள வங்கி சம்பந்தமாக ஏதாவது பேசப்பட்டதா ? அக்ரிகல்சுரல் ரீபைனான்ஸ் கார்ப்பரேஷன் சம்பந்தமாகப் பேசப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவர் அவர்களே, அன்று பேசியது கூட்டுறவு வீட்டு அடைமான வங்கிகள் பற்றியது. அதைப்பற்றித்தான் அங்கு பேசப்பட்டது. எவ்வளவு பணம் வேண்டுமென்று கேட்கிற அளவிற்கு பேச்சு வரவில்லை. ஆனால், புதிதாக வீடுகளைக் கட்டுவதற்கு இந்தியா முழுவதற்கும் 2,000 கோடி ரூபாய் அளவிற்குப் பணம் தேவைப்படுகிறது. இருந்தும் நமது மாநிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு கடனுதவி கொடுப்பது 1 கோடி அல்லது 1½ கோடிக்கு மேல் இல்லை. ரீஃபைனான்ஸ், அதாவது மறுநிதி உதவி, ஏற்படுத்திக் கொடுத்தால் பெரிய அளவில் புதிய வீடுகளை நாங்கள் கட்டிக் கொடுக்க முடியும் என்று நான் அவரிடம் சொன்னபோது, அதைக் கவனிப்பதாகச் சொன்னதோடு மட்டுமல்லாமல், அவர்களே மறுநிதி உதவியின் அவசியத்தைப் பற்றிப் பேசிவிட்டுச் சென்றார்கள். ஆனால் பம்பாயில் இருந்து கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டுள்ள ஒரு அறிக்கையில், ரிசர்வ்பாங்கு ஹைபவர் கிரெடிட் போர்டு, அதாவது உயர்மட்ட அதிகாரக் குழு ஒன்றை நியமித்திருப்பதாகவும், அந்தக் குழு இனி விவசாய வங்கிகளுக்கு மட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையிலே வீட்டு அடைமான வங்கிகளுக்கும் மறுநிதி உதவி செய்ய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவித்திருக்கிறது.

African Cheetahs.

* 286. Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government of Tamil Nadu propose to purchase some African cheetahs?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** ஆப்ரிக்கா அல்லது பெர்சியாவிலிருந்து இரண்டு சிறுத்தைப் புலிகள் இறக்குமதி செய்யப்படலாம் எனத் தமிழ்நாடு வன விலங்கு வாரியம் செய்த பரிவுரையின் மேல் அதுகுறித்து இந்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டது. சிறுத்தைப் புலிகள் ஆப்பிரிக்காவில் மட்டுமே உள்ளன என்று அவர்கள் இந்த அரசுக்குத் தெரிவித்தனர். மேலும் இது குறித்து சோமாலியாவில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். எனினும், சோமாலியாவில் விலங்கினக் காட்சிச்சாலை எதுவுமில்லாததால் வெளிநாட்டு விலங்குகளை பரிமாற்றம் செய்து கொள்ள இயலாது என்று சோமாலியாவில் உள்ள தூதரகம் பதிலளித்தது. எனவே இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை தொடரப்படவில்லை.

**திரு. கே. விநாயகம்:** சிறுத்தைப் புலிகளின் எண்ணிக்கை நம் தேசத்தில் குறைந்துகொண்டே வருகிறது. அதைச் சுடக் கூடாது என்று நாம் எவ்வளவுதான் சட்டம் போட்டிருந்தாலும் வேட்டைக்காரர்கள் சுட்டுவிடுகிறார்கள். ஆகவே சிறுத்தைப் புலிக்காக தனிச் சரணாலயம் ஏற்படுத்தி அங்கே அவை இயற்கையில் நம்மைப்போல அதன் ஜனத்தொகை பெருக்கத்திற்கு வழி செய்ய ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** தமிழ்நாட்டில் புலிகள் தான் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சரணாலயத்தில் இருக்கிறது. சிறுத்தைகள் கிடையாது. அதைப்பெறுவதற்காகத்தான் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது வசதியில்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** சிறுத்தைப் புலிகளை அதிகப்படுத்துவதனால் பிரயோசனம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** பொதுவாக எல்லா மாநிலங்களிலும் மலைகளில் வன விலங்குகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் சிறுத்தைப் புலியைக் கொண்டுவர முயற்சி செய்கிறோம். கிடைக்கவில்லை.

பறவைகள் உய்விடம்

* 287 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம்முடைய மாநிலத்தில் பறவைகள் எந்தெந்த இடங்களில் பாதுகாக்கப்படுகின்றன?



**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** நீர்நிலைப்பறவைகளுக்கான உய்விடங்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அரப்பாக்கம், செம்பரம்பாக்கம் ஆகிய இடங்களிலும், வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சாவேரிப்பாக்கத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் காழ்வேலிச் சதுப்பு நிலம், தின்னகரம், வீராணம் ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரை, முத்துப் பேட்டை, தலைஞாயிறு ஆகிய இடங்களிலும், மதுரை மாவட்டத்தில் வைகை அணையிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்மேனியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் குந்தக்குளம், மூன்றடைப்பு, கங்கைகொண்டான், சீதாபரப்பநல்லூர் ஆகிய இடங்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தேவராயன் ஏரியிலும் உள்ளன. இந்த உய்விடங்களிலுள்ள பறவைகள், இனப்பெருக்கக் காலத்தில் குறிப்பிட்ட தொலைவிற்குள் சுடப்படுவதினின்றும், கண்ணிவைத்துப் பிடிக்கப்படுவதினின்றும் பாதுகாக்கப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் வேடந்தாங்கல் என்ற இடத்திலும், நீர்நிலைப்பறவைகளுக்கான உய்விடம் ஒன்று உள்ளது. கோயம்புத்தூர் தெற்குக் கோட்டத்திலுள்ள அமராவதி நீர்த்தேக்கம், கோயம்புத்தூர் மத்தியக் கோட்டத்திலுள்ள பவானிசாகர் நீர்த்தேக்கம் ஆகிய பகுதிகளைச் சுற்றி 1.6 கி. மீட்டர் தொலைவிற்குள் பறவைகளைச் சுடுதலும், பொரி வைத்துப் பிடித்தலும் தடை செய்யப்பட்டுள்ளன.

**திரு. என். கிட்டப்பா:** வேடந்தாங்கலில் பல்வேறு நாட்டுப் பறவைகள் வருகின்றன என்று சொல்லப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளாக அந்தப் பறவைகள் அதிக அளவில் வரவில்லை என்று சொல்லப்படுகிறதே, அப்படி வருகின்றவை வலதுசாரி நாட்டைச் சார்ந்தவைகளா? இடதுசாரி நாட்டைச் சார்ந்தவைகளா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாகத்தான் வரவில்லை. இவ்வாண்டு பல நாடுகளில் இருந்து இப்போதே வந்திருக்கின்றன. மனித சமுதாயத்தில் வேற்றுமையைக் களையும் முயற்சி வெற்றிபெறாவிட்டாலும் பறவையினத்தில் அவை ஒன்றாகவே நமக்குச் சவாலிட்டு உலவுகின்றன.

* 288. Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu have made Kodikkarai Reserve forest in Thanjavur district into a sanctuary; and

(b) the rare birds that are found there?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடிக்கரை ஒதுக்கக் காடு என்று எந்த ஒதுக்கக் காடும் இல்லை. அங்குள்ள ஒதுக்கக் காட்டின்பெயர், கோடியக்காடு ஒதுக்கக் காடு ஆகும். இந்த ஒதுக்கக் காட்டின் அருகில் உள்ள கிராமமே

Dropping such a procedure is a matter of deep concern to the members on either side of this House. Sir, today a few members may be on this side of the House; tomorrow they may be on the other side of the House, or for that matter some of the members may not come to this House again. The more important thing is to see that not a single privilege or right of the members is taken away, even inadvertently.

Budget discussion is the most important item in the whole year's business of the House. We, in the course of our discussion, raise a number of issues for which we expect a clear-cut or detailed answer from the Finance Minister. For instance, I was trying to seek a clarification from the Finance Minister if he was going to fix a dead-line for the Second Pay Commission report and also the final decision of the Government on the subject of land ceiling.

Sir, by bringing in this new convention, I am robbed of these opportunities, privileges. May I therefore request you, Sir, to let me know if the procedure adopted on last Saturday was in order and whether this House clothed you with any special power to enable you to take such a decision.

Here may I quote presedent ? After the late Hon. C. N. Annadurai's reply to the general discussion on the budget on 27th June 1967, Thiru R. Ponnappa Nadar, rising on a point of clarification, asked "Will the Government repeal the Travancore-Cochin Agricultural Income-tax Act, as far as the Kanyakumari District is concerned?". I would request that an opportunity is given to the members. Even if the Hon. Speaker cannot give an off-hand answer, I would request him to consult the Party leaders and give us an opportunity to air our views.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதிலே ஒன்றும் பாயின்ட்
00-01 ஆப் ஆர்டர் இல்லை. அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததற்குப் பிறகு விளக்கம் பெறுவதற்காக உறுப்பினர்கள் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமை யாருக்கும் மறுக்கப்படவே இல்லை. அமைச்சர் அவர்கள் முடித்தபிறகு ஒரு மணிக்குள் ஓட்டுக்கு விடவேண்டுமென்ற முறையை நாம் வைத்திருக்கிறோம். அந்த முறையைத்தான் பின்பற்றியிருக்கிறோம். ஓர் உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் தீர்ப்பளிப்பதற்கு முன்பு உறுப்பினர் என்ன சொல்கிறார் என்று கேட்டுத்தான் அது பாயின்ட் ஆப் ஆர்டரா இல்லையா என்று முடிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. இந்த உரிமையும் எந்த நேரத்திலும் மறுக்கப்படவில்லை. ஓர் உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் அது பாயின்ட் ஆப் ஆர்டரா இல்லையா என்று பார்த்துத்தான் தீர்ப்பு அளிக்கப்படுகிறது. எனவே நீங்கள் சொல்வதுபோல எந்த விதமான முறைகேடும் இல்லை. இதுபற்றி நாளைக்கு நான் தீர்ப்பு அளிக்கிறேன்.



Thiru K. VINAYAKAM : On a point of clarification, Sir. This convention has been followed in this House as well as the other Houses of the Legislature in India.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் எழுப்புகிற பாயின்ட் ஆப் ஆர்டர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டர் மீதா ?

Thiru K. VINAYAKAM : I have raised not a point of order, but a point of clarification. What I am going to say will help you to give a ruling tomorrow morning. It is not as if Dr. Hande is totally wrong. That is not the impression that should be created. In the Mother of Parliaments also, at the hour fixed for guillotine, no other business could be transacted. That we understand. The Speaker could have told the Finance Minister 'At 1 O clock I am going to guillotine the Demands. Please finish your reply ten or fifteen minutes before that'. If I were in your place, I will do the same thing.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நோ, நோ. அதற்காக அமைச்சர் அவர்களை 10 நிமிடம் முன்னதாக முடித்துக் கொள்ளச் சொல்லி உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்றால் அது அமைச்சர்கள் பேசுகின்ற நிலைமையையும் பொறுத்திருக்கிறது. ஒரு மணிக்குள் முடித்துவிடவேண்டும் என்று தான் சொல்லப்பட்டது. ஆனால் யாருமே அந்தக் கட்டுப்பாட்டிற்குள் நிற்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் நிற்கவில்லை. அமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரம் வேண்டுமென்று கேட்டார்கள்.

திரு. கே. விநாயகம் எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உட்காருங்கள்.

திரு. கே. விநாயகம் : உட்காருங்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு அதிகாரமிருக்கிறது You are a super human being கொஞ்சம் பொறுக்கமாட்டேன் என்கிறீர்களே Please listen to me. I have not yet made my point'. நாங்கள் பேசும்பொழுது உட்காரச் சொல்கிறீர்கள். நாங்கள் என்ன சொல்கிறோம் என்று கேட்டுவிட்டு தாங்கள் சொல்லவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எனக்கு ரூலிங் கொடுக்க வேண்டாம் நீங்கள். பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்ன என்பதைச் சொல்லுங்கள்.

திரு. கே. விநாயகம் : நீங்கள்தான் கில்லட்டின் செய்ய வேண்டும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 'நீங்கள்' என்பது அல்ல. இந்த அவைதான்.

கோடிக்கரையாகும். கோடியக்காடு ஒதுக்கக் காட்டை, "கோடிக்கரை வனவிலங்குகள் உய்விடம்" என்கிற வனவிலங்குகள் உய்விடமாக அரசு மாற்றியுள்ளது.

(இ) உய்விடத்தின் சதுப்பு நிலங்களில், மாரி மாதங்களில், பெரும்பாலான நாரைகளும், கிளுவைகளும், பருவகாலத்தையொட்டி இடம் பெயரும் பிறபுள்ளினங்களும், காணப்படுகின்றன. இப்புள்ளினங்களில் பெரும்பாலானவை மாரி மாதங்களில் வருபவையாகும்.

**திரு. கே. விநயகம்:** நாம் பார்க்காத பறவைகள் எல்லாம் வருகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மை அல்லவா? அங்கே ஏதோ வனவிலங்கு காணப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதன் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** அங்கே ப்ளாக் பக், ஸ்பாடெட் டீர் காணப்படுகிறது. அவற்றின் பாதுகாப்புக்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## இனாம் நிலங்கள்

* 235 **வினா. புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இனாம் நிலங்கள் சம்பந்தப்பட்ட புதிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு ஏதேனும் கருதியுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** புதுக்கோட்டைப் பகுதியில் இனாம் நிலங்களின் குத்தகை உரிமைக் காலளவு பற்றிய ஆய்வையே உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அவ்வாறாயின், இப்பகுதியில் 116 பகுதி இனாம் கிராமங்களைத் தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் பெரு நிலங்களை (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் செயல் வரம்பின் கீழ்க் கொண்டு வந்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது. திருத்தச் சட்டத்தின் ஷரத்துகளை அமுல் படுத்துவது குறித்து, உயர்நீதி மன்றம் இடைக்கால தடை விதித்துள்ள நிலங்களைத் தவிர மற்றவைகளில் வருவாய் வாரியம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள இனாம் நிலங்கள் ஒருவகையாகவும், இன்னும் மற்ற பகுதியில் இருக்கிற நிலங்கள் வேறுவகையாகவும் எடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** புதுக்கோட்டை இனாம்கள் தனிச் சட்டத்தின் கீழ் வருகின்றன. 116 இனாம் கிராமங்கள் [illegible]. ஹைக்கோர்ட்டில் கூட வழக்கு இருக்கிறது.



## குடியாத்தம் வட்ட அலுவலகம்

* 236 **வினா. திரு. பி. ஜெயராமன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தாலுக்கா அலுவலகத்தை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆம்.

**திரு. பி. ஜெயராமன்:** தலைவர் அவர்களே, குடியாத்தத்திலே தாலுகா அலுவலகம் வெள்ளைக்காரனுடைய ஆட்சியிலே கட்டப்பட்டது. இப்பொழுது அந்த அலுவலகத்திலே பணியாளர்கள் அதிகமாகியிருக்கிற காரணத்தினாலே இடநெருக்கடி ஏற்பட்டு அதிகக் கஷ்டமாக இருக்கிறது. இனியாகிலும் அதை அபிவிருத்தி செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இப்பொழுது 5,425 ரூபாய் அளவில் குடியாத்தம் தாலுகா ஆபீஸுக்கு வெளித் திண்ணைகளை விஸ்தரிப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் அமல்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## (2) நடைமுறைக் கேள்வி.

நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு அமைச்சர் விடையளித்த பின்னர், உறுப்பினர்களுக்கு விளக்கம் கேட்க வாய்ப்பளிக்காமல், நிதிக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது குறித்து.

DR H. V. HANDE: Sir I raise a point of order under rule 83. sub-rule (3), relating to rules 153 and 154, and I request the Speaker to give his ruling under Rule 83 sub-rule (5) which says 'the Speaker may' if he thinks fit, hear members before he gives a decision thereon'.

This House has been following a convention by which, after the reply by the Finance Minister at the end of the budget discussions, members are given opportunities to extract a few assurances and elicit clarification from the concerned Minister. But unfortunately on Saturday, 7th March 1970, after the Finance Minister's reply was over, in the name of guillotine the demands were immediately put to vote. Nowhere in the rules of procedures is it mentioned that the demands must be put to vote at the stipulated hour. The rules give full freedom to the Speaker. It is therefore the responsibility of the Speaker to take a decision in this matter. It would be a healthy practice if the age-old convention of giving freedom to the members to ask for certain clarification is continued.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடைசி நாள் விவாதம் 7ம் தேதி என்றுதான் முடிவு செய்யப்பட்டிருந்ததே தவிர, எதிர்க் கட்சித் தலைவரும், நிதியமைச்சரும் மட்டுந்தான் பேச வேண்டுமென்று முடிவு செய்யவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அப்படித்தான் முடிவு செய்யப் பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரிகளைப் பற்றியெல்லாம் பேசவில்லை என்று வெளியிலே இருப்பவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள் என்றும் அதைப் பற்றி எல்லாம் பேச நேரம் இல்லாமல் போய்விட்டது என்றும் சொன்னார்கள். திரு. ஜகஜ்ஜீவன்ராம் வரி பாக்கியைப் பற்றிப் பேச எடுத்துக் கொண்ட நேரத்தை இந்த வரிகளைப் பற்றிப் பேச எடுத்துக் கொண்டிருந்தால் நேரம் கிடைத்திருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்பேர்ப்பட்ட பிரபுக்கள் எல்லாம் வரி கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை உங்களுடைய ஆட்சியின் நன்மைக்காகத்தான் சொன்னேன். எனக்கு ஒதுக்கிய நேரத்தில் 1½ மணி நேரம் கொடுத்திருந்தால் நிச்சயமாக எல்லாவற்றையும் பேச நேரம் கிடைத்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நான் பல முறை "நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுங்கள், நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுங்கள்" என்று சுட்டிக் காட்டினேன். முதுகொளத்தூரைப் பற்றியும், மற்ற பழைய விவகாரங்களைப் பற்றியும் பேசுகின்ற நேரத்தில் நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுங்கள் என்று சொன்னேன். அவர் பேசவில்லை. அது இந்த அவையின் குற்றமும் அல்ல, நேரம் இல்லாத குற்றமும் அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாட்டின் அரசியலும் ரொம்ப முக்கியமானது. நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்க அடிப்படையாக நாட்டின் அரசியல் நன்றாக இருக்க வேண்டும் அரசியலைக் குழப்பமான நிலையில் வைத்துக் கொண்டு எப்படி நிதிநிலை அறிக்கை பற்றி மட்டும் பேச முடியும். சபாநாயகர் அவர்கள் எங்கே திருப்புகிறார்கள் என்பது எனக்குத் தெரிகிறது. நான் இங்கு இடத்தில் பேசாமல் வேறு எந்த இடத்தில் பேச முடியும் ? இங்கே பேசினால் தான் ரெக்கார்டு ஆகிறது. 50 வருடத்திற்கு முன்னால் நடந்த சட்டசபை நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூட எடுத்துப் பேசலாம். நீங்கள் என்னவோல் 1967க்கு முன்னால் உள்ள சட்டசபை நிகழ்ச்சிகளைக் "கோட்" பண்ணக்கூடாது என்று சொன்னாலும் சொல்லிவிடுகிறீர்கள். லைப்ரரி எதற்காக வைத்திருக்கிறார்கள் ? லைப்ரரி வேண்டாமென்று சொல்லிவிடலாமே? ஏன் அவையெல்லாம் பேசக்கூடாது



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதையெல்லாம் பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிமை இருக்கிறது. விதிமுறைகளுக்கு ஒட்டிப் பேச உரிமை இருக்கிறது. பேசவேண்டிய முக்கியமான கருத்தை பேச முடியவில்லையென்று குற்றம் சாட்டுகின்ற நேரத்தில் அதற்குக் காரணமாக நேரம் இல்லை என்று கூறினீர்கள். அது அல்ல காரணம் என்றுதான் நான் கூறுகிறேன். திருக்குறளில் ஒன்றேமுக்கால் அடியில் எவ்வளவோ கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய கருத்திருமன் அவர்களும் ஒரு மணி நேரத்தில் எவ்வளவோ கருத்துக்களைக் கூறியிருக்க முடியும் அல்லவா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையில்—

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு".

என்று சொன்னேன். அப்படிச் சுருக்கமாகச் சொல்லுவது இப்போதுள்ள ஆட்சிக்குப் போதாது . . .

### (3) கவன ஈர்ப்பு.

**ஆறுமுகநேரி தாரங்கதாரா இரசாயனப் பணிநிலைய நிர்வாகத்தினருக்கும், தொழிலாளருக்குமிடையே ஏற்பட்ட தகராறு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 41வது விதியின் கீழ் டாக்டர் ஹாண்டே அவர்கள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு உடனடி பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the dispute between the employees and the employer of the Dhrangadhara Chemical Works, Limited, Sahupuram, Arumuganeri, and the immediate need to settle the same.

*** மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆறுமுகநேரி, தாரங்கதாரா இராசயனப் பணிநிலையத் தொழிலாளர் சங்கத்திற்கும், ஆத்தூர் தாரங்கதாரா இராசயனப் பணி நிலையத் தொழிலாளர் சங்கத்திற்கும், தாரங்கதாரா இராசாயன பணி நிலைய நிர்வாகத்தினருடன் 1969-ல் தகராறு ஏற்பட்டது. இந்தத் தகராறு 1967-68ம் ஆண்டு மொத்த ஊதியத்தில் 20 சதவீதம் பூரிப்பு ஊதியமாகக் கொடுக்க வேண்டும் என்பது பற்றியதாகும். நாகர்கோயில் தொழிலாளர் அதிகாரி இது குறித்துச் சமரச ஏற்பாடுகளைச் செய்தார். தொழிலாளர்கள் கோரிய போதுமான விவரங்களையும் விளக்கங்களையும் நிர்வாகத்தினர் கொடுக்கவில்லை. நிர்வாகத்தினர் தாக்கல் செய்த ஐந்

[திரு. கா. வேழவேந்தன்] [1970 மார்ச் 9

தொகைச் சீட்டு சரியானதா என்பது பற்றி தாங்கள் மனநிறைவடையவில்லை என்று அச்சங்கங்கள் தெரிவித்தன. 1967-68 கணக்கில் ரூ. 15.76 லட்சம் பற்றுக்குறை ஏற்பட்டது என்றும், 1965-ஆம் ஆண்டு பூரிப்பு ஊதியம் கொடுப்பது பற்றிய சட்டத்தின் விதிமுறைகளுக்கு இயங்கவே, 1967-68 ஆம் ஆண்டிற்காக 4 சதவீதம் பூரிப்பு ஊதியம் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டது என்றும, சங்கங்களில் உறுப்பினர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களில் பெருமபாலோர் இதை ஏற்றுக் கொண்டனர் என்றும், நிர்வாகத்தினர் கருத்து தெரிவித்தனர். சட்டப்படிக்கான நிறுவனத் தணிக்கையாளர்களால் ஐந்தொகைச் சீட்டும், ஆதாய-இழப்புக் கணக்கும் உரிய வகையில் தணிக்கை செய்யப்பட்டுள்ளன என்றும், தொழிற் சங்கங்களுக்குக் கொடுத்துள்ள நடைமுறைக் கணக்கு அறிக்கையானது மேலே தணிக்கையான கணக்குகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், 1965 ஆம் ஆண்டு பூரிப்புதியங்கள் கொடுப்பதுபற்றிய சட்டம் ஆகியவற்றுக்கு இணங்க, தணிக்கையாளர்கள் இதற்குச் சான்றளித்துள்ளனர். எனவே 1967–68 ஆம் ஆண்டிற்கு 20 சதவீதம் பூரிப்பு ஊதியம் கொடுப்பது ஒப்புக்கொள்ளக் கூடியதன்று எனவும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். எனவே தொழிலாளர் அதிகாரி உடன்பாட்டை சமரசம் செய்து வைக்க இயலவில்லை.

1967-68 ஆம் ண்ண்டில் ஏற்பட்ட இந்தத்தகராறு மாநிலத் தொழிலாளர் குறை ஆணையாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகையில், 1968-69 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகைச் சீட்டை நிர்வாகம் வெளியிட்டது. இதன்படி, அந்த ஆண்டில் ரூ. 14 லட்சம் பற்றுக்குறை இருந்ததால், 1968-69 ஆம் ஆண்டிற்கான 4 சதவீத பூரிப்பு ஊதியத்தைக் கொடுக்கக் கருதியது. அதன் பேரில் 29—9—1969 அன்று தொழிலாளர்கள் நிர்வாகத்தினரைச் சூழ்ந்து கொண்டு முற்றுகை செய்ததாகவும் 1968-69-ஆம் ஆண்டிற்கு 20 சதவீதம் பூரிப்பு ஊதியத்திற்கான ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடவேண்டும் என்று நிர்வாகத்தினரைக் கட்டாயப்படுத்தியதாகவும் தொழிலாளர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. வலுக்கட்டாயத்தின் பேரில் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டாலும் 20 சதவீதம் என்று ஒப்புக்கொண்ட விகிதத்தில் பூரிப்பு ஊதியத்தை நிர்வாகம் வழங்கியது. எனினும் பின்னர் நிர்வாகத்தினர் அந்த ஒப்பந்தத்தை நிராகரித்துவிட்டதாகத் தோன்றுகிறது.

1967-68-ஆம் ஆண்டுக்கான பூரிப்பு ஊதியம் பற்றிய தகராறைப் பொறுத்த மட்டில் அந்த ஆண்டில் ரூ. 15.76 லட்சம் நிர்வாகத்தினருக்கு இழப்பு ஏற்பட்டது என்று தொழிலாளர் குறை அதிகாரியின் அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது. மேலும், நிறுவனத்தின் ஐந்தொகைச் சீட்டும், ஆதாய-இழப்புக் கணக்கும் சட்டப்படிக்கான தணிக்கையாளர்களால் உரிய வகையில் தணிக்கை செய்யப்பட்டுள்ளன என்றும், எனவே இது சரியானதாகத்தான்



1970 மார்ச் 9] [திரு. கா. வேழவேந்தன்]

இருக்குமென ஊகிக்கவேண்டும். இருப்பினும் நாகர்கோவிலில் உள்ள தொழிலாளர் நல அதிகாரி, மதுரையில் உள்ள தொழிலாளர் குறை ஆணையாளர், தொழிலாளர் ஆகியோரது அறிக்கைகளை மிகக் கவனமாகப் பரிசீலித்த பின்னர், இப்போது 1967-68 பூரிப்பு ஊதியம் குறித்து எழுந்த தகராறினை நடுவர் தீர்ப்புக்கு அரசு அனுப்பியுள்ளது.

DR. H. V. HANDE : Sir, initially the management accepted 20 per cent bonus and whether it was done under duress or whether it was voluntarily done by the management is a question which the Hon. Minister has not answered. But I feel that originally it was not done under duress and later on they accepted it under duress. So, in view of the fact that originally they had agreed to the 20 per cent bonus because the Company was making a profit at that time—and later on —we do not know for what reason—suddenly they had stated that they would give only 4 per cent bonus which is the minimum stipulated in the Act, will it be possible for the Government to arrange a tripartite conference consisting of representatives of the management, labour unions and the Government so that to a certain extent the difficulties of the workers can be completly got over. Otherwise the matter will again go to the Labour Court and the High Court. So, will the Government take a helpful attitude towards the workers there?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** உறுப்பினர் அவர்கள் இரண்டு பிரச்னைகள் இருப்பதைக் கவனிக்கவேண்டும். 1967-68 க்கு உரிய போனஸ் பற்றிய சிக்கல் பரிசீலனையில் இருந்தது. அதில் 4% தருவது என்று நிர்வாகத்தினர் சொன்னார்கள். 20% வேண்டுமென்று தொழிலாளர்கள் தரப்பில் சொல்லப்பட்டது. இடையில் 1968-69-க்கு உரிய வகையில் 20 சதவிகிதம் வேண்டுமென்று நிர்வாகத்தினரிடம் கேட்டார்கள். அதை நிர்வாகம் வழங்கிவிட்டது. அது பற்றிய பிரச்னை இப்போது இல்லை. 1967-68-ம் பற்றிய பழைய பிரச்னைதான் இப்போது இருக்கிறது. அதுபற்றி ஒவ்வொரு மட்டத்திலும் தீவிரமாக இரண்டு தரப்பாரையும் கலந்து பேசி ஒரு முடிவு வராத காரணத்தினால் கடைசியில் அட்ஜுடிகேஷனுக்கு அனுப்பியிருக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** 1967-68-ல் கம்பெனியின் லாபம் எவ்வளவு? 1968-69-ல் எவ்வளவு ப்ராஃபிட்? ப்ராஃபிட் சரியான வகையில் இருந்திருந்தால் கொடுப்பதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** 196768-ல் ரூ. 15-75 லட்சம் நஷ்டம் என்று கணக்கு சொல்லியிருக்கிறார்கள். அது ஸ்டாச்சுட்டரி ஆடிட்டர்ஸ் ஆல் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கை மறுபடியும் மறுபரிசீலனை செய்வதற்காகத் தான் கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறோம். அங்கு நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. விநாயகம் :** ஸ்பீக்கர் தான். நாங்கள்தானே எலெக்ட் பண்ணினோம். எனவே பேரவைத் தலைவர்தான் எல்லாம . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஸ்பீக்கர் தான் சூப்பர், என்று சொல்கிறீர்கள். இல்லை ஹவுஸ் இஸ் சூப்பர். பேரவைத் தலைவருக்கு உரிமையை இந்த ஹவுஸ்தான் கொடுக்கிறது. எனவே ஹவுஸ்தான் சூப்பர், பேரவைத் தலைவர் அல்ல, இது தெரியாமல் வந்து சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள்.

**திரு. கே. விநாயகம் :** சார், இது தெரியாமல் என்று சொல்கிறீர்கள். நீங்கள் வேண்டுமானால் மதர் ஆப் பார்லிமெண்ட் ஆக இருக்கிற இங்கிலாந்துக்கு எழுதிப் பாருங்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் சூப்பர் அல்ல. இந்த அவைதான் சூப்பர். பேரவைத் தலைவருக்கும் மேலானது இந்த அவை.

**திரு. கே. விநாயகம் :** ஒரு சிம்பலாக இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது சரி, நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள். அந்த விவகாரத்தில் எல்லாம் நுழைய வேண்டாம்.

**திரு. கே. விநாயகம் :** நீங்கள் கில்லட்டின் செய்வதற்கு முன்னால் பைனான்ஸ் மினிஸ்டரை 5 நிமிடங்களுக்கு முன்னால் முடிக்கச் சொல்லி, உறுப்பினர்கள் அந்த நேரத்திலே கேள்விகள் கேட்க விட்டிருந்தால் இந்த பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு இடம் இல்லாமல் போயிருக்கும். இனிமேலாவது அந்த முறையைக் கையாள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் ஒதுக்குவதைப் பொறுத்த வரையில் பேரவைத் தலைவர் ஒதுக்கிய நேரத்தை அப்படியே அத்தனைபேர்களும கடைப்பிடித்தால் சரியாக இருக்கும். ஒரு மணிக்கு ஓட்டு எடுப்பு நடத்த வேண்டும், எதிர்க்கட்சித் தலைவர் 11 மணிக்குத் தொடங்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. 10 நிமிடங்கள் திரு. பொன்னப்ப நாடார் பேசுவதற்கு வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு 15 நிமிடம் திரு. பூவராகன் அவர்களுக்கு வேண்டும் என்று சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் 10 நிமிடத்தில் நிற்கவில்லை, திரு. பூவராகன் அவர்களும் 15 நிமிடத்தில் நிற்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் 12 மணிக்குள் முடிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது, அவரும் நிற்கவில்லை. இப்படி இருந்தால் யாரை நான் கட்டுப்படுத்த முடியும்? யாராவது கட்டுப்பாட்டின்கீழ் நிற்கின்றார்களா? நிற்கவில்லையே! அதிகமாக நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். திரு. விநாயகம் அவர்கள் 20 நிமிடத்திற்குள் முடிக்கவில்லை, ஆகவே, இப்படியெல்லாம் பார்க்கிற நேரத்திலே ஒரு மணிக்கு



வோட்டுக்கு விடவேண்டுமென்று இருப்பதால் எல்லோரும் ஐந்து நிமிடங்கள் குறைத்துக்கொண்டிருந்தால் அதற்கு வழி இருந்திருக்கும் . . . .

**திரு. கே. விநாயகம் :** தாங்கள் அதைச் செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் மணி அடித்துத்தான் பார்க்கலாம். மணியடித்தும் நிற்கவில்லையானால் என்ன செய்வது?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தயவுசெய்து கேட்கவேண்டும். 11 மணிக்கு என்னைப் பேச விட்டிருந்தால் நான் ஒரு மணி நேரத்திற்குள் முடித்திருப்பேன். முதலிலே 1½ மணி நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அதிலும் என்னுடைய கட்சிக்காரருக்கு 10 நிமிடம் கேட்டேன். இடையிலே ஒருவரை நுழைத்து விட்டீர்கள். சபாநாயகர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. நேரம் இல்லாது போய்விட்டது. வரிகளைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் பேசவில்லையென்று நிதியமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டுச் சொன்னார்கள். வெளியே மக்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வரியை எல்லாம் ஆதரிக்கிறார்கள் போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் "டேம்" ஆக இருக்கிறது என்று பத்திரிகையில் எழுதும் நிலைமை இருக்கிறது. வரிகளைப் பற்றியெல்லாம் பேச நேரம் கிடையாது.

(திரு. மார்டின் அவர்கள் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சிரிப்பதற்கும் ஒரு முறை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கு, எதிர்க்கட்சித் தலைவருக்கு, என்று ஒதுக்கப்பட்டிருந்த நேரம் முழுவதும் கொடுத்திருந்தால் நான் அதைப் பற்றியெல்லாம் பேசியிருக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எதிர்க்கட்சித் தலைவரை மட்டும் குற்றஞ் சாட்டவில்லை. அவர், அவருக்கு முன் பேசியவர்கள் யாராக இருந்தாலும் கொடுத்த நேரத்தில் யாரும் முடிக்கவில்லை. எப்போது நீங்கள் மீண்டும் இன்றைய நேரத்தை நீட்டிக்கக் கொண்டிருக்கிறீர்களே. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்தபடிதான் நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் நான் பேசும் நேரத்திலே இரண்டு பேரை ஏன் நுழைக்கிறீர்கள்? பிசினஸ் அட்வைசரி கமிட்டி தீர்மானப்படி எதிர்க்கட்சித் தலைவரும், நிதியமைச்சரும் மட்டுந்தான் பேசுவதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

## (4) அரசினர் தீர்மானங்கள்

### (அ) அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப்பேரவையின் 182-வது விதியின் கீழ் 1970-71-ம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினன்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## (5) அறிவிப்புகள்

### (அ) அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.:** ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின்கீழ், அவையுரிமைக் குழுவிற்கு (கமிட்டி ஆஃப் ப்ரிவி லேஜஸ்) உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர் கள் நியமனத்தாள்களை 13–3–1970 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 14—3—1970 சனிக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ளவிரும்பும் வேட்பாள்ர்கள் 16–3–1970 திங்கட்க்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப் பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பதி னன்கிற்கு மேற்படுமாயின் 23—3—1970 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

## (4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) அவையினர் குழுவிற்கான தேர்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 221(1) வது விதியின் கீழ் 1970-71-ம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) அவையினர் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத் துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (ஹௌஸ் கமிட்டி) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 13—3—1970 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 14—3—1970 சனிக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 16—3—1970 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதிமூன்றிற்கு மேற்படுமாயின் 23—3—1970 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடை பெறும்.

## (6) அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக் கின் மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்ட பேரவை மசோதா எண் 4/70).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எல். 4/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று நான் கோருகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாமீது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மசோதாவை எவ்வளவு நேரத்தில் முடிப்பது?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பேசி முடிக்கிறவரையில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு மசோதாவும் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 12½ மணி வரையில் இதற்கு எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மானியக்கோரிக்கைகள் மீது நாம் விளக்கமாக பேச இருக்கிறோம். ஒவ்வொரு தலைப்பைப் பற்றியும், அப்படி விளக்கமாகப் பேசத்தான் இந்த 'வோட் ஆன் அக்கவுண்ட்' எடுக்கிறோம். ஆகவே அடுத்த மசோதாவை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: பார்லிமேன்டில் இரண்டு நாட்கள் கூட இருந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எதிர்கட்சித் தலைவர் பேச வேண்டுமென்று நினைத்தால் சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்கட்சித் தலைவர் மட்டிலுமா (குறுக்கீடு) சரி, தலைவர்கள் பேசட்டும்.

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, I wish to offer a few remarks in this connection. I want to say something about the Transport Department in the first instance. The Transport Department has been in a very bed shape since a few years. There is practically no satisfaction in the minds of nearly ten lakhs of persons who are using the transport buses. I do not want to be ironical. I want to place a few facts, so that something is done immediately. Let us take the position of Adyar, Shastrinagar and other places. In the name of rationalisation, certain important buses were skipped and the people there have been put to great difficulties. They do not have buses either in the morning or in the evening. For the whole day, the buses do not come there. Because of the so-called rationalisation, huge chunks in the City had been completely deprived of transport communication by the State Transport Department. At the same time our taxation system has been so wonderful that it is impossible for the private transport to survive also. In this context I want to know from the Hon. Finance Minister what is the fate of persons who are going to use this transport, who do not go by taxi, who do not have a cycle nor have a rickshaw. They have to use this bus only. What is their fate? What is the answer of this Government for this large section of population ? I want the Ministry to pay attention to this major problem. Let us take the case of a person who gets into the bus in Wall Tax Road (that is in my constituency). The bus stops are changed frequently, without notification in the dailies or without any announcement. Many passengers come to a particular stop and stand but to their dismay find that it had been changed. They have to rush to the bus stopping at another new stop. Sometimes the name board is absent or it is not changed but the bus stops a tanother new stop 20 or 30 yards away. A few days before, I wanted to hear the grievances of the people of my constituency. I asked them all to assemble together and let me know what their grievances were. Their main grievance was about transport. They said that if this problem was solved, half of their problems would be solved. We have to solve this problem of travelling public. Let



us take the position of one who has got into the bus, somehow. It is impossible to get sitting accommodation in between; he could get it only in the two termini.

The manner in which transport buses are driven is something very, very tragic and I cannot resist the temptation of bringing it to the attenion of the House. The rash manner in which they are driven and the jerks caused are something unthinkable. This important point I want to stress in this House.

The passenger is not allowed to get down where he wants to get down.

If a passenger has no change but gives only a one rupee coin or currency note, the conductor treats him in a contemptuous manner. The letters-to-the-editor column of the Press is replete with complaints of bus passengers. Is not to have change a crime? Finally he is given the change later on, on the way or where he gets down. The altercations or exchange of words and the discourteous manner in which the conductor treats the passenger are well known.

Then there is the breakdown of buses and the passenger is not sure when he will reach his destination. When there is a sudden breakdown of a bus, there is no wireless or other communication system to inform the headquarters and arrange for a relief bus. In any civilised country there must be a wireless system for contacting the headquarters whenever there is a breakdown and for making alternative arrangements for the stranded passengers. Absolutely nobody is bothered about it. I have transported some of the stranded passengers a number of times. Their complaints are heartbreaking. This has been going on and increasing. I do not say that this has cropped up suddenly Every year this tragedy is going and it has not come to an end.

Then I come to the condition of buses. I do not want to talk in the manner in which some of my Friends talk. My purpose is not to irritate the Government but to bring the defects to their notice. The buses are old-fashioned. Before a bus starts, there is no checking as to whether it is in a proper condition. The buses are old-fashioned, emit a lot of smoke and are in very, very poor shape. They are not putting in new buses. What happened to the number of petitions from the people of Sastrinagar and Indiranagar to the ex-Minister for Transport? I do not know whether they have been passed on to the present Minister for Transport. I do not want to hurt anybody's feelings. People were very much happy when they heard the news that the Transport Minister had changed and they expect the new Minister who has assumed charge of the Transport portfolio to rectify the defects. That is only an evidence of the bitterness and frustration of the travelling public. This is a field in which the Government may get a very bad name. Nearly half the population of the City is using State

Transport buses. We are not able to face our constituents. What ever be the party in power, it is immaterial. The first question they ask an M.L.A. is : Are you going to take up this question or not ? We do not want you to take up any other subject.

MR. Deputy Speaker in the Chair.

Before we take up the Transport Demand, immediately appoint a two-man or three-man Commission to examine and report on what exactly is plaguing this State Transport. You want to go on nationalising bus routes. Whatever old buses are there, are retained in the City. New buses are put on long distance routes. Even when the nationalisation of long-distance routes were begun, we warned the Government that they should provide better facilities and amenities on the routes that they had already nationalised before extending nationalisation. When I heard people talking that more routes should be nationalised, I was sorry that such a plea should be made as though we were going to get some revenue to the exchequer. Our imagination is running riot. Wherever we have nationalised, the services are running at a loss. Never mind the loss. Are we atleast giving satisfaction to the passengers ? No. I want this particular point to be pinpointed and highlighted and the Minister's attention spotlighted on this very obnoxious problem. I hope and trust that the Finance Minister in his reply will assuage the hurt feelings of lakhs and lakhs of people in the City of Madras.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று இந்த தற்காலிக நிதி ஒதுக்க மசோதாவின் மீது பேசக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்திலே நான் முக்கியமாக இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டு வந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் சம்பந்தமாக திருத்தச் சட்டம்பற்றி சில அவசியமான பிரச்சினைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, இந்தச் சட்டத்திலே 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருப்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாகக் குறைப்பது என்று அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சட்டமேலவையிலே பேசும்பொழுது இந்தச் சட்டமன்றத்தினுடைய கூட்டத் தொடரிலேயே இது பற்றி சட்டம் நிறைவேற்றப்படும் என்று பேசியிருக்கிறார்கள். அவ்வாறு பேசியிருக்கும் பொழுது, அவ்வாறு நிறைவேற்றப்படுவதாயிருந்தால் இந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று குறைப்பது என்பது மட்டுமல்லாமல், இந்த விதிவிலக்குகள் என்று சொல்லப்பட்டிருக்கிற அந்த விதிவிலக்குகளை ரத்து செய்தாலொழிய இதனால் பயன் ஏற்படாது என்பதை நான் மிகவும் பலமா the ற்புறுத்த விரும்புகிறேன். 61 ஆம் வருஷத்திலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திலே, எடுத்த எடுப்பிலேயே, இது மாதிரி நிறுவனங்கள், மத டிரஸ்டுகள்



சம்பந்தமான நிலங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்றிருக்கிறது. முதலில், திருத்தப்படும் அந்தச் சட்டம் அதற்கும் பொருந்தும் என்று திருத்தப்பட வேண்டியிருக்கிறது. அந்தப்பால் கொடுக்கப்பட்டிருக்கும் விதிவிலக்குகளைப் பார்த்தால் மிகப் பயங்கரமான பட்டியலை அப்பொழுதிருந்தவர்கள் நிறைவேற்றிக்கொண்டார்கள். யாருக்குப் பயனாக வேண்டுமென்பதை அதைப் பார்த்தாலே தெரியும். சாரிடபிள் ஆர். எஜுகேஷன் டிரஸ்ட், அதாவது தர்மம் அல்லது கல்வி என்ற பெயரால் வைக்கப்பட்டிருக்கும் டிரஸ்டுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சட்டத்தினுடைய பிடியிலேயிருந்து போய்விட்டன என்று பார்க்க முடியும். அது ஒருவேளை போதாது என்று நினைத்து எந்த டிரஸ்டுக்கும் இந்தச் சட்டம் விதிவிலக்கு அளிக்கிறது என்றிருக்கிறது. ரிலிஜியஸ் டிரஸ்ட் மட்டுமல்ல, தர்ம ஸ்தாபனம் மட்டும் அல்ல, கல்வி நிறுவன டிரஸ்ட் மட்டுமல்ல, எந்த டிரஸ்டுக்கும் இந்தச் சட்டம் விதிவிலக்கு அளிக்கிறது என்றால், எவ்வளவு நிலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யக் கிடைக்கும்?

மலைப்பிரதேசம் என்று சொல்லி, மலைப்பிரதேசம் என்றால் ஏதோ சில பிராந்தியங்களுக்கு என்று நினைத்துக்கொள்ள வேண்டாமென்று தெளிவாக்கப்பட்டு நிறைவேற்றப்படும் பொழுது, நீலகிரி மாவட்டம் முழுவதற்கும் விதிவிலக்கு, அந்த ஜில்லா பூராவுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அது மட்டுமல்ல, கொடைக்கானல் தாலுக்கா முழுவதும், சேலம் மாவட்டத்தில் ஏற்காடு உப தாலுக்கா விதிவிலக்கு. அந்தச் சட்டத்தினுடைய இணைப்புகளைப் பார்த்தால், வடார்க்காடு, தென்னார்க்காடு; சேலம் போன்ற மாவட்டங்களில் பல நூற்றுக்கணக்கான கிராமங்கள் மலைப் பகுதி என்ற பெயரால் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இன்று கொடைக்கானல், நீலகிரி ஏற்காடு சப் தாலுக்கா போன்ற இடங்களில் பத்தாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் வைத்துக் கொள்ளலாம் என்றால் என்ன நிலவுடைமை? என்ன வரம்பு கட்டுவது? என்ன நிலச் சீர்திருத்தம்? வேடிக்கையாக ஆக்கிய முறையைத் தெளிவாகப் பார்க்கமுடியும்.

இன்று விதிவிலக்குகளை எடுத்துக் கொண்டு பார்த்தால், சின்கோனா; ரப்பர்; தேயிலை; காப்பி இந்தத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கரும்பு சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் என்று சொல்லப்படும் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. பால் பண்ணை நடத்த விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, கால் நடைகளை மேய்க்க என்றால் அந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவுக்குப் பதில் 50 ஸ்டாண்டர்ட் ஏக்கரா வைத்துக்கொள்ள அந்தச் சட்டம் அனுமதித்திருக்கிறது என்றால் அதை நாம் சிந்தித்துப்

கணக்கிடுவதற்கு புஞ்சை வரி எடுபட்டுவிட்ட காரணத்தினால், எந்த வரியின் அடிப்படையில் கணக்கிடுவது? அதற்கான ஆதாரம் இன்றைக்கு இல்லை. ஆகவே, நிலங்களை பாகுபாடு செய்வது என்பது வருமானத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். நம்முடைய மத்திய சர்க்கார் . . .

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இன்றைக்கு புஞ்சையின் மீது விதிக்கப்பட்ட வரியை எடுத்துவிட்ட காரணத்தினால் வரி இல்லாமலே போய்விடவில்லை. புஞ்சைக்கு தாத்தீர்வை என்று ஒன்று இருக்கிறது. அடங்கலில் பெர்மனெண்டாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. வரி நீக்கப்பட்டுவிட்டாலும், தரத் தீர்வை நீக்கப்பட வில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் குறிப்பிட்ட அம்சம் என்னவென்றால், அவ்வாறு வரி இருந்தாலும் கூட, புஞ்சை நிலங்களுக்குப் போடப்பட்ட குறை வான வரியின் அடிப்படையில் கணக்கிட்டால் 4 ஏக்கர் புஞ்சை நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவுக்கு கணக்கிடப் படக்கூடும் என்பது தான். அதன் காரணமாக ஏராளமான புஞ்சைத் தோட்டங்கள் இந்த சட்டத்திற்குள் வராமலேயே பாது காக்கப்பட்டுவிடுகின்றன. இன்றைக்கு நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் நம்முடைய மாநிலத்தில் கிடைத்திருக்கக் கூடிய நிலம் வெறும் 13.000 ஏக்கர் தான் என்பதை விளக்கு வதற்காகத் தான் இதைக் குறிப்பிட்டேன். ஆகவே, தான் குடும்பத்தின் அடிப்படையில் தான் உச்ச வரம்பு நிர்ணயிக்கப் படவேண்டும். நிலத்தின் மீது வரக்கூடிய வருமானத்தின் அடிப் படையில் தான் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும். மத்திய அரசாங்கம் ரூ. 5,000 நிகர வருமானம் வரை யிலும் வருமான வரியிலிருந்து விலக்களித்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு ரூ. 5.000 நிகர வருமானம் விவசாய வருமானம் பெறக்கூடிய அளவுக்கு, நில உடைமைக்கு உச்ச வரம்பு இருக்கக் கூடிய வகையில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயித்தால், சட்டத்தை அதற்குத் தகுந்தமாதிரி மாற்றி அமைத்தால், ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது வருமான அடிப்படையில் நிர்ண யிக்கப்பட்டால், பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உபரி யாகக் கிடைக்கக்கூடும். இடத்திற்கு இடம் வருமானத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஒரே அளவு கோலாக இருக்கவேண்டு மென்றால் வருமான அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக் கிடப்படவேண்டும்.

இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் மற்றொன்றும் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை. கோவை முதலிய இடங் களுக்குச் சென்று பத்திரப் பதிவுத் துறை ஸ்டாம்பு வாங்க



வேண்டும் என்பதற்காக ஒரு ரூபாய் விலையுள்ள ஸ்டாம்பை இப் பொழுது ரூ. 20 விலை கொடுத்து வாங்கி, இந்தச் சட்டம் கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற தேதி, அதாவது 26—2—1970-க்கு முன்னால் பதிவு செய்வதற்காக பல ஆயிரக் கணக்கான நிலப் பிரபுக்கள் இப்பொழுது ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எங்களுக்கு தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. தயவு செய்து அரசாங்கம் இதை விசாரணை செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஸ்டாம்பு வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். மேலும் செலவு செய்து ஏமாந்துவிடு வார்கள் என்று கருதுகிறேன். ஸ்டாம்பு வாங்கிப் பத்திரம் எழுதினால் மட்டும் போதாது. அதற்கு முன்பே ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால் தான் அவர்கள் அரசாங்கத்தை ஏமாற்ற முடியும். ரிஜிஸ்டர் செய்யப்படாமல் இருந்தால் அரசாங்கத்தை ஏமாற்ற முடியாது. ஆகவே, உறுப்பினர் எந்த விதத்திலும் கவலைப் படத் தேவையில்லை. அவர்களுடைய பேச்சில் ஸ்டாம்பு வாங்கு வது அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். நாங்களும் கேள்விப் படுகிறோம். ஸ்டாம்பு வாங்கி, அதில் அவர்களுடைய பணத்தை வீணாக விரயம் ஆக்கத் தேவையில்லை.

**திரு. என். சங்கரய்யா :** முதல் அமைச்சர் அவர்களின் குறுக் கீட்டுக்கு நன்றி. இந்த நாட்டில் பயனுள்ள முறையில் இந்த சட்டத்தைக் கொண்டுவருவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய மிக முக்கியமான அறிவுரைகளை பத்திரப் பதிவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குச் சொல்ல வேண்டும். பினாமி டிரான்சாக்ஷன் மூலம், பினாமி மாற்றங்கள் மூலம் தப்பித்துக் கொண்டு, தங்கள் நிலத்திற்கு நிலப்பிரபுக்கள் பாதுகாப்புத் தேடிக்கொள்வதை தடுக்க தக்க பாதுகாப்புகள் செய்யவேண்டும்.

இன்றைக்கு அரசாங்கத்திற்கு நாங்கள் வற்புறுத்திக் கூறுகிற யோசனை என்னவென்றால், இந்தப் பக்கத்திலுள்ள எதிர்க்கட்சிகள், ஜனநாயக இடதுசாரிக்கட்சிகள் எல்லாம் சேர்ந்து வற்புறுத்திக் கூறும் யோசனை என்னவென்றால், இதை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரை 15-ஆகக் குறைக்கும்பொழுது, அது நபர் அடிப்படையில் இல்லாமல், குடும்பத்தின் அடிப்படையில் குறைக்கப்பட வேண்டும். வருமான அடிப்படையில் தான் ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயிக்கப்படவேண்டும், விதிவிலக்குகளை ரத்து செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தை செலெக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டிய அவசியமே இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட இதைப்பற்றிச் சொன்னார்கள். விதிவிலக்கு சம்பந்தமாக விவாதிக்கவேண்டியது ஒன்றுமில்லை.

பார்க்க வேண்டும். இன்றைக்கு அது மட்டுமல்ல. பாக்குத் தோப்புகள் விலக்களிக்கப்பட்டிருக்கின்றன. பாக்குத் தோப்புகள் நிலம் அல்லவா? அன்றைக்கு இந்தச் சட்டத்தை இயற்றியவர்கள் தந்திரமாக பல நில பிரபுக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று பாக்குத் தோப்புகளுக்கு விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. தோப்புகள் என்று சொல்வதில் பனைமரங்கள் இருப்பதும் கூட தோப்புகள் என்று அதில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தோப்புகள் என்ற பெயரால் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டு, இந்த சட்டத்திற்குள் கொண்டு வரப்படாமல், இந்த சட்டம் அந்தத் தோப்புகளுக்கு பொருந்தாது என்று முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனால் எவ்வளவு தூரம் நிலப்பிரபுக்கள் தங்களை பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

மேற்கொண்டு பழத் தோட்டங்களுக்கும் இந்த விதிவிலக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. முள்ளு முனையில் வெட்டினார்கள் மூன்று குளம், அதில் 2 குளம் பாழ், ஒரு குளம் தண்ணீர் இல்லாதது. அதுபோல 1961-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் ஒரு கோடி 50 லட்சம் ஏக்கரா சாகுபடியாகக் கூடிய நிலம் இருந்தது.—அப்படி 150 லட்சம் ஏக்கரா சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் உள்ள மாநிலத்தில், இந்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்தது வெறும் 13,000 ஏக்கர் நிலம் தான். இதிலிருந்து சட்டம் எவ்வளவு தூரம் பயன்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகக் கூறமுடியும். இன்றைக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைக்கக்கூடிய நேரத்தில் நிலப்பிரபுக்கள் என்ன நினைக்கிறார்கள்? 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்தபொழுது 13,000 ஏக்கர் கிடைத்திருக்கிறது அரசாங்கத்திற்கு, ஒரு கோடி 50 லட்சம் ஏக்கரா சாகுபடி நிலமாக இருக்கக் கூடிய நேரத்தில். இப்பொழுது 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்றால் என்ன? அரசாங்கத்திற்கு 26,000 ஸ்டாண்டர்டு ஏக்கரா நிலம் கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களை எப்படியும் பாதுகாத்துக் கொண்டு விடலாம் என்று திருப்தி அடைந்திருக்கிறார்கள். 1½ கோடி ஏக்கரா சாகுபடி நிலத்தில் அரசாங்கத்திற்குக் கிடைத்தது வெறும் 13,000 ஏக்கரா தான் இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் என்றால், நிலப்பிரபுக்கள் எவ்வாறு தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரியவருகிறது. ஆகவே தான் விதிவிலக்குகள் அத்தனையும் நீக்கப்பட வேண்டும். மத்திய அரசு மாநில அரசு ஸ்தல ஸ்தாபனங்கள் இவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு விதிவிலக்குப் போக, இந்த மூன்று ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கு தவிர, பாக்கி விதிவிலக்குகள் அத்தனையையும் ரத்து செய்துவிட வேண்டும்.



அதோடுகூட 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்திருப்பது குடும்பம் என்ற அடிப்படையில்தான் இருக்க வேண்டுமே தவிர, நபர் என்ற அடிப்படையில் இருக்கக் கூடாது. குடும்பத்தின் அடிப்படையில் உச்ச வரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்தால்தான் ஏதாவது ஸர்பலஸ் நிலம், உபரி நிலம், உழக்கூடிய விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதில் அளிக்கும்பொழுது அறநிலைய அமைச்சர் அவர்கள் மாநில அரசின் கணக்குப்படி பப்ளிக் டிரஸ்டுகள் என்று சொல்லப்படுபவை 20,000 இருக்கின்றன என்று கூறினார். இந்த 20,000 டிரஸ்டுகளுக்குச் சொந்தமான நிலங்களையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டு வராவிட்டால், இந்தச் சட்டமானது உச்ச வரம்பு சட்டமாக அமையாது, மிச்ச வரம்பு சட்டமாகத்தான் இருக்கக்கூடும். அதை உச்ச வரம்பு சட்டம் என்று சொல்ல முடியாது என்பது தெளிவாகிறது. ஆகவேதான் இன்றைக்கு விதிவிலக்குகளை ரத்து செய்வதோடு குடும்பத்துக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அடிப்படையில் குறைத்தால்தான் இந்தச் சட்டம் பயன் அளிப்பதாக இருக்கும்.

நான் இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். ஸ்டாண்டர்டு ஏக்கரை நிர்ணயித்திருப்பது நிலத்தின் மீது கிடைக்கும் வருமானத்தின் பேரில் அல்ல. அதற்குப் பதிலாக நிலத்தின் மீது கொடுக்கப்பட்டு வருகிற நிலவரியின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நில வரி அடிப்படையில் கணக்கிட்டால், சாதாரணமாக 2 ஏக்கர் நஞ்சை நிலம் என்பது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கணக்கிடுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் நஞ்சையாக இருந்தால் 60 ஏக்கர் நிலம்வைத்துக் கொள்ளலாம். இந்தச் சட்டத்தின் அடிப்படையில், புஞ்சையாக இருந்தால், 2½ ஏக்கரிலிருந்து ஆரம்பித்து 4 ஏக்கர் வரை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கணக்கிடலாம் வரி அடிப்படையில் கணக்கிடும்பொழுது. குறைந்தபட்சம் 2½ ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராக கணக்கிடப்படும், அதிகப்பட்சமாக 4 ஏக்கர் வரை கூட போகலாம் புஞ்சை நிலமாக இருந்தால், அப்படிப் பார்க்கும் பொழுது 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்றால், 120 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்துக்கொள்ளலாம். 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்றால் 60 ஏக்கர் வரையில் வைத்துக் கொள்ளலாம். எவ்வளவு வருஷங்களுக்கு முன்போ புஞ்சை நிலம் என்று எழுதப்பட்ட தோட்டங்கள். அதற்கு போடப்படும் வரியின் அடிப்படையில் நிர்ணயித்தால், ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது 4 ஏக்கர் அளவுக்கு வந்துவிடுகிறது. இந்த முறையில் நிர்ணயிக்கப்பட்டால் எப்படி உபரி நிலம் கிடைக்கும்? உபரி நிலம் அதிகமாகக் கிடைப்பதற்கு வழியே இல்லை என்பது தெளிவாகிறது. இப்பொழுது அரசாங்கம் புஞ்சை நிலத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள வரியையும் எடுத்துவிட்டது. ஸ்டாண்டர்டு ஏக்கர்

டிருக்கின்றன. எஜமான்களுடைய ட்ரஸ்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. கோவில்களுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். இனைமைக்குச் சொல்லுகிறேன், சர்க்கார் பார்த்து, சில குடும்பங்களிலே, ஆயிரக்கணக்கான ஏக்கர்களை எழுதி வைத்திருக்கிறார்கள் என்று கண்டு பிடித்தால், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கட்டும். 1960-க்கு முன்னால் பட்டா யார் மேல இருந்தது, இப்பொழுது யார் யார் மேல இருக்கிறது; குடும்பத்தைச் சேராதவர் யாருக்காவது எழுதி வைத்திருந்தால், அதற்கும் நடவடிக்கை எடுக்கலாம். சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. பிரித்துக்கொண்டு விட்டார்கள் என்று சொல்ல வேண்டாம். அவற்றை எடுத்துப் பரிசிலனை செய்ய, நிச்சயமாக யார் மீது மாற்றியிருக்கிறார்கள், சொந்தக்காரர்கள் மேலா அல்லது மற்றவர்கள் மீதா என்று பார்த்து தவறுகள் இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம். 1960-க்கு முன்னால் ஒவ்வொருவருக்கும் பட்டா இருந்தது. அவற்றை எடுத்து, அதிலிருந்து எப்படி எப்படி ட்ரான்சாக்ஷன்கள் நடந்திருக்கின்றன என்று பார்க்கலாம். எத்தனை குடும்பங்கள் இருக்கும்? ஒரு 500 அல்லது 1,000 குடும்பங்கள் இருக்கலாம். லாண்ட் போர்டு என்று உத்தியோகஸ்தரை நியமித்தோம். டிஸ்ப்யூட்டுக்கு வந்தால்தான் என்பதை விட்டு விட்டு, பாராளுமன்றத்தில் 34 குடும்பங்கள் இந்தியா தேசத்தில் அத்தனை தொழில் நிறுவனங்களேயும் வைத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தது. விசாரணை செய்ய, அதற்கென்று ஒரு கமிஷனைப் போட்டு இருக்கிறார்கள். இப்பொழுது பிரதம மந்திரி நடவடிக்கை எடுத்தார்களா என்று தெரியாது. அப்படி 'ப்ரோப்' நடப்பதுபோல், சர்க்கார் உடனடியாக ஒரு கமிஷனைப்போட்டு எங்கள் மீது குற்றம் சொல்வதை, காங்கிரஸ் சொல்லிப் பிரித்துக்கொண்டு விட்டார்கள் என்று சொல்வதை, நிறுத்திவிடலாம். எங்கள் குடும்பத்தையே எடுத்துக் கொள்ளுங்கள், நீதி விசாரணை நடத்துவதானால் தயார். எங்கள் பாட்டனார், தகப்பனார் பேரில் பட்டா இருந்தது, என்ன ஏது என்று பார்த்துச் சொன்னால்கூட பாதகமில்லை. சட்டத்தை மீறி நடந்தார்கள் என்றால், சட்டசபையில் அவமானப்படவேண்டிய நிலை இருக்கும். அதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். அதை முதலமைச்சர் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

'வேக்' ஆகச் சொல்லுகிறார்கள், 'வேக்' ஆகச் சொல்லுகிறார்கள் என்கிறதை விட்டுவிட்டு, ஏமாற்றிப் போட்டார்கள் என்கிற குற்றச்சாட்டை விட்டு, 1960-லிருந்து, இதற்கு முன்னால் பத்து வருஷத்திற்கு முன்னால் நிலைமைகள், பட்டா எப்படி எப்படி இருந்தன என்பதைப் பரிசீலிக்க ஒரு கமிஷனைப் போட்டு விசாரிக்க வேண்டும். என்ன, அதிகமாக இருந்தால், தஞ்சையில் இருக்கும், கோவையில் சில குடும்பங்கள் இருக்கலாம். நிலைமைகள் புரிந்துவிடும்.



நிலச் சீர்திருத்தச் சட்டத்தை, உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, எதிர்க் கட்சியிலே, 1957-62-ல் 15 அங்கத்தினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அதற்குத் தலைவராக மதிப்பிற்குரிய, என் அருமை நண்பர், மறைந்த அண்ணாதுரை தலைவராக இருந்தார்கள். சட்டத்தைக் கொண்டு வந்தபோது, திருத்தம் கொடுத்தார்கள் என்று நினைக்கிறேன். முப்பது என்று சொல்லுகிறீர்களே, 15 என்று ஆக்க வேண்டும் என்று, குறைக்கவேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்ததாக ஞாபகம். அப்பொழுது இருந்த சூழ்நிலையில் 30 ஏக்கர் உச்ச வரம்பு என்று கொண்டு வந்தோம், பின்னால் போகப்போகப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னதாக ஞாபகம். அவர்கள் அப்பொழுது சொன்ன நிலைகளையெல்லாம் இப்பொழுது பரிசிலனை செய்து, 15 ஏக்கருக்கு குறைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். வரவேற்கிறேன், கட்சியின் சார்பில். இந்த ஒன்றை யாவது காப்பாற்றினார்களே, எதை ஏதையோ சொல்லிவிட்டு. இதற்கு இடையிலே புகுந்த கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள், காங்கிரஸ் அப்படி, நீங்கள் இப்படி என்று தட்டிவிடப்பார்க்கிறார்கள். மக்களும், சர்க்காரும் ஏமாறவேண்டாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன் . . . .

**திரு. என். சங்கரய்யா**: நான் காங்கிரஸ் என்கிற பேச்சையே கூட எடுக்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: சொல்வதையெல்லாம் சொல்லி விட்டு, எதிர்க் கட்சித் தலைவர் என்று சொல்லவில்லையா, அது யாரைக் குறிக்கும்? செலக்ட் கமிட்டி வேண்டும் என்று கேட்டேன், சர்க்கார் அதை ஏற்றுக் கொள்ளலாம், மறுக்கலாம், ஆராய வேண்டிய நிலையில் வந்தால், செலெக்ட் கமிட்டி வேண்டும்; இல்லை யென்றால், ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். இப்பொழுது 15 ஏக்கருக்குக் குறைத்திருக்கிறார்கள், எந்த முறையில் பில் வருமோ, தெரியாது. பொறுக்குக் கமிட்டி வேண்டும் என்பதும், வேண்டாம் என்பதும் பில்லைப் பொருத்தது.

இதற்கு முன்னாலே நடந்த ஒரு சம்பவத்தை பேரவைத் துணைத் தலைவர் மூலமாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்வதினாலே கம்யூனிஸ்ட் அங்கத்தினர்களுக்குக் கோபம்கூட வரலாம். இருந்தாலும் சொல்ல விரும்புகிறேன். 1952-ம் வருஷத்திலே திரு. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே தஞ்சை ஜில்லாவிலே புயல் வீசியது. அந்தப் புயலால் பெரும் சேதம் ஏற்பட்டு, குடிசைகள் எல்லாம் போய்விட்டன. சட்டமன்றத்தில் நிவாரணம் பற்றிப் பேசப்பட்டபோது ஒவ்வொரு குடிசைக்கும் 50 ரூபாய் கொடுக்கலாம் என்று தீர்மானம் போட்டோம். அப்போது சட்டசபையில் ஆந்திராவையும் சேர்த்து 62 கம்யூனிஸ்ட்

மு.ப. 11-0

விதிவிலக்கை ரத்து செய்வதா, இல்லையா என்பது ஒரு பாலிஸி குவெஸ்சின், கொள்கைப் பிரச்னை தான். அதிலே விசாரிப்பதற்கு ஒன்றுமில்லை. உதாரணமாக, டிரஸ்டுகள், பழத்தோட்டங்கள் இவைகளுக்கு விதிவிலக்கு அளிப்பதா, இல்லையா என்பது கொள்கை அளவில் தீர்மானிக்கப்படவேண்டிய ஒன்றுதான். நாம் விசாரணை செய்வதிலே புதியதாக உண்மை ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கொண்டு வரக்கூடிய சட்டம் தமிழகத்தில் உழக்கூடிய விவசாயிகளுக்கு பலன் அளிக்கவேண்டுமென்றால், ஸ்டாண்டர்டு ஏக்கரை 30-லிருந்து 15-ஆகக் குறைக்கும் சட்டத்தை குடும்ப அடிப்படையில் கணக்கிடுவது, வருமான அடிப்படையில் நிர்ணயிப்பது, விதிவிலக்குகளை ரத்து செய்வது என்ற இந்த அம்சங்களைக் கொண்டு, உடனே நிறைவேற்ற வேண்டும். பாக்கி குத்தகை, விவசாயிகளுக்குச் செய்யவேண்டிய காரியங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் மற்ற பிரச்னைகளை மாநில அரசின் பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கக்கூடிய விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே கொண்டுவரலாம். இப்பொழுது 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்பு இருப்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்கும் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். மேற்கொண்டு நிலப் பிரபுக்களுக்கு எந்த விதமான அவகாசமும் கொடுக்கக்கூடாது. குறிப்பிட்ட 2, 3 அம்சங்களைச் சேர்த்து இந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. பாக்கி இருக்கக் கூடிய பண்ணையாட்கள், விவசாயத் தொழிலாளர்கள், குத்தகைதாரர்கள் சம்பந்தமான பிரச்னைகள், திட்டக் கமிஷனால் வலியுறுத்தப்பட்ட முக்கால் பங்கு போன்ற அம்சங்களையெல்லாம் விரிவான நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் கொண்டு வரலாம். இந்த உச்ச வரம்பைக் குறைக்கும் சட்டத்திற்கு எந்த விதமான பொறுக்குக் கமிட்டியும் தேவையில்லை. இதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. பி ஜி கருத்திருமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின் கீழே நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கருத்துக்கள் என்றால், கடைசியாக, நிதி ஒதுக்கக் கூடிய மசோதாவில் குறிப்பிட்டிருக்கும் தொகையை சர்க்காரிடம் கொடுக்கிறோம். அடுத்து வரும் ஆண்டில் மக்களுக்கு அவை சேரவேண்டும் என்ற வகையில் சர்க்கார் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்று அனுமதி கொடுக்கிறோம். இதற்கு மூன்றால், விவரமாக சில கருத்துக்களை சொல்வது ஆதரவாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மதிப்புக்குரிய திரு. சங்கரய்யா அவர்கள் நிலச் சீர்திருத்தம் பற்றிச் சொன்னார்கள். இதிலே இடை இடையே ஏதோ காங்கிரஸ் கட்சி ஏமாற்றிவிட்டார்கள்,



எல்லோருக்கும் அறிவித்து விட்டார்கள், எல்லோருக்கும் அறிவித்துவிட்டுக் கொண்டு வந்தார்கள், அவர்கள் பிரித்துக் கொண்டு விட்டார்கள் என்றெல்லம் குற்றச்சாட்டுகளை சாட்டினார்கள். முதன்முதலாக நிலச் சீர்திருத்தம் செய்து உச்சவரம்பு கொண்டு வரவேண்டும் என்று செய்வது சுலபம் இல்லை. சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் கட்சி எத்தனையோ சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலாவதாக, சுதேச சமஸ்தானங்களை எல்லாம் ஒன்றாக இணைத்தார்கள். அடுத்து, ஜமீந்தாரிகளை ஒழிக்க வேண்டும் என்று தீர்மானித்து, அதற்காக காங்கிரஸ் சர்க்கார் ஜமீன்களை ஒழிக்கும் சட்டத்தை நிறைவேற்றினார்கள். அதற்கு அடுத்தபடியாக, மிட்டாதார்கள், இனாம் பூமிகளை ஒழிக்க வேண்டும் என்று, அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டோம். அதற்கும பின்னால், நிலச் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று தீர்மானித்து, உச்ச வரம்பு நிர்ணயிக்க வேண்டும் என்று அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

எந்தத் திருத்தத்தைக் கொண்டு வரும்போதும், எந்த மாறுதல் கொண்டு வரும்போதும், கட்சியைக் கலந்து, ஆலோசித்துக் கொண்டுதான் செய்ய வேண்டும். திடீரென்று இந்த விஷயத்தில் இந்தப் பிரச்னையில் கொண்டு வந்துவிட முடியாது. ஆகவேதான் பல தீர்மானங்களைப் போட்டு, கடைசியாக ஒரு சட்டமாகக் கொண்டு வரவேண்டியதாக இருந்தது. அப்படி 1961 ஏப்ரல் 5-ம் தேதி நில உச்சவரம்புச் சட்டத்தை நிறைவேற்றினோம். அதிலே இப்பொழுது என்ன சொல்லுகிறார்கள்? பிரித்து வைத்து விட்டார்கள், பிரித்துக் கொண்டு விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். 'Avoidance of tax is excusable but evasion of tax is not excusable.' ஒரு சட்டத்தை மீறுவது என்றால், வரியே கொடுக்காமல் இருப்பது தேவலை. ஆனால், ஏமாற்றிக் கொண்டு இருப்பது தவறு. இந்துக் குடும்பங்களில், பல்வேறு குடும்பங்களில் தலைமுறை தலைமுறையாக பிரிக்காமலே இருந்திருக்கிறார்கள். ஆனாலும், வயிற்றில் ஒரு பிள்ளை இருந்தாலும், அதற்கும் பங்கு உண்டு என்பது சாஸ்திரம். ஒருவன் மேஜரான பின்பு தந்தையைக் கேட்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையில், பிரித்துக் கொண்டு இருப்பார்கள். அதிலும் ஒரு சிலர் ஏமாற்றியிருக்கலாம். எத்தனையோ பேர்கள் சட்டத்தை மீறுகிறார்கள். சட்டம் இருக்கிறது. கொலைகூடச் செய்கிறார்கள். கொலையையும் செய்துவிட்டு கோர்ட்டிலே தப்பித்துக் கொண்டு விடுகிறார்கள். ஆகவே, இன்னஸெண்ட் பேர்ஸன், தவறு செய்யாதவன், தண்டனை அடைவதும்; தவறு செய்தவன் தப்பித்துக் கொள்வதும் இருக்கிறது.

சட்டம் இருக்கிறது. ஆனால், செய்ததெல்லாம் நியாயம் என்று ஆகிவிடுமா? இப்பொழுது அதெல்லாம் நியாயம் என்று நான் வாதாட வரவில்லை. அதனாலும் எத்தனையோ நன்மைகள் ஏற்பட்

உறுப்பினர்கள் இருந்தார்கள். தஞ்சையிலிருந்து 9 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தார்கள். 50 ரூபாய் தீர்மானம் இங்கிருந்து அங்கே போய்ச் சேருவதற்குள்ளாக, அந்தக் கம்யூனிஸ்ட்டுகள் 'எங்களுக்கு ஓட்டுப் போட்டதனாலேதான், எங்களுடைய கட்சியின் செல்வாக்கினாலேதான் நாங்கள் 50 ரூபாய் வாங்கிக் கொடுத்தோம்' என்று பொதுமக்களிடையே பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். பின்னர் நாங்கள் போய், 'இந்தப் பணம் எந்தக் கட்சியின் சார்பாகவும் வரவில்லை, சர்க்கார் கொடுத்த பணம்' என்று நாங்களும் பிரசாரம் செய்தோம். பொதுமக்கள் 1962-ம் வருஷத்திலே அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலே சரியான பதில் கொடுத்தார்கள். எல்லோரும் தோற்றார்கள். அந்த 9 பேரும் தோற்றார்கள்.

**திரு. என். சங்கரய்யா:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'பொதுமக்கள் சரியான பதில் கொடுத்தார்கள்' என்று சொன்னார்கள். அது சரியல்ல. இவர்கள் கொண்டுவந்த நிலச் சீர்திருத்தச் சட்டம்தான் மோசடியான சட்டம் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** என்ன மோசடி? நீங்கள் இங்கு மட்டுமா இதைச் செய்கிறீர்கள் அகில உலகத்திலேயும் பண்ணுகிறீர்கள். (திரு. என். சங்கரய்யா, மீண்டும் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. என். சங்கரய்யா:** அகில உலகத்திலேயே இதைச் செய்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு அவருக்கு உரிமையில்லை. அவருடைய கட்சியைப்பற்றிச் சொன்னால் அவர் சும்மா இருப்பாரா . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் எழுந்து நிற்கும்போது நீங்கள் பேசிக்கொண்டேயிருந்தால் என்ன ஆவது ? எந்த ரூலின் கீழ் நீங்கள் இப்பொழுது பேசுகிறீர்கள் ?

**திரு. என். சங்கரய்யா.** எதிர்க்கட்சித் தலைவர் உலக கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி அவமரியாதையாகப் பேசலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எந்த ரூலின் கீழ் இப்பொழுது எழுந்து பேசுகிறீர்கள் ? உறுப்பினர்கள் இந்த மன்ற விதிமுறைகளை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். நீங்கள் எழுந்து பாயிண்ட் ஆஃப் எக்ஸ்பிளனேஷன் என்றோ, பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் என்றோ சொல்லியிருந்தால், நான் உங்களுக்கு அனுமதி கொடுத்திருப்பேன். நீங்கள் முதலில் அனுமதி கேட்டு, அவைத் தலைவர் அனுமதி கொடுத்த பிறகுதான் பேச வேண்டும். அவைத் தலைவரின் அனுமதி இல்லாமலேயே, அவைத் தலைவர் அனுமதி தருவதற்கு முன்னாலேயே, நீங்கள் பேசுகிறீர்கள். இந்த விவாதத்தை 12½ மணிக்குள் முடிக்க வேண்டியிருக்கிறது. உங்கள்



கட்சியைப்பற்றிச் சொன்னால், உங்கள் கட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள் பார்த்துக் கொள்வதற்கு. அவர் அவைத் தலைவரின் அனுமதியுடன் சொல்லலாம். ஆகவே, உறுப்பினர்கள் அடிக்கடி குறுக்கீடு செய்யவேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, எந்தக் கட்சியையும் அவமானப்படுத்த வேண்டும் என்பது என் நோக்கமல்ல. உலகத்திலே கம்யூனிஸ்ட்கள்தான் இப்படிப் பிரசாரம் செய்வதில் சிறந்தவர்கள். சிறந்தவர்கள் என்றுதானே சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கிறேன். சரி, இந்த விஷயத்தை இத்துடன் விட்டுவிடுகிறேன். சர்க்கார் தரப்பிலிருந்து நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியானது முன்பு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்ததினாலேதான் பெரிய பெரிய முதலாளிகளுக்கு நிலம் போய்ச் சேருவது தடுக்கப்பட்டிருக்கிறது. 1952-ம் வருஷத்தில் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்திராவிட்டால் இன்றையதினம் பெரிய பெரிய நிலப் பிரபுக்களைத்தான் பார்க்க முடியும்; சாதாரண, நடுத்தர விவசாயிகளைப் பார்த்திருக்க முடியாது. முன்பு கொண்டுவந்த சட்டத்திலே சில தவறுகள் இருந்திருக்கலாம். பொறுக்குக் கமிட்டியிலே நான் அங்கத்தினராக இருந்த நேரத்திலே கரும்புக்கு விதிவிலக்கு அளிக்கக்கூடாது என்று சொன்னேன். மேலும் மேய்ச்சல் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கக் கூடாது என்பதைப்பற்றி வாதாடியிருக்கிறேன். எதெதற்கு விதி விலக்கு இருக்க வேண்டும், எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லும் கடமை சர்க்காருக்கு இருக்கிறது. நில உச்சவரம்பு 30 ஏக்கர், 40 ஏக்கர், 50 ஏக்கர் என்று சொன்ன நேரத்திலே தமிழ்நாட்டிலே 30 ஏக்கர் உச்சவரம்பு என்று சொன்னோம். இப்படிச் செய்வதால், பொருளாதார அடிப்படையில் லாபகரமான முறையில் விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொன்னோம். விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்பதற்காக பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைச் செய்திருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது சரியல்ல. காங்கிரஸ்காரர்களை எல்லோரும் பிற்போக்குவாதிகள் என்று சொல்கிறார்கள். முற்போக்கு, முற்போக்கு என்று சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள், திடீரென்று முற்போக்கு என்று சொன்னால், அப்படிப்பட்ட முற்போக்கு சக்திகளுக்கு நாங்கள் இடைஞ்சலாக இருக்க மாட்டோம். யார் உழைக்கின்றார்களோ அவர்களிடத்திலே நிலம் இருக்கவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எங்கள் கட்சியின் சார்பாக பூரணமாக வரவேற்கிறோம். ஆனால் சர்க்கார் போட்டிருக்கும் வரிகள் விவசாயிகளுக்கு நன்மையைத் தராது. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை 15 ஏக்கர் என்று குறைத்துவிட்டார்கள்.

மேலும், மத்திய சர்க்கார் வெல்த் டாக்ஸ் என்று விவசாயிகள் நிலத்திற்குப் போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். விவசாயிகள் நிலத்திற்கு இந்த வரியை போடமாட்டோம் என்று இந்த அரசு உறுதியான நிலையில் மத்திய அரசுக்குத் தெரிவித்து விட வேண்டும். வெல்த் டாக்ஸ் என்பதை பட்டணத்திலே, பெரிய நகரங்களிலே, பெரிய பங்களாக்களிலே இருக்கும் பெரிய முதலாளிகளுக்குப் போடட்டும். விவசாயிகளுக்குப் போடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கார் இதற்கு வழி செய்யவேண்டும். விவசாய நிலத்திற்குப் போட்டிருக்கும் வெல்த் டாக்ஸை நாங்கள் எதிர்க்கிறோம் என்று இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்னால் விவசாயிகள் இந்த அரசை ஆதரிப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு டிராக்டர்கள் பேரில் வரி, விவசாயச் சாமான்களுக்கு வரி, விவசாயி உபயோகப்படுத்தும் மின்சாரத்திற்கு கட்டண உயர்வு முதலியவை இருக்கின்றன. மின்சாரக் கட்டணம் 8¼ பைசாவாக இருந்ததை 10 பைசாவாக உயர்த்தியிருக்கிறார்கள். இது விவசாயிகளுக்கு மிகப் பளுவான சுமை என்று சொல்ல விரும்புகிறேன். இப்படிக் கட்டணத்தை உயர்த்தும் சர்க்கார் விவசாயிகளுக்கு உண்மையில் நன்மை செய்யும் சர்க்காரா? விவசாயிகளை ஆதரிக்கும் சர்க்காரா? என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்படி உயர்வின் மூலமாகக் கிடைப்பது ஒரு கோடி ரூபாய், ஒன்றே முக்கால் கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கலாம். ஆனால் சென்னை நகரத்திலும், கோயம்புத்தூரிலும் படியரிசித் திட்டத்தின் பெயரால் உண்பவர்களுக்கு 20 கோடி ரூபாய் வரைக்கும் சப்சிடி கொடுத்திருக்கிறது இந்த சர்க்கார். உண்பவர்களுக்கு சப்சிடி கொடுக்கும்போது உணவுப் பொருளை உண்டாக்குபவர்களுக்கு ஏன் சப்சிடி கொடுக்கக்கூடாது? இது எந்த வகையில் நியாயம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே, எவ்வகையில் பார்த்தாலும் மின்சாரக் கட்டண உயர்வு சரியல்ல; அந்தக் கட்டண உயர்வை அமல்படுத்தக்கூடாது என்று ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மில்லுக்குண்டான மின்சாரக் கட்டணத்தை 40 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள்; விவசாயிகளுக்கு அதிகப்படுத்திய மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாநில சர்க்கார் கெட்டிக்காரத்தனமாக சாமர்த்தியமாக ரேஷனை எடுத்து விட்டோம் என்கிற நிலையிலே எடுத்திருக்கிறார்கள். அதிலும் 200 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு ரேஷன் இல்லையென்று சொல்கிறார்கள். மேலும் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டை எடுத்ததினாலே சர்க்காருக்கு லாபம் வருகிறது. ரேஷனை எடுத்ததினாலே லாபம் வருகிறது. இப்படியிருந்தபோதிலும் வரியை அதிகமாகப் போட்டிருக்கிறார்கள்.



வேலைவாய்ப்புகள் பெருக திட்டங்களைப் போடுகிறோம் என்றால் அந்தத் திட்டங்களின் மூலம் மக்கள் நன்மை அடைந்து அவர்கள் சுபீட்சமாக இருக்கிறார்கள் என்றால் வரி வசூல் செய்வது நன்றாக இருக்கும். அப்படிப் பார்த்தால் இன்றையதினம் வரி விதிக்கப்படுகிறது? மத்திய சர்க்காராலும் சரி, மாநில சர்க்காராலும் சரி வரி போடுவதையே பாஷன் ஆகக் கொண்டுவிட்டார்கள். "நாங்கள் புது வரி எங்கே போட்டோம்? நீங்கள் போட்ட வரிகளைத்தானே கொஞ்சம் உயர்த்தினோம்" என்றால் இது சரியான வாதமா?

பஸ்களுக்கு ஒரு சீட்டுக்கு 10 ரூபாய் என்று உயர்த்திவிட்டார்கள். சீட்டுக்கு என்று போட்டிருப்பதால் இதை பஸ் முதலாளிகள் தான் கொடுப்பார்கள், பிரயாணிகளைப் பாதிக்காது என்கிறார்கள். இது சரியான வாதமா? நான் பஸ் முதலாளிகளுக்காக வாதாடுபவன் இல்லை. நான் பஸ் முதலாளியும் இல்லை. இன்றைக்கு நிலைமை என்ன? டயர்கள் விலை எல்லாம் ஏறியிருக்கிறது. எண்ணெய் விலை ஏறியிருக்கிறது. ஸ்பேர் பார்ட்களுக்கு எல்லாம் வரி போடப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி நிலைமையில் சீட்டுக்கு 10 ரூபாய் நீங்கள் உயர்த்தி விட்டீர்கள் என்றால் பஸ் முதலாளிகள் கட்டணத்தை உயர்த்தாமல் என்ன செய்வார்கள்? உயர்த்தக் கூடாது என்றால் அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 3 பைசாவுக்கு மேல் உயர்த்த முடியாது) அதுவேதான் மாக்சிமம் போய்விட்டதே.

சென்னை நகர டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக்கொள்ளுங்கள். நிலைமை என்ன? இப்போது கட் சர்வீஸ் தான். புதிய புதிய நகரங்களில் குடியேறியிருப்பவர்கள் நிலைமை என்ன? நான் ஒரு நண்பர் வீட்டிற்கு சாஸ்திரிநகர் போய் இருந்தேன். திடீரென்று போனால் ஒரு மணிக்குள் பஸ் கிடைக்கும் என்றார்கள். நான் பஸ் ஸ்டாப்புக்கு வந்து மவுண்டுரோடு வந்துசேர 3 மணி ஆயிற்று. இதுதானா நாம் நகரில் இருப்பவர்களுக்கு அனுகூலம் செய்வது? ஒரு பஸ்ஸைப் பிடிக்கவே 3 மணி என்றால் மூன்று நான்கு பஸ்களைப் பிடித்து வருவதற்கு என்ன ஆகும்? இது கட் சர்வீஸ். நகரங்களில் ஓடுகிற பஸ்களுக்கு இந்த புது வரி கிடையாது. மொபசில் பஸ்களுக்குப் போட உத்தேசித்திருக்கிறோம் என்கிறார்கள். இப்போதே பாதிநேரம் பஸ்கள் காலியாகப் போகின்றன.

இன்னும் நிர்வாகத் திறமைபற்றி எடுத்துக் கொள்வோம். சேர்ந்தாற்போல ஒரு அதிகாரி ஒரு இலாக்காவில் ஒரு வருஷத்திற்கு மேல் இருக்கவிடவில்லை. நாம் விவசாயத்தைப் பற்றிப் பேசுகிறோம். உற்பத்தியைப் பற்றிப் பேசுகிறோம். 1966-லே என்று நினைக்கிறேன். ஐ.ஆர். 8 மணிலா ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டில் பரிசோதனையில் இருந்தது. நான் போய் இருந்தேன். 1966 செப்டம்பர். அப்புறம் நடைமுறைக்கு வந்தது. நாங்கள் இருந்தாலும் அதை லட்சக்கணக்கான ஏக்கராவில் பயிரிட்டிருப்போம்.

நீங்கள் பயிரிடுகிறீர்கள். பாராட்டுகிறேன். அந்த இலாக்கா டைரெக்டரை எடுத்துக்கொள்ளுங்கள். மூன்று ஆண்டுக்குள் மூன்று பேர்கள் வந்துவிட்டார்கள். பத்து மாதம், பதினொரு மாதத்திற்கு ஒரு டிரான்ஸ்பர். ஒவ்வொரு நாளும் பேப்பர்களில் அபிஷியல் போஸ்டிங்கை எடுத்துக்கொண்டால் இப்படி அவரை இங்கே மாற்றுவது, இவரை அங்கே மாற்றுவது என்று மாற்றுதல்கள்தான் வந்துகொண்டே இருக்கின்றன. நிர்வாகம் எப்படித் திறமையுடன் செயல்பட முடியும்?

ஒரு அதிகாரியை ஓரிடத்தில் போட்டால் மூன்று ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பது எதற்காக? முதல் வருடம் அந்த இடத்திற்குரிய வேலைகளில் பழகினால் பின்னர் செம்மையாக செயல்பட முடியும். மூன்று ஆண்டுகளுக்குமேல் இருப்பதனால் தவறு ஏற்படக்கூடாது என்று மாற்றல். ஆனால் இப்போது அப்படியா இருக்கிறது? இப்படி மாற்றம் செய்வதற்குக் காரணம் அரசியல் குறுக்கீடு இல்லாது வேறு என்ன?

மத்தியில் ஒரு அமைச்சர் பட்ஜெட்டைப் படிப்பதற்குள் 'எனக்கு ஒன்றும் தெரியாது இந்த வரிகளைப் பற்றி, நான் நேற்று தான் வந்தேன்' என்று படிக்காது விடுகிறார்கள் என்றால் எப்படி இருக்கிறது? அதிகாரிகளை அதுபோல மாற்றிக்கொண்டே இருந்தால் எந்த அதிகாரியிடத்தில் பொறுப்பாக எந்த விஷயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும்? (மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அவர் எந்த நாட்டு அமைச்சர்?) இந்த நாட்டு அமைச்சர்தான். உங்களைப்பற்றிச் சொல்கிறேனே என்று நினைத்தீர்களா? உங்களைப் பற்றிப் பேசத் தனி அத்தியாயம் இருக்கிறது. வருகிறேன்.

நிர்வாகம் எப்படிச் செம்மையாக நடக்கும்? 1905 அரிசி மூட்டைகளைக் காணோம். நாங்கள் கேஸ் பிடித்திருக்கிறோம், வழக்கு இருக்கிறது—இதுவா அதற்குப் பதில்? யார் எடுத்துக்கொண்டு போனார்கள்? அரிசி மூட்டைகள் பிடிபட்டனவா? ஏற்றிக்கொண்டு போன லாரிகளைப் பற்றித் தெரியுமா? ஒன்றும் கிடையாது. இதுபோல எத்தனை மூட்டைகள் போய்க்கொண்டிருக்கின்றனவோ? இது நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டா? சொன்னால் இதுபோல முன்பு நடக்கவில்லையா என்கிறார் அமைச்சர். முன்னால் திருடினான் என்றால் இப்போது திருடத்தான் வேண்டுமா? முன்னால் லஞ்சம் வாங்கினார்கள் என்பதற்காக இப்போது லஞ்சம் வாங்குவதா? இவற்றையெல்லாம் இவ்வளவு அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்வதற்குக் காரணம் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். அப்படியில்லாவிட்டால் நல்லவர்கள் எப்படி நல்லவர்களாக நடந்துகொள்வார்கள்? நல்லவர்களுக்கு என்ன மதிப்பு இருக்கும்?

இன்றைக்கு ரீ-ஆர்கனைசேஷன் என்று சொல்கிறார்கள். அவசியம்தான். அனிமல் ஹஸ்பண்டரி இலாகாவில் ரீ-ஆர்கனைசேஷன் என்றால் அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் எத்தனையோ,



அவர்களுக்கு மாற்று வேலை என்ன என்பதை எல்லாம் முதலிலேயே பரிசீலனை செய்தாகவேண்டும, இல்லையா? இன்றைக்கு மாடுகளுக்கு உதவி செய்யும்படியான நூற்றுக்கணக்கான அசிஸ்டெண்டுகளின் நிலைமை என்ன? என்னிடத்தில் வந்தார்கள். முதல் அமைச்சரிடத்தில் சென்றார்கள். நான் அவர்களுக்கு இண்டர்வ்யூ கொடுக்க இசைந்துள்ளேன் என்று சொல்வானேன். ஏன இண்டர்வியூ நேரத்தில் அவர்களைப் பார்க்கவில்லை?

நேற்று ஸ்டேட் அட்வைசரி போர்டு கூட்டம் மதுரையில் நடப்பதாக இருந்தது. தந்திக்கு மேல் தந்தி—வந்து கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எனக்கு அனுப்பப்பட்டது. நான் டிக்கெட் எல்லாம் ரிசர்வ் செய்துவிட்டேன். கிளம்புகிற நேரத்தில் முந்தா நாள் மாலை 5 மணிக்கு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக தந்தி வருகிறது. நிர்வாகம எப்படி இருக்கிறது? அசெம்பளி கூட்டம் நடந்தது முன்கூட்டி தெரியாதா? அதுவும் நேற்று ஞாயிற்றுக் கிழமைதானே. டைரெக்டர் எங்கே என்றால் எங்கோ காம்பில் இருக்கிறார். வேறு வேலையில் நான் ஈடுபட்டிருந்திருக்கலாம். நேற்று சாயந்திரம் புறப்படுவதற்கு முன்னாலே தந்தி வந்தால் என்ன நிலைமை இதனால் ஏற்பட்டிருக்கிறது என்பதைப பார்க்க வேண்டும். முன்னாலேயே டெலிபோனிலே சொல்லியிருக்கிறார்கள் என்றால் பரவாயில்லை. முன்னாலேயே இதையெல்லாம் சொல்லியிருக்கலாம். அப்படியில்லாமல் இம்மாதிரித் திடீரென்று காரியங்கள் நடைபெறுவதால் திறம்பட நடப்பதற்கு அறிகுறியாக நாம் எடுத்துக் கொள்ளமுடியாது.

வரிகள் போட்டோம், வாங்கினோம். அந்தப் பணம் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கவேண்டும். நாடு சுபீட்சம் அடையவேண்டுமென்றால் கடுமையாக உழைக்கவேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும். பெருகிய உற்பத்தி எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்து கிடைக்கவேண்டும் ஊதாரித்தனமான செலவுகளைக் குறைக்க வேண்டும். சிக்கனமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை வந்தால்தான் பொருளாதார சுபீட்சம் வரமுடியும். எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்ற முறையிலே செய்யக்கூடாது.

சிக்கனத்திற்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். எத்தனையோ சொல்லலாம். மேல் சபை இருக்கிறது. எதற்காக மேல்சபை? இந்தியாவிலே இப்பொழுது எட்டு மாநிலங்களிலே மேல்சபை கிடையாது. மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களிலே கிடையாது. மேல்சபைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இங்கே இருப்பதைப் போன்றுதான் இருக்கிறது. அங்கேயும் பேசுகிறார்கள். அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. சில சமயங்களிலே மந்திரிகள் சௌகரியமாக இங்கு வருவதற்கு வசதியாக இருக்கிறது என்பதால் இருக்கட்டும் என்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. திடீரென்று சொல்லிவிட்டீர்கள், என்ன காரணம் என்று கேட்கலாம். நான் ஒன்று

சொல்ல விரும்புகிறேன். வேண்டுமானால் இந்த சபையில் 10, 12 பேர்களை நியமித்துக்கொள்ளலாம். அறிவாளிகள், அந்தக் கட்சியிலே உள்ள முக்கியமானவர்கள், பொதுத் தேர்தலில் நிற்க சக்தியில்லாதவர்களை இவர்களை நியமித்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசியல் சட்டத்தை அதற்குத் திருத்தவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திருத்தவேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் 10, 12 பேர்களை; அரசியல் தலைவர்கள், நிபுணர்கள்; இன்னும் இவர்களைப் போன்றவர்களை இந்தச் சபையிலே நியமித்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதற்கு அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும். எதிர்க்கட்சித் தலைவருடைய இந்த யோசனையை நான் பாராட்டுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் பாராட்டியதற்கு நன்றி, மேல்சபையை ஒழிக்கவேண்டுமென்று அவர்கள் சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மேல்சபையை நான் ஒழிக்கச் சொல்லியதாகச் சொல்லி அதற்காக நன்றி கூறவேண்டாம், அட்வான்ஸ் நன்றி தேவையில்லை. மேல்சபைக்குப் பதிலாக இங்கேயே 10, 12 பேர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதற்கு இந்த சபை சட்டம் ஆக்கமுடியாது, அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமென்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இங்கே 12 பேர்களை நியமித்துக் கொள்ளலாம். மேல்சபையை ஒழிக்கவேண்டுமென்று இங்கே ஒரு தீர்மானம் போட்டுச் சொல்லிவிட்டால் செலவும் சிக்கனமாக இருக்கும். மேற்கு வங்காளத்திலே அப்படித்தான் செய்தார்கள். இதை ஆலோசனையாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் கூறியதற்கு ஒப்ப மேல்சபைக்குப் பதிலாக இங்கே ஒரு குறிப்பிட்ட தொகை உறுப்பினர்களை நியமித்துக்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நாங்கள் கேட்கிறோம், எதிர்க்கட்சித் தலைவர் அபிப்பிராயப்படியே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்களால் ஆனதை இதற்காகச் செய்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் ஆட்சியிலிருந்த நேரத்தில் இதைச்செய்யாமல் மேல்சபையில் அவர்களுடைய எண்ணிக்கை குறைகிறது என்ற நேரத்திலே அப்படிச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்த நேரத்திலே குறையலாம். ஆனால் எப்பொழுதும் அப்படியே இருக்காது, மீண்டும் அதிகமாகும் என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன் உங்களுக்கும் குறையலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எனக்கு என்னமோ இந்தக் கேஸ் பிழைக்குமென்று இந்த நேரத்திலே தோன்றவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சில டாக்டர்கள் பிழைக்காது என்று சொல்லி பிழைத்த வியாதியஸ்தர்களும் தப்பித்துககொண்டிருக்கிறார்கள். இந்த டாக்டர் அவ்வளவு சரியான டாக்டர் அல்ல.

டிராவலிங் அலவன்ஸ் கொஞ்சமாகவா போகிறது? எவ்வளவு போகிறது? ஒரு அதிகாரி 1,000 ரூபாய் சம்பளம் என்றால் டி.ஏ. 1,500 ரூபாய் வாங்குகிறார், டி.ஏ. பில்லைப் பார்த்தால் தெரியும். சாதாரணமாக அனாவசியமாக சுற்றுப்பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய அனுபவத்தில் இதைச் சொல்கிறேன். இதற்கெல்லாம் ஒரு கமிட்டிபோட்டு எப்படிச் சிக்கனத்தைக் கையாளவேண்டுமென்று பார்க்கலாம். என்.ஜி.ஓ.க்கள் போன்ற சாதாரண ஊழியர்களைச் சொல்லவில்லை. என்ஜினியர், சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர் லெவலில் பார்ப்போமானால் ஒரு பெட்டிஷன் வந்தால் போதும் அதை வைத்துக்கொண்டு 200, 300 டி.ஏ. வாங்குகிறார்கள். பிரயோஜனமில்லாத சுற்றுபயணங்கள் செய்கிறார்கள். முன்னாலே செய்யவில்லையா? என்று கேட்பார்கள். அது தப்புதான். அதற்காக இப்பொழுது அதைச் சொல்லக் கூடாதா? 30 ஐ 15 ஆக்கியிருக்கிறார்கள், அதுபோன்று இந்த 12 அணாவை 6 அணாவாகக் குறைக்கக்கூடாதா? (குறுக்கீடு : என்னை அடித்தீர்கள், என் மைத்துனர்களையும் அடிக்கவேண்டும் என்று சொல்வதைப்போல் இருக்கிறது). சோஷலிசம் எல்லோருக்கும் சோஷலிசம்தான். என்.ஜி.ஓ-க்களுக்குச் சம்பளத்தைக் குறைக்க வேண்டாம். இரண்டாயிரம், மூன்றாயிரம் சம்பளம் வாங்குகிற அதிகாரிகள் இருக்கிறார்கள், அவ்வளவு எதற்கு? இதை 15-ஆகக் குறைத்தீர்களே, அவர்கள் மட்டும் அவ்வளவு வாங்கிக்கொண்டு போகலாமா என்பதைப் பார்க்கவேண்டும். திறம்பட இன்றைக்கு என்.ஜி.ஓ.க்கள் இருக்கிறார்கள். ஒரு என்.ஜி.ஓ.வை சீப் செகரட்டரியாகப் போடுங்கள், ஜோராய் வேலை செய்வார், ஒரு என்.ஜி.ஓ.-வை ரெவின்யூ போர்டு மெம்பராகப் போடுங்கள், சுறுசுறுப்பாக வேலை செய்வார். எவ்வளவோ திறமையானவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். சிக்கனத்தைக் கையாளவேண்டுமென்றால் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தால் தான் அவர்களும் ஒத்துழைப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆடம்பரமாக இருந்தாலும், ஊதாரித்தனமாக இருந்தாலும் படிப்படியாக அது வளர்ந்து கடைசியாக தவறுதலாகப் போய்முடியும்.

விலைவாசி, அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது விலைவாசிப் போராட்டம் நடத்தினார்கள். அவர்களுடைய நல்ல எண்ணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்,? இப்பொழுது என்ன சாக்குச் சொல்லுகிறார்கள், மத்திய சர்க்கார்தான் காரணம் என்கிறார்கள். மறைந்த முதலமைச்சர் அவர்கள் சொன்னது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. விலைவாசியைக் குறைக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மத்திய அரசை கையைக்காட்டுவார்கள் என்று சொன்னார்கள், அதைத்தான் நான் திருப்பிக் கேட்கவேண்டியிருக்கிறது. விலைவாசி இப்பொழுது மிகவும் அதிகமாக ஏறியிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று உதவி சபாநாயகர் அவர்கள் அனுமதியுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்னுடைய சொந்த அனுபவம். இப்பொழுது கொஞ்சநாளாக நான் காய்கறி வாங்குகிறேன். தக்காளிப்பழம் ஒரு கிலோ 12 அணா, அடுத்தநாளே ஒரு கிலோ ஒரு ரூபாய் என்று சொல்கிறார்கள். நேற்றுதானே 12 அணாவுக்கு விற்றது, இன்றைக்கு ஒரு ரூபாய் என்று ஏறியிருக்கிறது, நேற்று வந்த அதே தக்காளிப்பழம்தானே அம்மா என்றுகூட நான் கேட்டேன். 12 அணாவாக இருந்தது 1 ரூபாய், பிறகு ஒண்ணே கால் ரூபாய் என்று ஏறிக்கொண்டே போகிறது. விலைவாசி ஏற்றத்திற்கும் உற்பத்தி செய்கிறவனுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. கொரியாவிலே சண்டை என்றால் கத்திரிக்காய் விலை ஏறிப்போகிறது. நாமும் 8 அணாதானே போகிறது என்று வாங்கிவிடுகிறோம். மக்களும் சேர்ந்து சர்க்காரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். சர்க்கார் மட்டும் முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இடையிலே தரகர்கள் செய்யும்படியான வேலைதான் இது. ஆகவே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பட்ஜெட் போட்டு குடும்பத்தை நடத்தக்கூடிய நிலைமை இப்பொழுது இல்லை. திடீர் திடீரென்று விலை ஏறுகிறது. உற்பத்தி செய்கிறவர்களுக்கு அது கிடைப்பதில்லை. தாறுமாறாக நாளுக்கு நாள் ஏறுகிறது. இதற்காக ஒரு பட்டியல் போடவேண்டுமென்றும் அதை கடைமுன்னாலே வைக்க வேண்டுமென்றும் சொல்லவேண்டும். ஆனால் அப்படிச்செய்யும்பொழுது சாமான் அந்த விலைக்குக் கொடுக்கிறார்களா என்பதையும் பார்க்கவேண்டும். சிவில் சப்ளைஸ் இலாகாவில் வேலையில்லாமல் போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களைப் போட்டு கடைமுன்னால் நிற்கவைத்து நியாயமான, அரசாங்கம் குறித்து இருக்கிற விலைக்குத்தான் சாமான்கள் விற்கவேண்டுமென்று செய்யவேண்டும்.

இப்பொழுது கோஷங்கள் போடுவது அதிகமாகப் போய்விட்டது. எல்லாவற்றையும் கோஷங்கள் போட்டே நடத்திவிடலாம் என்று பார்க்கிறார்கள். அப்படிச் செய்வது மக்களுக்கு, நாட்டுக்கு நல்லதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

 11-30 மு.ப

“வறுமையே வெளியேறு” என்று ஒரு கோஷம். வறுமையே வெளியேறு என்று சொன்னால் வெளியேறிவிடுமா? பதவியின் மேல் ஆசை வைத்துக் கொண்டிருக்கும் நிலையில், பணத்தை வரம்பில்லாமல் சேர்த்துக் கொண்டிருக்கும் நிலையில் வறுமை எப்படி வெளியேறும்? வறுமை வெளியேற வேண்டுமென்றால் தியாக உணர்வு வேண்டும்; நம்முடைய வசதிகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் செய்தால் வறுமை வெளியேற வாய்ப்பு இருக்கும். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ஒரு கோஷத்தைச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன்.

‘மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி’ என்ற கோஷத்தை முதலமைச்சர் அவர்கள் இப்போது கிளப்பி இருக்கிறார்கள். கோஷத்தைக் கிளப்பியதற்கு நான் ஒன்றும் ஆட்சேபம் சொல்லவில்லை. எதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாகாண சுயாட்சி என்பது என்ன? இப்போது மாகாண சுயாட்சி இல்லையா? பூரணமாக மத்திய ஆட்சியில் இருந்து விடுபட வேண்டுமென்று நினைக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பூரணமாக மத்திய ஆட்சியில் இருந்து விடுபட வேண்டுமென்று கோரவில்லை தனி நாடு கோரிக்கையும் இல்லை. மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதுதான் மாநில சுயாட்சியின் தத்துவம். அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களா? இல்லையா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதை எல்லாம் ஏற்றுக்கொள்ளுவதாக இருந்தால் எதிர்க்கட்சியில் ஏன் இருக்க வேண்டும்? ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்பதிலே ஆட்சேபணை இல்லை. நீங்கள் தனி நாடு கோரிக்கையை விட்டு விட்டோம் என்று சொல்லி எங்களை ஏமாற்ற முடியாது. தனி நாடு கோரிக்கையை விட்டு விட்டோம், பாரத நாடு ஒன்று என்று பொதுத் தேர்தலுக்கு முன்னால் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் என்ன சொன்னார்கள்? ‘தனி நாடு கோரிக்கையை விட்டு விட்டோம்; ஆனால் அதற்கான காரணங்களை விட்டுவிடவில்லை’ என்று சொன்னார்கள். கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக உங்கள் உண்மையான உருவம் வெளியாகி வருகிறது. மாநில சுயாட்சி என்பது தனி நாடு கோரிக்கையின் மற்றொரு பிரிவு. (குறுக்கீடு) நிதியமைச்சர் அவர்கள் ‘ரைட்’ என்கிறார். முதலமைச்சர் அவர்கள் இப்போதுதான் இல்லை என்று சொன்னார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நிதியமைச்சர் அவர்கள் ரைட்’ என்று உங்களை ரைட்டுக்குப் போகச் சொல்லுகிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் 'லெஃப்ட்' ல்தான் போய்க் கொண்டிருக்கிறோம். மாகாண சுயாட்சி என்று கேட்பது தனி நாடு கோரிக்கையின் ஒரு அம்சம்தான். முன்பு தனி நாடு வேண்டாம் என்று சொன்னார்கள். இப்போது தனி நாடு வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் எனக்கு மரியாதை உண்டு, அன்பு உண்டு. முதலமைச்சர் அவர்கள் எங்கள் கழகத் தலைவர். அவர்கள் தனி நாடு கோரிக்கையை விட்டு விட்டோம்; தனி நாடு கோரிக்கை கேட்க அவசியமில்லை; மாநில சுயாட்சி என்பது அதிக அதிகாரங்களைப் பெறுவதுதான் என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னதற்குப் பிறகும் இது தனி நாடு பிரிவினைக் கோரிக்கை என்று திருப்பித் திருப்பிப் பேசிக் கொண்டிருப்பது எந்த வகையில் பொருத்தமானது என்பதற்கு தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது என்னுடைய கருத்து. என்னுடைய கருத்தைச் சொல்லக்கூடாதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனி நாடு கோரிக்கையை விட்டுவிட்டோம் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்ட பிறகும், ஊர் உலகத்திற்கு அறிவித்துவிட்ட பிறகும், இப்போதும் முதல்வர் அவர்கள் விளக்கிக் கூறிய பிறகும், 'தனி நாடு கோரிக்கை' என்று நீங்கள் பேசிக் கொண்டிருப்பது எந்த முறையின் கீழ் வரும் என்பதைத் தாங்கள் விளக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் சொல்ல உரிமை இருக்கிறது. எனக்குச் சொல்ல உரிமை இல்லையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஓராண்டுக்கு முன்பு 'இந்தியா பிரியும் என்றால் அது இந்தி வெறியர்களால்தான் ஏற்படும்; இந்தியைத் தென்னகத்திலே திணிக்க வேண்டுமென்று கருதுகிறவர்களால்தான் இந்தியாவில் பிரிவினை ஏற்படும்; தென்னாடு பிரிய நேரிடும்' என்று நாங்கள் சொன்ன நேரத்தில் 'மறைமுகமான திராவிட நாடு பிரிவினை' என்று காங்கிரஸ் கட்சியில் இருந்து பேசப்பட்டது. அண்மையில் காங்கிரஸ் பத்திரிகை ஒன்றில் காமராஜர் அவர்கள் பேசிய பேச்சைப் பார்த்தேன். இந்திரா காந்தியும், ஜகஜீவன்ராமும் மொழிக்கொள்கையில் இந்திக்கு ஆதரவாக இருப்பதால் அந்த நிலையைப் பார்க்கும்போது அவர்கள்தான் தென்னாடு பிரியக் காரணமாக இருந்துவிடுவார்கள் என்று காமராஜர் பேசியிருக்கிறார். நாங்கள் சொன்னது மட்டும் திராவிட நாட்டுக் கோரிக்கை என்றால் இதுவும் திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையின் கீழ் வராதா ?





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதுதான் முதலமைச்சர் அவர்களுடைய கெட்டிக்காரத்தனம். இப்படி காமராஜ் அவர்கள் பேசியது எனக்கும் தெரியும். இந்திய நாட்டில் பிரிவினை ஏற்படப் போகிறது என்றால் அதற்குப் பொறுப்பு திருமதி இந்திரா காந்தியும், திரு. ஜகஜீவன்ராம் அவர்களுமாகத்தான் இருக்க முடியும் என்று கூறிவிட்டு தான் ஒரு போதும் நாட்டுப் பிரிவினையை ஏற்றுக் கொள்ளமாட்டேன்; ஒருமைப்பாட்டுடன் இருக்க, ஒற்றுமையுடன் இருக்க பாடுபடுவேன் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மகனைக் கூப்பிட்டு இப்படியெல்லாம் கெட்ட போக்கில் இருக்காதே என்று சபித்தால் தகப்பனார் உண்மையில் சபிக்கிறார் என்றா அர்த்தம் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதேபோல் நாங்கள் சொல்லும்போது அது தனி நாடு பிரிவினை அல்ல என்று ஏன் நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் அகில இந்தியக் கட்சி அல்லவே. குட்டையில் இருக்கும் தவளைதானே நீங்கள். அகில இந்தியக் கட்சியாக இருந்து பேசியிருந்தால் சரி.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாங்கள் குட்டையில் இருக்கும் தவளைகள். நீங்கள் ஆகாயத்தில் மிதந்த வாணம். அது அணைந்து போய் கீழே கருகி விழுந்துவிட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வானம் விழுந்தால் தவளை என்ன ஆகும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீங்கள் இரண்டு சுழி 'ன' போடுகிறீர்கள். நான் சொன்னது மூன்று சுழி 'ண'. ஆகாயத்தில் உள்ள வாணம் கருகிக் கட்டையாக விழுந்திருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வாணம் கருகி விழுந்தால் தவளை என்ன ஆகும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வாணம் கருகி விழுந்தால் தவளை என்ன ஆகும் என்று கூறுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போது இருக்கும்படியான பிரச்சினை சாதாரணப் பிரச்சினை அல்ல. கோஷத்தைப் போடும் படியான பிரச்சினை மட்டுமல்ல. நான் ஆலோசனைதான் கூற விரும்புகிறேன். இந்தக் கோஷத்தைக் கிளப்பியதற்கான பூரண பொறுப்பையும், பலனையும் தமிழகத்தில் நாங்களும் இருக்கிறோம் என்ற நிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். இது அரசியல் நிர்ணய சபையில் எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டிய ஒன்று. இதற்காக புதிய அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட வேண்டும். அதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

கூட்டாட்சி என்றால் எத்தகைய கூட்டாட்சி என்பதை முதலமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். பாகிஸ்தான், இந்தியா என்று இரண்டாகப் பிரிந்துவிட்டதால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. குரோதங்கள் ஏற்பட்டன. பிறகு பாஷாவாரி மாகாணப் பிரிவினை ஏற்பட்டது. இதனால் படக்கூடிய கஷ்டங்கள் எவ்வளவு? ஆற்றிலே தண்ணீர் போனால் அது எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொந்தம் கொண்டாடும் நிலைக்கு வந்துவிட்டோம். பிரதேச வெறி, மொழி வெறி இரண்டும் சேர்ந்து நாடு எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். காவிரித் திட்டத்தினை எடுத்துக் கொண்டால் என்ன நிலை? நாம் இந்தியாவில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் பலமான சர்க்காராக இருந்தால்தான் நம்முடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். பலவீனமான சர்க்காராக மத்திய சர்க்கார் இருந்தால் எந்த மாநில அரசும் சரியாக நடக்க முடியாது. பலமுள்ள சர்க்காராக மாகாணங்களிடையே பிரச்சினைகள் ஏற்படுகின்ற நேரத்தில் அவற்றை அடக்கி வைக்கும் சர்க்காராக மத்திய சர்க்கார் இருந்தால்தான் சட்டம், அமைதியைப் பாதுகாக்கும் வகையில் எல்லா நிலையிலும் நல்ல நிலைமை நிலவ முடியும். இந்தப் பிரச்சினை சாதாரணப் பிரச்சினை அல்ல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பலமாக இருந்த மத்திய சர்க்காரைப் பலகீனப்படுத்தியது யார்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒரு பிரதம மந்திரி மாறுகிறார், அல்லது ஒரு கட்சி மாறுகிறது என்ற பிரச்சினை அல்ல. கான்ஸ்டிட்யூஷன் இருக்கவேண்டும். கருணாநிதி அவர்களே கூட பிரதம மந்திரியாகப் போய் உட்கார்ந்து கொள்ளலாம். ஆனால் அங்கு சக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். சக்தி இல்லாமல் உட்கார்ந்தால் என்ன பயன்? பிரதம மந்திரியாக ஒருவர் இருக்க வேண்டாமென்று சொல்லவில்லை: அதற்காக சர்வாதிகாரியாக இருக்க முடியுமா? யார் வேண்டுமென்றாலும் வரலாம். முன்பு இங்கே நாங்கள் இருந்தோம். இப்போது நீங்கள் வந்தீர்கள். உங்களுக்குத் தகுதி இல்லையென்று சொல்லிவிட முடியுமா? யார் நடத்தினாலும் பூரண அதிகாரம் இருக்க வேண்டுமென்ற நிலை இருக்க வேண்டும். இப்போது நீங்கள் ஒருகட்சி முதலமைச்சராக இருப்பதால் கௌரவமாக இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

இது கூட்டுக் கட்சியாக இருந்தால் அந்தக் கௌரவம் வந்திருக்க முடியாது. மற்ற மாநிலங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கு கூட்டணிகளினால் ஏதாவது நடந்திருக்கிறதா? அஜய் முகர்ஜி எப்போது ஓடலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார். பீஹாரில் நிலையான சர்க்கார் கிடையாது. ஹரியானாவில் ஆடிக்கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரே கட்சி சர்க்கார்தான் இருக்கவேண்டும், அது நிலையான சர்க்காராக இருக்கவேண்டும், அது நல்ல சர்க்காராக



இருக்கவேண்டும், பலமுள்ள சர்க்காராகவும் இருக்கவேண்டும். இங்கேயே இப்படி என்றால் மத்திய சர்க்கார் எப்படியிருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டுமா? கூட்டாட்சி என்று சொல்லி பலஹீனமான சர்க்கார் இருக்குமானால் சைனாக்காரன், பாகிஸ்தான்காரன் ஏப்பம் போட காத்திருக்கிறான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கூட்டாட்சி என்றால் கூட்டணி ஆட்சி அல்ல என்று திருச்சி மாநாட்டில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எப்பேர்ப்பட்ட ஆட்சி என்பதை விளக்கிவிட்டால் நன்றாகயிருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதன் அடிப்படைத் தத்துவமே, மாநில சுயாட்சி என்று தனியாகச் சொல்கிற நேரத்தில் இது ஏதோ மத்தியில் இருந்து பிரிந்த தனி நாட்டுக் கோரிக்கை என்ற சந்தேகத்தைப் பலருக்கு எழுப்பக் கூடும் என்ற காரணத்தால் மத்தியில் கூட்டாட்சி இருக்கும், மத்தியில் உள்ள கூட்டாட்சியில் அடங்கிய ஒன்றாக அங்கிருந்து அதிக அதிகாரங்களைப் பெறுகிற ஆட்சியாக மாநில ஆட்சி இருக்கவேண்டும் என்ற தத்துவத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எனக்குள்ள சிற்றறிவால் நீங்கள் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதைப் புரிந்து கொள்ள எனக்குச் சக்தியும் இல்லை

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எனது திறமைக்குறைவிற்காக உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்களுக்கு திறமை அதிகமாக இருப்பதால்தான் எதையோ குழப்பிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு திறமை அதிகமாக இருப்பதால்தான் எப்படி எப்படியெல்லாம் குழப்ப முடியுமோ அப்படிக் குழப்பிக்கொண்டிருக்கிறீர்கள். சர்க்கார் மக்களுக்கு நன்மை செய்வதை விட்டு விட்டு திசை திருப்புவதில் நீங்கள் கெட்டிக்காரர்களாக இருக்கிறீர்கள். ஏன் அப்படிக் குழப்புகிறீர்கள். நிர்வாகம் சரியாக இல்லை. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை, படி அரிசித் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. மக்களிடம் போய் ஏதாவது சொல்லவேண்டாமா. அதற்காக நடுவில் இடுகிற ஒரு கரடி என்று சொல்லக்கூடாது. நடுவில் இடும் ஒரு கோஷம் இது. நம்நாட்டில் கோஷங்களுக்குப் பஞ்சமில்லை, எல்லோரும் கோஷம் போடுகிறார்கள். ஒவ்வொருவரும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் சீக்கிரத்தில் அவர்களது திட்டம் என்னவென்று சொன்னால், இதுதான் எங்கள் திட்டம் என்று தெளிவாகச் சொன்னால் மக்களுக்கும் நன்றாயிருக்கும், உங்கள் கட்சிக்கும் நன்றாயிருக்கும், எங்களுக்கும் நன்றாயிருக்கும்.

பேசிவிட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இனிமேல் கலைஞர் பாட்டப்படி சொல்லிக்கொள்கிறேன். சட்டசபைக் கூட்டத்தில் இதை நான் சொல்லியிருக்கிறேன் . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எனக்கு இந்தச் சந்தேகம் வரக் காரணம், நீங்கள் அந்த அறிக்கையை வடுத்தபோது மாலை யில் இன்னொரு அறிக்கையைக் கும்பகோணம் உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் விடுத்திருந்தார்கள். நான் இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தை என் சொந்தப் பொறுப்பில் வரவேற்கிறேன் என்று. ஆக இவர் இதை சொந்தப் பொறுப்பில் வரவேற்கிறேன் என்பதில் இருந்து கருத்திருமன் அதை எதிர்க்கிறரோ என்று எண்ணிக்கொண்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தனிப்பட்ட முறையில் நானும் அல்லது என் கட்சியும் இதை எதிர்த்தது கிடையாது. இதை வைத்துக்கொண்டு கம்யூனிஸ்ட்காரர்கள் முட்டுக்கட்டை போட நினைக்கிருர்கள். நான் ஒன்று சொல்கிறேன். உங்களையும் எங்களை யும் சண்டை பிடிக்க விட்டுவிட்டு தாங்கள்தான் முற்போக்குள்ள வர்கள் என்று மக்களை ஏமாற்றுவது அவர்களது கொள்கை. ஆகவே தயவுசெய்து சர்க்கார் இதில் ஏமாந்துவிடக்கூடாது. எந்த நல்ல காரியத்தைக் கொண்டு வந்தாலும் அது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருந்தால் அதை நாங்கள் பரிபூர்ணமாக ஆத ரிப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதா மீது சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவாதத்தின்போது சுதந்திராக் கட்சித் தலைவர் ஹாண்டே அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. சங்கரய்யா அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கு கருத்துக்கள் அறிவித்தார்கள். ஹாண்டே அவர்கள் நகர டிரான்ஸ்போர்ட்பற்றி குறிப்பிட்டார்கள். பஸ் போக்குவரத்து பற்றிய மானியத்தின்மீது நாம் அதுபற்றி விவா திக்க இருக்கிறோம். அவர்கள் கூறிய கருத்துக்களின் உணர்வுகளை நல்லவகையில் இந்த அரசாங்கம் கவனிக்கும் என்பதில் சிறிது கூட சந்தேகமில்லை. பெரியதொரு நிர்வாகத்தை நடத்துகிறோம். எஸன்ஷியல் சர்வீஸை, மக்களுக்கு மிக முக்கியமானதொரு தேவையை செய்து கொடுக்க அரசாங்கம் பொறுப்பேற்றிருக்கிறது. நான்கு பஸ்காரர்களைக் கூப்பிட்டு நீங்களே நடத்திக் கொள்ளுங்கள் என்று அரசாங்கம் வேண்டுமானுல் அந்தப் பொறுப்பிலிருந்து தட்டிக்கழித்துவிட முடியும். ஆனுல் இந்த மாநிலத்தினுடைய பெரிய தலைநகரத்தினுடைய போக்குவரத்துப் பணிகளைச் செய்யும் காரியத்தை முன்னலேயிருந்த அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. இந்த அரசாங்கத்திற்கும், கொள்கை வழியிலே எல்லா பஸ் ரூட்டு களையும், வேறு காரியங்களிலும் தேசிய மயமாக்க வேண்டுமென்று



அழுத்தந்திருத்தமான கொள்கை உண்டு. அதை அமல்படுத்து வதிலே காலதாமதம், இக்கட்டான நிலைமைகள் ஏற்படலாமே தவிர அந்தக் கொள்கையில் எந்தவிதமான மாற்ற மும் இல்லை. நகரத்திலே எத்தனையோ விதமான பிரச்னைகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. எவ்வளவு செய்தாலும் புதுப்புதுப் பிரச்னைகள் முளைக்கின்றன. பெருமதிப்புக்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தக் காரியத்தை, நகரப் போக்குவரத்துப் பிரச்னைகளைப் பொதுமக்களின் நன்மைக்காகத் தந்தாக வேண்டும், அவைகள் முழுமையான பலனளிக்க வேண்டுமென்று சொல்லி யிருப்பார்களேயானுல் அது வரவேற்கத்தக்கது. அதுபோன்ற ஆக்கபூர்வமான காரியங்களை அமல்நடத்தத் தயாராகயிருக்கி ரேம். இருக்கும் கோளாறுகள், பலகீனங்கள் இருந்தால் அவை களை அரசு பரிசீலிக்கும் அதைவிட்டு, பொதுவாக அரசாங்கம் நடத்துவதே தப்பு, தனியார் துறையிலே இருந்தால் ஒழுங்காக நடைபெறும் என்று குறிப்பிடுவார்களேயானுல் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. பிரம்மாண்டமான, உலகத்திலே இன்றைய போக்குவரத்து, டிரான்ஸ்போர்ட்டு என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்குமேயானுல், அதைக் காசிராமன் அவர்கள் சொல்லவேண்டும். நல்ல அளவிலே, மிகப்பெரிய அள விலே இத்தனை நகர மக்களுக்கும் நாமே செய்யும் எஸன்ஷியல் சர்வீஸ் என்ற காரியத்திலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. என்னென்ன செய்ய வேண்டுமென்ற விவரங்களைப்பற்றிப் போக்கு வரத்துத்துறை மானியத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் தக்க விளக்கங்களை அளிப்பார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களது உணர்வுகளைப் பாராட்டுகின்றேன். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு இருப்பதைப்போன்று, நகர மக்கள் அன்றாட அலுவல்களை, பல்வேறு பணிகளைச் செய்ய, சௌகரியங் கள் செய்ய மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ளும் என்று சொல்லி, அந்த நிலைமைகளெல்லாம் திறமையாக அமைக்கப்படும் என்று மட்டும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. சங்கரய்யர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரவர்களும் நிலச்சீர்திருத்தம் பற்றி எடுத்துச் சொன்னர்கள். நிலச்சீர்திருத்தம் பற்றி பல்வேறு கருத்துக்கள் இந்த மாமன்றத்திலே, வரவு-செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பேசப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் சார்பிலே நாங்கள் எந்தக் கருத் தையும் சொல்லாமல் இருப்பதற்குக் காரணம், இந்த மாமன்றத்தின் அபிப்பிராயங்களை நல்லமுறையில் தெரிந்து கொள்ள ஆவலாக இருப்பதால்தான், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் பதில் சொல்லவில்லை.

திரு. சங்கரய்யர் அவர்கள் அச்சத்தைத் தெரிவித்தார்கள். நிலக்கிழார்கள், ஏராளமாக நிலம் வைத்திருப்பவர்கள், சட்டத்தி லேயுள்ள சந்துபொந்துகளைக் கண்டுபிடித்து, ஏராளமாகத்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது அமைக்கப்பட்டிருக்கிற மூவர் கொண்ட குழு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் கேள்விகளை அனுப்பியிருக்கிறது. அனைவருக்கும் அனுப்பியிருக்கிறது. அதற்கான விடைகள் எல்லாம் விரைவில் கிடைத்து அக்குழுவினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன் இதுதான் எங்களுடைய திட்டம் என்று நிச்சயமாக அறிவிக்கப்படும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எவ்வளவு சீக்கிரத்தில் அது அறிவிக்கப்படுமோ மக்கள் வைக்கப்படுகிற கொள்கையை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால்—அது அவர்களுக்கு நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த நிதி ஒதுக்கலில் போடப்படும் திட்டங்கள் எவ்வளவுதூரத்திற்கு மக்களுக்கு நன்மைகளை செய்ய முடியுமோ அந்தளவிற்கு அத்திட்டங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஒரு க்ளாரிஃபிக்கேஷன். நம் பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசக்கூடிய நேரத்தில் இந்த 15 ஏக்கர் மாற்றியிருப்பதை எங்கள் கட்சி சார்பில் வரவேற்கிறேன் என்று சொன்னார்கள். இதே எதிர்கட்சித் தலைவர் அவர்கள் 26-ம் தேதி அன்று இந்த பட்ஜெட் சப்மிட் செய்த தேதியில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் இது விவசாயிகளைப் பாதிக்கும், இது விவசாயத்தையே நாசமாக்கும் என்று கூறினார்கள். ஆகவே எதிர்கட்சித் தலைவருடைய கருத்தா அல்லது கருத்திருமனுடைய கருத்தா அன்று பத்திரிகை நிருபர்களிடம் கூறியது? இன்று கூறிய கருத்து அவருடைய சொந்தக் கருத்தா அல்லது அவருடைய கட்சிக் கருத்தா? அப்படியானால், அந்தக் கட்சிக் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? அல்லது கட்சியின் கருத்தை மீறி 26-ம் தேதி பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்களா என்பதற்கு விளக்கம் தேவை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கம்யூனிஸ்ட் தந்திரங்களில் இது ஒரு தந்திரம். நான் என்ன சொன்னேன்? நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்ததை நான் ஆதரிக்கிறேன். I welcome the land reforms என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிச் சொல்லியதை ஏன் நிருபர்கள் போடவில்லை என்று புரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: நானும் சொல்லியிருக்கிறேன், அவர்களும் போட்டிருக்கிறார்கள். திடீரென்று இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை, இந்த நிலச்சீர்திருத்தத்தை வரவேற்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அர்பன் ப்ராப்பர்ட்டிக்கு, பட்டணத்திலுள்ள வசதி படைத்தவர்களுக்கு எல்லாம் ஸீலிங் கொண்டு வராமல் ஏன் விவசாயிகளுக்கு மட்டும் திடீரென்று கொண்டுவந்



திருக்கிறார்கள் என்று கேட்டேன். லான்ட் ரிபார்மை எதிர்த்தவன் அல்ல நான். என் கட்சியின் கருத்தும், என் கருத்தும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கருத்தும் அதுதான்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகச் சொல்லியிருக்கலாம். எப்படிச் சொல்லிவிட்டார் என்றால், "பட்டணத்தில உள்ளவர்களுக்கெல்லாம் ஸீலிங் கொண்டுவராமல் இதை ஏன் கொண்டு வந்தார்கள்" என்றால், பார்ப்பவர்களுக்கு எதிர்ப்பதுபோல்தான் தோன்றும். எப்படிச் சொல்லியிருக்கவேண்டுமென்றால், நான் இந்த ஸீலிங்கை வரவேற்கிறேன். ஆனால் பட்டணத்தில் உள்ளவர்களுக்கும் ஸீலிங் கொண்டுவரவேண்டும் என்று சொல்லியிருந்தால் அதையும் வரவேற்கிறார் இதையும் எதிர்பார்க்கிறார் என்று நிருபர்களும் புரிந்து கொண்டிருப்பார்கள், மக்களுக்கும் விளக்கம் கிடைத்திருக்கும். ஆகவே, இனிமேலாவது அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் அறிக்கைகள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: முதல் அமைச்சர் அவர்கள் எனக்கு புத்திமதி சொல்வதுமாதிரியும் அதை நான் ஏற்றுக்கொள்கிற மாதிரியும் புத்திமதி கூறினார்கள். நானும் சொல்லலாம், மாநில சுயாட்சி, மத்திய கூட்டாட்சி என்று அவர்கள் ஆலோசனை செய்து சொல்லியிருக்கவேண்டும் என்று. இவர்களாகத் தானே அதைச் சொன்னார்கள். அது அவர்களுடைய ரீ-ஆக்ஷன் என்று சொன்னால் தான் என் ரீஆக்ஷனைச் சொல்கிறேன். பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் போட்டு விட்டார்கள், கருத்திருமன் எதிர்ப்பு என்று போட்டுவிட்டார்கள். சதக் சதக் என்று வெட்டினான் என்று போட்டுவிட்டு கீழே பார்த்தால் ஒன்றும் இருக்காது. அது உங்கள் பாஷை. சில பத்திரிகைகளில் என்னவெல்லாமோ இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று நல்லதற்காகத்தான் சொன்னேன். பட்டணத்தில் உள்ளவர்களுக்கு ஸீலிங் கொண்டுவராமல் விவசாயிகளின் மீது ஏன் கொண்டுவரவேண்டும் என்று சொன்னால் பத்திரிகை நிருபர்கள் இயல்பாகவே கருதிவிடுகிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை எதிர்க்கிறார் என்று. ஆகவே சிலர் எதிர்ப்பு என்று போட்டுவிட்டார்கள். அவர்கள் அதைப் பிரித்துச் சொல்லியிருக்க வேண்டும். நான் இந்த ஸீலிங்கை வரவேற்கிறேன். ஆனால் பட்டணத்தில் உள்ளவர்களுக்கும் ஸீலிங் கொண்டு வரவேண்டும், இதை அரசு கொண்டு வருமா என்று சொல்லியிருந்தால் அதைப் பிரித்துப் போட்டிருப்பார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: நானும் கலைஞராக இருந்தால் தம்பியை ஒட்டியிருப்பேன். நான் ஒரு சாதாரண நாட்டு விவசாயி. கிராமத்தில் இருக்கின்றவன். அந்த பாஷையில் நான்

13 பைசாவாக இருக்கவேண்டும் என்பது. உலக பாங்கு ஸ்தாபனம் கடன் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கூட இவ்வளவு குறைவான கட்டணத்திற்குக் கொடுக்கிறீர்களே, கட்டுபடியாகக்கூடிய கட்டணமாக இருக்கவேண்டாமா என்று வரவு செலவு கணக்குப் பார்க்கிற நேரத்தில் நம்மைக் கண்டிக்கிறார்கள், நாம் அப்பொழுது தலை குனியவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல விவசாயத்திற்காக இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் பம்பு செட்டு வைத்திருப்பவர்களுக்கு முன்பு ரூ. 2,500 இருந்தது, இப்பொழுது

free service connection இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

Waiver of annual minimum during period of drought

வறட்சி நேரங்களில் ஒரு குறைந்தபட்ச கட்டணம் கட்டவேண்டியிருந்தது, அதுவும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

Application of agricultural tariff for tariffs like sugarcane crushing

இது போன்றவைகளுக்கெல்லாம் இதே கட்டணத்தில் கொடுக்கப்பட்டுவருகிறது. அதுமட்டுமல்ல, தண்ணீர் குறைந்து மின்சார வெட்டு ஏற்படுகிற நேரத்தில் எல்லாம் கூட

non-application

power cut during periods of low water level in hydel reservoirs.

இப்படிப்பட்ட அனுகூலங்களையெல்லாம் விவசாயிகளுக்கு தந்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல. இன்னொரு கருத்தையும் நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏதோ விவசாயிகளுக்கு பாதகம் செய்துவிட்டதாக சொல்லப்படும் ஒரு தவறான எண்ணத்தைப் போக்குவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** விவசாயிகளுக்கு ஏற்கனவே நாம் போட்டிருக்கிற வரி உயர்வினால், அதனுடைய விளைவாக, உபரியாக நம்முடைய ராஜ்யத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? அதையும் சொல்லவேண்டும் அந்தத் தொகைக்குக் கணக்கையும் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த விவரம் இப்பொழுது இல்லை . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு நயா பைசாவுக்கு ஒரு கோடி ரூபாய் வருமென்றால், 1¾ பைசாவுக்கு 1¾ கோடி ரூபாய் கிடைக்கும் அரசாங்கத்திற்கு என்று சொல்லப்படுகிறது. நம் மாகாணத்தில் படி அரிசித் திட்டம் போட்டு, அதற்கு ரூ. 20 கோடி பக்கம் செலவழித்தீர்களே, அதே போல ஏழை விவசாயிகளுக்கு ரூ. 1½ கோடி செலவழிக்கக்கூடாதா என்பது தான் கேள்வி.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏழை விவசாயிகளைப் பொறுத்தவரையில் அதே மாதிரியாக அவர்கள் கணக்குப்படியே சொல்கிறேன். என்னுடைய நிதி இலாகா கணக்குப்படி அல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பைசாவுக்கு ஒரு



கோடி என்றார்கள். அந்தக் கணக்குப்படி பார்த்தால் ஏழை விவசாயிகளுக்காக ரூ. 6 கோடி அரசாங்கம் தருகிறது. விவசாயிகளுக்கு நான் முன்பு சொன்னது போல் 16 பைசா சார்ஜ் பண்ண வேண்டியதற்கு 10 பைசாவுக்கு கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ரூ. 6 கோடி சப்ஸிடி கொடுக்கிறோம். இன்றைக்குக் கணக்கில் எடுத்துக்கொண்டால் 8¼ பைசாவுக்குக் கொடுத்துவந்த போது 8 கோடி ரூபாய் சப்ஸிடி கொடுத்திருக்கிறோம், தமிழ் நாட்டு விவசாய மக்களுக்கு, என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இது சம்பந்தமாக இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். பொதுவாக தவறான அபிப்பிராயம் ஒன்று நிலவிவருகிறது. தொழில் துறைக்கு குறைந்த கட்டணத்தில் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். இந்த மன்றத்தில் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்களும் அதைப்பற்றிப் பேசினார்கள். அரசியலுக்கு வேண்டுமானால், அப்படிச் சொல்வது சுலபமாக இருக்கலாம். தொழில் துறைக்கு மின்சாரம் ரொம்பக் குறைவான கட்டணத்தில் கொடுக்கிறார்கள், விவசாயத் துறைக்கு அதிகமாக கட்டணம் வசூலிக்கிறார்கள் என்று சொல்வது ரொம்பத் தப்பானது, உண்மைக்கு விரோதமானது. நியாயமான நிலைமை என்னவென்றால், தொழில் துறைக்குத் தான் கட்டணம் அதிகமாக இருக்கிறது. ஒன்றிரண்டு தொழில்களுக்கு, அலுமினியம் போன்ற தொழில்களுக்கு வேண்டுமானால் இம்மாதிரி சலுகைகள் இருக்கலாம். அவைகளை விட்டுவிட்டு, தமிழ் நாட்டில் இருக்கிற வேறுமாதிரியான தொழில்களுக்கெல்லாம் நாம் வாங்குகிற மின்சாரக் கட்டணத்தைப் பார்க்கிறபொழுது, இன்றைக்கு அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது. தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களுக்கு விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டார்கள் குறைந்த விலைக்கு, அந்தக் கட்டணத்தை நம்முடைய தலையிலே கட்டுகிறார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. நிலைமையை நான் மிகத் தெளிவாகச் சொல்கிறேன். இந்த மாநிலத்தில் விதிக்கப்படுகிற கட்டணம் அண்டை மாநிலங்களில், ஆந்திரா, மைசூர், கேரளா ஆகிய மாநிலங்களில் விதிக்கப்படும் கட்டணத்தைவிட மிக அதிகமானது. தொழில் மானியத்தில் பேசுகின்ற நேரத்தில், தொழில் அபிவிருத்தி எங்கே என்று கேட்கிறீர்கள். எல்லோரும் ஓடுகிறார்கள், மைசூருக்கு ஓடுகிறார்கள், கேரளாவுக்கும், சரியான நிலைமை ஏற்பட்டால் பரவாயில்லை என்று அங்கும் போகிறார்கள் என்றெல்லாம் பேசுகிறீர்கள். அதற்கு நான் ஒரு பதிலைச் சொல்ல முடியும். இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. நாம் கொடுக்கும் கட்டணங்கள் 'Industrial class of rate' ஆகக் கொடுக்கப்படுகிறது. அதிகமாக இருக்கிறது. இன்னொரு காரணம், அக்ரிகல்சருக்காகக் கொடுக்கப்படுவது, சாதாரண வோல்டேஜ், 230, 440 என்ற வோல்டேஜ், லோ டென்ஷனில் ஓடுகிறது. அந்த வகையில் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால்,

தொழிற்சாலைகளுக்கு ஹை டென்ஷனில் கொடுக்கப்படுகிறது. ஹை டென்ஷனில் தொழிற்சாலைக்குக் கொடுக்கும்போது, 68-ம் வருஷக் கணக்குப்படி சொல்லுகிறேன், 6.2 பைசா பர் யூனிட் In respect of High Tension while the cost of supply in respect of Low Tension is 16 Paise per unit. விவசாயிகளுககுக் கொடுக்கும் போது கரண்டின் விலை 16 பைசா. தொழிற்சாலைக்குக் கொடுக்கும் போது அவர்கள் ஹை டென்ஷன் உபயோகிக்கும் காரணத்தால், கிட்டத்தட்ட 6 பைசாவிற்குக் கொடுக்கப்படுகிறது.

இந்த மாநிலத்தில் இருக்கிற industrial rates பற்றி ஒரு கணக்குச் சொல்லுகிறேன். தமிழ் நாட்டில் தெர்மல் பவர் 100 கிலோவாட் என்றால், 16.77 பைசா; அதே மைசூரில் 8.11, கேரளத்தில் 11.5, ஆந்திரத்தில் 14.01—500 கிலோ வாட்டுக்கு, நம்முடைய ஊரில் 16.33, மைசூரில் 8.88, கேரளத்தில் 10.99, ஆந்திராவில் 13.62. 1,000 கிலோவாட்டுக்கு, தமிழ்நாட்டில் 15.82 பைசா, மைசூரில் 7.89, கேரளத்தில் 10.09, ஆந்திரத்தில் 13.19; 5,000 கிலோவாட்டுக்கு, இங்கே 14.55, மைசூரில் 7 பைசா, கேரளத்தில் 8.5, ஆந்திரத்தில் 11.11. நம்மூரில் 14 பைசாவாக இருக்கும் கட்டணம், மைசூரில் 7 பைசாவாகவும், கேரளத்தில் 8 பைசாவாகவும், ஆந்திரத்தில் 11 பைசாவாகவும் இருக்கிறது. இதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் பேசுகிறார்கள், அலுமினியம் தொழிற்சாலைக்கு, மற்ற தொழிற்சாலைக்கு இரண்டு பைசா, மூன்று பைசா என்றுதானே இருக்கிறது என்று. அதைப் பற்றி இங்கே விவாதிப்பது, இதில் இணைப்பது சரியில்லை. அலுமினியம் தொழில் ஒரு அடிப்படையான தொழில். கம்யூனிஸ்ட் நண்பர்களுக்குத் தெரிந்திருக்கும், ரஷ்ய நாட்டில் நீபர் நதிப் பக்கத்தில்—அது அவர்களுடைய பிரம்மாண்டமான சாதனை—நீபர் நதிக்கரையில் பெரும் அலுமினியம் தொழிற்சாலையை சோவியத் ரஷ்யா நிறுவியிருக்கிறார்கள். அது இன்றைக்கும் போற்றப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை மின்சாரத்தை ஒரு ரா மெடிரியலாகக் கொண்டது. எப்படி துணிக்கு நூல் மூலப் பொருளோ, அதே போலத்தான் இதிலும். ஒரு டன் அலுமினியம் செய்ய ஏறக்குறைய 20,000 யூனிட் மின்சாரம் வேண்டியிருக்கிறது. ஒரு பைசா ஏற்றினாலும் 170 முதல் 200 வரை அலுமினியத்தின் விலை அதிகமாகப் போகும் வாய்ப்பு இருக்கிறது. அதோடு கூட இப்படிப்பட்ட ஒரு தொழிலின் மூலமாக 300, 400 என்ஜினியர்கள், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இவர்களுக்கு வேலை வாய்ப்பும், நமக்கு அலுமினியம் கிடைக்கும் தன்மையும், மாநிலத்திற்கு ஒரு தொழிற்சாலை கிடைக்கும் நிலையும், இவைகளையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் இந்த அலுமினியம் தொழிற்சாலை நடக்கிறது.

இன்னொன்றையும் பார்க்க வேண்டும். இந்தச் சலுகையை நாம் செய்யாவிட்டால், அதே சலுகையை பக்கத்து பக்கத்து மாநிலங்களான மைசூர் மாநிலம், கேரள மாநிலம் செய்ய இருக்கின்றன.



அங்கே போவதற்கான வாய்ப்பும் இந்த தொழிலுக்கு இருக்கிறது. அப்பொழுது என்ன கேட்பார்கள் ? இங்கே பெரிய பெரிய தொழிற்சாலைகள் வருவதற்கு உற்சாகம், இன்செண்டிவ் கொடுக்கவில்லையே என்பார்கள். அது மட்டுமல்ல . . . .

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, அலுமினியம் பாக்டரிக்கு குறைந்தவிலையில் மின்சாரம் கொடுப்பதைப் பற்றி மட்டுமல்ல, அதைச் சர்க்காரே எடுக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய அடிப்படையான கருத்து. அதற்கு அமைச்சர் என்ன கருத்துச் சொல்லுகிறார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது எங்கேயும் இல்லை. நாமும் அதில் பங்குதாரர்களாக, 1.25 கோடி ரூபாய்க்குமேல் போட்டிருக்கிறோம். அதன் நிர்வாகத்திலும், அந்த போர்டிலும் நம் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஏதோ அது முதலாளிகளுக்குச் சொந்தம், உடைமை என்பது ஒன்றும் சரியானது அல்ல. அதோடு மாண்புமிகு உறுப்பினர் சொன்னது, பெரிய பெரிய பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள் இவற்றையெல்லாம் சர்க்கார் எடுக்கவேண்டும் என்று. திரு. ஜோதி பாஸு அவர்கள், திரு. இ.எம்.எஸ். அவர்களுக்கு வாய்ப்பு இல்லை, அவர்களே செய்ய முடியவில்லை. காலம் வரும்போது, கண்டிப்பாக இந்த சர்க்கார் அவற்றை எடுக்கும். ஆனால் இப்பொழுது இருக்கிற பிரச்சினை அதுவல்ல. இன்றைக்கு இருக்கும் பிரச்சினை தொழிலை எடுப்பதில்லை. அதுவும் அரசாங்கத்தின் பணத்தைக் கொடுத்து ஆரம்பித்திருக்கிற தொழிற்சாலைதான் . . .

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, வங்கத்திலும், கேரளத்திலும் இன்று உள்ள ஆட்சி தனிப்பட்ட கட்சியின் ஆட்சியல்ல. பல்வேறு கட்சிகளுடைய கூட்டு, பல்வேறு கருத்து மோதல்கள் இருக்கின்றன. இதற்கிடையில் அவர்களும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். ஆகவே, நமது அரசு உடனடியாக அதை எடுக்கவேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுதான் சொன்னேன்; படிப்படியாக, நேரத்திற்குத்தக்க வகையில் செய்யப்படும். இந்த ஆட்சிக்கு அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் சொல்லுகிறேன். அலுமினியம் தொழிற்சாலையை தனியார் துறை என்று சொல்வதைக் காட்டிலும், அதை ஒரு 'ஜாயிண்ட் செக்டார்' என்று சொல்ல வேண்டும். வெளி நாட்டாரும், நாமும் பங்கு போட்டிருக்கிறோம். அவர்களுக்கும் பங்கு உண்டு. அதன் நஷ்டத்தில் நமக்கும் பங்கு உண்டு. இதை நான் சமாதானத்திற்காகச் சொல்லவில்லை. இந்த மன்றம் விளக்கம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேன். அவர்கள் ஹை டென்ஷன் மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள் என்று சொன்னேன், ஹை டென்ஷன் என்றால்,

ஆனால் நாமெல்லாம் ஒருசேரப்பார்க்கும் நேரத்தில், கட்டண உயர்வு பற்றிய விளக்கத்திற்கு, இந்தப் பதில் உரைக்கும் சந்தர்ப்பத்தை எடுத்துக்கொண்டு, சில விவரங்களை மாமன்றத்திற்கும், மாமன்றத்தின் மூலம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும் சொல்ல வேண்டியது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகிறேன். ரொம்ப சுலபம். அரசியலிலே அதிருப்தி என்றால் யாரை வேண்டுமானாலும் தூண்டி விடுவது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தூண்டி விடுவது என்று சொன்னால், விவசாயி என்ற முறையில் சொல்லக்கூடாதா? தூண்டிவிடுவது, தூண்டிவிடுவது என்றால் என்ன அர்த்தம்? நான் அவர்களின் நேரிலே சொல்ல வேண்டும். இத்தனை நாள் நான் வெளியில் சொல்லவில்லை, இப்பொழுதுதான் இந்தச் சட்டசபையில் அதிகம் என்று சொன்னேனே தவிர, வேறு எங்கும் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த உயர்வானது ஏன்
ந. ப. 12-00 வந்தது, என்ன காரணம்? இதிலே ஒன்றும் பெரிய சங்கடம் இல்லை என்பதைத் தெளிவாக்கச் சொன்னேனே தவிர யார்மீதும் குற்றம் சாட்ட இதைப் புகுத்த வேண்டுமென்பது அரசாங்கத்தின் நிலைமை அல்ல. இப்பொழுது 8½ பைசா என்பது 10 பைசாவாக ஆக்கப்பட்டிருக்கிறது. இந்திய உப கண்டத்தில் காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலம் இருக்கிறது, கம்யூனிஸ்டு ஆளுகின்ற மாநிலம் இருக்கிறது. இன்னும் யார் யாரோ ஆளுகின்ற மாநிலங்கள் இருக்கின்றன. கேரள மாநிலம், மைசூர் மாநிலம், பஞ்சாப் மாநிலம் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் இம்மாதிரியான மின்சாரக் கட்டணம் அதிகமாகத்தான் இருக்கிறது. நான் இவைகளையெல்லாம் ஒரு வாதத்திற்குச் சொல்லவில்லை. நாம் எவ்வளவோ காலதாமதமாகத்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம். விவசாய மக்களிடையே உண்மையான நிலவரத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். காலதாமதப்படுத்தித்தான் இங்கு கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். திரு. சுப்பிரமணியம் அவர்களோடும் நான் பேசியிருக்கிறேன். உங்கள் வெங்கட்டராமன் அவர்களோடும் பேசியிருக்கிறேன். 'உங்கள்' என்றால் கோபித்துக் கொள்வார்களோ என்னவோ தெரியவில்லை (குறுக்கீடு). இது பல காலமாக விவாதிக்கப்பட்டு வந்த ஒரு கருத்துத்தான். நான் திரும்பவும் சொல்கிறேன். இந்தியப் பேரரசு 12 பைசா வரையிலே கூட விதிக்கப்படவேண்டும், அப்பொழுது தான் கட்டுபிடியாக்கக்கூடிய கட்டணமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறது. இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் விவசாயப் புரட்சி செய்கின்றார்கள். இன்னும் ஏதேதோ காரியங்களைச் செய்திருக்கிறார்கள். மைசூர், கேரளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் கட்டணம் அதிகம் தான். அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஹைடல் பவருக்கு, அதாவது நீர் வழியாக மின்விசை உற்பத்தி செய்யப்படும் அந்தக் காரி



யங்களுக்கு அங்கே வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. கேரளத்திலும் சரி, மைசூர் மாநிலத்திலும் சரி, அதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் கேரளத்தில் வயல் வழிகள் ரொம்பக் குறைவு. விவசாயிகள் எங்கே இருக்கிறார்கள்? வெளி ஊர்களிலிருந்து இன்னும் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டத்தில் தான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 10 பைசா கட்டணம். ஆந்திராவில் 12 பைசா கட்டணம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மைசூரில் எவ்வளவு, கேரளாவில் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் சொல்ல வருகிறேன். மைசூரில் 10 பைசா, வரியையும் சேர்த்தால் 11½ பைசா. கேரளத்தில் 9 பைசா. இந்திய பூபாகத்தில் மைசூர் மாநிலம், கேரள மாநிலம், பஞ்சாப் மாநிலம் ஆகிய மூன்று மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் நம்முடைய மாநிலத்திலுள்ள கட்டணத்தைவிட அதிகமாகத் தான் இருக்கிறது. நான் முன்பு சொன்னதுபோல் கேரளாவில் நிலம் குறைவாக இருக்கிறது, ஹைடல் பவர் உற்பத்தி செய்யும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. நான் விளக்கத்திற்காகத் தான் இதையெல்லாம் சொல்கிறேன். குஜராத் மாநிலத்தில் 19 பைசா, மராட்டிய மாநிலத்தில் 18 பைசா, ஹரியானாவில் 15 பைசா, பீகாரில் 15 பைசா, மேற்கு வங்காளத்தில் 12 பைசா, உத்தரப்பிரதேசத்தில் 15 பைசா, அஸ்ஸாமில் 16 பைசா, ராஜஸ்தானில் 13 பைசா, ஒரிஸாவில் 12 பைசா, மத்திய பிரதேசத்தில் 12 பைசா, பஞ்சாப் மாநிலத்தில் 9.8 பைசா, கேரளத்தில் 9 பைசா, மைசூரில் 10 பைசா. இப்படி மற்ற மாநிலங்களிலுள்ள நிலைமை இருக்கும்பொழுது, நாம் 10 பைசாவுக்குக் கொடுக்கிறோம். தொழில் துறைக்கு 40-லிருந்து 30 ஆக்கிவிட்டார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். என்ன நான் கோபமோ? மறுநாள் சாயந்திரம் பஞ்சாலைத் தொழில் நசித்து விட்டது என்றெல்லாம் பேசுகிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லாவற்றையும் புரிந்துகொண்டு பேசவேண்டும், சொல்லவேண்டும். ஆனால், இந்தக் காரியத்திற்காக நாம் கொடுக்கிற ஒரு யூனிட்டிற்கு என்ன செலவு ஆகிறது, அங்கே கொண்டு போய் மின்சாரத்தை விநியோகிக்கிற நேரத்தில், சப்ளை செய்கின்ற நேரத்தில் நமக்கு செலவு 16 பைசா ஆகிறது யூனிட் ஒன்றுக்கு. ஆனால் நாம் விவசாயிகளுக்குக் கொடுப்பது 10 பைசா. நாம் 10 பைசா தான் பெறுகிறோம்? இதனுடைய செலவு விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிற நேரத்தில் 16 பைசா ஆகிறது. ஒரு யூனிட்டுக்கு 6 பைசா இப்பொழுதே நமக்கு நஷ்டம் ஆகிக்கொண்டிருக்கிறது. நஷ்டத்தில் தான் விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்திய சர்க்கார் திரு. மொரார்ஜி தேசாய் மந்திரியாக இருந்த காலத்தில் அறுதியிட்டு நிர்ணயித்த கணக்குக் கட்

இல்லை. எந்த அளவிற்கு வரவேண்டுமென்பதுபற்றி அவர்களுக்கே தெரியும். ஏதோ, இன்றைக்குப் பார்த்து, நாளைக் காலையில் கொடுத்துவிட முடியுமா? வர வேண்டிய நேரத்தில் வரும், கண்டிப்பாக வரும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, காலையில் சூரியன் உதித்து, மாலையில் மறைவதற்குள் கொடுத்துவிட வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. பே கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு கால நிர்ணயம் செய்ய முடியுமா? அதற்கு தற்சமயம் காலக் கெடு செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிக்காரர்கள் யாரும் அவர்களை மீண்டும் உசுப்பிவிட்டு, கிளர்ச்சி வேர்விடத் தொடங்குவதற்கு முன்னாலே வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, எந்த எதிர்க் கட்சி அவர்களை உசுப்பிவிட்டார்கள் என்ற தகவலை முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின்முன் வைப்பார்களா?

(பதில் இல்லை.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) மசோதா.**

*** மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு நில வள வங்கிகள் (திருத்த) மசோதாவை* அறிமுகம் செய்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என முன்மொழிகின்றேன்.





தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் கூறப்பட்டிருப்பதெல்லாம் நிலவள வங்கியின் தலைவர்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமென்பது. சங்கம் என்றாலே 100 பேர்கள், 200 பேர்கள், ஆயிரம் பேர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். கூட்டுறவு வங்கிகளோ, வேறு வங்கிகளோ பல முடிவுகளை எடுக்கும்போது ஒருவர் பிரதிநிதியாக இருக்க வேண்டும். அப்படியிருப்பவர் அந்த வங்கியின் தலைவராக இருக்க வேண்டுமென்பது. வேறு எந்தப் பிரச்சினையும் எழவில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம் நிலவள வங்கி, அடைமான வங்கியின் பொறுப்புக்கள் எல்லாம் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. துணைவிதிகளின்படி உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டுவதும், அந்தக் கூட்டத்திற்கு தலைமை வகிப்பதும், அந்த வங்கியின் தலைவர்தான். நிர்வாகக் குழுவைக் கூட்டுவதும், தலைமை தாங்குவதும் வங்கியின் தலைவர்தான். வங்கியின் கணக்கை வைத்திருப்பதற்கும் பொறுப்பு தலைவர்தான். ஏதாவது தவறு நடந்து துண்டு விழுந்துவிட்டால் அதற்கு ஈடு செய்வது தலைவர்தான். கடன் வாங்குவதும், கடன் பத்திரம் எழுதி வாங்குவதும், கையெழுத்துப் போடுவதும் தலைவர்தான். கணக்குகளுக்கும் பொறுப்புக்கும் எல்லாவற்றுக்குமாக, தலைவரே பிரதிநிதியாக இருப்பதுதான் சாலச் சிறந்தது. ஏதாவது கணக்கில் குற்றங்கள் நிகழ்ந்து ஈடுசெய்ய வேண்டுமென்று கேட்கிறோம். பெரிய தவறு ஏற்பட்டால் வழக்குத் தொடருகிறோம். அப்படி வழக்கு தொடரப்படுவது தலைவர் மீதுதான். பெரிய குற்றம் ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டால் அந்தத் தண்டனையை அனுபவிப்பதும் தலைவர்தான். ஒரு வங்கியும் மற்ற வங்கிகளும் கூடுகின்றபொழுது புதிய தலைவர் பிரதிநிதியாக இருப்பது நடைமுறைக்கு சாத்தியமானதாகவும், நியாயமானதாகவும் இருக்கும். கூட்டுறவு துறையில் உள்ளவர்களும் இதை விரும்புகிறார்கள். ஜனவரி 1970-ல் நடந்த நில வள வங்கிகள் கூட்டத்தில் இந்தக் கருத்து ஒருமனதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்து ஏற்கனவே விதிகளில் இருந்தது தான். உயர் நீதி மன்றம் ஒரு வழக்கு சம்பந்தமாகத் தீர்ப்பு அளிக்கிறபோது இந்தக் கருத்து விதியில் இருந்தால் மட்டும் போதாது, சட்டத்தில் இருக்கவேண்டுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அதற்கு வழிவகை செய்வதுதான் இந்த மசோதா. அதைத் தவிர வேறு பிரச்சினை எதுவும் இந்த மசோதாவில் இல்லை.

கூட்டுறவுத்துறை நிர்வாகத்தைப்பற்றி இன்னும் எத்தனையோ பிரச்சனைகள் சொல்ல வேண்டி இருக்கலாம். அதற்கு என்று ஏப்ரல் 2-ஆம் தேதி அன்று ஒரு முழுநாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை நமது சட்டசபை வரலாற்றில் ½ நாளுக்குமேல் ஒதுக்கியது கிடையாது.. இவ்வாண்டு ஒரு முழுநாளே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்போது உறுப்பினர்கள் பல்வேறுவிதமான கருத்துக்களை கூட்டுறவுத்துறை நிர்வாகம்பற்றிச் சொல்லலாம்.

---

*25—2—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

ஆள்கள், ஆசாமிகள் வேண்டியிருக்கிறது. இரவு நேரங்களில் கவனமாக இருக்கவேண்டியிருக்கிறது. மின்சாரம் கோதுமை, அரிசி போன்று இல்லை. மின்சாரத்தைத் தேக்கி வைக்க முடியாது. இன்று மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம் என்றால், அதை ஒன்றும் கோடவுனில் வைக்க முடியாது. உடனே உபயோகிக்க வேண்டும். ஹை டென்ஷன் மின்சாரம் உற்பத்தியாவதை, ஜெனரேஷன் செய்வதை, உடனேயே உபயோகிக்கவேண்டிய ஒரு வாய்ப்பு வேண்டும் என்ற காரணத்தால், சில தொழில்களுக்கு சலுகைகள் கொடுக்கிறோம். பஞ்சாலைத் தொழிலுக்கு சர்-சார்ச் குறைத்திருக்கிறது. விவசாயப் பெருமக்களைப் பொருத்தவரையில், இந்த அரசாங்கம் விவசாயிகளால் தான் நடைபெறுகிறது. இந்த மாமன்றத்துப் பிரதிநிதிகள் பலபேர் விவசாயிகள். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் விவசாயிகள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய நன்மையில், மேம்பாட்டில் அக்கறைகொண்டு, காரியங்களைச் செய்கிறோம். மின்சாரக் கட்டணத்தை உயர்த்திவிட்டார்கள் என்கிறார்கள். தைரியமில்லாமல் உயர்த்தவில்லை.

இன்னும் பல நன்மைகள் செய்கிறோம். ஐம்பது கோடி ரூபாய் திட்டத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்கிறோம். இரண்டு லட்சத்து 90 ஆயிரம் பம்ப்செட்டுகளுக்குத்தான் நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் நாம் ஆட்சிக்கு வந்த மூன்றாண்டுக் காலத்தில் 1 லட்சத்து 70 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம். அதாவது அவர்கள் செய்ததில் 60 சதவிகித அளவை இந்த மூன்றாண்டுகளில் ஏற்படுத்திக் காட்டியிருக்கிறோம். இது கூடுதலான காரியம் அல்லவா? மற்றைய உறுப்பினர்கள் மற்ற கருத்துக்களையெல்லாம் எடுத்துப் பேசினார்கள். மாநில சுயாட்சி, மத்திய கூட்டாட்சி என்பதைப் பற்றியும் பேசினார்கள். இந்தக் கோரிக்கை இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் சிந்தனைகளைக் கிளப்புகின்றன.

நல்ல விழிப்புணர்ச்சியோடு நம்முடைய விவாதம் தொடர வேண்டும். கடந்த இருபது ஆண்டுகளாக ஒரு அரசியல் ஸ்தாபனத்தை நாங்கள் பார்த்து விட்டோம். அது இப்பொழுது மாறி வருகிறது. வீடு கூட இருபது ஆண்டுகளில் ரிப்பேர் ஆகிவிடுகிறது. தம்முடைய கட்சி ஒன்றுதான் இந்த நாட்டினுடைய ஆட்சியை ஏற்கவேண்டும். இந்த ஆட்சி பிதுரார்ஜித சொத்துப் போல தமக்கே சொந்தம் என்று கண்ட கனவுகள் எல்லாம் தகர்ந்துவிட்டன. அந்தக் கனவுகள் எல்லாம் இன்றைக்கு நிர்மூலமாகிவிட்டன. மாநிலங்கள் எல்லாம் தங்கள் தங்களுடைய பங்கைக் கேட்கின்றன. சொத்துரிமைகளைக் கேட்கிறார்கள். இன்றைக்கு இருக்கும்படியான பூரணமான நிலைமை மாநில சுயாட்சி, மத்திய கூட்டாட்சி என்ற நிலைமைதான். ஒரு முக்கியமான விஷயம். நாம் இன்றைக்கு 'ரிப்பப்ளிகன் [illegible] கான்ஸ்டிடியூஷன்' அரசியல் சட்டத்தையே மாற்றவேண்டும். அதிலுள்ள



ஓட்டை உடைசல்களை நீக்கவேண்டும். நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் எப்படி இருந்தவைகளை மாற்றினோமோ, அம்மாதிரி அரசியல் சட்டத்தையும் மறு ஆய்வு செய்யவேண்டும் என்பதை இந்த மன்றத்தின் சார்பிலும், சபையிலே உள்ள உறுப்பினர்களின் சார்பிலும், நம்பிக்கையுள்ள எல்லோர் சார்பிலும் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மன்றம் 1970-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்ய ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தலைவர் அவர்களே, அலுமினியத் தொழிற்சாலை போன்ற பெரிய மில்களின் மின்சாரக் கட்டணத்தை குறைப்பதாகச் சொல்லப்படுகிறது. நாட்டு மக்களுக்காக, நாட்டின் அடிப்படைத் தேவைகளுக்காக விவசாயத்திற்குக் குறைத்துக் கொடுக்கக் கூடாதா? நான் கேள்விப்பட்டவரையில், வோல்ட்டேஜ் டிராப் சிக்கனப்படுத்தியும் நிர்வாகச் செலவையும் சிக்கனப்படுத்திவிட்டால் துண்டுவிழுவதைச் சரிக்கட்டி விடலாம் என்று அந்தத் துறையைச் சேர்ந்தவர்களே சொல்லுகிறார்களே, அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர், அவர்களே, அதையும் செய்யலாம். வோல்ட்டேஜ் டிராப் இருந்தால் அதையும் செய்யலாம். அப்படி இருக்கிறதா, இல்லையா என்ற இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. அப்படியும் ஒரு கோடி, இரண்டு கோடி என்று கிடைத்தால் விவசாய மக்களுக்கு மேலும் நன்மை செய்துகொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை நாங்கள் ஏதோ பணம் சம்பாதிப்பதற்காகச் செய்வதில்லை. ஒரு ரீசனபிள் ரேட் என்பதற்காகத்தான் இதைச் செய்திருக்கிறோம்.

**Dr. H. V. HANDE:** Sir as the Appropriation (Vote on Account) Bill is going to be passed, can the Hon. Chief Minister or the Hon. Minister for Finance give us an assurance on behalf of the Government as to the time when the Second Pay Commission is going to come out with its report and when it is going to be implemented and also whether they have fixed up any time-schedule.. அதற்கு காலவரம்பு இருக்கிறதா? எப்போது வரும் என்பதை சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறை இந்த அரசாங்கத்திற்கும் இருக்கிறது. அது என்.ஜி.ஓ.-க்களுக்கும் தெரியும். பே கமிஷன் ரிப்போர்ட் கண்டிப்பாக வரும். வராமலா போய்விடும்? எப்போது வரும் என்பது அவர்களுக்கே தெரியும். கனம் உறுப்பினர் அவர்களுக்கு என்.ஜி.ஓ. க்களின்மேல் உள்ள அக்கறையைக் காட்டிலும் இந்த அரசாங்கத்திற்கு அதிக அக்கறை இருக்கிறது என்று சொன்னால் உறுப்பினர் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள். அரசாங்க ஊழியர்களுடைய நலன்களைக் காக்க வேண்டுமென்ற அக்கறையில் இந்த அரசாங்கத்திற்குக் கொஞ்சம்கூட குறைவு

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1970 மார்ச் 9

இப்போது இந்த மசோதாவின் நோக்கம் ஒன்றே ஒன்றுதான். வங்கியின் தலைவரே பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்பது. இந்த நியாயமான கருத்தை ஆதரித்து இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I move the following amendment :—

'That the Tamil Nadu Co-operative Land Development Bank (Amendment) Bill, 1970 be referred to a Select Committee of the House, consisting of......Members (Names of members to be given later.)'

THIRU K. RAMAMOORTHI : Sir, I second the amendment.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நிலவள வங்கி சம்பந்தமான மசோதா சென்ற முறை இந்த மன்றத்தின் ஆய்வுக்கு வந்தபோதே எங்கள் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தோம். இதில் அவசரம் காட்ட வேண்டியதில்லை. அரசாங்கத்தின் பதட்ட நிலை காரணமாக ஒன்றைக் கொண்டு வருவது சரியல்ல. அரசாங்கம் சந்தானம் குழு ஒன்றை இதுபற்றி விரிவாகஆராய நியமித்திருக்கிறது. பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை இதற்காக செலவழிக்கிறது. அந்தக் கமிட்டியின் முடிவைத் தெரிந்துகொண்டு இதைக் கொண்டு வரலாம் என்று குறிப்பிட்டோம்.

அமைச்சர் அவர்கள் சந்தானம் கமிட்டி என்ன என்ன கூறியிருக்கிறதோ அதற்குப் பொருத்தமாகத்தான் இந்த மசோதா கொண்டு வருவதாகச் சொன்னார்கள். நடவடிக்கைக் குறிப்பிலேயே அது இருக்கிறது. ஆனால் சந்தானம் கமிட்டியின் அறிக்கையை இப்போது பார்க்கிறபோது அவர்களது கருத்துக்கு மாறாகவே இப்போது பல மாறுதல்களுடன் மசோதா வருகிறது.

சந்தானம் கமிட்டியினர்—நிலவள வங்கிகளில் உள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் படிப்படியாக எடுத்துவிட்டு வங்கியின் சிப்பந்திகளையே போடவேண்டும், வங்கிகள் தங்கள் உத்தியோகஸ்தர்களையே நம்பியிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. அடுத்து தாலுக்காவுக்கு ஒரு வங்கி என்ற அந்த முறையையே பயன்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல மத்திய நிலவள வங்கியைப் பொறுத்தவரை 22 உறுப்பினர்கள் இருக்கிறார்கள், இதுவே போதும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் அரசாங்கத்தின் சார்பில் பின்னால் வந்திருக்கிற விதிகளைப் பார்க்கிறபோது எங்களுக்கு உண்மையில் ஆச்சரியமாக இருந்தது. இன்றையதினம் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது நீதிமன்றத்தின் தீர்ப்பு அடிப்படையிலேயே இது கொண்டுவரப்படுவதாகச் சொன்னார்கள். அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். எதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பரிசீலனை செய்து கொண்டுவந்தால்



1970 மார்ச் 9] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இப்படி அடிக்கடி நீதிமன்றம் நம்மைத் திருத்தும்படி சொல்வதற்கு இடமிருக்காது. இப்போதும் அவசரம் அவசரமாக மத்திய நிலவள வங்கியை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக இது அவசரம் அவசரமாகக் கொண்டுவரப் படுகிறது என்பதுதான் எங்கள் எண்ணம். காரணம் அண்மையில் ஒரே நாளில் 60 நிலவள வங்கிகள் ஏற்படுத்தினார்கள். அவற்றுக்கு அரசாங்கமே தலைவர்களை நியமித்தார்கள். ஒரு வங்கி என்றால் எத்தனை உறுப்பினர்கள் இருக்கவேண்டும், ஷேர் காபிடல் எவ்வளவு வேண்டும் என்பது ஒன்றும் பரிசீலிக்கப்படவில்லை, 60 வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன. தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள், ஒரே நாளில். அவர்கள் எல்லாம் வங்கி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. இன்றையதினம் இந்த மசோதாவின் மூலம் வங்கித் தலைவர்களை பிரதிநிதிகள் என்று ஆக்கி அதன்மூலம் மத்திய நிலவள வங்கியின் அதிகாரத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றவேண்டும் என்கிற நோக்கத்துடன் தான் இது அவசரமாகக் கொண்டுவரப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதை நான் கொடுத்திருக்கிற தீர்மானத்தை ஒட்டி ஒரு பொறுக்குக் குழுவுக்கு விட்டு ஆற அமர யோசிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஏ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்தை அமைச்சர் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். தலைவருடைய பொறுப்புக்களை எல்லாம் பற்றி சொன்னார்கள். தலைவர் தான் பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறோம். அதை ஒப்புக் கொண்டாலும் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிற நேரம் சரியானது அல்ல, அதனால் ஏற்படுகிற அபிப்பிராய பேதங்களையும் நாம் ஆலோசிக்க வேண்டும் என்பது தான் எனது தாழ்மையான அபிப்பிராயம்.

அரசாங்கமே ஐம்பது, அறுபது வங்கிகளைத் திறந்திருக்கிறது. முறைப்படி உறுப்பினர்கள் ஜெனரல்பாடி கூட அவற்றில் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அரசாங்கமே நாமினேட் செய்திருக்கிறது. அப்படி நாமினேட் செய்த தலைவர்களையே இன்றைக்கு டெலிகேட்டுகள் என்று போட்டு மத்திய வங்கிக்கு அனுப்புவது சரியல்ல. முறைப்படி பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை பிரதிநிதிகளாகக் கொண்டு மத்திய நிலவள வங்கியின் குழு அமைய வகை செய்யவேண்டும். அப்படியில்லாத காரணத்தினால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய நிலவள வங்கியின் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்வதுபோன்ற சந்தேகத்திற்கு இடம் கொடுக்கிறது. ஆகவேதான் நேரம் சரியானது அல்ல, எல்லா வங்கிகளுக்கும் தலைவர்கள் முறைப்படியான ஜெனரல்பாடியினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு இதுபோல செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

the High Court. So this Bill is not at all necessary. That is my point. The most important point is the spirit with which this has been brought and the purpose for which it has been brought.

I have to say that this co-operative movement itself is a chronic patient for whom so many have given treatment and the latest person to give the treatment is our distinguished Minister for Co-operation. The patient's condition is becoming from bad to worse. Whether he is treated with oxygen, or intra-veinous injection there has been no improvement and the situation has become from bad to worse. You might have noticed, Mr. Deputy Speaker, that whenever questions on co-operation come (they do come during the fag end of question hour), we invariably put the questions after getting all the facts and figures. That indicates that the co-operative movement has become a serious patient. I am afraid that nothing good has been done for the patient, either by our distinguished Prime Minister or our Minister for Co-operation.

(Thiru N. S. V. Chithan in the Chair.)

Take the case of money being given to a Co-operative Bank. Suppose there is a bank 'X' in Coimbatore and it wants loan. Normally who should give the money? Another Co-operative Bank should give the money. There is such a rule or convention laid down by Reserve Bank. It has said that whenever Co-operative societies need some loan, whenever they need Vitamin 'M' (money), it should come from the Apex Bank viz. the Central Co-operative Bank. But what do we find now? We find that private banks are lending money. I can give proof in this House. Instead of the Government asking the Co-operative Bank to lend the money, Government had asked a private Bank to lend the money. This is something fantastic. I can't think of such a thing. Till recently private banks were being codemned. Now a private bank is asked to help; this is against the rule laid down by the Reserve Bank. That is why I say, the co-operative movement has failed. It has failed for two reasons. There is too much political interference. That is most important. Why should politics be imported into the co-operative movement? Let us keep politic out of this. Let us earmark some arenas for politics. Let medical profession, education and, co-operative movement be arenas where no politics should be imported at all. This is a movement which is open for everybody. Unfortunately where interference should not be done, political interference is done. If miscarriage of justice is pointed out, loopholes to obviate that are found out. Where they are to act, they do not act. I fully agree with my distinguished friend Mr. Kanakasabai, who is an experienced co-operator, that the movement has suffered due to political interference. There is the Central Land Mortgage Bank, which is the apex bank. There are 22 directors. Out of them only 2 must be nominated. The others must come by election. That is democracy. We talk of democracy. But has it happened? Out of the recent appointment, how many M.L.As. have been appointed and how many non-M.L.As. have been appointed? I have got the list with



me and I can give the names. The point is that this sort of importing politics is not good. When there is a political man sitting there, every officer is afraid. Suppose some M.L.A. or M.P. is there, others are afraid of him because he has get access to Ministers.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். எஸ். வி. சித்தன்)*: டாக்டர் ஹாண்டே அவர்களை விரைவில் முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் பிரச்சினையை விட்டு வேறு எங்கோ போய்க்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

Dr. H. V. HANDE: I am very happy our new Chairman is doing his job marvellously well, and I am proud of him.

May I get an assurance from the Hon. Minister that he will first of all divest the co-operative movement of all political contact, impact, infrigement and influence? Secondly will he give us an assurance that, whenever we point out acts of omission and commission in the working of the Co-operative Department, he will give top priority to our requests or complaints and thus mitigate the evil?

Abiding by the instructions of the Chair, I am concluding my speech.

*திரு. க. இராமமூர்த்தி*: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைப் பொருத்தவரையில் இரண்டு கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதா முன்பு நடந்த சட்டமன்றத் தொடரில் கொண்டு வரப்பட்டது. அப்போது, இந்த மசோதா ஏன் இவ்வளவு அவசர அவசரமாக, அள்ளித் தெளித்த கோலமாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னோம். அதனுடைய விளைவுகள் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கனகசபை அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொதுவாக, சட்டத்தை வைத்துக் கொண்டு அதற்கு விதிகளை ஏற்படுத்துவது முறை. இங்கே புதிய முறை கையாளப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். விதிகளுக்குத் தகுந்தாற்போல் சட்டத்தை மாற்றும் புதிய முறையைப் பார்க்கிறோம். சட்டத்தைப் பொறுத்த வரையில், மிகத் தெளிவாக இருக்கிறது. சென்ற முறை நிறைவேற்றிய மசோதாவில்

வேற்றிய மசோதாவில் "The election of the members of the Board in respect of each district shall be held by the delegates." என்று இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய விதிகளைப் பார்த்தோமானால் 'டெலிகேட்' என்பதற்கு The delegate o fthe Primary Land Development Bank shall be its president என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

கூட்டுறவுச் சட்டத்தைப்பற்றி நமக்கெல்லாம் தெரியும். அதில் எல்லா விதமான ஓட்டைகளும சிக்கல்களும் இருக்கின்றன. ஏதாவது வழக்கு வந்தால் கடைசியில் இண்டர்ப்ரிடேஷன் அடிப்படையில் ஜட்ஜ் தம்முடைய டிஸ்க்ரிஷனை உபயோகித்து தீர்ப்பளிக்க வேண்டியதாக இருக்கிறது. அதிலே ஒன்றும் மறுக்கவில்லை. இருந்தாலும்கூட கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தம் இன்றைக்கு உள்ள ஜனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால், மத்திய வங்கி தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா அல்லது அரசாங்கத்தின் நாமினேஷனுல் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா என்பதைப் பற்றிய பிரச்னைகளை எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது புதிதாக ஐம்பதோ அறுபதோ ஆரம்பிக்க இருக்கிறீர்களே, அந்த வங்கிகளில் நாமினேட் செய்யப்பட்டிருக்கிற பிரஸிடெண்ட்ஸ் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய மத்திய வங்கியாக இருக்கக்கூடாது. ஜெனரல் பாடி தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒன்றுக அமையவேண்டும் என்று நான் கொடுத்திருக்கிற சிறிய திருத்தத்தை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றினுல் நல்ல முறையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கனகசபை :** இந்த நில வள வங்கிக்காக வந்திருக்கிற சட்டம் முதலிலே செல்லுமா செல்லாதா என்பதே பெரிய பிரச்னை. காரணம் என்னவென்ருல் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் சுயமாக அவரவர்களாகவே இயங்கவேண்டிய சங்கங்கள். இதற்குப் பிரதிநிதிகளை அதாவது மத்திய வங்கியானது அதற்கு வேண்டிய பிரதிநிதிகளை அந்தத் தலைவர்களே எடுக்கவேண்டுமா அல்லது மகாசபை தேர்ந்தெடுக்கவேண்டுமா என்பதுதான். அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவது ஜனநாயக முறைக்கு விரோதமானது. இது அசோஷியேஷன் ஆப் பர்சன்ஸ். இந்தமாதிரிச் சங்கங்களை நிறுவிக்கொள்வதற்கு அதிகாரம் அரசியல் சட்டத்தின் மூலமாக நமக்கு அளிக்கப்படுகிறது. அதிலே எவ்வளவு தூரம் அரசாங்கம் தலையிடலாம் எவ்வளவுதூரம் தலையிடக்கூடாது என்பதை ஆலோசிக்கவேண்டும். இப்பொழுது இந்தச் சட்டம் வருவதன் அவசியமென்ன ? இந்தச் சட்டம் வந்தால் டிசம்பர் மாதத்திலே எலெக்ஷன் நடத்தியிருந்தால் இந்தச் சட்டம் பிரயோஜனப்படாது. தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்கள். ஹைகோர்டிலே அந்த உத்திரவு ரத்தானவுடன் 28-ஆம் தேதிவரை தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கம் என்று ஏற்படும்பொழுது கடைசி அதாரடி மகாசபைதான். மற்றவர்களுக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. சில சங்கங்களிலிருந்து பார்த்தால் தங்களுக்குத் தகுந்தாற்போல் தலைவர்களும் டெலிகேட்டு ஆக வருகிருர்கள். எனக்கு ஒரு சந்தேகம். அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். இந்த நில வள வங்கி மகாசபைக்கும் அவர்கள் டெலிகேட்டா ? அல்லது எலெக்ஷனுக்கு மட்டும் டெலிகேட்டா என்பது புரியவில்லை. நிர்வாகஸ்தர்களை





நியமிப்பதற்குப் பரிபூரண உரிமை உண்டு. ஒரு சங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்கள் வேறு ஒரு மகாசபையை நீக்குவதற்கு உரிமை கொடுப்பது என்ருல் அது முரணுக ஒன்றுக் கொன்று முரணுக இருக்கும். ஆகவே, யோசனைசெய்து பார்க்க வேண்டும், அவசரமாகச் செய்யக்கூடாது. சங்கம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்ருல் ஷேர் காபிடல் வேண்டுமென்று சொல்கிருர்கள். சிலர் சேர்ந்து ரிஜஸ்டர் செய்துகொண்டு பிறகு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கிருர்கள் அல்லது முதல் தடவை பங்குதாரர்களாக இருப்பவர்கள் முதல்மூன்று ஆண்டுகளுக்கு அரசாங்கத்திலிருந்து நாமினேட் செய்யப்படுவதற்கும் வழக்கம் உண்டு. உப விதிகளைக்கொண்டு பார்க்கும்பொழுது அந்த ஏரியா ஆப் ஆப்பரேஷனிலே அவர்களுக்கு நிலம் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. அவர்கள் பங்குதாரர்களாக இருக்கவேண்டும் இதற்கு சம்பந்தப்படாதவர்கள் எல்லாம்கூட நிர்வாகஸ்தர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. மத்திய நில வள வங்கியின் தேர்தல்கள் இப்படி அமைந்தால் அது கூட்டுறவுத் தத்துவத்திற்கே விரோதமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உங்கள் திருத்தத்தை முன்மொழிந்து பேசும்பொழுது பேசிக்கொள்ளலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** அப்பொழுது திருத்தத்தைக் குறித்துப் பேசுகிறேன். இப்பொழுது ஜெனரலாகப் பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசும்பொழுதே ஜெனரலாகவும் பேசிக்கொள்ளலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** நீங்கள் அலௌ பண்ணினுல் பேசிக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, I am afraid that this is a highly irrelevant Bill that need not have been brought before his House at all. Whenever the High Court gives a judgment, it has become the chronic practice of almost all Governments to get in touch with the Law Department and the concerned Department over which the High Court has given the judgment, to find out other loopholes by which the judgment of the High Court could be obviated, got over. The High Court has been ultimately reduced as a place where judgments are not respected ultimately, by getting over the loopholes and by bringing some other Bill which probably the Government thinks will not be struck down by High Court. Whether it is the Bill regarding nationalisation of banks or a Bill concerning these Land Mortgage Banks : this is what is being done. Whatever it is, this chronic practice has been followed in this State also by the present Ministry. Therefore it is I say it is highly irrelevant, objectionable and this Bill has been brought only to obvise the difficulty created by the judgment of

[திரு. சி. பா. ஆதித்தனர்] [1970 மார்ச் 9

Dr. Hande—he is not here now—has raised the point that I have not respected the decision of the High Court. I may as well inform him that I deeply respect the decision made by the High Court and it is out of that deep respect that I brought forward this amending Bill. It is not as though I am doing anything contrary to the decision of the High Court. The High Court has pointed out certain loopholes in the existing law. If he is in my position, what he will do ? Will he allow the loophole to remain in the law as it is or will he try to plug it ? As pointed out by the High Court, I am, in my humble way, trying to plug the loophole by accepting the views expressed by the High Court.

பின்னர் திரு. கனகசபை அவர்கள் சட்டம் செல்லுமா செல்லாதா என்பதைப்பற்றிச் சொன்னார்கள். போதுமான அளவிற்கு ஹைகோர்ட்டால் பலவிதமான நல்ல தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விதிகளில் இடம் பெறக் கூடாது, அப்படி இடம் பெறவேண்டுமென்றால் அசல் சட்டத்தில் இடம் பெற வேண்டும் என்று சொன்னார்கள். இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்று சொல்லவில்லை. மன்னிக்க வேண்டும். முன்னால் இருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது—1967 என்று எப்போதும் சொல்கிறீர்களே என்று ராமமூர்த்திக்கு கோபம் வரப்போகிறது—முன்பெல்லாம் பயன் அடைகிறவர்கள் வீடு, நிலம், வாசல் இவை வைத்திருப்பவர்கள்தான். ஆனால் இப்போது நிலைமை அப்படியல்ல. விதிகளை நாம் இப்போது திருத்தியிருக்கிறோம். நிலம் இல்லாமல் விவசாயிகளாக இருப்பார்களேயானால் அவர்களுக்குக்கூட இந்த நில வள வங்கி பயன்பட வேண்டும் என்பதாகத் திருத்தியிருக்கிறோம். (ஆரவாரம்.)

**திரு. ரா. கனகசபை :** ஏரியா ஆஃப் ஆப்பரேஷன் பற்றித்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** திரு. சித்தன் அவர்களும் குறிப்பிட்டார்கள். திரு. சுப்பராஜா அவர்களும் குறிப்பிட்டார்கள், ஜனநாயகமுறைப்படி தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று. ஒரு தவறான கருத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக உண்டாக்கப்பட்டுள்ள நில வள வங்கிகளில், தலைவர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தவறான எண்ணத்தில் மீண்டும் மீண்டும் சொல்லாதீர்கள். நான் மீண்டும் சொல்கிறேன். நான் ஏன் தவறாகச் சொல்ல வேண்டும்? இதனால் நான் என்ன பயன் அடைய முடியும் என்று கேட்கிறேன். நான் சொல்வதை நம்ப வேண்டும். தலைவர்களை ஏற்கனவே இருந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்த அரசு தவறாக ஒன்றும் செய்துவிடவில்லை. எங்கள் விருப்பப்படி நாங்கள் நியமித்து விட்டோம் என்று திரு. ராமமூர்த்தி அவர்கள் சொல்லும்போது நான் மூன்று முறை அதை மறுத்தேன். அப்படி நாங்கள் இன்னும் யாரையும் நியமிக்கவில்லை. ஒரு பாங்க் அல்லது சொசைட்டி அல்லது ஒரு சங்கம் தொடங்குவதாக இருந்தால், முதலில் யார் தலைவர், யார் யார் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் என்று அதைத் தொடங்குபவர்கள்,



1970 மார்ச் 9] [திரு. சி. பா. ஆதித்தனர்]

20 அல்லது 40 அல்லது 50 பேர் சேர்ந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அது மூன்று மாதங்களுக்குச் செல்லும். பிறகு அரசு நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கும்போது ஜனநாயக முறை நிச்சயமாக மனதில் கொள்ளப்படும் என்ற உறுதியை நான் சொன்னால் போதுமா? அதை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்படித்தான் செய்வோம் :

**திரு. கே. விநாயகம்:** உங்கள் கட்சிக்காரர்களை நாமினேட் செய்திருப்பதாக சொல்கிறார்களே . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** நாமினேஷன் என்று இந்த அரசு யாரையும் நாமினேட் செய்யவில்லை.

**திரு. கே. விநாயகம் :** ப்ரமோட்டர்ஸ் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** ப்ரமோட்டர்சையும் நியமிக்கவில்லை. அப்படி நான் திரும்பத் திரும்பச் சொல்லும் போது அது உண்மைக்குப் புறம்பாக இருக்கும் என்று என்னைப் பற்றிச் சொல்வது எனக்கு வருத்தமாயிருக்கிறது. தவறாகச் சொல்லி நான் என்ன பயனை அடைந்துவிட முடியும்? யாரையும் நியமிக்கவில்லை. இதுவரையில் என்று சொல்கிறேன். சட்டத்தில் நியமிக்கப்பட வேண்டிய காலம் மூன்று மாதங்களுக்குள் என்று இருக்கும்போது, அப்படி நியமிக்கும் தருவாய் வரும்போது, ஜனநாயக முறையில் ஏற்கனவே உள்ள அங்கத்தினர்களுக்கு, யார் யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அவர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படும். ஜனநாயக முறையைப் பற்றி என்னிடம் அதிகம் சொல்ல வேண்டாம். உங்களுக்கு ஜனநாயக முறையில் இருக்கிற நம்பிக்கையைவிட எனக்கும் நான் சார்ந்திருக்கிற கட்சிக்கும் அதிக நம்பிக்கை இருக்கிறது.

இப்போதுள்ள திருத்தம் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்பதாகும். சட்டத்தில் ஒரு சிறிய மாறுதலைச் செய்ய பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பியது இல்லை. அப்படி இதுவரையில் நடைபெறாத காரியத்தை ஏன் செய்யச் சொல்கிறீர்கள்? பாங்குத் தலைவர்தான் பொறுப்புள்ளவர். அவர்கள்தான் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டியவர். கடன் வாங்குவதும், கொடுப்பதும் அவர்தான். கணக்கில் தவறு ஏற்படுமானால் அதை ஈடு செய்கிறவரும் அவர்தான். பெரும் தவறு ஏற்படுமானால் கூண்டில் ஏறி சிறைக்குச் செல்பவரும் அவர்தான். அப்படிப்பட்ட ஒருவர் பாங்குப் பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்று சொல்கிறேன், அதில் நியாயம் இருக்கிறது என்று சொல்கிறேன். அதை ஏன் மறுக்க வேண்டும் ? வங்கியில் எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு வாங்கியிருக்கிறது, எவ்வளவு நிலுவை இருக்கிறது என்று இவற்றைப் பற்றி ஒன்றும் தெரியாத ஒருவரைக் கொண்டுவருவது என்பது சரியல்ல. அந்தச் சங்கத்தை வளர்ப்பதில் ஈடுபட்டு உழைத்து, ரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உழைத்த தலைவருக்கு இவ்வளவாவது மரியாதை கொடுக்கக் கூடாதா? இதுவரை இம்

மாதிரி சின்ன மாறுதலுக்காக செலக்ட் கமிட்டிக்கு எந்த மசோதாவையும் அனுப்பியதில்லை. ஆகவே இதையும் அனுப்ப வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அமைச்சர் அவர்களின் பதிலில், சட்டத்தில் இப்போது நிலம் இல்லாதவர்களுக்கும் பணம் தர ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். நான் விசாரித்த அளவில், நான் தெரிந்துகொண்ட அளவில், நிலம் இல்லாதவர்களுக்குத்தான் பயிரிடுகிற குத்தகை நிலத்தை வளப்படுத்த கடன் பெறலாம் என்றால் அந்த நிலச் சொந்தக்காரரும் அந்த ஃபாரத்தில் கையெழுத்து இடவேண்டும் என அப்படி விதி இருப்பதாகத்தான் நிலவள வங்கியிலிருந்து எனக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சொல்லியுள்ள பதில் தவறா அல்லது அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள கூற்று சரியா என்பதை விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் சொல்லியதை உறுப்பினர் அவர்கள் சற்றுக் கவனமாகக் கேட்டிருந்திருப்பார்களேயானால் இந்தச் சந்தேகம் ஏற்பட்டிருக்காது. திரு. கனகசபை சொல்வது என்னவென்றால், இந்த வங்கிகளில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் நிலத்திற்கு உரியவராக இருக்க வேண்டும், நிலம் அந்தப் பகுதியில் இருக்க வேண்டும் என்பது. நான் மீண்டும் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். காலம் மாறிவிட்டது. இப்போது, நிலம் உடையவர்கள் இல்லையென்று சொன்னாலும், நிலத்தைப் பயிர்செய்தால் போதும். அவர்கள் உறுப்பினராக இருக்கலாம். ஆனால் நீங்கள் சொல்வது வேறு. கடன் கொடுப்பதைப் பற்றிச் சொல்கிறீர்கள். ஏழை, எளிய விவசாயிகள் ஏன் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது? அதனால்தான் பயிர் செய்தால் போதும் என்று துணை விதிகளைத் திருத்தியிருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.**





பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு-3 இந்த மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the following amendment :—

'In clause 3, omit sub-clause (i)'.

THIRU N. S. V. CHITHAN : Sir, I second the amendment.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையிலே ஏறக்குறைய இந்த விவாதம் முழுவதுமே அந்தவிதமாகச் செலுத்தப்பட்டிருக்கிறது. ஒரேயொரு கருத்தை மட்டும் நான் கூறி முடித்துக்கொள்கின்றேன். இந்த டெலிகேட்ஸ் என்ற வார்த்தைக்குப் பதிலாக தலைவர்கள் அல்லது பிரசிடெண்ட்ஸ் என்ற வார்த்தையைப் போட வேண்டுமென்பது. அதில் நியாயமிருக்கிறது. ஒரு வங்கி முன்னேற வியர்வையைச் சிந்தி உழைப்பவர், ஏன் அவர்தான் டெலிகேட்டாக இருக்கக் கூடாது என்ற வாதத்தை மிகவும் அழகாக அமைச்சர்கள் வைத்தார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். பாயின்ட்சை மாத்திரம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்தத் தலைவராக வருபவர்கள் அந்த வங்கியை ஆபரேஷன் செய்ய கூடிய அளவில் இருக்கக்கூடியவர்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய தகுதியைப் பொறுத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிலம் இல்லையென்று சொன்னாலும், பயிரிட்டால் போதும் என்று சொன்னார்கள். இன்று இயங்கிக் கொண்டிருக்கும் கூட்டுறவு நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையிலும் இந்தப் பயத்திற்கு இடமில்லை. விவசாயம் செய்யாமல் அந்தப் பகுதியையே சாராமல், ஒரு தாலுக்காவிலிருந்து இன்னொரு தாலுக்காவிற்கு வந்திருக்கும் நிலைமையிலிருந்துகொண்டு இருக்கிறது. அதை அமைச்சரவர்கள் தெரிந்து செய்தார்களோ, அல்லது தெரியாமல் செய்தார்களோ, நிச்சயமாகத் தெரியாமல்தான் செய்திருப்பார்கள் என்று நம்புகிறேன். உடனடியாக அமைச்சர் அவர்கள் கேட்டால் எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன், அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த பிரசிடெண்டுகளைப் பொறுத்தவரையிலும் வாதம் சரியாகயிருந்தாலும், நியாயமில்லை. அந்த அசோசியேஷன் ஆஃப் பர்சன்ஸ் இந்தக் கூட்டுறவு இயக்கத்தினுடைய மகாசபை, அவர்களினுடைய உரிமைகளை நாம் எந்த

[திரு. க. இராமமூர்த்தி] [1970 மார்ச் 9

விதத்திலும், எப்படிப்பட்ட நியாயமாக இருந்தாலும், ஒருவருடைய உரிமையிலே குறுக்கிடுவது தவறு. அந்த உரிமையைக் காக்கப் பாடுபட வேண்டும். அந்த உரிமைகள் காக்கப்பட்டால்தான் கூட்டுறவு இயக்கம் வளர முடியும். நமக்குப்பிடித்த விதிகளை வைத்துக்கொண்டு, நம் மனத்தில் தோன்றிய நியாயத்தை வைத்துக்கொண்டு, அந்த அடிப்படையிலே சட்டத்தைத் திருத்தி, கூட்டுறவுத் தத்துவத்தின் ஆணிவேரை அசைத்தால், கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டிலே நசித்துவிடும். அதுமட்டுமல்ல, நாட்டுமக்களின் நம்பிக்கையும் வீணாகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். என்னுடைய திருத்தம் மிகமிக அவசியமானது, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுவது நல்லது, மீண்டும் மீண்டும் இதிலே பாதிக்கப்பட்டவர்கள், இதிலே அக்கறையுள்ளவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லும் அளவிலே வைத்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, "எங்களை, நீதிமன்றத்திற்குப் போய்விடச் செய்யாதீர்கள்" என்றெல்லாம் சொல்வது சரியல்ல. அப்படி வினை நீதி மன்றத்திற்குச் செல்ல அவர்கள் வழக்கறிஞர் என்ற முறையில் துணை செய்ய மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

சட்டம் வேறு, நியாயம் வேறு என்று பேசினார்கள். வரலாற்றின் அடிப்படையிலே சட்டமும், நியாயமும் ஒவ்வொரு சமயம் பிரிந்துவிடுவது உண்டு. ஆனால் அவ்வப்பொழுது சட்ட மன்றத்திலே இருப்பவர்கள், நாடாளுமன்றத்திலே இருப்பவர்கள், நியாயமான நிலைமைகளை உருவாக்குவது அவர்களின் கடமை.

ஒரு வங்கியின் தலைவர் பிரதிநிதியாக இருப்பது நியாயம் என்று ஒப்புக்கொண்ட பிறகு, உரிமைகள் பாதிக்கப்பட்டன என்று பேசுவது ஒவ்வாத காரியம். தலைவராக வருபவர்கள், தேர்தெடுக்கப்பட்டு, பொதுக்குழு உறுப்பினர்களாலும், எல்லா உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தான் வருகிறார்கள். ஏற்கெனவே இரண்டு முறை வடிக் கட்டித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் பிரசிடெண்ட், அவர்தான் அந்த வங்கியைப்பற்றி நன்றாக அறிந்தவர். அந்த வங்கியின் வரலாற்றைப் பற்றியும், அது எப்படி செயல்பட வேண்டுமென்பதைப்பற்றியும், தெரிந்திருப்பவர் அவர்தான்.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, பிரிவு 4



1970 மார்ச் 9]

THIRU K. RAMAMOORTHI : Sir, I have got another amendment to clause 3.

MR. DEPUTY SPEAKER : All the amendments to a particular clause should be moved together and how can the hon. Member move an amendment separately now?

THIRU K. RAMAMOORTHI : That is a separate amendment to clause 3.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should have moved it along with the other amendment. I am under the impression that he has moved both the amendments together and I have put them to the vote of the House. Now clause 3 is passed and how can I go back?

நான் உங்களுடைய திருத்தத் தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விட்டு, அது நிறைவேறாமல், பிறகு அரசினர் மசோதாவில் பிரிவு 3 மசோதாவின் அங்கமாக ஆக வேண்டுமென்று ஓட்டுக்குவிட்டு, அது நிறைவேறிய பிறகு 3-வது பிரிவை மீண்டும் எப்படி மாற்ற முடியும்?

THIRU K. RAMAMOORTHI : Sir, for every amendment, the Hon. Speaker will call upon the hon. Member who has given notice of it to move it.

MR. DEPUTY SPEAKER : I have called upon the hon. Member to move his amendments.

THIRU K. RAMAMOORTHI : I have moved only one amendment. I have got another amendment.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should have moved both the amendments together to clause 3. Now he cannot move the other amendment.

**திரு. சோ. கருணாநிதன் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்கள் நின்று பேசிக் கொண்டிருக்கும் பொழுது, உறுப்பினர் அமர வேண்டும். அது பலநாள் பிரச்னையாக இருந்து வருகிறது. இருந்தாலும் மீண்டும் மீண்டும் இப்படி நின்றுகொண்டே இப்படிச் செய்வது மன்றத்தின் மரபைக் காப்பதாகுமா ?

THIRU K. RAMAMOORTHI : Sir, I want to move the other amendment to clause 3.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தக் கிளாசை முடித்துவிட்டேன். அதை நிறைவேற்றியாகிவிட்டது. மூன்றாவது பிரிவு மசோதாவின் அங்கமாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு நீங்கள் அதற்கு எப்படி அமெண்ட்மெண்ட் கொடுக்க முடியும்?

The hon. Member is an advocate and he must have known the rules of the Assembly.

THIRU K. RAMAMOORTHI : Sir, I am sorry to say that this is not the way the Chair should treat an hon. Member. Of course, I am an advocate . . . .

MR. DEPUTY SPEAKER : I am afraid I have to tell you that as a lawyer the hon. Member should have known the Assembly Rules.

THIRU K. RAMAMOORTHI : As a lawyer I have been following the rules. But the Chair is not following the rules at present.

MR. DEPUTY SPEAKER : Clause 3 is already passed and I am going to put clause 4 to the vote of the House.

THIRU K. RAMAMOORTHI : Before that, I want to move the other amendment.

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member please sit down.

திரு. ராமமூர்த்தி அவர்கள் உட்காருங்கள். நீங்கள் ஒரு திருத்தத்தை மன்றத்திலே எழுப்பி அந்தத் திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டு, பிறகு பிரிவு 3 பேரவையின் முடிவுற்கு விடப்பட்டு நிறைவேறிய பிறகு அந்தப் பிரிவிற்கு திருத்தம் இருக்கிறது என்றால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

THIRU K. VINAYAKAM : There are set of rules. The relative amendment has been called for and voted down and you have passed on to the next amendment. Is that clear ?

MR. DEPUTY SPEAKER : Yes.

THIRU K. VINAYAKAM : Then, the hon. Member has no right to move any amendment. But you have to remember, Sir, that he is under the impression that he has not been called upon to speak at the relevant time. We go clause by clause. After second clause was over, 3rd clause was called. At that time, the hon. Member was not called to move his amendment on that clause. That is his grievance. You seem to feel that it (clause) has been voted upon and you had passed on to the next clause viz., Clause 4. When we are in Clause 4, we cannot go back. That we also understand. But the hon. Member's contention is that he was not given an opportunity to move his amendment. Let that be clear. We are all lawyers and we are not making much of the affair. Consideration could have been given to his amendment. If order is to be maintained, we will sit down.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) மசோதாவினை சட்டமாக்க வேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே இது சட்டமாக்கப் படுவதற்கு முன்பாக என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் பல்வேறு வழிகளில் பல்வேறு முறைகளில் இது அவசர அவசரமாக நிறைவேற்றப்படுகிறது என்ற கருத்தை நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மசோதாவின் இரண்டாவது பிரிவைப் பொறுத்தவரையில், கொண்டு வந்திருக்கிற முறை, இதிலே சொல்லப்பட்டிருக்கிற எந்தெந்த வார்த்தைகள் திருத்தங்களாகக் கொண்டுவரப் பட்டிருக்கின்றனவோ, அந்த வார்த்தைகளெல்லாம் மிகச் சுலபமாக தவிர்த்திருக்கக் கூடியவை என்பதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்த மசோதாவினுடைய மற்ற பிரிவுகளைப் பொறுத்தவரைக்கும், டெலிகேட் என்பதற்குப் பதிலாக தலைவர் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம என்ற ஒரு திருத்தத்தைப் பொறுத்தவரைக்கும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பிரைமரி கோவாபரேடிவ் லாண்டு டெவலப்மெண்டு பாங்குகளைப் பொறுத்தவரைக்கும், அதனுடைய அடிப்படை உரிமையை இந்தச் சட்டம் பறிப்பதாக இருக்கிறது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இந்தக் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி பலர் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே ஒரு முக்கியமான கருத்தை அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டு சொல்லியிருக்கிறது.

"These associations are to be protected not only against heavy handed frontal attack but also from being stifled by more subtle governmental interference."

இவைகளெல்லாம் நடைபெறும் என்று தெரிந்து இருக்கிறது. இவைகளெல்லாம் நடைபெறும் என்று தெரிந்தோ தானோ என்னவோ, இதற்கு வழிகாட்டுகிற அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டு இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இந்திய சுப்ரீம் கோர்ட்டும் ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. 1963-ம் ஆண்டில் வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிற ஒன்றை மட்டும் இங்கே படிக்க விரும்புகிறேன். "Any rule must be in the interest of public order and must amount to reasonable restriction."

ஆனால் இன்றைய தினம் இந்த மன்றத்திற்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற திருத்தங்கள் இந்த வாதங்கள் எதற்குமே ஒவ்வாத ஒன்றாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இந்த சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பில் இன்னொன்றும் அடிப்படையாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது—

இந்தச் சட்டத்திலே எது சொல்லப்படவில்லையோ அது விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிக் கூடச் செய்வார்களா ? இதைப் பைத்தியக்காரத்தனம் என்று சொல்லவில்லையானாலும் எப்படி இந்த விதியையும் சட்டத்தையும் இந்த மன்றம் செய்திருக்கிறது என்பதைநீதிமன்றம் பார்த்து அது செல்லாது என்று அடித்திருக்கிறார்கள். உலகத்திலேயே இல்லாத ஒன்றைச் செய்திருக்கிறார்கள். குல்லாயைத் தைத்து வைத்துக் கொண்டு அதற்கேற்ற தலையைத் தேடும் நிலையில் இருக்கிறார்கள்.

இந்த மசோதாவின் உள்நோக்கத்தைப் பார்க்கும்போது அமைச்சர் அவர்கள் என்ன காரியத்திற்காக இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று புரியவில்லை. கூட்டுறவு உலகத்தில் கண்டிராத புதுமைகள் எல்லாம் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எழுப்புகிற விதிகளில் காணப்படுகின்றன. கம்பெனி சட்டத்தின்படி தான் பிராக்ஸி ஓட்டு உண்டு. கூட்டுறவு உலகத்தில் அப்படிப்பட்ட நிலைமை கிடையாது. கூட்டுறவு முறையில் யாராக இருந்தாலும் நேரடியாகச் சென்றுதான் ஓட்டு அளிக்க வேண்டும். ஐந்தாவது விதி, ஐந்தாவது பிரிவில்—

The election of the members shall by the majority of votes of the delegates or their authorised representatives present and voting.

என்று இருக்கிறது. இது என்ன காரணத்திற்காக? எங்கள் மாவட்டத்தில் பலரிடம்சென்று ஓட்டு இருப்பவர்களிடம் சென்று அதை வாங்கிக் கொண்டு வந்து ஓட்டளிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கலாம்; நாளைக்குக் காங்கிரசாக இருக்கலாம்; அடுத்து, சுதந்திராவாக இருக்கலாம்; அடுத்து கம்யூனிஸ்டாக இருக்கலாம். நாமே நிரந்தரமாக இருப்போம் என்று நினைத்துச் செய்கிறார்களா ? அல்லது எந்தக் கட்சி வந்தாலும் நாம்தான் அமைச்சராக இருப்போம் என்று நினைத்து இப்படிப்பட்ட விதியைச் செய்கிறாரா ? இது கூட்டுறவு இயக்கத்திற்கு நன்மையாக இருக்காது. நாம் விதிகளை ஏற்படுத்தினால் நீதிமன்றத்திற்குப் போனாலும் மதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். இது ஹேஸ்டி லெஜிஸ்லேஷன்—அவசர அவசரமாக பிழைகளுடன் கூட நிறைவேற்றப்பட்ட மசோதா என்று கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

சிறு சிறு தவறுகள் சட்டத்திலே இடம் பெற்றிருக்கின்றன என்பதை நினைக்கும்போது மிகுந்த வேதனையாக இருக்கிறது. இரண்டாவது பிரிவில் கடைசி இரண்டு வாக்கியங்களைப் படிக்கிறேன்—

for the words " existing members of ", the words " existing members of the Board of Directors of " shall be substituted.

மிகச் சாதாரணத் திருத்தந்தான். இந்த வார்த்தைகள் எப்படி விடுபட்டுப் போயின என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த மன்றத்தை எவ்வளவு துச்சமாக மதித்து இந்த மசோதா இவ்வளவு அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நான்காவது பிரிவில்



அந்தத்திருத்தம் எதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது ? நோக்கம் என்ன? விளைவுகள் என்ன? இதெல்லாம் இந்த மசோதாவில் விளக்கப்படவேண்டிய இடத்தில் விளக்கப்படவில்லை.

கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை இந்த மன்றம் ஒன்றை மனத்தில் கொள்ள வேண்டும். கட்சி சார்பு இன்றி எல்லாக் கட்சியினரும் பல வருஷ காலமாக கூட்டுறவுத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை கட்சி வித்தியாசம் பாராட்டாமல் நடத்தி வருகிறார்கள். அதனால்தான் இன்று வரை கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முக உடையார் அவர்கள் பல ஆண்டு காலமாக கூட்டுறவுத் துறையில் பணியாற்றி வருகிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பழனிவேல் ராஜன் அவர்கள் இந்தத் துறையிலே இருந்து வருகிறார். திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு ராஜாராம் அவர்களுடைய தந்தையார் அவர்கள் இதிலே இருக்கிறார்கள்.

இன்டிகேட் காங்கிரசில் இருக்கக்கூடிய கனகசபை அவர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதுமாதிரி அவசரமாகச் செய்துதான் கோர்ட்டுக்குப் போய் அடிபட்டுப் போய் விட்டது. ஆக நல்லமுறையில் வளர்க்கப்பட்டு வந்துள்ள இந்த இயக்கத்தைப் பொறுத்த கட்டத்தை—கட்சிக் கண்ணோட்டத்துடன் இந்த மசோதா நிறைவேற்றப்படுமானால் அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கூட நன்மையாக இருக்க முடியாது என்று சொல்லி இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி நல்லமுறையில் பரிசீலித்து அதற்குப் பிறகு இதை நிறைவேற்றலாம் என்று என் கருத்தை வலியுறுத்தி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கு பேசுகிறபோது இது பயித்தியக்காரத்தனம் என்று பேசியது அவர்களுக்கு அழகல்ல. . அவருக்குப் பதில் சொல்ல எனக்கும் தெரியும், முடியும். ஆனால் இங்கே இந்த அவையில் " கண்ணியம் " என்று எழுதிப் போட்டிருப்பதால் தகாத சொற்களைப் பயன்படுத்தி நான் பதில் சொல்வதற்கு தயாராக இல்லை. (ஆரவாரம்.) ஒன்றை நான் கூற விரும்புகிறேன், அது நண்பர் ராமமூர்த்திக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று நம்புகிறேன். தலைவர்போய் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு பதிலாக இன்னொருவரை—அவருக்கு உடல் நலம் இல்லாமல் அல்லது வேறு காரணங்களுக்காக போக முடியாமல் இருந்தால்—அனுப்புவது " ப்ராக்ஸி " என்று சொன்னார்கள். ப்ராக்ஸி என்ற சொல்லை நாம் எங்கும் பயன்படுத்தவில்லை. பாங்கின் தலைவர் சென்று அதன் பிரதிநிதியாகப் பேச வேண்டிய நிலைமை ஏற்படும்போது, பாங்கின் நலனைப் பாதுகாக்க அவர் இல்லை என்று சொன்னால் அது தவறு என்று கருதுகிறோம்.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1970 மார்ச் 9

"A restriction can be said to be in the interests of public order only if the connection between the restriction and the public order is proximate and direct. Indirect or far-fetched or unreal connection between the restriction and public order would not fall within the purview of the expression 'in the interest of public order'.

இன்றையதினம் தலைவர்தான் டெலிகட்டாக இருக்க வேண்டும் என்று சொல்வது எவ்வளவு பொறுத்தமற்றது என்பது இந்த சுப்ரீம் கோர்ட்டு கொடுத்திருக்கிற தீர்ப்பிலிருந்து மிகத் தெளிவாக தெரிகிறது.

அது மட்டுமல்ல. இந்தக் கூட்டுறவு சங்கங்களுடைய மகாசபை, ஜெனரல் பாடிக்கு தனித்தனியாக பல அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம். அதில் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கும், டெலிகேட்டை தேர்ந்தெடுப்பதற்கும் குறிப்பாக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. டெலிகேட், தலைவர் இருவரும் ஒன்றாக இருப்பதினால் என்ன கெட்டுப்போய்விட்டது என்று பதில் சொல்லப்படுகிறது. நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரைக்கும் அங்கே இருப்பவர்கள் அதற்காக உழைக்கிற முறையில் தான் அந்தக் கூட்டுறவு முறை வளர்கிறது. தலைவர் பல நேரங்களில் வெளியூருக்குச் செல்ல முடியாதவராக இருக்கலாம், அதற்கு நேரம் இல்லாதவராக இருக்கலாம். அந்தக் கூட்டுறவு சங்கம் சம்பந்தமாக, அந்த இயக்கத்தின் வேலைகளை தலைவராக இருப்பவர் சரிவர கவனித்து வந்தாலும் கூட, அடிக்கடி வெளியூருக்குச் செல்லாது, வோட்டு அளிப்பதற்கு வெளியூருக்குச் செல்வதற்கு முடியாத தலைவராக இருக்கலாம்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இன்றையதினம் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, டெலிகேட்டுக்குப் பதிலாக பிரசிடெண்டு நியமிக்கப்படலாம் என்று சொல்லி, அந்தத் திருத்தங்கள் இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டன. திருத்தங்கள் நிறைவேறிய பிறகு, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றி இப்பொழுது இந்த மன்றத்தில் விவாதம் நடைபெறுவது முறைதானா. நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை, பிறகு எதிர்த்துப் பேசுவது முறைதானா. . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தேர்டு ரீடிங் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ ? எதை வேண்டுமானாலும் பேசலாம், சட்ட மன்றத்தில் பேசலாம், வெளியேயும் பேசலாம், ஊரிலெல்லாம் கூடப் பேசலாம்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம்; சட்டமன்றத்தில் வேண்டுமானாலும் பேசலாம், எங்கு வேண்டுமானாலும் பேசலாம் என்று சொல்கிறார்களே.



1970 மார்ச் 9]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்படி அங்கத்தினர் என்மீது குற்றச்சாட்டு சாட்டலாமா ? அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், உதவி சபாநாயகர் அவர்களே இவர் பொறுப்பு இல்லாமல் இப்படி சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவரைப்பற்றிச் சொல்லலாமா ?

**திரு. க. இராமமூர்த்தி :** டெலிகேட் தனியாகத் தேர்ந்தெடுப்பதிலே, தலைவருக்கு ஒத்தாசையாக. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஷார்ட்டாகப் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவருக்கு ஒத்தாசையாகவோ அல்லது சில சந்தர்ப்பங்களில் வேலைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு அந்தச் சங்கம் இருவரை வைத்துக்கொள்ளலாம். ஒருவர் டெலிகேட்டாக இருக்க வேண்டும், இன்னொருவர் பிரசிடெண்டாக இருக்க வேண்டும் என்று எண்ணினால், அந்த எண்ணத்தில் குறுக்கிடுவது கூட்டுறவு நோக்கத்திற்கே பாதகமாக அமையும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல கடைசியாக இன்னொன்றும் இருந்து கொண்டிருக்கிறது.

"The election of a person as a Member of the Board shall not be called in question on the ground of the existence of any vacancy for whatever reason among the Presidents of the primary development banks."

எவ்வளவு சர்வாதிகாரத் தன்மையில் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். என்ன காரணத்திற்காக வேண்டுமானாலும் என்று சொல்லும்பொழுது, அதன் உட்பொருள் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். பல இடங்களில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற குறை பல கூட்டுறவு விதிகளுக்கு புறம்பாக தலைவராகவும், டைரக்டராகவும் நியமிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை நீக்கவேண்டுமென்றால், கோர்ட்டுக்குத் தான் போயாக வேண்டும். கோர்ட்டுக்குப் போய் அவரை நீக்கிவிடுகிற நிலைமை ஏற்படுமேயானால், அந்த பாங்கு தன்னுடைய தலைவரை புதியதாகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னாலே ஒரு தேர்தலை நடத்தி முடிப்பது என்பது ஜனநாயகத்திற்கு நாம் அளிக்கின்ற மரியாதை ஆகாது, நாட்டில் கூட்டுறவு இயக்கம் வளர்வதற்கு இது உதவாது என்று சொல்லி, இந்த மசோதா கைவிடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நோக்கில் கூட அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து, அமைச்சர் பரிசீலனை செய்து திரும்பப்பெற்று, நல்ல முறையில் சாவகாசமாக பரிசீலனை செய்து, புதியதோர் மசோதாவைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## (7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

'Nil'

### B. *Reports, Notification and other papers.*

*61. Notice of Demands for Advance Grants during the year 1970–71 (English and Tamil).

*62. Estimate of Expenditure for which a Vote on Account is required during the year 1970–71.

† 63. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council during the period from 19th to 28th January 1970.

---

* Depatched to Members on 6th March 1970.

† Despatched to Members on 7th March 1970.



## இணைப்பு I

407(-ம் பக்கத்தில் 269-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக்காண்க.)

*List of Central Governments undertakings in Tamil Nadu.*

| Serial number. | Name of the establishment. | District in which located. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Neyveli Lignite Corporation, Neyveli .. | South Arcot. |
| 2. | Hindusthan Teleprinters, St. Thomas Mount. | Chinglepet East. |
| 3. | Surgical Instruments Plant, Nandampakkam. | Do. |
| 4. | Heavy Vehicles Factory, Avadi .. | Do. |
| 5. | Clothing Factory, Avadi .. .. | Do. |
| 6. | Central Vehicle Depot, Avadi .. .. | Do. |
| 7. | Wig India, Ambattur Industrial Estate | Do. |
| 8. | Madras Refineries Ltd., Manali .. | Do. |
| 9. | Madras Atomic Power Project, Kalpakkam. | Chingleput West. |
| 10. | Government of India Press, Perianaickenpalayam. | Coimbatore. |
| 11. | India Rare Earths Ltd., Mauavalakurichi | Kanyakumari. |
| 12. | Cordite Factory, Aruvankadu .. .. | The Nilgiris. |
| 13. | Hindustan Photo Films Manufacturing Co. Ltd., Indu Nagar. | Do. |
| 14. | Central Electo–Chemical Research Institute, Karaikudi. | Ramanathapuram |
| 15. | Central Marine Fisheries Research Institute, Mandapam. | Do. |
| 16. | Bharat Heavy Electricals Ltd. Tiruchirapalli. | Tiruchirapalli. |
| 17. | Ordinance Factory, Tiruchirapalli .. | Do. |
| 18. | Central Plastic Engineering Tools, Industrial Estate, Guindy. | Madras. |
| 19. | Small Scales Services Institutes, Guindy. | Do. |
| 20. | Central Footwear Training Centre, Industrial Estate, Guindy. | Do. |
| 21. | Posts and Telegraphs Workshop, Industrial Estate, Guindy. | Do. |
| 22. | Integral Coach Factory, Perumbur .. | Do. |
| 23. | High Pressure Boiler Plant, Tiruverambur. | Tiruchirapalli. |
| 24. | Madras Fertilisers Ltd., Manali. .. | Chingleput East. |

இணைப்பு II

**தமிழ் நாட்டில் மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பட்டியல்.**

1. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரஷன், நெய்வேலி, தென் ஆர்க்காடு மாவட்டம்.

2. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், பறங்கிமலை, கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

3. அறுவைக் கருவிகள் தொழிற்சாலை, நந்தம்பாக்கம், கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

4. கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி, கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

5. ஆடை தொழிற்சாலை, ஆவடி, கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

6. மத்திய வண்டி நிலையம், ஆவடி, கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

7. விக் இந்தியா, அம்பத்தூர் தொழிற்பேட்டை, கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

8. சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, மணலி, கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

9. சென்னை அணுமின்சக்தி நிலையம், கல்பாக்கம், மேற்கு செங்கற்பட்டு மாவட்டம்.

10. இந்திய அரசு அச்சகம், பெரிய நாயக்கன் பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

11. இந்தியன் ரேர் எர்த்தஸ் லிமிடெட், மணவாளக் குறிச்சி, கன்னியாகுமரி மாவட்டம்.

12. வெடிமருந்துத் தொழிற்சாலை, அரவங்காடு, நீலகிரி மாவட்டம்.

13. இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தயாரிப்பு நிறுவனம், இந்துநகர், ஊட்டி, நீலகிரி மாவட்டம்.

14. மத்திய மின்-ரசாயன ஆராய்ச்சி நிலையம், காரைக்குடி, ராமநாதபுரம் மாவட்டம்.

15. மத்திய கடல்வாழ் மீன்வள ஆராய்ச்சி நிலையம், மண்டபம், ராமநாதபுரம் மாவட்டம்.

16. பாரத் ஹெவி எலக்ரிகல்ஸ் நிறுவனம், திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

17. படைக்கலத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

18. மத்திய பிளாஸ்டிக் பொறியியல் கருவிகள் தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை மாவட்டம்.



இணைப்பு I—தொடர்ச்சி.

**தமிழ் நாட்டில் மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பட்டியல் தொடர்ச்சி**

19. சிறு தொழில் பணிகள் நிறுவனம், கிண்டி, சென்னை மாவட்டம்.

20. மத்தியக் காலணிப் பயிற்சி நிலையம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை மாவட்டம்.

21. அஞ்சல்-தந்தி பணிக்களரி, தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை மாவட்டம்.

22. ரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர், சென்னை மாவட்டம்.

23. உயர் அழுத்த கொதிகலம் பிரிவு, திருவெரம்பூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

24. சென்னை உர நிறுவனம், மணலி, கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்.

## இணைப்பு II

[416-ம் பக்கத்தில் 279-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆறு.

(ஆ) அண்டு (இ)—

| விதைப் பண்ணையின் பெயர். (1) | ஆண்டு. (2) | வழங்கப்பட்ட விதை அளவு. (3) டன் | கிலோ கிராம். | வழங்கப்பட்ட விதை மதிப்பு. (4) ரூ. | பை. |
|---|---|---|---|---|---|
| 1 விநாயகபுரம் .. | 1963-64 | 26 | 143 | 14,694 | 16 |
| | 1964-65 | 44 | 955 | 27,154 | 93 |
| | 1965-66 | 31 | 030 | 18,493 | 30 |
| | 1966-67 | 45 | 892 | 27,535 | 20 |
| | 1937-68 | 27 | 240 | 29,964 | 00 |
| | 1968-69 | 46 | 384 | 41,745 | 60 |
| 2 வைகை அணை .. | 1964-65 | 6 | 011 | 5,868 | 98 |
| | 1965-66 | 6 | 824 | 7,101 | 58 |
| | 1966-67 | 6 | 329 | 6,814 | 94 |
| | 1967-68 | 0 | 164 | 303 | 21 |
| | 1968-69 | 5 | 520 | 4,140 | 99 |
| 3 கோவில்பட்டி .. | 1964-65 | 18 | 886 | 19,174 | 32 |
| | 1965-66 | 12 | 143 | 26,366 | 10 |
| | 1966-67 | 5 | 452 | 19,084 | 59 |
| | 1967-68 | 4 | 140 | 3,841 | 69 |
| | 1968-69 | 9 | 600 | 7,200 | 00 |
| 4 கீழ்கூடலூர் .. | 1963-64 | 41 | 220 | 20,003 | 52 |
| | 1964-65 | 60 | 738 | 32,141 | 42 |
| | 1965-66 | 85 | 559 | 49,892 | 10 |
| | 1966-67 | 65 | 898 | 42,371 | 62 |
| | 1967-68 | 82 | 985 | 58,634 | 60 |
| | 1968-69 | 86 | 867 | 69,196 | 00 |
| 5 வில்பட்டி .. | 1960-61 | 29,778 | 827 | 12,796 | 18 |
| | 1961-62 | 56,177 | 000 | 27,563 | 72 |
| | 1962-63 | 37,217 | 000 | 15,210 | 70 |
| | 1963-64 | 50,063 | 000 | 11,806 | 38 |
| | 1964-65 | 2,438 | 000 | 1,248 | 01 |
| | 1965-66 | 30,895 | 000 | 16,446 | 72 |
| | 1966-67 | 20,269 | 000 | 9,832 | 03 |
| | 1967-68 | 21,480 | 000 | 17,364 | 11 |
| | 1968-69 | 27,595 | 000 | 19,225 | 09 |
| 6 ரைபில் ரேஞ்சு .. | 1962-63 | 23,740 | 000 | 13,513 | 80 |
| | 1963-64 | 57,346 | 000 | 34,981 | 06 |
| | 1964-65 | 22,617 | 000 | 15,927 | 22 |
| | 1965-66 | 17,520 | 000 | 11,305 | 80 |
| | 1966-67 | 14,085 | 000 | 7,183 | 35 |
| | 1967-68 | 26,118 | 000 | 15,001 | 20 |
| | 1968-69 | 26,518 | 000 | 14,714 | 49 |



(a) Six.

(b) and (c)—

| Name of the farm. (1) | Year. (2) | Quantity of seeds distributed. (3) TONNE. | KILOGRAM. | Value of seeds distributed. (4) RS. | P. |
|---|---|---|---|---|---|
| 1 Vinayagapuram .. | 1963-64 | 26 | 143 | 14,694 | 16 |
| | 1964-65 | 44 | 955 | 27,154 | 93 |
| | 1965-66 | 31 | 030 | 18,493 | 30 |
| | 1966-67 | 45 | 892 | 27,535 | 20 |
| | 1967-68 | 27 | 240 | 29,964 | 00 |
| | 1968-69 | 46 | 384 | 41,745 | 60 |
| 2 Vaigai Dam .. | 1964-65 | 6 | 011 | 5,868 | 98 |
| | 1965-66 | 6 | 824 | 7,101 | 58 |
| | 1966-67 | 6 | 329 | 6,814 | 94 |
| | 1967-68 | 0 | 164 | 303 | 21 |
| | 1968-69 | 5 | 520 | 4,140 | 99 |
| 3 Koilpatti .. | 1964-65 | 18 | 886 | 19,174 | 32 |
| | 1965-66 | 12 | 143 | 26,366 | 10 |
| | 1966-67 | 5 | 452 | 19,084 | 59 |
| | 1967-68 | 4 | 140 | 3,841 | 69 |
| | 1968-69 | 9 | 600 | 7,200 | 00 |
| 4 Keelagudalur .. | 1963-64 | 41 | 220 | 20,003 | 52 |
| | 1964-65 | 60 | 738 | 32,141 | 42 |
| | 1965-66 | 85 | 559 | 49,892 | 10 |
| | 1966-67 | 65 | 898 | 42,371 | 62 |
| | 1967-68 | 82 | 985 | 58,634 | 60 |
| | 1938-69 | 86 | 867 | 69,196 | 00 |
| 5 Vilpatty .. | 1960-61 | 29,778 | 827 | 12,796 | 18 |
| | 1961-62 | 56,177 | 000 | 27,563 | 72 |
| | 1962-63 | 37,217 | 000 | 15,210 | 70 |
| | 1963-64 | 50,063 | 000 | 11,806 | 38 |
| | 1964-65 | 2,438 | 000 | 1,248 | 01 |
| | 1965-66 | 30,895 | 000 | 16,446 | 72 |
| | 1966-67 | 20,269 | 000 | 9,832 | 03 |
| | 1967-68 | 21,480 | 000 | 17,364 | 11 |
| | 1968-69 | 27,595 | 000 | 19,225 | 09 |
| 6 Rifle Range .. | 1962-63 | 23,740 | 000 | 13,513 | 80 |
| | 1963-64 | 57,346 | 000 | 34,981 | 06 |
| | 1964-65 | 22,617 | 000 | 15,927 | 22 |
| | 1965-66 | 17,520 | 000 | 11,305 | 80 |
| | 1966-67 | 14,085 | 000 | 7,183 | 35 |
| | 1967-68 | 26,118 | 000 | 15,001 | 20 |
| | 1968-69 | 26,518 | 000 | 14,714 | 49 |

# Index to
# Tamil Nadu Legislative Council Debates

SEVENTH SESSION OF THE FOURTHLEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

4th and 5th March 1970.

(*Volume XXVI*—*Nos.* 1 to 5.)

## A


PAGES

ABDUL GHAFFOOR SAHIB, Thiru M.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 61-63

ACCIDENT(S)—
Fire—, Krishnampet ... ... ... ... 131

ADITANAR, Thiru Si. Pa.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 138-139, 140, 141, 142, 254, 255, 283
Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... ... ... ... 476-478, 485-488, 490, 493, 496-497

ADMINISTRATION—
Ponnamaravathi area, upgrading as taluk ... 27

AGNI RAJU, Thiru S.—
Job-oriented Education ... ... ... ... 405
Oil exploration ... ... ... ... 118-119
Planning Board to increase production of export commodities, constitution ... ... ... 21-22
Seed Farms, Madurai ... ... ... ... 416-418

AGRICULTURE—
New strain of paddy, details ... ... ... 224-225
Seed Farms, Madurai ... ... ... ... 416-418
Tractors, import ... ... ... ... ... 411-412
Tractor Workshop at Madurai ... ... ... 314-315

ALAGARSAMY, Thiru S.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 299-301

[திரு. சி. பா. ஆதித்தனர்] [1970 மார்ச் 9

பி.ப. 1-30 * **மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனர்:** தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்த அந்தத் திருத்தம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஆனல் அதன் உட்கருத்தை நன்ருகச் சொல்லி விட்டார்கள். " For whatever reasons " என்பதை அந்தப் பகுதியில் ஏன் போட்டிருக்கிறது என்ற விளக்கம் கேட்டார்கள். அரந்தாங்கியில் ஸ்பெஷல் ஆபீசர் இருக்கிருர். பிரசிடெண்ட் கிடையாது. ஸ்பெஷல் ஆபீசர் ஓட்டுப் போட வேண்டும் என்று சொல்லுகிறீர்களா? பிரசிடெண்ட் இல்லாமல் இருக்கும் போது, ஸ்பெஷல் ஆபீசர், அரசாங்க அதிகாரி, ஓட்டுப் போடாமல் இருக்க வேண்டும் என்றுதான் " for whatever reason " என்று போட்டிருக்கிரேம். அதை எடுத்து விட்டால் என்ன ஆகும்? ஸ்பெஷல் ஆபீசர் ஓட்டுப் போடுகிற நிலை ஏற்படும். அப்படி அரசாங்க உத்தியோகஸ்தர் ஓட்டுப் போடக் கூடாது என்பதற்காகத்தான் " For whatever reason " என்று போட்டிருக்கிறது. " Due to the failure of the general bodv to elect a president " என்று மாத்திரம் போட்டால், ஸ்பெஷல் ஆபீசருக்கும் ஓட்டுரிமை உண்டாகும்.

கடைசியாக கோர்ட்டுக்குப் போய், கோர்ட்டுக்குப் போய் என்று இப்படி அசெம்பிளியில் சொல்வதைப் பார்த்தால் எடுத்ததற்கெல்லாம் மீண்டும், மீண்டும் கோர்ட்டுக்குப் போவோம் என்ருல், அது என்னை அச்சுறுத்துவதாக இருக்கிறது. சற்று பயமாக இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், மாண்புமிகு அமைச்சர் அச்சுறுத்துவதாக இருக்கிறது என்கிருர்கள். ஏற்கெனவேயே இது கோர்ட்டுக்குப் போய் அடிபட்டுப் போய்விட்டது. மீண்டும், மீண்டும் இதையே செய்வதால், நாங்களும் அதற்குத் துணைபோக வண்டாம் என்றுதான் சொல்லுகிரேம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். கோர்ட்டுக்குச் செல்லும் அளவிற்கு இல்லாமல், விவரமாகக் கவனித்துச் செய்திருக்கிரேம். ஒன்றைத் தவிர மற்றதை யெல்லாம் ஒத்துக்கொள்ளுகிரேம் என்று கோர்ட்டே சொல்லி இருக்கிருர்கள். கோர்ட்டுக்குப் போவோம் என்று வீணுக, அனுவசியமாக, சட்ட சபையில் வழக்கறிஞர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு அதை நம்பி யாராவது ஏமாறக்கூடும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

கூட்டுறவின் நோக்கம் பழுது படுகிறது என்ருர்கள். நோக்கம், இப்பொழுது உள்ள கூட்டுறவு வங்கிகள், சங்கங்கள் எல்லாம் ஒரு சிலருடைய கையில் சிக்கிக்கொண்டு தவிப்பது. நீடிக்க வேண்டும் என்பதா? நிச்சயமாக, அந்த நிலை மாற வேண்டும் என்பது கூட்டுறவு அமைச்சர்களெல்லாம் கூடி, மத்திய கூட்டுறவு அமைச்சரும்—அப்பொழுது இருந்த கூட்டுறவு அமைச்சர், அவர்கள் இவர்



1970 மார்ச் 9]

களுக்கு வேண்டியவரோ, வேண்டாதவரோ—அவர்களும் கூடி சேர்ந்து எடுத்த முடிவு. இப்பொழுது ஆதிக்கம் செய்து கொண்டு இருப்பவர்கள் நீண்ட நெடுங்காலமாக தொடர்ந்து இருந்துக் கொண்டிருப்பதை, நீக்கவேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிருர்கள். அதைத்தான் சிறந்த நோக்கமாகக் கொண்டிருக்கிருர்கள். அதிலே இப்பொழுது இருப்பவர்களே இருக்க வேண்டும் என்று சொன்னல், அது கூட்டுறவு அமைச்சர்களின்—மத்திய அமைச்சரையும் சேர்த்து—நோக்கம் அல்ல என்று சொல்லிக் கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பயமுறுத்துகிருர்கள் என்ருர்கள். அவர்களைக் கண்டால் கோர்ட்டே பயப்படும். ஒரு சிலர் கையில் இருக்கிறது என்கிருர்கள். அந்தச் சிலர் இவர்கள் கையில் சிக்க வேண்டாம். ஒருவர் கையில் இருப்பதை மாற்றி, வேருெருவர் கையில் வரவேண்டும் என்பதுதான் நோக்கம் என்பதை மறுக்க முடியாது. இப்பொழுது காங்கிரஸ்காரர் கையில் இருக்கிறது என்று சொல்லிப்போட்டு, அது எங்கள் கையில் வர வேண்டும் என்று அட்ஜஸ்ட் பண்ணி, சட்டத்தைத் தயாரித்து, தங்கள் விருப்பப்படியே செய்திருப்பதைச் சொல்லுகிரேம். அது திராவிட முன்னேற்றக் கழக கூட்டுறவு வங்கி ஆகாமல், மக்கள் கூட்டுறவு வங்கி ஆகவேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்பொழுது, காங்கிரஸ்காரர்கள் கையில் இருக்கிறது என்று இப்பொழுது ஒப்புக் கொள்ளுகிருர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சேவை செய்கிறவர்கள் கையில் இருக்கிறது; உங்கள் கண்ணுக்கு அப்படித் தோன்றுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** பேரவையின் முன் உள்ள கேள்வி—

"1970-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) மசோதா நிறைவேற்றப் படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறை வேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** பேரவையின் இன் 1-35
றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப் பட்டது.

A—*cont.*


| | PAGES |
|---|---|
| ANIMAL HUSBANDRY— | |
| Central Semen Banks, establishment ... ... | 405-406 |
| ARCHAEOLOGY— | |
| Remains of Pallava age, excavation ... ... | 313-314 |


B


| | |
|---|---|
| BALAN, Thiru M. C.— | |
| Budget, 1970-71, G.D. ... ... ... ... | 150-154 |
| Rice scarcity in Vilavancode ane Kalkulam taluks, steps to arrest soaring prices (C.A.) ... | 232-233, 234 |
| BALASUBRAMANYAN, Thiru A.— | |
| Budget, 1970-71, G.D. ... ... ... ... | 288-296 |
| Teachers, Veppur Panchayat Union, canvassing for Family Planning ... ... ... ... | 305-307 |
| BHARATHI MOHAN, Thiru G.— | |
| Budget, 1970-71, G.D. ... ... ... ... | 55-58 |
| BHUPATHY, Thiru M.— | |
| Fire accident, Krishnampet ... ... ... ... | 131 |
| Headquarters Hospital, Coimbatore, Ophthalmologist ... ... ... ... | 402 |
| BHUVRAHAN, *Thiru* G. | |
| Budget, 1970-71, G.D. ... ... | 352-359 |
| BILL(S): | |
| Appropriation (Vote on Account) Bill, 1970, Message from the Governor ... ... | 398 |
| Int., ... ... ... ... | 398 |
| Consid. ... ... ... ... ... | 435-476 |
| Consid. Consid. cl, Motion to pass, passed ... | 476 |
| Co-operative Land Development Banks (Amendmeent) Bill, 1970 ... ... ... ... | |
| Int., Consid ... ... ... ... | 476-488 |
| Consid, cl., ... ... ... ... | 488-492 |
| Motion to pass ... ... ... ... | 493-497 |
| Passed ... ... ... ... ... | 497 |




B.—*cont.*


| | *Pages.* |
|---|---|
| BIRDS SANCTUARY. | |
| Kodikkarni ... ... ... ... ... | 423-424 |
| Location and protection ... ... ... | 422-423 |
| BOARD(S). | |
| Planning Board to increase production of export commodities, constitution ... ... ... | 21-22 |
| BOJAN, *Thiru* K. | |
| Salem Steel Plant, Centre's permission ... ... | 19-21 |
| BUILDING(S). | |
| Tamil Nadu Co-operative Union Building construction ... ... ... | 326-328 |


C.


| | |
|---|---|
| CALLING ATTENTION. | |
| Dispute between employees and employer of Dharangadhara Chemical Works Limited ... | 431-433 |
| Harijan agriculturists of Kottur, protection to | 39-40 |
| Rice scarcity in Vilavancode and Kalkulam taluks, steps to arrest soaring prices ... | 232-234 |
| CHAIR. | |
| *Rulings and Observations.* | |
| *Adjournment Motions.* | |
| Attack by Shiv Sena volunteers on the shops and hotels of Tamilians and other South Indians in Bombay and the consequent plight of Tamilians— | |
| Consent was withheld as the Chair felt that in the light of thee clarification given by the Chief Minister the matter was not so important as to warrant the adjournment of the business of the House to discuss it ... | 39 |
| Behaviour of the Police in Maniappattu Village, Gudiyattam Taluk | |
| Consent was withheld in the light of the explanation offered by the Chief Minister | 137 |
| Mysore Chief Minister's reported statement about the construction of Hemavathy and other Cauvery projects— | |

PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Debate*—cont.

*Opportunity to seek information*—cont.

Another Member stated that even if the guillotine was to be applied at a particular hour, the Speaker could ask the Finance Minister to conclude his speech five to ten minutes ahead of that hour so that Members could be afforded the opportunity to seek some Classification from the Ministers.

The Chair denied the charge that Members were not given opportunity to seek clarification from the Ministers. Nor the right to raise points of order had ever been denied.

It all depended on the Members' and Ministers' co-operation with the Chair in adhering to the time limit fixed by him for speeches.

The Chair, however, reserved its rulings on the point of order ... ... ... ... ... 425-426

*Opportunity to speak.*

With reference to a complaint made by the Leader of the Opposition of lack of sufficient opportunity for expression of views during the discussion on the Budget, the Chair observed that if only Members did not indulge in irrelevant remarks, they would have lot of time at their disposal to refer to important points ... ... ... ... ... ... 430-431

*Decorum*

Members should observe decorum while speaking in the House. It is not in order to violate the established conventions ... ... ... 135-136

Reference to the person presiding should be avoided ... ... ... ... ... 162

When the Chair was on its legs, Members should resume their seats. Even after the Chair sounded the gong calling the Members to order, if many Members were to stand and indulge in cross-talks it would create confusion and would impair the diginity and decorum of the House and would make orderly conduct of the business of the House impossible ... ... ... ... ... ... 281-282



PAGES

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Decorum*—cont. z

*Laughter.*

The Chair deprecated the loud laughter of a Member ... ... ... ... ... 429

*Personal Reference.*

A Member should not make personal references 253

*Expressions used in the House.*

"நான் சொன்னதைப் புரிந்து கொண்டு பே வேண்டும் (you must speak after understanding what I said)—On a point of order raised by a Member against the remark made by another Member, the Chair held that it was not a point of order as the remark might either mean that the Member who made it did not make himself understandable or the other Member spoke without understanding what this member spoke 91

*Objectionable Expressions.*

"கண்காட்சி சாலை" (Exhibition)— in the sentence "During the Congress regime they had kept it (a bus stand) as an Exhibition for foreign visitors to see" used during question hour—Deprecated ... ... ... ... 121

" கரு நாகம்" (Black serpent) in the sentence—"We should not be merciful to 'Black serpents'—with reference to those who misappropriated the funds of public institutions"—Deprecated ... ... ... 221

"நீங்கள் மந்திரியவர்கள் சொல்லுகின்ற காரணத்தைச் சொல்லி அந்தக் காரணத்தைக் காட்டி அனுமதி தரவில்லை என்று சொல்வீர்கள் என்று தெரியும்" I know that you would rule that consent was witheld to the adjournment motion in the light of the statement made by the Minister)—Remark addressed by a Member to the Chair while explaining his adjournment motion and before the Chair gave its ruling—Deprecated ... ... ... ... 135-136

புத்தி (Sense)—in the Sentence "They must have the sense"—a remark made by one Member against another—Deprecated ... 350-352

*Pages*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Adjournment Motions*—cont.

Consent was withheld in the light of the explanatory statement made by the Chief Minister 232

Promulgation of orders under section 144 in Kulamangalam village in Madurai North taluk— 34

Consent was withheld on the ground that the mater came under the day-to-day administration of Government and the member could express his views on it in the discussion on the Budget.

Removal of huts of petty traders within the Mettur Municipal limits and the fast by the victims—

Consent was withheld as the matter came under the day-to-day administration of the Government and as there was no precedent for adjournment of the business for fast and as the member had an opportunity to express his views on the matter in the discussion on the budget ... ... ... 134

Restrictions imposed bp the Government of Ceylon on the visit of Catholics in Tamil Nadu to the Festival in St. Antony's Church in Kachatheevu—

Consent was withheld as the Chair felt that in he light of the Chief Minister's explanatory statement, there was no need to adjourn the business of the House to discuss the matter 36

*Amendments*.

When a Member had given notice of more than one amendment to a particular clause of a Bill, he should move all the amendments to that clause together. If he moved only one amendment to that clause and after that amendment and that clause had been dealt with by the House and the next clause had been taken into consideration, it was not in order for a Member to move the left-out amendment or amendments to the previous clause which had been passed over ... ... 491-492





*Pages*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Debate.*

*Allegations.*

On 6th March 1970 with reference to certain allegations made by a Member against the Chief Minister, the Deputy Speaker ruled that the Member should produce evidence before 9 a.m. the next day in support of his allegation and till then the proceedings connected with the allegations would stand expunged and the news-papers too should not publish the same ... ... ... ... ... ... 279-281

(*See* under 'EXPUNCTION' also)

With reference to certain allegations made by the Leader of the Opposition against the Minister for Co-operation, the Chair drew the attention of the House to a decision arrived at the Conference of Presiding Officers namely that a Member desirous of making allegations against a Member or Minister should give prior intimation to the Chair so that the concerned Member or Minister might be informed of the same and he might be present in the House to reply to the allegations when made. He sought the co-operation of the Members in following that procedure ... ... 337-338

Members should not use the House as a political platform ... ... ... ... ... 371

*Interruptions.*

A Member could interrupt the speech of another on a point of explanation or clarification only with the consent of the Chair ... ... 448-449

*Opportunity to seek information*.

On 9th March 1970, a Member rose on a point of order and stated that as opportunity was denied to him the previous day to seek some information after the Finance Minister's reply by the application of guillotine by the Chair, his privilege was taken away.

*Pages*

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Expressions used in the House*—cont.

*Objectionable Expressions*—cont.

"Super Human-being" in the sentence— "you are a super human being" addressed to the Chair—Deprecated by the Chair with the remark that the Chair derived its authority from the House which was a 'super' body ... 427

*Expunction.*

On 6th March 1970, the Deputy Speaker ordered that certain allegations made by a Member against the Chief Minister and the connected proceedings would stand expunged till the next day and the Press also should not publish the same. However, the next day, 7th March 1970 after the Chief Minister made a statement in the matter, the Chair ordered that the proceedings need not be expunged and might stand in the Official Report. ... ... 284

On 7th March 1970, the Hon. Chief Minister made a statement on an allegation made by a Member against him on the previous day. A Member rose on a point of order and drew the attention of the Speaker to the ruling given by the Deputy Speaker that day to the effect that if the Member who made the allegation against the Chief Minister did not produce proof in support of his allegations by 9 a.m. the next day, the entire connected proceedings would be expunged from the official report and accordingly the proceedings relating to the matter should be expunged unless the Deputy Speaker's ruling was revoked.

The Speaker stated that he was not going to revoke the earlier ruling of the Deputy Speaker. But the Deputy Speaker had only stated the previous day that the Member should produce proof before 9 a.m. the next day and till then the proceedings would stand expunged. As the Member had not produced proof and the Chief Minister has made a clarification, the connected proceedings of the previous day would form part of the Official Report along with the statement made by the Chief Minister that day. He requested the



*Pages*

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Expunction*—cont.

Press to publish the connected proceedings of the previous day together with the statement made by the Chief Minister that day without any distortion and avoiding attribution of motives ... ... ... ... ... 336

*Laying of documents on the Table.*

Any document could be laid on the table of the House only with the prior consent of the Chair ... ... ... ... 341

*Members' Seats.*

Rising on a point of order, the Leader of the Opposition stated that in spite of his request, the Chair had not allotted separate seats for some Members who had separated from his party and the continued occupation of the same seats by them along with the members of his party would result in 'adulteration' and also cause considerable embarrssment to the members of his party and it might even lead to some unexpected untoward incidents. He enquired why there was delay in the allotment of separate seats.

The Chair observed that as per the rule, "a Member shall sit in such order as the Speaker may fix." It was not in order for him to question the Chair why there was delay in the allotment of separate seats. Also, no Member could claim exclusive right to a seat. There were no specific rules which called for party-wise allotment of seats, though by convention such an allotment was made.

The Chair added that as some other party Members had also asked for separate seats, he would examine the question of re-allotment of seats in all its aspects and give his decision in due course ... ... ... ... ... ... 349-351

MINISTER'S STATEMENT.

There could be no debate on a Minister's statement made under rule 82 ... ... ... 336

*Personal Attacks.*

Attacks of a personal nature should be avoided 162

PAGES

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Personal Explanation.*

Can be made by a Member only if refedence has been made to him by another Member ... 144

*Point of Clarification.*

A Member can speak on a point of clarification only with the permission of the Chair ... 174

A Member could rise on a point of clarification only if a reference was made about him and not for seeking clarification on matters referred to in general ... ... ... 242

*Point of Order.*

No point of order would lie on the ruling given by the Chair ... ... ... 339

When a point of order is raised, the Member speaking should resume his seat ... 175

*Privilege Matter.*

With reference to a matter of privilege that a Member sought to raise about the wrong reference made to the names of Members is the Brief Record of Proceedings without prior intimation and consent of the Speaker, the Speaker held that no Member could raise a matter of privilege without prior intimation to, and consent of the Speaker, except in respect of a matter of privilege arising during the sitting of the House for which the Speaker may waive notice ... ... ... ... ... 31

*Proceedings of the House.*

With reference to a point of order raised by a Member that in the copies of the speeches communicated to the Members for perusal, the interruptions made by the Ministers and other Members were not included and in the absence of the same, they were unable to make out their remarks in proper context and to see whether the interruptions have been recorded accurately.

The Chair observed that copies of the speeches were sent to Members for their verification and it was not in order to ask that other speeches including the interruptions of Members or Ministers should be sent to them. ... 344



*Pages*

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Questions and Answers.*

*Non-inclusion of questions in the Order Paper.*

With reference to a point of order raised by a Member that the questions given notice of and renewed by him during the last three years were not included in the list of questions while the questions given notice of by others had been included, the Chair ruled that it was not a point of order. The Chair added that two of the seven questions given notice of by the Member had been admitted and the answers in respect of the other questions were pending receipt from the Departments. The Chair denied any partiality in the matter of inclusion of questions in the list. The Member was asked to seek him for mation on such matters in the Speaker's Chamber and not in the House ... ... ... ... 133-134

*Supplementary Questions.*

A Member belonging to the ruling party prefaced his supplementary with the remark that they were obliged to answer for the ill-deeds that took place during the Congress regime. When this was objected to by a Congress Member, the Chair observed that the Member did not say anything wrong ... 328

*Accusations.*

During qustion hour accusations should not be made ... ... ... 420

Supplementaries should not contain accusations 10-209

Supplementaries should not contain accusations or challennges ... ... ... 116

*Newspaper Reports.*

Supplementaries should not be put on the basis of newspaper reports ... ... ... 421

Supplementaries should be in the form of a question and should not contain any expression of opinion ... ... ... ... 16

Supplementaries should be put to elicit information arising out of the answer given to the main question.

Pages

CHAIR—cont.

*Ruling and Observations*—cont.

*Question and Answers—cont.*

*Supplementary Questions*—cont.

Comments and accusations like 'there was no use in asking questions' could be reserved for debates on Demands for Grants ... 327

Supplementaries should relate to the main question ... 7, 9, 18, 117, 125, 399, 418, 420

CHEEMAICHAMY, Thiru K.

Libraries, Ramanathapuram, closure due to paucity of funds ... ... ... ... 7-10

Principals of Government not-taking colleges classes, number ... ... ... 212-213

Super Market, Ramanathapuram ... ... 418-419

CHINNARAJEE, Thiru C. K.

Budget, 1970-71, G.D. ... ... ... 80-81

CHITHAN Thiru N. S. V.

Broken wheat, stock ... ... ... 405

Budget, 1970-71, G.D. ... ... ... 272-283

Burma Repatriates, meting with Chief Secretary 130

Central Co-operative Land Development Bank, guarantee ... ... ... ... ... 328-330

Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... ... 478-479

Drector of Information, revival of post ... 10-11

Honorary Magistrate, appointment ... 22

Industrial Estate, Kappalur ... ... 320-321

Minister for Co-operation—Governor of Reserve Bank meeting, details ... ... ... 419-421

Oil exploration ... ... ... ... ... 118

Sea water, conversion into drinking water ... 25

Secretaries and Chief Secretary, monthly meeting ... ... ... ... ... ... ... 13-15



Pages

CHITHAN, Thiru N. S. V.—*cont.*

Statue of Lal Bahadur Sastri, installation ... 323-325

Taxis with contract carriage permits, plying in Pondicherry ... ... ... ... ... 119-120

Tourist Home, Kodaikanal ... ... ... 412-414

COLLEGE(S)—

Government Arts College at Ponneri, medium of instruction ... ... ... ... ... ... 110-111

Lecturers, Provident Fund ... ... ... 309-310

Principals of Government Colleges not taking classes, number ... ... ... ... ... 212-213

Tamil as Part I subject in P.U C. ... ... 111-114

COMMITTEE(S)—

House, election (Ann.) ... ... ... 435

Privileges, election (Ann.) ... ... ... 434

CONFERENCE(S)—

B.T. Teachers—, demands ... ... ... 210-211

CO-OPERATION—

Central Co-operative Land Development Bank, guarantee ... ... ... ... ... 328-330

Co-operative Agricultural Bank, Nemur, misappropriation ... ... ... ... ... 127-128

Co-operative Land Mortgage (Land Development) Banks, procedure to obtain encumbrance certificate ... ... ... ... ... ... ... 330-331

Co-operative Training Institute, Pudukkottai ... 23-24

Farm in Puloovatti Panchayat, loss ... ... 222-223

Marketing Society, Mayuram, misappropriation ... ... ... ... ... ... ... 125-127

Minister for Co-operation—Governor of Reserve Bank meeting, details ... ... ... ... 419-421

Perundevi Thayar Co-operative Milk Society, Valavanur, misappropriation ... ... ... 406

Thondamuthur Co-operative Stores, misappropriation ... ... ... ... ... ... 220-222

## D

Pages


DHANUSHKOTI, Thiru P. S.—
Point of order, non-inclusion of a Member's questions in the list ... ... ... ... ... 133-134

DISEASES—
National Malaria Eradication Programme, continuance ... ... ... ... ... ... 403-405

DORAIRAJ, Thiru S. M.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 175-177

DURAIPANDIAN, Thiru N.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 160-165

DURAIRAJ, Thiru P.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 297-299


## E


EDUCATION—
Job-oriented ... ... ... ... ... ... 405

ELAMVAZHUTHI, Thiru Ere—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 242-245

ELECTRICITY—
Pumpsets in Megnanapuram village, eletricity connection ... ... ... ... ... ... 331-332

ELLAPPAN, Thiru P. S.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 49-51

EMPLOYEES—
Block Extension Officers, training as Fertiliser Inspectors ... ... ... ... ... ... 315-317
Civil Supplies Department, A.G.'s Office staff ... 317-318
Director of Information, revival of post ... ... 10-11
Elementary Education, separate Director for ... 5-7
Secretaries and Chief Secretary, monthly meeting ... ... ... ... ... ... ... 13-15
Village Officers, demands ... ... ... ... 25-26

EXPUNCTION(S)—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 162, 163, 241

Questions and Answers ... ... ... ... 126-127




## F

Pages


FACTORIES—
Small Arms Factory, Tiruchirappalli, strike ... 410-411

FINANCIAL BUSINESS—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 41-99, 137-204, 234-301, 344-396
Budget, 1970-71, Voting:
Administration of Justice ... ... ... 397
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1957 396
Agriculture ... ... ... ... ... 397
Animal Husbandry ... ... ... ... 397
Capital Outlay on Agriculture ... ... 397
Capital Outlay on Forests ... ... ... 398
Capital Outlay on Irrigation ... ... ... 397
Capital Outlay on Industrial Development ... 397
Capital Outlay on Public Health ... ... 397
Capital Outlay on Public Works ... ... 397
Capital Outlay on Road Transport Schemes ... 397
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 398
Cinchona ... ... ... ... ... 397
Community Development Projects, etc. ... 397
Commuted Value of Pensions ... ... ... 398
Compensation to Zamindars ... ... ... 397
Co-operation ... ... ... ... ... 397
District Administration and Miscellaneous ... 396
Education ... ... ... ... ... 396
Elections ... ... ... ... ... 396
Famine Relief ... ... ... ... 397
Fisheries ... ... ... ... ... 397
Forest Department ... ... ... ... 397
General Sales Tax and other Taxes and Duties Administration ... ... ... ... ... 396
Head of State, Ministers and Headquarters staff 396
Industries ... ... ... ... ... 397
Irrigation ... ... ... ... ... 397
Jails ... ... ... ... ... ... 397
Khadi ... ... ... ... ... 397
Labour including Factories ... ... ... 3 97

Pages

FINANCIAL BUSINESS—cont.
Budget, 1970-71, Voting—cont.
Land Revenue Department ... ... ... 397
Loans and Advances by the State Government .. 398
Medical ... ... ... ... ... 397
Milk Supply Schemes ... ... ... 396
Miscellaneous ... ... ... ... 396
Motor Vehicles Acts—Administration ... ... 396
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... 397
Pensions ... ... ... ... ... 397
Police ... ... ... ... ... ... 397
Public Health ... ... ... ... 397
Public Works—Establishment and Tools and Plants ... ... ... ... ... 397
Public Works—Works ... ... ... 397
Registration Department ... ... ... 396
Road Transport Schemes ... ... ... ... 397
Stamps Administration ... ... ... 396
State Legislature ... ... ... ... 396
Stationery and Printing ... ... ... 397
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... 397

FOODGRAINS—
Broken wheat, stock ... ... ... ... 405
Gift rice from the Punjab ... ... ... ... 17-18
Rice scarcity in Vilavancode and Kalkulam taluks, steps to arrest soaring prices (C.A.) ... ... 232-234
Rice, theft ... ... ... ... ... ... 115-117

FOREIGN TRADE—
Indian Institute of Foreign Trade, visit of study team ... ... ... ... ... ... 213-214
Thailand Trade Delegation, visit to Tamil Nadu 214-215

G

GANESAN, Thiru S.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 165-168

GANESAN, Thiru L.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 58-61



Pages

GOMATHYSANKARA DIKSHIDAR, Thiru G.—
Civil Supplies Department, A.G.'s Office staff ... 317-318
Coimbatore district—Motor and Automobile Labour Union, hunger strike ... ... ... 129-130
Employees' State Insurance Hospital at Ayanavaram, conversion into Teaching Institution ... 310-312
Gift rice from Punjab ... ... ... ... 17-18
Government Pleaders, appointment ... ... 117
Hotels, ranking ... ... ... ... ... 414-416
Indian Institute of Foreign Trade, visit of study team ... ... ... ... ... ... ... 213-214
Mao's posters, appearance ... ... ... 207-209
Nurses Home, thefts ... ... ... ... 209-210
Police Officers—Simpson Group Companies Security Staff, clash ... ... ... ... 107-108
Remains of Pallava age, excavation ... ... 313-314
Salem Steel Plant, discussion with centre ... 18-19
Secretaries and Chief Secretary, monthly meeting ... ... ... ... ... ... ... 13-15
Sethusamudram Project, inclusion in Fourth Plan ... ... ... ... ... ... 122-124
Small Arms Factory, Tiruchirappalli, strike ... 410-411
Temples, Hindus, entry ... ... ... ... 128
Thailand Trade Delegation, visit to Tamil Nadu. 214-215

GOVINDAN, Thiru K. R.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 82-84

GOVINDARAJAN, Thiru C.—
Civil Supplies Department, abolition ... ... 317
Laboratory Technicians in hospitals, emoluments. 108-110

H.

HANDE, Dr. H. V.—
Appropriation (Vote on Account) Bill, 1970 ... 436-438
Arts College at Ponneri, medium of instruction ... 110-111
Block Extension Officer, training as Fertiliser Inspectors ... ... ... ... ... ... 315-317
Budget, 1970-71, G.D. ... ... ... ... 267-272
Burma repatriates, meeting with the Chief Secretary ... ... ... ... ... ... 130

Pages

HANDE, H. V.—*cont.*

Bus stand at Esplanade, reconstruction ... ... 120-122

Connemara Public Library, new building ... 399-401

Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... ... ... ... 481-483

Director of Information, revival of post ... ... 10-11

Dispute between employees and employer of of Dhrangadhara Chemical Works Ltd., (C.A.) ... ... ... ... ... ... 431, 433

Employees of Local Library Authority, Madras, scales of pay ... ... ... ... ... 307-309

Hemavathy Project, statement of Mysore Chief Minister and the consequences thereof (A.M.). 227-228, 228-229

Point of order *re*—

Guillotioning demands after Minister's reply without giving an opportunity to members to seek clarification ... ... ... ... 425-431

Srirangam Devasthanam's lands, particulars ... **24**

Sugar stock in Government godowns ... ... **17**

Tamil Nadu Co-operative Union Building, construction ... ... ... ... ... ... 326-328

Thondamuthur Co-operative Stores, misappropriation ... ... ... ... ... 220

HARIJAN WELFARE—

Agriculturists of Kottur, protection to (C.A.) ... 39-40

Hostels, appointment of part-time tutors ... ... 15-16

HOSPITALS AND DISPENSARIES—

Employees' State Insurance Hospital, Ayanavaram, into Teaching Institution ... ... 310-312

Employees' State Insurance Hospitals for Tirunelveli district ... ... ... ... ... 332-333

Free medical check-up for students ... ... 312-313

Headquarters Hospital, Coimbatore, Ophthalmologist ... ... ... ... ... ... 402

Laboratory Technicians, emoluments ... ... 108-110

HOSTELS—

Ranking ... ... ... ... ... ... ... 414-416



Pages

I

I.A.S.—

Officers, number not knowing Tamil ... ... 11-13

INDUSTRIES—

Central Government undertakings, security ... 406-410

Development, Central Assistant ... ... ... 27-30

Dispute between employees and employer of Dhrangadhra Chemicals Works Ltd. (C.A.) ... 431-433

Industrial Estate, Ariyalur taluk ... ... ... 321-322

Industrial Estate, Kappalur ... ... ... 320-321

IRRIGATION—

Eastern part of Ramanathapuram district, facilities ... ... ... ... ... ... ... 216

J

JAILS—

Central—, *re*-modelling and expansion ... ... 318-320

JAMES, Thiru J.—

Budget, 1970-71, G.D. ... ... ... ... 41-44, 98

Mistakes in Brief Record of proceedings (Privilege Matter) ... ... ... ... ... ... 31, 32

Palmyrah tappers, compensation on accidents ... 216-219

JANAKIAMMAL, Thirumathi K. P.—

Budget, 1970-71, G.D. ... ... ... ... 154-158

Promulgation of section 144 in Kulamangalam village and its consequences (A.M.) ... ... 34

Tractor Workshop at Madurai ... ... ... 314-315

JAYARAMAN, Thiru P.—

Taluk Office at Gudiyatham, expansion ... ... 425

JUDICIARY—

Government Pleaders, appointment ... ... 117

Honoray Magistrates, appointment ... ... 22

K

KANAKASABAI, Thiru R.—

Budget, 1970-71, G.D. ... ... ... ... 168-174

Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... ... ... ... 480-481

KANNAN, Thiru M. R.—

Budget, 1970-71, G.O. ... ... ... ... 200-204

Pages

K—Cont.

KARIAMANICKAM AMBALAM, Thiru KR. RM.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 147-150

KARUNAINATHAN, Thiru J.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 78-79

KARUNANIDHI, Thiru M.—
Appropriation (Vote on Account) Bill, 1970 ... 443, 454, 457, 458, 462, 463
Budget, 1970-71, G.D. ... ... ... 96, 97, 97-98, 251, 253, 255, 256, 257, 258, 277-278, 279-280, 366, 370-371, 372-373, 374, 375, 376, 377, 378, 379
Harijan Agriculturists of Kottur, protection to (C.A.St.) ... ... ... ... ... ... 39-40
Hemavathi Project, statement of Mysore Chief Minister and the consequences thereof ... (A.M.) ... ... ... ... ... ... 230-232
Katchatheevu, Ceylon Government's restrictions on pilgrims from Tamil Nadu (A.M.) ... ... 35-36
Land, assignment to driver ... ... ... 333-336
Maharashtra Chief Minister's statement on the views expressed by the Tamil Nadu Chief Minister over the conditions of the Tamils in that State (Point of Clarification) ... ... 226-227
Mistakes in Brief Record of proceedings (Privilege Matter) ... ... ... ... ... ... 33
Police excesses in Maniapattu village (A.M.) ... 135-136
Unrest among Tamilians in Bombay due to Shiv Sena atrocities (A.M.) ... ... ... 38-39

KARUPPIAH, Thiru R.—
College Lecturers, Provident Fund ... ... 309-310
Hemavathy Project, statement of Mysore Chief Minister and the consequences thereof (A.M.) 227-228
Industrial Estate, Ariyalur taluk ... ... ... 321-322

KARUTHIRUMAN, Thiru P. G.—
Appropriation (Vote on Account) Bill, 1970 ... 444-464
Budget, 1970-71, G.D. ... ... ... ... 97, 237, 255, 276, 359-381
Hemavathy Project, statement of Mysore Chief Minister and the consequences thereof (A.M.). 229-230
Mistakes in Brief Record of proceedings (Privilege Matter) ... ... ... ... ... ... 33



Pages

K.—cont.

KASIRAMAN, Thiru N.—
Sundhakkudi High School, construction of building ... ... ... ... ... ... ... 211-212

KHADI—
Sales in Tiruchirappalli district ... ... ... 322-323

KITTAPPA, Thiru N.—
Bird sanctuary location and safeguards ... ... 422-423
Central Jails, re-modelling and expansion ... 318-320
Co-operative Marketing Society, Mayuram, misappropriation ... ... ... ... ... 125-127
National Malaria Eradication Programme, continuance ... ... ... ... ... ... 403-405
Sea Water, conversion into drinking water ... 25
Tractors, import ... ... ... ... ... 411-412

KOTHANDARAMAN, Thiru V. K.—
Burma Repatriates, meeting with the Chief Secretary. ... ... ... ... 130
Central Government Undertaking, security ... 406-410
Free medical check-up for students ... ... 312-313
Irrigation department's maps, missing ... ... 22-23
Muslims, concessions ... ... ... 205-207
Police excesses in Maniapattu village (A.M.) ... 135-136
Rice, theft ... ... ... ... ... ... 115-117
Salem Steel Plant, discussion with Centre ... 18-19
Thondamuthu Co-operative Stores, mis-appropriation in ... ... ... ... ... ... 220-222

KOTHANDARAMIAH, Thiru K. S.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 183-185

KRISHNAMOORTHI, Thiru M.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 198-200

KRISHNAN, Thiru N.—
Budget, 1970-72, G.D. ... ... ... ... 190-194

KUMARASAMY, Thiru K. N.—
Budget, 1970-71, G.D. ... ... ... ... 177-180

L

LAND(S)—
Assignment to Chief Minister driver ... ... 333-336
Inam lands in Pudukottai ... ... ... ... 424
Srirangam Devasthanam's lands, particulars ... 24

Pages

L.—cont.

LIBRARIES—

Connemara Public Library, new building ... 399-401

Employees of Local Library Authority, Madras, scales of pay ... ... ... ... ... 307-309

Library Authority, Ramanathapuram, paucity of funds ... ... ... ... ... ... 7-10

LOAN(S)—

Potato cultivation, loans ... ... ... ... 131-133

M

MADHAVAN, Thiru S.—

Mistakes in Brief Record of proceedings (Privilege Matter) ... ... ... ... ... 33

MALAICHAMY, Thiru P.—

New strain of paddy, details ... ... ... ... 224-225

MALAIKANNAN, Thiru V.—

Irrigation facilities to eastern part of Ramanathapuram district, details ... ... ... 216

Panchayat Unions in Ramanathapuram district, bifurcation ... ... ... ... ... ... 325

MANI, Thiru M.S.—

Budget, 1970-71, G.D. ... ... ... ... 87-90

Srinivasa Subbaraya Polytechnic, closure ... 114-115

Budget, 1970-71, G.D. ... ... ... ... 44-49

MANICKAVACHAGAM, Thiru R—

Budget, 1970-71, G.D. ... ... ... 187-190

Co-operative Farm in Puloovatti Panchayat, loss ... ... ... ... ... 222-223

Kandasami Sugar Mills, Chithiraichavadi, non-functioning ... ... ... ... ... 215-216

MAO'S POSTERS.

Appearance ... ... ... ... ... 207-209

MARIMUTHU, Thiru M.—

Budget, 1970-71, G.D. ... ... ... ... 96-97

MARTIN, Thiru T.—

Budget 1970-71, G.D. ... ... ... 234-241

Electricity, connection to pumpsets in Megnanapuram village ... ... ... ... 331-332





Pages

M—cont.

MARTIN, *Thiru* M.—

Elementary Education, separate Director ... 5-7

E.S.I. Hospitals for Tirunelveli District ... 332-333

Katchatheevu, Ceylon Government restrictions on pilgrims from Tamil Nadu (A.M.) ... 34-35

Radio sets to Schools ... ... ... 1-5

Rice Mill in Pandravedu village startings ... 213

Unrest among Tamilians in Bombay due to Shiv Sena atrocities (A.M.) ... ... ... 37-38

Vattavilai village, electric lights for ... ... 129

MARUDACHALAM, *Thiru* N.

Super Market, Coimbatore ... ... ... 418

MATHIALAGAN, *Thiru* K. A.

Appropriation (Vote on Account) Bill, 1970 ... 398, 435, 464-476

Budget, 1970-71, G.D. ... ... ... 274-275, 277-284, 381-396

Budget 1970-71, Voting.—

Administration of Justice ... ... ... 397

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 396

Agriculture ... ... ... ... 397

Animal Husbandry ...... ... ... ... 397

Capital outlay on Public Works ... ... ... 397

Capital outlay on Forests ... ... ... 398

Capital outlay on Industrial Development ... 397

Capital outlay on Irrigation ... ... ... 397

Capital outlay on Public Health ... ... 397

Capital outlay on Public Works ... ... 397

Capital outlay on Road Transport Scheme ... 397

Capital Outlay on Scheme of Government Trading ... ... ... ... ... ... 398

Cinchona ... ... ... ... ... 397

Community Development Projects, etc ... 397

Commuted Value of Pension ... ... ... 398

Compensation to Zamindars ... ... ... 397

Co-operation ... ... ... ... ... 397

District Administration and Miscellaneous ... 396

Education ... ... ... ... ... 397

Pages



MATHIALAGAN, Thiru K. A.—*cont*

Budget 1970-71, Voting ;

Election ... ... ... ... ... ... 396
Famine Relief ... ... ... ... ... 397
Fisheries ... ... ... ... ... 397
Forest Department ... ... ... ... 397
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... 396
Head of State, Ministers and Headquarters Staff. 396
Industries ... ... ... ... ... 397
Irrigation ... ... ... ... ... ... 397
Jails ... ... ... ... ... ... 397
Khadi ... ... ... ... ... ... 397
Labour including Factories ... ... ... 397
Land Revenue Department ... ... ... 396
Loans and Advances by State Government ... 398
Medical ... ... ... ... ... ... 397
Milk Supply Schmes ... ... ... ... 396
Miscellaneous ... ... ... ... 397
Motor Vehicles Acts—Administration ... ... 396
Other Miscellaneous Compensation and Assignment ... ... ... ... 397
Pension .. ... ... ... 397
Police ... ... ... ... ... 397
Public Health ... ... ... ... 397
Public Works—Establishment and Tools and Plants ... ... ... ... 397
Public Works—Grants-in-aid ... ... 397
Public Works—Works ... ... ... 397
Registration Department ... ... ... 396
Road Transport Schemes ... ... ... ... 397
Stamps Administration ... ... ... 396
State Legislature ... ... ... ... 396
Stationery and Printing ... ... ... 397
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... 397

MAY DAY.

Declaration as paid holiday ... ... ... 224



Pages



METHA, *Thiru* M.

Budget 1970-71, G.D. ... ... ... ... 72-75

MILL(S).

Rice Mills, starting in Pandravedu village ... 213

MINORITIES.

Muslims, concessions ... ... 205-207

MOORTHY, *Thiru* A. K.

Budget 1970-71, G.D. ... ... 91-93

MOTION(S).

*Ad. Motions :*

Hemavathy Project, statement of Mysore Chief Minister and the consequences thereof ... 227-232
Katchatheevu, Ceylon Government restrictions on pilgrims from Tamil Nadu ... ... 34-36
Labourers in Block 65 in Mettur Township, hunger-strike ... ... ... ... 134
Police excesses in Maniapattu village ... 134-137
Promulgation of section 144 in Kulamangalam village, Madurai District and its consequences ... ... ... ... ... 34
Unrest among Tamilians in Bombay due to Shiv Sena atrocities ... ... ... 36-39

House Committee, election ... ... ... 434
Privileges Committee, election ... ... ... 434

MUNISWAMY, *Thiru* R. R.

Budget 1970-71, G.D. ... ... ... ... 180-182

MURUGIAN, *Thiru* S.

Budget, 1970-71, G.D. ... ... 52-55

MURUGESAN, *Thiru* K.

Budget 1970-71, G.D. ... ... ... ... 84-87
Salem and Dharmapuri districts Staff allocation 30

MUSEUM(S).

African cheetas, import ... ... ... 422

MUTHUSAMY, *Thiru* M.

Budget, 1970-71, G.D. ... ... ... 257-258
258-259

Pages

N

NAVIGATION.
Sethusamudram Project, inclusion in Fourth Plan ... ... 122-124

NEDUNCHEZHIYAN, *Thiru* V. R.
House Committee, election (M) ... ... 434
Privileges Committee, election (M) ... ... 434

O

OFFICES.
Civil Supplies Department, abolition ... 317
Irrigation Department, missing of maps ... 22-23
Taluk Office at Gudiyatham, expansion ... 425

OIL.
Exploration ... ... ... ... ... 118-119

PADMAVATHI, *Thirumathi* G.
Budget, 1970-71, G.D. ... ... ... ... 287-288

PALANIAMMAL, *Thirumathi* V. P.
Harijan hostels, part-time tutors ... ... ... 15-16

PALANIVEL RAJAN, *Thiru*
Budget, 1970-71, G.D. .. ... ... ... 284-287

PALMYRAH TAPPERS.
Compensation for victims of accidents ... ... 216-219

PANCHAYAT UNION(S).
Ramanathapuram District, bifurcation ... 325

PAPERS LAID ON THE TABLE.
Appropriation Accounts for 1968-69 and Audit Report ... ... ... ... ... ... 99
Demands for Advance Grants, 1970-71, notice 498
Estimate of expenditure, 1970-71 ... ... 498
Finance Accounts for 1968-69 ... ... ... 99
Legislative Council, Resume of Work in January 1970 ... ... ... ... ... ... 498

P

PEER MOHAMMED HAJI, M. M.
Budget, 1970-71, G.D. ... ... ... 259-262

POINT OF ORDER.
Guillotining of Demands after Minister's reply without giving an opportunity for members to ask for clarification ... ... ... 425-431



Pages

P.—*cont.*

POLICE.
Nurses Home, thefts ... ... ... ... 209-210
Simpson Group Companies, security staff— Police Officers, clash ... 107-108

POLYTECHNIC(S).
Srinivasa Subbaraya Polytechnic, closure ... 114-115

PONNAMBALAM, *Pulavar*, P.
Co-operative Training Institute, Pudukottai ... 23-24
Harijan agriculturists of Kottur, protection to (C.A.) ... ... ... ... 39-40
Inam Lands in Pudukkottai ... ... 424
Ponnamaravathi area, upgrading as taluk ... 27

PONNAPPA NADAR, *Thiru* R.
Budget, 1970-71, G.D. ... ... ... 344-349
Rice scarcity in Vilavancode and Kalkulam taluks, steps to arrest soaring prices (C.A.) ... 233

PRIVILEGE.
Mistkes in brief record of procedings ... ... 31-33

PROJECTS.
Sethusamudram Project, inclusion in Fourth Plan ... ... ... ... ... ... 122-124

PUBLICITY.
Mao's posters, appearance ... ... ... 207-209

R

RAJA, *Thiru* A.M.
Central Semen Banks, establishment ... ... 405-406
Conference of B.T. Teachers, demands ... 210-211
I.A.S. Officers, number not knowing Tamil ... 11-13
Industrial Development, Central Assistance ... 27-30

RAJANGAM, *Thiru* N.
Budget, 1970-71, G.D. ... ... ... 144-147

RAMACHANDIRA DORAI, *Thiru* R.
Budget, 1970-71, G.D. ... ... 252-259

POINT OF ORDER—
Speeches sent to Members, non-inclusion of interruptions ... ... ... ... ... 343-34

RAMACHANDRAN, *Thiru* K. N.
Budget, 1970-71 , G.D. ... ... 265-267

Pages

R.—*cont.*

RAMACHANDRAN, *Thiru* S.
Village Officers' Association, details of demands 25-26

RAMAMOORTHY, *Thiru* K.
Budget, 1970-71, G.D. ... ... ... 138-144
Co-operaive Land Development Banks (Amend-Ment) Bill, 1970 ... ... ... 483-485
489-490
493-495
Hemavathy Project, declaration of Mysore Chief Minister and the consequences thereof (A.M.) ... 227-228

RAMAN, *Thiru* M.
Co-operative Agricultural Bank, Nemur, misappropropriation ... ... ... ... ... ... 127-128
Perundevi Thayar Co-operative Milk Society Valavanur misappropriation ... ... ... 406

REPATRIATES—
Burma repatriates Meeting with Chief Secretary 130

ROAD(S).
Mercury lamps along Mount Road ... ... 23
Road(s) to Pannapattu (via) Mugaiyur Panchayat, formation ... ... ... ... 219

S

SAHADEVA KANDER, *Thiru* K
Budget, 1970-71, G.D. ... ... ... ... 94-99

SANKARIAH, *Thiru* N.
Appropriation (Vote on Account) Bill, 1970 ... 438-444

SCHOOL(S).
Radio sets, supply ... ... ... 1-5
Sundhakkudi High School, construction of building ... ... ... ... ... ... 211-212

SERVICES.
Staff allocation, Salem and Dharmapuri districts 30

SHANMUGHAM, *Thiru* P. U.
Budget, 1970-71, G.D. ... ... ... 96-236
237-239
Rice scarcity in Vilavancode and Kalkulam taluks, steps to arrest soaring prices (C.A.St.) 233-234

SIVAGNANAM, Thiru M. P.
Budget, 1970-71, G.D. ... ... ... 245-252



Pages

S.—*cont.*

SIVASUBRAMANANIAM, *Thiru* S.
Budget, 1970-71, G.D. ... ... ... ... 194-198
Co-operative Land Mortgage (Land Development) Bank, procedure for obtaining encumbrance certificate ... ... ... 330-331
Road to Pannapattu (via) Mugaiyur Panchayat, formation ... ... ... ... 219

SOUNDARAPANDIAN, *Thiru* N.
Budget, 1970-71, G.D. ... ... ... 68-72

STATUES.
Lal Bahadur Sastri, installation ... ... 323-325

STEEL PLANT.
Salem Centre's permission ... ... ... ... 19-21
Salem, discussion with Centre ... ... ... 18-19

STRIKE(S).
Coimbatore District Motor and Automobile Labour Union, hunger strike ... ... ... 129-130

SUBBARAJA, *Thiru* A. A.
Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... ... ... 479-480

SUBBIAH, Thiru A. K.
Budget, 1970-71, G.D. ... ... ... 63-68

SUGAR.
Kandasari Sugar Mills, Chithiraichavadi, nonfunctioning ... ... ... ... 215-216
Stock in Government godown ... ... 17

SUNDARA BHARATHI SOWDI, *Thiru* S.
Palmyrah tappers, compensation on accidents ... 216-219

SUPER MARKET(S)
Coimbatore ... ... ... ... 418
Ramanathapuram ... ... ... 418-419

SURENDRAN, *Thiru* M.
Labourers in Block 65 in Mettur Township hunger strike (A.M.) ... ... ... ... 134

SWAMINATHAN, *Thiru* V.
Hemavathy Project, statement of Mysore Chief Minister and the consequences thereof (A.M.) 227-228
Sale of Khadi in Tiruchirappalli District ... 322-323

Pages

T

TAXIS.
Taxis with contract carriage permits plying in Pondicherry ... ... ... ... 119-120

TEACHER(S).
Vepur Panchayat Union, canvassing for Family Planning ... ... ... ... ... 305-307

TEMPLE(S).
Non-Hindus, entry ... 128

THANGAPPAN, *Thiru* T.
Budget, 1970-71, G.D. ... ... ... 262-265

THIPPIAH, *Thiru* T. T. S.
Budget, 1970-71, G.D. ... ... ... 185-187

TOURISM.
Tourists Home, Kodaikanal ... ... ... 412-414

TRANSPORT AND COMMUNICATION.
Bus stand at Esplanade, reconstruction ... ... 120-122

V

VELUSAMY, *Thiru* P.
Budget, 1970-71, G.D. ... ... ... 75-78

VENKATASWAMY, *Thiru* B.
Budget, 1970-71, G.D. (in Telugu) ... ... 81,
Potato cultivation, loans ... ... ... ... 131-133

VEZHAVENDAN, *Thiru* K.
Dispute between employees and employer of Dhrangadhara Chemicals Works Limited (C.A. St.) ... ... ... ... ... ... 431-433

VINAYAKAM, *Thiru* K.
African cheetas, import ... ... ... 422
Bird Sanctury, Kodaikanal ... ... ... 423-424
Director of Information, revival of post ... ... 10-11
May Day, declaration as paid holiday ... ... 224
Mercury lamps along Mount Road ... ... 23
Tamil as Part I subject in P.U.C. ... ... 111-114
Water supply to Alandur Municipality ... 403

W

WALK-OUT(S).
Budget, 1970-71, G.D. ... ... ... 284

WATER SUPPLY.
Alandur Municipality ... ... ... 403
Seawater, Conversion into drinking water ... 25

61474
VR11,31 N70
31-1-71 26